## Northern Education System Review

Published by the
Northern Province Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs
Jaffna
Northern Province
Sri Lanka
July 2014

ISBN: 978-0-692-24907-9

ISBN 978-0-692-24907-9
$0.00
90000>
9 780692 249079

*Printed by:*
Evergreen Printers 021 2219893
**Evergreen Printers, 693, K.K.S Road, Jaffna.**
**Tel: 021 2219893**

**Copyright © Northern Province Ministry of Education, Cultural Affairs, Sports and Youth Affairs**

**2014**

# வடக்கின் கல்வி முறைமை மீளாய்வு



**NESR நெறிப்படுத்தும் குழு**
**வடக்கு மாகாணம்,**
**கல்வி அமைச்சு.**

Copyright © Northern Province Ministry of Education, Cultural Affairs, Sports and Youth Affairs

# Northern Education System Review

Published by the
Northern Province Ministry of Education, Cultural Affairs, Sports and Youth Affairs
Jaffna
Northern Province
Sri Lanka
July 2014
First Edition
ISBN: 978-0-692-24907-9

*Printed by:*

Evergreen Printers
021 2219893

Evergreen Printers, 693, K.K.S Road, Jaffna.
Tel: 021 2219893

This work is licensed under a Creative Commons Attribution-NonCommercial-NoDerivatives 4.0 International License



"எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு."

– திருவள்ளுவர்

"வழியே இலக்கு."
கௌதம புத்தர்

மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் உளசமூக நன்னிலை பேணும் குழு



e - திட்டமிடல், தரவுத்தளம் குழு



NESR ஆலோசனைச் செயலமர்வு - நாள் 2
செயற்பாட்டுக் குழுக்கள் : 24 ஏப்ரல் 2014



# சமர்ப்பணம்

கடந்த 200 வருடங்களாக வடபுல சிறார்களின் கல்விக்காக தங்களை அர்ப்பணித்த ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விச்செயலாளர்கள், பணிப்பாளர்கள் மற்றும் வடபுலத்தைச் சேர்ந்த புரவலர்கள் மற்றும் இதர பகுதிகளை சேர்ந்தவர்கள், வெளிநாட்டில் வதியும் எம்மவர், ஆகியோருக்கு இந்த வடபுல கல்வி முறைமை ஆய்வறிக்கை சமர்ப்பணமாகிறது.

எங்களது தீவிலிருந்தோ, வெளிநாடுகளிலிருந்தோ இங்கு வந்து பாடசாலைகளை நிறுவி விளையாட்டு மைதானங்களை உருவாக்கி பல்வேறு விளையாட்டுக்களையும் உடற்பயிற்சிகளையும் விழுமியங்களையும் கவிதையழகு, இசை, விஞ்ஞானம், கணிதம், வரலாறு இவற்றுடன் எமது மக்களின் மகிமை, சூழல் ஆகியவற்றையும் மேம்படுத்துவதற்கான உங்களுடைய பங்களிப்பை நல்கியுள்ளீர்கள்.

நீங்கள் எங்களுடைய வடபுல சிறார்களுக்கு இணைப்பாடவிதானத்தையும் அதற்கு அப்பாற்பட்ட செயற்பாடுகளையும் கற்பித்து அவர்களது பலத்தையும் குணநலன்களையும் கட்டியெழுப்பி அவர்கள் வடபுலத்தில் மட்டுமன்றி இத்தீவிலும் எமது கடற்பரப்பிற்கு அப்பாலும் அவர்களின் வளர்ச்சியை வளமாக்கி சமூகத்தில் இடம்பெறவும், அத்துடன் சர்வதேச அரங்கில் அவர்கள் ஈடு கொடுக்கக்கூடிய முறையில் உங்களது எண்ணங்களையும் நேரங்களையும் அவர்களுக்காக அர்ப்பணித்துள்ளீர்கள்.

எதிர்கால ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் நீங்கள் அத்திவாரமிட்டு வழிகாட்டியுள்ளீர்கள். யுத்தகாலங்களிலும், முரண்பாடுகளின் போதும் நீங்கள் தொடர்ந்து செயற்பட்டு வடபுல சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு உங்களுடைய வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளீர்கள்.

வடக்கு எதிர்கொண்ட 30 வருட கால உள்நாட்டு யுத்தம், தொடர் இடப்பெயர்வுகள், குண்டுவீச்சுக்கள், எறிகணைத் தாக்குதல்களுக்கு மத்தியிலும் ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் நிர்வாகிகள் அனைவரினதும் வளங்களை ஒன்றிணைத்து வடபுல சிறார்களின் கல்வி மேம்பாட்டிற்காக உங்களை அர்ப்பணித்தீர்கள். நாம் யுத்த காலத்தில் இழந்த அனைத்து வளங்களையும் மீளக்கொண்டு வந்து வடபுல சிறார்களின் கல்வி வளர்ச்சியை மீட்டெடுத்து அதில் அபிவிருத்தி கண்ட உங்கள் அனைவருக்கும் இந்த அறிக்கையை நன்றிப் பெருக்கோடு காணிக்கையாக சமர்ப்பிக்கிறோம்.

**மத்திய கல்வி அமைச்சர் கௌரவ பந்துல குணவர்த்தன அவர்கள்**



**அங்குரார்ப்பண நிகழ்வில் அதிதிகள்**



**கற்றல், கற்பித்தல் மற்றும் பரீட்சைக் குழு**



# நன்றியுரை

NESR ஆலோசனை அதிகாரக் குழுவின் சார்பில் ஏற்பாட்டாளர் ஆகிய நான் கீழ் வருவோரின் பங்களிப்பிற்கு நன்றி தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன். வடக்கு மாகாணக் கல்வி முறைமையின் மீளாய்வை மேற்கொள்வதற்கு தனது விருப்பத்தினை அறிவித்த கல்வி கலாசார, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரத்திற்கான கௌரவ அமைச்சர் த.குருகுலராஜா அவர்களுக்கு எனது நன்றிகள் உரித்தாகட்டும். இவர் அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்ற தினத்தில் நெறிப்படுத்தற் குழுவின் கூட்டத்தை ஆரம்பித்து வைத்து மறுதினமே அவர் மீள்பார்வையின் ஏற்பாட்டாளராக என்னை நியமித்தமைக்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமது குறிப்புக்களையும் சிபார்சுகளையும் அனுப்பி வைத்த மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், வலயப்பணிப்பாளர்கள் மற்றும் அவர்களது அலுவலர்கள் உட்பட பங்குதாரர்களுக்கும் மற்றும் அவதானிக்கப்பட்ட பிரச்சனைகளுக்கான தீர்வுகளுக்கு தமது சிபாரிசுகளை சமர்ப்பிப்பதன் மூலம் வடக்கின் கல்வி முறைமையை தரமுயர்த்த, அவர்கள் உலகின் எந்த பகுதியில் வசித்தாலும் தமது ஈடுபாட்டையும் விருப்பத்தையும் வடக்கின் கல்வி முறைமையின் மீள்பரிசீலனையில் காட்டியமைக்கு எனது நன்றியைக் கூற கடமைப்பட்டுள்ளேன். கல்வி முறைமைக்கு உட்பட்ட பல அங்கத்தவர்களும் பல தரப்பட்ட வாழ்வியல் பின்னணியைக் கொண்டவர்களும் எந்தவித நிதிசார் நட்டஈட்டை எதிர்பாராது தமது நேரத்தை செலவிட்டமையானது இவ்விடத்தே பாராட்டிற்குரியது.

கல்வி சார்ந்த கலந்துரையாடலில் சமத்துவம் படைத்தவர்களாக பல்வேறு சவால்மிக்க விடயங்கள் தொடர்பில் விவாதங்களை முன்னெடுத்தமையும் அவர்கள் மாணவர் கல்வியிலும் வளர்ச்சியிலும் காட்டிய அக்கறையும் ஒப்பற்ற சிறப்புடையவையாகும்.

நாங்கள் எதிர்நோக்கிய நிதிசார் பிரச்சனைகளை கடந்து செல்வதற்கு செயலாளர் திரு.சி.சத்தியசீலன், மாகாணக் கல்விப்பணிப்பாளர் திரு.வி.செல்வராஜா மற்றும் கல்விப்பணிப்பாளர்கள் வழியமைத்துக் கொடுத்துதவினார்கள். பல கடினங்களுக்கும் மத்தியிலும் இந்த மீள்பார்வை முன்னேற்றகரப் பாதையில் செல்வதற்கு தமது பாதீட்டு ஒதுக்கீட்டிலே ஒரு பகுதியை செலவு செய்த எல்லாத் திணைக்களத் தலைவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த மீள்பார்வையை சாதாரண நிதி ஒதுக்கீட்டிற்குள் செய்து முடிக்கப்பட்டமைக்கான முழு நன் மதிப்பும் கல்வி அமைச்சு மற்றும் கல்வித் திணைக்களமும் முன்வந்து பங்களிப்பு செய்து ஒதுக்கப்பட்ட அவர்களது நேரத்தினையும் அவர்களையுமே சாரும். ஆலோசனைச் செயலமர்விற்கு மாத்திரமே 23,000 ற்கும் குறைவன அமெரிக்க டொலர் பணமானது வெளியக நன்கொடையாளர்களிடமிருந்து பெறப்பட்டிருந்தது.

வெற்றிகரமாக தனது தலைமையின் கீழ் ஆலோசனைப் பயிற்சிப் பட்டறையை திட்டமிட்டு ஏற்பாடு செய்து முன்னின்று உழைத்த திரு.சி. சத்தியசீலன் அவர்கட்கும் விசேட நன்றிகள் உரித்தாகட்டும். NESR இன் முன்னேற்றத்தைப் பற்றி கேட்டறிந்த கௌரவ அமைச்சர் பந்துல குணவர்த்தனவிற்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். ஆலோசனைப் பட்டறைக்கு நிதி உதவி வழங்குமாறு உலக வங்கிக்கு அவர் வழங்கிய ஆலோசனை, சலிப்பின்றி அலுவலக நேரத்திற்கு அப்பால் வழமைக்கு மாறான நேரங்களிலெல்லாம் உழைத்து வருகின்ற எல்லோராலும் வெகுவாகப் பாராட்டப்பட்டது.

ஆலோசனைச் செயலமர்வை நடாத்துவதற்கும் மீள்பார்வை பின் செயற்றிட்டத்திற்கும் உதவி புரிந்த தொடர்ந்து உதவி அளித்துக் கொண்டிருக்கும் கௌரவ வடமாகாண கல்வி அமைச்சர், கல்விச் செயலாளர், மாகாணப் பணிப்பாளர், நிர்வாக அலுவலர் திரு. லோ. விஸ்வநாதன், மற்றும் திரு. ஞானசுந்தரன், இவர்களது அலுவலர்கள் யாவருக்கும் ஏற்பாட்டாளர் என்றவகையில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அறிக்கை பிரசுரமாவதற்கு முன்னதாகவே சிபாரிசுகளில் சிலவற்றை நடைமுறைப்படுத்தியவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பொது மக்கள் முன் வைத்த ஆலோசனைகளை கருத்திற் கொண்டமைக்கும் தமது நீண்ட கால நேரடி அனுபவங்களை பங்களிப்புச் செய்தமைக்கும், முக்கிய சவாலான விடயங்கள் விவாதித்தமைக்கும் அத்தோடு அடையாளங் காணப்பட்ட பிரச்சனைகளுக்கான தீர்வுகளை முன்வைக்கும் சிபாரிசுகளை ஒழுங்குபடுத்தியமைக்கும் பத்துக் குழுத் தலைவர்களுக்கும் அவர்களது உதவியாளர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அழைக்கப்பட்டவர்கள் மத்தியில் அவர்கள் மேற்கொண்ட முன்வைப்பு, கலந்துரையாடலை ஏற்பாடு செய்தமை, மேலதிக சிபாரிசுகளை மேற்கொண்டமை இந்த ஆலோசனைச் செயலமர்வை வெற்றிபெறச் செய்துள்ளது. ஒரு சமூகம் என்ற வகையில் எமது மாணவர்களுக்கு அளிக்க கூடிய உச்ச பயனை வழங்குவதற்கேற்றவாறு தமது அனுபவங்களை கருத்துக்களை சிபாரிசுகளை பயிற்சிப் பட்டறையில் பகிர்ந்து கொள்வதற்கென வருகை தந்த யாவருக்கும் அத்தோடு மீள்பார்வை செயற்றிட்டத்தை கௌரவித்த அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

ஆலோசனைப் செயலமர்வில் குழு அறிக்கைகளை முன்வைத்து நடுநிலமையாளராகச் செயற்பட்டமைக்கும் குழுக்களின் கலந்துரையாடல்களை ஒருங்கிணைப்பு செய்தமைக்கும் நடுநிலையாளர் திரு.ராசேந்திரகுமார் கனேசராஜா அவர்களை இங்கு விசேடமாக குறிப்பிட விரும்புகிறேன். செயலாளர் நாயகத்தின் செயலாளர் திருதி.ரா.முத்துக்குமரன் மற்றும் செயலாளர் நாயகத்தின் அலுவலர் செந்தில்குமரன், ச.காண்டீபன் மற்றும் ம.குணேஸ் இவர்கள் அனைவருக்கும் ஏப்பிரல் மாதத்தில் ஆலேசனைப் பயிற்சிப் பட்டறையின் ஆரம்பத்திலிருந்து முடியும் வரை அவர்களுடைய பெறுமதி மிக்க சேவையை வழங்கியமைக்காக நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். அத்தோடு 15ஆம் திகதியிலிருந்து யூலை 20 ஆம் திகதி வரை செயலாளராக பதவியைப் பொறுப்பேற்ற திரு.எஸ்.லோகேஸ்வரன் அவர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும். மேற்கூறிய இரு செயற்பாடுகளிற்கும் பங்களிப்பு செய்த பங்காளிகளின் பெயர்ப் பட்டியல் பின்னிணைப்பு 10 ல் இணைக்கப்பட்டுள்ளது.

தாமாக முன் வந்து பலன் எதுவும் பாராது நீண்ட சேவையைப் பதிப்பு, பக்க வடிவமைப்பு மற்றும் இறுதி அறிக்கைத் தொகுப்பு மற்றும் அச்சுப் பதிப்பதற்கு அனுப்புதல் என்பவற்றில் வழங்கியமைக்கு அர்யுனன் எதிர்வீரசிங்கம், செந்தில்குமரன், ச.காண்டீபன் ஆகியோரை இங்கு விசேடமாக குறிப்பிட வேண்டும். அத்துடன் இணைய கற்கை (SERVE E-LEARNING) நிலையகத்தின் பணிப்பாளர், அலுவலர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எல்லா மொழிபெயர்ப்பாளர்களுக்கும் குறிப்பாக திரு.கு.பிறேமகாந்தன் மற்றும் பேராசிரியர் எஸ்.இராசதுரை அவர்களுக்கும் எனது விசேட நன்றிகள்.

**Nagalingam Ethirveerasingam**
**PhD Cornell University, NY**
B.Sc. (UCLA), MA. (Calif. Polytech University)
Volunteer work in the North East in Education & Sports 1994 - Present
Consultant in Education & Sports NorthEast Province, Sri Lanka 1998 & 1999
UNESCO Specialist 1980 1985 Nigeria
Special Education Teacher ABC Unified School District, Los Angeles, USA 1990-1994

# உள்ளடக்க அட்டவணை


| அத்தியாயம் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1 | வடமாகாண கல்வி அமைப்பை மீளாய்வு செய்யும் செயன்முறை | 01 |
| 2 | நிகழ்கால சூழ்நிலை ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் நிர்வாகம் | 09 |
| 3 | மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் உளசமூக நன்னிலையைப் பேணுதல் | 47 |
| 4 | கற்றல், கற்பித்தல் பரீட்சைகள் | 55 |
| 5 | தனியார் கல்வி நிலையங்களும் வடமாகாண கல்வி அமைப்பின் மீதான அவற்றின் தாக்கங்களும் | 79 |
| 6 | நிர்வாகம், நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள் மற்றும் ஆசிரியர் பிரச்சினைகள் | 93 |
| 7 | நிதி, ஆளணித் தேவைகள், செலவீனங்கள் மற்றும் ஆசிரியர் வேதனங்கள் | 99 |
| 8 | e – திட்டமிடல், தரவுத்தளம் ஆராய்ச்சி மற்றும் வெளியீடு | 105 |
| 9 | வடக்கில் முன் – பிள்ளைப் பராய மேம்படுத்தலுக்கான கல்வி | 113 |
| 10 | விசேடகல்வி | 119 |
| 11 | தொடர்ச்சியான கல்வி | 129 |
| 12 | தமிழ் மொழி மூல கல்வி நிறுவகம் ( ITME ) | 135 |
| 13 | வடமாகாணத்திற்கான ஒரு புதிய கல்வி நிர்வாக முறைமை | 143 |
| 14 | அமுலாக்கல் செயன்முறை, கால எல்லை மற்றும் பொறுப்பு | 149 |
| 15 | முடிவுகளும் பரிந்துரைகளும் | 155 |
| Appendix I | பொது மக்களதும் பங்குதாரர்களதும் சமர்ப்பிப்பின் தொகுப்பு | 191 |
| Appendix II | Calendar of Events | 206 |
| Appendix III | Program of the NESR Consultancy Workshop | 208 |
| Appendix IV | Members of the Steering Committee & Participants in the Consultation Workshop | 210 |
| a) | Psychosocial wellbeing of students and teachers Group | 210 |
| b) | Teaching, Learning & National Examinations Group | 211 |
| c) | Administration, Appointments, Promotion, Transfers & Teachers | 212 |
| d) | ePlanning, Database, EMIS, Research and Publication Group | 213 |

| | | |
|---|---|---|
| e) | Finance, Staff requirements, Expenditures and Teachers Salary | 214 |
| f) | Early Childhood Education and Development Group | 215 |
| g) | Special Needs Education Group | 216 |
| h) | Establishment of the Institute of Tamil medium Education Group | 217 |
| i) | Institute of Tamil medium Education Group | 218 |
| j) | A New Northern School Administrative System – & Continuous Education Group | 219 |
| Appendix V | Organization Chart of NP Min. of Education, Cultural Affairs, Sports & Youth Affairs | 220 |
| Appendix VI | Organization Chart of the Northern Provincial Education System | 221 |
| Appendix VII | Organization Chart of the Zonal Education System | 222 |
| Appendix VIII | Teachers Salary Scale | 223 |
| Appendix IX | Applicable MOE Circulars | 224 |
| Appendix X | Concept Paper on Nature Centres for Experiential Learning | 235 |
| Appendix XI | Education Management Information System Implementation Proposal | 237 |

# உருக்களின் பட்டியல்

குறிப்பு: முதலாம் எண் அத்தியாய இலக்கத்தையும் இரண்டாம் எண் உரு இலக்கத்தையும் குறிக்கின்றது.

**Description**


Figure 2.1: Sri Lanka School System
Figure 2.2: Teacher Distribution by Highest Qualification Achieved – National Level
Figure 2.3: Teacher Distribution by Highest Qualification Achieved – Northern Province 2013
Figure 2.4: Teacher Distribution by Highest Qualification Achieved 2013
Figure 2.5: Teacher Distribution by Highest Qualification Achieved - Islands 2013
Figure 2.6: Teacher Distribution by Highest Qualification Achieved - Jaffna 2013
Figure 2.7: Teacher Distribution by Highest Qualification Achieved – Kilinochchi 2013
Figure 2.8: Teacher Distribution by Highest Qualification Achieved – Mullaitivu 2013
Figure 2.9: Teacher Distribution by Highest Qualification Achieved - Thunukkai 2013
Figure 2.10: Teacher Distribution by Highest Qualification Achieved – Madhu 2013
Figure 2.11: Teacher Distribution by Highest Qualification Achieved – Mannar 2013
Figure 2.12: Teacher Distribution by Highest Qualification Achieved – Vavuniya North 2013
Figure 2.13: Teacher Distribution by Highest Qualification Achieved – Vavuniya South 2013
Figure 2.14: Teacher Distribution by Highest Qualification Achieved – Thenmaradchi 2013
Figure 2.15: Teacher Distribution by Highest Qualification Achieved – Vadamaradchi 2013
Figure 2.16: Teacher Distribution by Highest Qualification Achieved – Valikamam 2013
Figure 2.17: Jaffna Central College 1AB Teacher Dist. by Highest Qualification Achieved – 2013
Figure 2.18: J/Vembady Girls High School 1AB Teacher Dist. by Highest Qual. Achi eved 2013
Figure 2.19: Jaffna Hindu 1AB Teacher Distributio n by Highest Qualification Achieved 2013
Figure 2.20: Kilinochchi Central 1AB Teacher Distribution by Highest Qualificati on Achieved
Figure 2.21: M/Puthukudierruppu 1AB Teacher Dist. by Highest Qual. Achieved 2013
Figure 2,22: Percentage Scoring 'C' or Higher in GCE O/L Science by Zones – 2012
Figure 2,23: Percentage Scoring 'C' or Higher in GCE O/L Mathematics by Zones – 2012
Figure 2,24: Percentage Scoring 'C' or Higher in GCE O/L English by Zones – 2012
Figure 2.25: % of Students from the North in the Four GCE A/L Stream 2012
Figure 2.26: % of Students Qualified for University in Arts Stream 2012 Zonewise NP
Figure 2.27: % of Students Qualified for University in Maths Stream 201 2 Zonewise NP
Figure 2.28: % of Students Qualified for University in Bio Stream 2012 Zonewise NP
Figure 2.29: % of Students Qualified for University in Commerce Stream 2012 Zonewise NP
Figure 2.30: Per Student Cost based on the Expenditure
Figure 2.31: Economic Welfare by Education Level of the Principal Income Earner of a Household
Figure 2.32: Public Investment in Education as a Percentage of National Income , 2010
Figure 1.33: Public Investment in Education as a Proportion of the Government Budget, 2010
Figure 2.34: Assoc. of Pub lic Investment in Edu Student & Learning Outcomes in TIMSS 2007
Figure 4.1: Pupil Teacher Ratio at Primary Level by Province 1990 & 1998
Figure 4.2: Percentage of Merit Students that entered from the Jaffna District

**Figure 4.3: Multiple Intelligences**
**Figure 4.4: Experiential Method of Teaching & Self Learning**
**Figure 4.5: Current Year, O/L & A/L Exams Schedule**
**Figure: 4.6: Proposed School Year, O/L & A/L Exams Schedule**
**Figure 7.1: U.S. GDP per capita**
**Figure 7.2: Teacher Salaries in the United States**
**Figure 10.1: Percentage of Special Needs Children relative to total enrolment of students**
**Figure 10.2 Special Needs Children Details - Jaffna**
**Figure 10.3 Special Needs Children Details – Islands**
**Figure 10.4 Special Needs Children Details - Kilinochchi**
**Figure 10.5 Special Needs Children Details - Madhu**
**Figure 10.6 Special Needs Children Details - Mullaitivu**
**Figure 11.1: Student's Learning & Growth section**
**Figure 12.1: Proposed outline of ITME**
**Figure 12.2: Organisation Chart of the ITME**
**Figure 13.1: Proposed Organization of the Northern Province Schools Administration System**
**Figure 14.1: Implementation Timeline and Responsibility**
**Figure 14.2: Areas and Level of Staff Development**
**Figure 15.1: ITME Structure**
**Figure 15.2: Organization of the Northern Province Schools Administration System**

# அட்டவணைகளின் பட்டியல்

**குறிப்பு: முதலாம் எண் அத்தியாய இலக்கத்தையும் இரண்டாம் எண் அட்டவணை இலக்கத்தையும் குறிக்கின்றது.**

**Description**

**Table 2.1: Number of Schools and Enrolment by Type of School and by Zone, 2012**
**Table 2.2: Teacher Distribution by Qualification – Categories and Numbers – National Level.**
**Table 2.3: Classification of Schools According Level of 'Congeniality' by Province 2007**
**Table 2.4: Public Education Spending as a Percentage of GDP. 2010.**
**Table 2.5: The Gini Coefficients of Public Education Expenditure by Level of Education in Sri Lanka.**
**Table 2.6: Net Enrolment Rates across Economic Quintiles.**
**Table 4.1: Sri Lanka O/L Results – 2011**
**Table 5.1: Reasons for Taking Tuition – 1998**
**Table 7.1: Sri Lankan Teacher earnings as a percentage of GDP**
**Table 9.1: Details of Preschools, Teachers & Children by Zone, NP – 2008**
**Table 9.2: Details of Preschools, Teachers & Children by Zone, NP – 2010**
**Table 10.1: Disabled persons by Type of Disability, Gender and Rate per 10,000 by District**
**Table 10.2: Enrolment of students with Special Needs by Zone and Needs in 2012**
**Table 10.3: Special Needs Student, Staff & Facilities**
**Table 15.1: Percent Qualified to continue to GCE A/L by Districts and Years & GCE A/L Percent Pass**

# சொற்கள் மற்றும் சுருக்கங்கள்

| | |
|---|---|
| **ADE** | ஓர் பாடத்தில் /விடயத்தில் விஷேட தகுதி பெற்ற நபர் உதவிக் கல்விப்பணிப்பாளர் ஆவார். |
| **ISA** | ஒரு பாடத்தில் விஷேட தகுதிபெற்ற, ஏற்கனவே கற்பித்தல் பணி புரிந்து தற்போது பாடசாலை மற்றும் கற்பித்தலை கண்காணிப்பதற்கென பதவியுயர்த்தப்பட்டவர்கள். |
| MOE | கல்வியமைச்சு இலங்கை |
| **National Examinations** | க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த), புலமைபரிசில் பரீட்சை |
| G.C.E. A/L | தரம் 13 இல் நடாத்தப்படும் தேசிய பரீட்சையாகிய க.பொ.த (உ/த) பரீட்சை |
| G.C.E. O/L | தரம் 11 இல் நடாத்தப்படும் தேசிய பரீட்சையாகிய க.பொ.த (சா/த) பரீட்சை |
| Grade 5 Scholarship | பிரபல்யமான பாடசாலைகளின் அனுமதிக்காகவும் உதவித் தொகை வழங்கலுக்காகவும் மாணவர்களைத் தெரிவு செய்வதற்காகவும் தரம் 5 இல் நடாத்தப்படும் தேசிய பரீட்சை |
| மாகாணப் பாடசாலைகள் | மாகாண அமைச்சின் முழுப்பொறுப்பிலுள்ள ஆனால் நிதி ஒதுக்கீடு உட்பட முக்கிய பரப்புக்களில் தேசிய அரசின் கட்டுப்பாடுகளையுடைய பாடசாலைகள். தேசிய பரீட்சைகளுக்கு மாணவர்களை தயார்ப்படுத்துகின்றன. |
| தேசிய பாடசாலைகள் | தேசிய அமைச்சின் பொறுப்பிலுள்ள தேசியஅரசினால் அலுவலர்கள் நேரடியாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு வேதனம் வழங்கப்படுகின்ற பாடசாலைகள் இவையும் தேசிய பாடசாலைகளிற்கு மாணவர்களைத் தயார் செய்கின்றன. |
| **Assisted Schools** | உதவி பெறும் பாடசாலைகள் தனியார் பாடசாலைகளை ஒத்தவை. ஆனால் ஆசிரியர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் தேசிய அரசினால் வேதனம் வழங்கப்படுகின்றது. தேசிய பரீட்சைகளிற்கு மாணவர்களைத் தயார்படுத்துகின்றன. |
| தனியார் பாடசாலைகள் | தமது கலைத்திட்ட மற்றும் பரீட்சைகளைப் பின்பற்றுகிறார்களா என்பதனை உறுதிப்படுத்துவதற்காக மட்டும் கண்காணிக்கப்படும் பாடசாலைகள் ஏனைய பாடசாலை ஆசிரியர்கள் போன்று தனியார் பாடசாலை ஆசிரியர்கள் ஒய்வூதியத் திட்டத்தில் சேர்ந்துள்ளனர். ஆசிரியர்களை தாமாகவே ஆட்சேர்ப்புச் செய்வதுடன் பொறுப்புடையவர்களாகவும் உள்ளனர். |

| | |
|---|---|
| தனியார் கல்வி நிறுவனங்கள் | தனியார் கட்டணம் செலுத்தும் முறைசாரா பிரத்தியேக கல்வி நிலையங்கள் தரம் 1 இலிருந்து தரம் 13 வரை வகுப்புக்களை நடாத்தி தேசிய பரீட்சைகளுக்கு மாணவர்களை தயார்ப்படுத்துகின்றன. சில தற்காலிக கட்டிடங்களில் அல்லது ஆசிரியர்களின் இல்லங்களில் நடைபெறும். ஏனையவை 100 தொடக்கம் 200 மாணவர்களைக் கொண்ட வகுப்புக்களையும் மற்றும் சில சந்தரப்பங்களில் 500 மாணவர்கள் கொண்ட உள்ளூர் பொருட்களினால் ஆன மண்டபங்களிலும் நடைபெறுகின்றன. ஆசிரியர்களில் அதிகமானோர் பாடசாலை ஆசிரியர்களாவார். பாடசாலை முடிவடைந்ததன் பின்னர் அல்லது இறுதி நாட்களில் நடைபெறும். |
| NESR | வடக்கின் கல்வி முறைமை மீளாய்வு |
| Type 1AB | கா.பொ.த (உ/த) இல் கணித, விஞ்ஞான பிரிவுகளைக் கொண்ட பாடசாலைகள் |
| Type 1C | கா.பொ.த (உ/த) இல் கலை மற்றும் வர்த்தக அல்லது கலைப் பிரிவை மட்டும் கொண்ட பாடசாலைகள் |
| Type 11 | தரம் 1 இல் இருந்து தரம் 11 வரை வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகள் |
| Type 111 | தரம் 1 இல் இருந்து தரம் 5 வரை வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகள் |
| NP | வடக்கு மாகாணம், இலங்கை |
| NIE | தேசிய கல்வி நிறுவகம் |

# வடக்கின் கல்வி முறைமை மீளாய்வு ஆலோசனைச் செயலமர்வில் முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

குரு ப்ரம்மா......

தலைவரவர்களே, ஆளுநர் அவர்களே, கௌரவ மத்திய, மாகாண கல்வி அமைச்சர்களே, கௌரவ துணை அமைச்சர் அவர்களே,கலாநிதி நாகலிங்கம் எதிரிவீரசிங்கம் அவர்களே, சிரேஷ்ட அலுவலர்களே, ஆன்றோர்களே, சான்றோர்களே எனதருமை சகோதர சகோதரிகளே!

இந்தப் பணிக்கூடத்தில் பங்கு கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். எமது தெருக்களில் இருக்கும் போக்குவரத்து சமிக்ஞை விளக்குகளைப் பார்த்தீர்களானால், அவை எம்மை "நில், கவனி , செல்" என்று எச்சரிப்பதைக் காண்பீர்கள். வாழ்க்கை ஒரு ஓட்டம் தான். என்றாலும் அந்த ஓட்டத்தின் போது நாம் யாவரும் நின்று கவனித்துச் செல்லுதல் எமக்கும் நல்லது மற்றவர்களுக்கும் நல்லது. அதைத் தான் இந்தப் பணிக்கூடம் செய்ய முன்வந்துள்ளது. இது வரை ஓடிக் கொண்டிருக்கும் எங்கள் கல்வி சம்பந்தமான ஒழுங்கு முறையை அல்லது அதன் ஒழுங்கமைப்பை நின்று அவதானித்து புதிய உத்வேகத்துடன் முன்னேறிச் செல்ல முன் வந்துள்ளது எங்கள் மாகாணக் கல்வி அமைச்சு. இதனால் பல நன்மைகளை நாங்கள் பெறலாம். இதுவரை காலமும் நாங்கள் பின்பற்றி வந்த வழிமுறைகள், செயற்பாடுகள், கொள்கைகள், இலக்குகள் ஆகியன எந்தளவுக்கு நன்மை பயப்பன, எங்கெல்லாம் குறைபாடுகள் இருக்கின்றன, ஏன் அந்த குறைபாடுகளை நாங்கள் சந்திக்க வேண்டி வந்துள்ளது என்பன போன்றவற்றை அலசி ஆராய ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அதே நேரம் எமது கடந்த கால அனுபவத்தை முன்வைத்து எவ்வாறு முன்னோக்கிப் பயணிக்க வேண்டும் என்று ஆராய்ந்தறிவது மற்றொரு சந்தர்ப்பமாக எமக்கு வழங்கப்பட்டுள்ளது. இதிலே மத்திய, மாகாண அமைச்சர்களும் அலுவலர்களும் பங்கு பற்றுவது சாலச்சிறந்ததே. நாட்டுக்கொரு முழுமையான இணைந்த கல்வி அமைப்பு இருப்பது அவசியமே. அதை நாங்கள் மறுக்க மாட்டோம்.

ஆனால் எமக்கென வடமாகாணத் தமிழ் பேசும் மக்களுக்கென தனித்துவம் ஒன்றிருப்பதை மத்திய அரசாங்கம் அடையாளம் காணவேண்டிய ஒரு கட்டாயம் எழுந்துள்ளதையும் மத்திய அரசாங்க அமைச்சர்களும் அலுவலர்களும் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது எமது எண்ணங்களையும் எமது மனோநிலைகளையும் எமது பாரம்பரியங்களையும் எமது நோக்கையும் புரியாமல் அறியாமல் கல்வி சம்பந்தமான ஆவணங்களைத் தயாரிப்பது எமக்கு ஏமாற்றத்தையே அளிக்கும். ஓரிரு தினங்களுக்கு முன்னர் தான் ஒரு அமெரிக்கப் பேராசிரியரான அலெக்ஸ் கொலியர் மனித குலம் முதன் முதலில் பேசி வந்த மொழி தமிழ் என்றார். இது பற்றிய இறுவட்டைப் பார்த்தேன். அதனை இந்தியாவிலும் இலங்கையிலும் இருந்தவர்களே முதன் முதலில் பேசத் தொடங்கினார்கள். பின்னர் அது மேற்கு, கிழக்கு என்று உலகெங்கனுங் கொண்டு செல்லப்பட்டது. ஜப்பானிய மொழிக்கும் தமிழ் மொழிக்கும் இடையில் பல ஒற்றுமைகள் இருப்பதை பல பேராசிரியர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ஆகவே வடமாகாணம் கிழக்கு மாகாணம் ஆகியவற்றின் தனித் தன்மையையும் தொன்மையையும் தென்பகுதி மக்கள் புரிந்து கொள்ளவேண்டும். இதிலே போட்டி மனப்பான்மை இருக்கக் கூடாது. பொறாமை இருக்கக் கூடாது. எமது வேற்றுமையை நாம் இத் தருணத்தில் எடுத்துக் காட்டுவது எம்மைக் குறிப்பிட்ட ஒரு பெரும்பான்மையினத்து வட்டத்தினுள் இழுத்தெடுத்து விடாதீர்கள் என்று எமது கல்விக் கொள்கையாளர்களிடம் விண்ணப்பம் செய்யும் விதத்திலேயே எமது தனித்துவத்தைத் தயவு செய்து மதியுங்கள் என்று கூறி வைக்கின்றேன். பல்வேறு இனங்களிடையே புரிந்துணர்வும் மதிப்பும் எழுந்தால் எமது தேசியப் பிரச்சனை தானாகவே தீர்ந்துவிடும்.

மேலும் வடகிழக்கு மக்களுக்கும் தென்மாகாணங்களில் வாழும் பெரும்பான்மையின மக்களுக்கும் இடையில் பலவிதமான பாரம்பரிய ஒருமைப்பாடுகள் இருக்கின்றன என்பதை நாம் மறந்து விடக்கூடாது. உதாரணம் வருடப்பிறப்பு இருசாராருக்கும் ஒரே காலத்தில் தான் வருகின்றது.

அடுத்து பார்த்தோமானால் ஆதிகாலம் தொடக்கம் கல்வியில் குருசிஷ்ய பரம்பரை எம் எல்லோருக்கும் பொதுவானது. குருவிடம் இருந்து சிஷ்யன் அறிவைப் பெற்று அதை அவன் தன் சிஷ்யனுக்குத் தாரைவார்த்துக் கொடுத்தான். ஒரு அறிஞனிடம் யார் உன் குரு? என்று கேட்டுத் தெரிந்து கொண்டாலே அவனின் பாரம்பரியம், அறிவின் ஆழம், ஆராய்ச்சித் திறன் போன்றவற்றைத் தெரிந்து கொள்ளலாம்.

ஆனால் இன்று அந்த குருவின் பணியைத் தனியார் கல்வி நிலையங்கள் ஆற்றி வருவது மன வருத்தத்தைத் தருகின்றது. பரீட்சைக்கு மாணவ மாணவியரைத் தயார்ப்படுத்த மட்டுமே இந் நிலையங்கள் ஏற்றவையாக இருக்கின்றன. எமது ஆசிரியர்களும் அதே போல்த் தான். பரீட்சைக்குத் தயார்ப்படுத்துவதற்கு அப்பால் எதையும் தெரியாதவர்களாகவே உள்ளனர். இதனால் மாணவ மாணவியரின் நோக்குகள், வாழும் முறை என்பன பாதிப்படைந்து வருகின்றன. வெறும் கேள்வி பதில் என்ற வட்டத்திற்கு அப்பால் செல்ல முடியாதவர்களாக மாறிவருகின்றார்கள். பரீட்சைகளில் சித்தி அடைய வேண்டியது அவசியமே. ஆனால் அதே நேரம் வாழ்க்கையினையும் புரிந்து வாழப்பழகிக் கொள்ள வேண்டும். முன்னைய காலங்களில் குழந்தைகளுக்கென்று தொழில்கள், கல்வி, ஒழுக்கம், பாதுகாப்பு முறைமை போன்றவற்றை சொல்லிக் கொடுப்பது பெற்றோர்களையும் குடும்பத்தவரையும் சார்ந்திருந்தது. விளையாட்டுக்கள், போட்டிகள் போன்றவை சேர்ந்து விளையாடுதலையுந் தமக்குள் முரண்பாடுகளை சரிப்படுத்திக் கொள்வதையும் வலியுறுத்தி வந்தன.கிரேக்க நாட்டில் அதென்சு நகரில் ஒவ்வொரு மாணவனும் மூன்று கலைகளைப் பழகிக் கொள்ள வேண்டும் என்று அன்றைய நாடாளுவோர் எதிர் பார்த்தார்கள். ஒன்று குதிரை ஏற்றம், அடுத்து வில்வித்தை, மூன்றாவது உண்மையைப் பேசுதல்.

இன்றைய காலகட்டத்திற்கு அவற்றை மாற்றிக் கொள்வதென்றால் ஒவ்வொரு மாணவ மாணவியரும் மோட்டார் வாகனம் ஓட்டவும் கணனியைக் கையாளவும் தெரிந்திருக்க வேண்டும். ஆனால் அன்று கிரேக்கர்கள் கூறிய மூன்றாவது தகைமை இன்றும் ஏற்புடைத்தாகும். எம் மாணவ சமுதாயம் உண்மையைப் பேசப் பழகிக் கொள்ள வேண்டும். இவ்வாறு அன்று பெற்றோர்கள் எதிர் பார்த்ததால்த் தான் அன்றைய மாணவ சமுதாயம் பெரியவர்களாகத் தமது வயது எய்திய காலத்தில் வளமுடன் வாழத் தலைப்பட்டார்கள். வருத்தி வாழாது வளமாக வாழ எத்தனித்தார்கள். இன்று எமது பெற்றோர்களின்நோக்கமோ மாணவ மாணவியர் எவ்வாறு பரீட்சையில் தேர்ந்தெடுக்கப்படலாம் என்பது மட்டுமே. அதற்காக எந்த அளவுக்கும் செல்லப் பெற்றோரும் மாணவ மாணவியரும் தயாராக இருக்கின்றார்கள். பரீட்சையில் படி தவறினால் பெற்றோருக்கும் மற்றோருக்கும் ஏன் அந்த மாணவ மாணவியருக்கும் வாழ்க்கையில் இடி விழுந்ததாகவே தென்படுகின்றது. பரீட்சைகள் வேண்டாம் என்று நான் கூறவில்லை. எம்மை வாழ்க்கைக்குப் பக்குவப் படுத்திக் கொள்வதுகூடிய முக்கியத்துவம் உடையது என்பதே எனது வாதம். இது பற்றிக் கல்வியியலாளர்கள் சிந்திக்க வேண்டும்.

அதாவது இன்று கல்வியானது இலங்கையில் விலையற்றே கிடைக்கின்றது. சும்மா கிடைக்கின்றது. இனாமாகக் கிடைக்கின்றது. பல்கலைக்கழக மாணவ சமுதாயம் கூட எமக்கு அதைத் தரவில்லை, இதைத் தரவில்லை என்று தான் கூறுகின்றனர். அதாவது இனாமாகத் தருவதை ஒரு கடப்பாடாகக் கருதிக் கொள்கின்றார்கள். நாங்கள் இனாமாகப் பலதையும் கேட்டுப் பெற்று அவ்வாறே பழகிக் கொள்கின்றோம். இனாமாகப் பெறுவதால் அதன் மதிப்பு எமக்குப் புலப்படுவதில்லை.

அரசாங்கம் இனாமாகத் தரவேண்டும் யுனெஸ்கோ தரவேண்டும் யுனிசெவ் தரவேண்டும் British Council தரவேண்டும் யுஎஸ் எயிட் தரவேண்டும் அவுஸ் எயிட் தரவேண்டும் என்று அண்டிப் பிழைக்கவே எத்தனிக்கின்றோம். கல்வியை இனாமாக இந்த நாட்டில் பெற்று வெளிநாடு சென்று வேலை எடுத்து வெளிப்பகட்டுடன் அங்கு வாழ வேண்டும் என்பதே எமது மாணவ சமுதாயத்தின் கனவாக இருக்கின்றது. ஆனால் எமக்கு உதவி தரும் நிறுவனங்களும் நாடுகளும் பணத்தை மரங்களில் இருந்து பறித்துத் தருவதில்லை. தமது கொடை தருநரிடமிருந்தோ தமது மக்களிடமிருந்தோ வரியாகவோ வேறு வழிகளிலோ பணத்தை அறவிட்டே நிதி உதவி எமக்கு வழங்குகின்றார்கள். அத்துடன் எமக்கு உதவி தரும் நாடுகளில் கல்வி இனாமாகச் சகல மாணவ மாணவியர்க்கும் கிடைப்பதுமில்லை. பலர் தமது படிப்புக்காகப் பகுதி நேர வேலை பார்க்கின்றார்கள். ஆனால் நாங்கள் யாசித்து உதவி பெற்று இனாமாகப் படிக்கின்றோம். எதனையும் மற்றவரிடம் இருந்து எதிர் பார்த்தே வளர்கின்றோம். தன் கையே தனக்குதவி என்பதற்கு அர்த்தம் இல்லாமல் போய்விட்டது இன்று. தமது கல்விக்காகத் தாங்கள் தங்களை வருத்தி வேலை செய்ய வேண்டும் என்ற நிலை வந்து விட்டால் எமது மாணவ சமுதாயத்தினிடையே தன்னம்பிக்கை தானாகவே வளர்ந்து விடும்.

அத்துடன் சுதந்திரத்திற்கு முன்னரான அன்றைய காலகட்டத்திற்கு ஏற்ப வெளிநாட்டார் எம்மைத் தம் சார்பில் நிர்வாகத்தை நடத்தப் போதுமான கல்வியையே எமக்களித்தனர். எமது வடகிழக்கு மக்களும் அரசாங்க உத்தியோகம் கிடைத்தால் போதும் என்ற நிலையிலே எழுது வினைஞர்களாக வெளிவந்து நிர்வாக சேவையில் மேல் நோக்கிச் சென்று ஓய்வூதியத்துடன் ஒதுங்கிக் கொண்டார்கள். ஆனால் இன்றைய தேவை அதுவன்று. நாம் பொருளாதார விருத்தியடைய தொழினுட்பம், வணிகம் போன்றவற்றில் சிறப்படையப் போதுமான தொழிற்றிறனைப் பெற வேண்டியுள்ளது. பல்தொழில்களில் பயிற்சி பெற வேண்டியுள்ளது. அதற்கான நடவடிக்கைகளை எமது மாகாணக் கல்வித் துறையினர் எடுத்து வருகின்றார்களா என்பதை அறிய ஆவலாய் உள்ளேன். அத்துடன் மாகாணங்கள் தொழிற்றிறன்கள்

பெறக்கூடிய பல்கலைக்கழகங்களை நிறுவினால் என்ன என்று கேள்வியையும் எழுப்புகின்றேன். எல்லோரும் வைத்திய கலாநிதிகளாகவோ, எந்திரிகளாகவோ, கணக்காளர்களாகவோ, சட்டத்தரணிகளாகவோ வர வேண்டும் என்று எண்ணுவது மடைமை. வருங்காலம் பொருளாதார விருத்தியை மையமாக வைத்து முன் செல்லப் போகும் காலம். ஆகவே அதற்கு ஏற்றவாறு கல்வி அமைய வேண்டும்.

என் தாயாரின் தங்கையார் ஒரு வைத்திய கலாநிதி. இங்கு பல காலம் வேலை செய்து விட்டு அவுஸ்திரேலியா சென்றார். அவரின் கணவரும் வைத்திய கலாநிதியே. அவர்கள் அங்கு சென்று குடியிருக்க எடுத்த வதிவிடத்தின் யன்னல்களைச் சுத்தப்படுத்த வேண்டியிருந்தது. தொலைபேசியில் யன்னல் சுத்தப்படுத்தும் ஜனிட்டர் என்ற வேலையாளை எனது சிறிய தாயார் அழைத்தார். அடுத்த நாள் வருவதாக அந்த வேலையாள் கூறினார். அடுத்த நாள் காலையில் ஒன்பது மணிக்குப் பத்து நிமிடங்கள் இருந்த போது ஒரு லிமெர்சீன் எனப்படும் நீண்ட மூடிய உந்து வண்டி என் சின்னம்மாவின் வீட்டு வாசலில் வந்து நின்றது. கோட்டு சூட்டுடன் ஒருவர் இறங்கினார். வந்து தனது கார்ட்டைக் காட்டித் தான் தான் ஜனிட்டர் என்றார். வேலை உடுப்புக்களுக்கு மாறி 9 தொடக்கம் 12 மணி வரை வேலை செய்தார். யன்னல்கள் யாவும் பளிச்சென்றிருந்தன. வேலை முடிந்துவிட்டது. தனது ஊதியத்தைச் சொன்னார். சின்னம்மாவுக்கு மயக்கம் வந்துவிட்டது. அவ்வளவு பெரிய தொகை. கேட்ட தொகையைக் கொடுத்தனுப்பினார். இங்கு யன்னல் சுத்தப்படுத்துபவனுக்கு நாம் என்ன கொடுக்கின்றோம்? நாங்கள்இங்கு சிரேஷ்ட வைத்திய கலாநிதி ஒருவருக்குக் கொடுக்கும் ஊதியத்திலும் பார்க்கக் கூடிய தொகையை அங்கு கொடுக்க வேண்டியிருந்தது. அதுமட்டுமல்ல. அன்றைய மாலை அவ்வூரின் நகரபிதா கொடுத்த இராப்போசன விருந்து இருந்தது. அதில் என் உறவினருடன் சேர்ந்து அந்த ஜனிட்டும் சரிசமனாக உட்கார்ந்து உணவு உண்டார்கள். தொழிலுக்கு அவுஸ்திரேலியா கொடுத்த மதிப்பை இதிலிருந்து அறிந்து கொண்டார் என் சின்னம்மா. நாமும் அதைப் புரிந்து கொள்ள வேண்டும். தொழிற்றிறன்களைப் பெறப் போதிய வசதிகள் நாம் செய்து கொடுக்க வேண்டும். வேண்டுமெனில் படிக்கும் போதே மாணவ மாணவியர் பகுதி நேர வேலை செய்து வருமானத்தை வருவிக்க வழி வகுக்க வேண்டும்.

இன்று எமது மக்கள் கொடூரமான ஒரு போரின் பின்னணியில் இருந்து விடுபட்டு வந்துள்ளார்கள். போர்க்கால வாழ்க்கையை இன்றும் நினைவுபடுத்த இராணுவம் எங்கும் வியாபித்து நிற்கின்றது. அப்படியிருந்தும் நாம் முன்னேற வேண்டுமென்றால் நிச்சயமாக எமக்குத் தொழிற்கல்வி அத்தியாவசியமாகின்றது. கனனியைக் கையாள்வது கூட ஒரு தொழில் தான். தொழில்களில் திறமை பெற்றால் வெளிநாடுகள் கூட எம் மாணவ சமுதாயத்தைக் கரங் கூப்பி வரவேற்கும். தச்சர், கொத்தர், கொல்லர் என்ற தொழில்களைப் புரிபவர்களுக்கு உள்ளூரிலேயே நல்ல கிராக்கி இருக்கின்றது. தொழில்களுக்கு நாம் மதிப்புக் கொடுக்க முன்வந்தோமானால் எமது மாணவச் சமுதாயம் தொழிற் கல்வியை நாடுவர். நாடிப் பயனடைவர். இதற்கு எம் சிந்தனைகள் மாற வேண்டும். செய்யும் தொழிலே தெய்வம் என்று வாழ்பவரை நாமும் உயர் ஸ்தானத்தில் வைத்துப் போற்ற முன்வர வேண்டும். தொழில்களின் அடிப்படையில் சாதிகள் வளர்ந்து வந்தமை உண்மைதான். ஆனால் இப்பொழுது காலம் மாறிவிட்டது. வெள்ளாளன் மீன்பிடித் தொழில் செய்கின்றான். கரையான் வெள்ளாமை செய்கின்றான். இதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். மாற்றங்களை மனதிற்கு எடுத்துக் கொள்ள வேண்டும். தொழிற்றிறனைக் கொண்ட ஒருவன் எத் தொழிலைச் செய்தாலும் அவன் போற்றுதலுக்குரியவனாகின்றான்.

சென்ற கிழமை தான் நான் இருதய சத்திரசிகிச்சைப் பிரிவொன்றைத் தொடக்கி வைத்த போது எமது தமிழ் மாணவிகள், பெண்கள் ஆகியோர் தாதியராக வருவதற்குத் தயக்கம் காட்டுவதைச் சுட்டிக் காட்டினேன். தாதியரின் தொழில் அத்தனை கேவலமானது என்று நினைக்கத் தேவையில்லை. அன்பும் பராமரிப்புப் பண்பும் சேவை மனப்பான்மையும் இயற்கையாகப் பெண்களிடம் இருக்கும் குணங்கள். அதைத் தொழிற்றிறனாக்கி வெற்றி காண எமது இளம் பெண்கள் முன்வரவேண்டும். தன் மனைவி ஒரு தாதியென்று பெருமையாக ஆண்மக்கள் கூற முன்வரவேண்டும். இதில் விசித்திரம் என்னவென்றால் உள்ளூரில்த்தான் இந்தத் தாதியர்க்கு எதிரான மனோபாவம். வெளிநாடுகளில் சென்று தாதியர்களாக எமது பல பெண்கள் வேலை செய்கின்றார்கள். ஆகவே செய் தொழிலின் மீதான மதிப்பை அதனைச் செய்பவர்களுக்கும் கொடுக்க முன் வர வேண்டும். சேய்மையில் நின்று பார்க்கும் எம்மவர்களுக்கும் வர வேண்டும்.

அடுத்து மாணவ ஆசிரிய உறவை எடுத்துக் கொண்டால் அங்கும் பல சிக்கல்களை நாம் காண்கின்றோம். இதற்குக் காரணம் அரசியல் செல்வாக்கில் ஆசிரியர்கள் அணைக்கப்படுவது. ஒரு அரசியல்வாதி என்ன நினைக்கின்றான் என்றால் தான் ஒருவனுக்கு ஆசிரிய வேலை எடுத்துக் கொடுத்தால் அவன் ஊடாக பலரை அரசியல்

ரீதியாக என் வசம் திருப்பிவிடலாம் என்று. அடுத்த தேர்தலில்த்தான் அரசியல்வாதி குறியாக இருக்கின்றான். ஆனால் தகைமையற்ற ஒருவனை அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி ஆசிரியனாகவும் அதிபராகவும் ஆக்குவதால் வரும் ஆபத்தை அவன் உணர்கின்றான் இல்லை. கல்வியின் அடிப்படையில், அனுபவத்தின் அடிப்படையில், தகைமை அடிப்படையில் ஒரு ஆசிரியரை நியமிக்காது அரசியல் காரணம் ஒன்றிற்காகவே நியமித்ததினால் பல சிக்கல்களை எமது சமுதாயம் எதிர்நோக்கி வந்துள்ளது. அதில் ஒன்று தான் இன்றைய மாணவச் சமுதாயத்திற்குத் தமது ஆசிரியர்கள் மீது ஏற்பட்டிருக்கும் மதிப்பற்ற மனோபாவம். அதனால்தான் அவர்கள் தனியார் கல்வி நிலையங்களை நாடிச் செல்கின்றார்கள். தகைமையற்ற தறுதலைகளை ஆசிரியர் ஆக்குவதைத் தவிர்ப்போமாக!

நல்ல ஆசிரியர்கள் மாணவ மாணவியரிடம் இருந்து அவர்களின் உள்ளார்ந்த தகைமைகளை வெளிக்கொண்டு வருகின்றார்கள். அதற்கான தகைமை அவர்களுக்கு இருக்கின்றது. தகுதியற்ற ஆசிரியர்கள் வெறும் பயத்தையும் பீதியையும் காட்டியே படிப்பை நடத்துவர். இவற்றை எமது அரசியல்வாதிகள் புரிந்து கொள்ள வேண்டும். தமது சுயலாபத்திற்காக ஒரு மாணவ தலைமுறையையே சிதைக்கின்றார்கள் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள முன்வர வேண்டும்.

இன்று தொடங்கும் இந்தப் பணிக்கூடமானது எமது மத்திய அரசாங்கக் கல்வி அமைச்சரையும் எமது தேசிய கல்வித் துறையின் சிரேஷ்ட அலுவலர்களையும் எம் மத்திக்கு அழைத்து வந்துள்ளது. அவர்களுடன் எமது வடமாகாணக் கல்வித் துறையினர் சரிசமமாக நின்று எமது கல்வித்துறையின் மறுசீரமைப்புப் பற்றி ஆராய்வர் என்று நம்புகின்றேன். வெளிநாட்டுக் கல்வியியலாளர்களை அழைக்கத் தடைவிதித்திருப்பதாகக் கேள்வி. இது நல்லதல்ல. பன்னாட்டு விற்பன்னர்களிடம் இருந்து எமக்குப் பயன் தருவனவற்றைக் கற்றுத் தேர்ந்திருக்கலாம். அதற்கு வாய்ப்பளிக்காமல் விட்டுவிட்டோம். அவ்வாறான தடைக்கு அடிப்படைக் காரணம் இன ஒடுக்கலா, பொறாமையா என்பதைப் பதவியில் உள்ளோர் தான் ஆராய்ந்து பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும். வடக்கிற்கும், தெற்கிற்கும் இடையில் நடக்கும் இந்தக் கல்விக் கருத்துப் பரிமாற்றம் எமக்கு நன்மை பயப்பதாய் அமைய வேண்டும். எமது மாணவ மாணவியர் உங்கள் கருத்துறவாடலால் கல்வியில் களிப்பெய்தட்டும்!

“எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு” என்றான் வள்ளுவன். அந்த உயர் படித்தரத்தை முன்வைத்தே எமது கருத்தரங்கங்களும் கருத்துப் பரிமாற்றங்களும் ஆராய்ச்சிகளும் நடைபெற வேண்டும். எனவே யார் என்ன கூறியிருப்பினும் அதன் உண்மையை ஆராய்ச்சி மூலம் ஆராய்ந்து அறிந்து கொள்வோமாக!

வடமாகாணத்தில் கல்வித்துறையில் ஒரு தெரிபொருள் ஒழுங்கமைப்பை (Data Base) நாங்கள் உண்டாக்க வழிவகுக்கின்றது இந்தப் பணிக்கூடம். இது வருங்காலத்தில் எமக்குப் பேருதவியாய் இருக்கும். என்னை இந்தப் பணிக்கூடத்தில் பேச அழைத்தமைக்கு எமது கல்வி அமைச்சருக்கு நன்றிகள் உரித்தாகுக! உங்கள் கருத்துப் பரிமாற்றங்கள் மாணவ சமுதாயக் கல்வியை மேம்படுத்துவதற்காக அமையட்டும் என்று ஆசி கூறி அமர்கிறேன். நன்றி வணக்கம்.

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வட மாகாணசபை

வடக்கு மாகாண முதலமைச்சர்
கௌரவ நீதியரசர் விக்கினேஸ்வரன் அவர்கள்



தந்தை செல்வநாயகம்
அவர்களின் நினைவுத்தூபி



வடக்கு மாகாண கல்வி அமைச்சர்
கௌரவ த.குருகுலராஜா அவர்கள்





# வடக்கின் கல்வி முறைமை மீளாய்வு ஆலோசனைச் செயலமர்வில் கல்வி அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்மெய்ப் பொருள் காண்பதறிவு"

என்பது தான் கல்வியின் மகத்தான தத்துவம் என்பதை பொய்யாமொழிப்புலவர் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எமக்கு தந்துள்ளார்.

இங்கு வருகை தந்திருக்கும் கௌரவ அமைச்சர் பந்துல குணவர்த்தன அவர்களே, கௌரவ வடக்கு மாநிலத்தின் ஆளுனர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்களே, வடக்கு மாகாணசபை உறுப்பினர் பசுபதி அரியரத்தினம் அவர்களே, வடக்கு மாகாண கல்வி முறைமை மீளாய்வு ஆலோசனைச் செயலமர்வுக்காக இங்கு வருகைதந்திருக்கின்ற மத்திய அமைச்சின் கல்விச் செயலாளர் திரு. அநுர டிசாநாயக்க அவர்களே, உயர் அதிகாரிகளே, இச்செயலமர்வுக்காக அழைக்கப்பட்டுள்ள கல்வியியலாளர்களே, விருந்தினர்களே, வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் திரு. சத்தியசீலன் அவர்களே, வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு. செல்வராசா அவர்களே, உங்கள் அனைவருக்கும் எனது அன்பின் வணக்கம்.

உலகம் எவ்வாறு நடைபெறுகின்றதோ, உலகத்தோடு பொருந்திய வகையில் தானும் அவ்வாறே நடப்பதே அறிவாகும் என்கின்றது திருக்குறள்.

இதற்கிணங்க வடக்கு மாகாண சபையில் நான் அமைச்சராக பதவியேற்ற காலத்திலிருந்து கல்வி தொடர்பாக ஆராய்ந்து கல்விச் செயற்பாடுகளில் உள்ள குறைபாடுகளை நிவர்த்திக்கும் நோக்கில் கல்வியியலாளர்கள் அதிபர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள் சமூக ஆர்வலர்கள், துறைசார்ந்த ஆர்வலர்கள் ஆகியோருடன் கலந்துரையாடுவதன் மூலம் எமது மாநிலத்தில் கல்வியின் அபிவிருத்தியின் நோக்கில் எவ்வாறு புதிய சிந்தனைகள் உள்ளிடப்படவேண்டும் என்பதை உணர்ந்து கொண்டேன்

இவ்வேளையில் இச்சிந்தனைக்கு உணர்வூட்டுவதற்காக இதனைப்பற்றி கலாநிதி ஒலிம்பியன் எதிர்வீரசிங்கம் அவர்களுடன் சிந்தனைகளைப் பகிர்ந்து கொண்டபோது இதன் முக்கியத்துவத்தை மேலும் தெளிவுபடுத்திக் கொண்டேன். இந்த கல்வி முறையியல் கலந்துரையாடலுக்கான அடித்தளத்தினை ஒழுங்கமைப்பதற்காகவும் முன்னெடுப்பதற்காகவும் தனது பங்களிப்பை செய்ய முடியும் என்று அவர் முன்வந்ததன் பயனாக இக்கலந்துரையாடலின் கௌரவ இணைப்பாளர் பதவியை ஏற்க முன்வந்தார்.

சென்ற ஆண்டு ஒக்டோபர் திங்கள் 22 ஆம் திகதி இக்கலந்துரையாடலின் முதலாவது உபகுழுக் கூட்டத்தை கூடினோம். அதன் பின்னர் பல்வேறு கூட்டங்கள், கலந்துரையாடல்கள் அறிக்கைகள் சமர்ப்பித்தல் என்றவாறு பலவிதமான செயற்பாடுகளை செய்தோம். இதற்காக மாகாண கல்வி அமைச்சின் கட்டடத்தொகுதியின் ஓர் அறையை ஒழுங்குபடுத்தி ஆறு கல்வியியலாளர்களை இதற்காக விடுவித்து அறிக்கைப்படுத்தல் வேலைகளை ஆரம்பித்தோம். இன்று ஆறுமாத கால கடின உழைப்பின் பயனாக வடக்கு மாகாணத்தின் சகல பிரதேசங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் முதலாவது வடக்கு மாகாண சபையினால் ஒழுங்குபடுத்தப்பட்ட முக்கியமான கலந்துரையாடலை ஆரம்பிக்கின்றோம். இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஓர் கல்விப்பரிணாமம் ஆகும். இதனை இங்குள்ளவர்கள் அனைவரும் உணர்ந்து கொள்வீர்கள் என நம்புகின்றேன்.

வடபுலத்தின் கல்வி ஓர் நீண்ட வரலாற்றினைக் கொண்டது, காலனித்துவ ஆட்சியாளர்களின் முன்பே எமது தாய்மொழிக்கூடான கல்வியை எமது மூதாதையர்கள் தம்குழந்தைகளுக்கு ஊட்டியுள்ளார்கள் என்பதை அவர்களது வாழ்வியல் கோலத்தின் ஊடாகவும் தமிழ் பண்பாட்டு விழுமியங்களுக்கூடாகவும் சமய கலாசார செயற்பாடுகளுக் கூடாகவும் அறிந்து கொள்வதற்கான சான்றுகள் இன்று எம்மிடம் உண்டு. இதன் அடுத்த கட்டமான நவீன பாடசாலைக் கல்வி எமது மாநிலத்திலே 200 வருடங்களுக்கு மேலாக இருந்துள்ளமையையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். காலனித்துவ ஆட்சியாளர்களின் ஊடாக ஆங்கிலக் கல்வியைப் பெற்ற எமது மூதாதையர் அதன்

பயனை நன்கு அறிந்து தாமாகவே பள்ளிகளை தொடங்கி அதனையும் நூற்றாண்டுக்கு மேலாக பராமரித்து வந்துள்ளதை பெருமையாக இங்கு முன்வைக்க விரும்புகின்றேன்.

பியர்சன் என்கின்ற கல்வி நிறுவனத்தின் ஆய்வின் பிரகாரம் ஐக்கிய அமெரிக்கா அபிவிருத்தியடைந்த நாடுகளில் கல்வியில் 17 வது இடத்திலுள்ளதாக பூகோள அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அபிவிருத்தியடைந்த 40 நாடுகளில் அதிசிறந்த கல்வி முறைமையில் (Education system) பின்லாந்தும், தென்கொரியாவுமே முதலிடம் பெறுகின்றன. இது உண்மையில் ஆச்சரியத்திற்குரியதாகும்.

இத்தரப்படுத்தலில் ஹொங்ஹொங், ஜப்பான், மற்றும் சிங்கப்பூர் ஆகியன அடுத்த இடங்களைப் பெற்றுள்ளன. இத்தரப்படுத்தலானது உயர் கல்வியை நாடுவோரின் எண்ணிக்கை, மற்றும் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2010ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் பட்டம் பெற்றோரின் விகிதம், சர்வதேச தேர்வுகளில் பெற்ற புள்ளிகள் போன்ற பல்வேறு அளவீடுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கல்வியில் முன்னணி வகிக்கும் இந்நாடுகளில் ஆசிரியர்களுக்கு உயர்வான அந்தஸ்தினை வழங்குகின்ற போக்கு உள்ளதாகவும் சிறந்த கல்விப்பண்பாடு நிலவுவதாகவும் பியர்சன் நிறுவன பிரதம கல்வி ஆலோசகர் சேர் மைக்கல் பார்பர் (Sir Michael Barber) B.B.C இற்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

நீண்டகாலக் கல்விப்பாரம்பரியத்தையும் கல்வியில் நாட்டத்தையும் தமது உழைப்பில் பெரும்பங்கினையும் தம்பிள்ளைகளின் கல்வி முயற்சிகளுக்கு செலவிடுகின்ற ஒரு கல்வி விழுமியத்தையும் கொண்ட நாம், அப்பண்பாட்டின் அடிப்படையில் இந்த கல்விக் கலந்துரையாடலை மேற்கொள்கின்றோம்.

போரின் பின்னரான ஜப்பான், தென்கொரிய நாடுகளைப் பார்த்து நாம் பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். பலம் வாய்ந்த கல்வி முறைமையில் நிதியீட்டம், கல்விக்கான செலவீனம் ஒரு முக்கிய காரணியாக அமைந்தாலும், கற்றலில் பண்பாட்டு அம்சங்கள், கூடுதலான விமர்சனங்களுக்கு உள்ளாகிய நிலையில் உயர்தரம் பெற்ற ஆசிய நாடுகளில் கல்வி மிகப்பெரிய விழுமியங்களைக் கொண்டதாகவும் பெற்றோரின் பாரிய எதிர்பார்ப்புக்களைக் கொண்டுள்ளதாகவும் ஆய்வுக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் உலகில் கல்வியில் முதல்தரத்தைப்பெற்றுள்ள பின்லாந்தும், தென்கொரியாவும் கற்றல் கற்பித்தலில் பாரிய வேறுபாடுகளைக் கொண்டுள்ளனவாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வெற்றிகரமான கல்விப் பெறுபேறுகளுக்கான முதன்மைக் காரணிகளை இனங்காண கொள்கை வகுப்பாளர்களுக்கும் பள்ளி முதல்வர்களுக்கும் உதவி செய்வதனை நோக்காகக் கொண்டதே மேற்கண்ட பியர்சன் கல்வி ஆய்வுகளாகும், எழுத்து மூலமான தரவுகள் அரசாங்கம் கல்விக்காகச் செலவிடும் செலவினம், பள்ளிச் சேர்வு வயது, ஆசிரியர் வேதனம், குறிப்பிட்ட பள்ளிகளை நாடி ஓடும் பிள்ளைகளது எண்ணிக்கை ஆகியவற்றை உள்ளடக்கியதாகவே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வாளர்கள் தேசிய தொழில் வாய்ப்பின்மை, மொத்த தேசிய உற்பத்தியில் கல்விக்குச் செலவிடும் வீதம், வாழ்நாள் காலம் (Life Expectency) மறியலில் இருப்போர் தொகை போன்ற சமூக பொருளாதார வெளியீடுகளையும் உள்ளடக்கியதாக தமது ஆய்வினை மேற்கொண்டிருந்தனர்.

நாமும் இத்தகைய உதவி செய்யும் மனப்பாங்குடன்தான் எமது கல்வி கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளோம் எனலாம். நாம் எங்கு நிற்கின்றோம்? உலகம் எங்கு நிற்கின்றது? எங்கு செல்ல வேண்டும்.? போன்றனவற்றைத் தீர்மானிப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் நாம் மேற்கொண்டுள்ள இந்தக் கல்விக் கலந்துரையாடல் **கல்வி சந்திப்பு – கல்வி சிந்திப்பு** என கல்வி பற்றிய ஓர் ஆய்வமர்வினை மேற்கொள்ள வழிவகுத்துள்ளது. உயர்தரமுடைய ஆசிரியர்கள் மற்றும் பலமானதொரு கல்வியியலாளர்களை உருவாக்கம் செய்யப்படவேண்டியுள்ளதனையும் அவர்களது ஆய்வு அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. ஆயினும் உயரிய ஊதியத்திற்கும் நல்ல செயற்பாட்டிற்குமிடையில் தொடர்பிருப்பதனை அறிக்கை சுட்டிக்காட்டவில்லை என்தனையும் இங்கு குறிப்பிட வேண்டும்

எவ்வாறாயினும் கடினமான உழைப்பின் மூலமே தென்கொரியா இவ்வாறு உயர் இடத்திற்கு வந்திருக்கும் என்று சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இதேபோல் வடபுலத்தில் உள்ள பெற்றோர்கள் அன்றும் சரி இன்றும் சரி கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக தமது உடல் உழைப்பையும் தங்களது பொன்னான நேரத்தையும் தங்களது எதிர்

கால வாரிசுகளுக்காக அள்ளி வழங்கியுள்ளார்கள். இதற்கு பல உதாரணங்கள் உள்ளன. அண்மையில் இங்கு வெற்றி நாயகனாக வந்து போன சிவாசிவானந்தனை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

லற்வியா, சிலி, பிறேசில் மாணவர்கள் அமெரிக்க மாணவர்களை விட மூன்று மடங்கு வேகத்தில், தாம் கற்கவேண்டியதனைக் கற்கின்றார்கள் என்றும், போர்த்துக்கல், ஹொங்ஹொங், ஜேர்மனி, போலந்து, கொலம்பியா போன்ற நாட்டு பிள்ளைகள் இரண்டு மடங்கு வேகத்திலும் கல்வியைப் பெற்றுக் கொள்கின்றனர் எனவும் ஹவாட் பல்கலைக்கழக "கல்வி கொள்கை வகுத்தலும், கட்டுப்பாடும் நிகழ்ச்சித்திட்டம்" எனும் ஆய்வில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

எமது மாணவர்களது ஆற்றல், வேகம் எவ்வாறு உள்ளது என்பதனை நாம் ஆய்ந்து அறிந்துள்ளோமா? அல்லது இத்தகைய ஆய்வுகள் வெளிநாடுகளில் இடம்பெறுகின்றன என்பதனை எமது பல்கலைக்கழகங்கள் அறிந்துள்ளனவா? வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில், நம்நாட்டுப்பிள்ளைகளும், இந்தியப் பிள்ளைகளும 13, 14 வயதுகளில் பட்டங்களை பெற்றுள்ளனர். அவற்றிற்கான சிறப்புக் காரணங்கள் ஏதாவது உள்ளனவா? றோகான் சிற்றம்பலம் எனும் பிள்ளையைப்பற்றி பல வருடங்களுக்கு முன் வாசித்தறிந்தேன், பதின்மூன்று வயதில் பட்டம் பெற்ற அவர் ஈழத்துத் தமிழ் அடியைக் கொண்டவர். இவ்வாறு மிகமிக குறைந்த வயதில் பட்டதாரியாகிய நாம் அறியாத பிள்ளைகள் பலர் இருக்கலாம். அதற்கான ஆற்றல் அவர்களிடம் எவ்வாறு வந்தது, இயற்கையிலேயே உள்ள ஆற்றலா? அல்லது எமது மரபணுக்களில் உள்ள சிறப்பியல்வா? எப்போ இவை பற்றியெல்லாம் நாம் ஆய்வு செய்யப்போகின்றோம்?


எம் நாட்டுக் கல்விப்பாரம்பரியங்களை மீண்டும் ஒரு முறை எடுத்துக் கூறுவதன் மூலம் நாம் எமது பட்டம், பட்டப்பின்படிப்பு டிப்ளோமா, இரண்டாம் பட்டங்களையும் கலாநிதிப்பட்டங்களையும் பெற இருப்பவர்களுக்கு உதவுமேயன்றி இந்தக் கலந்துரையாடலை மேலும் மேம்படுத்த உதவப்போவதில்லை என்பதனால், ஏற்கனவே எமக்குத் தெரிந்த திண்ணைப்பள்ளி கற்கைமுறைமை, குருகுலக்கல்வி முறைமை, நூறு, இருநூறு ஆண்டுகளாகத் தொடரும், முறைசார்ந்த கல்வி முறைமைகளை இவ்விடத்திற் கூறுவதைத்தவிர்த்து நாம் எங்கு நிற்கின்றோம், எங்கு செல்ல வேண்டும், அதற்கு எமக்குள்ள பலம் என்ன? பலவீனம் என்ன? தடையென்ன? வாய்ப்பு என்ன? என்பவற்றை கண்டுபிடித்து அதற்கேற்றவாறு செயற்படுதல் வேண்டும் என்பதே எனது கருத்தாகும்.


கௌரவ அமைச்சர் அவர்களே, கௌரவ ஆளுநர் அவர்களே. கௌரவ முதலமைச்சர் அவர்களே இங்கு குழுமியிருக்கின்ற பெரியோர்களே மாணவர்களே உங்கள் அனைவரையும் பாரம்பரியக் கல்வியுணர்வோடு வாழும் வடக்கு மாநில கல்வி முறைமை மீளாய்வு ஆலோசனைச் செயலமர்வுக்கு வருக வருக என வரவேற்பதிலே பெருமிதமடைகின்றேன். இன்றும் நாளையும் நடைபெறும் இச்செயலமர்வில் உங்கள் முழுமையான சிந்தனைகளையும் ஆற்றல்களையும் பங்களிப்புக்களையும் அள்ளி வழங்கவேண்டுமென்பதற்காக இன்முகத்துடன் வரவேற்கின்றேன்.

இக்கலந்துரையாடல் ஊடாக மாகாணத்தின் கல்வி வளர்ச்சி மேலும் மெருகுபடவேண்டுமென்பதற்காக உங்களை இருகரம் கூப்பி வாரீர் வாரீர் என அன்பாக வரவேற்று எனது வரவேற்புரையை நிறைவு செய்கின்றேன்.


தம்பிராஜா குருகுலராஜா


வடமாகாண கல்வி அமைச்சர்





Each black dot represents a school






Source : Northern Provincial Council (http://www.np.gov.lk/images/stories/maps/northpro.JPG)

# முதன்மைச் சுருக்கம்

வடக்கு மாகாண சபைக்கான முதலாவது தேர்தல் முடிவடைந்ததைத் தொடர்ந்து வடமாகாணத்தின் கல்வி, கலாசாரம், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சராக திரு. தம்பிராஜா குருகுலராஜா அவர்கள் நியமிக்கப்பட்டார். அப்பதவியைப் பொறுப்பேற்ற அவர் சிந்தனையில் வடமாகாண கல்வி முறைமையை மீளாய்வு செய்து சீரமைக்க வேண்டுமென்ற எண்ணம் உதயமாயிற்று. இதை செயல்படுத்தும் முகமாக 2013ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத நடுப்பகுதியில் வடமாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களை அழைத்து தற்போதைய கல்வி முறைமை எமது இளம் சந்ததிக்கு நல்லமுறையில் சேவையாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு வடக்கின் கல்விமுறைமையை மீளாய்வு செய்ய வேண்டும் என்ற தன் கருத்தை முன்வைத்தார்.

அதைத் தொடர்ந்து கல்வி அமைச்சின் செயலாளர் திரு. எஸ். சத்தியசீலன், மாகாணக்கல்விப் பணிப்பாளர் திரு. வ. செல்வராசா அவர்களை அழைத்து தனது தலைமையில் இந்த கல்வி மீளாய்வை முன்னெடுத்துச் செல்வதற்கு ஓர் செயற்குழுவை அமைக்குமாறு பணித்தார். இக்குழுவின் நடவடிக்கைகளுக்கு ஏற்பாட்டாளராகவும் இது சம்பந்தமான சகல கூட்டத்தொடர்களுக்கும் தலைமை வகித்து நடைமுறைப்படுத்தும் நபராகவும் கலாநிதி எதிர்வீரசிங்கம் அவர்களை நியமிப்பதாக தெரிவித்தார். இதைத் தொடர்ந்து ஏற்பாட்டாளர், செயலாளர் இரு தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், இரு பயிற்சியாளர்களை உள்ளடக்கிய செயலகம் ஒன்று இந்த மீளாய்வு செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்ல உருவாக்கப்பட்டது.

செயற்குழுவின் உருவாக்கம், உபகுழுக்கள், செய்றபாட்டிற்கான வழிகாட்டல்கள் அனைத்தும் அத்தியாயம் I இல் விரிவாகத் தரப்பட்டுள்ளது.


சாதாரண முச்சக்கர ஓட்டுநர்கள் தொடக்கம் பேராசிரியர்கள் வரையும் விவசாயிகள் தொடக்கம் இலங்கையின் கல்வி மந்திரி வரை உள்ளடக்கி சுமார் 300க்கும் மேற்பட்டோர் இச்செயற்பாட்டிற்கு பல்வேறு நிலைகளில் தங்கள் ஒத்துழைப்பையும் உதவியையும் நல்கினர். இச் செயற்குழுவில் அங்கம் வகிக்கும் பல்வேறு குழுக்களின் தலைவர்கள் மாணவர் தொடக்கம் நிர்வாக உத்தியோகத்தர்கள் அடங்கலாக பலரிடமிருந்தும் கல்வி முறைமை பற்றிய தகவல்களைப் பெற்றனர். இச் செயற்பாட்டை விருத்தி செய்யும் பொருட்டு வடமாகாண கல்வி அமைச்சர், ஏற்பாட்டாளர், குழுத்தலைவர்கள் மாணவர்களையும் ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் சந்தித்து கல்வித்துறையின் அபிவிருத்திக்கான பல விடயங்களில் அவர்களின் கருத்துக்களையும் சிபாரிசுகளையும் உள்வாங்கிக் கொண்டனர்.பொதுமக்கள் ஏனைய பங்காளிகள் மற்றும் மீளாய்வு செய்தவர்களிடம் இருந்து பெற்ற பங்களிப்பாக அவர்கள் வழங்கிய தகவல்களின் சுருக்கம் இணைப்பு I இல் தரப்பட்டுள்ளது.

படம் ES1 இல் காட்டப்பட்ட விளக்கம் தற்போதைய வடக்கின் கல்வி முறையையும் முன்மொழியப்பட்ட அபிவிருத்தி முறைகளையும் விளக்குகிறது. இப்படத்தில் மாணவர்களின் கற்றல் மற்றும் வளர்ச்சி என்ற நிலையிலிருந்து தேசிய பரீட்சைகளை நோக்கி மேலே செல்லும் கருமை நிறக்கோடும் பின் அங்கிருந்து கீழ்நோக்கி வரும் கோடுகளும் தற்போதைய கல்விமுறைமையின் நோக்கங்களையும் பலாபலன்களையும் விளைவுகளையும் விபரிக்கின்றன. கீழ் நோக்கி வரும் கோடுகள் பின்னூட்டல் மாணவர்களின் கற்றலும் வளர்ச்சியும் கற்பிக்கும் முறை போன்ற செயல்களில் ஆதிக்கம் செலுத்துகிறது. இவ்வகையான கட்டுப்பாடுகளும் அழுத்தங்களும் சீர்ப்படுத்தப்படாத காளான் வளர்ச்சி போல் தோன்றும் தனியார் கல்வி நிலையங்களை ஊக்குவிக்கின்றன. இதன் பெறுபேறாக மாணவர்களுக்கு வழங்கும் கல்வி சமூக பொருளாதாரத்தில் ஓர் சமனற்ற தன்மையைத் தோற்றுவிக்கிறது.

வடக்கின் கல்வி முறைமையில் காணப்படும் 60% வீதமான பிரச்சனைகள் இலங்கையின் ஏனைய மாவட்டங்களில் பெரும்பாலும் கிராமப் புறங்களிலும் கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களிடையேயும் காணப்படுகின்றன. வடமாகாணத்தில் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் கடந்த 5 வருடங்களுக்கு முன்பு முடிவுக்கு வந்த 30 வருட யுத்தத்தினாலும் கல்வி முறை மற்றும் சாதாரண மக்களின் வாழ்க்கை முறையில் படையினரின் தொடர்ச்சியான தலையீட்டாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.வடமாகாண மக்களின் சமூகக் கட்டமைப்பு வசதிகள் சிதைக்கப்பட்டுள்ளன. இவை ஆற்றுப்படுத்தப்பட வேண்டும். இதே நிலை தான கிழக்கு மாகாணத்திலும் தென்படுகின்றது.

அத்தியாயம் 2 இல் தரப்பட்ட தற்போதைய நிலைமையானது கற்றலின் நிலைப்பாடு, கற்பித்தல், தேசிய பரீட்சைகள் வலய அடிப்படையில் மாணவர்களின் பெறுபேறுகள் அவர்களின் சமனில்லாத தன்மை ஆகியவை விபரிக்கப்பட்டு தரவுகளை ஆதாரமாகக் கொண்டு வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் கல்வியில் தாக்கத்தை ஏற்படுத்தும் பொதுவான பிரச்சனைகளும் உள்ளடக்கபட்டுள்ளன.

உரு ES1: தற்போதைய NP கல்வி முறையும் மேம்பாட்டு முன்மொழிவுகளும்



**அறிக்கையும் சிபாரிசுகளும் பின்வரும் தலைப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.**

மாணவர்கள், ஆசிரியர்களின் உளவியல் சார் நலன்கள் கற்பித்தல், கற்றல், பரீட்சைகள், தனியார் கல்வி நிலையங்கள் நிர்வாகம், நியமனங்கள், பதவியுயர்வு, இடமாற்றங்கள் ஆசிரியர்களின் பிரச்சனைகள், நிதி உத்தியோகத்தர்களின் தேவைகள், செலவீனங்கள், ஆசிரியர்களின் சம்பளம், இணையத்தின் ஊடான கற்றல், தகவல் மையம், ஆராய்ச்சியும் பிரசுரங்களும், ஆரம்ப கல்வியும் அதன் அபிவிருத்தியும், கல்வியில் விசேட தேவைகள், தொடர்கல்வி, தமிழ்மொழி கல்வி நிறுவனம், வட பிரதேசத்திற்கான புதிய கல்வி நிர்வாக முறைஇறுதி அத்தியாயத்தில் நடைமுறைப்படுத்தலும் அனைத்து சிபார்சுகளும் முடிவுரையும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மிகப் பிரதானமான பத்து சிபாரிசுகள் சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளது.மிகப் பிரதானமான பத்து சிபார்சுகள் சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளன.

01. மாணவர்களுக்கு வழங்கப்படும் உடல் ரீதியான தண்டனைகள் சகல பாடசாலைகளிலும் தாமதமின்றி நிறுத்தப்பட வேண்டும். இதற்குப் பதிலாக ஆசிரியர்கள், அதிபர், மாணவர் தலைவர் உள்ளடக்கிய மாணவர்களுக்கான வகுப்பறை நிர்வாகம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.
02. தற்பொழுது முன்னிலைப்படுத்தப்படும் எழுத்து மூலமாக விடையளிக்கும் பரீட்சை முறைக்குப் பதிலாக மாணவர்களின் எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்ட செயன்முறையை ஆராய்ந்து அறியும் திறமையை மையமாகக் கொண்ட செயற்றிட்டம் போன்றவற்றை ஆசிரியர்களினால் முன்னிலைப்படுத்தி ஊக்குவிப்பதை மையமாகக் கொண்டு தேசிய பரீட்சைகள் மீளமைக்கப்பட வேண்டும்.
03. பொது நிர்வாகம், நியமனங்கள், இடமாற்றம், பதவியுயர்வு மற்றும் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சம்பந்தமாக முன்வைக்கப்பட்ட அனைத்து சிபார்சுகளையும் நடைமுறைப்படுத்த வேண்டும். ஆசிரியர்கள் மற்றும் உத்தியோத்தர்கள் தமது துறைகளில் முதுமாணிப் பட்டங்களைப் பெறவோ அல்லது துறைசார் கல்வியை விருத்தி செய்யவோ அவர்களுக்கு 1-4 வருடங்களுக்கு உயர்கல்வி பெறும் வாய்ப்பை உருவாக்கி கொடுக்கக் கூடியவாறு 10 வருட காலத்திற்கான உத்தியோகத்தர்களின் விருத்தி சார்ந்த திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும்.
04. பாடசாலை நேரத்தில் ஆசிரியர்களும் மாணவர்களும் தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்வதை தடுத்து நிறுத்த வேண்டும்.
05. கல்வி சம்பந்தமான சகல தரவுகளையும் சேகரித்து வழங்கக் கூடியதாக கல்வி முகாமைத்துவ தகவல் முறையொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும்.
06. தமிழ்மொழி மூலம் கற்றலுக்கான நிறுவனம் ஸ்தாபிக்கப்பட வேண்டும். இந்நிறுவனம் நாட்டின் சகல தமிழ்மொழியில் கற்பிக்கும் பாடசாலைகளிலும் ஆசிரியர்களுக்கான பயிற்சியை வழங்கல், பாடவிதானம் தயாரித்தல், அதற்கான நூல்கள், கற்பித்தல் முறை, தமிழ்மொழி மூலம் கற்றல் கற்பித்தலில் சம்பந்தமான நூல்களை வழங்குவதற்குப் பொறுப்பாக இருக்கும்.
07. வலய மட்டத்தில் நிர்வகிக்கப்படும் பாடசாலைகளின் நிர்வாகம் மாற்றியமைக்கப்பட வேண்டும். வலய மட்டத்தில் கல்விச் சபையொன்று அமைக்கப்பட வேண்டும். இச்சபை நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களையும் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களையும் உள்ளடக்கியதாக இருக்கும். வலய மட்டத்தில் இயங்கும் பாடசாலைகளை நிர்வகித்தல் அவை சம்மந்தமான தீர்மானம் எடுத்தல் இச்சபையைச் சார்ந்ததாக இருக்கும்.
08. வலய மட்டத்தில் தற்பொழுது இயங்கும் முறைசாரா கல்விமுறை மாற்றப்பட்டு இதற்குப் பதிலாக தொடர்கல்விப் பாடசாலைகள் அமைக்கப்பட வேண்டும். இப்பாடசாலையில் 16 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் கற்றுப் பயன்பெறும் வகையில் பாடவிதானம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும்.
09. தற்போதைய நிதிமுகாமைத்துவ முறை உயர்நிலையில் வினைத்திறனுடன் செயற்படும் வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டும்.
10. தற்பொழுது அமுலில் இருக்கும் தை மாதத்தில் தொடங்கி மார்கழியில் முடிவடையும் வரை கல்வி வருடத்தை செப்டம்பரில் தொடங்கி ஓகஸ்டில் முடிவடையக் கூடியதாக மாற்றியமைத்து

க.பொ.த சாதாரண, உயர்தர பரீட்சைகளை முறையே யூன், யூலை மாதங்களில் நடத்துவதற்கு கல்வியமைச்சுக்கு விண்ணப்பிக்க வேண்டும். சகல சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும். வடமாகாண கல்வியமைச்சுக்குப் பொறுப்பான தனித்துவமான சபையொன்றை ஸ்தாபித்து இவற்றை நடைமுறைப்படுத்தி கண்காணிக்க வேண்டும்.

## தமிழ் மொழி மூலக்கல்வி நிறுவகம் (ITME) – குழு



## நிர்வாகம் மற்றும் நியமனங்கள் தொடர்பான குழு



# 1: வடமாகாண கல்வி அமைப்பை மீளாய்வு செய்யும் செயன்முறை

## அறிமுகம்

புதிதாக தேர்வு செய்யப்பட்ட வடமாகாண (NP) கௌரவ கல்வி அமைச்சரான திரு .தம்பிராஜா குருகுலராஜா அவர்கள், வடமாகாணத்தின் கல்வி அமைப்பு தொடர்பான மீளாய்வு ஒன்றை 2013 ஒக்ரோபர் 15ம் திகதி தொடக்கிவைத்தார். அவர் கலாநிதி. நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் அவர்களை இந்த மீளாய்வுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். (நிகழ்வுகளின் கால அட்டவணையை இணைப்பு 1 இல் பார்க்கவும்.)

வடக்கு மாகாணமானது கிழக்கு மாகாணத்தைப் போலவே அண்மையில்தான் 30 வருட உள்நாட்டுப் போரில் இருந்து மீண்டிருக்கிறது. இந்த 30 வருடப்போர் வடமாகாணகல்வியின் மீது பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தி உள்ளது. இந்தப்போர் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நிர்வாகிகள் மற்றும் சமூகத்தின்மீது ஆழமான மன வடுக்களை பதித்துள்ளது. போர் விளைவித்து விட்ட துன்பங்கள், பௌதிக ரீதியாக முடிவுக்கு வந்துவிட்டபோர், தொடர்ந்து கொண்டிருக்கிற உணர்வு ரீதியான மனவடு உருவாக்கங்கள் முதலியவை தற்போது செயற்பட்டுக் கொண்டிருக்கிற கல்வி அமைப்பில் புதியவை புகுத்துபவையான மாற்றங்களை வடிவமைப்பதன் மூலமும் அதன் குறைபாடுகளைச் சீர்செய்வதன் மூலமும் அக்கல்வி அமைப்பை மேம்படுத்துவதற்கான ஒரு பலகணியைத் திறந்து, தேவையையும் உருவாக்கி விட்டிருக்கின்றன.

> வடக்கு மாகாணமானது அண்மையில் தான் 30 வருட உள்நாட்டுப் போரில் இருந்து மீண்டிருக்கின்றது. அது மாணவர்கள், பெற்றோர்கள், கல்வியாளர்கள் மற்றும் கல்வி முறைமையில் பாதகமானதாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

வடமாகாண கல்வி அமைச்சருடைய தலைமையின் கீழ் எடுக்கப்பட்ட முடிவொன்றின்படி, கல்வி அமைப்பின் பங்கீடுபாட்டாளர்களாக இருந்தவர்கள் மற்றும் இருக்கின்றவர்கள், இக் கல்வியமைப்பின் பகுதிகளாக, வடக்கில் அல்லது வேறு இடங்களிலும் கடந்தகாலங்களில் இருந்தவர்கள், இப்போது இருப்பவர்கள் முதலியோரிடமிருந்து கருத்துக்களையும் பரிந்துரைகளையும் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது. வடக்கிலுள்ள நலன்சார் அக்கறையாளர்களுடன் வெவ்வேறுமுழுநாள் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இந்தநலன்சார் அக்கறையாளர்கள் விபரம் கீழேதரப்படுகிறது. 12 வலய பணிப்பகங்களுக்குட்பட்ட பகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட தமிழ் பேசும் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் வலயப் பணிப்பாளர்கள், தெற்கு வவுனியா மற்றும் மணல்ஆறு (வெலிஓயா) பகுதிகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட, சிங்களம் பேசும் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் வலயப் பணிப்பாளர்கள் ஆகியவர்களே அவர்களாகும். மாணவர்களுக்கும் தங்கள் கல்விசார்பான விடயங்கள் குறித்து அனாமதேயமாக கருத்து தெரிவிக்கும் வாய்ப்புகள் வழங்கப்பட்டன.

> **மீளாய்வு ஆனது பக்கவாட்டான ஆலோசனையுடனான கீழ் இருந்து மேல் நோக்கிச் செல்லும் செயன்முறையாகும்.**

வடமாகாண கல்வியமைச்சு மற்றும் கல்வி திணைக்களத்தின் முதுநிலை அதிகாரிகள் பங்கு கொண்ட முதலாவது கூட்டம், 2013 ஒக்ரோபர் 22ஆம் திகதி, வடமாகாண கல்வியமைச்சர் தலைமையில் இடம்பெற்றது. ஒவ்வொன்றும் 10 உறுப்பினர்களைக் கொண்ட ஆறு உபகுழுக்களை உருவாக்குவதற்கென ஆறு ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இந்த உப குழுக்களுக்கு மேலதிக உறுப்பினர்களை இணைத்துக் கொள்ளுவதற்கான விருப்பத் தேர்வும், வடமாகாண கல்வி அமைப்பில் உள்ள பிரச்சினைகளை அடையாளம் கண்டு பகுப்பாய்வு செய்வதற்கும் பரிந்துரைகளை முன்மொழிவதற்கும் ஆணையும் வழங்கப்பட்டது. இக்குழுக்களின் உறுப்பினர்கள் இணைந்து வடமாகாண கல்வி அமைப்பு மீளாய்வுக்கான (NESR) நெறிப்படுத்தும் செயற்குழுவாக (SC) ஏற்பாட்டாளர் கலாநிதி எதிர்வீரசிங்கத்துக்கும்

The Northern Province Minister of Education announces the NESR



SCக்கும் உதவும் விதத்தில் செயலகம் ஒன்று உருவாக்கப்பட்டது.

இந்தமீளாய்வானது ,கல்வி முறைமையின் பிள்ளைமையச் செயன்முறைகள் மீது தனது கவனத்தைக் குவித்திருந்தது. பிள்ளைகளுடைய சமூககலாசாரப் பின்புலத்திலே, அவர்களுடைய உடல் மற்றும் மனவெழுச்சி வளர்ச்சியையும் கற்றல் மற்றும் செயற்றிறன்களையும் மேம்படுத்தவேண்டும் எனும் பரிந்துரைகளை அது ஏற்றுக் கொண்டது.

## NESR உடையநெறிப்படுத்தும் பொன்மொழிகள் வருமாறு

கல்வி முறைமையின் மையக்கூறாக பிள்ளை உள்ளது.
- ***NESR**இன் நெறிப்படுத்தும் குழு*



*"எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு."*
- திருவள்ளுவர்

*"கைக்கொள்ளப்படும் செயன்முறைகள் வெளிப்படையானவைகளாக, சிந்தனைச் சுதந்திரம், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் கொண்டவையாக இருக்கும்."*
***-NESR*** இன் நெறிப்படுத்தும் குழு

*" எந்த மனிதனும் ஒரு ஆற்றுக்குள் இரு முறை கால் வைப்பதில்லை. ஏனென்றால் அந்த ஆறும் அதே ஆறாக இருப்பதுமில்லை, அந்த மனிதனும் அதே மனிதனாக இருப்பதுமில்லை."*
– ஹெறாக்லிற்ரஸ் (கி.மு. 530 – 470 தத்துவஞானி)

*"வழியே இலக்கு."*
- கௌதம புத்தர்

## நெறிப்படுத்தும் செயற்குழுவானது பின்வரும் தொலை நோக்குகள் மற்றும் குறியிலக்குகள் தொடர்பாக உடன்பாட்டை எட்டியது

அனைத்துப் பிள்ளைகளும் தமது தலைமுறை வழி இயல்திறனை அதியுச்சமாகப் பயன்படுத்துவதற்கான சம சந்தரப்பம் வழங்கல்.

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கிடைக்கத்தக்க கல்வி மூல வளங்களையும் தொழினுநுட்பத்தினையும் பயன்படுத்தி, ஒரு நன்கு கட்டமைக்கபட்ட தொகுதியாக, பிள்ளைமையக்கல்வி முறைமையொன்றை உருவாக்கல்.

கல்வி முறைமையின் செயற்றிறனை மேம்படுத்தவல்ல காரணிகளை இனங்காணலும் மாணவர்களின் தனியாள் வளர்ச்சியையும் பாட அடைவினையும் உறுதிப்படுத்தலும்.

கற்றல் - கற்பித்தல் செயற்றிறனை மேம்படுத்தும் முகமாக பிரச்சினைகளை இனங்காணலும் யதார்த்தமான விளைதிறனுடைய அணுகு முறைகளை உருவாக்கலும்.

நிலவரப் பகுப்பாய்வு ஊடாகப் பிரச்சினைகளை இனங்காணல்

தரவு அடிப்படையிலான தீர்மானம் மேற்கொள்வதற்கான தரவுத் தளத் தொகுதியொன்றினை வடிவமைத்தல்.

தமது தலைமுறை வழி இயல்திறனை அதியுச்ச அளவுக்கு மேம்படுத்துவதற்கான வாய்ப்பினைப் பிள்ளைகளுக்கு வழங்குதல்.

மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோருக்கு உள-சமூகச் சேவைகளை வழங்கல்.

உடல் ரீதியான தண்டனையினை ஒழித்தலும் கற்றல் - கற்பித்தலுக்கான சிறந்த வகுப்பறைக் கல்வி நிலையினைப் பேணுவதற்கான மாற்றுச் செயன்முறைகள் குறித்துப் பயிற்சி அளித்தலும்.

கற்றல்-கற்பித்தல் செயன்முறையினையும் ஆசிரியர் கல்வியினையும் மேம்படுத்தல்

ஒருநியாயமானதும் வினைத்திறனானதுமான முறைமையொன்றினை உருவாக்குவதற்கான பாடசாலை / வலய / மாவட்ட மட்டத் தீர்மானம் மேற்கொள்ளல் பொறிமுறைத் தொகுதியொன்றினை உருவாக்கல்.

பாடசாலைகளின் அமைவிடத்தினைக் கருதாது எல்லாப் பாடசாலைகளுக்கும் சமத்துவமாக ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதை உறுதிப்படுத்தல்.

கல்வி முறையியல், கலைத்திட்டம், கல்வித் தொழினுட்ப உபயோகம் என்பனவற்றில் மேம்பாட்டினை ஏற்படுத்தவல்ல அமைப்பொன்றினை உருவாக்கல்.

தொடர் கல்விக்கான இயலுமையைக் கொண்டுள்ள எந்த மாணவனது முயற்சிக்கும் தடைக்கற்களைக் கொண்டிராத கல்வி முறைமையொன்றினை உறுதிசெய்தல்.

தொகுதியினுள் முன்பிள்ளைப் பருவக்கல்வி, விசேட தேவைக்குரியோருக்கான கல்வி, தொடருறுகல்வி என்பவற்றினை உள்ளடக்கல்.

e-திட்டமிடலை நிறுவி, ஒருதரவுத் தளத்தினை உருவாக்கி, தீர்மானம் மேற்கொள்வதற்கான தகவல்களை வழங்கும் பொருட்டுச் செயல் ஆய்வினில் ஈடுபடல்.

# பின்வரும் ஆறு விடயப் பரப்புகளும் உப தலைப்புக்களும் ஆராய்ந்து பார்ப்பதற்கெனஅடையாளம் காணப்பட்டன

## கற்பித்தல், கற்றல், மற்றும் ஆசிரியர் கல்வி

ஆசிரியர்கல்வி, கற்பித்தல், கலைத்திட்டம் மற்றும் கற்றல் - கற்பித்தல் சாதனங்கள

கல்வித் தொழினுட்பவியல்.

தரம் 1 இலிருந்து தரம் 13 வரையான வகுப்புக்களுக்கான பாடங்களை அட்டவணைப்படுத்துதல்.

ஒவ்வொரு வகுப்பு மட்டத்திலும் தேர்ச்சிகளை அடைதல், வகுப்பறை மட்டச் சோதனைகளும் மதிப்பீடுகளும்

தேசியமட்டப் பரீட்சைகள் -தரம் 5, தரம் 11, தரம் 13.

விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கான கற்றல் கற்பித்தல்

## ஆசிரியர் மாணவர் ஒழுக்காறும் நடத்தையும்

பாடசாலை மற்றும் வகுப்பறை மட்டத்திலான ஆசிரியர் - மாணவர் ஒழுக்காற்றுப் பிரச்சினைகள், கற்றல் - கற்பித்தல் நிலைமைகளில் மனவெழுச்சி மட்டத்தினை விரும்பத்தகு முறையில் சிறப்பாகப் பேணல்.

ஆசிரியர்கள், மாணவர்கள், நிர்வாகிகளுக்கான நடத்தைகளும் ஆற்றுப்படுத்தலும்.

## ஆசிரியர் நிர்வாகத்தினர் பிரச்சனைகள்

தகைமைகள், நியமனங்கள், சேவைநிபந்தனைகள், இடமாற்றங்கள்.

ஆசிரியர்கள், நிர்வாகிகளின் பதவியுயர்வுகளை மறுசீரமைத்தல்.

திறமைமற்றும் பதவியுயர்வு தொடர்பான பிரச்சனைகள்.

## நிதி ஆளணித் தேவை மற்றும் மாணவர் தேவைகள்

ஆசிரியர்-மாணவர் விகிதம், பாடசாலைகளுக்குத் தேவையான ஆளணி நியமம், தலா மாணவர் நிதிஒதுக்கீடு, தலாவகுப்புநிதிஒதுக்கீடு.

நிதியொதுக்கீட்டு முன்னுரிமைக்கான பிரமாண அடிப்படை.

அவசரமாகத் தேவைப்படும் உட்கட்டுமானத் தேவைகளை இனங்காணல்..

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த, இக்கட்டுகளுக்குள்ளான மாணவர்களை இணங்காணுதலும் அவர்களுக்கு வலுவூட்டலும்

## கல்வி நிர்வாக கட்டமைப்பு மற்றும் மாற்றீட்டு ஏற்பாடுகள்

நிரல் அமைச்சு, மாகாண அமைச்சு மற்றும் வலய அலுவலகங்களிலிருந்து பாடசாலைகளுக்கான பணிப்புக்களும் கட்டுப்பாடும்.

தேசிய பாடசாலைகள், உதவி வழங்கப்படும் பாடசாலைகள் மற்றும் ஏனைய பாடசாலைகளை நியாய பூர்வ அடிப்படையில் சீரமைத்தல்

நிர்வாகக் கட்டமைப்புக்கும் மேலே குறிப்பிட்டவைக்குமான தொடர்பு

முன்பிள்ளைப் பருவக்கல்வி.

முறை சாராக் கல்வி.

## e-திட்டமிடல், தரவுத்தளம், ஆய்வுமற்றும் அபிவிருத்தி

வடமாகாணத்தின் கல்வித்துறைக்கென முகாமைத்துவ தகவல் முறைமை ஒன்றை திட்டமிட்டு, நடைமுறைப்படுத்தல்.

கல்வி ரீதியான புள்ளிவிபரங்களைச் சேகரித்து பகுப்பாய்வு செய்தல்.

வடமாகாணக் கல்வி முன்னேற்றம் தொடர்பாக கிரமமான அறிக்கைகளைத் தயாரித்தல்.

கல்விசார்ந்த ஆய்வு மற்றும் வெளியீட்டுத் திட்டம் ஒன்றை உருவாக்கி ஆரம்பித்து வைத்தல்

மீளாய்வு செயலமர்வில் பங்குபற்றியோர் – 23 – 24 ஏப்ரல் 2014





## மீளாய்வினுடைய அணுகுமுறை

### பொதுமக்கள் பங்கீடுபாட்டாளர்களிடமிருந்து தகவல்கள் மற்றும் பின்னூட்டங்களை சேகரித்தல்

பல்வேறு செய்தித் தளங்களிலும் வெளியிடப்பட்ட ஒரு விளம்பர மூலம், பொதுமக்கள் கடந்தகால மற்றும் நிகழ்கால நலன்சார் அக்கறையாளர்கள் முதலியோர், அடையாளம் காணப்பட்டவிடயப் பரப்புகள் தொடர்பான அவர்களது முன்வைப்புகளை அவதானிப்புக்களாக அல்லது பரிந்துரைகளாக அல்லது இரண்டுமாக, அனாமதேய அல்லது வேறுவிதத்தில் வழமையான தபால்சேவை, மின்னஞ்சல் அல்லது (http: //tinyurl.com/npereview இணையதளத்தில் உள்ள) படிவ மூலம் அனுப்பிவைக்கும் படி கேட்கப்பட்டார்கள். இதன் மூலம் கிடைத்த முன்வைப்புகள் யாவும் ஏற்பாட்டாளருக்கு அனுப்பப்பட்டன. இவ்வாறு பெறப்பட்ட தகவல்கள் ஏற்பாட்டாளரால் பரீசீலிக்கப்பட்டு பெற்றுக்கொண்டமை அறிவிக்கப்பட்டு, நெறிப்படுத்தும் செயற்குழுச் செயலகம் ஊடாக, ஆறு இணைப்பாளர்களுக்கும் சமர்பிக்கப்பட்டன. இவ்வாறுகிடைத்த முன்மொழிவுகள்

- மாணவர்கள் தொடர்பானவை.
- ஆசிரியர்கள் தொடர்பானவை
- கணினிப்பாவனை மற்றும் கற்பித்தல் சாதனங்கள் தொடர்பானவை.
- கலைத்திட்ட மற்றும் பரீட்சைகள் தொடர்பானவை.
- அதிபர்கள் தொடர்பானவை
- பாடசாலைமற்றும் பாடசாலைச் சூழல்கள் தொடர்பானவை.
- பாடசாலைச் சமூகச் சூழல் தொடர்பானவை.
- பெற்றோர் மற்றும் வீட்டுச்சூழல் தொடர்பானவை.
- கல்வி நிர்வாகம் மற்றும் அமைச்சு தொடர்பானவை

இடம்பெயர்ந்த மாணவர் -1998



இந்தகல்வி அமைப்பு மீளாய்வு தொடர்பான விளம்பரத்தைத் தாங்கள் காணவில்லை, அல்லது அது பற்றி கேள்விப்படவில்லை என எழுந்த சில முறைப்பாடுகள் காரணமாக, முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு, 2013 நவம்பர் இறுதிப் பகுதிவரை நீடிக்கப்பட்டது. எனினும் இறுதிக் காலக்கெடுவுக்கு முன்னதாக அல்லது பின்னராக கிடைத்த அனைத்து முன்மொழிவுகளும் ஏற்பாட்டாளரால் பரிசீலிக்கப்பட்டன. முன்மொழிவுகளை வழங்கவிரும்பியோரும், குறிப்பிடப்பட்ட முகவரிக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட்டனர். இது தொடர்பான ஒரு மேலதிக விளம்பரம், தமிழ், சிங்கள, செய்தித் தாள்களில் வெளியிடப்பட்டது. விளம்பரங்களுக்குப் பதில் வினைகாட்டாதவர்களிடமிருந்து பட்டறையில் வாய்மொழி மூலமான முன்மொழிவுகளை பெறுவது ஊக்கப்படுத்தப்படவில்லை. இவர்கள் எழுத்து மூலம் தந்த முன்மொழிவுகள் முதலில் ஏற்பாட்டாளரால் பரிசீலிக்கப்பட்டு, பின்பு அவற்றைக் கருத்திலெடுப்பதற்காக அந்தந்த குழுக்களால் பரிசீலிக்கப்பட்டன. அனுப்புநர் முகவரியைக் கொண்டிருந்த அனைத்து சமர்ப்பிப்புகளும் கிடைக்கப் பெற்றது குறித்து அனுப்பியவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. தனிப்பட்ட விவகாரங்களும் முறைப்பாடுகளும் கவனத்தில் எடுக்கப்பட்டும் பொருத்தமான அலுவலகங்களுக்குத் தெரிவிக்கப்பட்டன. தொடர்புபட்ட பிரச்சினைகளில் ஆழமான நேரடி அனுபவம் கொண்டவர்களும் அவற்றுக்கான நடைமுறைப்படுத்தக் கூடிய தீர்வுகளை சமர்ப்பித்தவர்களுமான சில தனிநபர்களுக்குப் பொருத்தமான குழுநிலைக் கலந்துரையாடல்களில் கலந்து கொள்ளுமாறு அழைப்புக் கொடுக்கப்பட்டது.

பொதுமக்கள் மற்றும் நலன்சார் அக்கறையாளர்களிடமிருந்து கிடைத்த முன் மொழிவுகள் எழுப்பியுள்ள விடயங்களின் சுருக்கமான தொகுப்பொன்று இணைப்பு- I இல் தரப்பட்டுள்ளது.

அறிக்கையினுடைய முதல் வரைபானது, மேலே அடையாளம் காணப்பட்ட விடயப் பரப்புகளின் மீளாய்வுகளை ஆறு அத்தியாயங்களில் முன்வைத்திருக்கிறது. ஒவ்வொரு அத்தியாயமும் நிகழ்கால சூழ்நிலைகள் பற்றியதான கருத்தொருமைப்பாட்டை முன்வைத்திருப்பதோடு, அக்கறை செலுத்தப்பட வேண்டிய விசேட விடயப்பரப்புகளை அடையாளம் கண்டு உடனடியாக (6மாதங்கள்), குறுகியகால அடிப்படையில் (ஒருவருடம்), மத்தியதர கால அடிப்படையில் (3 வருடங்கள்) நடைமுறைப்படுத்தப் படவேண்டிய தீர்வுகளையும் பரிந்துரை செய்திருக்கின்றன.

இந்த முதலாவது வரைவானது முன்னெப்போதையும் விட பெரியதான ஒரு நெறிப்படுத்தும் செயற்குழுவினால் 2014 ஜனவரியின் பிற்கூறுகளில் கலந்துரையாடப்பட்டது. நிகழ்வுகளின் கால அட்டவணைக்கு பின் இணைப்பு IIஐ பார்க்க. செயற்குழுவின் ஆலோசனைக்கமைய குழுக்களின் எண்ணிக்கை 11 ஆக அதிகரிக்கப்பட்டது. ஒவ்வொருகுழுவினரும், தாங்கள் கண்டுகொண்டவை பற்றியும் அவற்றுக்கான பரிந்துரைகள் பற்றியும் இவ்விரண்டுமுறைகள் முன்வைத்தனர். இவை ஒவ்வொருமுறையும் மேம்படுத்தப்பட்டன.ஒவ்வொருகுழுவும் ஏப்பிரல் மாதம் 23 மற்றும் 24 ம் திகதியில் நடைபெற்ற ஆலோசனைச் செயலமர்வில் தமது திரட்டிய அவதானங்களையும் சிபாரிசுகளையும் முன்வைத்தன. ஒவ்வொரு குழுவிலும் பங்கு பற்றிய அங்கத்தவர்களின் பட்டியல் பின்னிணைப்பு IIIல் காட்டப்பட்டுள்ளது

### 11 குழுக்கள்

1. **மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் உளவியல் ரீதியான நன்னிலை**
2. **கற்பித்தல், கற்றல் தேசிய பரீட்சைகள்**
3. **நிதி, ஆளணிதேவைகள், மற்றும் மாணவர் தேவைகள், பாடசாலை சமூகம் மற்றும் அபிவிருத்தி**
4. **நிர்வாகம், நியமனங்கள், பதவியுயர்வு மற்றும் இடமாற்றம்**
5. **திட்டமிடல், தரவுத்தளம், ஆய்வு மற்றும் வெளியீடுகள்**
6. **கல்வி முகாமைத்துவ தகவல் அமைப்பு**
7. **முன் பிள்ளைப்பராய கல்வி மற்றும் அபிவிருத்தி**
8. **விசேட தேவை உடையோர் கல்வி**
9. **தமிழ்மொழி ஊடான கல்வி மற்றும் ஆசிரியர் கல்வி நிலையத்தை நிறுவுதல்.**
10. **தொடரும் கல்வி**
11. **பகிர்ந்தளிக்கப்பட்ட முடிவு மேற்கொள்ளுதலுடன் கூடியமாற்றீட்டு நிர்வாகக் கட்டமைப்பு**

## வடக்கின் கல்விமுறைமை மீளாய்வு ஆலோசனைச் செயலமர்வு
## (Education Consultation Workshop)

இரண்டாவது வரைபானது வடக்கில் இருக்கும் கல்வித்துறைசார் நிபுணர்களில், அழைக்கப்பட்ட அண்ணளவாக, 280 பேர் மற்றும் மத்திய கல்வி அமைச்சின் அதிகாரிகளை உள்ளடக்கிய கல்வி ஆலோசனை செயலமர்வில் (EducationConsultancy Workshop) முன்வைக்கப்பட்டது. முன்பேகுறிப்பிடப்பட்டதைப் போல், சர்வதேச துறைசார் நிபுணர்கள் மற்றும் ஏனைய 8 மாகாணங்களைச் சேர்ந்த கல்வியூட்டுபவர்களை, ஒழுங்கமைப்பாளர்களால் அழைக்க முடியாமல் போய்விட்டது. அத்துடன் உயர்கல்வி அமைச்சர், தொழிற்கல்வி மற்றும் தொழினுட்பக் கல்வி அமைச்சர், விளையாட்டுத்துறை அமைச்சர் மற்றும் கல்விச் சேவைகள் அமைச்சர் ஆகியோரையும் அழைக்கவேண்டும் எனவும் வடக்கு மாகாணகல்வி அமைச்சருக்கு அறிவித்திருந்தார். எப்படியாயினும் பின்னர் கருத்தரங்கிற்கு நிதி கிடைக்காததால்



கௌரவ அமைச்சர் அவர்கள் அதற்கு பதிலாக உலகவங்கியின் நிதி உதவியை ஒழுங்குபடுத்தி கல்வி அமைச்சர் மட்டும் கலந்துகொள்ளும் இரு நாள் ஆலோசனைச் செயலமர்வாக ஒழுங்குபடுத்தினார்.

ஏப்ரல் 23, 24 ஆம் திகதிகளில் இடம் பெற்ற ஆலோசனைச் செயலமர்வில், குழுக்கள் தமது திரண்ட அவதானிப்புகளையும் பரிந்துரைகளையும் சமர்ப்பித்தனர். (இருநாள் நிகழ்ச்சித் திட்டத்தைபார்க்க இணைப்பு IVஇல் பார்க்கவும் - ஒவ்வொரு குழுநிலைக் கலந்துரையாடலிலும் கலந்துகொண்ட உறுப்பினர் விபரம் இணைப்பு V இல் காட்டப்பட்டுள்ளது.)

குழுக்கள் தமது அவதானிப்புகளையும் பரிந்துரைகளையும் சமர்பித்தனர். பின்பு அவர்கள் கலந்துரையாடி, பரிந்துரைகளின் வரைபொன்றை உருவாக்கினர். ஆலோசனை கலக்கும் மகாநாட்டில் இருந்து பெறப்பட்ட உள்ளீடுகள், குழுக்களின் தலைவர்கள், வலயப்பணிப்பாளர்கள் வலயங்களினுடைய திட்டமிடல் ஆளணியினர், மாகாணபணிப்பகம், (வ.மா) கல்வியமைச்சு ,மாகாணபணிப்பாளர் மற்றும் செயலாளர் முதலியோர் கலந்து கொண்டதும், கௌரவ கல்வியமைச்சரின் தலைமையில் 12 மே 2014 அன்று இடம் பெற்றதுமான நிகழ்வில், கருத்தில் எடுக்கப்பட்டன. இந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் மீளாய்வு தொடர்பான இறுதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டன. இது, கௌரவ. கல்வியமைச்சர் (வ.மா) அவர்களுக்கும் மற்றும் கௌரவ. வடமாகாண முதலமைச்சர் அவர்களுக்கும் 2014 ஜூன் மாதம் இடம் பெறவிருக்கும் விழாவொன்றில் வைத்துச் சமர்ப்பிக்கப்பட்டது.



ஆலேசனைக் கருத்தரங்கில் ஆரம்ப வைபவத்தில் கௌரவ பந்துலகுணவர்த்தன அவர்கள் மீளாய்வையும் அதனுடைய சிபாரிசுகளின் வரைவினையும் வரவேற்றமை கேட்பதற்கு உற்சாகமளிப்பதாக இருந்தது. சிபாரிசுகளில் 90 வீதமானவை கல்வி அமைச்சினால் ஏற்றுக்கொள்ளபடக் கூடியவையாக இருப்பதாகவும் அவற்றில் அமுலாக்க செயன்முறை மற்றும் அனைத்து சிபாரிசுகளையும் பற்றி கலந்துரையாடுவதற்கு குவிமையக் குழுக்களை அமைப்பதற்கு தாங்கள் தயாராக இருப்பதாகவும் செயலமர்வின் முடிவில் செயலாளரும் மேலதிக செயலாளரும் குறிப்பிட்டிருந்தார்கள்.





## NESR ஐத் தொடர்ந்துவரும் செயற்பாடுகள்

2014 யூன் மாதம் இடம்பெறவிருக்கும் வைபவம் ஒன்றிலே, மேற்படி மீளாய்வு அறிக்கையானது, அதன் பரிந்துரைகள் ஆராயப்பட்டு, அங்கீகரிக்கப்படுவதற்கென மாகாண சபைக்கு சமாப்பிக்கப்படும் என எதிர்பாக்கப்படுகிறது. மாகாணசபையினாலும் ஏனைய அதிகார பீடங்களினாலும் ஏற்றுக்கொள்ளப்படும் பரிந்துரைகளுக்கான நிதிபெறுதல் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கென செயல் திட்டங்களாக உருவாக்கப்படும்.

# நிகழ்கால சூழ்நிலை:
# ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் நிர்வாகம்

## அறிமுகம்

கௌரவ கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன, NESR ஆலோசனை கலப்பு பணிக்கூடத்திற்கு ஆற்றிய உரையில் இலவசக்கல்வி, சிங்களம், தமிழ் தாய் மொழியிலான கல்வி, மத்திய பாடசாலைகள் என்ற எண்ணக்கரு ஆகியவற்றை அறிமுகப்படுத்தியவரான முதல் கல்வி அமைச்சர் சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கராவில் இருந்து ஆரம்பிக்கும் இலங்கையின் கல்வி வரலாற்றை மேலோட்டமாக விளக்கினார். இலங்கையின் அனைத்துப் பிள்ளைகளுக்கும் கல்வியைத் தரும் முயற்சியில், இந்தக் கொள்கைகள் நிலைப்பாடுகள், நாட்டில் இருந்த அனைத்துப் பிள்ளைகளுக்கும் கல்விக்கான பாதையை திறந்துவிட்டன. பிரித்தானியர்கள் தங்கள் ஆட்சியின் கீழ் உருவாக்கிய, ஆங்கில மொழியூடான கல்வி அமைப்பின் கீழே, இந்த மாணவர்களில் அனேகமானவர்கள் கவனிக்காமல் விடப்பட்டனர். அந்த முறையானது நகர்ப்புறங்கள் மற்றும் அவற்றை சூழவுள்ள இடங்கள் மீதே கவனம் செலுத்தியது.

கன்னங்கராவைத் தொடர்ந்து, பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா, ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன ஆகியோரின் சகாப்தங்களின் போது, கல்வியமைச்சர்களாக இருந்தவர்கள், வசதி படைத்தவர்களுக்கான காலனித்துவவாத கல்வி அமைப்போடு ஒப்பிடும்பொழுது, அனைத்து மாணவர்களினதும் உள்ளார்ந்த திறன்களை உயர்பட்ச அளவுக்கு கொண்டு செல்லும் விதத்தில், அனைத்துப் பிள்ளைகளுக்கும் சமமான வாய்ப்பை தருவதான, கன்னங்கராவின் கல்விக் கருப்பொருளை, வியாக்கியானம் செய்து, விரிவுபடுத்தி, தெரிந்த தரவுகளிலிருந்து கணிப்புக்களைச் செய்து கொண்டார்கள். இவ்வாறான கொள்கைகள் மாவட்ட நீதிமன்ற நீதிபதி டி.கிறெட்சரினால் அரசியலமைப்புக்கு அமைவானது அல்லவென நிர்ணயம் செய்யப்பட்ட 1956 ஆம் ஆண்டின் ‘‘சிங்களம் மட்டும்’’ சட்டத்தினால் மாசுபடுத்தப்பட்டு உத்தேசிக்கப்பட்டதும் சில உத்தேசிக்கப்படாததுமான விளைவுகளை ஏற்படுத்தின. சமத்துவம் என்ற கருத்துக்கு அரசியல் வாதிகள் வாயால் மட்டும் சேவை செய்தாலும் நடைமுறையில் வடக்கிற்கும் கிழக்கிற்கும் எதிராக பாகுபாடுகள் காட்டப்பட்டன. இந்தக் கொள்கைகள் தெற்கின் இளைஞர்களினதும் பின்னர் வடக்கின் இளைஞர்களினதும் அதிருப்திக்கு பங்களிப்புச் செய்ததால் அவர்கள் மாயைகள் நீங்கி மாற்றங்களை ஏற்படுத்தும் வழியாக வன்முறையை நோக்கித் திரும்பினார்கள்.

பிரித்தானிய காலனித்துவவாத ஆட்சியாளர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய பரீட்சைகள் க.பொ.த. (சா.த), க.பொ.த. (உ.த) பரீட்சைகள் சுதந்திரம் கிடைத்து 66 வருடங்களுக்குப் பின்னும் இன்றுவரைக்கும் நிலைத்திருக்கின்றன. க.பொ.த பரீட்சைகளுடன் ஆண்டு 05 புலமைப்பரிசில் பரீட்சையும் இணைக்கப்பட்டிருக்கின்றது. பாடத்திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு மேலும் பாடங்கள் விருப்பத் தெரிவுக்குரிய பாடங்களாக சேர்க்கப்பட்டிருப்பதை தவிர, அதிக மாற்றங்களுக்கு உட்படவில்லை. உயர்தரத்துக்கென விஞ்ஞானம், கணிதம் மற்றும் கலைத் துறைகளுடன் வர்த்தகமும் சேர்க்கப்பட்டிருக்கின்றது. 2014 தொடக்கம் நாடெங்குமுள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் ஒரு தொழினுட்பத்துறை சேர்க்கப்பட்டு, அங்கே வேலைத் தளங்களும் ஆய்வுகூடங்களும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

70களின் பிற்கூறுகளிலே பௌதிகவியல், இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல் ஆய்வுகூடங்கள் இல்லாமல் செய்யப்பட்ட செய்முறைப் பரீட்சைகளும் கைவிடப்பட்டதோடு, உயர்தரத்திலே எதிர்மறை மாற்றங்களும் ஏற்பட்டன. அதேவேளை பத்து மில்லியனாக இருந்த குடித்தொகை 1981 அளவிலே 20 மில்லியனாக அதிகரித்ததோடு மாணவர்களின் தொகையும் அதிகரித்தது. பரீட்சைகள் வெறும் கடதாசியும் பென்சிலும் கொண்டதாக மாறின. இது சா.த. மற்றும் உ.தரங்களிற்கு மாணவர்களைத் தயார் செய்யும் தனியார் கல்வி நிலையங்கள் உருவாக வழிவகுத்தன. மாணவர் தொகை அதிகரிக்கும் பொழுது, அதற்கேற்ப அதிகரிப்பு ஏற்படாத பல்கலைக்கழகங்கள் மற்றும் 03 ஆம் நிலை கல்வி நிலையங்களில் போதிய இடவசதி இல்லாமையானது, பரீட்சைகளில் அழுத்தங்களை ஏற்றபடுத்தியதால், மேற்படி தனியார் கல்வி நிலைய வகுப்புகள் அனைத்து ஆண்டு வகுப்புக்களும் விரிவாக்கம் செய்யப்பட்டன.

சா.த., உ.த. பரீட்சைகளுக்குப்பின் எப்படி பெரும் தொகையிலான மாணவர்கள் பாடசாலைகளை விட்டு வெளித்தள்ளப்பட பரீட்சைகள் வழிவகுத்தன என்று எடுத்துரைத்த அமைச்சர், 70களிலும் 80களிலும் நாட்டின் தென்பகுதியில் இதனால் ஏற்பட்ட பின்விளைவு களையும் விளக்கினார். இந்தப் பரீட்சைகளுக்கு கொடுக்கப்பட்ட அதியுயர் முக்கியத்துவமானது, மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், பெற்றோர்கள் மற்றும் தனியார் கல்வி நிலையங்கள் பிள்ளைகளின் உண்மையான கல்வி மற்றும் வளர்ச்சியின் மீது கவனம் செலுத்தாமல், இந்தப் பரீட்சைகளுக்கு தயார்ப்படுத்துவதன் மீதே கவனத்தை செலுத்த வழிவகுத்தன. பரீட்சைகள், கற்பித்தல் மற்றும் தனியார் கல்வி நிலையங்கள் தொடர்பாக அதிகாரம் 05இல் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

மஹிந்தோதய திட்டமென்று அறியப்படுவதான, 1000 பாடசாலைகள் திட்டமானது, பாடசாலைகளிலேயே விஞ்ஞான, மொழி, கணித மற்றும் ICT ஆய்வுகூடங்களை ஏற்படுத்தி வருவதாக, கௌரவ அமைச்சர் சபையோருக்குத் தெரிவித்தார். இத்திட்டத்தில் வட மாகாணத் திலுள்ள 90 பாடசாலைகள் இடம்பெறும். இந்தப் பாடசாலைகள், புதிய கட்டடங்கள் மற்றும் உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளும். ஆய்வுகூடங்களின் பயன்பாட்டின் மூலம் கற்பித்தலில் மீளவும் புதியன புகுத்துவதென்பது, பாராட்டப்படவேண்டும் என்பதோடு, சரியான திசையில் எடுத்து வைக்கப்பட்ட காலடியுமாகும்.

எனினும் மஹிந்தோதய திட்டத்தின்கீழ் வடக்கு மாகாணத்தில் தற்போது சா.த., உ/தரங்களிற்கு மாணவர்களை ஆயத்தப்படுத்தும், 196 1AB மற்றும் 1C பாடசாலைகளில் 90 மட்டுமே (46%) ஆய்வுகூட வசதிகளைக் கொண்டிருக்கும். மற்றைய 54% ஆன பாடசாலைகள், தேசிய பரீட்சைகளுக்குத் தயார் செய்யும் மாணவர்களுக்கு செயன்முறை பரிசோதனைகளை நடாத்துவதற்கான மேற்படி வசதிகளை கொண்டிருக்கமாட்டா. இந்த வசதிகளைப் பெறும் 46% பாடசாலைகளில் உள்ள மாணவர்கள் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் மற்றும் ICT பாடங்களைக் கற்பதைப் பொறுத்தவரை, இயற்கையாகவே ஒரு அனுகூலத்தைக் கொண்டிருப்பார்கள் என்பதோடு, அந்தவகையில், தேசியப் பரீட்சைகளுக்கு சிறப்பாக தயாராகியும் இருப்பார்கள். இந்த ஏற்றத்தாழ்வுகள் எல்லா மாகாணங்களிலும் அவ்வவ் மாகாணங்களில் சா.த., உ.த. வகுப்புக்களை கொண்டிருக்கும் பாடசாலைகளின் விகிதாசாரப்படி நிகழும். மஹிந்தோதய திட்டமும் சில பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிற உ.த. தொழினுட்பப் பிரிவு ஆகியவை பாராட்டப்பட வேண்டியது அவசியமானவையெனினும் இறுதியிலே ஒரே தேசிய பரீட்சையை எதிர்கொள்ளப்போகும் பிள்ளைகள் அனைவருக்கும் சமமான வாய்ப்பை அளிக்கும் கன்னங்கரா கருப்பொருளுக்கு இசைவிணக்கமானவையாக இல்லை. அதையும்விட இந்த தொழினுட்ப துறையானது எல்லாப் பாடசாலைகளிலும் இருக்காது என்பதால் சில மாணவர்களுக்கு தொழினுட்பத் துறைகளைத் தெரிவு செய்யும் விருப்பத்தெரிவு இல்லாமல் போகலாம்.

கல்வியில் சமமான வாய்ப்புக்கள் இல்லாமல் போனதால் 1970களிலும் 1980களிலும் தெற்கில் என்ன நிகழ்ந்தது என்பதை கௌரவ அமைச்சர் பந்துல குணவர்த்தன குறிப்பிட்டார். நாடெங்கும் இருக்கும் தேசிய பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தயார் செய்யும் அனைத்துப் பாடசாலைகளுக்கும் இந்த வசதிகள் விரிவுபடுத்தப்படாவிட்டால் கல்விக் கொள்கையில் இருக்கும் எந்தவொரு சமமின்மையும் 1970களிலும் 1980களிலும் இடம்பெற்ற நிகழ்வுகள் மீண்டும் நிகழ்வதற்கு வழிவகுக்கும்.

**1000 பாடசாலை நிகழ்ச்சித்திட்டம் புதிய கட்டடம்**



## கான் கல்விக்கழகத்தினுடைய கணித ஈ - பாடங்கள் சிங்கள மொழியூடகத்திற்கு மாத்திரம் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டமை

2014 யூன் 04 ஆம் திகதிய Daily FT (Sri Lanka)வில் வெளிவந்த கட்டுரையொன்று பின்வருமாறு கூறுகிறது:

> ''ஆசிய அபிவிருத்தி வங்கியானது *$725,000* மானியம் ஒன்றின்கீழ் கான் கல்விக் கழகத்தின் கணிதத்துறை *e*-கற்றல் அமைப்புத் திட்டத்தையும் *MATHCLOUD* ஐயும் சிங்களத்துக்கு மொழிபெயர்த்துள்ளது. 2014 இன் கடைக்கூறுவரையான 06 மாத காலத்திற்கு இவை 20 பாடசாலைகளின் தினசரி கணித பாடங்களின் ஒரு பகுதியாக, பரீட்சார்த்த அடிப்படையில் பயன்படுத்தப்படும். அதைத் தொடர்ந்து மாணவர்கள் கணித ரீதியான அடைவுகள் மற்றும் தன்னம்பிக்கைகளை இந்தத் திட்டம் உந்துகை செய்வதில் எப்படியான பயன் விளைவைக் கொண்டிருக்கிறது என்பதை நிர்ணயிக்கும் வகையில் மாணவர்களின் ஆற்றுகைகள் மதிப்பீடு செய் யப்படும்.'' [1]

30 வருடங்கள் நீடித்த போருக்குப் பின்னும் விசேடமாக மொழிப் பிரச்சனையே போருக்கான அடிப்படைக் காரணம் என பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் நிலையிலும் தமிழ்பேசும் சமூகங்களுக்கு எதிராக வெளிப்படையாகவே பாகுபாடானதாக இருக்கும் செயற் திட்டமொன்றுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) முதலீட்டம் செய்யத் தெரிவு செய்திருப்பது மலைப்பூட்டுவதாக இருக்கின்றது. கான் கல்விக்கழக கணித பாடங்களைச் சிங்களமொழியில் மாத்திரம் மொழிபெயர்ப்புச் செய்திருக்கும் அதேவேளை, மூல விடயங்களின் தமிழ் மொழி பெயர்ப்பை வழங்காமலிருப்பது இத் தீவினுடைய தமிழ்பேசும் மக்களின் உரிமையை மறுப்பதாக அமைகின்றது. சர்வதேச நிதி வழங்குநர்கள் தங்கள் கொள்கைகளினுடையவும் திட்டங் களுடையவும் விளைவுகள் பற்றி அதிகளவில் எச்சரிக்கையாக இருப்பதோடு, அவை முரண்பாடுகளை உருவாக்காமல் அல்லது இருக்கும் முரண்பாடுகளை மிகைப்படுத்தாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். ADB ஆனது அதனது சொந்த முரண்பாடு வடிகட்டிகளை, விசேடமாக கல்விசார் திட்டங்களுக்கென உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

2014 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட, "உலக மயமாக்கல் மற்றும் அபிவிருத்தி: சிறிலங்காவிலான கல்விச்சீர்திருத்தங்களின் அரசியல்" என்ற தமது கட்டுரையிலே, லக்ஸ்மன் புஞ்சி, சர்வதேச நிதி வழங்குநர்கள், விசேடமாக ADB மற்றும் உலக வங்கியினுடைய கடன்கள் அல்லாத உதவிகள் அல்லது அவையிரண்டையும் பற்றியதான பின்வரும் ஈடுபாடுகளை தெரிவித்துள்ளார்:

> "இவ்வாறாக தற்சமயம் சிறிலங்காவில் நிலவுகின்ற சூழ்நிலைகளைப் பொறுத்தவரை. சமத்துவம், தரம் மற்றும் இலகுவாக எட்டக்கூடிய தன்மைகள் என்ற பதங்கள், அவற்றின் உண்மையான கருத்துக்களை எடுத்துக்காட்டாதவையாக ஆகிவிட்டன என்பதை எவரும் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்தச் சூழமைவிலே உலக வங்கி மற்றும் *ADB*யினால் முன்மொழியப்படும் சீர்திருத்தங்களை நெருக்கமாக ஆராயும்போது, அவை பொதுவாகவே தேசிய ஈடுபாடுகளை கவனிக்கவில்லை என்பதையும் சர்வதேச சூழமைவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கும் விடயங்களுக்கு அதிக முன்னுரிமை கொடுத்திருக்கின்றன என்பதனையும் உணரக் கூடியதாக இருக்கின்றது. விஞ்ஞானம் மற்றும் கணிதம் சார்ந்த பயிற்சி நெறிகளை மீள சீர்திருத்தம் செய்யவேண்டும் என்பதும் அதேபோலவே மாணவர்களுடைய இணையதள-அடிப்படையிலான கற்கைகள் மற்றும் தகவல்கள் தொழினுட்ப திறன்களை மேம்படுத்த வேண்டும் என்பதும் முக்கியமான தெனினும் தேசிய ஈடுபாடுகளை வலுப்படுத்தும் விதத்திலான சீர்திருத்தங்களும் எந்தவொரு நாட்டினுடையவும் அபிவிருத்தி நோக்கங்களுக்கு மிக மிக முக்கியமானவையாகும்.

1http://www.ft.lk/2014/06/04/sri-lanka-students-test-e-learning-programs-to-boost-mathematics-skills/ (accessed: 10 June 2014).
2 http://www.norrag.org/en/publications/norrag-news/online-version/targets-in-education-training-off-centre/detail/globalisation-and-development-the-politics-of-educational-reforms-in-sri-lanka.html (accessed: 10 June 2014).

பின்வரும் வினாக்கள் எழுப்பப்படவேண்டும்: சிறிலங்காவிலுள்ள சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் போன்ற சமூகங்களிலிருக்கும் பெரும்பான்மையான மாணவர்களின் வாஞ்சைகளுக்கு இந்தச் சீர்திருத்தங்கள் எந்தவழிகளில் உதவ முடியும் அல்லது இடையூறு விளைவிக்க முடியும்? அத்துடன் கல்வி மற்றும் அபிவிருத்தி சூழமைவிலே இந்த சீர்திருத்தங்களில் இருந்து யார் நன்மையடையப் போகிறார்கள்? வறுமையொழிப்பு, சமூகரீதியான நலவாழ்வு, தேசிய ஒருமைப்பாடு முதலியவற்றுக்கு வழிவகுப்பதில் இந்தச் சீர்திருத்தங்கள் எவ்வளவு பயன் விளைவாக இருக்கப் போகின்றன?" [2]

**ஏனைய அபிவிருத்தி திட்டங்களில் போலவே கல்வித்துறையில் நிதிவழங்குநர்கள், கடன் வழங்குநர்கள் மற்றும் பெறுநர்கள் முரண்பாடு வடிகட்டிகளை பயன்படுத்த வேண்டியது அவசியமாகும்.**


இந்த ஈடுபாடுகள், மஹிந்தோதய திட்டம் குறித்து எழுப்பப்படும் ஈடுபாடுகளுக்கு வலுவூட்டுபவையாக இருக்கின்றன. கான் கல்விக் கழகத்தின் மொழிபெயர்ப்பு திட்டமானது இரு மொழிக் குழுக்களிலுமிருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் என்றில்லாமல் முழு மொழிக் குழுவுக்குமே பயன் விளைவிக்கக் கூடியதாகும். கல்வித் துறையிலான புதியன புகுத்தல்கள் அல்லது திட்டங்கள் திட்டமிடப்படும் பொழுது "முரண்பாடு வடிகட்டல்" மற்றும் "சமூக ரீதியிலான தாக்கங்கள் தொடர்பான ஆய்வுகள்" ஆகியவை, நிதி பெறுவோர், நிதி வழங்குவோர் மற்றும் கடன் வழங்குவோரால் நிகழ்த்தப் படவேண்டும் என்பது முக்கியமானதாகும். உலக வங்கியானது இந்த விடயத்தில் கவனம் செலுத்தியிருக்கிறதெனினும் போர் முடிவுற்று 05 வருடங்கள் மட்டும் கழிந்திருக்கும் நிலையில் 'முரண்பாடு வடிகட்டிகளை' எந்தளவுக்கு பயன்விளைவுடன் பிரயோகித்திருக்கிறார்கள் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.[3] அனைத்துப் பிள்ளைகளுக்கும் சமவாய்ப்பை உறுதிப் படுத்துவதற்கென மட்டுமல்லாது, அவர்களுடைய கொள்கைகளும் திட்டவரைவுகளும் பாகுபாடு இல்லாதவையாகவும் மொழி மற்றும் மதக் குழுமங்களுக்கிடையே முரண்பாடுகளை உருவாக் காதவை அல்லது அவற்றை மிகைப்படுத்தாதவையாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்குமென, நிதிவழங்குநர்கள் மற்றும் கடன் வழங்குநர்கள், மாகாண மற்றும் மத்திய அரசுகளுடன் இணைந்து பணியாற்ற வேண்டும்.

## நிகழ்கால கல்விச் சூழல்

இந்த அதிகாரமானது, வடமாகாண கல்வித்துறையினதும் வடமாகாணத்திற்கு பாதிப்பை விளைவிக்கக்கூடியதாக தேசிய அமைப்பில் இருக்கக்கூடியதுமான இடரார்ந்த பகுதிகள் தொடர்பான நிகழ்கால நிலைமைகள் தொடர்பான மேலோட்டமான நோக்கத்தை முன்வைக் கின்றது. மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்வி அமைப்பு மீது தனியார் கல்வி நிலையங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கின்றனவெனினும் இந்த விடயத்தின் மீது விசேட கவனம் செலுத்தப்படவேண்டும் என்பதால் அதிகாரம் 05 இல் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

உரு.2:1 ஆனது யுனெஸ்கோவால் வெளியிடப்பட்டிருக்கும் சிறிலங்காவிலான ஆரம்பநிலையில் (தரம் - 01) இருந்து மூன்றாம் நிலை வரையிலான பாடசாலை அமைப்பினுடைய கட்டமைப்பை காட்டும் பட விளக்கம் ஆகும்.

**Figure 2.1: Sri Lanka School System Structure**




3 See: http://siteresources.worldbank.org/EXTSOCIALDEVELOPMENT/Resources/244362-1164107274725/3182370-1164110717447/Conflict_Analysis_Framework.pdf

Source: UNESCO based on Sri Lanka Ministry of Education information (August 2006) (http://www.ibe.unesco.org/fileadmin/user_upload/archive/Countries/WDE/2006/ASIA_and_the_PACIFIC/Sri_Lanka/Sri_Lanka.htm) accessed 5 June 2014

உரு 2:1 2006 ஆம் ஆண்டின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டது. அதன்பின்பு இங்கு காட்டப்பட்டிருக்கும் நான்கு துறைகளுக்கு (விஞ்ஞானம், கணிதம், கலை மற்றும் வர்த்தகம்) மேலதிகமாக ஆண்டு 12,13 இற்கான ஒரு தொழினுட்பத்துறை சேர்க்கப்பட்டிருக்கின்றது.

வடமாகாணத்திலுள்ள பல்வேறு மட்டங்களிலான கல்வியமைப்பு பற்றிய மேலதிக விபரங்களுக்கு பின்வரும் இணைப்புக்களைப் பார்க்கவும்.

- வடமாகாண கல்வி அமைச்சு அமைப்பின் ஒழுங்கமைப்பு (இணைப்பு V ஐப் பார்க்கவும்)
- மாகாண கல்விப்பணிப்பக ஒழுங்கமைப்பு (இணைப்பு VI ஐப் பார்க்கவும்)
- வலயக்கல்வி பணிப்பகங்களின் ஒழுங்கமைப்பு (இணைப்பு VII ஐப் பார்க்கவும்)

## வடமாகாணத்தில் மாணவர் இணைவு

அட்டவணை 2:1 ஆனது வடமாகாணத்தின் 12 கல்வி வலயங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள வெவ்வேறு பாடசாலைகளைக் காட்டுகின்றது.

- 1AB வகை பாடசாலைகள் விஞ்ஞானம், கணிதம், கலை வர்த்தகப் பிரிவுகளில் க.பொ.த. (உ.த) (ஆண்டு13) வரையான வகுப்புக்களை கொண்டுள்ளன. 2014 இல் இருந்து சில பாடசாலைகள் தொழினுட்பத் துறையையும் இணைத்துள்ளன.
- 1C வகைப்பாடசாலைகள் ஆண்டு 13வரையான கலை, வர்த்தகப்பிரிவுகளை கொண்டுள்ளன
- வகை II பாடசாலைகளில் க.பொ.த, சா.தரம் வரையான வகுப்புக்களே இருக்கின்றன.
- வகை III பாடசாலைகள் ஆரம்பநிலை தரங்களையே கொண்டிருக்கின்றனவெனினும் சில விதிவிலக்குகளும் உள்ளன.

**Table 2.1: Number of Schools & Enrolment by Type of School & by Zone 2012**

| No. | Zone | 1AB | | 1C | | Type II | | Type III | | Total | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Students | Schs | Students | Schs | Students | Schs | Students | Schs | Students | Schools |
| 1 | Jaffna | 17,404 | 12 | 6,823 | 12 | 10,321 | 41 | 7,360 | 34 | 41,908 | 99 |
| 2 | Island | 2,469 | 4 | 1,805 | 7 | 3,536 | 20 | 1,996 | 30 | 9,806 | 61 |
| 3 | Valikamam | 13,198 | 13 | 8,245 | 14 | 8,800 | 39 | 7,372 | 70 | 37,615 | 136 |
| 4 | Themaradchi | 5,591 | 6 | 2,015 | 5 | 3,298 | 21 | 2,529 | 28 | 13,433 | 60 |
| 5 | Vadamaaradchi | 8,486 | 10 | 3,276 | 8 | 7,053 | 29 | 4,257 | 35 | 23,072 | 82 |
| 6 | Kilinochchi | 8,591 | 9 | 7,161 | 14 | 10,256 | 39 | 5,600 | 42 | 31,608 | 104 |
| 7 | Mullaitivu | 4,272 | 4 | 3,581 | 6 | 7,055 | 24 | 3,037 | 20 | 17,945 | 54 |
| 8 | Thunukkai | 1,087 | 2 | 2,708 | 7 | 2,547 | 15 | 2,184 | 37 | 8,526 | 61 |
| 9 | Madhu | 505 | 2 | 2,332 | 8 | 2,408 | 15 | 1,013 | 27 | 6,258 | 52 |
| 10 | Mannar | 8,632 | 8 | 7,528 | 14 | 4,957 | 25 | 2,220 | 36 | 23,337 | 83 |
| 11 | Vavuniya North | 1,640 | 3 | 1,563 | 7 | 3,426 | 20 | 1,772 | 60 | 8,401 | 90 |
| 12 | Vavuniya South | 11,014 | 7 | 8,969 | 14 | 7,094 | 30 | 2,762 | 50 | 29,839 | 101 |
| | Total | 82,889 | 80 | 56,006 | 116 | 70,751 | 318 | 42,102 | 469 | 251,748 | 983 |

Soure: from NP Planning data - 2012

மீளாய்வின் போது பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாக கொண்டு பார்க்கும் போது II, 1C மற்றும் 1AB பாடசாலைகளில் அனேகமானவற்றின் மாணவர் இணைவுத் தொகைகள் அட்டவணை 2:1இல் காட்டப்பட்டிருபவற்றை விட குறைவாக இருக்கக் கூடும். (தற்போதைய இணைவு மட்டத்தையும் பாடசாலை எண்ணிக்கை வகைகளை 1997 இல் நிலவிய போர்க்கால சூழலிலும் ஒப்பிட்டு பார்க்க ஆர்வமுள்ளவர்கள் இணைப்பு 12 ஐப் பார்க்கவும்)[4] சா.த, உ.த. பரீட்சைகளுக்கு தோற்றிவிட்ட மாணவர்களின் பெயர்கள் பதிவேட்டில் இன்னமும் இருப்பது இதற்கு காரணமாக இருக்கலாம். அவர்கள் கற்பதற்கான இடவசதிகளை தற்போதைய கல்வி அமைப்புக்கள் வழங்குவதில்லை என்பதால் அவர்கள்

பாடசாலைக்கு செல்லாமல் இருக்கலாம். ஒவ்வொரு வகைப் பாடசாலையிலுமான சராசரி இணைவானது, 2000 இற்கு அதிகமான மாணவர்களைக் கொண்டிருக்கும் சில 1AB பாடசாலைகளும் 500 அல்லது அதற்கு குறைவான மாணவரைக் கொண்டிருக்கும் வேறு பாடசாலைகளும் இருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. உ.தரத்தில் விஞ்ஞான, கணித துறைகளைக் கற்பிக்கும் 1AB பாடசாலைகளில் சிலவற்றில் 1 இலிருந்து 10 வரையான மாணவரே உள்ளனரெனினும் ஆசிரியர் தொகை முழு அளவினதாக இருக்கும். இது ஆசிரியர் வளத்தையும் நிதிகளையும் செயற்றிறனற்று பயன் படுத்துதலாகும். இந்த விடயம் தொர்பாக வடமாகாண கல்வி நிர்வாகம் இதுவரை எந்த முடிவையும் எடுக்கவில்லை.

ஒவ்வொரு பாடசாலைகளிலும் இருக்கும் ஒவ்வொரு வகுப்பிலும் இடம்பெறும் மாணவர் இணைவு பற்றிய தகவல்கள், எந்தப் பாடசாலைகளை ஒன்றிணைக்க வேண்டும், மாணவர்களை எப்படி, கல்வி ரீதியாகவும் சமூகரீதியாகவும் சமமானதும் நீதிரீதியான செயன்முறைக்கு சாத்தியமான அமைவிடங்களில் செறிவாக்கலாம் என்பது போன்ற தகவல் அடிப்படையிலான முடிவுகளை எடுப்பதற்கு அவசியமாகும். இவ்வாறு செய்யும் போது வெறுமையாகும் பாடசாலைகளை வேறு மாணவர்களுக்கு அல்லது பெற்றோர் அல்லது வயது வந்தோர் கல்விக்கு அல்லது அவை இரண்டிற்கும் பயன்படுத்த முடியும். இதனோடு இணைந்து கொள்ளும் இன்னொரு பிரச்சினையாக, ஒவ்வொரு வருடமும் தரம் 13 மாணவர்கள் ஜனவரியிலிருந்து யூலை வரை பாடசாலைக்கு சமுகமளிக்காதது இருக்கிறது. பாடசாலைக்கு வருவதற்கு பதிலாக, ஓகஸ்ரில் வரும் உயர்தரப் பரீட்சைக்கு தயார் செய்யும் விதத்தில் முழுநாளும் தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்கின்றார்கள்.

> வடமாகாண கல்வித் தரவுத் தளம் 2014 ஆம் ஆண்டளவில் பூரணமாக்கப்பட்டுவிடும்.

இந்த வருகை தராமை, கல்வியமைப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதோடு, இயல்பானதாகவும் கருதப்படுகின்றது. உண்மையைச் சொல்லப்போனால், மாணவர்கள் எங்கே என்று கேட்டால் பாடசாலை அதிகாரிகள் எல்லோருமே, அவர்கள் 'கற்கும் விடுமுறையில்' இருக்கின்றார்கள் என்று கூறுவார்கள்- இது “தனியார் கல்வி நிலையங்களுக்குப் போகின்றார்கள்” என்பதற்கான மாற்றுப் பெயராக இருக்கும். இது, இந்த அறிக்கையின் 05 ஆவது அதிகாரத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

## தரவு சேகரிப்பும் அறிந்துகொள்ளப்பட்டவையும்

தரவு சேகரிப்பானது, ஒக்ரோபர் 2013இருந்து ஏப்பிரல் 2014வரை இடம்பெற்றது. உடனடியாக கிடைக்கக் கூடியதாக இருக்கவேண்டிய இந்தத் தரவுகளைப் பெற்றுக்கொள்வது, அனைத்து மட்டங்களிலும் - வகுப்பறையிலிருந்து நிர்வாக மட்டம்வரை - மிகவும் கடினமானதாக இருந்தது. நற்பேறுவசமாக, கல்வி அமைப்பினில் இருந்த ஆளணியினர் ஒத்துழைத்ததினால் தேவையா யிருந்தவற்றில் பெரும்பாலானவற்றை அணியினர் பெறக்கூடியதாக இருந்தது. இதுவரை சேகரிக்கப்பட்ட தரவுகள் ஆலோசனை கலப்புக் கூட்டங்களில் பகிரங்கமாக தெரிவிக்கப்பட்டவைகள், மற்றும் எழுத்து மூலம் தரப்பட்ட விடயங்களால் ஆதரவளிக்கப்படுபவையாகவும் அவற்றை உறுதி செய்பவையாகவும் இருக்கின்றன. இது கல்வி அமைப்பின் எல்லா மட்டங்களிலும் உண்மையானதாக இருக்கின்றது. எனினும் மேலதிக தரவுகளும் பகுப்பாய்வுகளும் இன்னமும் தேவையாக இருப்பதோடு சமர்ப்பிக்கப்பட்ட தரவுகள், அவற்றினுடைய நம்பகத்தன்மை, அவற்றில் நம்பிக்கை கொள்ளுதல் முதலியவற்றை அதிகரிக்கும் விதத்திலேயே மூலக் கோவைகளிலிருந்து பாடசாலைகளுக்கே சென்று பரிசீலிப்பது மூலமும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

ஆசிரியர்கள் அவர்களது கல்விசார் பின்னணிகள், மற்றும் விபரங்கள், இதேபோலவே நிர்வாக அணியினர் மற்றும் பாடசாலை மற்றும் வலய ரீதியான நிதி தொடர்பான தரவுகள், கல்வி அமைப்பின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள கோவைகளில் வைக்கப்பட்டுள்ளன. மாகாணம் முழுவதும் உள்ள பாடசாலைகள், மற்றும் வலயங்களுக்கு, நேர்மையான முறையில் வளங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை நிர்ணயிக்க, உதவியாக, தலா ஒரு மாணவன் வாரியாக தலா ஒரு பாடசாலை வாரியாக செலவுகளை கணிப்பதற்கு பாடசாலை வாரியாக அனைத்து விடயப்

[4] Ethirveerasingam, Nagalingam. “An Appraisal of Education and Sports in the North East Province of Sri Lanka”, Report to the NorthEast Province Ministry of Education, Culture and Sports. 1998. p.10

பரப்புகளுக்குமான பாடசாலை வாரியான நிதி ஒதுக்கீடுகளின் அளவுகள் தேவை.நிதி ரீதியான அமைப்பின் செயற்றிறனையும் நேர்மையை நிர்ணயிக்கவும் இந்த தரவுகள் அவசியமாகும். அனைத்து ஆளணியினரதும் வேதனங்கள், குறிப்பாக ஆசிரியர்களது வேதனங்கள், அவர்கள் எங்கே ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள், எங்கே அவர்களது வேதனங்கள் வழங்கப்படுகின்றன என்பதை கண்டறியவேண்டியது முக்கியமானதாகும். நிதி ரீதியான தரவுகளில் இந்த விடயம் தொடர்பான மேலதிக விபரங்களுக்கு கீழேயுள்ள புள்ளியிடப்பட்ட விபரங்களைப் பார்க்கவும்.

சில சேகரிக்கப்பட்டுள்ளனவெனினும் இன்னும் அதிகம் தேவை. ஏற்கனவே இருந்த ஆக அடிப்படைக் கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டு ஒரு அகல்விரிவான தரவுத்தளம் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. அது வேகமாகவும் துல்லியமாகவும் முன்னேறி வருவதோடு, 2014 இன் இறுதிப் கூறளவில் பயன்படுத்தத் தயாராகிவிடும். பொதுமக்களாலும் பாடசாலைகள் மற்றும் நிர்வாக அமைப்பினுள் உள்ள ஆளணியினர், பெற்றோர் மற்றும் மாணவரால் கூறப்படும் கருத்துகளை சமர்ப்பிப்பதற்கும், உறுதிசெய்வதற்கும், தீர்வுகளைக் காண்பதற்கும் நம்பகத்தன்மை வாய்ந்ததும் செல்லுபடியானதுமான தரவுகள் முக்கியமாகும். எல்லோருக்கும் தெரிந்தவையும் நகைச்சுவையான காரணங்கள் கூறப்பட்டவையுமான அநேக பிரச்சினைகள், தற்போது தரவுகள் மூலம் உறுதிப்படத் தரப்பட்டுள்ளன.

- ஆசிரியர்கள் பணிக்குழு (cadre) எண்ணிக்கை, உண்மையாக சேவையிலுள்ள ஆசிரியர்கள் எண்ணிக்கை, கற்பிக்கப்படும் பாடங்கள், நிதிஒதுக்கீடு, முதலிய வற்றில், கவனம் செலுத்தப்படவேண்டிய விவகாரங்கள் உள்ளன. இவை பின்பு அதிகாரம் 5,6,7 இல் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

- முழுமையாக நிரப்பப்பட்டதாக பணிக்குழு எண்ணிக்கை காட்டப்பட்டாலும், உண்மையாக அத்தொகையிலான ஆசிரியர்கள் பணியில் இல்லாதிருத்தல்.

- ஆசிரியர்கள் தாங்கள் சேவையாற்றாத, இன்னொரு பாடசாலையில் இருந்து, தங்கள் வேதனத்தை பெற்றுக்கொண்டிருப்பார்கள்.

- ஆசிரியர் பணிக்குழு எண்ணிக்கை நிரப்பப்படவில்லை எனக்காட்டப்படும். ஆனால் ஆசிரியர் தொலைதூரத்திலுள்ள இன்னொரு பாடசாலையில் கற்பித்துக் கொண்டிருப்பார். அவர்களுடைய அந்தப்பாடசாலையில் முன்னைய பாடசாலையின் பாதீட்டிலிருந்து வேதனம் பெற்றுக்கொண்டிருப்பார்.

**மாணவர்களை அனைத்து தேசிய பரீட்சைகளுக்கும் தயார்படுத்த தரம் 11–13 மாணவர்களாலும் பெற்றோர்களாலும் விரும்பப்படும் மாற்றீட்டு "பாடசாலை அமைப்பாக" தனியார் கல்வி நிலையங்கள் இருக்கின்றன.**

★ இதற்கான காரணங்கள் பலவெனினும் முதனிலை பெறுகின்ற காரணங்களாக அமைப்பினுள்ளே பெருகியிருக்கின்ற வக்கிரமான சலுகை காட்டுதல், உறவினருக்கு சலுகை காட்டுதல், நண்பர்களுக்கு சலுகை காட்டுதல் முதலியவை இருக்கின்றன. இவ்வாறான நடைமுறைகள் அதிபர்கள், வலயப் பணிப்பாளர்கள், மாகாணப் பணிப்பாளர்கள், கல்விச் செயலாளர்கள் நிதிப்பிரிவினர் ஆகியோருக்கிடையேயான ஆசிரியர்களின் நியமனம் மற்றும் இடமாற்றம் தொடர்பிலான குறைபாடான, ஒருங்கிணைப்பு மற்றும் தொழில்சார் ஆலோசனை கலத்தல் முதலியவற்றை அவர்களுக்கு வசதியாகப் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன. அனைத்துப் பகுதிகளை கொண்ட, மத்திய தரவுத்தளம் ஒன்று இல்லாதது இவ்வாறான முறை கேடுகளுக்கு இடம் கொடுக்கின்றது. 06, 07 ஆம் அதிகாரங்கள் இந்தப் பிரச்சினையை ஆராய்ந்து இருப்பதோடு, ஒரு பாடாசலையில் தேவைக்கதிகமாக ஆசிரியர்கள் இருக்க, இன்னொருபாடசாலையில் ஆசிரியர்கள் போதாமையாக இருக்கும் பிரச்சினைக்கு தீர்வு தருகின்றன.

தரவுத்தள அமைப்பானது, நிதிப்பிரிவைத் தவிர்த்து பூரணப்படுவதை எட்டிக் கொண்டிருக்கின்றது. நிதிப்பிரிவானது இனிமேல்தான் இந்த அமைப்பை முழுமையாக பயன்படுத்தி, ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகம் தொடர்பாக, கைவசம் இருக்க வேண்டிய தரவுகளை சேமிக்கப் போகின்றது.

- யாழ்ப்பாணத்திலிருந்தும் வவுனியா தெற்கிலிருந்தும் வன்னி பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களில் பலரும், ஒன்றில் தினசரி அங்கு போய் வருகிறார்கள் அல்லது வெள்ளிக்கிழமை போய் திங்கட்கிழமை திரும்பி வரு கிறார்கள். இதன் விளைவாக அனேகமான சந்தர்ப்பங்களிலே இவர்கள் ஒரு வாரத்துக்கு 3 - 3.5 நாட்கள் வரையே கற்பிக்கிறார்கள். ஆனால் முழு நாட்களுக்கும் சம்பளம் வழங்கப்படுகிறது.

- 300 அல்லது அதற்கு மேற்பட்ட மாணவர்களை கொண்ட பாடசலைகளில் குறுகிய காலப் பயிற்சியின் பின், சில ஆசிரியர்கள் உளவளத் துணையாளர்களாக நியமிக்க படுகின்றார்கள். ஆனால் உளவளத்துணையாளர்களுக்கான குறிப்பான பணிக்குழு ஒதுக்கீடு இல்லாததால், அவர்கள் மீளவும் கற்பித்தலுக்கு திரும்ப வேண்டியுள்ளது. அதிபர்களுக்கு போதியளவு ஆசிரியர்கள் இல்லாததே இதற்குக் காரணமாகும். எனவே இந்த ஆசிரியர்கள் முழுநேரக் கற்பித்தலுக்கு திரும்ப வேண்டியிருப்பதால், உளவளத்துணை பணிக்கு அவர்களுக்கு நேரம் ஒதுக்க முடியாமல் போகிறது.

- ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் மேற்கொண்ட நேர்காணலின் அடிப்படையில் கூறுவதானால், மேற்படி உளவளத் துணையாளர்களில் சிலர் கற்பித்தலை செய்வதுமில்லை பாடசாலை உளவளத்துணை பணியை மேற்கொள்வதுமில்லை.

- நிதி வழங்குநர்களிடமிருந்து பெறப்படும் நிதிகள் பயிற்சிக்குப் பயன்படுத்தப்படுகின்றன. அப்பயிற்சிகள் எவ்வளவு பயன்விளைவாய் இருக்கின்றன என்பது தொடர்பான கண்காணிப்போ அல்லது மதிப்பீடோ செய்யப்படுவதில்லை. அளவிடப்படக்கூடிய குறியிலக்குகளின் அல்லது நிதி ரீதியான செலவீனம் தொடர்பாக, சுயாதீனமாக கணக்காய்வு செய்யப்பட்ட, கணக்குகளின் அடிப்படையில் பயிற்சி திட்டத்தின் தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்கான மரபுவழி, சுயாதீன, உள்ளக அல்லது வெளியக பின்தொடர் நடவடிக்கைகள், இவ்வாறான திட்டங்களுக்கான பொறுப்பு கூறும் கடப்பாட்டை, அமைப்பின் உள்ளேயே பரவ விடப்பட்டிருக்கின்றது. அமைப்பின் வெளியே நிதியூட்டம் செய்யப்படும் பயிற்சி மற்றும் மற்றைய திட்டங்களை அளப்பதற்கும் அறிக்கையிடுவதற்குமான சுயாதீனமான கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு செய்யும் அலகு அமைப்பிலே இல்லை.

- ஆசிரியர்கள் தாங்கள் தெரிந்து கொண்ட அல்லது நியமிக்கப்பட்ட பாடங்களில் தகைமை பெற்றவர்களாக இல்லை.

> தொலைதூரங்களிலுள்ள பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கில ஆசிரியர்களுக்கு தட்டுப்பாடு உள்ளது. நகர்ப்புற மையங்கள் உரிய அளவுக்கு அதிகமான ஆசிரியர்களை கொண்டுள்ளன. வட மாகாணத்தின் மொத்த கற்பிக்கும் பணிக்குழு எண்ணிக்கைக்கு உரிய அளவை விட அண்ணளவாக 500 இலிருந்து 800 கூடுதலானதாகும்.

- (மணலாறு-வெலிஓயா) பகுதி உள்ளிட்ட வன்னியின் தூர இடங்களிலும் தீவுப் பகுதியிலும் வவுனியா வடக்கிலும் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் முதலியவற்றுக்கான ஆசிரியர்களில் தட்டுப்பாடு இருக்கின்ற அதேவேளை, நகர்ப்புற பாடசாலைகளில் மிகை ஆளணியினர் இருக்கின்றனர். வட மாகாண கற்பிக்கும் பணிக்குழுவினரின் மொத்த தொகை (இவர்களில் பெரும்பாலானவர் கலைப்பட்டதாரிகள்) உரிய பங்கீட்டளவை விட 800 அதிகமானதாகும்.

- ஒவ்வொரு வருடமும் ஒகஸ்ட் மாதத்தில் க.பொ.த. (உ.த.) (தரம் 13) தேசிய பரீட்சை எடுக்கும் மாணவர்கள், அந்தந்த வருடங்களின் ஜனவரி மாதத்தில் இருந்து யூலை மாதம் வரை வகுப்புகளுக்கு பிரசன்னமாக இருப்பதில்லை. இந்த வழக்கத்தை இயல்பானது என எடுத்துக்கொள்ளும் நிலைக்கு ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கல்வித்துறை நிர்வாகிகள் வந்து விட்டார்கள். மாணவர்கள், விசேடமாக யாழ்.குடாநாட்டுப் பாடசாலைகளில் உள்ளவர்கள், இந்தக் காலப்பகுதியில் பாடசாலைக்கு வருவதற்கு பதிலாக தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்கிறார்கள். 80 -100 வீத A சித்தி வீதம் பெறுவதாக பெருமையடிக்கும் பாடசாலைகளிலும் இதுதான் நிலைமையாகும். க.பொ.த. பரீட்சைகளுக்கு தகுதி பெறுவதற்கு மாணவர்கள் 80 வீதமான வகுப்புகளுக்கு சமுகம் தந்திருக்க வேண்டும் என்ற விதி இருந்த பொழுதும் இது நிகழ்கிறது. தேசிய பரீட்சைகளுக்கு விண்ணப்பம் செய்யும் காலத்தில் இருந்த விதிகள் கடைப்பிடிக்கப்படும். அதாவது பரீட்சைகளுக்கு 6 - 7 மாதங்களுக்கு முன்னாகும். உ.த. பரீட்சைக்கு விண்ணப்பம் செய்த பின், மாணவர்கள் வரவுப் பதிவேட்டில் கையொப்பம் இட்டபின், தனியார் கல்வி நிறுவனங்களில் நடக்கும் வகுப்புகளுக்குச் செல்லவென பாடசாலையை விட்டுச் சென்று விடுவார்கள். அத்தோடு உ.த. ஆசிரியர்களில் சிலர், பாடசாலை வேளைகளில், தங்கள் வகுப்புகளுக்கு கற்பிக்க வகுப்புகளில் இருப்பதில்லை. அவர்களும் பாடசாலை நேரங்களில் தனியார் கல்வி நிலையங்களுக்கு போய் விடுகிறார்கள் என ஊகம் செய்யப்பட்டுள்ளது. அவர்கள் பாடசாலையில் இருந்து உரிய முறைப்படி அனுமதி பெற்றுச் செல்கிறார்களா அல்லது நிர்வாகிகள் மறுபக்கம் பார்த்துக் கொண்டிருக்கிறார்களா என்று தெரியவில்லை. தனியார் கல்வி நிலையங்கள் பற்றி அதிகாரம் 05 இல் மேலதிகமாக ஆராயப்படும்.

- 162 பாடசாலைகள் 50 - 80 மாணவர்களைக் கொண்டிருக்கின்றன. 251பாடசாலைகள்50க்கு குறைவான மாணவர்களைக் கொண்டிருக்கின்றன. வடமாகாண (NP) மற்றும் கல்வியமைச்சு (MOE) மாணவர்களின் புள்ளி விவரங்களை தரவாரியாகவும் பாடசாலை ரீதியாகவும் கொண்டிருக்கின்றன. போரின் காரணமாக ஏற்பட்ட பல்வேறு இடப்பெயர்வுகளின் பின், பல குடும்பங்கள் போர் முடிந்து 05 வருடங்களின் பின்னர் கூட, தங்களுடைய சொந்த வாழ் விடங்களுக்கு திரும்ப முடியாமலிருக்கின்றன. இதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. உயர்பாதுகாப்பு வலயங்கள் (HSZ) பாதுகாப்பு படையினரால் (இராணுவம், கடற்படை முதலியன) நிறுவப்பட்டதும் குடிசார் மக்களின் குடியிருப்புகளுக்கு அண்மையாக புதிய படைமுகாம்கள் அமைக்கப்பட்டதும் இவற்றுள் ஒரு காரணமாகும். எனவே மக்கள் எந்தப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து சென்றார்களோ அந்த இடங்களில் உள்ள பாடசாலைகள் மற்றும் வகுப்புகளில் இணைவது குறைவாகவே இருக்கிறது. இவ்வாறான சூழ்நிலைகளில் ஆசிரியர், மாணவர் விகிதம் 1:1இலிருந்து 1:10 வரையானதா இருக்கிறது.

> **அவர்களுடைய ஆசிரியர்களில் சிலர் பாடசாலை நேரங்களில் தங்கள் வகுப்புகளுக்கு கற்பிக்க, தங்கள் வகுப்புகளில் இருப்பதில்லை. அவர்கள் பாடசாலை நேரங்களில் தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்வதாக ஊகிக்கப்படுகிறது.**

- 50-80 மாணவர்களைக் கொண்டிருக்கும் பாடசாலைகளும் 50 இற்கு குறைவான மாணவர்களைக் கொண்டிருக்கும் பாடசாலைகளும் தொலைவிலுள்ள தனிமைப்படுத்தப்பட்ட சமூகங்களில் இருப்பதால் அவற்றை மூடமுடியாது. ஆகக்கிட்டிய வகை II, 1C அல்லது 1AB பாடசாலைகள் ஒரு நாளைக்கு ஒருமுறை வரும் பேருந்தில், ஒரு மணித்தியால பிரயாண தூரத்தில் இருக்கின்றன.

- சில பாடசாலைகள் சா.த. வகுப்புகளிலும் உ.த. விஞ்ஞான மற்றும் கணித வகுப்புகளில் 01 இலிருந்து 03 வரையான மாணவர்களையே கொண்டுள்ளன. இவ்வாறான சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் இல்லை. அவ்வாறான பாடசாலைகளில் இருந்து மாணவர்களை அண்மையில் உள்ள பாடசாலைகளுக்கு மாற்றினால், கல்வி அமைப்பானது அப்பாடசாலையை உள்ளதை விடக் குறைந்த வகைக்கு மாற்றி விடுவதை தடுக்கும் விதத்தில் மாணவர்களை மாற்றிவிட

அதிபர்கள் தயக்கம் காட்டுகிறார்கள். வேறு பல விடயங்களும் மேலெழுந்துள்ளதோடு, தரவுகளால் உறுதிப்படுத்தப்பட்டும் உள்ளன. அவை இந்த அறிக்கையின் பொருத்தமான பகுதிகளில் ஆராயப்படும்.

ஒன்றிலிருந்து ஒன்று இரண்டு கிலோமீற்றர் தூரத்துக்குள் அமைந்திருக்கும் பாடசாலைகளை ஒருங்கிணைத்து விட்டு, அவைகளில் ஒன்றை நூல்நிலையம் மற்றும் பொழுதுபோக்கு வசதிகளுடன் கூடிய சனசமூகநிலையமாகப் பயன்படுத்தலாம். அனேகமான பாடசாலைகளிலே குறைந்த தொகையில் மாணவர்கள் காணப்படுவதற்கு அவைகளுக்கு அண்மையில் உள்ள 1AB பாடசாலைகளில் முழுக்கொள்ளளவுக்கும் மாணவர்கள் உள்ளதும் அவற்றால் மேலதிக மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான இடவசதிகள் இல்லாதிருப்பதுமே காரணமாகும்.

சில சந்தர்ப்பங்களிலே 1AB பாடசாலைகளின் ஒரு வகுப்புக்கு 10 மாணவர்களுக்கு குறைவாக இருக்கும் உ.த. வகுப்புகளை மூடிவிட்டு, அருகிலுள்ள இன்னொரு 1AB பாடசாலையில் இடமிருந்தால் அங்கே அந்த மாணவர்களை இணைத்து விடுவது சிறப்பானதாக இருக்கும். இதற்கான உதாரணங்கள் இருந்தாலும் கல்வி நிர்வாகிகள் இவ்வாறான பிரச்சினைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கத் தவறியிருக்கும் நிலையில், அந்த உதாரணங்கள் அவ்வகை பாடசாலைகளை அசௌகாரியத்துக்கு உள்ளாக்காமல் இருப்பதற்காக, இங்கு குறிப்பிடப்பட வில்லை. இவ்வாறான முடிவுகள் பாடசாலை ஆளணியினருக்கும் சமூகத் தலைவர்களுக்கும் விருப்பமற்றதாக இருந்தால், பாடசாலையை தரரீதியாகவும் நிதிரீதியாகவும் செயல்திறன் மிக்கதாக ஆக்கும்விதத்தில் வேறு மாற்றீடுகளை தேடவேண்டிய தேவை இருக்கும்.

பல மாணவர்கள் கலைத்துறையில் இணைந்து கொள்வதற்கான ஒரு காரணமாக, போதுமான அளவு 1AB பாடசாலைகள் இல்லாமையும், பல்வேறு காரணங்களால் இருப்பவற்றை எட்ட முடியாது இருப்பதுவும் ஒரு காரணமாகும். தர்க்க ரீதியான முடிவுகளை எடுப்பதற்கு கல்வி தரவுத் தளம், தரவுகளை வழங்க வேண்டும்.

கலைப்பிரிவில் அதிகமான மாணவர்கள் இருப்பதற்கான காரணத்தை லண்டன் பல்கலைக் கழகத்தின் கல்வியியல் நிலையத்தை சேர்ந்த ஓய்வு நிலை பேராசிரியர் அஞ்ஜெலா லிற்றிள் சுட்டிக்காட்டி இருக்கிறார். அதாவது ஆரம்ப நிலைப் பாடசாலைகளுக்கான ஆசிரியர்களாகப் பயிற்றப்படுபவர்கள், க.பொ.த.(சா.த.) இல் கலைத்துறைப் பாடங்களைக் கற்றவர்களாகும். தகுதி வாய்ந்த மட்டம் ஒன்றிலே, விஞ்ஞானம் கணிதப் பாடங்களைக் கற்பிக்கும் அளவுக்கு அவர்களுக்கு, அந்தப் பாடங்களில் அறிவோ ஆர்வமோ இல்லை. வகை II மற்றும் 1C பாடசாலைகளில் இருந்து 30 வீதமான மாணவர்களே சா.தரத்தில் தகைமை பெற்று உ.த. இல் பிரவேசிக்கிறார்கள்.

2010ம் ஆண்டில் இருந்து இந்த ஏற்பாட்டாளர், வடக்கெங்கும் இருக்கும் அனைத்து வலயங்களிலுமிருக்கும் வகை II மற்றும் 1C பாடசாலைகளுக்கு சென்றிருக்கிறார். க.பொ.த. (சா.த) இல் ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் மற்றும் மற்றைய பாடங்களில் அனேகமானவற்றைக் கற்பிப்பவர்கள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தகைமையை மட்டுமே பெற்றிருப்பதை கண்டு கொண்டிருக்கிறார். அதாவது அவர்கள் ஆரம்ப நிலை மட்டத்தில் கல்வி கற்பிப்பதற்கே பயிற்றப்பட்டிருக்கிறார்கள், சா.தர மட்டத்தில் அல்ல. விஞ்ஞானம் கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சா.த. இல் குறைவான பெறுபேறுகள் பெறப்படுவதற்கும் நகர்புற மற்றும் கிராமப்புற வகை II மற்றும் 1C பாடசாலைகளில் குறைந்த தகைமையுள்ள ஆசிரியர்கள் இருப்பதற்குமிடையே ஒரு தொடர்பு இருப்பதாக தோன்றுகிறது. இவ்வாறான பாடசாலைகளின் தேசிய பரீட்சைகளிலான ஆற்றுகை தொடர்பாக, வடமாகாண கல்வி பணிப்பகத்தில் கிடைக்கக்கூடியதாக இருக்கும் தரவுகள, இந்த அவதானிப்புக்கு ஆதரவளிப்பவையாக இருக்கின்றன. தேசிய ரீதியாக, ஆசிரியர் தகைமைகளை அட்டவணை 2.2 உம் உரு2.2 உம் காட்டுகின்றன. வடமாகாணத்தில் உள்ள ஆசிரியர்களின் தகைமை மட்டங்களை உரு2.3 காட்டுகிறது.

## ஆசிரியர் தகைமைகள் மற்றும் ஆசிரியர்களுக்கு பணியிடம் வழங்கல்

**சிறிலங்காவில் இருக்கின்ற ஆசிரியர்களின் தகைமைகள் பல்வேறு வகைகளுள் அடங்குகின்றன. அவை வருமாறு:**


- பயிற்றப்பட்டவர்கள்.
- கற்பிப்பதற்கான சான்றிதழ் அல்லது அதற்கு சமமானவை.
- கற்பித்தல் டிப்ளோமா அல்லது அதற்கு சமமானவை.
- கற்பித்தல் டிப்ளோமா – தேசிய கல்வியல் கல்லூரி. (NCE)
- கல்வி இளமாணி (B.Ed), விஞ்ஞான இளமாணி (BSc), கலை இளமாணி (BA), நிர்வாக இளமாணி (B.BA) – இவர்களை பட்டதாரி ஆசிரியர்கள் என்றும் கூறுவர்.
- பட்டப்படிப்புக்கு பிந்திய கல்வி பட்டம். (PGDE)
- கல்வி முதுமாணி (M.Ed), தத்துவமுதுமாணி (M.Phil), கல்வியிலான கலை முதுமாணி (MA), விஞ்ஞான முதுமாணி (MSc) அல்லது அதற்கு சமமானவை.
- தத்துவ கலாநிதி அல்லது அதற்கு சமமானவை.

**தேசிய மட்டத்திலே இந்த ஒவ்வொரு வகையிலும் இருக்கும் தகைமை பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கைகள் அட்டவணை 2.2 மற்றும் உரு 2.2 இல் தரப்பட்டுள்ளன.**

| Category | *Male* | % of Total Teachers | *Female* | % of Total Teachers | Total Teachers | % of Total Teachers |
|---|---|---|---|---|---|---|
| Untrained | 10,561 | 5% | 29,501 | 14% | 40,062 | 19% |
| Teaching certificate or equivalent | 24, 229 | 11% | 71,258 | 33% | 95,487 | 44% |
| Teaching diploma or equivalent | 14,219 | 7% | 26,484 | 12% | 40,703 | 19% |
| Teaching diploma: NCoE | 9,661 | 4% | 20,604 | 10% | 30,265 | 14% |
| Bed/B.Sc/BA or equivalent | 1,400 | 1% | 2,444 | 1% | 3,844 | 2% |
| Postgraduate diploma in education | 1,149 | 1% | 2,044 | 1% | 3,193 | 1% |
| MEd/MPhil/MA in Education/MSc equi | 1,024 | 0% | 1,437 | 1% | 2,461 | 1% |
| PhD or equivalent | 2 | 0% | 1 | 0% | 3 | 0% |
| **Total** | **62,245** | **29%** | **153,773** | **71%** | **216,018** | **100%** |

**Source: Based on MOE 2010 & J. Balasooriya, Teacher recruitment and mobility in Sri Lanka**

**Figure 2.2: Teacher Distribution by Highest Qualification Achieved – National**




Source: Based on MOE 2010 & J. Balasooriya, Teacher recruitment and mobility in Sri Lanka


தேசிய மட்டத்திலே, 19% ஆன ஆசிரியர்கள் கற்பித்தல் டிப்ளோமா அல்லது அதற்குச் சமமான தகைமையையும் 14%, NCOE தேசிய கல்வியல்கல்வி டிப்ளோமாவையும் 2% இளமாணிப்பட்டம் பெற்றோராயும், 01%, பட்டப்பின் படிப்பு பட்டம் பெற்றோராயும், 1% முதுமாணிப்பட்டம் பெற்றோராயும் இருப்பதால் 37% ஆன ஆசிரியர்கள் 10 ஆம், 11 ஆம் தரங்களில் கற்பிப்பதற்கு தகைமை பெற்றிருப்பதை உரு 2:2 காட்டுகின்றது. இளமாணிப்பட்டம் அல்லது அதைவிட உயர்ந்த தகைமை கொண்டிருக்கும் (04%) இனரும் தரம் 12 முதல் 13இல் கற்பிக்கத் தகைமை பெற்றிருக்கின்றார்கள். தங்களுடைய ஆக உயர்ந்த தகைமையாக கற்பித்தலுக்கான சான்றிதழ் கொண்டிருப்போர், வெற்றிடங்கள் நிரப்பப்படும் பொழுது ஆசிரியர்களுக்கு தட்டுப்பாடு இருந்தால், தரம் 10 மற்றும் 11 இல் அல்லது இவற்றிக்கு மேற்பட்ட தரங்களில் கற்பித்துக் கொண்டிருந்தாலும் அவர்கள் தொழினுட்ப ரீதியாக, அதற்கு தகுதியானவர்கள் அல்ல.

"பயிற்றப்படாத" ஆசிரியர்கள் என்பவர்கள், உ.த. சித்தி பெற்றவர்களாகும். அவர்களுக்கு எந்த கற்பிக்கும் தகைமைகளும் கிடையாது. அநேகமாக, தகைமை பெற்ற ஆசிரியர்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்ற கிராமப்புற பகுதிகளில் உள்ள ஆரம்பநிலை மற்றும் இடைநிலை பாடசாலை மட்டங்களில் இவர்கள் கற்பித்துக்கொண்டிருப்பார்கள். இவர்களின் விஞ்ஞானம் மற்றும் கணிதத்திலான அறிவு மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும். இதன் விளைவாக, ஆரம்பநிலை மற்றும் இடைநிலை பாடசாலை மாணவர்களில், விஞ்ஞானம் அல்லது கணிதத்தில் ஆர்வம் அல்லது உளச்சார்பைக் கொண்டிருப்பவர்களுக்கு கல்வி ரீதியான ஊட்டமளிக்கப்படுவதில்லை. என்பதோடு, சா.த. மற்றும் உ.தரங்களிலே இந்தப் பாடங்களை கற்க அவர்கள் முயற்சி செய்வதுமில்லை. சா.தரத்தில் அவர்கள் விஞ்ஞானம் அல்லது கணிதத்தில் அவர்கள் சிறப்பு சித்தி பெற்றாலும், அவர்கள் உ.தரத்தில் வர்த்தகம் அல்லது கலைப்பிரிவில் கற்பதையே தேர்ந்தெடுக்கின்றார்கள். பாடசாலைகளில் இருக்கும் வசதிகள் மற்றும் தகைமையுள்ள ஆசிரியர்கள் ஆகியவற்றின் அடிப் படையில் பாடசாலையின் தரங்கள் சிறிலங்காவினுள்ளேயும் மாகாணங்களுக்குள் ஓரளவுக்கும் மாறு படுகின்றதெனினும் தேசிய சராசரிகள் தீவெங்கணும் இருக்கும் பாடசாலைகள், விசேடமாக வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை பிரதிபலிப்பதாக இல்லை.

## வலய ரீதியாக மற்றும் தகைமை ரீதியாக வடக்கு மாகாணத்தின் ஆசிரியர் பகிர்வு

வடக்கு மாகாணத்திலுள்ள ஆசிரியர்கள் (42%) இனர் க.பொ.த. சாதாரணதரத்தில் கற்பிப்பதற்கு தகைமை வாய்ந்தவர்கள் என்பதை உரு 2:3 காட்டுகின்றது. இதற்கு அவர்கள் பின்வரும் தகைமைகளில் ஒன்றைக் கொண்டிருக்கின்றார்கள் என்று பொருளாகும். கற்பித்தல் டிப்ளோமா, தேசிய கல்வியியல் கல்லூரி (NCOE) கற்பித்தல் டிப்ளோமா, இளமாணிப் பட்டம், பட்டப்பின் படிப்பு டிப்ளோமா, முதுமாணி அல்லது கலாநிதிப்பட்டம் என்பவையாகும். இவ் (42%) இல், (31%) ஆனவர் களே உ.தரத்தில் கற்பிப்பதற்கு தகைமை பெற்ற "பட்டதாரிகள்" ஆகும். அவர்கள் இளமாணி அல்லது அதற்கு கூடுதலான பட்டத்தை கொண்டிருக்கிறார்கள் என்பது இதற்குப் பொருளாகும். ஆசிரியர்களில் (05%) ஆனவர்களே விஞ்ஞானம் (BSc-4%) மற்றும்


**Figure 2.3: Teacher Distribution by Highest Qualification Achieved Northern Province 2013**




Source: NP Planning Unit 2013

(BSc- Maths-1%) பாடங்களை கற்பிக்கும் தகைமை கொண்டுள்ளார்கள் என்பதனையும் உரு 2:3 காட்டுகின்றது. ஆசிரியர்கள் 50% ஆனோர் கற்பித்தல் சான்றிதழ் (TC) கொண்டிக்கின்றார்கள் என்பதனையும் உரு 2:3 காட்டுகின்றது. தவிர்க்க முடியாத விதத்திலே, TC வகை ஆசிரியர்கள் பலர் ஆரம்ப நிலைமட்டத்தில் கல்வியூட்ட பயிற்றப்பட்டிருந்தாலும் க.பொ.த.(சா.த), க.பொ.த.(உ.த.) உள்ளிட்ட இரண்டாம் நிலை மட்டத்தில் கற்பித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த அதிகாரத்தில் பின்னொரு இடத்தில் முன்வைக்கப்பட்டிருக்கும் வட மாகாண கல்வி வலயங்களிலான சா.த. பெறுபேறுகள், கிராமப்புற பாடசாலைகளிலே, விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கிலத்தை கற்பிப்பதற்கான ஆசிரியர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதைப் பிரதிபலிக்கின்றன.

**Figure 2.4: Teacher Distribution by Highest Qualification Achieved - Northern Province 2013**




Source: NP Planning Unit 2013


ஒரு பாடசாலையிலே பல்வேறு தகைமைகளோடு, பல்வேறு தர மட்டங்களிலும் கற்பிக்கும் ஆசிரியர்களின் நூற்று வீதத்தைத் தரத் தேவையான, ஒவ்வொரு ஆசிரியரும் கற்பிக்கும் வகுப்புகளின் தரவுகள் இன்னமும் தயார்செய்யப்படவில்லை. 2014 முடிவதற்கு முன்பதாகவே, மாகாண திட்டமிடல் திணைக்களத்தில் இருக்கும் தரவுத்தள பிரிவினர், ஒவ்வொரு தவணையின் ஆரம்பத்திலும் இத்தரவுகள், பாடசாலைகளால் பதிவு செய்யப்படுவதை உறுதிசெய்வார்கள்.

உரு 2.5. இருந்து உரு 2.16 வரையான உருக்கள் 12 வலயங்கள் ஒவ்வொன்றுக்கும் பகிரப்பட்டிருக்கும் ஆசிரியர்களை, அவர்களால் எட்டப்பட்ட ஆகக்கூடிய தகைமைகளின் அடிப்படையில் எடுத்துக்காட்டுகின்றன. ஆசிரியர்களின் தகைமைகளுக்கும் க.பொ.த. (சா.த), க.பொ.த. (உ.த) மட்டங்களுக்குமிடையேயான தொடர்பை உறுதிப்படுத்துவதற்கு ஒவ்வொரு வலயத்திலும் உள்ள ஒவ்வொரு பாடசாலைகளிலும், ஒவ்வொரு வகையிலுமான ஆசிரியர்கள் கற்பிக்கும் பாடங்கள் தொடர்பான தரவுகள் சேகரிக்கப்படுவது அவசியமாகும். எனினும் ஒரு வலயத்தில் கற்பிக்கும் தகைமை பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கைக்கும் வலய வாரியான தேசிய பரீட்சைகளுக்குமிடையே ஒரு தொடர்பு இருப்பதாகவே தோன்றுகிறது. 2014 இன் முடிவளவிலே, வடக்கு மாகாணமானது, ஒரு தரவுத்தள அமைப்பைக் கொண்டிருக்கும்.

இது வாராந்தம் நிகழ்கால மட்டத்துக்கு கொண்டு வரப்படும். இது மாணவர்களின் கற்கையை விருப்பத்துக்குகந்த மட்டத்துக்கு கொண்டு வந்து, ஆசிரியர்களும் கல்வி அமைப்பும் முடிந்தளவு உயர்ந்த மட்டத்திலே ஆற்றுகைகளை நிகழ்த்தும் விதத்திலே, வளங்களினுடைய ஒதுக்கீட்டை வளம்படுத்தும் விதத்திலே, பிரச்சினைகளை அடையாளம் கண்டு, தீர்வுகளை உருவாக்குவதற்கென, முடிவுகளை மேற்கொள்வோருக்கு, மாணவர் தொகையிலிருந்து நிதி ஒதுக்கீடு வரையானவை தொடர்பான அனைத்து தரவுகளையும் எட்டும் வசதியைக் கொடுக்கும்.

**Figure 2.5: Teacher Distribution by Highest Qualification Achieved Islands Zone - 2013**


தீவுப் பகுதிகள் (உரு 2.5) 23% கலைப்பட்டதாரிகள்; 5% விஞ்ஞான, கணிதப் பட்டதாரிகள், மற்றும் தேசிய கல்வியியல் கல்லூரி (டிப்ளோமா), NCE, மற்றும் ஆசிரியர் சான்றிதழ் ஆகிய மிகுதி வகையினரைக் கொண்டுள்ளது.




Source: NP, Planning Unit 2013

**Figure 2.6: Teacher Distribution by Highest Qualification Achieved Jaffna Zone - 2013**


யாழ்ப்பாணம் (உரு 2.6) 5% விஞ்ஞான, கணித, 23 % கலைப்பட்டாதாரிகள், 46% TC ஆகியோரைக் கொண்டுள்ளது.




Source: NP, Planning Unit 2013

**Figure 2.7: Teacher Distribution by Highest Qualification Achieved Kilinochchi Zone - 2013**


கிளிநொச்சி (உரு 2.7) 3% விஞ்ஞான, 17% கலை வர்த்தகப் பட்டாதாரிகள், 73% TC ஆகியோரைக் கொண்டுள்ளது.




Source: NP, Planning Unit 2013

**Figure 2.8: Teacher Distribution by Highest Qualification Achieved Mullaitivu Zone - 2013**


முல்லைத்தீவு (உரு 2.8) 3% விஞ்ஞான, கணித பட்டதாரிகளையும் 20% NCE இனரையும் கொண்டுள்ளது



Source: NP, Planning Unit 2013

**Figure 2.9: Teacher Distribution by Highest Qualification Achieved Thunukkai Zone - 2013**


துணுக்காய் (உரு 2:9) 3% விஞ்ஞான மற்றும் கணித, 9% கலைப் பட்டதாரிகள், 25% NCE இனரையும் கொண்டுள்ளது.



Source: NP, Planning Unit 2013

**Figure 2.10: Teacher Distribution by Highest Qualification Achieved Madhu Zone - 2013**


மடு (உரு 2:10) 0% கணித, 01% விஞ்ஞான, 43% கற்பித்தல் சான்றிதழ் (TC) மற்றும் 24% NCE இனரையும் கொண்டுள்ளது.



Source: NP, Planning Unit 2013

**Figure 2.11: Teacher Distribution by Highest Qualification Achieved Mannar Zone - 2013**


மன்னார் (உரு 2:11) 03% விஞ்ஞான மற்றும் கணித, 54% TC இனரையும் கொண்டுள்ளது.




Source: NP, Planning Unit 2013

**Figure 2.12: Teacher Distribution by Highest Qualification Achieved Vavuniya North Zone - 2013**


வவுனியா வடக்கு (உரு 2:12) 04% விஞ்ஞான மற்றும் கணித, 10% கலைப்பட்டதாரிகள், 0% NCE மற்றும் 76% TC இனரையும் கொண்டுள்ளது. ஆசிரியர்களின் விருப்புக்குரிய சேவைப் பிரதேசமாக இல்லை என்பது வெளிப்படையாக தெரிகிறது. உருக்கள் 2:22 இலிருந்து 2:29 வரை காட்டப்பட்டுள்ள, மோசமான தேசியப் பரீட்சைகள் பெறு பேற்றிலிருந்து இந்த உண்மை வெளிப்படையாக தெரிகின்றது.




Source: NP, Planning Unit 2013

**Figure 2.13: Teacher Distribution by Highest Qualification Achieved Vavuniya South Zone - 2013**


வவுனியா தெற்கு (2:13) 0% கணித, 03% விஞ்ஞான, 12% கலைப்பட்டதாரிகளைக் கொண்டுள்ளது.




Source: NP, Planning Unit 2013

**Figure 2.14: Teacher Distribution by Highest Qualification Achieved Thenmaradchi Zone - 2013**


தென்மராட்சி வலயத்தில் (உரு 2:14) 4% ஆசிரியர்கள் விஞ்ஞான, கணித பாட்டதாரிகளாக இருந்தாலும், 32% BA கலை, 10% வர்த்தகம், நுண்கலை மற்றும் வர்த்தக நிர்வாக பட்டதாரி களைக் கொண்டதாக, அங்கு ஒரு ஆசிரிய சமனிலை இருக்கின்றது.




Source: NP, Planning Unit 2013

**Figure 2.15: Teacher Distribution by Highest Qualification Achieved Vadamaradchi Zone - 2013**


வடமராட்சி (உரு2:15) ஆசிரியத் தகைமை ஒதுக்கீட்டின் நூறு வீதமானது தென்மராட்சியை ஒத்ததாக இருக்கின்றது.




Source: NP, Planning Unit 2013

**Figure 2.16: Teacher Distribution by Highest Qualification Achieved Valikamam Zone - 2013**

வலிகாமம் (உரு 2:16) 05% விஞ்ஞானம் மற்றும் கணிதம் மற்றும் 25% கலைப் பட்டதாரிகளையும் 09% ஏனைய பட்டதாரிகளையும் கொண்டுள்ளது.




Source: NP, Planning Unit 2013


ஒரு ஆழமான ஆய்வுக்கு பாடசாலை வாரியான தரவுகளை பகுப்பாய்வு செய்வது முக்கியமானதாகும் . உருவாக்கப்பட்டுக்கொண்டிருக்கும் தரவுத்தள அமைப்பானது, கல்விசார் முகாமைத்துவ தகவல் அமைப்பையும் (EMIS) கொண்டுள்ளது. இது தகவலறிந்த நிலையில் முடிவுகளை மேற்கொள்வதற்கு, முடிவுகளை மேற்கொள் வோருக்கு, இவ்வாறான தரவுகளை அளிக்கும்.

## பெற்ற தகைமைகளின் அடிப்படையில் ஆசிரியர் பகிர்வு - யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி வலயங்களிலுள்ள 1AB பாடசாலைகளிலிருந்து மாதிரிகள்

உருக்கள் உரு2:17 இலிருந்து 2:21 வரையானவை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு வலயங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளிலான ஆகக் கூடிய தகைமை அடிப்படையிலான ஆசிரியர் பகிர்வை காட்டுகின்றது.

**Figure 2.17: Jaffna Central College 1AB Teacher Distribution by Qualification Achieved – 2013**


ஒரு தேசிய 1AB பாடசாலையான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியானது (JCC), 17%TC, 12% விஞ்ஞான, கணித பட்டதாரிகள், 26% கலைப் பட்டதாரிகளையும் கொண்டுள்ளது. (உரு 2:17) ஆண்டு 13 மாணவர்களில் பெரும்பாலானோர், ஜனவரியிலிருந்து யூலைவரை தனியார் கல்வி நிலையங்களுக்கு பாடசாலை நேரங்களில் செல்லும் பரவலான பழக்கத்தை பொறுத்தவரை, JCC ஒன்றும் விதி விலக்கானது அல்ல. யாழ்க்குடா நாட்டிலுள்ள பெரும்பாலான பாடசாலைகளைப் பொறுத்தவரை இதுவே நிலைமையாகும்.



Source: NP, Planning Unit 2013

**Figure 2.18: Vembadi GHS 1AB Teacher Distribution by Qualification Achieved - 2013**


வேம்படி (உரு 2:18) 21% கணித மற்றும் விஞ்ஞான, 26% கலை மற்றும் 09% ஏனைய வகை பட்டதாரிகளையும் 25% TC மற்றும் 19% NCE ஆகியோரைக் கொண்டுள்ளது. தேசிய பரீட்சைகளில் சிறப்பான பெறுபேறுகளை பெறுவதற்கு, இது ஒரு நல்ல சமனிலையான சேர்மானமாகும். எனினும் அதனுடைய ஆண்டு 13 மாணவர்களில் பெரும்பாலானோர் ஜனவரியிலிருந்து யூலை வரை பாடசாலை நேரங்களிலும் சா.த. மற்றும் ஏனைய தரங்களைச் சேர்ந்தவர்கள் பாடசாலை முடிந்த பின்னரும் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்கின்றனர்.



Source: NP, Planning Unit 2013

**Figure 2.19: Jaffna Hindu 1AB Teacher Distribution by Qualification Achieved - 2013**


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி (உரு 2:19) 25% விஞ்ஞான மற்றும் கணித, 23% கலை, 12% பட்டதாரிகளையும் 26% NCE களையும் கொண்டுள்ளது.




Source: NP, Planning Unit 2013

**Figure 2.20: Kilinochchi Central 1AB Teacher Distribution by Qualification Achieved - 2013**


கிளிநொச்சி மத்திய கல்லூரியானது (உரு 2:20) 27% விஞ்ஞான, 10% கணித மற்றும் 13% கலைப் பட்ட தாரிகளைக் கொண்டுள்ளது. அத்துடன் 28% சா.த. தகைமை பெற்ற வர்களையும் கொண்டுள்ளது.




Source: NP, Planning Unit 2013

**Figure 2.21: Mullaitivu Puthukkudiyiruppu Central College 1AB Teacher Distribution by Qualification Achieved - 2013**

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி (உரு 2:21) 12% விஞ்ஞான மற்றும் கணித, 25% கலை, 14% ஏனைய வகை பட்ட தாரிகளைக் கொண்டுள்ளது. அது 28% NCE மற்றும் 18% TC ஐயும் கொண்டுள்ளது.




Source: NP, Planning Unit 2013

அடுத்த பகுதியிலே க.பொ.த.சா.த, க.பொ.த.உ.த. பரீட்சையிலே, வலயங்களினுடைய விஞ்ஞான கணிதம் மற்றும் ஆங்கிலப் பாடங்களிலான ஆற்றுகைகளின் பெறுபேறுகள் முன் வைக்கப்பட்டுள்ளன. குறைந்த ஆற்றுகை செய்திருக்கும் வலயங்களின் ஆற்றுகைத் தரவுகள் விசேடமாக சா.த. தரவுகள் கிட்டத்தட்ட ஆசிரிய தகைமைகள் மற்றும் பணியிலீடுபடுத்தலினான பகிர்வுகளுக்கு சமாந்தரமாக இருக்கின்றன. தகைமை பெற்ற ஆசிரியர்களை உயர் விழுக்காட்டளவில் கொண்டிருக்கும் 1AB பாடசாலைகளின் சா.த. மாணவர்கள் இயற்கையாகவே, வகை 1C மற்றும் வகை II பாடசாலை மாணவர்களை விட சிறப்பான ஆற்றுகை தருவார்கள். இங்கு என்ன நடக்கின்றது என்பது பற்றிய விரிவான விளக்கத்தைப்பெற, பாடசாலைகள் ரீதியான சா.த. பெறுபேறுகள் ஆழமாக ஆராயப்படவேண்டும். 1AB பாடசாலைகளைப் போல், தகைமை பெற்ற ஆசிரியர்களை கொண்டிருக்காத வகை1C மற்றும் வகை II பாடசாலையின் சா.த. மாணவர்கள், 1AB பாடசாலை மாணவர்களுடன் போட்டிபோடும் போது,


பிரதிகூலத்தைக் கொண்டிருப்பார்கள். இந்த இரண்டுவகை மாணவர்களும் ஒரே தேசிய சா.த. பரீட்சைக்கே தோற்றுகின்றார்களெனினும் அவர்களுக்கு வழங்கப்படும் வளங்கள் வேறுபட்டவையாகும். இவ்வாறான சந்தர்ப்பங்களிலே, இந்த இரண்டுவகை மாணர்களினதும் கற்பித்தல் மற்றும் பரீட்சை தளங்கள் சமமட்டத்தி லுள்ளவையாக இல்லை.

## தேசிய பரீட்சைகள் மற்றும் கிராமப்புற வலய பாடசாலைகளின் ஆற்றுகைகளை நகர்ப்புற வலயங்களுடன் ஒப்பிடுதல்

உருக்கள் 2:22, 2:23 மற்றும் 2:24 ஆகிய உருக்கள் வலயரீதியாக, முறையே விஞ்ஞானம், கணிதம் ஆங்கிலத்துக்கான 2012 க.பொ.த.(சா.த.) பெறுபேறுகளைக் காட்டுகின்றன. கிளிநொச்சி, தீவுப்பகுதி, மடு, முல்லைத்தீவு, துணுக்காய் மற்றும் வவுனியா வடக்கு ஆகியவை இந்த மூன்று பாடங்களிலும் குறைவான புள்ளிகளைப் பெற்றிருப்பதைக் கவனிக்கவும். இந்த வலயங்களுடைய கிராமப்புற பகுதிகளிலுள்ள பாடசாலைகளிலேயே விஞ்ஞான, கணித, ஆங்கில டிப்ளோமா மற்றும் பட்டதாரி ஆசிரியர்களின் தட்டுப்பாடு நிலவுகின்றது. இந்தப் பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்கள், இந்த தொலைதூரத்திலுள்ள கிராமப்புற பகுதிகளுக்கு அனுப்படுவதை விரும்புவதில்லை. அப்படி அனுப்பபட்டால், பல்வேறு வழிகளையும் பல சந்தர்ப்பங்களில் ஐயுறவுக்குரிய வழிகளையும் பயன்படுத்தி அங்கிருந்து இடமாற்றம் பெறுவதற்கு பெரு முயற்சிகளை எடுப்பார்கள்.

> தேசிய பரீட்சைகளின் வடிவம், உள்ளீடு மற்றும் குறியிலக்குகள் முதலியவை பிள்ளையினுடைய அறிவுத்திறன்கள் மற்றும் ஆக்க இயலுமைகளை அலட்சியப்படுத்திவிட்டு பொருளுணரா மனப்பாடம் செய்தலுக்கே வழிவகுக்கின்றன.

**Figure 2.22: Percentage scoring 'C' or Higher in GCE O/L Science by Zones - 2012**




Source: 2012 Result Analysis, Planning Division, Northern Province Department of Education


தரம் 05, க.பொ.த. சா.த. மற்றும் க.பொ.த.உ.த. பரீட்சைப் பெறுபேறுகள், ஆசிரியர், பாடசாலை, வலயம் மற்றும் வடமாகாணகல்வி அமைப்பினுடைய ஆற்றுகைகளை மதிப்பீடு செய்யப் பயன்படுத்தப்படுகின்றன. எனினும் இந்தப் பரீட்சைகள் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் உண்மையான இயல்புகளை வெளிப்படுத்துவதில்லை என்பதோடு அவர்களுடைய சாதனைக்கான உள்ளார்ந்த திறமைகளையும் நிர்ணயிப்பதில்லை. துர்பேறுவசமாக, தற்சமயம் பரீட்சை திணைக்களம், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய மூன்றாம் நிலை கல்வி நிலையங்கள் முதலியவற்றால் மதிக்கப்படும் ஒரே புள்ளி விபரமாக அதுவே இருக்கின்றது. எனவே பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை

அதிபர்களாலும் மதிக்கப்படுபவையாக அவை இருக்கின்றன. இது எப்படிக் கற்றுக்கொள்வது என்பதை கற்றுக்கொள்வதற்கான மாணவர்களின் உள்ளார்ந்த இயலுமையை வளப்படுத்தும் விதத்தில் வடிவமைக்கப்பட்ட எண்ணக்கரு அடிப்படையிலான கற்பித்தல் மற்றும் கற்றலுக்கு தீங்கு விளைவிப்பதாக இருக்கின்றது. எண்ணக்கரு அடிப்படையிலான கற்றலானது தாங்கள் கற்ற எண்ணக்கருக்களை, புதிய சூழ்நிலைகளுக்கு மாற்றவும் பிரயோகிக்கவும் தேவையான இயலுமையை மாணவர் களுக்குக் கொடுத்து, தற்போதைய பரீட்சைகள் முன்னெடுக்கும் குறுகிச்செல்லும் சிந்திப்புக்குப் பதிலாக் ஆக்கபூர்வமானதும் விரிவடைந்து செல்வதுமான சிந்திப்பை மேற்கொள்வதற்கு அவர்களுக்கு உதவுகின்றது. தேசிய பரீட்சைகளின் செல்லுபடியானதன்மை மற்றும் நம்பகத்தன்மைகள் அதாவது, அப்படி ஏதாவது இருந்தால், அவைபற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டாலும் அவற்றின் பெறுபேறுகள் பொதுமக்களுக்கு கிடைக்கக் கூடியதாக இல்லையெனினும் இக்காலகட்டத்தில் கிடைக்கக் கூடியதாக இருக்கும் ஓரே அளக்கக் கூடிய ஆற்றுகைச் சுட்டியாக அவையே இருக்கின்றன. பிரயோகம், பகுப்பாய்வு கருத்துக்கூட்டாக்கம், மதிப்பீடு, தனக்குள்ளேயான, தனிமனிதனுக்கிடையேயான, தசைநார் அசைவுப் புரிந்துணர்வு (Kinaesthetic) பாடத் திட்டத்திற்குப் புறம்பான செயற்பாடுகள் போன்ற மற்றைய தேர்வு முறைகளில் ஒரு மாணவனுடைய அடைவுக்கான உள்ளார்ந்த திறன்களை மதிப்பீடு செய்வதற்கானதும் இவற்றை விட முக்கியமாக, தரம் 11 அல்லது 12,13 வரை ஒரு மாணவன் கற்றுக் கொண்டிருக்கும் வேலை கொள்ளக்கூடிய திறன்களை மதிப்பீடு செய்வதற்கும் புதியதொரு தேர்வு முறை இருக்கவேண்டும்.

இரண்டு வெவ்வேறு பாடசாலைகளின் தரம் 11 மாணவர்களின் தொகுதிகள் இரண்டை வைத்து மேற்கொள்ளப்பட்ட மரபுவழியற்ற ஆய்வு ஒன்றிலே, அவர்களில் மூன்றிலொரு பங்கினரால் தசமங்கள், பின்னங்கள் தொடர்பான வினாக்களுக்கு தீர்வு காணமுடியவில்லை. ஆயிரம் ரூபாவை அவர்களுக்கு கொடுத்து ஆயிரத்துக்கு குறைவாக செலவு செய்த பின், வரும் மிகுதிப்பணத்தை இரண்டு தசமதானங்களுக்கு நிர்ணயிக்க அவர்களால் முடியவில்லை. இவர்கள் தரம் 6 இல் இருந்து 5 வருடங்கள் பாடசாலையில் படித்திருக்கிறார்கள். அதன் போது இவர்கள் ஒரு வீட்டுக்கான கொடுக்கல் வாங்கலை நடத்தக்கூடிய அளவுக்கான பணரீதியான அடிப்படை திறன்களை எந்த ஆசிரியர்களும் கற்பிக்காமலே, மேற்கூறிய எண்கணித திறன்களைக் கற்றுக் கொண்டிருக்க வேண்டும். இந்த மாணவர்களின் மற்றைய பாடங்களிலான ஆற்றுகைகள் சராசரியானவையாக இருப்பதானது, அடிப்படை கணித திறன்களைக் கற்றுக் கொள்வதற்கான இயலுமை அவர்களுக்கு இருப்பதை சுட்டிக் காட்டுவதாக இருக்கின்றது.

2014 ஏப்பிரல் 23ம் திகதி இடம்பெற்ற NESR இன் ஆலோசனை கலக்கும் பட்டறையின் போது உரையாற்றிய சிறிலங்கா கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன சா.த., உ.த. பரீட்சைகள் தொடர்பான பிரச்சினையை முனைப்புப்படுத்தி காட்டி, தெற்கின் மீது அவை ஏற்படுத்தியிருக்கும் துன்பியலான தாக்கங்களை வரைபடங்கள் மூலமாக விளக்கியிருந்தார். அண்மையான எதிர்காலத்திலே சா.த., உ.த. பரீட்சை மறுசீரமைப்புக்கு உட்படும் என எதிர்பாக்கப்படுகிறது. வடக்கிலும் மற்றைய இடங்களிலும் நிகழ்கால கல்வி அமைப்பினுடைய குவிமையமாக பிள்ளைகள் இல்லை. பரீட்சைகளே இருக்கின்றன. ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் சமூகங்கள் மீது அது கொண்டிருக்கிற விபரீதமான கட்டுப்பாடும் செல்வாக்கும் இந்த அறிக்கையின் ஆரம்பத்திலே உள்ள சுருக்க விளக்கத்திலுள்ள 'மாணவர்களின் கற்கை மற்றும் வளர்ச்சி' என்ற தலைப்பிலான உருமூலம் விளக்கப்பட்டுள்ளது. அதனுடைய தீங்கான தாக்கங்கள் எப்படியிருந்தாலும் ஆசிரியர்கள், பாடசாலைகள் மற்றும் மாணவர்களின் ஆற்றுகைகளைக் காட்டக் கூடியதும் தேசிய ரீதியாக அளக்கக்கூடியதுமான ஒரே சுட்டியாக அதுதான் இருக்கிறது. இவ்வாறான பயன்பாட்டுக்கு இதைவிடச் செல்லுபடியான புள்ளிவிவரங்கள் தேவை.

ஒவ்வொரு வலயங்கள் மற்றும் பாடசாலைகளின் கல்வி அடைவுத் தரங்கள், வடமாகாண மாகாண கல்வித் திறன்களின் தரவுத் தளத்தில் கிடைக்கக்கூடியதாக இருக்கிறது. உரு 2.22 இலிருந்து 2.24 வரையானவை க.பொ.த. (சா.த.) பரீட்சையில் 'C' அல்லது அதற்கு மேல் புள்ளிகளை பெற்ற மாணவர்களின் நூற்று வீதங்களைத் தருகின்றன.



Source: 2012 Result Analysis, Planning Division, Northern Province Department of Education


உரு 2.22 ஆனது சா.த. விஞ்ஞான பரீட்சையில் 'C' அல்லது அதற்கு கூடுதலாக பெற்ற நூற்று வீதங்களை காட்டுகிறது. விஞ்ஞானத்தில் 40 வீதத்துக்கு மேலாக ஆற்றுகை தந்த வவுனியா தெற்கு, பிரதானமாக சிங்கள ஊடக பாடசாலைகளைக் கொண்டுள்ளது. யாழ்ப்பாணம், வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி ஆகியவை 30 இலிருந்து 38 வீத மட்டத்தில் ஆற்றுகை செய்கின்றன. கிளிநொச்சி, தீவுப்பகுதி, மடு, முல்லைத்தீவு, துணுக்காய் மற்றும் வவுனியா வடக்கு ஆகிய எல்லாமே 20 வீதத்துக்கு கீழே உள்ளன. குறைந்த மட்டங்களில் ஆற்றுகை தரும் ஒவ்வொரு வலயங்களின் உள்ளேயும், விசேடமாக யாழ்.குடாநாட்டில், குறைந்த பொருண்மிய தகுநிலை சமூகங்களில் உள்ள பாடசாலைகள் உள்ளன. இந்த சமூகங்கள், குறைந்த வருமானம் பெறும் என்று கருதப்படும் சமூகங்களையும் உள்ளடக்குகின்றன. இந்த சமூகங்கள் 10-16 வீத மட்டத்திலேயே ஆற்றுகை செய்கின்றன. இந்த மட்டங்கள் இவ்வாறு இருப்பதற்கு, பாகுபாடு காட்டும் வரலாறும் இந்தச் சமூகங்களை புறமொதுக்கும் வரலாறுமே பெருமளவில் காரணமாக இருக்கின்றன. சாதி அடிப்படையில் பாகுபாடு காட்டுதல் என்பது வடபுல சமூகத்திலே இப்போதும் இருந்து கொண்டிருக்கிறது. இதில் கல்வி அமைப்பிலே ஆசிரிய வளங்களை ஒதுக்கீடு செய்வதும் அடங்குகிறது.

வவுனியா தெற்கைத் தவிர்த்து, கணித பாடத்தில் பெறப்பட்ட பெறுபேறுகள் (உரு 2.24) கிட்டத்தட்ட, விஞ்ஞான பாடத்தில் பெறப்பட்டவற்றை ஒத்தவையாக இருக்கின்றன. கணிதத்தில் கிளிநொச்சி, தீவுப்பகுதி, மடு, துணுக்காய் மற்றும் வவுனியாவடக்கு ஆகியவற்றின் மாணவர்களில் 20 வீதத்துக்கு குறைவானவர்களே 'C' அல்லது அதற்கு கூடிய பெறுபேற்றை பெற்றிருக்கிறார்கள். வடக்கு மாகாணத்தில், ஆகக் குறைந்த 14.7 வீத பெறுபேற்றை வவுனியா வடக்கு பெற்றுள்ளது. இந்த வலயங்களினுடைய ஆசிரியர்களுடைய தகைமைகள் யாழ்ப்பாணம் மற்றும் வடமராட்சி வலயங்களை விடக் குறைவானவையாகும்.

வவுனியா தெற்கு சிங்கள-மொழிவழி பாடசாலைகள் ஏனைய வலயங்களோடு ஒப்பிடும்போது, ஆங்கிலப்பாடங்களில் (உரு 2.24) சிறப்பான பெறுபேறுகளை பெற்றுள்ளன. மற்றைய வலயங்களின் மாணவர்கள், வாரம் 5 மணித்தியாலங்கள்படி ஆறு வருடங்களாக ஆங்கிலத்தை கற்றிருந்தும் இவ்வாறான பெறுபேறுகளை பெற்றிருப்பது அக்கறை காட்டப்பட வேண்டிய ஒரு விடயமாகும். வடக்கிலும் தீவெங்கிலும் பல தசாப்தங்களாக வருடாவருடம் இதுவே நிகழ்ந்து வருகிறது. இதற்கான காரணங்கள் அடையாளம் காணப்பட்டு, ஆங்கிலத்தை பேசுதல், வாசித்தல் மற்றும் எழுதுதல் திறன்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டத்துக்கு மேம்பாடு செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தால், அவை விரும்பப்பட்ட பெறுபேறுகளை தந்திருக்கும். பிள்ளைகளினுடைய ஆங்கிலத்தை வாசித்தல், பேசுதல், எழுதுதல் திறன்களை மேம்படுத்தும் விதத்தில், பாடத்திட்டங்கள், கற்பித்தல் முறைகள், ஆசிரியர்களின் தகுதிகள் முதலியவற்றை மேம்படுத்த பெரு முயற்சி ஒன்று தேவை. இதுவரை இருக்கின்ற நிலைமை ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல.

## ஆசிரியர் தகைமைகளை ஈடுபடுத்தல்கள் மற்றும் க.பொ.த(சா.த.) உ.த. பரீட்சைகளில் பாடசாலையின் ஆற்றுகைக்கிடையேயான தொடர்பு

Figure 2.24:Percentage scoring 'C' or Higher in GCE O/L English by Zones - 2012




Source: 2012 Result Analysis, Planning Division, Northern Province Department of Education

ஆசிரியர் தகைமைகள், ஈடுபடுத்தல்கள் மற்றும் க.பொ.த.(சா.த.) மற்றும் உ.த. பரீட்சைகளில் ஒரு பாடசாலையின் ஆற்றுகைக்கும் இடையேயான தொடர்பு குறித்த தற்போதுள்ள நிலைமையை மேம்படுத்தவென ஒரு விரிவான ஆய்வும் பெற்றோர் மற்றும் நிர்வாகிகளுடன் ஒரு ஆலோசனை கலத்தலும் மேற்கொள்ளப்பட வேண்டும். மேற்படி ஆய்வானது ஒவ்வொரு பாடசாலையினுடையவும் அமைவிடத்தை அடையாளம் கண்டு பெயர் குறிக்கவும் ஒவ்வொரு வலயத்திலும் இருக்கும் பாடசாலைகளுக்கு இடையேயான தூரங்களை நிர்ணயிக்கவுமென நிலஅளவைத் திணைக்களத்தால் அறிமுகப்படுத்தப் பட்டிருக்கும் GIS அமைப்பையும் பயன்படுத்த வேண்டும். இவ்வாறான தகவல்கள், வலயரீதியான பாடசாலை மாவட்ட எல்லைகளை அதிக தர்க்க பூர்வமாக வகுப்பதற்கு வழிவகுத்து, ஆசிரியர்களை ஈடுபடுத்துவதில் உதவி செய்யும் என்பதுடன், குறைந்த இணைவுகளை, விசேடமாக, தரம் 12 மற்றும் 13 இல், பாடசாலைகளினுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் உதவும். மாகாண பணிப்பகத்தின் திட்டமிடல் மற்றும் தரவுத்தள பிரிவானது, தரவுகளை சேகரித்து முடிவுகளை மேற்கொள்வோருக்கு வழங்குவதில் ஏற்கனவே ஈடுபட்டிருக்கிறது.


**தகைமைபெற்ற ஆசிரியாகளை பணியில் ஈடுபடுத்துவதற்கும் சா.த. பெறுபேறுகளுக்கிடையே மிகவலுவான நேர் தொடர்பு இருப்பதாக தோன்றுகிறது அதாவது சா.தரத்தில் கற்பிக்கம் தகைமைபெற்ற ஆசிரியர்களின் நூற்றுவீதம் அதிகமாக இருக்கும் போது பெறுபேறுகளும் சிறப்பானவையாக இருக்கின்றன.**

முந்திய பக்கங்களில் ஒவ்வொரு வலயத்துக்குமென உரு 2.05 இலிருந்து 2.16 வரையானவற்றில் காட்டப்பட்டிருக்கும் ஆசிரியர் சான்றிதழிலிருந்து முதுமாணி பட்டம் வரையான ஆசிரியர் தகைமைகளுக்கும் உரு 2.22 இலிருந்து 2.24 வரை காட்டப்பட்டுள்ள க.பொ.த. (சா.த.) பெறுபேறுகளுக்குமிடையே ஒரு தொடர்பு இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. வியப் பூட்டாத விதத்திலே தகைமைபெற்ற ஆசிரியாகளை பணியில் ஈடுபடுத்துவதற்கும் சா.த. பெறுபேறுகளுக்கிடையே மிக வலுவான நேர் தொடர்பு இருப்பதாக தோன்றுகிறது அதாவது சா.தரத்தில் கற்பிக்கம் தகைமைபெற்ற ஆசிரியர்களின் நூற்றுவீதம் அதிகமாக இருக்கும் போது பெறுபேறுகளும் சிறப்பானவையாக இருக்கின்றன. வருடம் முழுவதும் ஒரு வாரத்துக்கு 10—20 மணித்தியாலங்களுக்கு மாணவர்கள் செல்லும் தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள், ஏற்படுத்தும் தாக்கங்கள் குறித்து இவ்வாறான ஒரு அவதானிப்பை கூறும் நிலை இல்லை. ஒவ்வொரு பாடசாலைகளிலுமான ஆசிரியர் தகைமைகள் மற்றும் தேசிய பரீட்சைகளிலான ஆற்றுகையின் அடிப்படையில் பாடசாலை மட்டத்திலான ஒரு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

# பல்கலைகழகத்திற்க்கு அனுமதி பெறும் வழியாக மாணவரின் தெரிவாக கலைப்பிரிவு

வகைIII, வகைII, 1C பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவுகள், அநேகமான சந்தர்ப்பங் களிலே விஞ்ஞான, கணித பாடங்களை கற்பிப்பதற்கு குறிப்பான பயிற்சிகளை பெறாத ஆசிரியர்களைக் கொண்டிருக் கின்றன. கிராமப்புற பகுதிகளில் உள்ள 1AB பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவுகளிலும் இதே நிலைமையே நிலவுகிறது. மாணவர்கள் இந்தப் பாடங்களை கற்பிக்க தகைமை பெற்ற ஆசிரியர்களை பெற்றிருக்கவில்லை மற்றும் சா.த. அல்லது உ.தரத்தில் தகைமை பெற்ற ஆசிரியர் கற்பிப்பதை அவர்கள் காண்ப தில்லை என்ற உண்மையின் காரணமாக, பல்கலைக்கழக கல்விக்கும் அரச வேலை களுக்குமான அதிக நம்பகத் தன்மையுள்ள பாதையாக கருதி கலைப் பிரிவை நோக்கி ஈர்க்கப்படுகிறார்கள். (உரு 2.25) மற்றும் உரு 2.26 ஐப் பார்க்கவும்) நாடு முழுவதும் உள்ள மாணவர்களும் இதையே செய்வதால், கலைப்பிரிவு உ.தரத்தில் சித்தியெய்தும் மாணவர்கள் பல்கலைகழகத்திற்கு பிரவேசிப்பதற்கான வெட்டுப் புள்ளிகள் முன்னரைவிட கூடுதலானவையாக இருப்பதை கண்டுகொள்கிறார்கள்.


Figure 2.25: % of students Qualified from the North in the four GCE A/L streams




Source: 2012 Result Analysis, Planning Division, Northern Provincial Department of Education.

விஞ்ஞானத்தையும் கணிதத்தையும் கற்கும் வாய்ப்பு அவர்களிடமிருந்து பறிக்கப் படுவதோடு, அவர்களுடைய கற்றலுக்கான உள்ளார்ந்த திறனும் வீணாக்கப்படுகிறது. இந்த நிலைமையானது, தகுதிவாய்ந்த கணித மற்றும் விஞ்ஞான பாட ஆசிரியர்களை நியமிப்பதன் மூலமும் அவர்களுக்கு மேம்படுத்தப்பட்ட விஞ்ஞான கற்பித்தல் உபகரணங்கள் வழங்கப்படுவதன் மூலமும் சீர்செய்யப்பட வேண்டும்.

Figure 2.26: % Qualified for University in Arts Stream – 2012, Zone-wise, Northern Province





Source: 2012 Result Analysis, Planning Division, Northern Provincial Department of Education.

கீழேயுள்ள உரு 2.26 ஆனது, பல்வேறு வலயங்களிலுமிருந்து கலைப்பிரிவுக்கு தகுதி பெற்ற மாணவர்கள் சதவீதத்தை காட்டு கிறது. சா.த. விஞ்ஞானத்தில் தாழ்ந்த தரங்களை பெற்ற தீவுப்பகுதி, கிளிநொச்சி, மடு மற்றும் முல்லைத்தீவு ஆகியவை கலைப் பிரிவில் யாழ்பாணத்தை விட சிறந்த பெறுபேறுகளை பெற்றி ருப்பதை அது காட்டுகிறது. மேலே குறிப்பிடப் பட்டவற்றில் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய வலயங்கள், அவை இருக்கும் தொலை தூரங்கள் காரணமாக, தகைமைபெற்ற விஞ்ஞான மற்றும் கணித ஆசிரியர்களை நியமிப்பதில் பிரச்சினைகளை எதிர்கொண்டதோடு, இந்த வலயங்களிலே ஆரம்ப வகுப்பு ஆசிரியர்கள் குறைந்தளவு பயிற்சியுடன் விஞ்ஞான

பாடங்களைக் கற்பிக்கிறார்கள். உறுதியுடனும் முடிவேற்படுத்தும் விதத்திலும் செயற்பட்டு தகைமை வாய்ந்த கணித மற்றும் விஞ்ஞான ஆசிரியர்களை நியமிப்பதில் நிர்வாகிகளுக்கு உள்ள இயலாமைகாரணமாக விஞ்ஞானம் மற்றும் கணித பாடங்களைக் கற்பதற்கான வாய்ப்பு மாணவர்களிடமிருந்து பறிக்கப்படுகிறது. இப்படி செயற்படுவதற்குப் பதிலாக கிராமப்புற பகுதிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களை நகர்ப்பகுதிகளுக்கு இடமாற்றம் செய்யும் படியான உயர் அதிகாரிகள் மற்றும் அரசியல் வாதிகளின் அழுத்தங்களுக்கு பணிந்து விடுகிறார்கள். தற்போது வடக்கில் நிலவுகின்ற சூழ் நிலைகளின் கீழ் மாணவர்கள் எந்த உள்ளார்ந்த திறன்களுடன் பிறந்தார்களோ அந்த திறன்களை உச்ச மட்டத்துக்கு கொண்டு செல்வதற்கான சமவாய்ப்பை மாணவர்களுக்கு கொடுக்க கல்வியமைப்பு தவறிவிட்டது


Figure 2.27: % Qualified for University in Math Stream – 2012, Zone-wise, Northern Province




Source: 2012 Result Analysis, Planning Division, Northern Provincial Department of Education.

உருக்கள் 2:27 உம் 2:28 உம் கணிதத்திலும் உயிரியல் விஞ்ஞானத்திலும் பெறப்பட்ட பெறுபேறுகள் அந்தந்த வலயங்களிலிருந்து பெறப்பட்ட க.பொ.த. (சா.த.) விஞ்ஞான மற்றும் கணித பாட பெறுபேறுகளை ஒத்தவையாக இருப்பதை எடுத்துக் காட்டுகின்றன. ஆரம்பநிலை மற்றும் இரண்டாம் நிலைகளில் தகைமை பெற்ற விஞ்ஞான கணித ஆசிரியர் களுக்கு தட்டுப்பாடு நிலவுவதன் காரணமாக கணித மற்றும் விஞ்ஞான பிரிவுகளுக்கு குறைந்த எண்ணிக்கையான மாணவர்களே பிரவேசிக்கின்றனர். இது இந்த மாணவர்கள் தங்களுடைய புவியியல் ரீதியான அமைவிடத்தின் காரணமாக. அதாவது, அவர்கள் கிராமப்புற மற்றும் கரையோர பகுதிகளில் வாழ்கிறார்கள் என்பதால் அவர்கள் பாகுபாட்டுக்கு உட்படுத்தப் படுகிறார்கள் என்பதை மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகிறது. எல்லாப் பிள்ளைகளும் தங்கள் உள்ளார்ந்த திறன்களை உச்சமட்டத்துக்கு கொண்டு செல்வதற்கான சமமான வாய்ப்பைக் கொடுப்பதானால், விஞ்ஞான, கணித மற்றும் ஆங்கில ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதிலும் ஈடுபடுத்தலிலும் பெரிய மாற்றம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். கிராமப்புற பாடசாலைகள், கற்றலைப் பொறுத்த வரை 'நலத்துக்கு மிகவும் ஒவ் வாதவைகள்' என்று கருதப்படுகின்றவையாகும்.

Figure 2.28: % Qualified for University in Bio Stream – 2012, Zone-wise, Northern Province




Source: 2012 Result Analysis, Planning Division, Northern Provincial Department of Education.


வர்த்தக துறை பெறுபேறுகள் (உரு 2.29) மன்னாரைத் தவிர்த்து, பல்கலைக்கழகத்துக்கு தகைமை பெற்றவர்களின் பெறுபேறுகளை பிரதிபலிப்பவையாக உள்ளன.

**பாடசாலை அடிப்படையிலான ஆசிரியர் ஆட்சேர்ப்பும் பிரச்சினைகளை எதிர் நோக்கியுள்ளது ஆசிரியர் தங்களுக்கு இடமாற்றம் பெறுவதற்கு அரசியல் வாதிகளை அல்லது செல்வாக்குள்ளவர்களை பயன்படுத்துவதே இதற்கு காரணமாகும். கண்டிப்பான நடைமுறைப்படுத்தல் தேவை.**

உருக்கள் 2:27 இலிருந்து 2:29 வரையானவற்றில் உள்ள பெறுபேறு களிலிருந்து, வன்னி மற்றும் தீவக வலயங்கள் மற்ற வலயங்களோடு ஒப்பிடும் போது எல்லா வகை ஆசிரியர்களிலுமான தட்டுப்பாடு, ஆசிரியர்கள் குறைபாடு, விசேடமாக உ.த. பரீட்சைகளுக்கு கணிதம், விஞ்ஞானம் மற்றும் வர்த்தகத்தை கற்பிப்பதற்கான விசேடமாக பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் குறைபாடு போன்றவற்றால், மற்ற வலயங்களைவிட அதிக எதிர்மறை பாதிப்புக்கு உட்பட்டிருப்பது தெரியவருகிறது. எனினும் கலைப்பிரிவில் மற்றவற்றை ஒத்த பெறுபேற்றை அவை பெற்றிருக்கின்றன. பாடசாலைகளை அடிப்படையாக வைத்து ஆசிரியர்களை ஆட்சேர்க்கும் கொள்கை 2010 ஆரம்பிக்கப்பட்டதெனினும் நகர்ப்புறங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் தங்களுக்கு கிடைக்கக்கூடியதாக இருக்கும் அனைத்து வழிகளையும் ஊரக பாடசாலைகளிலிருந்து நகர்ப்புற பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெறபயன்படுத்துவார்கள்.

ஆசிரியர் தட்டுப்பாட்டை, விசேடமாக தகைமை பெற்ற விஞ்ஞான, கணித ஆசிரியர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு கடந்த காலங்களில் நியாயமான திட்டங்கள் முன் மொழியப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்ட பொழுதெல்லாம் கண்டிப்பான முறையில் அவற்றை நடைமுறைப்படுத்தாததால் அல்லது அரசியல்வாதிகளின் அல்லது உயர் அதிகாரிகளின் தலையீட்டினால் அல்லது அவை இரண்டினாலும் அவை தோல்வி கண்டிருக்கின்றன.

Figure 2.29: % Qualified for University in Commerce – 2012, Zone-wise, Northern Province




Source: 2012 Result Analysis, Planning Division, Northern Provincial Department of Education.

இவ்வாறான நடத்தைகளுக்கு ஒழுங்கு நடவடிக்கை போன்ற பிரதிபலன்கள் வழங்கப்படா விட்டால் - இது வடக்கிலான கல்வி அமைப்பில் இல்லை - சிறிது சிறிதாக உருவாக்கப்படுகிற விதிகள் மற்றும் புதிய அணுகுமுறைகள் பயன்தரப் போவதில்லை. ஆசிரிய நியமனங்கள் மற்றும் இடமாற்றங்களைப் பொறுத்தவரை, கல்வி அமைப்பானது ஒரு விரிவான சீர்திருத்தத்துக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

## அதிக இணைவு எண்ணிக்கையை காட்ட இலக்கங்களை வைத்து ஒரு விளையாட்டு

அக்கறை கொள்ள வேண்டிய ஒரு விடயமாக சா.தரத்தில் ஒரு பாடத்துக்கு அதிகமான பாடங்களில் சித்தி பெறத் தவறுபவர்கள், பாடசாலை ஊடாகவே இரண்டாம் முறை பரீட்சைக்கு தோற்றமுடியும் என இருக்கிறது. இது பாராட்டப்பட வேண்டிய ஒரு விடயம் எனினும் அவர்கள் சா.த. வகுப்புகளில் பிரசன்னமாயிருக்கும் வாய்ப்பு அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை.

ஆனால் இவர்களுடைய பெயர்கள் தொடர்ந்தும் பாடசாலை பதிவேட்டில் பேணப்படும். மேலதிக ஆசிரியர்களை பெறுதல், இணைவு மட்ட அடிப்படையிலான நன்மை பெறுதல் முதலியவற்றுக்காகவே இப்படிச் செய்வதாக இருக்கலாம். உ.த. பரீட்சையில் சித்தி பெறத்தவறிய அதே பாடசாலையிலிருந்து இரண்டாம் முறை தோற்றுபவர்களை பொறுத்தமட்டிலும் இதுதான் நிலைமையாகும். அவர்களுக்கும் வகுப்புக்களுக்கு செல்லும் வாய்ப்பு வழங்கப்படுவதில்லையெனினும் அவர்களுடைய பெயர்கள் பதிவேட்டிலிருக்கும். பாடசாலைக்குப் பதிலாக, தங்கள் பெற்றோருக்கு வசதியிருந்தால், அடுத்த ஒரு வருடத்திற்கு தனியார் கல்வி நிலையங்களுக்குப் போவார்கள். இரண்டாம் முறை தோற்றும் போது, மாணவன் உ.த. இல் சித்தி பெற்றால் அதில் தனியார் கல்வி நிலையத்தின் பாரிய பங்களிப்பு இருந்தாலும், பாடசாலையே அதற்கான பெயரைப் பெற்றுக்கொள்ளும்.

# கிராமப்புற பாடசாலைகள் மற்றும் ஆசிரிய ஈடுபடுத்தல்கள்

ஆசிரியர்கள் தரவும் பரீட்சை பெறுபேறுகளும், தொலைதூரக் கிராமங்களில் உள்ளவையும் நகர்ப்புற மையங்களிலிருந்து தூர இருப்பவையுமான பாடசாலைப் பிள்ளைகளின் ஆற்றுகைகள் குறைந்த மட்டத்திலிருப்பதற்கு, தகைமை பெற்ற ஆசிரியர்கள் தட்டுப்பாடாக இருப்பதும் அல்லது மோசமான கற்பித்தலுமே காரணமாக இருக்கின்றன என்று கண்டுகொள்ளப்பட்டிருப்பதற்கு ஆதரவானவையாகவே இருக்கின்றன. தொலை தூரத்திலிருக்கும் பாடசாலைகளில் சேவையாற்றுவதென்பது ஆசிரியர்களில் அனேகமானவர்களுக்கு விருப்பத்துக்குரியதாக இல்லை. தங்களுடைய சொந்த இடங்களில் இருக்கும் அல்லது தங்கள் வீடுகளிலிருந்து குறுகிய பயண தூரங்களில் இருக்கும் பாடசாலைகளுக்கு நியமிக்கப்படுவதையே ஆசிரியர்கள் விரும்புகிறார்கள். தொலைதூரப் பாடசாலைகளின் பணிக்குழு எண்ணிக்கைகள் நிரப்பப்படுவதில்லை. சா.த. மற்றும் உ.த. மட்டங்களில், குறிப்பிட்ட பாடங்களைக் கற்பிக்க, கல்வி ரீதியாக தகுதியற்ற ஆசிரியர்கள் நிரப்பப்படுகின்றனர்.

தங்கள் முதல் நியமனத்துக்கென இவ்வாறான பாடசாலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் அல்லது உரிமைக்கட்டளை வழி இடமாற்றங்கள் மூலம் அனுப்பப்படுபவர்கள், அநேகமான சந்தர்ப்பங்களிலே, தங்கள் சொந்த வாழ்விடங்களுக்கு அண்மையாக இருக்கும் நகர்ப்புற பாடசாலைகளுக்கு திரும்பும் விதத்தில், சுற்றறிக்கைகளில் இருக்கும் ஓட்டைகளைக் கண்டு கொள்வார்கள் அல்லது 'உறவினருக்குச் சலுகை வழங்கல்' அல்லது ஏனையவழிகளை நாடுவார்கள். தொலை தூரங்களிலிருக்கும் பாடசாலைகளிலிருந்து வெளியே இடமாற்றம் பெற முடியாதவர்கள், குறித்த பகுதிக்கு திங்கட்கிழமைகளில் சென்று வெள்ளிக்கிழமைகளில் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பும் போக்கைக் கைக்கொள்கிறார்கள். இதன் விளைவாக, அவர்கள் பயணம் செய்யும் ஒவ்வொரு நாட்களிலுமான பாடசாலை நாட்களில் அரைவாசியைத் தவறவிடுகிறார்கள். இவர்களின் அனேகமானவர்கள், தாங்கள் தங்கள் வீடுகளுக்கு அண்மையாக உள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெறப்போகும் நாட்களை எண்ணிக்கொண்டிருப்பார்கள். விஞ்ஞான, கணிதம் மற்றும் ஆங்கிலப் பாடங்களுக்கான ஆசிரியர்களுக்கு தட்டுப்பாடு உள்ள பாடசாலைகளுக்கு செல்லத் தயாராக இருக்கும் அவ்வகை ஆசிரியர்களுக்கு, கல்வியமைப்பானது ஊக்குவிப்புக்களை வழங்கவேண்டியது முக்கியமாகும்.

இவ்வாறான ஊக்குவிப்புக்கள் பட்டதாரிகளும் கல்வியியல் கல்லூரி டிப்ளோமாதாரர்களும் தனியார் கல்வி நிலையங்களில் சம்பாதிக்கும் பணரீதியான நன்மைகளை விட கூடுதலானதாக இருக்குமா என்பது ஆராயப்படவேண்டிய ஒரு விடயமாகும். யாழ். குடாநாட்டிலேயே மாணவர்களாலும் தனியார் கல்வி நிலையங்களாலும் திறமையானவர்கள் எனக் கருதப்படும் பட்டதாரி ஆசிரியர்கள், தனியார் நிலையங்கள் பெறும் கட்டணங்களில் 2/3 (66%)வரை சம்பாதிப்பதாகக் கூறப்படுகின்றது. இது குறித்து மேலதிகமான விடயங்கள் தனியார்கல்வி நிலையங்கள் மீது கவனம் செலுத்தும் அதிகாரம் 05இல் ஆராயப்பட்டுள்ளன. வவுனியா வடக்கிலுள்ள ஒரு 1C பாடசாலையின் 06 இலிருந்து 11 வரையான தரங்களுக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு ஆசிரியர் மட்டுமே கற்பிக்கின்றார். அவர் வெள்ளிக்கிழமைகளில் நெடுங்கேணிக்கு புறப்பட்டு முள்ளியவளையூடாக யாழ்ப்பாணம் போய் திங்கட்கிழமை திரும்பிவருவார். இந்த ஏற்பாட்டாளர் 2011 இல் பி.ப. 01.00 மணியளவில் இதே பாடசாலைக்கு போனபொழுது அங்கே அதிபரும் இரு ஆசிரியர்கள் மட்டுமே பாடசாலையில் இருந்தார்கள். அவர்கள் நெடுங்கேணியைச் சேர்ந்தவர்கள். மற்றைய ஆசிரியர்கள் வவுனியாவிலுள்ள தங்கள் வீடுகளுக்குப் போய்விட்டார்கள். இந்தப் பாடசாலைக்கு அந்த வேளையில் மின்சாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கில ஆசிரியர்கள் அவ்வாறான பாடங்கள் தட்டுப்பாடாக உள்ள இடங்களுக்கு அனுப்பப்படுவதை நிர்வாகிகள் உறுதி செய்ய வேண்டும். மிகை எண்ணிக்கையில் ஆசிரியர்களை கொண்டிருக்கும் நகர்ப்புற பாடசாலைகள் அல்லது 01இலிருந்து 05 வரையான மாணவர்களைக் கொண்ட வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களை, மேற்படி தட்டுப்பாடுகளை நீக்கும் விதத்தில் இடமாற்றம் செய்யலாம். வலய அடிப்படையான ஆசிரிய நியமனங்கள் பற்றி எவ்வளவு விரைவாக வலயமட்டத்திலே முடிவுகள் எடுக்கப்படுகின்றனவோ அவ்வளவு விரைவாக கிராமப்புற பாடசாலைகளிலுள்ள ஆசிரியத் தட்டுப்பாட்டு பிரச்சினையைத் தீர்க்க முடியும். இவ்வாறான முடிவுகளை, 30 வருட உள்நாட்டுப் போரின் போதும் அதற்கு முன்பும் பின்பும் செயலாளர் மற்றும் மாகாணப் பணிப்பாளர் மட்டத்திலே எடுக்க முடியாமல் இருந்தது.

# உடல்ரீதியான தண்டனையும் உளவளத் துணையும்

**1940கள் முற்கூறுகளிலே புனித பத்திரிசியார் கல்லூரி அதிபரான அருட்திரு.லோங் அடிகளார் தனது பாடசாலையிலும் வேறு பாடசாலைகளிலும் உடல்ரீதியான தண்டனையை இல்லாதொழிப்பதற்கென பிரம்புகளை எரிக்கும் நிகழ்வை நடத்தினார்.**

உடல்ரீதியான தண்டனைகள் (கையால் அல்லது தடியால் வழங்கப்படுபவை) அனைத்து பாடசாலைகளிலும் தொற்று நோய்போல் பரவியுள்ளன. உண்மையைச் சொல்லப் போனால் நாம் கலந்துரையாடிய அதிபர்கள், ஆசிரியர்கள் அல்லது வலய பணிப்பாளர்களில் எவராலும் ஆசிரியர்களால் வகுப்பறையில் உடல்ரீதியான தண்டனை வழங்கப்படாத பாடசாலை ஒன்றைக்கூட குறிப்பிட முடியவில்லை. 180 மாணவர்களின் மரபு வழியற்ற அந்தரங்கமான எழுத்துமூல சமர்ப்பிப்புகள் அந்த மாணவர்கள் படித்த அல்லது சென்ற 02ம் நிலை பாடசாலைகளின் ஒவ்வொரு வகுப்பறையிலும் ஒவ்வொரு மாதமும் கையால் அல்லது தடி / பிரம்பால் அண்ணளவாக 30 தண்டனை வழங்குதல்கள் இடம் பெற்றிருப்பதைக் காட்டுகின்றன. ஒக்ரோபர் நவம்பர் மாதங்களில் இப்படியான தண்டனைகள் அதிகரிப்பது ஆர்வமூட்டுவதாக இருக்கிறது. இது க.பொ.த. சா.த. பரீட்சைகளின் அழுத்தத்தின் காரணமாக இருக்கலாம்.

வியப்பூட்டும் விதத்திலே நேர்காணல் செய்யப்பட்ட பெற்றோர் மற்றும் அதிபர்களில் பலரும் உடல்ரீதியான தண்டனைகளை ஏற்பவர்களாக இருந்தார்கள். ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் அதிபர்கள் ஆகியோரில் பெரும்பாலானோர், உடல்ரீதியான தண்டனைகள் இல்லாமல் ஆசிரியர்களால் வகுப்பைக் கட்டுப்படுத்த முடியாது என்ற கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரியைகள் ஆண் மாணவர்களை தண்டிக்கும் போது தடியைப் பயன்படுத்துகிறார்கள், கையை அல்ல. ஆண் ஆசிரியர்கள் மாணவிகளை தண்டிக்கும் போதும் இதே வழக்கத்தையே கைக்கொள்கிறார்கள். மாணவர் தலைவர்களுக்கு கூட உடல்ரீதியான தண்டனை வழங்க அனுமதி வழங்கப்படுகிறது. பல சந்தர்ப்பங்களில் செய்தி ஊடகங்கள் இவற்றை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. இது சிறிலங்கா முழுவதுமே பரவலாக நிகழ்வதாக இருக்கிறது. இங்கே எழுகின்ற கேள்வி என்னவெனில், 1970 களுக்கு முன்னதாக அதிபர்கள் உப-அதிபர்களால் மட்டும் நிகழ்த்தப்பட்ட இந்த தண்டனைகள் தற்போது இந்த அளவுக்கு பரவலாக இருப்பதற்கு, முரண்பாடுகளினதும் 30 வருடகால போரினதும் தாக்கங்கள் தான் காரணமா? இவற்றை அடையாளம் காண்பதற்கு ஆய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறான வழக்கங்கள். இலங்கை/சிறிலங்காவில் 1927 ஆம் ஆண்டில் இருந்து சட்டவிரோதமாக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான சுற்றறிக்கைகள் 1995 ,1996, 2005 ஆகிய ஆண்டுகளில் மீள அனுப்பப்பட்டன. உடல்ரீதியான தண்டனைகள் மற்றும் பிள்ளைகளுடைய உரிமைகள் மீறப்படுதல் முதலியவற்றுக்கு எதிராக தற்போதுள்ள சட்டங்களை நடைமுறைப்படுத்தவும் மேலதிக சட்டரீதியான பாதுகாப்பை பெற்றுத் தருவதற்குமான தேவை இருக்கிறது. அதேசமயம், உளவியல் ரீதியான தலையீடு உடனடியான தேவையாக இருக்கிறது. 20 வருடங்களுக்கு மேலாக தேசிய கல்வி அதிகார பீடத்தினரால் அனுப்பப்பட்ட சுற்றறிக்கைகள் உடல்ரீதியான தண்டனைகள் வழங்கப்படுவதை நிறுத்தவும் இல்லை குறைக்கவும் இல்லை.

அக்கறை கொண்ட பிரசைகள் சிலரால்உடல்ரீதியான தண்டனைகளை இகழ்ந்து அல்லது தடை செய்ய கோரும் சுவரொட்டி, ஓவியப்போட்டி மற்றும் கண்காட்சியில் பங்கு கொள்ளும்படி 09 வயதிலிருந்து 90 வயதானவர்களை கலந்துகொள்ளும்படி அழைப்பு விடுக்கும் நகர்வொன்று முன்னெடுக்கப்பட உள்ளது.

இவ்வாறான முயற்சிகள் இடம்பெற்றாலும் ஒவ்வொரு பாடசாலையும் மாகாணகல்வி திணைக்களத்திலுள்ள ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவின் உதவியுடன் எந்த ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களை அடிக்கிறார்கள் அல்லது ஏசுகிறார்கள், தரம் 1-13 வரையான எந்த வகுப்பில் அடிப்பது ஆகக்கூடுதலாக நிகழ்கிறது, ஒரு மாணவனுக்கு கிடைக்கும் அடிகள், வேறு வன்போக்கற்ற முறைகளுக்கு பதிலாக அடித்தல் நிகழ்வதற்கான ஆசிரியரின் காரணம் என்ன, முதலியவை தொடர்பான தரவுகளை திரட்ட ஆய்வொன்றை மேற்கொள்ள வேண்டும். இயற்கையாகவே, இவ்வாறான ஆய்வின் நம்பகத்தன்மை கேள்விக்குரியதாகவே இருக்கும். முனைப்பாக தலையிடாத அவதானிப்பு, இதைவிட

[5]See MOE website: http://www.moe.gov.lk

அதிக நம்பகத்தன்மை கொண்ட தரவுகளை தரலாம். இங்கே எழுகின்ற ஒரு கேள்வியாக தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களும் உடல்ரீதியான தண்டனைகளை வழங்குகிறார்களா? என்பது இருக்கிறது.

இன்னொரு கேள்வியாக தனியார் கல்வி நிலையங்களிலும் பாடசாலைகளிலும் கற்பிக்கும் முன்னணி ஆசிரியர்கள், பாடசாலை வகுப்புகளில் அல்லது தனியார் கல்வி நிலையங்களில் தங்கள் மாணவர்களை தண்டிக்கிறார்களா? என்பது இருக்கிறது. அல்லது உயர் கொடுப்பனவுகளை வழங்கும் தனியார் கல்வி நிலையங்களில் கற்பிப்பதற்கு தெரிவு செய்யப்படாத ஆசிரியர்கள் விரக்தியுற்று வகுப்பறைகளில் மாணவர்களை அடிக்கிறார்களா? சில தனியார் கல்வி நிலைய மாணவர்கள் தடிகள் மற்றும் தும்புத்தடிகளாலும் அடிக்கப்படுகிறார்கள் என்றும் ஒரு தகவல் உண்டு. இதனால் பாதிக்கப்படும் மாணவர் 18 வயதுக்கு குறைந்தவராக இருந்தால் அது கல்வித்திணைக்களம் விசாரிக்க வேண்டிய ஒரு விடயமாக இருக்கும்.

1998இல் நா.எதிர்வீரசிங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வான "சிறிலங்காவின் வடகிழக்கு மாகாணத்தின் கல்வி மற்றும் விளையாட்டு தொடர்பான மதிப்பீடு" இல் குறிப்பிடப்பட்டிருக்கும் அவதானிப்பு தொடர்பான இடைக்குறிப்பொன்று கீழே தரப்படுகிறது.

### 3.2.4. உளவளத்துணையும் வழிகாட்டலும்

ஒரே ஒரு சந்தர்ப்பத்தைத் தவிர, வடகிழக்கு மாகாணத்தின் பாடசாலை அமைப்பில் மரபுவழி உளவளத்துணை மற்றும் வழிகாட்டல் ஏதும் இருப்பதை இந்த ஆலோசகர் காணவில்லை. மாகாண கல்வி செயலகமோ அல்லது கல்வி கலாசார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சோ, இந்த மாணவர்கள் மற்றும் பெற்றோருக்கான முக்கியமான சேவைக்கென தனியான அலகொன்றைக் கொண்டிருக்கவில்லை. அம்பாறையில் உள்ள டி.எஸ்.சேனநாயக்க தேசியப் பாடசாலையில், சிறிய ஆனால் சிறப்பான திட்டமொன்று அர்ப்பணிப்புள்ள உளவளத் துணையாளர் ஒருவரால் அதிபரின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. பாடசாலை விறாந்தை ஒன்றின் ஒரு பகுதியிலே பிரித்து அடைக்கப்பட்டு திரைபோடப்பட்டு, உளவளத்துணையாளரும் மாணவரும் கலந்துரையாடுவதற்கான ஒரு சௌகரியமான, அந்தரங்கமான, ஆக்கபூர்வமான இடவசதியை அது தருகிறது. அந்த உளவளத்துணையாளர் றோஜரின் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு வழங்குகின்ற பணிப்புகள்-இல்லாத உளவளத்துணையானது, ஆக்கபூர்வமான பெறுபேறுகளைத் தந்திருக்கிறது. இந்த உளவளத்துணைச் செயல்முறையில பொருத்தமான இடங்களில் பெற்றோரையும் பங்கு கொள்ளும்படி அவர் அழைக்கிறார். அவர் தந்த தகவலின்படி அந்தப்பாடசாலையிலும் பெற்றோர் மூலமாகவும் உருவாகும் தேவைகளை நிறைவு செய்வதற்கு மேலதிக இடவசதியும் ஆகக் குறைந்தது இன்னொரு ஆசிரியரும் தேவையாக இருக்கின்றது. அவரால் கையாளப்படும் விடயங்களில் சிறிய நடத்தை ரீதியான பிரச்சினைகளிலிருந்து நீடித்த சமூகமளிக்காமையிலிருந்து, தற்கொலைகளை தடுத்தல் உள்ளிட்டதாக, சமூகத்திலும் வீடுகளிலும் இடம்பெறும் வளரிளம் பருவத்தினர் மற்றும் வயது முதிர்ந்தோர் தொடர்புபட்ட துஷ்பிரயோகங்கள் வரையானவை அடங்குகின்றன. மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோருக்கான மரபுவழி உளவளத்துணை மாற்று வழிகாட்டல் திட்டமொன்றுக்கான தேவையிருக்கின்றது. பாடசாலைகளில் இவ்வாறான திட்டமொன்றை மேற்கொள்ள தகைமை பெற்ற ஆளணியினரின் தேவை அவசரமானதாகவும் கடுமையானதாகவும் உணரப்படுகின்றது. விசேடமாக போர் வலயங்களிலும் முரண்பாட்டு வலயங்களிலும் இந்த தேவை உணரப்படுகிறது."[6]

ஒவ்வொரு பாடசாலைகளிலும் தனியான ஒரு அறை தரப்படும்வரை உளவளத்துணையளிக்கப்படுவதை பின்போடுவதானது மாணவர்களின் துன்பங்களை நீடித்திருக்கச் செய்துவிடும். வடக்கும் இவ்வாறன திட்டங்களை, தற்போதுள்ள பயிற்றப்பட்ட ஆசிரியர்களைக் கொண்டு ஆரம்பிக்கலாம். அவ்வாறான ஆசிரியர்களின் கற்பித்தல் சுமையக்குறைத்து, உளவளத்துணை ஆளணியினர் நிறுவப்பட்டு, அவர்களுக்கு நீண்டகால அடிப்படையிலான பயிற்சி வழங்கப்படும்வரை, இவர்களை பயன்படுத்தலாம்.

6 எதிர்வீரசிங்கம் நாகலிங்கம் "சிறிலங்காவின் வடகிழக்கு மாகாணத்தின் கல்வி மற்றும் விளையாட்டு தொடர்பான மதிப்பீடு" வடக்கு கிழக்கு மாகாணசபையின் கல்வி கலாசார மற்றும் விளையாட்டு அமைச்சுக்கான அறிக்கை, 1998, பக்கம்30.

## மனதுக்குகந்த தன்மைச் சுட்டி - (Corgeniality Index)

மனதுக்குகந்த தன்மைச் சுட்டியென்பது 2007ஆம் ஆண்டிலே கல்வியமைச்சு வகுத்ததும் ஒரு மாகாணத்திலான உட்கட்டுமானம் மற்றும் வசதிகளை பிரதிபலிப்பதுமான ஒரு வகைப்படுத்தல் முறையாகும். இதில் பெறப்படும் சுட்டிப்பெறுமானம் குறைவானதாகவிருந்தால், அந்த அளவுக்கு உட்கட்டு குறைவானதாக இருந்தால் அந்த அளவுக்கு உட்கட்டுமான மற்றும் ஏனைய வசதிகளும் மோசமானவையாக இருக்கும். மனதுக்குகந்த தன்மை தொடர்பாக வலயரீதியாக தரவுகள் எதுவும் இல்லையெனினும் யூனிசெப்பின் அறிக்கையான “நாட்டு ஆய்வு: சிறிலங்காவில் பாடசாலைக்கு செல்லாத பிள்ளைகள்” சுருக்க அறிக்கை மாகாண வாரியான வகைப்படுத்தல் ஒன்றைத் தருகின்றது. (அட்டவணை 02:03)

Table: 2.3: Classification of Schools according to Level of ‘Congeniality’ by Province 2007


| | Very congenial | Congenial | Non-congenial | Uncongenial | Very uncongenial |
|---|---|---|---|---|---|
| Western | 24.4 | 41.4 | 27.7 | 5.9 | 0.5 |
| Central | 10.5 | 18.6 | 30.3 | 30.3 | 10.2 |
| Southern | 11.7 | 31.0 | 34.0 | 18.1 | 5.1 |
| Northern | 4.1 | 18.6 | 15.8 | 13.4 | 47.8 |
| Eastern | 5.4 | 19.3 | 17.4 | 21.0 | 36.9 |
| North Western | 11.5 | 21.7 | 30.1 | 23.5 | 13.2 |
| North Central | 7.2 | 17.0 | 15.9 | 31.8 | 28.1 |
| Uva | 6.7 | 23.2 | 32.5 | 26.7 | 10.8 |
| Sabaragamuwa | 15.9 | 25.2 | 31.1 | 23.7 | 4.2 |
| Sri Lanka | 11.6 | 24.6 | 26.8 | 21.3 | 15.6 |

Source: MOE, 2007. Country Study: ‘Out of School Children in Sri Lanka’, Summary Report. UNICEF Sri Lanka 2013

## ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை பாடசாலைகளுக்கான செலவுகள்

உரு.2.30 ஆனது, ஆரம்ப மற்றும் நடுநிலை பாடசாலைகள், விசேட கல்வி, மரபற்ற கல்வித்துறை, மற்றும் பொது நிர்வாகம் போன்றவற்றிற்காக, தலா ஒரு மாணவனுக்கான செலவை, 2012, 2013 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட மொத்த வேதனங்களின் அடிப்படையில் காட்டுகிறது. இந்தச் செலவீனங்கள் நடுநிலை அணைவாகச் செய்யப்பட்டிருக்கின்றனவா என நிர்ணயிப்பதற்கென வலய மற்றும் பாடசாலை மட்டங்களிலே தலா ஒரு மாணவனுக்குச் செலவிடப்படும் தொகைகளை அறிந்து கொள்வதற்கென, இன்னும் அதிக தரவுகளைச் சேகரித்து, பகுப்பாய்வு செய்வது அவசியமாகும். இது, வலய மற்றும் பாடசாலை மட்டங்களில் செய்யப்படும் தலா ஒரு மாணவனுக்காகச் செய்யப்படும் செலவீனங்களுக்கும் பரீட்சைகளிலான ஆற்றுகைகளுக்கும் இடையே ஏதாவது தொடர்பு இருக்கிறதா என நிர்ணயிக்க உதவும். இந்தத் தரவுகள், நிதிப்பிரிவுகளில்

Figure 2.30: Per Student Cost Based on the Expenditures – 2012 & 2013




Source: NP MOE Finance

[7] யுனிசெவ் சிறிலங்கா, (2013 பெப்ரவரி),“நாட்டு ஆய்வு: சிறிலங்காவில் பாடசாலைக்கு செல்லாத பிள்ளைகள்,சுருக்க அறிக்கை” பக்-07. (HTTP://www.unnicef.org/srilanka/2013-oss-sunnmery.pat இலிருந்து 24/06/2014 பெறப்பட்டது)

கிடைக்கக்கூடியதாக இருக்கின்றனவெனினும் மேற் குறிப்பிட்ட வகையிலான கணிப்புகளைச் செய்ய உதவக்கூடிய வடிவத்தில் அவை இல்லை. தற்போது உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தரவுத்தளமானது இந்த தொடர்புகளை நிர்ணயித்து இப்போதையை விட அதிக சமத்துவமான முறையில் வளங்களின் பகிர்வை உருவாக்குவதற்கான மூலோபாயங்களை உருவாக்க, முடிவுகளை மேற்கொள்வோருக்கு உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தோடு தொடர்புபட்ட விடயங்கள் பற்றி தெளிவான விவரங்களைப் பெறுவதற்கான தரவுகள், திட்டமிடுவோருக்கு அவசியமாக இருந்தால், உடனடியாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்

## பொருண்மிய இன்னலம் மற்றும் கல்வி மட்ட அடைவுக்கிடையேயான தொடர்பு

க.பொ.த.(சா.த) பரீட்சையில் சித்திபெறத் தவறி பாடசாலையை விட்டு விலகுபவர்கள், வாழ்நாள் முழுவதும் குறைக்கப்பட்ட வருவாயையே பெறுவார்கள் என்பதையும் சா.த. சித்தியெய்திவிட்டு, மேற்கொண்டு கல்வியை தொடராதவர்களும் சராசரி வருமானத்தில் 70வீதம் அளவினையே பெறுவார்கள் என்றும் உரு 2.31 காட்டுகிறது. அவர்களுடைய பிள்ளைகள் ஒரு வறுமையான சூழலிலேயே வளர்வார்கள். நிகழ்கால கல்வி முறையானது, வறுமைக்கோட்டில் உள்ளவர்களை நித்தியமாக அங்கேயே வைத்திருக்கவும் அவர்களை அதிகரிக்கச் செய்யவுமே உதவுகிறது. 1970களிலும் 1980களிலும் இருந்து தற்போது வரை கடைப்பிடிக்கப்பட்டு வரும் சமமற்ற கல்விக் கொள்கையின் வன்போக்கான பின் விளைவுகளை சிறிலங்கா கண்டிருக்கிறது. இந்த துன்பியல் ரீதியான பாடங்களைக் கற்றுக்கொண்டபின்பும் பிள்ளைகளின் பெரும்பாலானோரை, அவர்களுக்கு வாக்களிக்கும் வயது வர முன்னரே, ஓரம்கட்டி விடும் அதே கொள்கைகளை அமைப்பு தொடருவதென்பது மடைமையான செயலாகும்.


Figure: 2.31 – Economic Welfare by Education Level of the Principal Income Earner of a Household




Sources: Central Bank of Sri Lanka Annual Report 2010, Education Statistics and World Development Indicators (World Bank).

# தேசிய மட்டத்திலே கல்விக்கான முதலீடு மற்றும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஆற்றுகைகள்

Figure: 2.32. Public Investment in Education as a Percentage of National Income, 2010 or Nearest Year




Sources: Central Bank of Sri Lanka Annual Report 2010, Education Statistics and World Development Indicators (World Bank).

உரு 2.32 ஆனது சிறிலங்காவிலான பொது கல்வி செலவீனங்கள், மொத்த உள்ளூர் உற்பத்தியின் சதவீதம் என்ற வகையில், 2% குறைவானதாக இருப்பதைக் காட்டுகிறது. இது அதே வரைபடத்தில் பட்டியலிடப்பட்டிருக்கும் வேறெந்த நாட்டைக்காட்டிலும் குறைவானதாகும். இப்போது போர் முடிந்து விட்டபடியால், கல்விக்கான அரசினுடைய செலவீன சதவீதம் உயர்வதற்கும் படைத்துறை மற்றும் பொதுமக்கள் தொடர்பு பணிகளுக்கான செலவீனங்கள் குறைவதற்குமான காலம் வந்துள்ளது. சிறப்பாக, வடக்கில் இப்படி நிகழவேண்டும். இவ்வாறான எந்த அதிகரிப்பினதும் பெரும்பாலான பகுதிகள் தேசிய சராசரிக்குக் கீழே ஆற்றுகை தரும் பாடசாலைகளுக்கு கிட்டவேண்டும். உயர் வேதனங்கள் வடிவிலான செலவீனங்கள் இவ்வாறான பாடசாலைகளில் இப்போதையை விட அதிக சமத்துவத்தை பெற முயற்சிக்கும் விதத்தில் தகைமை பெற்ற ஆசிரியர்களை அப் பாடசாலைகளுக்கு நியமிக்க வேண்டும். இதற்கு மேலதிகமாக, அரசினால் நடாத்தப்படும், அரச மானியங்கள், வேலையாட்கள் மற்றும் வரிசெலுத்த வேண்டியில்லாமை முதலியவற்றால் அவற்றுக்குரியதல்லாத அனுகூலங்களை பெறும் வர்த்தகங்களோடு, வடக்கிலுள்ள உள்ளூர் தனியார் தொழில் முயற்சியாளர்கள், போட்டி போடாமல் தங்கள் வர்த்தகங்களை கட்டியெழுப்பவும் வேலைவாய்ப்புகளை உருவாக்கவுமான வாய்ப்பை பெறவேண்டும். கல்வித்துறையிலான முடிவெடுத்தல் மற்றும் கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் முதலியவற்றை ஏதேச்சாதிகாரமான, படையினரைக் கொண்டு வலிந்து திணிக்காமல், கல்வித்துறையினர் மற்றும் உள்ளூர் அதிகாரிகளை மேற்கொள்ள விடுவது அரசினுடைய கல்வி-அல்லாத துறையினருக்கு நல்லதாகும்.


ஆலோசனை கலக்கும் பணிக்கூடத்துக்கு மத்திய கல்வியமைச்சர் ஆற்றிய உரையில் கல்வியை மேம்படுத்துவதற்கு ஏராளமான விடயங்கள் செய்யப்பட்டிருப்பதாகவும் விசேடமாக, 1000 பாடசாலைகளை அமைக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவற்றுள் 90 பாடசாலைகள் வடக்கில் அமைக்கப்படவிருப்பதாகவும் இத்திட்டமானது ஆய்வுகூட வசதிகளுடன் கணிதம், ஆங்கிலம், மற்றும் தொழினுட்பம் போன்ற கல்விகளை வழங்குவதாக இருக்கும் என்று குறிப்பிட்டார். அத்துடன் பிரதானமாக, பொறியியல் மற்றும் தொழினுட்பத்தில் 3 ஆம் நிலை கல்விக்குள் மாணவர் பிரவேசிக்கும் வாய்ப்பைக் கொடுக்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கும் தொழினுட்பத்துறை ஒன்று உ.த. இல் உருவாக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். இது நன்கு சிந்திக்கப்பட்டு செய்யப்பட்ட ஒரு அபிவிருத்தியாகும் என்பதோடு அது ஏற்கனவே மாணவர்கள் மத்தியில் வரவேற்பை பெற்றிருப்பதோடு அவர்கள் பெரும் எண்ணிக்கைகளில் தொழினுட்பத்துறைக்கு விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். மாணவர்களுக்கு தேவையான நடைமுறை திறன்களை மாணவர்கட்கும் பயிற்சிகளை ஆசிரியர்களுக்கும் வழங்கும் விதத்தில், உள்ளூர் தொழில்சார் நிலையங்கள் பாடசாலைகளுடன் கூட்டிணைந்திருக்கின்றன. விரைவிலேயே, இவ்வாறான துறைகளுக்கு ஏற்பட்டிருக்கும் கிராக்கி காரணமாக அதிக பாடசாலைகளுக்கு அவற்றை விரிவுபடுத்த வேண்டியிருக்கும். தேசிய பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கும் அனைத்துப் பாடசாலைகளுக்கும் இவ்வாறான வாய்ப்புக்கள் கிடைக்கக் கூடியதாக இருக்கவேண்டுமென்பது முக்கியமானதாகும். பாகுபாட்டை நீக்கும் விதத்திலே உ.த. இல் இணைந்திருக்கும் அனைத்து மாணவர்களுக்கும் சமமான வாய்ப்பு கிடைக்க

வேண்டியது கட்டாயமாகும். அப்படி இல்லாததன் கிரயத்தை நாடு வடக்கிலும் தெற்கிலும் எதிர்கொண்டது. அரசானது, வேறு நாடுகள், உலகவங்கி, JAICA KOICA, ஆசிய அபிவிருத்தி வங்கி, மற்றும் ஏனைய கடன் வழங்குநர்களிடமிருந்து அரசு கடன் பெறுவதை அமைச்சர் நினைவு படுத்தினார்.

மற்றைய நாடுகளோடு ஒப்பிடும் பொழுது சிறிலங்கா அரசு செய்யும் இந்த கல்விக்கான குறைந்த செலவை உரு 2.33 இல் காணலாம். இச் செலவானது தலா GDP யோடும் தொடர்புபட்டதாக இருக்கிறது என்பதை வரைபு காட்டுகிறது. இது கல்விக்கான முதலீட்டை அரசாங்க பாதீட்டினுடைய ஒரு விகிதாசாரமாக காட்டுகிறது. பட்டியலிடப்பட்டுள்ள நாடுகளில் ஆகக் குறைவானதாக 5.7% ஆக இருக்கிறது. இந்த நிலைமையானது 2014இன் பாதீட்டில் பணவீக்கத்துக்கான சரிசெய்தலின் பின்னும் மாற்றமடையவில்லை. இவ்வளவு குறைவான நிதியூட்டத்தின் நேரடி விளைவாக ஆசிரியர்களின் வேதனம் மிகக்குறைவானதாக இருக்கிறது. இதே காரணத்தினால், தலா, ஒரு மாணவனுக்கான, வகுப்பறைகளின் கற்றல் சூழலை மேம்படுத்தும் செலவும் குறைவானதாக இருக்கிறது. கடன் வழங்கும் முகவர் அமைப்புகளோ மற்றைய நிதிவழங்குநர்களோ, ஆசிரியர்களின் வேதனத்துக்கென்றோ வேறு அரச ஊழியர்களின் வேதனத்துக்கென்றோ கடன்வழங்க மாட்டார்கள். ஆசிரியர்களின் வேதனங்களை அதிகரிக்க அல்லது உள்கட்டுமான மேம்படுத்தல்களுக்கு பயன்படுத்தக் கூடிய அரசநிதி அவற்றுக்கு பதிலாக வேறு இடங்களில், உதாரணமாக, போர் முடிந்து ஐந்து வருடங்களாகியும் படைத்துறைக்கு செலவழிக்கப்படுகிறது. மிகையான படைத்துறைச் செலவீனங்கள் உருவாக்கும் இடைவெளியை நிரப்ப சர்வதேச உதவிகள், கடன்கள் மற்றும் மானியங்கள் தேவைப்படுகின்றன. கடன்பெறுதலும் உதவிகளும் வடக்கிலான, கற்றல் சூழலை மேம்படுத்தவோ அல்லது பாடசாலை உபகரணங்கள் மற்றும் உட்கட்டுமானங்களை திருத்தியமைக்கவோ அல்லது மாற்றீடு செய்யவோ அல்லது பராமரிக்கவோ போதுமானதாக இருக்காது. அந்த வகையில், தேசிய சராசரிகளுக்குக் கீழ் ஆற்றுகைகளை கொண்டிருக்கும் ஏனைய மாகாணங்களுக்கும் இது பொருந்தும்.

உரு 2.34 ஆனது, சர்வதேசரீதியாக, தரம்-4(ஆண்டு-5) கணிதத்தில் எட்டப்பட்ட சாதனைகளுக்கும் கல்விக்கான தலா ஒரு மாணவனுக்கான முதலீட்டுக்கும் இடையேயான தொடர்பைக் காட்டுகிறது. இவ்வாறான ஒரு பகிர்வை சிறிலங்காவுக்கு உள்ளேயும் பார்க்கலாம். இது, 1AB மாகாண, அரச, மற்றும் தேசிய பாடசாலைகளுக்கு அதிக நிதியூட்டம் உடனடியாக கிடைக்கக்கூடியதாக இருக்கும் நகர்ப்புற பாடசாலைகளில், சா.த. மற்றும் உ.த. பரீட்சைகளிலான மாணவர்களின் ஆற்றுகைகளை பிரதிபலிப்பதாக இருக்கின்றது. முதலீடும் செலவீனங்களும் குறைவாக இருக்கின்ற, கிராமப்புற பாடசாலைகளுடன் ஒப்பிடும் போது, இவற்றைவிட சிறப்பான பெறுபேறுகளைப் பெறும், மேலே கூறிய விதமான பாடசாலைகளுக்கு, அதிக முதலீடுகள் ஒதுக்கீடு செய்யப் படும்பொழுது, அப் பாடசாலைகள் சிறப்பான ஆற்றுகைகளை நிகழ்த்துகின்றன என்பது இதன் பொருளாக இருக்கிறது. இந்த அறிக்கையில் முன்னதாக தரப்பட்ட வரைபடங்கள் உருக்கள்2.22,2.23, மற்றும்

**Figure 2.34: Association between Public Investment in Education per Student and Learning Outcomes in TIMSS 2007**




Sources: Mullis et al (2008). Sri Lanka has been inserted from NEREC 2008 and Central Bank of Sri Lanka Annual Report 2010, Education Statistics and World Development Indicators (World Bank).

2.24 எடுத்துக் காட்டுவதுபோல் 1C மற்றும் அனைத்து வலயங்களிலுமுள்ள கிராமப்புற மற்றும் வன்னி வலயங்களின் பாடசாலைகளின் தேசிய பரீட்சையிலான பெறுபேறுகள் மோசமானவையாக இருக்கின்றன.

வடக்கில் ஒவ்வொரு முக்கிய பாடத்திலுமான சாதனைகளையும் வெவ்வேறு வகை பாடசாலைகள் ஒவ்வொன்றிலும் தலா மாணவனுக்கான செலவீனத்தையும் கணிப்பது அவசியமாகும். இவ்வாறான

சுட்டிகள், விஞ்ஞானம், கணிதம், மற்றும் ஆங்கிலத்தை அபிவிருத்தி செய்வதற்கான அதிக நிதியூட்டங்களை நெறிப்படுத்த உதவும்.

இங்கு தரப்படும் புள்ளி விபரங்களில் அனேகமானவை தேசிய புள்ளிவிபரங்களாகும். பொருண்மிய சுட்டிகள் மற்றும் கல்வி தொடர்பான புள்ளி விவரங்களை உருவாக்குவது வடக்குக்கு முக்கியமானதாகும். தரவுத் தளம் மறறும் ஆய்வு தொடர்பான பரிந்துரைகள் 2014 ஜனவரியில் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தல் இடம்பெற்று வருகிறது. பாடசாலை மற்றும் வலய மட்டத்தில் இந்த அமைப்பைச் செயற்படுத்தப் போகிறவர்களுக்கு அது பயிற்சியும் வழங்கும் என்பதோடு, இவ்வாறான தகவல்களையும் வேறும் பல தகவல்களையும் அது, அனைத்து மட்டங்களிலும் முடிவுகளை எடுப்போருக்கு கொடுக்கக்கூடியதாக இருக்கும்.
உலக வங்கி அறிக்கையிலிருந்து பெறப்பட்ட அட்டவணை 2.04 ஆனது பட்டியலிடப்பட்டிருக்கும் நாடுகளோடு ஒப்பிடும் போது சிறிலங்காவானது அதன் மொத்த உள்ளுர் உற்பத்தியில் ஆகக்குறைந்த சதவீதத்தை செலவழிப்பதை எடுத்துக்காட்டுகிறது.

**Table 2.4. Public Education Spending as a percentage of GDP - 2010**

| Country | Public Education Spending as a percentage of GDP | Public Education Spending as a percentage of Government Spending | Education Recurrent Expenditure per student as a share of GDP per capita |
|---|---|---|---|
| Sri Lanka | 1.9 | 7.3 | 9.1 |
| Malaysia | 4.7 | 25.2 | 15 |
| Thailand | 4 | 20.9 | 18.3 |
| South Korea | 4.2 | 15.3 | 17.8 |
| Singapore | 3.3 | 10.3 | NA |
| Argentina | 4.9 | 13.5 | 16.5 |
| Brazil | 5.1 | 16.1 | 18.1 |
| Bolivia | 6.3 | 18.1 | NA |
| Costa Rica | 5 | 22.8 | 18.8 |
| Low and middle income | 4 | NA | NA |
| Upper middle income | 4.6 | 14 | NA |

Sources: Central Bank of Sri Lanka Annual Report 2010, Education Statistics and World Development Indicators (World Bank). Note: Data for Sri Lanka are for 2010. Data for other countries and regions are from the closest available year to 2010.

கீழே உள்ள அட்டவணை 2.5 ஆனது, Gini குணகம் சுட்டிக்காட்டுவதன்படி உயர்கல்வியோடு ஒப்பிடும் பொழுது ஆரம்ப மற்றும் இடைநிலை கல்விகளுக்கு, கடுமுனைப்பான விகிதாசார பொருத்தமற்ற முறையிலே, செலவீனங்கள் செய்யப்பட்டிருப்பதைக் காட்டுகிறது. எமது இலக்கு கற்றலையும் கற்பித்தலையும் மேம்படுத்துவதெனின், ஆரம்ப மற்றும் இடைநிலைகளுக்கு 0.2 மற்றும் 04.92 என்று இருப்பதைவிட கூடுதலானதாக இருக்கவேண்டும். அதிக வருமானத்தை எதிர் காலத்தில் பெறும் உள்ளார்ந்த திறனை அதிகரிக்கும் விதத்தில், மாணவர்களின் ஆற்றுகையை மேம்படுத்தவென, ஆரம்பநிலை மற்றும் இடைநிலை கல்விக்கென இப்போதையை விட அதிக சதவீதத்திலான செலவீனங்களைச் செய்வது அவசியமாகும். மாகாண, வலய மற்றும் பாடசாலை மட்டங்களிலான செலவீன கோலங்களை அடையாளம் காண்பது வடக்கு மாகாணத்துக்கு அவசியமாகும்.

| Table 2.5: The Gini Coefficients of Public Education Expenditure by Level of Education in Sri Lanka | |
|---|---|
| **Level of Education** | **Gini Coefficient (%)** |
| Primary Education | 0.2 |
| Secondary Education | 4.92 |
| Higher Education | 40.24 |
| Source: World Bank staff estimates based on household survey data. | |

இந்தக் கட்டத்திலே வடக்கிலுள்ள ஒவ்வொரு வலயத்திலுமுள்ள ஒரு 1AB பாடசாலையிலே தரம் 1இல் இருந்து தரம் 05 வரையான ஆரம்ப பிரிவுக்கான, தலா மாணவனுக்கான செலவானது, வகை- 1C, வகை-II மற்றும் மிகமுக்கியமாக, வகை-III பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் செலவுகளுக்கு சமமானதா என்ற கேள்வி எழுகிறது. இதற்கு மேலதிகமாக இவ்வாறான வெவ்வேறு வகை பாடசாலைகளிலே கிராமப்புற, நகர்ப்புற, வலய, கோட்டப் பிரிவுகள் என்ற வகையிலான அவற்றுடைய பூகோள ரீதியான அமைவிடங்களின் அடிப்படையில் வெவ்வேறு செலவீனக் கோலங்கள் உள்ளனவா என்ற கேள்வியும் கேட்கப்பட வேண்டும்.

வடக்குக்கான செயற்பாட்டு ஆய்வானது, வடமாகாணத்தால் மேற்கொள்ளப்படும் e-திட்டமிடல், தரவுத்தளம், ஆய்வு மற்றும் பிரசுரப் பணிகள் முன்னிலை வகிக்க வேண்டும். இது ஒவ்வொரு மாகாணத்திலும் மேற்கொள்ளப்பட வேண்டிய பணியாகும். இந்தக் கேள்வியானது இயற்கையாகவே ஏனைய மாகாணங்களிலும் எழும். நகர்ப்புறச்சேரிகள், நீர் வழிகளுக்கு அருகில் வாழும் குடும்பங்கள், கரையோர மீன்பிடி கிராமங்கள், கொழும்பு பெரும்பாகப் பகுதியில் புகையிரதப் பாதைகள் நெடுக வாழும் குடும்பங்கள், போன்ற பகுதிகளும் மற்றும் அவையொத்த வேறு பகுதிகளும், தங்கள் பிள்ளைகளின் கல்வி, தனிப்பட்ட வளர்ச்சி மற்றும் எதிர்காலம் தொடர்பான தனித்துவமான பிரச்சினைகளை எதிர்கொள்ளக்கூடும்.

| Table 2.6: Net Enrolment Rates across Economic Quintiles | | | |
|---|---|---|---|
| **Consumption Quintiles** | **Primary Education (%)** | **Junior Secondary Education (%)** | **Senior Secondary Education (%)** |
| Quintile One (Poorest) | 9 | 89 | 52 |
| Quintile Two | 9 | 93 | 59 |
| Quintile Three | 9 | 95 | 65 |
| Quintile Four | 9 | 96 | 71 |
| Quintile Five (Richest) | 99 | 97 | 77 |
| Total | 9 | 94 | 65 |
| Source: World Bank staff estimates based on household survey data. | | | |

இவ்வாறான குடும்பங்களின் பிள்ளைகள் எங்கே பாடசாலைக்குப் போகிறார்கள், தேசிய மட்டப்பரீட்சைகளில் மாணவர்கள் மற்றும் பாடசாலைகளின் சித்தி வீதம் முதலியவை பற்றிய தரவுகள் சேகரிக்கப்படவேண்டும். அட்டவணை 2.06 ஆனது, முதுநிலை இடைநிலை quintile ஒன்று, இரண்டு, மூன்று ஆகியவற்றில் மாணவர்கள் குறைவாக இணைந்திருப்பதை எடுத்துக் காட்டுகிறது. இதனுடைய விளைவாக நாட்டினுடைய ஆக வறுமையான குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் பாடசாலை அமைப்பிலிருந்து தரம்11இருந்து 13 வரையான முதுநிலை இடைநிலை மட்டங்களில்

வடிகட்டப்படுவது இருக்கிறது. உண்மையில் அவர்கள் உதைத்துத் தள்ளப்படுகிறார்கள். மாற்ற முடியாத விதத்திலே, மோசமான பாடசாலை சூழல்களைக் கொண்டிருக்கும், வறுமையான வீடுகள் மற்றும் சமூகங்களை சேர்ந்த மாணவர்களிடமிருந்து, கல்வி அமைப்பினுடைய அலட்சியம் மற்றும் மோசமான கொள்கை வகுப்பு அல்லது கொள்கை நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணித்தல் காரணமாக கல்வி வாய்ப்புகள் பறிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான பிரச்சினைகளை அடையாளம் கண்டு நிவர்த்தி செய்வதற்கான வடக்குக்குரிய வலய மற்றும் பாடசாலை வகை மட்ட தரவுகள் உருவாக்கப்பட வேண்டும். கிடைக்கக்கூடியதாக இருக்கும் தரவுகளின்படி இந்த நிலையானது பொதுவாக ஒரே மாதிரியானதாகவே இருக்கும் என எதிர்வு கூறப்படுகிறது.

**பின்வருவன பதில்காண வேண்டிய கேள்விகளாக இருக்கின்றன.**

- வகை-III, வகை-II மற்றும் 1C தர பாடசாலைகளில் அநேகமானவை, கிராமப்புற கரையோரப் பகுதிகளில் அமைந்துள்ளன. ஆக வறுமையான குடும்பங்கள் இங்குதான் வாழ்கின்றனவா? ஒப்பீட்டளவில் தொலைதூரங்களில் இருக்கும் பாடசாலைகள், க.பொ.த. (சா.த.) இல் மோசமான ஆற்றுகைகளை தந்திருப்பதைக் கருத்தில் எடுத்தால், இந்தவாறான பாடசாலைகளின் அமைவிடங்களும் அவை கவனிக்கப்படாமல் விடப்படுவதும்தான் மாணவர் இணைவு குறைவாக இருப்பதற்கும் உ.த. பரீட்சையில் குறைந்த சித்தி வீதத்தை பெறுவதற்கும் காரணமாக இருக்கிறதா?

- இவ்வாறான பாடசாலைகள், தகைமை பெற்ற ஆசிரியர்களுக்கு கவர்ச்சிகரமானதாக இருக்கமாட்டா, மற்றும் அனேகமான சந்தர்ப்பங்களில் கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கில பாடங்களைக் கற்பிக்க தகுதியான ஆசிரியர்களை அவை கொண்டிருக்கமாட்டா என்பவைகளைப் பற்றிக் கருத்தில் எடுத்தால், இந்த பாடசாலைகளின் மாணவர்கள் உ.த. வகுப்பில் இணைந்து கொள்ளப் போதுமான புள்ளிகளைப் பெறமுடியாமல் இருப்பதற்கும் அதுதான் காரணமா?

- இந்த அதிகாரத்தில் முன்னதாகக் காட்டப்பட்ட க.பொ.த. (சா.த), உ.த பரீட்சை பெறுபேறுகள், இந்த அமைப்பானது மேலதிக கல்விக்கான வாய்ப்புகளையோ பயனுள்ள வேலைகளை தேடிக்கொள்வதற்கான பயிற்சிகளை பெறும் வாய்ப்புகளையோ கிராமப்புற வலயங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு அளிக்கப் போவதில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன..

இந்த சம வாய்ப்பற்ற தன்மை பல்கலைக்கழகங்களுக்குள்ளும் நீட்சி பெற்றிருக்கின்றது. 1998 நா.எதிர்வீரசிங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட “வடகிழக்கு மாகாணத்தின் கல்வி மற்றும் விளையாட்டுப் பற்றிய ஒரு மதிப்பீடு” என்ற தலைப்பிலான ஆய்வு மற்றும் அறிக்கை பல்கலைக்கழக அனுமதியில் உள்ள விகிதாசாரமற்ற தன்மையை எடுத்துக்காட்டும் விதத்தில் பெட்டி-01 இல் விரிவாகக் குறிப்பிடப்படுகின்றது. பல்கலைக்கழகங்கள் இந்நாட்டினுடைய கிராமப்புற மற்றும் கரையோர பகுதிகளில் வாழும் குறைந்த வருமானம் பெறும் மக்களை விட, முக்கியமாக உயர் மற்றும் நடுத்தர வருமானங்களை பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களையே கொண்டுள்ளன. (கீழே உள்ள பெட்டி1ப் பார்க்கவும்)[8]

## குழு அறிக்கைகளின் சமர்ப்பணம்

NESR ஆனது, வடக்குக்கு உள்ளேயும் வெளியேயும் இருக்கும் பொதுமக்கள், வடக்கிலும் நாட்டின் ஏனைய இடங்களிலும் இருக்கும் கல்வி அமைப்புக்களின் உள்ளே இருப்பவர்கள் உள்ளிட்ட துறைசார் நிபுணர்கள் முதலியோரால் எழுப்பப்பட்ட விவகாரங்களை பரிசீலித்து அவர்கள் தங்கள் நிபுணத்துவத்தையும் பட்டறிவையும் ஒன்றிணைத்து தரவுகளைத் திரட்டியுள்ளார்கள். இந்தத் தரவுகள் வடக்கின் கல்வி அமைப்பை மேம்படுத்தும் விதத்திலே, அதில் கவனம் செலுத்தப்படவேண்டிய பகுதிகளை அடையாளம் காண அனைத்து மட்டங்களிலுமுள்ள முடிவுகளை மேற்கொள்வோருக்கு உதவும்.

Ethirveerasingam, Nagalingam. “An Appraisal of Education and Sports in the North East Province of Sri Lanka”, Report to the NorthEast Province Ministry of Education, Culture and Sports. 1998.

இதனைத் தொடரவிருக்கும் அத்தியாங்களில் ஒக்ரோபர் 2013 இலிருந்து ஏப்பிரல் 2014 வரை இடம்பெற்ற அவதானிப்புக்களையும் செய்யப்பட்ட பரிந்துரைகளையும் முன்வைக்கின்றன. ஏப்பிரல் 23,24 ஆம் திகதிகளில் இடம்பெற்ற இரு நாள் ஆலோசனை கலக்கும் பணிக்கூடத்திற்கு சமா்பிக்கப்படுவதற்கு முன்னதாக, நெறிப்படுத்தல் செயற்குழுவினால் ஆராயப்பட்டன. ஒவ்வொரு குழுவினுடையவும் அவதானிப்புக்களும் பரிந்துரைகளும் கலந்துரையாடப்பட்டதோடு வடபுலக் கல்வி அமைப்பு மீளாய்வு அறிக்கையின் ஆக்ககர்த்தாக்களான நெறிப்படுத்தல் செயற்குழுவுக்கு அவா்களுடைய இறுதிப்பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டு அவை அனைத்துமே ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆலோசனைக்கலப்பு பணிக்கூடத்தின் முடிவிலே, கல்வியமைச்சினுடைய செயலாளரும் மேலதிக செயலாளா்களும் இந்தப் பரிந்துரைகளில் 90% ஏற்றுக்கொண்டதோடு அவற்றை நடைமுறைப்படுத்த உழைக்கப்போவதாகவும் உறுதியளித்தனர். இந்த அதிகாரத்திலே ஆராயப்பட்ட நிகழ்கால சூழ்நிலைகளிலிருந்து உருவாகியுள்ள பரிந்துரைகள் அடுத்தடுத்து வரும் அதிகாரங்களில் பல்வேறுபட்ட விடயக்குழுக்களினதும் அறிக்கைகளில் முன்வைக்கப்பட்டுள்ளன.. தனியாா் கல்வி நிலையங்கள், ஆசிரியா்கள் மற்றும் தேசிய பரீட்சைகள் குறித்த பரிந்துரைகளை அதிகாரம் 05 தருகிறது. முடிவுரை மற்றும் பரிந்துரரைகள் என்ற தலைப்பிலான அதிகாரம்15இல் அனைத்துப் பரிந்துரைகளும் ஒன்றாகத் தரப்படுகின்றன.


**பெட்டி 1: சமத்துவம்**

வடக்கு கிழக்கு மாகாணங்களின் கல்வியமைப்புக்கூடாக, ஓடும் சரநூலாக, தரமான கல்வியைப் பெறுவதில் உள்ள சமமற்ற வாய்ப்பு இருக்கிறது. வகை 3 பாடசாலைகளில் உள்ள அறிவுறுத்தல்களின் தரம், கற்றல்சூழல், மற்றும் கற்பித்தல் மற்றும் கற்றல் பொருட்கள், வகை II, IC, அல்லது IAB பாடசாலைகளின் தரம் 1 இல் இருந்து தரம் 5 வரையானவற்றில் இருப்பதை விட, மிகக் குறைந்த மட்டத்திலேயே இருக்கின்றன.இநத இசைவின்மையின் விளைவானது, புலமைப் பரிசில் பரீட்சையில் உணரப்பட்டது. இந்த ஆலோசகர், தனது ஆலோசனைப் பணிக் காலத்தின்போதும், அதற்கு முன்னதாக, 1994 1997 வரையிலும் வடக்கில் மேற்கொண்ட பயணங்களின் போது, வருகை தநத வகை 3 பாடசாலைகள் எவையும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தும் மாணவர்களைக் கொண்டிருக்கவில்லை. வகை 3 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களில் பலரும் இடை நிலைக் கல்வியைத் தொடர்வதில்லை.

இவ்வாறான சமமின்மைகள் காரணமாக உருவாகிய கல்வி அமைப்பானது க.பொ.த (சா.த) இற்கு தோற்றுவோரில் 32% ஐ மட்டும் க.பொ.த (உ.த.) இற்கு தகைமை பெறச் செய்வதாகவே இருக்கிறது. ஆண்டு 2இல் (தரம்1) கல்வி கற்கத் தொடங்குபவர்களில் 11% இனர் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றாலும் 2% ஆனவவர்களே பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுகிறார்கள். எஞ்சிய 98% தினரில் பெரும்பாலானோர் மிகக் குறைந்தளவு வேலை கொள்ளக்கூடிய திறன்களுடனேயே இடைநிலை பாடசாலைகளை விட்டுச் செல்கிறார்கள். வடக்கு கிழக்கு மாகாண தரவுகளுக்கு அட்டவணை 5ஐப் பார்க்கவும்


1977ல் ஆண்டு 2இல் (தரம்1) இணைந்து கொண்ட மாணவர்களின் தொகை 324,516 ஆகும் . 1989ம் ஆண்டில் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதிபெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 34,491 ஆகும் இது 11% ஆகும் 1989ம் ஆண்டில் பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்பட்டோரின் தொகை 6476 ஆகும். இது 2% ஆகும். உரு 2 ஐப் பார்க்கவும். 1998ம்ஆண்டில் இத்தொகை முறையே 40,000 ஆகவும் 13,000ஆகவும் அதிகரித்தாலும், பல்கலைக்கழகத்துக்கு தகுதி பெற்றவர்களினதும் அனுமதிக்கப்பட்டவர்களினதும் சதவீதங்கள் அண்ணளவாக ஒரே அளவானவையாகவே இருந்தன.

**Figure 2: Percent students who remain in the education system from Year 1 to University Admission in 1989.**




பல்கலைக்கழகத்துக்குள் பிரவேசிப்பவர்களில் 18 % வீதத்தினர் விவசாய மற்றும் மீனவர் சமூகங்களைச் சேர்ந்தவர்களாகும். 21% வீதத்தினர் எழுதுவினைஞர் மற்றும் நடுத்தரமட்ட உழைக்கும் குடும்பங்களை சேர்ந்தவர்களாகும். 61% வீதம் தொழில்சார் குடும்பங்களை சேர்ந்தவர்களாகும். குடிசனத்தொகை அடிப்படையில் மேற்படி வகைகளை சார்ந்தவர்கள் முறையே 73%, 22% மற்றும் 5% ஆகும். இந்த பிரச்சினையை உரு 03 விளக்குகிறது உயர் கல்வி தொடர்பான பல்கலைக்கழகங்கள் மானியங்கள், ஆணைக்குழுவின் புள்ளிவிபரங்கள், 1989 -90 ஐயும் புள்ளிவிவர சுருக்கம் - சிறிலங்காவையும் பார்க்கவும்.

**Figure 3: Percent of the three socio-economic categories in population and percent admitted from each of the population, 1989/90**




குறிப்பு : சமூகபொருண்மிய பின்னணிகள் மற்றும் சிறிலங்காவின் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர் அனுமதித்தல் முதலியவை தொடர்பான இவ்வாறான புள்ளிவிவரங்கள் அண்மைக்கால வருடங்களிலான பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கைகளில் காணப்படவில்லை.

# 3: மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் உள சமூக நன்னிலையைப் பேணுதல்

## முகவுரை

எஞ்சியுள்ளவர்கள் மத்தியில் துன்ப நினைவுகளையும் ஆழமான வேதனையின் வடுக்களையும் மட்டும் விட்டுச் சென்ற முப்பது ஆண்டுகால கொடூரமான போரிலிருந்து சிறீலங்காவின் வடபகுதி மக்கள் இப்போதுதான் வெளியே வந்துள்ளனர். போரின்போது ஏற்பட்டிருந்த எண்ணிலடங்கா இடப்பெயர்வுகள், அத்தியாவசிய பாவனைப் பொருட்கள் மீதான தடையாணை, வன்முறைகளையும் சாவுகளையும் கண்கூடாகக் கண்டமை, பதுங்கு குழிகளில் ஒளிந்தமை, தொடர்ச்சியான பீதியுடனே வாழ்ந்தமை, இயல்பு வாழ்க்கை முழுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தமை போன்ற நெருக்கீடுகள் கற்றல் கற்பித்தலிலும், ஒட்டுமொத்தக் கல்வி முறைமையிலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

போரின் காரணமாக ஏற்பட்டிருந்த நீண்டகால சமூகத் தாக்கமானது தற்போதைய கல்வி அமைப்பு முறையில் இன்னமும் பாதிப்பை ஏற்படுத்தத்தான் செய்கிறது. மாணவர்களும். ஆசிரியர்களும், சமூகமும் என எல்லோரும் ஒட்டுமொத்தத்தில் இன்னமும் போர்க்காலத்தைய பிரச்சினைகளை எதிர்கொள்ளும் மற்றும் உயிர் வாழ்வதற்கான யுக்திகளையே பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர். கல்வித்துறையைப் பொறுத்தமட்டில் அதன் அடைவு மட்டமானது தேசிய மட்டத்தில் நடைபெறும் பரீட்சைச் செயற்பாடுகளால் மட்டுமே அளவீடு செய்யப்படும் ஓர் நிலையே இன்று மேலோங்கிக் காணப்படுகின்றது. ஆயினும், மறுபுறத்தில், வகுப்பறைகளிலும் விளையாட்டுத் துறைகளிலும் சமூகத்திலும் உருவாகுகின்ற பிரச்சினைகள் அதிகரித்த அளவுகளில் ஆவணப்படுத்தப்படுகின்றன.

”பிள்ளைகளை தடியினால் அடித்து திருத்துவதை விட்டுவிட்டு அனபினால் அவர்களை திருத்த முயற்சிக்க வேண்டும். ”

- ரி.செந்தூரன் ,
யாழ்ற்ரன் கல்லூரி.




T. Senthuran

எதிர்கால நற்பிரஜைகளை உருவாக்கும் பொறுப்பைக் கொண்டுள்ள எமது கல்வியமைப்பு முறையானது இந்த நிலைமைகள் தொடர்பில் இன்றியமையாத, காத்திரமான பங்கினை ஆற்ற முன்வர வேண்டும். ஏறத்தாழ எல்லாச் சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் கல்வி வாய்ப்பைத் தருகின்ற இந்த நாட்டுக் கல்வியின் அகன்ற அடித்தளத்தில், கல்வித்துறையானது போரின் காரணமாக ஏற்பட்ட சமூக மற்றும் உளவியல் தாக்கங்களைச் சீர்செய்வதில் தனது வகிபங்கை ஆற்ற வேண்டும். அத்துடன் கல்வியானது செயற்றிறன் மிக்கதான, ஆற்றலும் உயர் விழுமியங்களும் கொண்டதான, சமூகப் பொறுப்புணர்வு வாய்ந்த எதிர்கால சந்ததியினரை உருவாக்குவதிலும் தனது பங்கை ஆற்ற வேண்டும்.

இந்தப் பின்னணியில், கல்வித் துறையினுடைய உள சமூக நன்னிலையைப் பேணுவது என்பது உரிய முக்கியத்துவத்தையும் முன்னுரிமையையும் பெறுகின்றது. இதற்காக மாணவர்கள், ஆசிரியர்கள். அதிபர்கள், நிர்வாகத்தினர் என்போரோடு கல்வியின் முழு அமைப்பு முறைமையுமே அர்ப்பணிப்போடும் ஒன்றுபட்டும் பணியாற்ற வேண்டும்.

Cane observed on a desk in a school in the Northern Province



## முற்தேவை

ஆக்கச் செயற்பாடுகளும், விளையாட்டும்



சிறப்பானவைகள் எவையோ அவை எல்லாவற்றையும் அடைவதற்கு முதலில் மாற்றங்களை ஏற்றுக் கொள்ளவேண்டிய தேவைப்பாடுளது. கல்வி முறைமையில் ஒரு மாற்றம் நிகழ்வதற்கு கல்வியின் விளைவு தொடர்பான ஒரு பார்வை மாற்றம் அவசியமாக உள்ளது. இப்போதுள்ள மதிப்பீட்டு முறைகள் மற்றும் கணிப்பீட்டு முறைகளைத் தற்கால வழக்கிலுள்ள பரீட்சை சார்ந்த செயற்பாடுகளுக்கு அப்பால் தகுந்த அறிவுடனும் பொருத்தமான விழுமியங்களுடனும் சமூக அக்கறையுடனும் கூடியதான மாணவர்களின் வெவ்வேறு அடைவு நிலைகளை அடையாளம் கண்டு கொள்வதற்கு ஏற்றதாக மாற்ற வேண்டியுள்ளது. இந்த கல்வி முறைமையில் உள்ளடங்கும் மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் நிர்வாகிகள் என்போரின் அடைவுகளும் பொருத்தமான மாற்று யுக்திகளைக் கொண்டு மதிப்பீடு செய்யப்படுவதோடு, அவர்களின் அடைவுகளுக்கு ஏற்றாற்போல் தகுந்த வெகுமதிகள், சமூக அங்கீகாரம் மற்றும் மாற்று இலக்குகளுக்கான செயற்பாடுகள் போன்றவற்றை வழங்கி உற்சாகப்படுத்தவும் வேண்டும். பரீட்சை சார்ந்த கற்பித்தலிலும், பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையையில் ஆசிரியர்களைக் கணிப்பீடு செய்யும் முறைகளிலிருந்தும் வேறுபட்டு, மாணவர்களின் அகன்று பரந்த தேவைகளைப் பூர்த்தி செய்யும், வாழ்க்கைக்கான திறன்களையும் தொழில்முறைக் கல்வியை வழங்கும் கல்விக்காக ஒரு மாற்றம் உருவாக வேண்டியுள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக, அனைத்து ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் மாணவர்களின் உளவியல் பிரச்சினைகளை விளங்கி அவற்றைப் பொருத்தமான முறைகளில் அணுகக் கூடிய அடிப்படையான அறிவும் சாமர்த்தியமும் நேர்மறையான மனப்பான்மையும் இருக்கவேண்டும். இதற்காக, ஆசிரியத்துவக் கல்வியிலும், தகுதிச் சான்றிதழ், பட்டப் பின்படிப்பு மற்றும் ஏனைய பாடநெறிகளிலும் உளவியல் பாடத்தை தகுந்த முறையில் உள்ளடக்க வேண்டியது அவசியமாகிறது.

## உளசமூக நன்னிலை



கல்வி முறைமையினுடைய உள சமூக நன்னிலை என்பதனை ”மாணவர், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகள் என்போரது சிந்தனை, மனவெழுச்சி வெளிப்பாடுகள் மற்றும் நடத்தைக் கோலங்கள் என்பன கற்றலுக்கு சாதகமாக இருக்கின்ற ஒரு நிலை” என விளங்கிக் கொள்ளலாம். இம்மாதிரியான நலன் பேணுதலின் நீண்டகால விளைவானது சிறந்த விழுமியங்களோடு, ஆற்றலும் பொறுப்புணர்வும் அறிவும் நிரம்பிய ஒரு சந்ததியை உருவாக்குவதில் பிரதிபலிக்கும். அத்துடன் இந் நன்னிலையானது மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் என்போர் உவகையுடன் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு உதவி செய்வதோடு, தர்க்க ரீதியான சிந்தனைகள், அறிந்து கொள்ளும் ஆர்வம், ஆக்கத்திறனோடு செயற்படும் இயல்பு, இயற்கை தொடர்பான நேர்மறையான பிரதிபலிப்பு போன்றவற்றை உள்ளடக்கிய மாணவர் சமுதாயத்தை உருவாக்குவதிலும் உதவி செய்யும்.

## நடத்தை தொடர்பான ஒழுக்க விதிகள்

### கரிசனை

பாடசாலைகளின் நன்னிலையானது ஒழுக்கம் பேணுதல், உளவளத்துணையும் வழிகாட்டலும், ஒத்த குழுவினருடைய ஆதரவு மற்றும் பொருத்தமான மேற்பார்வை என்பவற்றினூடு அடையப்படலாம். தற்பொழுது பாடசாலை மட்டத்தில் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்ற நடத்தைகள் தொடர்பான அறிவு, மனப்பாங்கு மற்றும் நடைமுறைகள் என்பவற்றில் ஒரு குறைபாடு அவதானிக்கப்படுகின்றது. ஒரு பாடசாலையில் கட்டாயமாக இருந்தாக வேண்டிய பிள்ளை நேயச் சூழலை ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஒருபோதும் குலைக்கக்கூடாது. பாடசாலைகள் தமது மாணவர்களின் ஒழுக்கத்தை நிலைநிறுத்துவதற்காக உடல் ரீதியான தண்டனைகள், வார்த்தைகளால் நிந்தித்தல், தொந்தரவு கொடுத்தல் மற்றும் கேலி செய்தல் என்பவற்றைக் கடைப்பிடிக்காது அவற்றிற்கான மாற்று உபாயங்களைக் கற்கவும் அவற்றை மேம்படுத்தவும் வேண்டும். சர்வதேச வல்லுநர்களின் கூற்றின்படி, பொருத்தமான கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் மாணவர்களுக்கு அவர்களது ஒழுக்கத்தை நிலைநிறுத்தவதற்கென உடல் ரீதியான தண்டனைகள் எவையும் தேவையானதாகக் காணப்படவில்லை.

### கரிசனை

பாடசாலைகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுக்க நியமங்களை அடைதல்.

## உளவளத்துணையும் வழிகாட்டலும்

### கரிசனை

தற்போது பாடசாலை மட்டத்தில் இருக்கின்ற உளவளத்துணைக்கும் வழிகாட்டலுக்குமான சேவைப் பிரிவினால் சமகாலத்து மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் இருக்கக்கூடிய பலவகைப்பட்ட உளவியல் சார்ந்த பிரச்சினைகள் மற்றும் தேவைகள் என்பவற்றுக்கான சேவைகளை வழங்க முடியாதுள்ளது. துரதிஷ்டவசமாக உளவளத்துணை வழங்குதல் என்பதனை மனநிலை பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு வழங்கப்படுகின்ற ஒன்றாக அல்லது ஒழுக்க நடைமுறைகளைப் பின்பற்றாத ஒருவருக்கு வழங்கப்படுகின்ற ஆலோசனை என்பதாகத் தவறாகக் கருத்துருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. அதுபோலவே, பணித்துறை மேம்படுத்தலுக்கும் வாழ்வியலுக்கும் தேவையான திறன்கள் தொடர்பான வழிகாட்டலகளும் மிகக் குறைந்த அளவுகளிலேயே வழங்கப்படுகின்றன. உண்மையில் இந்தச் சேவையில் விருப்பமில்லாது, ஆர்வமில்லாது இருக்கின்ற ஆசிரியர்கள் மீது இச் சேவை வழங்கலை வலுக்கட்டாயமாகத் திணிக்கக் கூடாது



ஆலோசகரும் மாணவியும்

## குறிக்கோள்

பாடசாலைகள் மாணவர்கள் தமது பிரச்சினைகளையும் ஏனைய விடயங்களையும் தயக்கமின்றி வெளிப்படுத்தக்கூடிய அனுகூலமான சூழலையும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதோடு, அவர்கள் தகுதிவாய்ந்த ஆசிரியர்களிடமிருந்து சிறந்த தரத்திலான உளவளத்துணையையும் வழிகாட்டலையும் பெற்றுக் கொள்தனையும் உறுதிப்படுத்துதல்.

# ஒத்த குழு ஆதரவும் மேற்பார்வையும்

## கரிசனை

பிள்ளைநேயக் கவிநிலை



கல்விப் புலத்தில் பொருத்தமான ஓர் ஆதரவு முறைமையும் மேற்பார்வை ஒழுங்குகளும் இருக்கவேண்டும் என்பது நன்கு அறியப்பட்டதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான ஒரு நியமமாக உள்ளது. இந்தத் தொடரில் "மேற்பார்வை" என்ற பதத்தினை பாரம்பரியமான "மேலதிகாரியின் கண்காணிப்பு" என்று அர்த்தப்படுத்திவிடக் கூடாது. மாறாக இதனை ஆதரவு வழங்குதல், அறிவூட்டுதல், பின்னூட்டல்களை வழங்குதல் மற்றும் பொருத்தமாக வழிகாட்டுதல் என்பதாக விளங்கிக் கொள்ளல் வேண்டும். துரதிஷ்டவசமாக தமக்கு அவசியமாகத் தேவைப்படுகின்ற ஆதரவையும் வழிகாட்டல்களையும் எங்கே பெற்றுக்கொள்வது என்று தெரியாத பல மாணவர்களும் ஆசிரியர்களும் அதிபர்களும் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

## குறிக்கோள்

கல்வி முறைமையில் மாணவர்களும் ஆசிரியர்களும் அதிபர்களும் நிர்வாகத்தினரும் தமக்குத் தேவைப்படுகின்ற ஒத்த குழு ஆதரவைப் பெறுவதற்கும் தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து மேற்பார்வைகளைப் பெற்றுக் கொள்வதற்குமாக வாய்ப்புகளை வழங்குதல்

# சிபாரிசுகள்

## நடத்தை தொடர்பான ஒழுக்க விதிகள்

1. ஆசிரியர்களின் அழுத்தத்தைக் குறைப்பதற்காகவும் கற்றலுக்கான சூழலை மேம்பாடடையச் செய்வதற்காகவும் பாடசாலைகள் தமது வகுப்பறைகளில் சிபாரிசு செய்யப்பட்ட எண்ணிக்கையான[1] மாணவர்கள் மட்டும் இருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
2. ஒரு விசாலமான வரையறைகளுக்குள் நின்றபடி ஆசிரியர்களும் பெற்றோர்களும் ஏனைய பங்குதாரர்களும் இணைந்து தத்தமக்கு என ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய நடத்தைகள் தொடர்பான ஒழுக்க விதிமுறைகளின்[2] தொகுப்பைத் தாமே தயாரித்துக் கொள்ள வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.
3. ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் ஆகியோர் இணைந்து தயாரித்த பாடசாலைக்கான ஒழுக்க விதிக்கோவையானது மாணவர்களாலும், பெற்றோர்களாலும் ஆசிரியர்களாலும் அதிபர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுக் கையொப்பமிடப்பட வேண்டும். அந்த ஒழுக்க விதிக்கோவையானது மாணவர்கள், பணியாளர்கள் மற்றும் பெற்றோர்கள் அடிக்கடி பார்வையிட்டு மீளாய்வு செய்யக்கூடிய வகையில், தெளிவாகத் தெரியக்கூடிய ஓர் இடத்தில் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

1 Maximum Student: Teacher ratio (Primary Level classes 20:1- over 20 classes can have assistant teachers; Secondary Level classes 30:1)
2 This code/guideline must of course keep within the National Education Policies and Circulars. For example: Corporal punishment should be totally removed from schools (zero tolerance). The Minister to re-issue the circular sent out by Ministry of Education (central) in 2005 regarding corporal punishment being banned from schools. The zero tolerance circular should be displayed visibly to students, staff, and visiting parents at the school.

பாடசாலையில் ஒழுக்க விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு குழு நிறுவப்பட்டு, அது ஒழுக்க விதிமுறைகளை அவதானிக்கவும் அவற்றை அமுல்படுத்தவும் அதிகாரமளிக்கப்பட வேண்டும்.

4. ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் ஒழுக்கத்தை நிலைநாட்டும் அனுகூலமான திறன்களிலும், நடத்தை மாற்ற நுட்பங்களிலும் தொடர் பரிச்சயத்தை நிலைநிறுத்தும் முகமாக மீள்வலுவூட்டல் பயிற்சிகளை அரையாண்டுக்கு ஒரு தடவை நடத்தப்பட வேண்டும்.
5. கிரமமான முறையில் மதிப்பீடு செய்து, பின்னூட்டல்களை வழங்கும் முறையினை அமுல்படுத்த வேண்டும்.
6. ஆசிரியர்களும் அதிபர்களும் அடிப்படையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒழுக்க நியம விதிமுறைகளை அடியொற்றி நிற்கிறார்களா என்பதனை தெளிவானதும், ஒளிவு மறைவில்லாததுமான ஒரு நிர்வாக நடைமுறையால் உறுதிசெய்தல் வேண்டும்.
7. மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் என்பவரிடையே ஒழுக்க விதிமுறைக் கோவை தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும்.

## பாடசாலை மட்ட உளவளத்துணை

1. ஆசிரியர்களும் அதிபர்களும் பிள்ளை நேய வகுப்பறை ஒன்றைத் தொடக்கி அதனை பேணிவரக்கூடிய ஆற்றல் உடைவர்களாக இருப்பதனையும், மாணவர்களின் உளவியல் சார்ந்த பிரச்சினைகளைக் குறைக்கக்கூடிய, மாணவர்களுக்கான பொருத்தமான செயற்பாடுகளுக்கு வழிசெய்து கொடுக்கக்கூடிய, நடத்தைப்பிரச்சனைகள் குறைவான நிலையிலுள்ள ஒரு கற்றலுக்கான சூழலை ஏற்படுத்தக்கூடிய திறன் உடையவர்களாக இருப்பதனையும் பொருத்தமான பயிற்சிகளின் ஊடாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.
2. உளவளத்துணையும் வழிகாட்டலும் துறையில் சம்பந்தப்பட்டிருப்போர்கள் எல்லோருக்கும் 2014ம் ஆண்டு முடிவடைவதற்கு முன்பதாக முழுமையான, ஆழமான பயிற்சியை[3] வழங்க வேண்டும். அத்துடன் அடுத்து வரும் மூன்றாண்டுகளுக்கு, ஓராண்டுக்கு இரு தடவைகள் வீதம் அவர்கள் தங்களுடைய அறிவுத் திறனையும் நுட்பங்களையும் புதுப்பித்துக் கொள்வதற்காகவும் அவற்றை சரியான முறையில் பேணிக்கொள்வதற்குமான பயிற்சிகளை வழங்க வேண்டும்.
3. "சிறுவர் உளநலம்" என்ற புத்தகத்தின் புதிய பதிப்பையும், ஏனைய வளநூல்களையும் கல்வியமைச்சின் ஆதரவுடன் 2014ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்பதாக பதிப்பித்து வெளியிடல் வேண்டும். அத்துடன் ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் காலத்துக்குக் காலம் சிறுவர்களின் உளநலம் தொடர்பான புத்துணர்வூட்டும் பயிற்சிகளை வழங்க வேண்டும்.
4. எல்லா 1 AB, 1 C, 2ம் வகை, 3ம் வகைப் பாடசாலைகள் மற்றும் 1000 பாடசாலைகள் திட்ட வரைவுக்குள் உள்ளடங்கும் பாடசாலைகளில் காண்கின்ற ஒவ்வொரு 300 மாணவர்களுக்கும் ஒரு ஆசிரியர் உளவளத்துணையாளராக நியமிக்கப்படவேண்டும்.
5. இந்தப் பதவி நிலைகளுக்கு இயல்பான ஆர்வமும் இச் சேவைகளைப் புரிவதில் விருப்பமும் உடைய ஆசிரியர்கள் மட்டுமே நியமிக்கப்படவேண்டும்.
6. தங்களது அடைவு மட்டத்தை உயர்த்திக்கொள்ளும் நோக்கில் தத்தமது முடிவுகளையம் அவதானிப்புக்களையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் தெரிவித்துக் கொள்ளவும் ஆசிரிய உளவளத்துணையாளர்களிடையே அரையாண்டுக்கொரு தடவையான சந்திப்புக்கள் நடப்பதனை ஊக்குவிக்க வேண்டும்.
7. மாணவர்களுக்கு உளவளத்துணை வழங்குதல் சேவைகளைப் புரிவதில் பயிற்சியும், அர்ப்பணிப்பும் விருப்பமும் உடைய ஆசிரியர்கள் உளவளத்துணை வழங்கும் பணிகளில் நியமிக்கப்படலாம்.
8. போதியளவு அந்தரங்கத் தன்மையுடைய அதேநேரம் திறந்த கதவு மற்றும் ஏனைய வசதிகள் இருக்கக்கூடிய ஓர் இடத்தை ஒதுக்கிக் கொடுத்து, உளவளத்துணைக்கும் வழிகாட்டலுக்குமான சேவைகளை வழங்குவதற்கான சாதகமான சூழலை உருவாக்குவதற்குப் பாடசாலைகளை ஊக்கப்படுத்த வேண்டும்.
   உளவளத்துணை மற்றும் வழிகாட்டல் சேவைகளுக்குப் பொருத்தமான சூழல் எது என்பதனைப் பெற்றோர், ஆசிரியர் அதிபர் மற்றும் முதுநிலை ஆசிரிய உளவளத் துணையாளர்களின் குழு என்பன இணைந்து தெளிவாக வரையறை செய்வதன் மூலம், தேவையில்லாத மற்றும் தவறான புரிதல்களைக் களையலாம். அத்துடன் மாணவர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தலாம்.
9. மாணவர்களதும் ஆசிரியர்களதும் உளசமூக நலனைப் பேணுவதற்கும், உளவளத்துணை மற்றும் வழிகாட்டல் சேவைகளை மேற்பார்வை செய்யவும், ஒழுங்குபடுத்துவதற்குமாக

ஒவ்வொரு கோட்டத்துக்கும் ஒரு முதுநிலை உளவளத்துணையாளரையும், ஒவ்வொரு வலயத்துக்கும் ஒரு ISA / ADE ஐயும் ஒதுக்கிக் கொடுக்க வேண்டும்.

10. உளவளத்துணை மற்றும் வழிகாட்டல் ஆசிரியர்களாகத் தொழிற்படுவோர் மாணவர்களாலும் ஆசிரியர்களாலும், பாடசாலையிலும் சமூகத்திலும் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளுக்கான பரந்தளவிலான செயற்பாட்டினை மேற்கொள்வதற்குப் போதுமானளவு அதிகாரமளிக்கப்படல் வேண்டும்.
11. இச்சேவை வழங்கலுக்காக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட பொறுப்புக்களை உள்ளடக்கிய ஒரு மீளப்புதுப்பிக்கப்பட்ட கடமைப்பட்டியலை வழங்கவும்.
12. ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுடன் பாடசாலைகளால் உருவாக்கப்பட்டு கல்வித் திணைக்களத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒழுக்க விதிக்கோவையினை உளவளத்துணை மற்றும் வழிகாட்டல் சேவையினை மேற்கொள்ளும் ஆசிரியர்கள் கையொப்பமிட்டு ஏற்றுக் கொள்வதோடு, அவர்கள் அதனைப் பின்பற்றி நடப்பதனை 2014ஆம் ஆண்டின் முடிவுக்கு முன்னதாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
13. வலய மட்டங்களில் தங்களுக்குள்ளேயே வாரந்தமோ, மாதாந்தமோ ஒத்த குழுச் சந்திப்புகளை மேற்கொள்ளுதல், மாவட்ட அல்லது மாகாண மட்டத்தில் ஆசிரிய ஆலோசகர், உதவிக் கல்விப் பணிப்பாளர், முதுநிலை உளவளத்துணையாளர்கள் ஆகியோருடைய மேற்பார்வை நிகழ்வுகள் உள்ளடங்கலான பொருத்தமான மேற்பார்வைப் பொறிமுறை ஒன்றை நிறுவி, அதனை நடைமுறைப்படுத்த வேண்டும்.
14. பதின்மூன்றாவது சிபாரிசில் குறிப்பிடப்பட்டதனை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக ஒவ்வவொரு வலயத்திலும் ஆசிரிய வளநிலையங்களை உருவாக்கி அல்லது இயங்கச் செய்து, அங்கே காலத்துக்குக் காலம் தகவல்களையும் அறிவையும் நுட்பங்களையும் மேம்படுத்துவதற்குரிய விரிவுரைகளையும் பயிற்சிப் பட்டறைகளையும் பொருத்தமான துறைசார் நிபுணர்களினால் நடத்தப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
15. உளவளத்துணை மற்றும் வழிகாட்டல் சேவையிலிருக்கும் ஆசிரியர்கள் கடினமான மற்றும் சிக்கலான மாணவர்களை அல்லது ஆசிரியர்களை, பரிந்துரைக்கப்பட்ட வழிமுறைகளுக்கும் வலை அமைப்பு வசதிகளுக்கும் பணிநிலையில் மூத்தவர்களிடமோ, ஆலோசக மேலாளரிடமோ அல்லது உளவைத்தியரிடமோ செல்லுதலுக்கும் நன்கு அறிமுகமானவர்களாக இருக்கிறார்களா என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் அவர்கள் ஏனைய அரசாங்க சேவையாளர்களோடும் திணைக்களங்களோடும் வலையமைப்பை ஏற்படுத்தக் கூடிய திறனுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
16. மாகாணக் கல்வித் திணைக்களமானது தமது மாணவருக்கும் ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் தேவைப்படும்போது உதவக்கூடிய நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களின் பெயர்ப் பட்டியல் ஒன்றை வைத்திருக்க வேண்டும். இவ்வாறு கல்விப் புலத்தில் உதவும் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு, மாகாணக் கல்விப் பணிப்பாளரால் நியமிக்கப்பட்ட சிரேஷ்ட உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவினால் உதவ விரும்பும் ஆட்கள் மற்றும் நிறுவனங்களின் நம்பகத் தன்மையையும் பணிகளின் பொருத்தப்பாடு மற்றும தகைமை என்பவற்றையும் நிச்சயப்படுத்தி உறுதி செய்யப்பட வேண்டும்.
17. உளவளத்துணை மற்றும் வழிகாட்டல் சேவையிலிருக்கும் ஆசிரியர்கள் தமது வழமையான சேவைகளுக்கும் மேலாக, தமது பிரத்தியேக பாடத்தில் அல்லது இணைப்பாட, புறப்பாட விதானச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான தெரிவு இருத்தல் வேண்டும்.
18. சிரேஷ்ட உளவளத்துணையாளர் மற்றும் முதுநிலை உளவளத்துணையாளர்கள் என்போர் அவர்களுடைய சேவை தேவைப்படும் நிலையிலிருக்கக் கூடிய திணைக்கள மட்டத்துக்குட்பட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகப் பணியாளர்கள் போன்றோருக்குச் சேவைகளை வழங்க ஊக்கப்படுத்த வேண்டும்.

## ஆதரவும் மேற்பார்வையும்

1. சாதகமான கற்றலையும் தகவல் அறிவித்துக் கற்பித்தலையும் கூடிக் கற்றல் அணுகுமுறையினையும் மேம்படுத்தி அவற்றை ஊக்கப்படுத்த வேண்டும்.
2. ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் ஒரு தகுந்த மேற்பார்வைப் பொறிமுறையினை வழங்க வேண்டும்.
3. ஆசிரிய ஆலோசகர்கள் ஆசிரியர்களின் கற்பித்தல் தொடர்பான நடத்தைகளுக்கு மட்டும் பொறுப்பானவர்கள் என்ற வகிபாகத்திலிருந்து மாறி, அவர்கள் ஆசிரியர்களுடைய நல்ல ஆலோசகர்களாகவும் மேற்பார்வையாளர்களாகவும் மாறுவதற்கு ஊக்கமளித்தல் வேண்டும்.

### உள சமூக நன்னிலை பேணல் – மாணவர் மற்றும் ஆசிரியர்கள் ஆற்றுகை



## உள சமூக நன்னிலையைப் பேணுதல்

1. மாணவர்கள் தமது ஒத்த குழுவினரோடு இணைந்து, ஒத்துழைத்துச் செயற்படக்கூடிய வகையில் பாடசாலை மட்டத்தில் கழகச் செயற்பாடுகள், மாணவ மட்ட நிர்வாகச் செயற்பாடுகள், பண்பாட்டு நிகழ்வுகள், கல்விச் சுற்றுலாக்கள், ஏனைய ஆக்கபூர்வச் சிந்தனைகளுக்கும் ஆக்கச் செயற்பாடுகளுக்குமான களங்கள் போன்றவைத் தொடர்ச்சியாக நடைபெறுவதற்குரிய இடமும் நேரமும் வழிகாட்டல்களும் வழங்கப்பட வேண்டும்.
2. பாடசாலைகள் கூட்டுச் சேர்ந்து செயற்படும் ஆரோக்கியமான போட்டி நிகழ்ச்சிகளை ஊக்குவிப்பதோடு, ஆரோக்கிமற்ற தனியாள் போட்டி நிகழ்ச்சிகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும். ஆரோக்கியமான செயற்பாடுகள் மற்றும் ஆரோக்கியமற்ற செயற்பாடுகள் என்பவை மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், பெற்றோர்கள் மற்றும் உளவளத்துணைச் சேவைப் பகுதிக்குப் பொறுப்பாயிருப்பவர் ஆகியோரின் உதவியுடன் மாகாணக் கல்வித் திணைக்களத்தால் வரையறுக்கப்படும்.
3. தற்போது நடைமுறையிலுள்ள பரீட்சைக்கான தகவலளிக்கும் குறிப்பு முறைமையானது 5E என்ற கற்றல் முறைமைக்கு மாற வேண்டும். அத்துடன் ஆசிரியர்களையும் பாடசாலைகளையும் மதிப்பீடு செய்யும் முறைமைகளும் தேசிய மட்ட பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் அமையாது, பரந்த வரையறைகளான மாணவர் மேம்பாடு, மாணவர் நலன் பேணல், சிறுவர் உரிமைகளின் அடிப்படை அவதானிப்புக்கள், மாணவர்களின் ஒட்டுமொத்த இயலுமைகளின் முன்னேற்றம், ஆற்றல் வளம், தர்க்கரீதியான சிந்தனை, உறவு நிலைமைகள், வாழ்க்கையும் சமூக திறன்களும் நற்பிரஜையாக இருப்பதற்குரிய விழுமியங்கள் போன்றவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுவதாக மாறவேண்டும்.
4. தனியார் கல்வி நிறுவனக் கலாசாரத்துக்கான முக்கியத்துவம், அளவு மற்றும் அங்கீகாரம் என்பன குறைக்கப்படுவதோடு, தொழில் கற்கை நெறிகளுக்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட வேண்டும்.
5. ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் அவர்கள் தங்களுடைய ஒத்த குழுவினரோடு இடையீட்டு தொடர்பாடலை மேற்கொள்ளக்கூடிய கிரமமான அமைப்பு ஒன்றையும், அவற்றிற்கான வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். காலத்துக்குக் காலம் பாடசாலை மட்டத்தில் பணியாளர் கூட்டங்களைக் கூட்டி, அந்தக் கூட்டங்களில் தற்போதிருக்கும் பிரச்சனைகளை மட்டுமே கதைத்துக் கொண்டிருக்கும், மாறி மாறிப் பழி சுமத்தும் நிலைமைகளை மாற்றி, ஆசிரியர்களிடையே நட்புறவையும், பரிந்துணர்வையும், பகிர்தலையும் கற்றுக் கொள்ளலையும் மேம்படுத்தும் நட்புறவுச் சூழலை ஏற்படுத்த வேண்டும்.
6. ஆசிரியர்களிற்கும் அதிபர்களிற்கும் தேவைப்படுகின்ற மேற்பார்வைப் பொறிமுறையைப் பலப்படுத்தி, சிறந்த மதிபபீட்டு முறையை உருவாக்கி, அதன் பெறுபேறுகள் பற்றியும் கூறவேண்டும்.
7. கூட்டான செயற்பாடுகளில் பங்கெடுப்பதன் மூலமும் சிரமமான கூட்டங்கள் மூலமும் பாடாலைக்கும் பெற்றோர், சமூகம், அரச கட்டமைப்புக்கள் போன்றவற்றிற்கும் இடையேயான இடைவினைகளையும் தொடர்பாடல்களையும் ஊக்குவிக்க வேண்டும்.

**தர்மபுரம் மகா.வி .**
**கிளிநொச்சி வலயம், வட மாகாணம்**







# 4: கற்றல், கற்பித்தல் பரீட்சைகள்

## அறிமுகம்

**தங்களின் ஆற்றலை அதிகரிப்பதற்கு அனைவருக்கும் கல்வி**

கற்றல் என்ற இயல்பு அனைத்து உயிரினங்களுக்கும் இயற்கையாக இருக்கும் ஒரு சிறப்பம்சம். அடிப்படையில் நாம் சந்திக்கும் ஒவ்வொருவரிடமிருந்தும் அன்றாடம் பெறும் அனுபவங்களினூடாகவும் இயல்பாகவும் பலவற்றைக் கற்றுக்கொள்கிறோம். இக் கற்றலை வழிப்படுத்தவும் கிரகிக்கவும் மனிதன் கற்பித்தல் முறைமையை உருவாக்கினான். இந்த முறைமை தேவைக்கேற்பவும் கிடைக்கப் பெற்ற கருவிகள் வசதிகளுக்கேற்பவும் மாறிவந்துள்ளன.

கற்பித்தல் – கற்றலின் பரிணாமம்








ஆரம்பத்தில் கேட்டல், இயற்கையை அவதானித்தல் மூலம் இடம் பெற்ற கற்றல் கற்பித்தலானது வரி வடிவங்கள், சொற்கள், படங்கள்என்பவற்றின் உதவியுடன் மாற்றமடைந்தன. காலம் செல்ல அச்சிடலில் ஏற்பட்ட புதிய கண்டுபிடிப்புகள் உதாரணமாக குட்டன்பேர்க் அச்சியந்திரக் கண்டுபிடிப்பு போன்றன உலகிலுள்ள பொரும்பாலான மக்கள் கற்பதற்கு வழிவகுத்தன. அத்துடன் கற்றல் கற்பித்தல் முறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. தமிழ் கலாசாரத்தில், ஆரம்பத்தில் பனை ஓலைச் சுவடிகள், கல்வெட்டுக்கள், சுவர்கள் போன்றவற்றின் மூலம் குருகுலங்களில் சிறு குழுக்களாக கற்றல் இடம்பெற்றது. இவ்வகையில் அறிவுசார் விடயங்கள், அவதானித்தல், உற்றுநோக்கல், பயிற்சிகளை மேற்கொள்ளல் மூலம் திறன்களை விருத்தி செய்தல் என்பன இடம்பெற்றன. தற்காலத்தில் கணினி, வலையமைப்புக்கள் போன்றவை கிடைக்கப் பெற்றமையால் இவை பரந்த, நெகிழ்ச்சித் தன்மையான கற்றல் கற்பித்தலுக்கான சூழலை அறிமுகம் செய்துள்ளன.

கடந்த முப்பது வருட யுத்த காலத்தில் வெளிமாகாணங்களிலிருந்தும் தம்மத்தியிலும் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு சமூக அமைப்பினுள் இயங்கிய வடமாகாணத்திலுள்ள மக்கள் திடீரென அறிமுகப்படுத்தப்பட்ட கருத்துக்கள், முறைமைகள், மற்றும் தற்போது உருவாகிய புதிய திறன்கள், ஆகியவற்றிற்கு முகங்கொடுத்து ஈடுகொடுக்கக் கூடியவர்களாக கற்க வேண்டிய தேவை உள்ளது. அத்துடன் போரினால் பாதிக்கப்பட்டு நெருக்கடிக் குள்ளாகிய நிலையில் அவற்றிற்கு ஈடு கொடுக்கும் வகையில் புதிய ஆளுமைத் திறன்களையும் கற்றுக் கொள்ளவேண்டியது அவசியமாகும். இது ஒரு சவாலாக காணப்படினும் கற்றலுக்கான ஒரு சந்தர்ப்பமுமாகும்.


Figure 4.1: Pupil Teacher Ratio at Primary level by Province, 1990 & 1998




Source: www.educationandtransition.org

தற்போதைய இந்நிலையானது கற்றல் கற்பித்தலில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என பரிசீலிக்க வேண்டியது அவசியமாகும். கற்றல் கற்பித்தல் தரத்தை மேம்படுத்த தற்போதைய நிலைமையை ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்த முடியுமா? இத்தகைய மாற்றங்கள் ஆய்வு செய்யப்பட வேண்டியது அவசியமாகும். உரு 4.1 ஏனைய மாகாணங்களிலும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஆசிரியர் மாணவர் விகிதம் உயர்வாகக் காணப்படுவதைக் காட்டுகின்றது. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 1990 இலும் தடை வலுக்கட்டாயமாக நடைமுறைப் படுத்தப்பட்டது. இவ்விகிதம் 2002 வரை யுத்த நிறுத்த உடன்படிக்கைவரை தொடர்ந்துள்ளது. வடமாகாணத்தில் தற்போது ஆசிரியர் மாணவர் விகிதம் 1:17 ஆகக் காணப்படுகின்றது. ஆனால் பாடசாலைக்குப் பாடசாலை, வலயத்திற்கு வலயம் வேறுபட்டுக் காணப்படுகின்றது. இடம்பெயர்ந்த, உயர் பாதுகாப்பு வலயம் எனப் பிரகடனப்படுத்தப்பட்ட இடங்களில் உள்ள பாடசாலைகளில் நான்கு தொடக்கம் 20 வருடங்கள் வரை 12 தொடக்கம் 200 வரையான எண்ணிக்கையுள்ள மாணவர்கள் காணப்படுகின்றனர். இப்பிரதேசங்களில் உள்ள குடும்பங்கள் இடம்பெயர்ந்து சென்ற பின்னர் பல்வேறு காரணங்களுக்காக மீளவும் திரும்பவில்லை.

Figure 4.2: Percentage of Merit Students that Entered from the Jaffna District




Source: Roshan Ragel and Arunan Sivananthan "The State of Higher Education in the North and the East of Sri Lanka" – Similar data is also available for the other Northern Districts in the same publication.

[1]UNESCO (2000). ,Education for All: The Year 2000 Assessment Final Country Report of Sri Lanka' (accessed 7 July 2014: http://www.unesco.org/education/wef/countryreports/sri_lanka/rapport_3.html)


இங்கு யுத்தம் ஆரம்பித்து முடியும் வரையுள்ள காலப்பகுதியில் தேசிய பரீட்சைகளுடன் ஒப்பிடும்போது அவதானிக்கக்கூடிய முன்னேற்றங்கள் காணப்படவில்லை. (உரு 4.2) தடை, யுத்த கால யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட குறுகிய காலத்தில் உள்ள பெறுபேறுகளைக் காட்டுகின்றது. ஏனைய மாவட்டங்களுக்கான தரவுகளும் இத் தரவுகள் பெறப்பட்ட மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இத்தகைய நிலைமைகளில் வடக்கு மாகாண கல்விப் புலத்தின் மீளாய்வு பிரதானமான மைல்கல்லாகும். இவ்வலகில் கற்றல் கற்பித்தலில் எதிர்நோக்கிய பிரச்சினைகள் ஆசிரியர் கல்வி, தேசிய பரீட்சைகள் என்பன ஆறு பிரதான பகுதிகளாக்கப்பட்டு ஆராயப்பட்டுள்ளன.

## பன்முக நுண்மதி

உரு 4.3 இல் காண்பிக்கப்பட்டுள்ள விளக்கப் படமானது ஹவாட் பல்கலைக்கழகத்தின் ஹவாட் காடினர் அவர்களால் முன்வைக்கப்பட்ட ஒன்பது பன்முக நுண்மதிகளையும் படங்கள் மூலம் விளக்குகின்றது. இவ் எண்ணக்கருவானது அறிகை உளவியலாளர்களாலும் கல்வியாளர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாகும். ஆரம்பக்கல்வி தொடக்கம் க.பொ.த. சாதரண தரம் வரைக்குரிய பாடவிதானங்கள் பாரம்பரிய வாய்மொழி மூல அல்லது மொழியியல் சார்ந்த காரணங்காணல் மற்றும் எண்சார் அல்லது கணிதம்சார் காரணங்காணல் நுண்மதிகள் ஊடாக கற்பிப்பதிலும் பார்க்க ஒன்பது நுண்மதிகளையும் வளம்படுத்தக்கூடிய வகையில் பல பாடங்களின் ஊடாக மாணவர்களுக்கு கற்பிப்பதனை ஏற்றுக்கொண்டுள்ளது. நாட்டியம், சங்கீதம், விளையாட்டு, நாடகம், சமயக் கல்விகள், சித்திரம், விவசாயம், மீன்பிடியியல், தொழினுட்பக்கல்வி, சமூகக்கல்வி என்னபவற்றின் உள்ளடக்கங்கள் பன்முக நுண்மதியை தூண்டுவதற்கு உதவியுள்ளன.

Figure 4.3: Multiple Intelligences




Source: http://sitemaker.umich.edu/356.martin/home

எப்படியாயினும் சில பாடங்கள் தெரிவிற்குரியவையாக இருப்பதனால் மற்றைய பாடங்களை கற்பதை மாணவர்கள் தவறவிடுகின்றனர். தெரிவுக்குரிய பாடநெறிகள் சிலவற்றை க.பொ.த. சாதரண தரத்தில் பரீட்சிக்கப்படாததாகவும் ஒன்று அல்லது இரண்டு தவணைகளுக்கு மட்டும் உரியதாகவும் கட்டாயமாக்குவது முக்கியமானதாக உள்ளது.


கல்வி பெறுதலில் அனுபவமூலமான கற்றல்-கற்பித்தல், நடைமுறையான செயற்பாடுகள் என்பவையே முதன்மையான நோக்கங்கள் மட்டுமன்றி அவற்றிற்கு முன்னுரிமையும் வழங்கப்பட வேண்டும்.

## மீள்பார்வைப் பரப்பு

பிள்ளைகளுக்கு அனுபவமூல கல்வியை வழங்கி அதனை விருத்தி செய்ய ஆசிரியர் கல்வி உட்கட்டமைப்பு, பாடசாலைகள், கல்வி நிர்வாகத் திணைக்களங்கள், ஆசிரியர் நியமனங்கள், அத்துடன் முழுக் கல்விப் புலமும் உருவாக்கப்பட்டு பேணப்படல் வேண்டும்.

இதன் காரணமாக அனுபவமூலமான கற்றல் கற்பித்தல் முறைமையில் கல்விப்புலத்தின் செயற்பாட்டில் ஏற்படும் ஏதாவது சிறிய பிரச்சினையும் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். மீளாய்வில் கற்றல் கற்பித்தல் பகுதியானது ஏனைய பகுதிகளுடன் பின்னிப்பிணைந்துள்ளது. ஏனைய பகுதிகளின் செயற்பாடுகள் கற்றல் கற்பித்தலில் தாக்கம் செலுத்துவதுடன் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் ஏனைய பகுதிகளின் செயற்பாடுகளிலும் தாக்கத்தைச் செலுத்தும். இந் நிலைப்பாட்டில் மீளாய்வுப் பகுதிக்கான எல்லைகளைக் குறிப்பிடுவது சாத்தியமற்றதாகும். இந் நிபந்தனைகளின் அடிப்படையில் கற்றல் கற்பித்தல் பிரிவுகளாகக் கருதப்படுவன: ஆரம்ப, இடைநிலை, இரண்டாம் நிலை, தொழில்சார், தொழினுட்பத்திறன்சார் கல்வி, ஆசிரியர் கல்வி, அத்துடன் தேசிய பரீட்சைகள் என்பனவாகும்.

**Figure 4.4: Experiential Method of Teaching & Self Learning**




மேலே குறிப்பிடப்பட்ட குறிப்பு விதிமுறைகளுக்கு அமைய ஆசிரியர் மாணவரின் உடல் சமூக நன்னிலை, முன் பிள்ளைப் பருவ விருத்தியும் கல்வியும், விசேட கல்வி, தொடர் கல்வி, ஆசிரியர் நிர்வாகம், நிதி, கல்வி அமைப்பு அதனுடன் தொடர்புபட்ட பகுதிகள் வேறுபட்ட பிரிவுகளில் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை மீளாய்வு அறிக்கையில் பிற்பகுதியில் முன்வைக்கப்பட்டுள்ளன.

## மீள்பார்வைக் குறிக்கோள்கள்

ஒரு பாடத்தில் பயன்படுத்தப்படும் கற்றல் கற்பித்தல் முறைகள் அப் பாடம் தொடர்பான அறிவில் பாண்டித்திய நிலையை அடையச் செய்வதை முனைப்பாகக் கொண்டிருக்கும். சில சந்தர்ப்பங்களில் இத்தகைய கற்றல் கற்பித்தல் முறைகள் குறிப்பிட்ட தொழிலுக்கு மாணவரைத் தயார்ப்படுத்துவதாக அமையும். ஆனால் தற்போதைய மாணவர் தொகையை எடுத்துக் கொள்வோமாயின், அதில் அநேகமான மாணவர்கள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையின் பின்னர் அதாவது தரம் 11 இன் பின்னர் அல்லது அமெரிக்காவில் தரம் 10 இன் பின்னர் பாடசாலையை விட்டு விலகுகின்றனர். ஏனையோரில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்கள் கல்விப் புலத்தை விட்டு விலகுகின்றனர். (அட்டவணை 4.1 ஐப் பார்க்க. மூலம்: www.worldbank.org)

2010 இல் உயர்வான பெறுபேற்றைக் கொண்ட மூன்றில் ஒரு பகுதியினருள் காணப்பட்ட

**Table 4.1: Sri Lanka O/L Results - 2011**

G.C.E (O/L) Examination - 2011
Performance of School Candidates (Freshers) by Province

| | Province | No Sat for 5 or more subjects | Qualified for GCE(A/L) | | Obtained 9 A's | | Failed in all Subjects (Appeared in 6 and above) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | No | % | No | % | No | % |
| 1 | Western | 69614 | 46337 | 66.56 | 2001 | 2.87 | 2692 | 3.87 |
| 2 | Central | 35265 | 20309 | 57.59 | 462 | 1.31 | 1930 | 5.47 |
| 3 | Southern | 34908 | 21944 | 62.86 | 507 | 1.45 | 1891 | 5.42 |
| 4 | Northern | 18021 | 9778 | 54.26 | 103 | 0.57 | 646 | 3.58 |
| 5 | Eastern | 20848 | 11755 | 56.38 | 148 | 0.71 | 792 | 3.80 |
| 6 | North Western | 30689 | 19237 | 62.68 | 291 | 0.95 | 1104 | 3.60 |
| 7 | North Central | 16797 | 9422 | 56.09 | 84 | 0.50 | 1086 | 6.47 |
| 8 | Uva | 18637 | 10147 | 54.45 | 86 | 0.46 | 1329 | 7.13 |
| 9 | Sabaragamuwa | 25253 | 15262 | 60.44 | 226 | 0.89 | 1325 | 5.25 |
| | **Island** | **270032** | **164191** | **60.80** | **3908** | **1.45** | **12795** | **4.74** |

Source: www.worldbank.org

வடமாகாணப் பெறுபேறுகள் 2011 இல் இறுதி நிலையில் காணப்பட்டது. இந் நிலையில் தமது கல்வியை முடித்து சமூகத்தில் ஒருவனாக நுழையும்போது அச் சமூகத்தில் வசிப்பதற்கேற்ப நாளாந்த தேவைகளுக்கு ஈடு கொடுக்கக்கூடிய வகையில் தொழில்சார் திறன்களையும் அறிவையும் கொண்டிருத்தல் வேண்டும். ஆனால் தற்போதைய கல்வியமைப்பின்படி 16,17 வயதுகளில் க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியடையாத மாணவர்களுக்கு எத்தகைய தொழில்சார் திறன்களும் வழங்கப்படுவதில்லை.

இத்தேவைகளைக் கருத்திற் கொண்டு அறிவு, திறன்கள், தொழில் சார்ந்த திறன்கள் ஆகியவற்றில் அவசியமாகக் கவனத்தைச் செலுத்தும் வகையில் கற்றல் கற்பித்தல் பகுதியினர் பிரச்சினைகளை ஆராய்ந்தறிந்து அவர்களின் அவதானிப்புக்களையும் பரிந்துரைகளையும் முன்வைக்கின்றனர்.

## கற்றல் கற்பித்தல், ஆசிரியர்கல்வி, தேசிய பரீட்சைகள் தொடர்பான தற்போதைய நிலைமை

### வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் தொடர்பான அவதானிப்புகள்

கடந்த காலத்திலும் தற்போதும் கல்வியில் பங்களிப்புச் செய்தோரின் அவதானிப்புக்களின் சுருக்கத்தைப் பின்னிணைப்பு 1 இல் பார்க்க.

தரம் 6 தொடக்கம் 8 வரை வெவ்வேறு ஆசிரியர்களிடமிருந்து வெவ்வேறு பாடங்களைக் கற்கவேண்டியநிலை காணப்படுகின்றது. பாடசாலைகளும் இம் மூன்று வகுப்பு மாணவர்களில்

போதிய கவனம் செலுத்துவதில்லை. இந்நிலை மாணவர் கற்றலில் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றது.

ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் வழங்கப்படும் இரு வருடப் பயிற்சி நெறியின் போதாமையே விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் க.பொ.த. சாதாரண தரத்தில் மாணவர் பெறுபேற்றுக் குறைவுக்குக் காரணமாகும். இரு வருட ஆசிரியர் பயிற்சி நெறியை மாற்றியமைப்பது வரவேற்கத்தக்க தீர்மானமாக அமையும்.

க.பொ.த. உயர் தரத்தில் கலைப்பிரிவில் தோற்றிய மாணவர்கள் கல்வியியற் கல்லூரிகளில் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான கற்கை நெறியைத் தொடரும்போது அவர்கள் ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதிலும் தேர்ச்சியடையச் செய்ய வேண்டும். இந்நிலைமை மாணவர்கள் ஆரம்பக் கல்வியில் கணிதம், விஞ்ஞானம் சார்ந்த பாடங்களில் போதியளவு அடிப்படை விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள வழிவகுப்பதுடன் இடைநிலை வகுப்புகளில் கணித, விஞ்ஞான பாடங்களில் போதியளவு சித்திப்புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளாது கலை, வர்த்தக பிரிவுகளைத் தெரிவு செய்யும் சந்தர்ப்பங்கள் குறையவும் வாய்ப்பேற்படும்.

## ஆசிரியர்கள்

### அவதானிப்புகள்

ஆசிரியர்கள் தமது வருமானத்தை ஈட்டும் நோக்கில் தனியார் கல்வி நிறுவனங்களில் கற்பிக்கின்றனர். ஆசிரியர்களும் சிலவேளைகளில் அதிபர்களும் மாணவர்களை அவர்களுக்கு விருப்பமான தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று கல்வி கற்க ஆலோசனை வழங்குகின்றனர். இத்தகைய நடைமுறைகள் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

பாடசாலைகளில் கற்பிப்பது பெருமையானது என ஆசிரியர்கள் உணர்ந்து கொள்ளச் செய்தல் வேண்டும். உயர்வான வினையாற்றலைக் கொண்ட ஆசிரியர்களுக்கு வெளிப்படையாக ஊக்குவிக்க உயர்வான சம்பளத்தையும் இடமாற்றமின்றி நீண்ட கால ஒப்படைகளை வழங்கியும், ஆசிரியர்கள் உரிய பாடசாலையால் கணிப்புச் செய்யப்பட்டும், மேலும் பாடசாலையும் சமூகமும் உயர்வான பெறுபேற்றை பாடசாலை அடையும் இலாபமாகக் கருதி இவ்வூக்குவித்தலைச் செய்தல் வேண்டும். பாடசாலையிலிருந்து தொலைவில் வசிக்கும் ஆசிரியர்கள் கஷ்ரப் பிரதேச ஊக்கவிப்புடன் கடமையாற்ற விரும்பின் அத்தகைய பாடசாலைகளில் கற்பிக்க உதவுதல் வேண்டும்.

வகுப்பறையில் போதியளவு கற்பித்தல் வளங்கள் இல்லை. கற்றல் கற்பித்தலுக்கான வகுப்பறைச் சூழலை மேம்படுத்தல் தொடர்பாக இவ்வறிக்கையில் வெவ்வேறு தலைப்புக்களில் முன்வைக்கப்பட்டுள்ளன.

பாடசாலை எல்லைக்கு உள்ளேயும் விளையாட்டு மைதானம் தொடர்பாகவும் தொண்டர் சேவைகள் இடம்பெறுகின்றன. சென்.ஜோன்ஸ் படையணி, சாரணர் இயக்கம் போன்றவை தவிர ஏனைய செயற்பாடுகளுக்கு குறைவாகவே இச் சேவைகள் இடம் பெறுகின்றன. பாடசாலைகளில் ஆளிடைத் தொடர்பு, மனதார சேவைகளை வழங்கக்கூடிய பண்பு என்பவற்றை விருத்தி செய்ய சேவை மனப்பாங்கை ஊக்குவித்தல் வேண்டும்.

நெருக்கடி நிறைந்த வயதினையுடைய இடைநிலை மாணவர்களுக்கு (தரம் 9, 10, 11, 12, 13) முறையான கல்விசார் உளவளத்துணை சேவைகள் வழங்கப்படுவதில்லை. இவ்வாறே தரம் 11, தரம் 13 இன் பின்னர் பாடசாலையை விட்டு விலகி தொழிலைத் தேடவேண்டிய மாணவர்களுக்கு முறையான தொழில் வழிகாட்டல்களும் வழங்கப்படுவதில்லை. சிறிய அளவில் உளவளத்துணை வழிகாட்டல், சமூஉளவியல், தொடர் கல்வி போன்றவற்றிற்கு குறிப்பாகப் பரிந்துரைகள் காணப்படுகின்றன.

சேவைக்கால பயிற்சியின் போது ஆசிரியர்கள் – மல்லாவி – 1998



## பரிந்துரைகள்

### ஆரம்பக்கல்வி

1. எல்லா ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கும் கணித, விஞ்ஞான எண்ணக்கருக்கள் பற்றியும் தமிழ் மொழி, ஆங்கிலம் அத்துடன் கல்வி முறைமை தொடர்பாகவும் பயிற்சி வழங்க வேண்டும்.
2. தற்போது கலைப்பிரிவில் தேர்ச்சியைப் பெற்றுள்ள தரம்1 தொடக்கம் தரம் 5 வரை கற்பிக்கும் ஆசிரியர்களின் தேர்ச்சி மட்டத்தை அதிகரித்தல் வேண்டும்.
3. தரம்1 தொடக்கம் தரம் 5 வரை உயர் தகைமையுள்ள தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை எல்லாப் பாடங்களையும் கற்பிக்க விடுதல் வேண்டும். எல்லாப் பாடங்களுக்கும் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களால் கற்பிக்கக் கூடியவகையில் ஆசிரியர்களை நியமிக்க வேண்டும்.
4. எல்லா வகுப்பறைக் கற்றலிலும் பிள்ளை நேய அணுகு முறையை அமுல்படுத்தி கண்காணித்தல் வேண்டும். (UNICEF Method)
5. 2015 வரை உலக உணவுத்திட்டத்தை தொடர்ந்து வழங்கவேண்டும். WFP ஐத் திருப்தி செய்யும் வகையில் செயற்படும் தவறான நடவடிக்கைகளைத் தவிர்ப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

### ஆசிரியர்கள்

1. ஒழுங்கான கல்வி முறைமை, தற்கால கற்பித்தல் முறைகள், பாடப்பரப்புகளின் அறிவு, நடைமுறைப் பிரயோகம் என்பவற்றைக் கூட்டுதல், பொது அறிவு, மாணவர்களை ஊக்குவிக்கும் முறை, கற்றலில் மாணவர்களுக்கான விருப்பத்தையும் ஆர்வத்தையும் பேணுவதற்காக தொடர்ச்சியான ஊக்குவிப்பு என்பவற்றினூடாக மாணவர்களை எதிர்கால சமூகத்திற்கு ஏற்ப தயார்ப்படுத்த முடியும் என ஆசிரியர்களுக்கு எடுத்துரைத்து அவர்கள் மனதில் பதித்தல் வேண்டும்.
2. கற்பித்தல் முறைகள், மாணவர் அடைவை அளவிடல், மாணவர் ஒழுக்கங்களைப் பேணுதல் போன்றவற்றில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்குதல் வேண்டும். பல்வேறு பாடங்களிலும் புதிய மற்றும் நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர் களுக்கு மாணவர்களின் மனவெழுச்சிசார் நடத்தைகளை சிறந்த நிலையில் எவ்வாறு பேணுவது என்பது தொடர்பான பயிற்சி நெறிகளை வகுப்பறைக்

கற்பித்தலை ஆரம்பிப்பதற்கு முன்னரும் பின்னரும் வழங்குதல் பயனளிக்கத் தக்கதாகும்.

3. வினைத்திறனுடன் செயற்படுத்தும் நோக்கில் கல்வி அமைச்சினால் நிறுவப்பட்டு வலயக் கல்விப் பணிமனையின் கீழ் இயங்கும் ஆசிரிய வள நிலையங்கள் தமது கடமைப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுவதைத் தீர்மானிக்க ஒவ்வொரு வலயத்திலும் அமைந்துள்ள ஆசிரிய வள நிலையங்களிலுள்ள கருவிகள், தளபாடங்கள், ஆளணி நிலைமைகள், மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பான மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ள வேண்டும்.
4. சேவைக் காலப் பயிற்சி தேவைப்படும் விடயப்பரப்புகளை தீர்மானிப்பதற்கு ஆசிரியர்களுடன் கலந்தாலோசித்து பயிற்சியை மேற்கொள்வதுடன் அதில் பெற்றுக் கொண்ட விடயங்கள் வகுப்பறையில் முன்வைக்கப்படுகின்றனவா என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.
5. கற்றல் கற்பித்தலில் செயல்நிலை ஆய்வுகளை மேற்கொண்டு, மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகளை அதே பாடத்தைக் கற்பிக்கும் வேறு ஆசிரியர்களுடன் கலந்துரையாடி மேலும் கற்பித்தல் தொடர்பாகக் கற்று புதிய கற்பித்தல் முறைகளையும் தொழினுட்பங்களையும் அறிமுகம் செய்ய ஆசிரியர்களை ஊக்குவித்தல் வேண்டும்.
6. மாணவர் கற்றலை மேம்படுத்த சேவைக்கால ஆலோசகர்கள் குறிப்பிட்ட வகையிலான (தகவல்கள், வகுப்பறைச் செயன்முறை) மாதிரி வகுப்புக்களை நடத்திக் காட்டுதல் அவசியமாகும்.
7. தரம் 10 தொடக்கம் 13 வரை கற்கும் மாணவர்கள் இவ் வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களில் ஒருவரைத் தனது கல்வி, தொழில் வழிகாட்டல் ஆலோசகராக தெரிவு செய்யவேண்டியது அவசியமாகும். அவர்கள் மாதத்திற்கு இருமுறை சந்தித்து வழங்கப்பட்ட ஆலோசனைகள் தொடர்பான பதிவுகளை மேற்கொண்டு பேணுதல் வேண்டும்.
8. கல்வி சார் உளவளத் துணையாளர் மாணவர்களை பாடசாலை, சமூகத் தொண்டு வேலைகளில் ஈடுபடச் செய்வதுடன் 16 அல்லது அதிலும் கூடிய வயதுள்ள மாணவர்களுக்கு பாடசாலை நேரம் தவிர்ந்த நேரங்களில் மணித்தியாலக் கொடுப்பனவிற்கமைய தொழிலைப் பெற்றுக் கொள்ள முயற்சித்தல் வேண்டும்.
9. பாடசாலையில் அல்லது பாடசாலைக்கு வெளியே தொண்டர் சேவை அல்லது கொடுப்பனவுடனான வேலையைச் செய்யும் மாணவர்களுக்கு பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத் திட்டத்தில் புள்ளிகளை வழங்க வேண்டும்.

## வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் தொடர்பான பரிந்துரைகள்

1. விசேட வளங்கள் உள்ள பாடசாலைகள் அருகில் உள்ள வளமற்ற பாடசாலைகளுடன் அவ்வளங்களை பகிர்வதற்கு ஊக்குவிக்க வேண்டும்.
2. ஒவ்வொரு பாசாலையிலும் சிறந்த நூல்களைக் கொண்ட நூலகத்தையும் ஒவ்வொரு வகுப்பறையிலும் மாணவரின் ஆர்வத்திற்குரிய நூல்கள் உள்ள அலுமாரியைக் கொண்டிருப்பதுடன் அவற்றை இரவல் பெற்று வீட்டிற்கு கொண்டு செல்லவும் அனுமதி அளித்தல் வேண்டும்.
3. வன்னியில் உள்ள காடுகளில் இயற்கை நிலையங்களை நிறுவுதல் வேண்டும். மாகாணங்களில் இருந்து வரும் மாணவர்கள் ஆசிரியர்கள் நான்கு அல்லது ஐந்து நாட்கள் தங்கியிருந்து அக்காட்டுச் சூழலில் விஞ்ஞானம், கணிதம், சூழலியல் முதலியவற்றை அனுபவம் மூலம் கற்கவிடல் வேண்டும்.

> **தொழில் சார் திறன்கள் விருத்தி மற்றும் நெருக்கீடுகளை முகாமை செய்யும் பயிற்சிகளை வழங்கப் பாடசாலை வளங்களைப் பாடசாலை முடிந்த பின்னரும் வார இறுதியிலும்பயன்படுத்தலாம்.**

4. சூழற்றொகுதி, மக்களுக்கு அதன் பயன்பாடு பற்றி கற்றக்கொள்ள தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தைப் பயன்படுத்தல் வேண்டும்.
5. க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு வார இறுதி நாட்களிலும், வார நாட்களில் மாலை3.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை தொழிற்திறன், மென் பொருள் சார் திறன்கள், முரண்பாட்டு முகாமைத்துவம், விழுமியக் கல்வி, புறக்கலைத்திட்டச் செயற்பாடுகள், கற்கை நெறிகளை மேற்கொள்ள

பாடசாலைகளைப் பயன்படுத்துவதற்கு ஆவன செய்தல் வேண்டும். க.பொ.த. சாதாரண தரம், உயர் தரத்தில் சித்தியடையாத மாணவர்களுக்கு திறன்சார் வகுப்புகளைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியும். இம் மாணவர்கள் பாடசாலை மாணவர்களாகவே கருதப்படுவதால் நிரந்தர ஆசிரியர் கிடைக்கக் கூடியதாக இருப்பதுடன் செலவையும் குறைக்கமுடியும்.

6. ஜனவரி 2014 இல் இருந்து தரம் 12 வரை கட்டாயக் கல்வியாக மாற்றப்படல் வேண்டும். 2015 இல் இருந்து தரம் 13 வரை கட்டாயக் கல்வியாக மாற்றப்படல் வேண்டும். பிரித்தானியாவில் 2013, 2014 ஆகிய ஆண்டுகளில் இது மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதிதாக வடிவமைக்கப்பட்ட தேசிய பரீட்சைகளில் மாணவர்கள் தமது பெறுபேற்றுக்கு அமைய தொழில்சார் நுட்பத்துறை அல்லது கல்விசார் துறை ஒன்றைத் தெரிவு செய்து கொள்ளமுடியும். இத் தேசிய பரீட்சைகள் செய்முறை அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட கற்றல், சமூக செயற்பாடுகள் என்பவற்றிலான பாடசாலை மட்ட வினையாற்றுகைக்கான கணிப்பீடுகளையும் உள்ளடக்கியிருக்கும்.
7. 2013 இல் கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் 30% இலும் குறைவான பெறுபேற்றைக் கொண்ட ஒவ்வொரு வலயத்திலும் இரு பாடசாலைகளில் இலத்திரனியல் கற்கை நெறியை அமுல்படுத்த வேண்டும். இதற்கு ஏற்கனவே தயாரிக்கப்பட்டதும் தற்போது மாகாணக் கல்வித் திணைக்களத்தால் எல்லா வகுப்புகளுக்கும் தயாரிக்கப் படுகின்றதுமான இலத்திரனியல் அலகுகள் பயன்படுத்தப்படும்.


**மாணவமையக் கல்வி நோக்கி குவியப்படுத்தல்**

8. ஒவ்வொரு தவணை ஆரம்பத்திலும் மாணவர் ஒவ்வொருவரினதும் அறிவு, திறன்கள் கணிப்பிடப்பட்டு அவர்களுக்குப் பொருத்தமான இலத்திரனியல் கற்கை அலகுகளை வழங்கி தவணை முடிவில் மேற்கொள்ளப்படும் கணிப்பீட்டுடன் ஒப்பிடல் வேண்டும்.
9. முதன்மைப் பாடங்களில் குறைவான பெறுபேறு, வரவு ஆகியவற்றின் அடிப்படையில் தரம் 11 இன் பின் கல்வியைத் தொடர முடியாத மாணவர்களுக்கு தொழிற்திறன்சார் உயர் டிப்ளோமா கற்கை நெறியை வழங்க வேண்டும்.
10. வலய மட்டத்தில் ஆசிரியர்களின் கற்பித்தல் தரத்தை உயர்த்துதல் வேண்டும். மாணவர்களின் பாடசாலைக்கான பயண நேரத்தைக் குறைத்து உயர் தரமான கல்வியைப் பெறும் வகையில் மீத்திறன் மாணவர்களை அனைத்துப் பாடசாலைகளிலும் சேர்த்தல் வேண்டும்.
11. வலய மட்டத்தில் மாணவர்களின் பாடசாலைக்கான பயண நேரத்தைக் குறைத்து விசேட தேவையுள்ள மாணவர்கள் கல்வியைப் பெறும் வகையில் வகுப்பறைகளை பாடசாலைகளில் அமைத்தல் வேண்டும்.
12. மாணவர் மையக் கல்வியில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

**வதிவிடப் பயிற்சி நிலையம் ஒன்றை வன்னியில் நிறுவுதல்**

13. மாணவர்களுக்கு இலத்திரனியல் தளத்தை வழங்க வேண்டும். அதில் பிரதானமான உள்ளடக்கத்தைச் சரி பார்ப்பதுடன் அவற்றிற்கான மேலதிமான உள்ளடக்கம் இனங்காணப்பட்டுள்ளதா? என நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

14. ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் அத்துடன் ஏனைய பாடங்களுக்கும் பாடசாலையில் வழிப்படுத்தி மேம்படுத்தக் கூடிய வகையில் இலத்திரனியல் கற்கை அலகுகளை வழங்கி மாணவர் தமது சுய கற்றல் வேகத்திற்கமைய செயற்படவிடல் வேண்டும்.
15. கூட்டுறவுக் கற்றலுக்கான திறன்கள், பரிசோதனைகள் மூலம் அனுபவம் சார்ந்த கற்றல், களநிலை ஆய்வு, செயற்றிட்டங்கள் என்பவற்றை மேம்படுத்த சிறு குழுக் கலந்துரையாடல் ஊக்குவிக்கப்படல் வேண்டும்.
16. ஆசிரியர் பற்றாக்குறையுள்ளதும், குறைவான பெறுபேற்றைக் கொண்டதுமான 24 பாடசாலைகளைத் தெரிந்து அவற்றில் முன்னோடியாக இலத்திரனியல் கற்கை நெறியை அமுல்படுத்தவேண்டும்.



17. வீடியோ மூலம் கற்றவற்றை அனுபவம் மூலம் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் செயற்பாடுகளுடனான துணைப் பாடங்கள் வழங்கல் வேண்டும்.
18. பாடசாலையிலுள்ள வளங்களைப் பயன்படுத்தி பாடசாலை நேரத்தின் பின்னர் திறன்சார் கல்வியை வழங்கல் வேண்டும்.
19. பாடசாலைகளில் ஆசிரியர் மாணவர் விகிதம் சுற்று நிருபத்திற்கமைய 1:25 அல்லது 1:30 ஆக இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.
20. மாணவர் பிரச்சினைகள் அதாவது மாணவர் எவ்வாறு பாடசாலைக்குச் செல்கின்றனர் பாடசாலைக்குச் செல்லும் வழியில் - வீட்டில், சமூகத்தில் - அவர்களது பிரச்சினைகள் என்பவை தொடர்பாகக் காலத்திற்குக் காலம் களநிலை ஆய்வுகளை மேற்கொண்டு கற்றலில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளான மாணவர் வரவின்மை, ஊக்குவிப்பின்மை முதலியவற்றைக் கண்டறிந்து நிவர்த்தி செய்வதன்மூலம் மாணவர் அடைவை உயர்த்த முடியும்.
21. வகுப்பறைக் கற்பித்தலுக்கான நேரத்தில் புறப்பாடவிதானச் செயற்பாடுகளுக்காகச் செலவிடும் நேரத்தைத் தவிர்த்தல் வேண்டும். மேலும் வெளி நிறுவனங்கள் தமது நோக்கங்களுக்காக நடத்தும் பயிற்சி வகுப்புகள் மற்றும் போட்டிகளை மாணவர்களின் கற்றல், கற்பித்தல் நேரத்தில் நடாத்துவதைத் தவிர்க்க வேண்டும்.
22. உடற்கல்வி, சுகாதாரம், மற்றும் பிரதான பாடங்களைப் போன்று வேலையுலகுக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தக்கூடிய பொருளியல், வர்த்தகமும் வங்கியியலும், தொழில்சார் திறன்கள் ஆகிய புதிய பாடங்களைச் சமமாகக் கருதவேண்டும்.
23. மாணவர்களும் ஆசிரியர்களும் தமது தாய்மொழியில் விசேடமாக இலக்கணத்தில் தேர்ச்சி அடைய ஊக்குவித்தல் வேண்டும். இத் தேர்ச்சி தாய்மொழியிலான பரீட்சைகளில் மாணவர் வழங்கப்பட்ட வினாக்களைப் புரிந்து கொள்வார்கள் என்பதை உறுதிப்படுத்தும்.
24. எல்லா வகுப்புகளிலும் எல்லாப் பாடங்களிலும் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற கலைத்திட்டம் தமிழ் மொழியிலும், அதேவேளை ஒவ்வொரு பாடத்திலும் நிபுணத்துவம் வாய்ந்தவர்களின் ஆலோசனையுடனும் உதவியுடனும் மீளாய்வு செய்யவேண்டியது அவசியமாகும்.
25. இனங்காணப்பட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தமது கற்கைக்குப் பொருத்தமான பிரசுரிக்கப்பட்ட ஆய்வு அறிக்கைகளுடன் ஒப்பிடவும் வேறுபாடுகளை அறியவும் மேலும் வாசிப்பதற்கும் ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஊக்குவித்தல் வேண்டும்.
26. அதிபர், தவணை விடுமுறையின் முடிவில் ஆசிரியர்களின் கடந்த தவணைத் தொழிற்பாடுகள் தொடர்பாகக் குழுவாகக் கலந்துரையாடுவதுடன் அடுத்த தவணைக்கான ஆயத்தங்களையும் மேற்கொள்ளல் வேண்டும். இக் கலந்துரையாடலானது கற்பித்தல் முறைகள், நிர்வாக நடைமுறைகளைச் சீரமைத்தல், கற்றல் கற்பித்தலில் புதிய நுட்பங்களை அறிமுகப்படுத்தல் போன்ற விடயங்களிலும் கவனம் செலுத்தவேண்டும். மேற்படி கலந்துரையாடலில் அதிபர், பாட உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் இடம்பெற வேண்டும்.
27. சேவைக்கால ஆலோசகர்கள் எல்லாப் பாடசாலைகளையும் சமமாகக் கருதுவதுடன் பாடசாலைகளையும் ஆசிரியர்களையும் மதிப்பீடு செய்து செயற்றிட்டங்களை பரிந்துரைத்தல் வேண்டும்.

## பரீட்சைகள் தொடர்பான அவதானிப்பும் பரிந்துரைகளும்

1. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் நம்பகம், தகுதி பற்றிய கற்கை ஒன்றைத் தேர்வு ஆரம்பிக்கப்பட்ட காலப் பகுதியிலிருந்து நெட்டாங்கு ரீதியாக மேற்கொள்ளல் வேண்டும். அதுவரை இப்பரீட்சைக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தைக் குறைத்துக் கொள்ளல் வேண்டும்.

**மாணவர்களின் பெறுபேறுகளைக் கருதாது தேவை அடிப்படையில் புலமைப் பரிசில் வெகுமதி வழங்கல்**

2. வறுமைக்கோட்டின் கீழ், வறுமைக்கோட்டில் அல்லது வறுமைக் கோட்டிற்கு சற்று மேல் உள்ள குடும்பங்களிலுள்ள மாணவர்களுக்கு அவர்களின் பெறுபேறுகளைக் கருத்தில் கொள்ளாது புலமைப்பரிசில் வெகுமதிகளை வழங்குவதற்கான திட்டத்தை அறிமுகப்படுத்தல் வேண்டும்.

3. பெற்றோரில் இருவரையும் அல்லது ஒருவரை இழந்த மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குதல் வேண்டும்.
4. க.பொ.த. (சாதாரண), க.பொ.த. (உயர்தரத்தில்) உயர்வான பெறுபேறுகளைக் கொண்டிருக்கும் பாடசாலைகளுக்கான அனுமதி, மாணவர் கற்கும் பாடசாலையை அடிப்படையாகக் கொண்டும் வலயக் கல்விப் பணிமனையினால் நடத்தப்படும் கல்விசார் மதிப்பீட்டுடன், மாணவர் வளர்ச்சி சாரந்த ஏனைய விடயங்களில் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டில் அடிப்படையிலும் அமைதல் வேண்டும்.
5. மாகாணமட்டத்தில் நடத்தப்படும் தரம் 9 பரீட்சையை வலுப்படுத்தல். அதில் எழுத்துப் பரீட்சை மட்டுமன்றி மாணவர்களின் பல்வேறு திறன்களையும் பரீட்சித்தல் வேண்டும்.
6. ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி என்பவற்றை மாணவர்களை எதிர்காலத்திற்கு முகம் கொடுக்கக் கூடியவகையில் நாளாந்த வாழ்க்கைக்கும், வேலையுலகிற்கும் தம்மைத் தயார்ப்படுத்தக் கூடிய திறன்களை வழங்கக்கூடியதாக வலுப்படுத்தல் வேண்டும்.

## கல்விப் பொதுத் தராதர உயர்தரம்

### அவதானிப்புகள்

க.பொ.த. உயர் தரப் பரீட்சையானது முக்கியமாக பல்கலைக்கழங்கள், கல்வியியற் கல்லூரிகள், உயர் தொழினுட்ப, வணிக நிறுவனங்களுக்கு மாணவர்களைத் தெரிவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் இரண்டு வருடங்கள் மூன்று பாடங்களைக் கற்று சராசரியாக அரைப் பங்கினர் மூன்றாம் நிலைக் கல்வியைத் தொடர முடியாது தொழில்சார் திறன்கள் எதுவுமின்றி கல்வியை முடித்துக் கொள்கின்றனர். அவ்வாறு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானோர் பல்கலைக்கழக வாழ்க்கைக்கு ஈடுகொடுக்கக் கூடிய போதிய வல்லமை இல்லாதவர்களாகவும் அறிவு திறன்கள் இன்றியும் அத்துடன் தமது பாடப் புலத்திற்கு அப்பால் பல்கலைக் கழகத்திலிருந்து எவ்வித அறிவையும் பெற்றுக் கொள்ள முடியாத நிலையிலுள்ளனர். இவ்விரு பரீட்சைகளும், பரீட்சைக்கான கற்பித்தல் முறைகளும் ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் ஆக்கத்திறன் விருத்திகளைத் தடுக்கின்றது.

பல்கலைக்கழகங்கள் மூன்று வருட காலம் பட்டப் படிப்பை வழங்குகின்றன. இதில் முதல் வருடத்திற்கான கலைத்திட்டமானது நூலக வசதியும் ஆய்வுகூட வசதியும் குறைந்த முதுகலைமாணிப் பட்டம் பெற்ற விரிவுரையாளர்கள் கிடைக்கப் பெற்ற பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்பட வேண்டியதற்குப் பதிலாக இச்சுமையானது இடைநிலைப் பாடசாலைகளின் மீது சுமத்தப்படுகின்றது.







மகிந்தோதய தொழினுட்ப ஆய்வு கூடம், மாங்குளம்.

எனவே தரம் 11, 12 இற்குரிய உள்ளடக்கத்தை மேலும் ஒரு வருட காலத்திற்கு நீடித்து மேலும் பயிற்சிகளை வழங்கியோ அல்லது அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட கற்றல் மூலமாகவோ மாணவர்களைச் சமூகத்திற்கு பங்களிப்புச் செய்யக்கூடிய நபராக்குவதற்கான திறன்களைக் கற்பிக்க முடியும். இவ்வாறு அதிகரிக்கப்பட்ட ஒரு வருட காலத்தில் மூன்று வருட பல்கலைக்கழகக் கல்விக்காக இரண்டு அல்லது மூன்று பாடங்களில் கவனம் செலுத்துவதை விட மாணவர்கள் தமது கல்வியை விரிவுபடுத்துவதற்கு கால அவகாசத்தையும் சந்தர்ப்பத்தையும் பல்கலைக்கழகங்களால் வழங்க முடியும்.

நியூயோரக் கோர்நெல் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பேராசிரியர் ஜோசெப் நெவெக், பேராசிரியர் எமிறிற்ரஸ் ஆகியோரின் நகல் அறிக்கையில் அவதானத்தின்படி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> *"…it is important to recognise that new learning is highly dependent on the concepts and propositions individuals have mastered and skills they have developed for engaging in meaningful learning, as contrasted to rote learning. Both understanding of knowledge and the understanding of meaningful learning can be enhanced with teachers and learners by the use of metacognitive tools, such as concept mapping… We need to turn out powerful learners who have learned how to learn." (Personal communication.)*[2]

## க.பொ.த. சாதாரண தரம்

### அவதானிப்புகள்

தற்போதுள்ள பரீட்சைகள் அறிவு மற்றும் கருத்துக்களைக் கிரகித்தல் போன்ற மனனம் செய்யக்கூடிய விடயங்களையே பரீட்சிக்கின்றன. கல்விக் குறிக்கோள்கள் தொடர்பாக புளூமின் பகுப்பாய்வின்படி பிரயோகம், பகுத்தல், தொகுத்தல், மதிப்பிடல் போன்ற உயர்மட்டங்களும் பரீட்சிக்கப்படல் வேண்டும். இதனடிப்படையில் ஆசிரியர் கல்விக்கான கலைத்திட்டம் மீள அமைக்கப்படுவதுடன் வகுப்பறைக் கற்பித்தலை மேம்படுத்துவதற்காக முறைமைகள் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். இத்தகைய மாற்றங்கள் சேவைக்கால ஆலோசகர்கள் தமது கற்பித்தல், ஆசிரியரை மதிப்பிடும் திறன்கள் என்பவற்றிலும் ஏற்படுத்தப்படவேண்டியது அவசியம்.

தற்போது நடைமுறையிலுள்ள கணிப்பீடு, பரீட்சை முறைகள் அனுபவரீதியான கற்றல் முறைகளுடனான கற்பித்தலில் நம்பிக்கையை இழக்கச் செய்யும். பிரயோகம் மற்றும் உயர்மட்டத் திறன்கள் பரீட்சிக்கப்படவில்லையாயின் ஆசிரியர்கள், பாடசாலை, அத்துடன் பெற்றோர் அத்தகைய கற்பித்தல் முறையை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இத் திறன்கள் கற்பித்தலின்போது மட்டுமே தொடர்ச்சியாக பாடசாலைகளில் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். நடைமுறையிலுள்ள ஒரே தடவையில் நடத்தப்படும் இறுதிக் கூட்டு மதிப்பீடானது காலம் கடந்த முறையாகும். இப் பரீட்சை மனனம் செய்யக் கூடியவர்களைத் தெரிவு செய்வதுடன் கற்றவற்றை பிரயோகித்து இயற்கையாகவே ஆக்கபூர்வமான திறன் கொண்ட மாணவர்களை வெளியேற்றுகின்றது. இத்தகைய மாணவர்களைத் தெரிந்து வெளியே எடுத்தல் வேண்டும். பாடசாலையில் மாணவர் நடத்தை பற்றிய தொடர்ச்சியான கணிப்பீட்டுடன் தவணை ரீதியாக சுயகற்றலுடன் தொடர்புபட்ட செயற்றிட்டங்களுக்கான கணிப்பீட்டிற்கும் புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும். ஏனெனில் இத்தகைய திறன்களே வேலைத்தலங்களில் எல்லா மட்டங்களிலும் அவசியமானவையாகும். வருடாந்த பரீட்சைகள் மாணவர் பெற்றுள்ள அறிவை மீள நினைவு படுத்தும் இயலுமையையே பரீட்சிக்கின்றது.

விஞ்ஞான பாடக் கலைத்திட்டம் ஆசிரிய வழிகாட்டிகள் என்பன உயிரியல், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களை ஒன்றிணைந்த வகையில் கற்பிப்பதையே நோக்காகக் கொண்டுள்ளன. ஆனால் நடைமுறையில் பெருமளவில் ஒருங்கிணைப்பின்றி வெவ்வேறு

[2] Personal communication with Dr. Ethirveerasingam

பாடங்களாகவே கற்பிக்கப்படுகின்றன. அநேகமான ஆசிரியர்களும் அப் பகுதிகளை ஒருங்கிணைத்துக் கற்பிப்பதற்கான பயிற்சியைப் பெற்றவர்கள் அல்லர். பரீட்சைகளில் ஓரிரு வினாக்களைத் தவிர ஏனையவை வெவ்வேறு பாடங்களாகக் கருதியே இப்பாடம் பரீட்சிக்கப்படுகின்றது. ஆனால் பெறுபேறுகள் வெவ்வேறு விஞ்ஞான பாடங்களின் தொகுப்பாக ஒருங்கிணைத்து வழங்கப்படுகின்றது.

## கலைத்திட்டத்திற்கான பரிந்துரைகள்

1. பாரம்பரிய பாடங்களுக்கு எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டதும் கொள்கை ரீதியானதுமான கலைத்திட்டத்தைத் தயாரித்தல் வேண்டும்.
   உதாரணம்: உயிருள்ளவற்றின் மீதுள்ள தாக்கம், தாவரங்கள், விலங்குகள் மீதான இரசாயனத் தாக்கம், எனும் வகையில் ஒளியைக் கற்பிக்கமுடியும்.ஒளியின் பண்புகள், அதன் நிறப்பட்டையை அலை நீளமாகக் கருதுதல்.

2. எல்லாப் பாடங்களிலும் அறிவின் படிமுறை ஒழுங்கில் உயர்மட்டம் வரை வினாக்களை தயாரித்தல் வேண்டும்.

3. மாணவர் சிறிய அளவில் ஆய்வுகளை மேற்கொள்ளல் வேண்டும். நூலகம், பாடசாலை, சூழல் மற்றும் மக்களிடமிருந்து தேவைப்படும் தகவல்களைப் பெற்று ஆய்வுக்குப் பயன்படுத்திய முறை, அவதானிப்புகள், முடிவுகள் என்பவை அடங்கிய அறிக்கையைத் தயாரிக்க வேண்டும். ஒவ்வொரு தவணையும் புள்ளிகள் வழங்கப்பட்டு அவற்றின் மொத்தப் புள்ளிகள் நூற்றுவீதத்தில் க.பொ.த. சாதாரண தரப் புள்ளிகளுடன் வழங்கப்படல் வேண்டும்.

4. பாடசாலை மட்டத்தில் இடைநிலை வகுப்புகளில் சராசரித் தரப்புள்ளித் திட்டம்(GPA), திரள் சராசரித் தரப்புள்ளித் திட்டம்(CGPA) ஆகிய மதிப்பீட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல். எளிமையான இம் மென்பொருளானது தகவல் தொழில் நுட்ப ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட GPA, CGPA என்பன கணிக்கப்பட்டு ஏனைய ஆசிரியர்களும் நிர்வாகத்தினரும் பார்க்கும் வகையில் பேணப்படலாம்.

5. இடைநிலை ஆசிரியர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் GPA, CGPA திட்டம் தொடர்பான பயிற்சிகளை வழங்குதல் வேண்டும்.

6. பாடப்பரப்பில் விசேடமானோர், வாண்மைத் தொழில் மற்றும் வர்த்தக உலகைச் சார்ந்தோர் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்றை உருவாக்குதல் வேண்டும். அக்குழு பின்வருவன தொடர்பாக நவம்பர் 2014 இன் முடிவில் பரிசீலனை செய்து முன்மொழிவுகளை வழங்குதல் வேண்டும்.
   a. ஆங்கிலத்தில் குறைவான பெறுபேற்றிற்கான காரணங்கள், கலைத்திட்டம் மற்றும் பயன்படுத்தப்பட்ட கற்பித்தல் முறைகள், மாணவர்களை ஆங்கிலத்தில் முதலில் பேசக் கூடியவர்களாகவும் பின்னர் வாசிக்கக் கூடியவர்களாகவும ஆக்குதல் வேண்டும். தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையான கணித பாட கலைத்திட்டத்தைத் தயாரித்தல் அல்லது ஏற்கனவேயுள்ள கலைத்திட்டத்தை பிரயோகம் மூலம் கற்பதற்கும் பயிற்சிகளை கரும்பலகையை பயன்படுத்தி அல்லது எழுதிச் செய்யாது திறமைகளைக் கையாண்டு, அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட முறைகளைப் பயன்படுத்தி செய்யக்கூடிய வகையில் ஆக்குதல்.
   b. வாசிக்கக் கூடியவர்களாகவும் அதன் பின்னர் எழுதக்கூடியவர்களாகவும் ஆக்குவதற்கான புதிய அணுகுமுறைகளை முன்மொழிதல். இங்கு மாணவர் தரம் 10 அல்லது 11இற்குச் செல்லும் வரை இலக்கணத்தைக் கற்பிப்பதற்கு காலத்தைக் கழிக்கவேண்டியதில்லை.
   c. ஒருங்கிணைந்த விஞ்ஞானத்திற்கான கலைத்திட்டத்தைத் தயாரித்தல், தரம் 9 தொடக்கம் தரம் 11 வரை ஒவ்வொரு தவணையும் கற்பிக்கப்படவேண்டிய உள்ளடக்கங்களை கால அட்டவணைப்படுத்தல்.

# தற்போதைய கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சைகளுக்கான கால அட்டவணைகள் பற்றிய உற்றுநோக்கலில் இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்கான முன்மொழிவுகளும் நியாயப்படுத்தலும்

இலங்கையில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு பாடசாலை நாட்களில் ஒரு மாணவனின் வரவு குறைந்தது 80 வீதமாவது இருத்தல் வேண்டும். அதாவது தரம் 13 இல் பரீட்சைக்குத் தோற்றும்போது அதற்கு முன்னைய வருடத்தின் டிசம்பர் மாதம் வரை அதாவது பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் வரையுள்ள பாடசாலை நாட்களே இங்கு கருத்திற் கொள்ளப்பட்டு இந் நாட்கள் கணிப்பிடப்படுகின்றன. எனவே தரம் 13 இல் ஜனவரி தொடக்கம் யூலை வரை அதாவது பரீட்சைக்குத் தோற்றும் வரை மாணவர்கள் வகுப்புகளுக்குச் சமூகமளிக்க வேண்டிய அவசியமில்லை. இருப்பினும் சில மாணவர்கள் பாடசாலைக்கு வந்து தமது வரவைப் பதிவு செய்தபின்னர் பாடசாலையிலிருந்து தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்கின்றனர். யாழ்ப்பாணத்திலுள்ள பெரும்பாலான பாடசாலைகளில் இக்காலப்பகுதியில் மாணவர் பாடசாலைக்கு வருகை தரல் வேண்டும் என வலியுறுத்தப்படாமையால் அவை மாணவர்களுக்கான கற்கை விடுமுறை நாட்கள் என ஆசிரியர்களும் நிர்வாகத்தினரும் விளக்கமளிக்கின்றனர்.

தற்போது நடைமுறையிலுள்ள கல்வியாண்டின்படி ஜனவரி தொடக்கம் மார்கழி வரை மூன்று தவணைகள் காணப்படுகின்றன. ( உரு 4.5 ஐப் பார்க்க) இவை தேசிய மட்டப் பரீட்சைகளுக்கான கால அட்டவணை மற்றும் பல்கலைக்கழகக் கல்வி ஆண்டு ஆகியவற்றிற்கு அமைவானவையாகக் காணப்படவில்லை. இதன் காரணமாக க.பொ.த. சாதாரண மற்றும் உயர்தர பரீட்சைகளுக்குத் தோற்றிய மாணவர்கள் தமது பரீட்சைப் பெறுபேறுகள் கிடைக்கும் வரை அங்கலாய்ப்புடன் காத்திருப்பதில் பெறுமதிமிக்க தமது காலத்தை வீணடிக்கின்றனர். இவ்வாறே க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியடைந்தவர்கள் உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கும் வரை காத்திருத்தல், உயர்தரத்தில் சித்தியடைந்தோர் பல்கலைக்கழகக் கல்வியாண்டு ஆரம்பிக்கும் வரை காத்திருத்தல் என கிட்டத்தட்ட 18 மாதங்கள் வரை காலத்தை வீணடிக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு முதலாவது தடவை தோற்றிய மாணவர்கள் அடுத்துவரும் டிசம்பர் மாதத்தில் அதாவது ஒரு வருடத்தின் பின் மீளவும் பரீட்சைக்குத் தோற்ற முடியும். அதில் சித்தியடையாத மாணவர்கள் தொடர்ந்தும் பாடசாலை இடாப்புகளில் பேணப்பட்டு 'தரம் 11 இல் மீளக்கற்போர்' என்ற வகுப்பினுள் உள்ளடக்கப்படுகின்றனர். சில பாடசாலைகளில் இம் மாணவர்கள் தரம் 11 மாணவர்களுடன் சேர்த்துக் கற்பிக்கப்படுகின்றனர். சில பாடசாலைகளில் இவ்வாறு சித்தியடையாத மாணவர்கள் பாடசாலை வருவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. இவர்களுள் பொருளாதார வசதியுள்ளோர் தனியார் கல்வி நிறுவனங்களில் சேர்ந்து கற்கின்றனர். ஆனால் இம் மாணவர்களுக்கு பாடசாலையினூடாக பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது. 16 வயதில் பாடசாலையிலிருந்து வெளியேற்றப்பட்ட அல்லது இடைவிலகிய இந்த மாணவர்களுக்கு இக் கல்விக் கட்டமைப்பிலிருந்து எவ்வித பயனுதவியும் வழங்கப்படுவதில்லை.

க.பொ.த. சாதாரண தரத்திற்குத் தோற்றிய மாணவர்கள் பரீட்சை முடிவடைந்த பின்னர் க.பொ.த. உயர்தர வகுப்புக்களில் கற்க யூலை மாதம் வரை ஏழு மாதங்கள் காத்திருத்தல் வேண்டும். (உரு 4.5 ஐப் பார்க்க) ஆனால் பரீட்சையில் சித்தியடைந்தோர் இரண்டாம் தவணை யூலை மாதத்தில் முடிவடைவதால் மூன்றாம் தவணை செப்ரெம்பர் மாத ஆரம்பத்தில் தொடங்கும்போதே உயர்தர வகுப்புக்களில் கற்க ஆரம்பிக்கின்றனர். உரு 4.5 இவை தொடர்பாக தற்போதுள்ள நிலைமைகளைக் காட்டுகின்றது.

## முன்மொழிவுகள் பற்றிய விபரம் (உரு 4.5)

1. 2013 இன் தொடக்கத்தில் இருந்து தரம் 11 இல் கற்கும் மாணவர்கள் டிசம்பர் 2013 இல் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். ஆனால் அவர்களுக்கான பரீட்சை முடிவுகள் 2014 ஏப்ரல் மாதத்தில் வெளியிடப்படுகின்றது. இப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் யூலை 2014 இல் பாடசாலையில் க.பொ.த. உயர்தர வகுப்புக்களில் அனுமதிக்கப்படுகின்றனர். இவ் உயர்தர வகுப்பிற்கான கற்கைக் காலம் ஆறு தவணைகளாகும். க.பொ.த. உயர் தரத்திற்கான வகுப்புக்கள் செப்ரெம்பர் 2014 இல் ஆரம்பித்து 2016 ஆகஸ்ற் மாதத்தில் முடிவடையும். மேலும்

2016 இல் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பரீட்சை முடிவுகள் மார்ச் 2017இல் வெளியிடப்படும். இப்பரீட்சையில் தோற்றி பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானோர் பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர செப்ரெம்பர் 2017 வரை காத்திருத்தல் வேண்டும். இவ்வாறு மாணவர்களின் 12 மாத காலம் பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் காத்திருப்பதில் வீணடிக்கப்படுகின்றது. தற்போதுள்ள பாடசாலைக் கல்வியாண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையும் அமையும்போது பல்கலைக்கழக கல்வியாண்டு செப்ரெம்பர் தொடக்கம் யூலை மாதம் வரையுமாக வேறுபட்டுக் காணப்படுகின்றது.

2. உருவிலுள்ள சிவப்பு நிறக் கட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆகஸ்ற் 2016 இல் உயர்தர பரீட்சைக்குத் தம்மைத் தயார்ப்படுத்த பாடசாலை நேரத்தில் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்லவுள்ள மாணவர்களின் பிரச்சினை தொடர்பான விபரங்கள் முன்வைக்கப்பட்டுள்ளமையை அவதானிக்க.

பரீட்சையின் பின்னர் பரீட்சை முடிவுகளுக்காகவும், பரீட்சை முடிவகளைப் பெற்ற பின்னர் பல்கலைக்கழகத்திற்குச் செல்வதற்குமான கால தாமதங்களை தவிர்ப்பதற்கான புதிய முன் மொழிவுகள் உரு 4.6 இல் முன்வைக்கப்பட்டுள்ளன.

முன்மொழியப்பட்ட புதிய பாடசாலைக் கற்கை ஆண்டு, க.பொ.த. சாதாரண தர., உயர்தர பரீட்சைகள் நடத்தப்படும் காலம் என்பனவே எதிர்காலத்தில் மாணவர்களின் தேவையற்ற 18 மாதகால விரயத்தைத் தவிர்த்துக் கொள்ள வழிவகுக்கும். இம் முன்மொழிவை நடைமுறைப்படுத்த பரீட்சைகளை நடத்தவும், விடைத்தாள் திருத்தவும் வேறு புதிய முறைகளைக் கையாளவேண்டியதும் அவசியமாகும்.

Figure 4.5: Current Year, O/L & A/L Schedule





**Figure: 4.6: Proposed School Year, O/L & A/L Exams schedule**



## முன்மொழிவுகள் பற்றிய விபரம் (உரு 4.6)

உரு 4.5, உரு 4.6 என்பவற்றில் தற்போதைய முறையுடன் ஒப்பிட்டு விளக்குவதற்காக 2013 இன் க.பொ.த. பரீட்சையுடன் விளக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

1. தற்போது நடைமுறையிலுள்ள பாடசாலைக் கல்வியாண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையானதாகும். புதிய முன்மொழிவில் பாடசாலைக் கல்வியாண்டுக்கான நாட்காட்டியில் பல்கலைக்கழகங்களின் கல்வியாண்டுக்கேற்ப பாடசாலைகள் செப்ரெம்பரில் ஆரம்பித்து ஆகஸ்ற் மாதத்தில் முடிவடையும் வகையில் முன்வைக்கப்பட்டுள்ளது.
2. உரு 4.6 காட்டப்பட்டுள்ளவாறு யூன் 2013 இல் க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் சித்தியடைந்து செப்ரெம்பர் / ஒக்ரோபர் 2015 இல் பல்கலைக்கழகம் செல்வோர் முன்னைய நடைமுறையிலும் பார்க்க 18 மாதங்கள் முன்பாகவே செல்லமுடியும்.
3. புதிய முன்மொழிவு ஒவ்வொரு வருடமும் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை யூன் மாதத்திலும் உயர்தரப் பரீட்சை யூலை மாதத்திலும் இடம்பெற வேண்டும் எனவும் க.பொ.த. சாதாரண, உயர் தரவகுப்புகளுடன் ஏனைய வகுப்புகளும் ( தரம் 1 - 9) பல்கலைக்கழகங்கள் போன்று ஒவ்வொரு வருடமும் செப்ரெம்பர் மாதத்தில் முதலாம் தவணை ஆரம்பித்தல் வேண்டும் எனவும் பரிந்துரைக்கின்றது.
4. யூன் மாதத்தில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையுடன் தரம் 11 முடிவுற்றதும் கோடை கால விடுமுறையின் பின்னர் பரீட்சையில் சித்தியடைந்து உயர்தர வகுப்பிற்குத் தகுதி பெற்றிருப்போருக்கான வகுப்புகள் செப்ரெம்பர் மாதத்தில் ஆரம்பமாகும். உயர்தர வகுப்பில் கற்போர் ஆறு தவணைகளின் பின்னர் (தரம் 12, தரம் 13) யூலை மாதத்தில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவர். பின்னர் ஆகஸ்ற் மாதத்தில் பெறுபேறுகள் வெளியிடப்பட்டதும் பல்கலைக்கழகத்திற்குத் தகுதி பெற்றோர் செப்ரெம்பர் அல்லது ஒக்ரோபர் மாதத்தின் முற்பகுதியில் பல்கலைக்கழகத்திற்கான அனுமதியைப் பெறுவர். இதன் மூலம் மாணவர்களின் ஒரு வருட கால விரயத்தைத் தவிர்க்க முடியும். (உரு 4.5 இல் காட்டியுள்ளவாறு)

## க.பொ.த. சாதாரண, உயர்தர பரீட்சைகள் மற்றும் புதிய பாடசாலைக் கல்வியாண்டுக்கான நாட்காட்டி தொடர்பான பரிந்துரைகள்

இங்கு பிரதான பரிந்துரை தேசிய ரீதியான கல்வி முறைமையில் உள்நோக்கம் எதுவுமின்றி உருவாக்கப்பட்டதும் தொடர்ச்சியாகக் காணப்படுவதுமான பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கில் அமைந்துள்ளதாகும். எனவே இத் தேசிய மட்டத்திலான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்வைக்கப்பட்ட முன்மொழிவை மாகாணக் கல்வி அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் போன்ற தேசிய நிறுவனங்கள் கவனத்திற் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

1. பாடசாலைக் கல்வியாண்டு செப்ரெம்பர் 2015 இலிருந்து ஒவ்வொரு வருடமும் எல்லா வகுப்புக்களுக்கும் க.பொ.த. சாதாரண, உயர்தர வகுப்புக்கள் உட்பட செப்ரெம்பர் மாதத்தின் முதலாவது அல்லது இரண்டாவது வாரத்தில் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.
2. 2015 இலிருந்து ஆரம்பித்து க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை ஒவ்வொரு வருடமும் யூன் மாதத்தில் நடத்தப்படல் வேண்டும்.
3. 2016 இலிருந்து ஆரம்பித்து க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை ஒவ்வொரு வருடமும் யூலை மாதத்தில் நடத்தப்படல் வேண்டும்.
4. பரீட்சைத் திணைக்களத்திலிருந்து ஆரம்பித்து தேசிய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் உள்ள எல்லா பிரிவுகளிலும் அதாவது அமைச்சுக்கள், திணைக்களங்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் உட்பட அனைவருக்கும் ஏற்கனவே உள்ள கல்வித் தொழினுட்பங்களை மீள வடிவமைத்து பயன்படுத்தவும், பிரதானமாக பரீட்சித்தல், விடைத்தாள் திருத்துதல், மாணவர் அடைவுகளைக் கணிப்பிடல், பெறுபேறுகளை அறிக்கையிடல் தொடர்பாக புதிய நுட்ப முறைகளைப் பயன்படுத்த ஆலோசனை வழங்குதல் வேண்டும். அத்துடன் புதிய பாடசாலைக் கல்வியாண்டு மாற்றத்திற்கான நடைமுறையை ஏற்றுக் கொண்டு அதனை மாற்றியமைப்பதற்கு சகலரையும் தயாராக்குதல் வேண்டும். (பெரும்பாலான மாணவர்களைத் தமக்கும் சமூகத்திற்கும் பொருத்தமற்றவர்களாக மாற்றுவதற்கு ஏதுவான வகையில் அமையும். இளைஞர்கள்வளரும் பருவத்தில் அவர்களின்

வாழ்க்கையில் மிகவும் பெறுமதிமிக்க காலத்தில் எட்டுத் தொடக்கம் 12 மாத கால விரயத்தை இம்முறை தடுக்கும். அத்துடன் உயர் கல்வி பெற்றவர்கள் ஒரு வருடம் முன்பாகவே தொழிலைப் பெற்றுக் கொள்ள வழிவகுக்கும். ஒரு வருடம் முன்னதாக ஊதியம் பெறுவதால் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பக்கூடியதாக தமது பணத்தை பல மடங்காகப் பெருக்கும் வகையில் செலவை மேற்கொள்ளக் கூடியவராவர்.)

5. பாடசாலைக் கல்வியாண்டுடன் ஒத்திருக்கும் வகையில் O/L மற்றும் A/L பரீட்சைகளை மீள ஒழுங்கமைப்பதற்காக மாகாணங்கள், கல்வி அமைச்சுக்கள், தேசிய கல்வி நிறுவகம் போன்றவற்றிலிருந்து உறுப்பினர்களைக் கொண்ட உயர்மட்டக் குழுவொன்றை தாபித்தல் வேண்டும்.

6. எந்தவொரு தேசிய மட்டப் பரீட்சைக்குத் தோற்றும் பாடசாலை மாணவருக்கும் பரீட்சைக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் அனுமதி அட்டை பெற்றுக் கொள்ளும் வரை 80% வரவு அவசியமானதாக இருத்தல் வேண்டும். மாணவர் வரவுப் பதிவேட்டில் வரவைப் பதிவு செய்த பின்னர் அவசர நிமித்தம் காரணமாக மட்டுமன்றி பாடசாலைக்கு வெளியே செல்ல மாணவர்களை அனுமதிக்கக் கூடாது.

7. வடமாகாணக் கல்வி அமைச்சர், செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், ஐந்து மாவட்டங்களில் ஒவ்வொன்றிலுமிருந்து ஒவ்வொரு வலயக்கல்விப்பணிப்பாளர்கள், 1AB, 1C பாடசாலைகளில் இருந்து நான்கு அதிபர்கள் ஆகியோரைக் கொண்ட பிரதிநிதிகள் குழு மத்திய கல்வி அமைச்சர், பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் மற்றும் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உறுப்பினர் அத்துடன் பல்கலைக்கழகங்கள், கல்வியியற் கல்லூரிகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் சந்திப்பை ஏற்படுத்தி NESR இன் கீழ்வரும் முன்மொழிவுகள் பற்றிய கலந்துரையாடலை மேற்கொள்ளல் வேண்டும்.
    a. O/L மற்றும் A/L வகுப்புகள் உட்பட எல்லா வகுப்புகளுக்கும் வருடந்தோறும் கல்வியாண்டு செப்ரெம்பர் மாதத்தில் ஆரம்பித்தல் வேண்டும். இந்நடைமுறை செப்ரெம்பர் 2015 இலிருந்து அமுல்படுத்தப்படல் வேண்டும்.

8. வடக்கு மற்றும் ஏனைய மாகாணங்களின் கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், கொழும்பு, பேராதனை, தென்கிழக்கு, கிழக்கு மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களைச் சார்ந்த கல்வி நிபுணர்களைக் கொண்ட குழுவொன்றை பின்வருவனவற்றிற்காக அமைத்தல்:
    a. கீழ்வருவனவற்றை உள்ளடக்கிய பரீட்சை முறை ஒன்றை உருவாக்கல்
        i. மாணவர் கற்றல் முன்னேற்றம் நடைமுறை சார்ந்த செயற்பாடுகள் தொடர்பான கணிப்பீடுகள், தவணைதோறும் ஒவ்வொரு பாடத்திலும் செயற்றிட்டத்தை அடிப்படையாகக் கொண்ட கற்றல் ஆகிய அம்சங்களில் பாடசாலை மட்டத் தொடர் கணிப்பீடு.
    b. கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பப் பாடங்கள் ஆகியவற்றிற்கு தரம் 13 இலுள்ள பாட உள்ளடக்கத்தை பல்கலைக்கழக பாட உள்ளடக்கத்துடன் இணைத்துக் கொள்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்தல். இதன்மூலம் மாணவர்களுக்குப் பாடசாலையிலும் பார்க்க சிறந்த வளங்களும் முதுகலைமாணி, கலாநிதிப் பட்டம் பெற்ற விரிவுரையாளர்களும் பல்கலைக்கழகத்தில் கிடைக்க வாய்ப்பேற்படும். மேலும் தற்போதுள்ள தரம் 12 இற்கான கலைத்திட்டத்தைப் பரவலாக்கி எல்லாப் பாடங்களையும் அனுபவமூலமான கற்றல் முறைகளைப் பயன்படுத்திக் கற்பிப்பதற்காக காலத்தை நீடித்து வழங்குதல்.

9. விருப்பத்திற்குரிய தெரிவுப் பாடமாக அல்லது கூடைப் பாடங்களாக (Basket Subjects) உள்ளவற்றை 9 வகையான நுண்மதிகளை வளர்க்கும் வகையில் ஆகக்குறைந்தது ஒன்று அல்லது இரண்டு தவணைகளில் கற்பிக்க ஆவண செய்தல்.

இங்கு முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் தனியார் கல்வி நிறுவனங்களை இல்லாதொழிக்கச் செய்ய முடியாது. ஆகவே கற்பித்தல் நிறுவனமொன்றிற்குத் தேவையான அடிப்படைத் தேவைகளைப் திருப்தி செய்யும் வகையில் வசதிகளையும் கற்பித்தல் முறைகளையும் மேம்படுத்த ஊக்குவித்தல் வேண்டும்.

தேசிய பரீட்சைகளுக்கான புதிய குறிக்கோள்களின் தேவை பற்றி பாடசாலை ஆசிரியர்கள் அறிந்து கொள்ளும் வகையில் அவர்களுக்கு மீள் பயிற்சிகள் வழங்கப்படவேண்டியது அவசியமாகும்.

பரிந்துரை 1 உம் 2 உம் பாடசாலையே முதன்மையான கற்றல் நிலையம் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

## பாடசாலைகள் தொடர்பான பரிந்துரைகள்

1. பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கையை 1500 ஆக மட்டுப்படுத்தல் வேண்டும்.
2. வகை 1C பாடசாலைகளில் மாணவர் வரவு தொடர்பாக ஆய்வு செய்தல் வேண்டும். தேவை ஏற்படின் 1AB பாடசாலைகளை உருவாக்க 1C பாடசாலைகளை 1AB பாடசாலைகளாக மாற்றுதல் வேண்டும்.
3. எல்லா 1C பாடசாலைகளிலும் வர்த்தகம், ICT பாடநெறியை கற்பிக்க வசதியளித்தல் வேண்டும்.
4. எல்லா வகை 2, 1C, 1AB பாடசாலைகளும் க.பொ.த. சாதாரண தரம், உயர்தரத்தில் பரீட்சைக்குத் தோற்றி பெறுபேறுகளுக்காகக் காத்திருக்கும் மாணவர்களுக்கு வார நாட்களில் 3 மணி தொடக்கம் 5 மணிவரையும், சனிக்கிழமைகளில் முழுநேரமாகவும் தொழில் திறன்சார் பயிற்சிகளை வழங்கவேண்டும்.
5. மாகாணத்தினதும் இலங்கையினதும் பொருளாதாரத்திற்கமைய தொழில் வாய்ப்பிற்கும், பொருந்தி வாழ்வதற்கும் தேவையான திறன்கள் தொடர்பான விடயங்களில் பூரணமான கற்கை மேற்கொள்ளல்வேண்டும். இக்கற்கையில் முடிவில் தொழில் தலைப்புக்களையும் ஒவ்வொரு தொழிலுக்கும் தேவையானவற்றையும், கொண்டிருக்கவேண்டிய திறன்கள் பற்றியதுமான விடயங்களைக் கொண்ட அகராதி ஒன்றை வெளியிடவேண்டும். இவை இலத்திரனியல் வடிவத்தில் அமைவதுடன் எல்லாப் பாடசாலைகளும், மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களும் பயன்படுத்தக்கூடிய வகையில் பேணப்படுவதுடன் உரிய காலத்தில் இற்றைப்படுத்தப்படவும் வேண்டும்.
6. ஒவ்வொரு வலயத்திலும் குறைந்தது மூன்று 1C அல்லது 1AB பாடசாலைகளில், பாடசாலை நடைபெறாத நேரங்களில், ஏதாவது காரணத்திற்காக பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள் மீளவும் பாடசாலைக்கு வருகை தந்து தொழில்சார் கற்கைகளை மேற்கொள்ள வகுப்புகளை நடத்த வேண்டும்.
7. எல்லாப் பாடசாலைகளும் அரச பாடசாலைகளாக மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கீழ் இயங்குதல் வேண்டும். தேசிய பாடசாலைகளும் மாகாணக் கல்வித்திணைக்களத்தின் கீழ் மாற்றப்படுதல் வேண்டும்.
8. தனியார் நிறுவனங்கள், அரச நிதியில் அல்லது அரச உதவி பெற்ற நிறுவனங்களால் நடத்தப்படும் பயிற்சிகள் வழங்கப்படும் கல்வி ஆகியவற்றை கண்காணிப்பதுடன் தரத்தையும் பேண வேண்டும். வழங்கப்படும் பயிற்சியின் தரத்திற்கும் மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் தரத்திற்கும் இடையே பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவை ஒழுங்குபடுத்தப்பட்டு ஒப்பிடக்கூடியவகையில் சமமாகவும் சமசந்தர்ப்பத்தையும் தொழில் தேடுவோருக்கு வழங்க வேண்டும்.
9. 18 வயது வரையான பிள்ளைகளின் கல்விக்குப் பொறுப்பானவர்களாக இருக்க வேண்டிய மாகாணக் கல்வித் திணைக்களம், மாகாணக் கல்வி அமைச்சு என்பன இப்பிள்ளைகள் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத பாடசாலைகளுக்கு அல்லது தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்கின்றனரா என்பதில் குறைவான கவனத்தையே செலுத்துகின்றனர். இந் நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் கலைத்திட்டம், பாடநூல்கள், குறிப்புகள், பெறுபேறுகள், கட்டடங்கள் என்பன அரச பாடசாலைகளுக்கு ஒத்தனவா எனக் கண்காணித்து ஒழுங்குபடுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.
10. தனியார் கல்வி நிறுவனங்கள் செயற்படும் முறை, பயன்படுத்தும் கால அட்டவணை, மற்றும் பிள்ளைகளின் கல்வியில் தாக்கத்தைச் செலுத்தும் பிரதானமான காரணிகள் பற்றிய ஒரு முழுமையான ஆய்வொன்றை நடத்தி அவற்றிற்கு A, B, C, D எனும் வகையில் தரச் சான்றிதழ் வழங்குதல் வேண்டும்.

### சேவைக்கால ஆலோசகர்களுக்கான பரிந்துரைகள்

1. சேவைக்கால ஆலோசகரின் வகிபங்குகளை வலுப்படுத்தலும், அவர்களுக்கான தகைமைத்திறன் மதிப்பீட்டுத் திட்டத்தையும் உருவாக்கல்.
2. தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் முழுமையாக வகுப்பறைக் கற்பித்தலில் ஈடுபடாத சேவைக்கால ஆலோசகர்கள் ஒரு தவணைக்கு பாடசாலையில் கற்பித்தலில் ஈடுபடல் வேண்டும்.
3. சேவைக்கால ஆலோசகர்கள் பாடசாலையில் ஆசிரியர்களை தொடர்ச்சியாக ஒரு வாரம் அவதானித்து அவை தொடர்பாக அதிபர், ஆசிரியர்களுடன் கலந்துரையாடி இவை தொடர்பான அறிக்கையை அதிபர், உதவிக் கல்விப் பணிப்பாளரிடம் வழங்குவதுடன் எல்லா அறிக்கைகளும் பேணப்படல் வேண்டும்.
4. எல்லா ஆசிரியர்களும் சேவைக்கால ஆலேசகர்களும் கணனி பற்றிய செய்து காட்டல்களை மேற்கொள்ளல் வேண்டும். திணைக்களத்தால் நடத்தப்படும் பரீட்சையில் சித்தியடையும் எல்லா ஆசிரியர்களுக்கும் வெகுமதியாக ரூபாய் 5000 வழங்கப்படல் வேண்டும். மேலும் ஒரு நிமிடத்திற்கு 30 சொற்களை அச்சுப்பதித்து சித்தியடை வோருக்கும் ரூபாய் 5000 வழங்கப்படல் வேண்டும்.

## மாணவர்கள், விளையாட்டுத் தொடர்பான அவதானிப்புகளும் பரிந்துரைகளும்

### மாணவர்கள், விளையாட்டுத் தொடர்பான அவதானிப்புகள்

1999 இல் க.பொ.த. சாதாரண தரத்தில் உடற்கல்வி, சுகாதாரம் விஞ்ஞானம் உள்ளடங்கியதாக பரீட்சிக்கக்கூடிய பாடமாகக் கருதப்பட்டது. இத் தெரிவுப் பாடமான உடற்கல்வி பெரும்பாலும் வகுப்பறையிலேயே கற்பிக்கப்பட்டது. பாடசாலை, கோட்டம், வலயம் ஆகிய மட்டங்களில் விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் உடற்கல்வி ஆசிரியர்களால் நடத்தப்பட்டு வருகின்றன. வகுப்பறைக் கற்பித்தலுக்காக அரிதாகவே மாணவர்களை விளையாட்டு மைதானத்திற்குக் கூட்டிச் செல்வர். பெரும்பாலான பாடசாலைகள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு உடற்கல்வியை ஒரு பாடமாகக் கொள்வதில்லை. அத்துடன் கிட்டத்தட்ட வகுப்பின் மூன்றில் ஒரு பங்கினரே தெரிவுப் பாடமாக எடுக்கின்றனர்.

பெரும்பாலான பாடசாலைகளில் அநேகமான மாணவர்கள் விளையாட்டில் ஈடுபடுவதில்லை. இருந்தபோதிலும் ஓரிரு வாரங்களுக்கு இல்ல விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுவர். பாடசாலைகளிலுள்ள சில உடற்பயிற்சி ஆசிரியர்கள் விளையாட்டில் திறமையான மாணவர்களுக்கு பாடசாலை முடிந்து மாலை நேரங்களில் பயிற்சி வழங்குவர். ஆரோக்கியமும் திடகாத்திரமும் உள்ள தனிநபராகவும் வகுப்பறைக் கற்றலில் சாதகமான விளைவுகளையும், ஒரு இசைவான கற்றல் சூழலையும் ஏற்படுத்தவேண்டும் எனும் வகையில் எல்லா மாணவர்களும் ஏதோவொரு வகையில் போட்டி அல்லது புத்தூக்கத்திற்கான விளையாட்டில் பங்குபெற வேண்டியது முக்கியமானதாகும் என வலியுறுத்தல் வேண்டும்.

### மாணவர்கள், விளையாட்டுத் தொடர்பான பரிந்துரைகள்

1. ஒவ்வொரு தவணையும் வாரத்திற்கு இரு தடவை தரம் 1 தொடக்கம் தரம் 13 வரை எல்லா வகுப்புகளுக்கும் விளையாட்டுத் திறன் சார்ந்த செயற்பாடுகளை வழங்க வேண்டும்.
2. கரும்பலகையையும் குறிப்புகளையும் பயன்படுத்தி விளையாட்டுகளுக்கான சட்டங்களையும் விதிகளையும் கற்பதை விட விளையாட்டுக்களை விளையாடி நடைமுறையில் அவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் விளங்கிக் கற்றுக்கொள்ள முடியும்.

3. விளையாட்டு மற்றும் இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகளில் பங்குபற்றுவதற்காக வாரந்தோறும் தரப்புள்ளிகள் வழங்கப்பட்டு அவை தவணை இறுதியில் மாணவர் அறிக்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும். இவை க.பொ.த. சாதாரண தரப் புள்ளிகளுடன் சேர்த்துக் கொள்ளல் வேண்டும்.
4. ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு தவணையும் ஒவ்வொரு உள், வெளி அரங்க விளையாட்டுக்களிலும் ஒரு குழு விளையாட்டிலும் (board game ) பங்கு பற்ற வேண்டும். வெளி அரங்க விளையாட்டுக்கள் பாடசாலை முடியும் நேரத்தில் இடம்பெறுவது சிறந்ததாகும்.
5. பாடசாலைக்கு உள்ளேயும் பாடசாலைகளுக்கு இடையேயும் இடம்பெறும் குழு விளையாட்டுப் போட்டிகள் வெள்ளிக் கிழமைகளில் பின்னேரங்களிலும் சனிக்கிழைமைகளிலும் மட்டுமே இடம்பெற வேண்டும்.
6. மாகாணமட்ட விளையாட்டுக்கான கால அட்டவணையை மாகாணமட்ட பாடசாலை கிரிக்கட் குழு தேசிய பாடசாலை மட்ட கிரிக்கட் குழுவிற்கு அறியத் தருதல் வேண்டும். எனவேதான் மாகாணமட்ட, மாகாணங்களுக்கிடையேயான, தேசிய மட்டப் போட்டிகளுக்கான கால அட்டவணைகள் தயாரிக்க முடியும். இது மாணவர் கற்றலுக்கு முதலாவதாக முன்னுரிமை வழங்குவதை உறுதிப்படுத்தும்.
7. 19 வயதிற்குட்பட்ட மாணவர்களின் பாடசாலை மட்ட போட்டி, தேசிய மட்ட கிரிக்கட் குழுவிற்கான தெரிவை நோக்காக கொண்டிருத்தல் கூடாது. ஏனெனில் மாணவர்களில் 80 வீதமான கிரிக்கட் வீரர்களின் கல்வி இழப்பை இது தவிர்க்கும்.

## பரிந்துரைகள்: மாணவ விளையாட்டு வீரன்

### அவதானிப்புகள்

விளையாட்டு மற்றும் கலைத்துவம் சார்ந்த அசைவுகள், தசைநார் அசைவு, புரிந்துணர்வு அறிவினுடைய பகுதிகளாக இருக்கின்றன. நரம்புகள் மற்றும் தசைநார்கள் அமைப்பு சந்தத்துடனான அசைவுகளோடு இருப்பதைக் உள்ளடக்கியதாக இருக்கிறது. விளையாட்டிலான இவ்வாறான அசைவுகளும் மூலோபாயங்களும் அவற்றினுடைய உளவியலும் இணைந்து எந்தப் பாடத்தையும் கற்றுக்கொள்ள உதவும். விளையாட்டு வீரனுடைய நேரமும் சக்தியும் அவர்கள் விளையாட்டிலும் கல்வியிலும் நல்ல ஆற்றுகைகளையும் தரக்கூடிய விதத்தில் நெறிப்படுத்தப்பட வேண்டும்.

விளையாட்டுவீரர்கள் தங்கள் சக்தியை வகுப்பறையில் கல்வி கற்பதற்கென திருப்பி விடுதல், வீட்டில் கற்பதற்கான நேரத்தையும் முயற்சியையும் ஒதுக்கீடு செய்தல் முதலியவற்றுக் கென, நடைமுறைப்படுத்தக் கூடிய வழிகாட்டல்கள் அவர்களுக்குத் தேவை.

இவ்வாறான ஒரு பழக்கமானது அமெரிக்காவில் இருப்பதோடு, அங்குள்ள பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கண்டிப்பான முறையில் நெறிப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத் தப்படுகிறது. இதன் பெறுபேறாக, அமெரிக்காவின் பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் தடை செய்யப்பட்டிருக்கிற குத்துச்சண்டை தவிர்ந்த, ஏனைய ஒலிம்பிக் நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் அனைவரும் பதக்கங்களை வெல்பவர்களும் ஒன்றில் பல்கலைக்கழக மாணவர்களாக அல்லது பல்கலைக்கழக பட்டதாரிகளாக இருப்பார்கள்.

## பரிந்துரை : விளையாட்டுப் புலமையாளர்

1. போட்டிகளில் ஈடுபடும் பாடசாலை அணிகளில் இடம்பெற விரும்புகின்ற ஒவ்வொரு மாணவனும் அடைய வேண்டிய கல்விசார் அடைவு மட்டத் தராதரம் நிர்ணயிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும். ஐக்கிய அமெரிக்க நாடுகளில் ஒவ்வொரு தவணையிலும் சராசரியாக 'C' தரம் எல்லாப் பாடங்களிலும் பெற்ற மாணவர்கள் மட்டுமே அடுத்துவரும் தவணையில் விளையாட்டுக்கலை மற்றும் ஏனைய போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படுகின்றனர்.
2. பாடசாலை நேரத்திற்குப் பின்பு விஞ்ஞான மற்றும் கலை மாணவர்களுக்கு அவர்களுக்கு உதவி தேவைப்படும் விடயங்களில் இலவசமாக விளையாட்டுப் பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

## பரீட்சை நிலையம்



தனியார் கல்வி நிலையம்



இராமநாதன் கல்லூரி - யாழ்ப்பாணம்
சேர் பொன். இராமநாதனால் ஸ்தாபிக்கப்பட்டது



தனியார் கல்வி நிலையம்



# 5: தனியார் கல்வி நிலையங்களும் வடமாகாண கல்வி அமைப்பின் மீதான அவற்றின் தாக்கங்களும்

## அறிமுகம்

தனியார் கல்வி நிலையங்கள், நிகழ்காலத்திலே உலகளாவிய இயல்நிகழ்வாக இருக்கின்றன. 1970 களுக்கு முன்னதாக இலங்கையிலே தனியார் கல்வியூட்டுநர்கள், ஒன்றிலிருந்து ஐந்து வரையான மாணவர்களுக்கு கற்பித்தார்கள். இந்த மாணவர்கள் வழமையாக ஒரே குடும்பத்தை சேந்தவர்களாகவும் வகுப்புகள், ஒன்றில் கல்வியூட்டுநரின் இல்லத்தில் அல்லது மாணவர்களின் இல்லத்தில் நடைபெறுவனவாகவும் இருந்தன.




அது செலவு மிகுந்ததாகவும் மாணவர்களில் அனேகமானவருக்கு கிட்டாததாகவும் இருந்தது. இது இப்போதும் இடம்பெறுகிறதெனினும் வழமையான நியதியாக அது இல்லை. அந்தக் காலப் பகுதிகளில் தனியார் கல்வி என்பது குழந்தையை மையமாகக் கொண்டிருந்தது. அதிக நேரம் தேவைப்படுகிற, வித்தியாசமான முறையில் கற்பிக்க வேண்டிய தேவை இருக்கிற, ஒரு சிறிய குழுவாக கற்பிக்கும் போது கிடைக்கக்கூடிய தனிப்பட்ட கவனம் அவசியமாக இருக்கிற, பிள்ளையை மையமாக கொண்டிருந்தது. அவை, வெறுமனே மாணவர்களை பரீட்சைகளில் சித்திபெற வைப்பதின் மீது மட்டும் கவனம் செலுத்துகிற தற்போதைய மாற்றுருவைப் போல் இருக்கவில்லை. எனினும் பரீட்சைகளில் சித்தி பெற வைப்பதும் செயல் நோக்கமளிக்கும் காரணிகளில் ஒரு பகுதிதான். 1960களுக்கு முன்னதாக, பல்வேறு பொது பரீட்சைகளுக்கும் பல்கலைக்கழக புகுமுக பரீட்சைகளுக்கும் மாணவர்களைப் பயிற்றுவிக்கிற தனியார் கல்வி நிலையங்கள் கொழும்பில் இருந்தனவெனினும் அவை, பரீட்சையில் சித்திபெற தவறி பாடசாலைகளை விட்டு விலகியவர்களுக்காகவே நடத்தப்பட்டன.

எழுபதுகளுக்கு பின்பு தனியார் கல்வி நிலையங்கள் பெருமளவில் பெருகி விட்டதோடு, அனைத்து வயதுகளையும் சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலான பிள்ளைகள் பாடசாலைகள் முடிந்த பின்னும் வாரஇறுதி நாட்களிலும் கற்பிக்கப்படுகிறார்கள்.

தனியார் கல்வி நிலையங்கள் மற்றும் தனியார் கல்வி நிலையங்களில் கல்வியூட்டுதல் தொடர்பான விவகாரங்கள் சிறிலங்காவுக்கு தனித்துவமானவையல்ல. உண்மையைச் சொல்லப் போனால், வடக்கிலும் சிறிலங்கா முழுவதிலும் இருப்பில் இருக்கிறவற்றை ஒத்த வடிவத்தில் பல நாடுகளிலும் அவை பரவலாக காணப்படுகின்றன. ஹெங்கொங் பல்கலைக்கழகத்திலுள்ள, ஒப்பீட்டு அடிப்படையிலான கல்வி ஆய்வு மையத்திலிருந்து (CERC) வெளியிடப்பட்ட, தங்களது ஒரு பொருள்ஆய்வு கட்டுரையான "பொதுமக்கள் நலனுக்காக தனியார் கல்வியூட்டுதலை நெறிப்படுத்துதல் :



ஆசியாவிலான குறைநிரப்பு கல்விக்கான கொள்கை விருப்பத் தெரிவுகள்" இல், மாக் பிறேயும் ஓறாகுவோவும் பல்வேறு ஆசிய நாடுகளிலுமுள்ள தனியார் கல்வியூட்டலின் நிகழ்கால அகல்விரிவு பற்றி ஆராய்ந்திருப்பதோடு, தனியார் கல்வியூட்டல் மற்றும் கல்விநிலையங்கள் பற்றிய வெளியீடுகளையும் மீளாய்வு செய்திருக்கிறார்கள்.[1] இந்த ஆய்வறிக்கையில் உள்ள, அட்டவணை 1. "சர்வதேசங்கள் ரீதியான தனியார் குறைநிரப்பு கல்வியூட்டல் சுட்டிகள்" ஆனது, அஸங்க பல்லேகெதறவின்[2] ஆய்விலிருந்தும், ஏ.வி.சுரவீரவின்[3] ஆய்விலிருந்தும் காட்டியுள்ள மேற்கோள்கள், சிறிலங்காவிலான தனியார் கல்வியூட்டங்கள், எந்தளவுக்கு ஊடுபரவி நிரம்பும் ஆற்றலை கொண்டுள்ளன என்பதைக் காட்டுகின்றன.
1

> "2006/07 இல் மேற்கொள்ளப்பட்ட, 6 இலிருந்து 21 வயது வரையான மாணவர்களை கொண்ட 10,677 வீடுகள் தொடர்பான ஆய்வறிக்கையை, பல்லேகெதர (2012: 380) ஆராய்ந்திருக்கிறார். இந்த குடும்பங்களில் 64.0% மானவை தனியார் கல்வியூட்டலுக்கென பணத்தை செலவழித்துள்ளன. இதனோடு ஒப்பிடக் கூடியதாக 1995/96 இல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றிலே இந்த அளவு. ஒப்பீட்டு அடிப்படையிலே 23.3% ஆமாக இருக்கிறது. சிறிலங்காவிலே தரம் 10மாணவர்களிடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், அவர்களில் 92.4% இனரும் தரம் 12 மாணவர்கள் 884 பேரில் 98.0 இனரும் தனியார் கல்வியூட்டல்களை பெறுவதாக சுரவீர (2011: 20) தெரிவித்திருக்கிறார்.[4]"

அதிகாரம் 3இல் இவ்வறிக்கையின் ஆக்குநர்கள் தனியார் கல்வி நிலையங்களை கட்டுப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அவர்கள் பின்வருமாறு கூறியிருக்கிறார்கள்:

> "மேற்படி கட்டுப்படுத்தலை கோருவதற்கு காரணமான இன்னொரு மூலக்கூறு அம்சமாக, நுகர்வோர் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்பு, இருக்கிறது. குறிப்பாக, சிறிய பிள்ளைகள் பாதிக்கப்பட வாய்ப்பு இருக்கிறது. எனவே, வெளிப்படையானதும் மற்றவற்றைவிட மென் போக்கானதுமான துஷ்பிரயோகங்களுக்கு எதிராகப் பிள்ளைகளை பாதுகாப்பதற்கான கட்டுப்படுத்தல்கள் இருப்பது விரும்பத் தக்கதாகும். அனேகமான சந்தர்ப்பங்களில் தனியார் கல்வியூட்டலின் இயல்பும் தாக்கங்களும் மதிப்பீடு செய்வதற்கு கடினமாக இருக்கும் என்பதால், பெற்றோருக்கும் ஏதோ ஒரு பாதுகாப்பு தேவைப்படலாம். ஏனைய வர்த்தக ஆட்சிப்பரப்புகளைப் போலவே, விளம்பரம் செய்தல் மற்றும் நுகர்வோருடனான ஒப்பந்தங்கள் தொடர்பான கட்டுப்படுத்தல்கள் அவசியமாக இருக்கலாம். இதுபோலவே, கல்வியூட்டலை வழங்குபவர்களுக்கும் அவர்களால் பணிக்கமர்த்தப்படுபவர்களுக்குமிடையேயான ஒப்பந்தங்களுக்கும் கட்டுப்படுத்தல்கள் அவசியமாக இருக்கலாம்"[5]

தனியார் கல்வியூட்டலும் கல்வி நிலையங்களும் சமூக சமமின்மைகளை உருவாக்கலாம் எனவும் ஆக்குநர்கள் கூறுகிறார்கள்.

"அதிக வருமானத்தைக் கொண்ட குடும்பங்கள், குறைந்த வருமானத்தைக் கொண்ட குடும்பங்களைவிட, அதிக இலகுவாக, அவர்களை விடக் கூடிய பணத்தை செலவழித்து, அவர்கள் பெறுவதைவிடச் சிறப்பான கல்வியூட்டுதலை பெறமுடியும் என்பது வெளிப்படையானதாகும். பல்வேறு வகையான சூழமைவுகளில் இந்த உண்மை அனுபவ பூர்வமாக மெய்பிக்கப்பட்டுள்ளது."[6]

1 1Bray, TM & Kwo, OWY. 'Regulating Private Tutoring for Public Good: Policy Options for Supplementary Education in Asia'. Bangkok and Hong Kong: UNESCO and Comparative Education Research Centre, HKU. 2014 (accessed 19 June 2014: http://cerc.edu.hku.hk/new-book/regulating-private-tutoring-public-good-policy-options-supplementary-education-asia/)
2 Pallegedara, Asankha (2012): 'Demand for Private Tutoring in a Free Education Country: The Case of Sri Lanka'. International Journal of Education Economics and Development, 3 (4): 375-393.
3 Suraweera, A.V. (2011): 'Dr. Kannangara's Free Education Proposals in Relation to the Subsequent Expansion of the Tuition Industry'. Dr.C.W.W. Kannangara Memorial Lecture 22, Mahargama, Sri Lanka: Department of Research and Development, National Institute of Education.
4 Bray, TM & Kwo, OWY. 'Regulating Private Tutoring for Public Good: Policy Options for Supplementary Education in Asia'. Bangkok and Hong Kong: UNESCO and Comparative Education Research Centre, HKU. 2014. p.16 (accessed 19 June 2014: http://cerc.edu.hku.hk/new-book/regulating-private-tutoring-public-good-policy-options-supplementary-education-asia/)
5 Ibid., p.25

இந்த அதிகாரத்தில் பின்னொரு இடத்தில் சுட்டிக் காட்டப்பட்டிருப்பது போல், வடக்கின் கிராம, கரையோர மற்றும் நகர்ப்புற தனியிடங்கள் (pockets) ஆகியவற்றில், நகர்ப் புறங்களைவிட குறைவான ரியூட்டரிகள் இருப்பதால் வடக்கிலும் இதுதான் நிலைமையாகும். இங்குதான் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் வாழ்கின்றன. இனரீதியான சமமின்மைகள் தொடர்பாக, இவ்வறிக்கை ஆக்குநர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்:

> "சிறிலங்காவிலே, 2006/2007 மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்று 59.4% தமிழ் குடும்பங்கள் தனியார் கல்வியூட்டலுக்கென பணத்தை செலவிடுவதாகவும் இதனோடு ஒப்பிடும் பொழுது 64.8 % சிங்களக் குடும்பங்கள் அவ்வாறு செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பல்லே கெதர 2012: 381). மீண்டுமாக, அரசுகள் இவ்வாறான விடயங்களை இலகுவாக கட்டுப்படுத்த இயலாதெனினும் நிகழ்வுக் கோலங்களை அறிந்திருப்பது அவசியமாகும்."[7]

30 வருடப்போர், வரலாற்று ரீதியான பாகுபாடு காட்டுதல் மற்றும் வேறும் பல காரணிகளால் வடக்கிலுள்ள தமிழச்சமூகம், விசேடமாக வன்னியிலுள்ளவர்கள், தங்கள் பிள்ளைகளுக்கு தனியார் கல்வியூட்டுதலுக்கு. அவர்கள் விருப்பப்படி செலவழிக்க முடியாதபடியான, குறைவான வருமானங்களையே கொண்டிருக்கிறார்கள். கல்வியூட்டுபவர்களுக்கு சர்வதேச நிதிவழங்குனர்களும், சமூகங்களுக்கு உள்ளேயான மற்றும் சமூகங்களுக்கு இடையேயான சமமின்மை பற்றி விழிப்புடன் இருக்க வேண்டும்.

சிறிலங்கா தொடர்பாக, "பொது மக்கள் நலனுக்காக தனியார் கல்வியூட்டுதலை கட்டுப்படுத்தல்" இல் குறிப்பிடப்பட்டுள்ள இன்னும் பலவிடயங்கள், சிறிலங்காவின் வடக்கு மாகாணத்தில் NESR அவதானித்தவற்றுக்கு ஆதரவு வழங்குபவையாக இருக்கின்றன.

**"தனியார் கல்வியூட்டல், முறைமையான பாடசாலைக் கல்விக்கு மறைமுக கேடுகளை விளைவிக்கலாம். பல வழிகளிலும் நிகழக்கூடிய இதனுடைய முதலாவது தொகுதியானது ஆசிரியர்களின் மனப்போக்கு தொடர்பு பட்டதாகும்.**

> ஆசிரியர்கள் தங்கள் வழமையான மாணவர்களுக்கே மேலதிக கல்வியூட்டலை வழங்கும் பொழுது, தனிப்பட்ட மேலதிக வகுப்புகளுக்கான கேள்வியை ஊக்குவிக்கும் விதத்திலே, முறைமையான பாடங்களைக் கற்பிக்கும் அளவை குறைக்கும் ஆர்வச் சோதனைக்கு உட்படக்கூடும்.
>
> தங்கள் மாணவர்களுக்கு தனிப்பட்ட கல்வியூட்டாத ஆசிரியர்கள், தங்களுக்கான தனிப்பட்ட கேள்வியை ஊக்குவிக்கவென, வேண்டுமென்றே தங்களது முறைமையான கல்வியூட்டல் அளவைக் குறைக்காவிட்டாலும் தங்களுடைய தனிப்பட்ட வகுப்புகளுக்கென முறைமை வகுப்புகளைவிட கூடுதலான முயற்சியை செலவிடக்கூடும். தனிப்பட்ட வகுப்புகளிலான வருமானம் ஆற்றுகைகளோடு நேரடியாக தொடர்புபட்டதாகவும் முறைமையான பணிக்கென நியம அளவிலான மாத வேதனம் கிடைப்பதுமே இதற்கு காரணமாகும்.
>
> பாடசாலை ஆசிரியர்கள் தாமே குறைநிரப்பு கல்வியூட்டுநர்களாக பணியாற்றாவிட்டாலும் தமது மாணவர்கள் எப்படியும் தனியார் கல்வியூட்டலை பெற்றுக்கொள்வார்கள் என ஊகித்துக் கொள்ளக்கூடும். இதன் காரணமாக தனியார் கல்வியூட்டல் பரவலாகாத இடங்களிலே நிலவும் சூழ்நிலைகளிலே, முறைமையான வகுப்புகளுக்கு செலவிடும் முயற்சியை விட, குறைவான முயற்சியை, தங்கள் முறைமையான வகுப்புகளில் செலவிடக்கூடும்.

உண்மையைச் சொல்லப் போனால், இவ்வாறு ஆசிரியர் ஊகித்து செயற்படும் போது, தாங்கள் குறைநிரப்பு உதவிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பதை மாணவர்கள் கண்டுகொள்கிறார்கள். பாடசாலை கல்வியின்மீது பின்னடைவை ஏற்படுத்தும் காரணித் தொகுதியானது, மாணவர்களின் உளப்பாங்கிலிருந்து எழுவதாக இருக்கிறது. மாணவர்கள் அல்லது அவர்கள் நேரடியாக பணத்தை செலுத்தும் தனிப்பட்ட கல்வியூட்டுநர்களை, கட்டணம் இல்லாமல் வருகின்றவராக தோன்றும்,

6 Ibid., p.26

7 Bray, TM & Kwo, OWY. 'Regulating Private Tutoring for Public Good: Policy Options for Supplementary Education in Asia'. Bangkok and Hong Kong: UNESCO and Comparative Education Research Centre, HKU. 2014. p.29 (accessed 19 June 2014:

பாடசாலை ஆசிரியரைவிட அதிகமாக மதிக்கக்கூடும். இன்னுமொரு பரிமாணத்திலே, மாணவர்கள் தாங்கள் பலவீனமாக இருக்கும் பாடங்களை கற்பிக்கும் பாடசாலை ஆசிரியரிலிருந்து "தொலைவில் இருப்பார்கள்" என்பதால், உதவி தேடி தனிப்பட்ட கல்வியூட்டுநர்களை நாடுவார்கள்.

மூன்றாவது காரணித்தொகுதி, நேரமுகாமைத்துவம் தொடர்புபட்டதாகும். சிறிலங்காவிலுள்ள முதுநிலை, இரண்டாம்நிலை கல்வி மாணவர்கள் பொதுவாகவே, வாரத்துக்கு 15-21 மணித்தியாலங்களை மேலதிக வகுப்புகளில் செலவிடுகின்றார்கள் என்று குணசேகர (2009.∴84) குறிப்பிட்டிருக்கிறார். இது ஒரு நெருக்கடியான நேர அட்டவணைக்கு இட்டுச்செல்கிறது. கல்விசார் வேலைகள் மேலாண்மை பெறும் இந்த அட்டவணைப்படி, விளையாட்டுக்கோ, சமூகரீதியான ஊடாட்டத்துக்கோ அல்லது ஓய்வாயிருத்தலுக்கோ நேரம் இருக்காது. டாங்கினால் (2011: 26) வெளியிடப்பட்ட ஒரு வியட்னாமிய ஆய்வறிக்கையானது, மிகை அளவிலான தனிப்பட்ட கற்பித்தலானது பிள்ளைகளின் உடல், உளரீதியான நலத்தை பாதிப்பது மட்டுமல்லாமல், மாணவர்கள் பகலில் களைத்திருப்பார்கள் என்பதால், முறைமையான கற்றலின் போதும் செயற்றிறன் இன்மைக்கு வழிவகுக்கும்.[8]

மேலும் இந்த அதிகாரத்தில் பின்னொரு இடத்தில் ஆராயப்படவிருக்கும் இயல் நிகழ்வுகள் பற்றி பின்வருவனவற்றை கூறி, இவ்வறிக்கை ஆக்குநர்கள் எச்சரிக்கையை வெளிப்படுத்துகிறார்கள்.

> "தனிப்பட்ட வகுப்புகளுக்கான கேள்வியை ஊக்குவிக்கும் விதத்தில், முறைமையான வகுப்புகளில் கற்பிக்கும் அளவைக் குறைப்பதென்ற சூழ்நிலையானது, ஒரு வகை ஊழல் வடிவமாகும். இதைவிட பரந்த அளவிலான ஆய்வுகள் (உதாரணமாக ஹலக் மற்றும் பொய்சன் 2007,ஸ்வீனி குழுவினர், 2013) தனிப்பட்ட குறைநிரப்பு கல்வியூட்டல் உள்ளிட்ட கல்வித்துறையில் உள்ள ஊழல்களின் பல் பரிமாணங்களை முனைப்புப்படுத்தி காட்டியிருக்கின்றன. இளைஞர்கள் மற்றும் பிள்ளைகளுடைய வாழ்கைகளின் உருவாக்கும் காலப்பகுதிகளில் அவர்களுடைய விழுமியங்களை உருவமைக்கும் என்பதால் கல்வித்துறையிலான இந்த ஊழலானது அரித்து அழிக்கும் தன்மை வாய்ந்ததென்று அவை

## தனியார் கல்வி நிலையங்கள் தொடர்பாக வடக்கிலுள்ள பொதுமக்களும் பங்கீடுபாட்டாளர்களும் 2013இல் தெரிவித்த கருத்துக்கள்

கீழே தரப்படும் கருத்துகள் எல்லா ஆசிரியர்கட்கும் பொருந்தாது என்பதைக் கவனிக்க வேண்டும்.

1. தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு, பாடசாலைகளில் கற்பிக்கவிருப்பம் இல்லை.
2. பல ஆசிரியர்கள், விசேடமாக பட்டாதாரி ஆசிரியர்கள், பாடசாலை முடிந்ததும் தனியார் கல்விநிலையங்களுக்கு போய்விடுவார்கள்.
3. ஆசிரியர்கள், தங்களது மாணவர்கள், தனியார் கல்வி நிலையங்களுக்கு போகவேண்டுமென்று விரும்புகிறார்கள். சில ஆசிரியர்கள் தாங்கள் கற்பிக்கும் தனியார் கல்வி நிலையங்களுக்கே மாணவர்கள் வரவேண்டும் என்று விரும்புகிறார்கள்.
4. தனியார்கல்வி நிலையங்கள் கொட்டில்களையும் மலிவான, தரம் குறைந்த தளபாடங்களையும் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு வகுப்பிலும் 50-200 வரையான மாணவர்கள் இருக்கிறார்கள். ஆனால் தனியார் கல்வி நிலையங்கள் பெரும் தொகையிலான கட்டணங்களை வசூலிக்கின்றன. அப்படியிருந்தும், மாணவர்கள், பாடசாலை முடிந்த பின்னும்வார இறுதி நாட்களிலுமாக வாரத்துக்கு 10-20 மணித்தியாலங்களை தனியார் கல்வி நிலையங்களில் செலவழிக்கிறார்கள்.
5. மற்ற மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களுக்கு போவதாலேயே தாமும் போகவேண்டும் என்று விரும்பும் மாணவர்கள், அப்படி போகா விட்டால் தாம் சித்தி பெறமுடியாது என்று எண்ணுகிறார்கள்.
6. மாகாணத்தில் உள்ள பணவசதி இல்லாத கிட்டத்தட்ட அரைவாசி மாணவர்கள் தனியார்கல்வி நிலையங்களுக்குப் போவதில்லை.
7. சா.த மற்றும் உ.தரத்துக்குப் பின் 3 மாதத்துக்கு மாணவர்களாகிய எங்களுக்கு செய்வதற்கு ஒன்றும் இல்லை தனியார் கல்வி நிலையங்கள், போகமுடியாத அளவுக்கு செலவு கூடியவையாகும்.

8 Ibid., p.29-30
9 Ibid., p.30

8. பாடசாலைகளும் தனியார் கல்வி நிலையங்களும் எந்த விகிதாசாரத்தில் பரீட்சை வெற்றிகளுக்கு காரணமாயிருக்கின்றன என்று தெரியவில்லை.
9. தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்வதற்கு மாணவர்களுக்கு இருக்கும் தேவையையும் ஆசிரியர்கள் தங்கள் வருமானத்தை அதிகரிப்பதற்காக தனியார் கல்வி நிலையங்களில் கற்பிப்பதையும் குறைப்பதற்கான கொள்கைகள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்த வேண்டும்

## தனியார் கல்வி நிலையங்களும் மாணவர்கள், ஆசிரியர்கள் பாடசாலைகள் மற்றும் வடக்கு மாகாண கல்வி அமைப்பு முதலியவற்றின் மீதான அவற்றின் தாக்கங்களும்

நகரப்புற பகுதிகளிலே, காணப்படும் உயர்மட்ட ஆற்றுகையானது, பாடசாலைகளில் இருந்து பயணிக்கும் தூரத்துக்குள் இருக்கும் தனியார் கல்வி நிலையங்களின் எண்ணிக்கை களினதும் தரங்களினதும் ஒரு பிரதிபலிப்பாக இருக்கிறது. மாணவர்களுடைய, விசேடமாக யாழ் குடாநாட்டில் உள்ள மாணவர்களின் ஆற்றுகைகளில், குறிப்பிடத்தக்க பங்கை தனியார் கல்வி நிலையங்கள் வகிக்கின்றனவா என்பதை ஒரு அனுபவரீதியான ஆய்வு மூலம் நிர்ணயிக்க வேண்டும். எனினும் கடந்த 5இலிருந்து 10 வருடங்களுக்குள் யாழப்பாணத்தில் தனியார் கல்வி நிலையங்கள் விரிவடைந்திருப்பதும், ஜனவரியிலிருந்து யூலை வரைக்கும் பின், ஓகஸ்ட் பரீட்சைகள் வரைக்கும், தரம் 13 வகுப்புகள் பாடசாலைகளில் செயற்படுவதில்லை என்ற உண்மையும், க.பொ.த. உ.தரத்தில் மாணவர்கள் பெறும் வெற்றிக்கு, குறிப்பிடத்தக்க பங்களிப்பவை யாக தனியார் கல்வி நிலையங்கள் கருதப்பட வேண்டும் என்ற உண்மைக்குச் சான்று பகர்பவையாக இருக்கின்றன. இந்த மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களுக்கு போவது தங்களை, பரீட்சைக்கு, பாடசாலையைவிட நல்ல முறையில் தயார்ப்படுத்தும் என உணர்வதால், தங்கள் பெற்றோர் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி நிர்வாகிகள் அறிந்திருக்கும் நிலையிலும் அவர்களுடைய வெளிப்படையான உடன் பாட்டுடனும் தனியார் கல்வி நிலையங்களுக்கு போகிறார்கள்.


Kokuvil Hindu College


Tutory in Jaffna District


Tutory in Jaffna District

இந்த அதிகாரத்திலே புகைப்படமூலம் காட்டப்பட்டிருக்கிறவை போன்றவையும், அடிப்படையில் தனியார் கல்வி நிலையங்களைப் போலவே தகைமை பெற்றிருக்கிற ஆசிரியர்களைக் கொண்டிருப்பவையுமான பாடசாலைகள், தங்கள் மாணவர்களை தக்க வைத்துக்கொண்டிருக்க முடியாமலும் அதற்கு பதிலாக, இந்த அதிகாரத்தில் படமூலம் காட்டப் பட்டிருக்கிற வகுப்புகளைப் போல் அல்லாமல், உருக்குலைந்து போய்விட்ட கோழிக்கூடுகள் போல் காட்சியளிக்கும் தனியார் கல்வி நிலையங்களுக்கு, ஏன் தமது மாணவர்களை பறிகொடுக்கின்றன என்ற கேள்வி எழுகிறது. ஒரு மாணவன் நான்கு மணித்தியாலங்களுக்கு, இந்த "மேசைகளிலும் வாங்குகளிலும்", 200 - 400 வரையான உடல்களைக் கொண்டிருக்கக்கூடியவையுமான இவ்வாறான கொட்டில்களிலே இருக்க முடியும் என்று கற்பனை செய்வது கூடக் கடினமானதாக இருக்கிறது. எந்த ஒரு பொது சுகாதார அதிகாரியாவது எப்போதாவது இந்தவாறான தனியார் கல்வி நிலையங்களை பரிசோதனை செய்திருப்பார்களா என்ற கேள்வியும் எழத்தான் செய்கிறது. தேநீர்கடைகளிலும்

தோசைக்கடைகளிலும் (சிறிய உணவகங்கள்) ஒரு ஆளுக்கு தலா இத்தனை சதுரஅடி இடம் இருக்க வேண்டும் என்றவாறான விதிகள் இருக்கின்றனவெனினும் தனியார் கல்வி நிலையங்களாக செயற்படுகின்ற இந்த கொட்டில்களுக்குள்ளே அல்லது அறைகளுக்குள்ளே, எத்தனை மாணவர்களை நிரப்பலாம், என்பதற்கான எந்த விதியும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆசிரியர்கள் அதிபர்கள் மற்றும் வலயப் பணிப்பாளர்கள் தனித் தனி மேசைகளில் 35 வரையான மாணவர்களைக் கொண்டிருக்கக்கூடிய வகுப்பறைகளிலே இருக்கக்கூடிய ஆசிரியர் மாணவர் விகிதம் பற்றி முறைப்பாடு தெரிவிக்கிறார்களேயொழிய, தனியார் கல்வி நிலையங்களில் இருக்கின்ற ஆசிரியர் மாணவர் விகிதம் பற்றி கேள்வி எழுப்புவதில்லை. எனினும் மாணவர்கள் தரம் 12இல் இணையும்பொழுது இதே ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களே அவர்களை தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்லும்படி ஆலோசனை கூறுவது விதிப்பயனான விடயம்தான்.

## 1998 இல் தனியார் கல்வி நிலையங்கள்

1998ம் ஆண்டில் நா. எதிர்வீரசிங்கத்தால் தயார் செய்யப்பட்ட, "சிறிலங்காவின் வடக்கு கிழக்கு மாகாணத்தின் கல்வி மற்றும் விளையாட்டு தொடர்பான ஒரு மதிப்பீடு" என்ற அறிக்கையிலிருந்து இங்கு மேற்கோள் காட்டுவது பொருத்தமானதாகும்.[11] வடகிழக்கு மாகாணசபை முன்னாள் செயலாளரும், பின்னர், மேற்படி அறிக்கைக்கு ஆலோசகராக இருந்தவருமான, திரு. சற்குணராஜாவின் ஒத்தாசையோடு, நடத்தப்பட்ட ஒரு கருத்துக் கணிப்பிலே, மாணவர்களுக்கும் அதிபர்களுக்கும் மாணவர்கள் ஏன் தனியார் கல்வி நிலையங்களுக்கு போகிறார்கள் என்பதற்கான காரணங்களின் பட்டியல் ஒன்று கொடுக்கப்பட்டு, ஒவ்வொரு காரணத்துக்கும் ஏற்கிறேன், ஏற்கவில்லை, தெரியவில்லை, என்று பதில் கூறும்படி கேட்கப்பட்டனர். அவர்களுக்கு தெரிந்த வேறு காரணங்களையும் எழுதும்படி கேட்கப்பட்டனர். கல்முனை பிரதேசத்தில் உள்ள அதிபர்களும் இதே கேள்விகளுக்கு பதிலளிக்கும்படி கேட்கப்பட்டார்கள். அட்டவணை 1(1998ம் ஆண்டு அறிக்கையில் அட்டவணை 9) ஆனது, ஒவ்வொரு கூற்றையும் ஏற்றுக் கொண்ட க.பொ.த (சா.த) மற்றும் உயர்தர மாணவர்களின் சதவீதத்தைக் காட்டுகிறது.

Table 5.1: Reasons for Taking Tuition - 1998

| Reasons for Taking Tuition | Students % Agree | Principals % Agree |
|---|---|---|
| 1. In tuition class you can understand things that you can't in schools. | 98 | 72 |
| 2. Additional exercises are set in tuition classes. | 93 | 44 |
| 3. Tuition teachers explain without getting annoyed. | 87 | 44 |
| 4. Tuition teachers are competent and experienced. | 80 | 56 |
| 5. Explanation in school classes inadequate. | 72 | 16 |
| 6. To obtain high marks in examinations. | 65 | 76 |
| 7. You can mix with the opposite sex in tuition classes. | 59 | 84 |
| 8. In school, teachers do not complete the syllabus. | 57 | 52 |
| 9. Tuition teachers add humour to their lessons. | 46 | 60 |
| 10. Parental compulsion. | 11 | 80 |
| 11. Because friends go for tuition. | 2 | 84 |
| 12. No uniform necessary to go for tuition | 0 | 76 |

50வீதம் அல்லது அதற்கு மேற்பட்ட மாணவர்களும் அதே விழுக்காட்டு அளவிலான அதிபர்களும் ஏற்றுக்கொண்ட, தனியார் கல்வி பெறுவதற்கான காரணங்கள், தங்கள் பாடசாலையில் கற்பிக்கும் கிட்டத்தட்ட, அனைத்து ஆசிரியர்கள், பலசந்தர்ப்பங்களில் சேவைக்கால ஆலோசகர்கள் மற்றும் சில பிரதேச கல்வி அதிகாரிகள் ஆகியோர் பணம் பெற்றுக் கொண்டு தனியார் கல்வி நிலையங்களில் கற்பிப்பதாக மாணவர்கள் தெரிவித்தார்கள். தங்களுடைய சொந்த ஆசிரியர்கள் சிறப்பான ஆசிரியர்கள் இல்லை என்பதால், தாங்கள் அவர்கள் கற்பிக்கும் தனியார் கல்வி

11 Ethirveerasingam, Nagalingam. "An Appraisal of Education and Sports in the NorthEast Province of Sri Lanka", Report to the NorthEast Province Ministry of Education, Culture and Sports. 1998.

நிலையங்களுக்கு செல்வதில்லை என மாணவர்கள் குறிப்பிட்டனர். தனியார் கல்வி நிலையங்களின் நிர்வாகிகளும் அவர்களின் ஆசிரியர்களின் சிலரும் ஓய்வு பெற்ற ஆசிரியர்களாக அல்லது தனியார் கல்வி நிலையங்களில் முழுநேரம் கற்பிப்பதற்கென, கற்பித்தல் உள்ளிட்ட வேறு வேலைகளிலிருந்து ராஜினாமா செய்தவர்களாக இருக்கிறார்கள். வடக்கு கிழக்கு மாகாணம் முழுவதும் உள்ள விளம்பரப் பலகைகளில் தனியார் கல்வி நிலையங்கள் தொடர்பான பல விளம்பரங்கள் காணப்படுகின்றன.

நேர்காணல் செய்யப்பட்ட மாணவர்களின் புலனுணர்வின்படி, வகுப்பறைகளிலே பயன்விளைவான கற்பித்தல் இடம் பெறுவதில்லை. ஆனால் இதே ஆசிரியர்கள் தனியார் கல்வி நிலையங்களில் வேறு பாடசாலைகளின் மாணவர்களுக்கு கற்பிக்கும் பொழுது சிறப்பான ஆற்றுகையை தருவதாக தோன்றுகிறது. தனியார் கல்வி நிலையங்களில் கற்பிப்பது என்பது, பல ஆசிரியர்களுக்கு மேலதிக வருமானத்தை பெறுவதற்கான இரண்டாவது தொழிலாக மாறியுள்ளது. தனியார் கல்வி நிலையங்களிலான அவர்களது தொடர்ச்சியான வேலை வாய்ப்பென்பது அந்தந்த தனியார் கல்வி நிலையங்களின் பணிப்பாளர்கள் அவர்களது ஆற்றுகையை அவதானிப்பதிலும் பரீட்சை பெறுபேறுகளிலும் தங்கியிருக்கும் என்பதால், அங்கே அவர்கள் சிறப்பாக கற்பிக்கிறார்கள் என்று கொள்ளலாம்.

இதனோடு ஒப்பிடும் பொழுது பாடசாலை வேலையானது, ஆயுள்காலம் பூராவும், ஓய்வூதிய உரிமையுடன் நீடிப்பதாகவும் ஆசிரியரின் ஆற்றுகையில் தங்கியிருக்காததாகவும் இருக்கிறது. தனியார் கல்வி நிலையங்களில் கற்பிப்பதற்கான கேள்வி இருக்கும் வரை, உயர் வேதனங்களை வழங்குவதானது, ஆசிரியர்களை தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்காமல் தடுக்கப் போவதில்லை. தனியார் கல்விகளும் தனியார் கல்வி நிலையங்களும், ஆசிரியர்களின் தொழிற்சங்கங்கள் விவாதித்து, தங்கள் தொழிலினுடைய மேன்மையை பேணுவதற்கான முடிவுகளை எடுப்பதற்கான விவகாரங்களாக இருக்கின்றன. யாழ்ப்பாணத்திலுள்ள உதவி வழங்கப்படும் பாடசாலையின் ஆசிரியர், அவர் தனியார் கல்வி நிலையங்களில் தொடர்ந்து கற்பித்தால், பதவிநீக்கம் செய்யப்படுவார் என்ற நிலையை எதிர்கொண்ட போது, தனியார் கல்வி நிலையங்களில் கற்பித்தலை நிறுத்தி விட்டார். எனினும் பாடசாலை அமைப்பிலே, அர்ப்பணிப்பு கொண்டவர்களும் மனச்சான்றுக்கு கட்டுப்பட்டவர்களுமான ஆசிரியர்கள் இன்னமும் இருப்பதைக் காண்பது மனமகிழ்ச்சி தருகிறது. அவர்களைப் பொறுத்தவரை கற்பித்தல் என்பது கடைசிப் பாடத்தின் முடிவில் ஒலிக்கும் மணியுடன்முடிவுக்கு வருவதில்லை.

“க.பொ.த. (சா.த.), உ.தர மாணவர்கள் தங்கள் சனி, ஞாயிறு உள்ளிட்ட ஒரு வாரத்துக்கு 20-25 மணித்தியாலங்கள் தனியார் கல்வி நிலையங்களில் செலவழிப்பதாக கூறினார்கள். இது மாணவர்களால் பாடசாலையில் செலவிடப்படும் நேரத்துக்கு ஏறக்குறைய சமமாக இருக்கிறது. எனவே அவர்கள் ஒரு வாரத்துக்கு கிட்டத்தட்ட 40-50 மணித்தியாலங்களை வகுப்புகளில் செலவிடுகிறார்கள். பொழுது போக்குக்கு எந்த நேரமும் இல்லை. முன் ஆரம்பநிலை வகுப்புகளில் இருக்கும் பிள்ளைகளும் வார இறுதி நாட்களில் வகுப்புகளுக்கு போகிறார்கள். துவிச்சக்கர வண்டியை ஓடும் அளவுக்கு வயது முதிராத பிள்ளைகளை, அவர்களுடைய பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள், பிற்பகலிலும் வார இறுதி நாட்களிலும் துவிச்சக்கர வண்டிகள் அல்லது மோட்டார் சைக்கிள்களில் தனியார் கல்வி நிலையங்களுக்குக் கூட்டிச் செல்கின்றார்கள்.

“வடக்கு கிழக்கு மாகாணங்களில், மாணவர்களில் மிகப் பெரும்பாலானோர், பாடத்திட்டங்களோடு இணைந்த செயற்பாடுகளில் மிகமிகக் குறைந்தளவில் பங்கு கொள்வதற்கான, முக்கிய காரணமாக தனியார் கல்வியே இருக்கின்றது. அவர்கள் பாடத்திட்டத்தோடு இணைந்த நடவடிக்கைகள் தரும் கல்வியின் மொத்த அளவிலும் குறைந்த அளவுடனே அவர்கள் பாடசாலையை விட்டுச்செல்கிறார்கள். பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிலையங்கள் உருவாக்கும் பிரச்சினைகள், தனியார் கல்வியால் கிடைக்கும் எந்த நன்மையும் இழக்கப்படாமலே தீர்க்கப்படவேண்டும்”.[12]

## 2013/2014 இல் கல்வி நிலையங்கள்

பதினாறு வருடங்களுக்கு பின்பும், உள்நாட்டுப் போர் முடிந்து ஐந்து வருடங்களுக்கு பின்னும், அதாவது, 2014இல், வடமாகாணம் எங்கும், சிறப்பாக யாழ்.குடாநாட்டில், தனியார் கல்வி நிலையங்கள் காளான்கள் முளைப்பது போல் தோன்றியுள்ளன. இவை 200-500 வரையான மாணவர்களை கொண்ட வகுப்புக்களை கொண்டுள்ளன. இந்தத் தொகையானது, தங்கள் வீட்டு வளவுகளிலே ஒற்றைக் கல்வியூட்டுனர்களோடு

12 Ethirveerasingam, Nagalingam. "An Appraisal of Education and Sports in the NorthEast Province of Sri Lanka", Report to the NorthEast Province Ministry of Education, Culture and Sports. 1998. p.

இயங்கும் தனியார் கல்வி நிலையங்களை உள்ளடக்கவில்லை. இவ்வாறான இடங்களில் மாணவர் தொகை 200 இற்குக் குறைவானதாக இருக்கும். பாடசாலை நேரங்களில் மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்வதென்பது யாழ்ப்பாணத்தில் நியதியாக ஆகிவிட்டது. சா.த. மற்றும் உ.தரங்களில் 80-100% வெற்றி வீதங்களைக் கொண்டிருக்கும் பாடசாலைகளில் கூட இதுதான் நிலையாகும். அவற்றினது மாணவர்கள், தங்களின் தரம் 12 இலிருந்து தரம் 13 வரையான காலப் பகுதிகளுக்குரிய, 06 தவணைகளில், ஆகக் குறைந்தது இரண்டு தவணைகளையாவது (06மாதங்கள்) பாடசாலை நேரங்களில் தனியார் கல்வி நிலையங்களில் செலவிடும் பாடசாலைகளிலிருந்து இச் சாதனை கோரல்கள் வருகின்றன. இதற்கும் மேலாக உ.தரத்தில் இருக்கும் மாணவர்கள் ஒருவாரத்துக்கு 20இற்கும் அதிகமான மணித்தியாலங்களை தனியார் கல்வி நிலையங்களில் செலவிடுகின்றார்கள். எனவே இவ்வாறான பாடசாலைகள் மேற்கூறியவாறான சாதனைக் கோரல்களைச் செய்யும்போது, செயற்பாட்டு ஆய்வை மேற்கொள்ள வேண்டுமென பரிந்துரை செய்யப்படுகின்றது. ”நிழற்பாடசாலை”களாகச் செயற்படும் தனியார் கல்வி நிலையங்கள், தற்போது தேசிய பரீட்சைகளில் வெற்றி பெறுவதற்கு மாணவர்களைத் தயார் செய்யும் முதல்நிலை நிலையங்களாக புகழ் மேடையின் மையத்தில் இருக்கின்றன. இந்த உண்மையானது, பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

பாடசாலைகளில் கற்பிக்கும் அனுபவசாலிகளான ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற பட்டதாரி ஆசிரியர் குழாம் ஆகியோரிலிருந்தான சிறந்த ஆசிரியர்களைத் தாம் பணிக்கமர்த்தியிருப்பதாகத் தனியார் கல்வி நிலையங்கள் உரிமை கோருகின்றன. இதனோடு ஒப்பிடும் போது கிராமப் பகுதிப் பாடசாலை அமைப்புக்களில் உள்ள ஆசிரியர்களில் 50% ஆனோர் சா.தரத்திலோ, உயர்தரத்திலோ கற்பிக்கும் தகைமை கொண்டவர்களாக இல்லை. இந்த வீதத்தில் போனால், பத்து வருடங்களில், இந்த அமைப்பானது தனியார் கல்வி நிலையங்களின் கட்டணங்களைச் செலுத்த வழியில்லாமல் பாடசாலை வகுப்புக்களுக்குச் செல்லும் மாணவர்களை மட்டும் கொண்டதாக ஆகிவிடும். உயர்ந்த தனியார் கல்வி கட்டணத்தை செலுத்த வசதி கொண்ட பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகள் தேசிய பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்கும் விதத்திலும், கவர்ச்சிகரமான கட்டடங்களைக் கொண்ட, புகழ்பெற்ற ஒரு பாடசாலையின் மாணவர் குழாமில் ஒருவராக இருக்கும் கௌரவத்தை அவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கென்றும் ஒரு பாடசாலையை தெரிவு செய்வார்களேயொழிய, அவர்களது பிள்ளைகள் தங்கள் தேசிய பரீட்சைக்கான ஆயத்தப்படுத்தல்களில் பெரும் பகுதிகளை மேற்கொள்ளும் இடங்களாக கல்வியமைப்பினால் மேற்பார்வை செய்யப்படாதவையும், பாடசாலை என்ற வகையில் அனுமதிப் பத்திரங்கள் பெறாதமையுமான தனியார் கல்வி நிலையங்களே இருக்கும்.

மீளாய்வுக்கென மற்றும் பகிரங்க விளக்கமளிப்புக்களில் முன்வைப்புக்களை செய்தவர்களில் பலரும், தாங்கள் பரிந்துரை செய்யும் தனியார் கல்வி நிலையங்களுக்கு மாணவர்களை போகும்படி கூறும் தங்கள் ஆசிரியர்கள் மீதான மதிப்பை மாணவர்கள் இழந்து விட்டார்கள் என்ற உண்மையை முனைப்புப்படுத்திக்காட்டினார்கள் இவ்வாறான நோக்குகள், தாங்கள் உ.த பரீட்சையில் சித்தி பெற்ற பின் தற்போது தரம் 12 இல் இணைந்து கொண்டிருக்கும் மாணவர்களாலும் உறுதிப்படுத்தப்பட்டன. இந்த உண்மையானது, இவ்வாறான, நலன்களோடு முரண்படுகின்ற வழக்கங்கள், வடக்கிலும் சிறிலங்காவின் ஏனைய பகுதிகளிலும், ஊழலாக கருதப்படுகின்றனவா என்ற கேள்வியை எழுப்புகிறது.

தேசியப் பரீட்சைகளுக்கு தோற்றுவதாயின் மாணவர்கள் பாடசாலையில் பதிவு செய்யப்பட்டிருக் வேண்டும் என்ற விடயம்தான், தரம் 10 மற்றும் தரம் 11 இல் மாணவர்கள் பெரும் தொகையில் பாடசாலையிலிருந்து வெளியேறி தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்வதை தடுத்துக் கொண்டிருக்கின்றது. பரீட்சைகளுக்கு முந்திய வருடங்களில் மாணவர்கள் 80% வகுப்புக்களுக்கு சமுகமளிக்க வேண்டும். இந்தத் தேவையானது, வரவு பதிவேடு அடையாளமிடப்பட்டபின் பாடசாலையை விட்டு செல்வதன் மூலம் எட்டப்படுகின்றது. விரைவிலே தனியார் கல்வி நிலையங்களும் வசதி கொண்ட பெற்றோரும் தங்களுக்கு விருப்பமான தனியார் கல்வி நிலையங்கள், தேசிய பரீட்சைகளுக்கு மாணவர்களை பதிவு செய்ய அனுமதிக்கப்பட வேண்டுமென கோரக்கூடும்.

## க.பொ.த. பரீட்சைக்கான நாட்குறித்தலும் பாடசாலை வருட தொடக்கம் /முடிவு

தற்போது ஒவ்வொரு வருடமும் உ.தர பரீட்சைகள் ஓகஸ்ட் மாதத்திலும் சா.த. பரீட்சை டிசம்பர் மாதத்திலும் நடாத்தப்படுகின்றன. சா.தர பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்த வருடம் ஏப்பிரல் மாதம்வரை வெளியிடப்படமாட்டாது என்பதோடு, அதில் சித்தி பெறுபவர்கள் அடுத்த வருடத்தில் யூன்,யூலை மாதங்களிலேயே தரம் 12இற்கு அனுமதிக்கப்படுவார்கள். யூலையிலிருந்து ஓகஸ்ட் விடுமுறைகள் முடியும்வரை ஒழுங்கற்ற விதத்திலேயே கற்பித்தல் நிகழுமெனினும் உ.த. பாடத்திட்டக் கற்பித்தல் யூலையில் ஆரம்பிக்கப்படமாட்டாது. உண்மையான கற்பித்தல் செப்ரெம்பர் மாதத்தில்

ஆரம்பமாகும். அப்போது நிகழ்கால பாடசாலை வருடத்தின் மூன்றாவது தவணையாக இருக்குமெனினும், உ.த. மாணவர்களுக்கு, அது, அவர்களது முதலாவது தவணையாகக் கருதப்படும். ஒரு மாணவனுடைய வாழ்க்கையின் எட்டு மாதங்கள், அதாவது செப்ரெம்பரில் அவர்களது முதலாவது தவணை தொடங்கும்வரை காத்திருப்பதில் விரயமாக்கப்படுகின்றது.

**சில தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஒரு அடிப்படைச் சம்பளத்தையும் தாம் கற்பிக்கும் மாணவர் செலுத்தும் கட்டணத்தின் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தையும் பெறுகின்றார்கள்.**

**ஜனவரியிலிருந்து யூலைவரை மாணவர்கள் ஏன் வகுப்பில் இல்லை? என்று கேட்ட பொழுது அவர்கள் கற்கும் விடுமுறையில் இருப்பதாக ஆசிரியர்களும் அதிபர்களும் வெட்கமின்றி பதிலளித்தார்கள்.**

வசதி கொண்ட சில மாணவர்கள், மேலதிகமாகத் தனியார் கல்வி நிலையங்களில் கல்வியைப் பெறுவதற்கு பணவசதி இல்லாத மாணவர்களை "கொஞ்சம் முந்திக் கொள்வதற்கென" இந்தக் காலப்பகுதியிலே, தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்கிறார்கள். இது, சமூக சமமின்மைகளை மேலும் வலுப்படுத்துவதாக இருக்கின்றது. நிகழ்கால கல்வி அமைப்பினுடைய இவ்வாறான உத்தேசிக்கப்பட்ட மற்றும் உத்தேசிக்கப்படாத பின் விளைவுகள் மாணவருடைய நேரத்திற்கு மரியாதை கொடுக்காததாகவும், கடைசியிலே, அதிக மாணவரை சேர்த்துக் கொள்ள தனியார் கல்வி நிலையங்களுக்கு உதவுவதாகவும் அதைத் தொடர்ந்து தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு உதவுவதாகவும் இருக்கின்றன. இங்கு எழுப்பப்பட வேண்டிய வினாவாக இவ்வாறான வழக்கங்கள் நலன்களோடு முரண்படுபவையா அல்லது ஊழலா அல்லது அவை இரண்டுமா என்பதாகும்

தினவரவு விதிகள் தளர்வாக நடைமுறைப்படுத்தலோடு இணைந்ததாக, உ.த. பரீட்சை ஓகஸ்ட் மாதத்தில் நடத்துவதன் பேறாக, ஜனவரியில் இருந்து யூலைவரை தரம் 13 மாணவர்கள் தங்கள் வகுப்புக்களுக்குச் செல்லாமல் விட்டுவிடுகின்றார்கள். அதற்குப் பதிலாக பாடசாலையில் இருப்பதாக, வரவுப் பதிவு செய்துவிட்டு தனியார் கல்வி நிலையங்களுக்குப் போய்விடுகின்றார்கள். உ.த பரீட்சை ஓகஸ்ரில் நடத்துவதற்கு கூறப்படும் காரணமாக, மாணவர்கள் யூலை மாதத்திலேயே தரம் 12 இல் அனுமதிக்கப்படுவார்கள் என்பதும் தரம் 13இன் ஓகஸ்ட் மாதத்தில் உ.த பரீட்சைக்கு தோற்ற முன்னதாக, பாடத்திட்டத்தை பூர்த்தி செய்ய, ஆகக் குறைந்தது ஆறு தவணைகளாவது தேவையாக இருக்கும் என்பது இருக்கின்றது. எனினும், உ.த பரீட்சையை ஓகஸ்ரில் நடாத்துவதற்கு கூறப்படும் காரணமாக, மாணவர்கள் தரம் 12ஐ யூலை/ செப்ரெம்பரில் தொடங்குவதால், தரம் 13 வகுப்புக்குப் பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்ய ஆறு தவணைகள் தேவை என்பது இருக்கிறது. இது சுற்றறிக்கைகளை வைத்து ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கல்வித் திணைக்களம் முதலியவை காரணம் கூறுவதற்கான நல்லதொரு உதாரணமாக இருப்பதோடு, இதனை தன் வாலையே கலைக்கும் நாய்க்கு ஒப்பிட முடியும். இவ்வாறாக மாணவருடைய பெறுமதியான வருடங்கள் விரயமாக்கப்படுவதையும் அரச நிதிகள் விரயமாக்கப்படுவதையும் பற்றி சிறிலங்காவின் கல்வி அமைப்பில் இருக்கும் எவரும் எதையும் செய்வதில்லை.

அரச பாடசாலைகளின் சம்பளப் பட்டியலில் இருக்கும் பல பாடசாலை ஆசிரியர்களும் சில வலயக் கல்வி உத்தியோகத்தர்களும் தனியார் கல்வி நிலையங்களில் கற்பிப்பதோடு, தற்போதைய சா.த, உ.த. சுற்று வட்டங்களிலிருந்தும், பெறுபேறுகளை வெளியிடுவதற்கு எடுக்கப்படும் மட்டுமீறிய காலத்திலிருந்தும் பயன்பெறுகின்றார்கள். இங்கே கேட்கப்படவேண்டிய வினா என்னவெனில், "இவ்வாறான பழக்கங்கள் ஊழலா?" அல்லது "தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்கும் ஆசிரியர்களும் தனியார் கல்வி நிலையங்களும், பரீட்சைத் திணைக்களம் பரீட்சைகளை நிர்ணயிக்கும் காலங்கள் மற்றும் பெறுபேறுகளை வெளியிட எடுக்கும் காலங்களிலிருந்து அனுகூலங்களைப் பெற்றுக் கொள்கின்றார்களா?" என்பது இருக்கின்றது.

ஆய்வுகளுக்குட்படுத்த வேண்டிய வேறு வினாவாக, மையங்களில் உ.த மற்றும் சா.தபரீட்சை விடைத்தாள்களைத் திருத்த எத்தனை ஆசிரியர்களும் கல்வி நிர்வாகிகளும் பணிக்கமர்த்தப் படுகிறார்கள்? இந்த இரு பரீட்சைகளுக்குமான மொத்தச் செலவு என்ன? விடைத்தாள்களைத் திருத்துவதிலும் பெறுபேறுகளை வெளியிடுவதிலும் ஏற்படுத்தும் தாமதத்திற்கான காரணத்தின் ஒரு பகுதியாக, திருத்துபவர்களுக்கு பயிற்சியளிக்க வேண்டிய தேவையும் விடைத்தாள்களை திருத்துவதற்கு எடுக்கும் நேரமும் இருக்கிறது. இந்தச் செலவுகள் கல்வியமைச்சால் செய்யப்படுகின்றன. விடைத்தாள்களை திருத்த எடுக்கும் நேரம், பெறுபேறுகளை வெளியிட எடுக்கும் காலம் மற்றும் விடைத்தாள்களை திருத்துவோர்களின் தவறுகள் முதலியவற்றைக் குறைக்க, நவீன

கல்வி ரீதியான மற்றும் மதிப்பீட்டு தொழினுட்பங்களைப் பயன்படுத்தி, மாற்றீட்டு பரீட்சை மற்றும் திருத்துதல் வழக்கங்கள் முதலியவை பற்றி அக்கறையோடு கருத்திலெடுப்பது முக்கியமாகும்.

விடைத்தாள்களை திருத்த அழைக்கப்படும் ஆசிரியர்களுக்கு, விடைத்தாள்கள் எவ்வாறு திருத்தப்பட்டு, புள்ளிகளிடப்படுகின்றன என்பது தொடர்பான "உள்ளீட்டு" அறிவு இருக்கும். அங்கு அவர்கள் அறிந்து கொள்ளும் வினாக்களின் தொகுதிகளிலிருந்து அடுத்து வரப்போகும் பரீட்சைகளில் என்னென்ன கேட்கப்படலாம் என்று எதிர்வு கூறுவதற்கான, மற்றவர்களைவிடச் சிறப்பான நிலையில் அவர்கள் இருப்பார்கள். மேற்படி ஆய்வானது பரீட்சை விடைகளைத் திருத்துபவர்கள் தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்கின்றார்களா என ஆராய வேண்டும். அப்படியாயின் எவ்வளவு பேர் அப்படிக் கற்பிக்கின்றார்கள் என்று பார்க்க வேண்டும்.

பாடத்திட்டத்தினை நிறைவு செய்வதற்கு ஆறு தவணைகள் தேவை என்று சொல்வது நியாயமாகத்தான் இருக்கின்றது. ஆனால் உண்மை என்னவென்றால். ஜனவரியிலிருந்து யூலை வரையான இரண்டு தவணைகளுக்கு, தரம் 13 மாணவர்கள் பாடசாலை வகுப்பில் இருப்பதில்லை என்பதுதான். அதற்குப் பதிலாக தனியார் கல்வி நிலையங்களின் கட்டணம் செலுத்த முடியாதவர்கள் தவிர்ந்த ஏனையவர்கள், தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்கின்றார்கள். ஆசிரியர்களும் அதிபர்களும் தனியார் கல்வி நிலையங்கள் முதலில் பாடசாலையில் கற்பித்ததை முடித்து வைக்க வேண்டும் அல்லது மீட்டல் செய்ய வேண்டும் என்றும், பின்னர் பரீட்சையில் எழக்கூடிய வினாக்களுக்கு மாணவர்களைத் தயார் செய்ய வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றார்கள்.

இவ்வாறான ஒரு எதிர்பார்ப்பானது, சரியோ, பிழையோ, தரம் 13இல் உள்ள மாணவர்களுக்கு கற்பிக்கப் பாடசாலைகளுக்கு திறனில்லை என்று ஏற்றுக் கொள்வதாக ஆகின்றது. இறுதியாக உ.த. பரீட்சை எடுப்பதற்கு முன்னதாக உள்ள பாடசாலை வருடங்கள், அனைத்து மாணவர்களும் வாரத்திற்கு 15/20 மணித்தியாலங்கள் தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்றிருப்பார்கள் என்பதைக் கருத்திலெடுத்தால் "எந்த வேலைகளைச் செய்வதற்கு ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் சம்பளம் வழங்கப்பட்டு ஓய்வுதியமும் வழங்கப்படுகின்றதோ, அந்த வேலையைச் செய்வதற்கு பாடசாலைகள் தனியார் கல்வி நிலையங்களுக்கு இடம் கொடுக்கின்றனவா?"என்ற கேள்வியை கேட்க வேண்டியுள்ளது. ஜனவரியிலிருந்து யூலைவரை மாணவர்கள் ஏன் வகுப்பில் இல்லை? என்று கேட்ட பொழுது அவர்கள் கற்கும் விடுமுறையில் இருப்பதாக ஆசிரியர்களும் அதிபர்களும் வெட்கமின்றி பதிலளித்தார்கள். "கற்கும் விடுமுறை" என்று எதுவும் இல்லை. 07 மாதங்களுக்கு நிச்சயமாக இல்லை.

தேசியப் பரீட்சைகளை நடத்தும் காலம் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவதை நிர்ணயிக்கின்ற நிர்வாக, தொழினுட்ப விவகாரங்களை தீர்த்து வைக்கவேண்டிய நேரம், சிறிலங்கா கல்வி அமைச்சுக்கு வந்துள்ளது. சா.த பாடத்திட்டத்தைக் கற்பதற்கு தரம் 10 இல், விடுமுறைகளைக் கருத்திலெடுக்காமல், பயன் விளைவாக 10 மாதங்களும், தரம் 11 இல் விடுமுறைகளைப் பற்றிக் கணக்கில் எடுக்காமல் 07 மாதங்களும் செலவழிக்கின்றனர். தற்போது தரம் 11 இல் ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்கள் முழுவதும், நவம்பர் முதல் வாரத்தில் இடம்பெறும் வருடாந்த மாகாண ரீதியான



பரீட்சைக்குப் பின்னர், டிசம்பரில் நடாத்தப்படும் தேசிய சா.த பரீட்சைக்கும் தரம் 11 மாணர்கள் தயார் செய்யப்படுகின்றார்கள். ஓகஸ்ட் விடுமுறையிலிருந்து டிசம்பர் வரையே தரம் 11 மாணவர்களில் வசதியிருப்பவர்கள் பெரும்பாலான நேரங்கள் தனியார் கல்வி நிலையங்களிற்குப் போய்விட்டு, பரீட்சைக்கும் பாடசாலை முடிவுற்ற பின் நடைபெறும் விசேட தயார் செய்யும் வகுப்புக்களுக்குமென பாடசாலைக்கு வருவார்கள்.

ஆசிரியர்கள், பாடசாலைகள் மற்றும் நிர்வாகிகளால் கடைப்பிடிக்கப்படும் வழக்கங்கள், தேசிய பரீட்சைகளுக்கு தயார்ப்படுத்தப்படும் மாணவர்களை, ரியூசன் ஆசிரியர்களும் தனியார் கல்வி நிலைய நிர்வாகிகளும் வருமானத்தை பெருக்குவதற்கென சுரண்டப்படக்கூடிய வளமூலமாக நோக்கப்படும் சூழலை உருவாக்கிவிடும். எம்மானுவேல் காண்ற் (1724-1804)கூறியது போல் ”எப்போதுமே, பெறுபேறே அவர்கள் தான் என்ற விதமாக ஆட்களை நடத்துங்கள். வெறுமனே, ஒரு வழிபோல அவர்களை நடத்த வேண்டாம்”.[13] கல்வியினுடைய மையமே பிள்ளைகள்தான். பிள்ளைகள் இறுதி பெறுபேறாக இருக்கவேண்டும், பெறுபேற்றுக்கான வழியாக இல்லை.

அளவீடு, புள்ளியிடுதல், மதிப்பீடு செய்தல் முதலியவை தொடர்பில், கல்வி தொழில் நுட்பத்தில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங்கள், விடைத்தாள்களை மனிதவலுவில் திருத்தவென கொழும்புக்கு ஆசிரியர்கள் புலம்பெயர்வதை வேண்டிநிற்கும், மனிதவலுவில் திருத்தும் வடிவத்திலிருந்து, பரீட்சையின் வடிவமைப்பை மாற்றியமைக்கக்கூடிய இயலுமையை சிறிலங்கா கல்வி அமைச்சுக்கு பெற்றுத்தரக்கூடியவையாக இருக்கின்றன. மாற்றீடாக, மூன்றாம் நிலை மற்றும் பல்கலைக்கழகங்களுள் பிரவேசிப்பதற்கென மாணவர்களை மதிப்பீடு செய்வதற்கென முழுமையாகவே புதிய முறை ஒன்றை உருவாக்க வேண்டும்.

பல அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்காவிட்டாலும் மாணவர்கள்களை தனியார் கல்வி நிலையங்களுக்கு போகும்படி ஊக்கப்படுத்தி திசை திருப்பி விடுவதில் அவர்களுக்குள்ளே ஒரு ஒற்றுமை இருப்பதைக் காட்டும் சான்றுகள் பற்றிய கதைகள், போதிய அளவில் இருக்கின்றன. ஒரு உல்லாசப்பயண வழிகாட்டி அல்லது பயண முகவர் தரகுப் பணமொன்றை பெறுவதற்காக உல்லாச பயணிகளை ஹோட்டல் ஒன்றை நோக்கி அனுப்புவதில் இருந்து பெரிதாக வேறுபட்டதாக இது இல்லை. தனியார் கல்வி நிலையங்கள் தங்கள் ஆசிரியர்களின் வகுப்புகளிலுள்ள மாணவர்களிளிடமிருந்து பெறப்படும் வருமானத்தில் ஒரு குறித்த நூற்று வீதத்தை, குறித்த ஆசிரியர்களுக்கு வழங்குகிறார்கள் என்பது ஒன்றும் இரகசியமான விடயமில்லை. அரச பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்கள், சேவைக்கால ஆசிரியர்களாக இருக்கும் பட்டதாரிகள் மற்றும் கல்வி அமைச்சில் ஏதும் ஒரு பாடத்துக்கான உதவிப் பணிப்பாளர்களாக இருப்போர் ஆகியோரில் யார் யார் பாடசாலை நேரங்களில் தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்கிறார்கள் என்பதை நிர்ணயிப்பது முக்கியமானதாகும்.




[13] Kant , I . 1785. Grounding for the Metaphysics of Morals, trs. J. Ellington. Indianapolis: Hackett , 1981 (Pressian Academy pagination).

பாடசாலை நேரங்களிலோ பாடசாலைக்கு பின்னரோ உ.த மாணவர்களுக்கு கல்வியூட்டுநர்களாக இருப்பவர்கள் பெரும்பாலும் அரச சேவையில், உதவி வழங்கப்படும் மற்றும் தனியார் பாடசாலைகளின் சேவையில் உள்ள பட்டாதாரி ஆசிரியர்களாகவே இருக்கிறார்கள். இவர்களுள் சில ஆசிரியர்கள் தாங்கள் கற்பிக்கும் பாடங்களில், பட்டங்கள் அல்லது கல்வியியல் கலலூரி டிப்ளோமா பெற்ற ஓய்வு பெற்ற ஆசிரியர்களாக, சிலர் திறமை பெற்றவர்களாகக் கருதப்படும் ”புகழ் பெற்ற ஆசிரியர்களாக” அல்லது பல்கலைக்கழக விரிவுரையாளர்களாக இருக்கிறார்கள். சா.த மாணவர்களை தயார் செய்பவர்களில் மேலே குறிப்பிட்ட வகையினருக்கு மேலதிகமாக, கல்வியியற் கல்லூரி டிப்ளோமாதாரிகளும் இருக்கிறார்கள். தரம் 1 - தரம் 9 வரையான வகுப்புகளுக்கான கல்வியூட்டுநர்கள் பிரதானமாக, ஆசிரியர் சான்றிதழ் மற்றும் கல்வியியல் கல்லூரி டிப்ளோமா பெற்றவர்களாக இருக்கிறார்கள்

ஆசிரியருக்கு வழங்கப்படும் எந்த அளவு சம்பள உயர்வும், தலா GDP இன் அடிப்படையில் அதிகாரம் 2இல் முனமொழியப்பட்டு பின்னர் அதிகாரம் 7 இல் பரிந்துரை செய்யப்பட்ட 260% அதிகரிப்பு கூட, பாடசாலை அமைப்பில் இருந்து கொண்டே, தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்கும் ஆசிரியர் பெறும் வருமானத்துக்கு ஈடானதாக இருக்காது. ஆசிரியர்களும் அரச ஊழியர்களும் தங்கள் சம்பளம் தொடர்பாக வரி ஏதும் செலுத்துவதில்லை என்பதால், பாடசாலை ஆசிரியர்களும் ஓய்வு பெற்ற ஆசிரியர்களும் தாங்கள் தனியார் கல்வி நிலையங்களில் இருந்து பெறும் வருமானத்துக்கு வரி செலுத்துகிறார்களா என்ற கேள்வி எழுகிறது.

வறுமைக் கோட்டுக்கு கீழே, கோட்டில் மற்றும் அண்மையாக இருக்கும் மாணவர்களே இதில் இழப்பை சந்திப்பவர்களாக இருக்கிறார்கள். சா.த. மற்றும் உ.தரத்துக்கு பின் பாடசாலை அமைப்புக்கு வெளியே தள்ளப்படுவர்களில் 60-70 வீதமானவர்கள் இவர்களாகவே இருக்கிறார்கள். இவ்வாறான புறக்கணிப்புகளுக்கான விலையை உயிர்கள் மற்றும் உடைமைகள் மூலமும் செலுத்தப் போகின்றதும் அமைச்சர் பந்துல குணவர்த்தன ஆலோசனை கலக்கும் பணிக்கூடத்துக்கான தமது உரையில் கூறியதுபோல் “புனரமைப்புக்கும் புனர்வாழ்வுக்குமென, உலகவங்கி, ஆசியவங்கி, JICA, KOICA, AUSAID, UNESCO, UNICEF போன்ற சர்வதேச நிதி வழங்குநர்களிடமிருந்து கடன் பெறுவது” அல்லது வடமாகாண முதலமைச்சர் கூறியது போல் சில நாடுகளில், அந்நாடுகளின் குடிமக்கள் கடின உழைப்பை மேற்கொண்டு செலுத்தும் வரிப் பணத்திலிருந்து பணம் வழங்கப்படும், சர்வதேச நிதி வழங்குநர்கள் அல்லது சர்வதேச அரசு சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து உதவி அல்லது கடன்பெறுதல் காரணமாக, இரக்கும் நிலைக்கு தள்ளப்பட போகின்றதுமாக, சமூகமே இருக்கிறது.

மேலே கூறப்பட்ட நாடுகளின் குடிமக்களின் பிள்ளைகள், தாங்கள் வேலை செய்து உழைக்கும் பணத்தின் மூலம், தங்கள் கல்விக்கென அரசும் பெற்றோரும் தரும் ஆதரவை குறைநிரப்புச் செய்து கொள்ளும் அதேவேளை சிறிலங்கா மாணவர்கள், விசேடமாக பல்கலைக்கழக மாணவர் ஒரு ”இலவச பயணத்தை” மேற்கொள்கிறார்கள்.

இந்த உண்மைகள் தனியார் கல்வி நிலையங்களுக்கு போகும் மாணவர்கள், அவர்களது பெற்றோர், ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வித்துறை நிர்வாகிகளும் பொதுமக்கள் மற்றும் பங்கீடுபாட்டாளர்களுக்குத் தெரிநதிருந்தும், பொதுமக்கள் மற்றும் பங்கீடுபாட்டாளர்களிடமிருந்து பெறப்பட்ட முன்வைப்புகள் எதுவும் தனியார் கல்வி நிலையங்களை நேரடியாகக் கண்டனம் செய்யவில்லை. தாங்கள் கற்பிக்கும் தனியார் கல்வி நிலையங்களுக்கு வரும்படி தங்கள் பிள்ளைகளுக்கு கூறும் ஆசிரியர்கள், மாணவர்களை தனியார் கல்விக்கு வரச்செய்யும் விதத்தில் வேண்டுமென்றே வகுப்பில் நன்கு கற்பிக்காமல் விடுகிற அல்லது பாடத்திட்டத்தை கற்பித்து முடிக்காமல் விடுகிற ஆசிரியர்கள் பற்றி பெற்றோர்கள் முறையிட்டிருந்தார்கள்தான். இந்த அதிகாரத்தின் ஆரம்பத்தில் குறிப்பிடப் பட்டிருக்கும் ஆய்வானது, இந்த மீளாய்வு அவதானித்த சில விடயங்களுக்கு வலுவூட்டுவதாகவும் பொது மக்கள் மற்றும் பங்கீடுபாட்டாளர்களிடமிருந்து கிடைத்த முன்வைப்புகளில் சிலவற்றை உறுதிப்படுத்துபவையாகவும் இருந்தன.

இது வரையில் சேர்க்கப்பட்ட தகவல்களிலிருந்து மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களுக்கு, வகுப்பறையில் வைத்து மரியாதை கொடுப்பதில்லை என்பதும் இதற்கு பதில் வினையாக, ஆசிரியர்கள் உடல்ரீதியான தண்டனை வழங்குகிறார்கள் அல்லது வாய்மூலம் திட்டுகிறார்கள் என்பதும் தெரியவந்துள்ளது. இங்கே கேள்வி என்னவென்றால், ஆசிரியர்கள் தங்கள் சொந்த வருமானத்தை பெருக்கி கொள்ளும் வகையில், தனியார் கல்வி நிலையங்களின் சார்பில் பிரச்சாரம் செய்யும் அளவுக்குத், தங்களைத் தாழ்த்திக் கொள்வதிலிருந்து, இந்த மரியாதை காட்டாமை உருவாகிறதா என்பதாகும். இவ்வாறான கோரப்படாத மற்றும் அறநெறியற்ற ஆலோசனைகளை வழங்கும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு மாணவர்கள் சவால் விடுக்கா விட்டாலும், ஒன்றில் தங்கள் ஆசிரியர்களுக்கு மதிப்புக் கொடுக்காமலிருப்பதற்கு அல்லது இவ்வாறான வழக்கங்கள் ஒரு நியதி போலவே ஆகிவிட்ட ஒரு சமூகத்திலே, தங்களது சொந்த விழுமியங்களின் அமைப்பை

உருவாக்கி கொள்ளும் விதத்திலே, தங்கள் ஆசிரியர்களால் செய்யப்படும் பரிந்துரைகளை தங்கள் மனதில் பதித்து வைத்துக் கொள்கிறார்கள்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் பல ஆய்வுகள் NIE மற்றும் கல்வியியல் கல்லூரிகள் போன்ற நிறுவகங்களால் மேற்கொள்ளப்பட்டதெனினும், வடக்கிலுள்ள உயர் கல்வி நிறுவகங்களால் இந்த விடயம் தொடர்பாக தாராள முயற்சியுடனான ஆய்வுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

தனியார் கல்வி நிலையங்கள் காளான்களைப் போல் தோன்றுவதற்கான காரணம், ஆசிரியர்களுக்குக் காட்டப்படும் அவமரியாதை, எந்தெந்தெந்த ஆசிரியர்கள் வகுப்பறை ஒழுக்கத்தை கட்டுப்படுத்தும் வழியாக, உடல்ரீதியான தண்டனைகளை கைக் கொள்கிறார்கள், அவர்கள் ஏன் அப்படிச் செய்கின்றார்கள் என்பனவற்றை நிர்ணயிக்க உடனடியாகவே ஆய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும்.

தேசிய பாடசாலைகளும் அவை பிரசவித்து ஊட்டம் கொடுக்கின்ற தனியார் கல்வி நிலையங்களும், மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், எடுக்கும் கல்வி தொடர்பான முடிவுகளின் வடிவம் மற்றும் உள்ளடக்கம் மீது, பொம்மைகளை நூலால் ஆட்டுவிக்கும் பொம்மலாட்டக்காரனைப் போல், மேல் கவிந்திருக்கின்றன.

இந்த அறிக்கையின் ஆரம்பத்தில் உள்ள நிறைவேற்று சுருக்கத்தில் உள்ள விளக்கப்படம், உரு-ES1 ப் பார்க்கவும். கல்வியமைப்பானது இப்போது பிள்ளையை மையமாகக் கொண்ட அமைப்பாகச் செயற்படுகிறதா அல்லது வடமாகாணத்தில், அத்துடன் சிறிலங்காவின் ஏனைய பகுதிகளிலும், தங்கள் ஆசிரியர்களினுடைய விழுமியங்களை மௌனமாகக் கேள்விக்குள்ளாக்கும் மாணவர்களின் புலனுணர்வானது, ஆசிரியர்களுக்கு அவமரியாதை காட்ட வழிவகுப்பதோடு, அதற்குப் பதில் நடவடிக்கையாக மாணவர்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க, உடல் ரீதியான தண்டணைகள் வழங்குவதை கைக்கொள்வார்கள். மரியாதை என்பது சம்பாதிக்க வேண்டிய ஒன்று. வற்புறுத்திப் பெறுவது அல்ல.

## ஏனைய ஆசிய நாடுகளிலிருந்து பெறப்பட்ட தனியார் கல்வி நிலையங்கள் தனியார் கல்வி மையங்கள்தொடர்பான அவதானிப்புக்களும் மற்றும் பரிந்துரைகளும்

"பொதுமக்கள் நன்மைக்காக தனியார் கல்வியூட்டல்களைக் கட்டுப்படுத்தல்" ஆனது, அரச பாடசாலை ஒன்றில் பணியாற்றும் அதேவேளை தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் மீது, ஆசியாவிலுள்ள விதிமுறைகளைப் பற்றி ஆராய்கின்றது. இவ்வாறான ஆசிரியர்கள் நான்கு வகைகளாக வகுக்கப்படலாம். அவையாவன:

**சட்டஆட்சிப்பரப்பு:-** இந்த வகையானது பூட்டான்,ஜப்பான், கொரிய குடியரசு இந்தியாவின் சில பகுதிகள் (உதா:-மேற்கு வங்காளம்) சீனாவின் சில பகுதிகள்(உதா:- ஸான்டொங், ரியான்ஜின், ஜியாஸ்சு) மற்றும் தாய்வான் ஆகிய நாடுகளை உள்ளடக்குகிறது.
**ஊக்கப்படுத்தாமை:-** இவ்வகை வழக்கங்கள், விதிமுறைகளினால் அல்லாது அறிநெறி முறைகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன. அத்துடன்ஆசிரியர்கள் தனிப்பட்ட கல்வியூட்டலை வழங்கக் கூடாது என்று வலுவான சமிக்ஞைகள் காட்டப்படுகின்றன. (உதா: கம்போடியா, சீனா, ஜோர்ஜியா)

**தேசிய பாடசாலைகளும் அவை பிரசவித்து ஊட்டம் கொடுக்கின்ற தனியார் கல்வி நிலையங்களும், மாண வர்கள் ஆசிரியர்கள்,அதிபர்கள் எடுக்கும் கல்வி தொடர்பான முடிவுகளின் வடிவம் மற்றும் உள்ளடக்கம் மீது, பொம்மைகளை நூலால் ஆட்டுவிக்கும் பொம்மலாட்டக் காரணைப் போல், மேல் கவிந்திருக் கின்றன.**

**அங்கீகரிக்கப்பட்டால் அனுமதி:-** பல்வேறு நிபந்தனைகளின் அடிப்படையில், பாடசாலைமட்டத்தில் அல்லது அகல்விரிவான கல்வித்துறை அதிகார பீடங்களினால் அனுமதிவழங்கப்படலாம். (உதா:- புரூணை, டார்ஸ்ஸலாம், மலேசியா, சிங்கப்பூர் மற்றும் வியட்னாம்.)

**தன்னிச்சையான கோட்பாடு:-** இந்த விடயம் தொடர்பாக பாடசாலை அல்லது கல்வித் துறைஅதிகாரிகளிடம் எந்தக் கொள்கையும் இல்லை. இது தொடர்பான முடிவுகளைஆசிரியர்களும் அவர்களது வாடிக்கையாளர்களும் எடுக்க விடப்பட்டுள்ளது. (உதா:-ஹொங்கொங், மக்காவோ, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து)[14]

# பரிந்துரைகள்

உடனடியாக குறுகிய காலத்தில் வடமாகாணக் கல்வித் தொகுதி அமுலாக்கக் கூடிய பரிந்துரைகள் உள்ளன.

1.10 பேருக்கு மேற்படாதவாறு வடமாகாணக் கல்வியியல் நிபுணர்களைக்கொண்ட குழுவொன்று பின்வரும் விடயங்கள் குறித்து ஆராய்ந்து பொருத்தமான ஒழுங்கு விதிகளையும் நியதிச்சட்டங்களையும் உருவாக்குவதற்காக அமைக்கப்படவேண்டும்.

a. பாடசாலை நேரத்தில் பாடசாலைக்கு வெளியே இலாப நோக்குடன் செயற்படும் தனியார் கல்வி நிலையங்களில் பாடசாலையில் முன்பள்ளி முதல் தரம் 13 வரைபடிக்கும் பிள்ளைகள் சேர்வதைத் தடுத்தல்.

b. பாடசாலை நேரத்தில் தனியார் கல்வி நிலையங்களில் ஆசிரியர்கள் கற்பிப்பதை தடை செய்தல்.

c. எந்த நேரத்திலாவது தமது சொந்த வகுப்புக்களில் உள்ள மாணவர்களுக்கு இலாப நோக்குடனான தனியார் கல்வி நிலையங்களில் ஆசிரியர்கள் கற்பிப்பதைத் தடை செய்தல். இது ஆசிரியர்கள் வகுப்பறைகளில் தாம் கற்பிக்க வேண்டியதைக் கற்பிக்காமல் அவர்களைக் குறித்த தனியார்கல்வி நிலையத்துக்கு வருமாறு வற்புறுத்துவதைத் தடுக்கும்

d. பாடசாலை தவணைக்காலத்தில் எந்த வேளையிலாவது வார இறுதி நாட்களுக்கு உட்பட்ட வாரமொன்றுக்கு 15 மணித்தியாலங்களுக்கு மேற்படாதவாறு மாணவர் ஒருவர் தனியார் கல்வி நிலையத்திற்குச் செல்லக்கூடிய கால அளவை மட்டுப்படுத்தல். (தவணை விடுமுறை தவிர்த்த காலத்தில்)



கல்வி அமைச்சு – வடமாகாணம்

[14] Bray, TM & Kwo, OWY. 'Regulating Private Tutoring for Public Good: Policy Options for Supplementary Education in Asia'. Bangkok and Hong Kong: UNESCO and Comparative Education Research Centre, HKU. 2014. p.45. (accessed 19 June 2014: http://cerc.edu.hku.hk/new-book/regulating-private-tutoring-public-good-policy-options-supplementary-education-asia/)

# 6. நிர்வாகம், நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள் மற்றும் ஆசிரியர் பிரச்சினைகள்

## அறிமுகம்

ஆசிரியர்கள், அதிபர்கள், மற்றும் நிர்வாக ஆளணியினர் தொடர்புபட்ட விவகாரங்கள், முன்னாள் மற்றும் இப்போதைய ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் நிர்வாக அதிகாரிகளின் உள்ளீடுகளின் உதவியுடன் அடையாளம் காணப்பட்டன. அவர்களுடைய சமர்ப்பிப்புகள் இணைப்பு 1ன் கீழ் சுருக்கமாகவும் சிறப்பாக "ஆசிரியர்கள் தொடர்பானவை" "அதிபர்கள் தொடர்பானவை" "நிர்வாகிகள் தொடர்பானவை" என்ற பகுதிகளின் கீழும் தரப்பட்டுள்ளன.

- தகைமை.
- நியமனம்.
- சேவை நிபந்தனைகள்
- முதுநிலை மற்றும் ஆற்றுகை தொடர்பான விவகாரங்களை சீர்செய்தல்.
- இடமாற்றங்கள்.
- ஆற்றல் மற்றும் பதவியுயர்வு
- மீளப்பதவியில் அமர்த்துதல், தீவுக்கு வெளியேயான விடுமுறைகள்.
- சேவையிலிருந்து ஓய்வுபெறுதல்.

இங்கு தரப்பட்டிருக்கும் பரிந்துரைகளில் அநேகமானவை, உடனடியாக அல்லது குறுகிய காலத்தில் (ஒரு வருடத்துக்குள்) நடைமுறைப்படுத்தப்படக் கூடியவையாகும். பொருத்தமான மத்திய அமைச்சின் சுற்றறிக்கைகள், சேவை பிரமாணக் குறிப்புகள், வர்த்தமானி அறிவித்தல்கள் இலகுவாக பார்வையிடுவதற்கென இணைப்பு VIII இல் சேர்க்கப்பட்டுள்ளன.

## பரிந்துரைகள்

### தகைமைகள் (Qualifications)

1. ஆசிரியர் நியமனத்துக்கான நியமன வகுதிகளுக்குரிய அடிப்படைத் தகுதிகளைத் தீர்மானித்து அவற்றை ஆட்சேர்ப்புத் திட்டத்தினுள் (Scheme of recruitment) அடக்க வேண்டும்.
2. ஆசிரியர் நியமனத்துக்கான ஆட்சேர்ப்பு பரீட்சைகளை நடத்த வேண்டும்.
3. பாடசாலைகளுட்படத் தொடர்பான எல்லா நிறுவனங்களுக்கும் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரதிகளை விநியோகிக்க வேண்டும்.

### நியமனங்கள் (Appointments)

1. ஆட்சேர்ப்புப் பரீட்சையினதும் நன்கு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையினதும் பெறுபேறுகளின் அடிப்படையில் தகுதியை அடிப்படையாகக் கொண்டு ஊழியர்கள் நியமிக்கப்படவேண்டும்.
2. மாகாணத்தில் உள்ள கஷ்டப் பிரதேசங்களை இனங்கண்டு அவர்களின் சேவைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான நிபந்தனைகள்/ ஊக்குவிப்புக்களுடன் பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டும்.
3. பாடசாலைகளில் பற்றாக்குறை நிலவும் பாடங்களில் (கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் - ஆங்கில மற்றும் தமிழ்மொழி மூலங்களில்) இருந்து வெளியேறுவோருக்கு ஆசிரிய நியமனத்தில் முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.

4. கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களை க.பொ.த. (சா/த) வகுப்புக்களில் கற்பிப்பதற்கு தகுதியான ஆசிரியர்களுக்கு கடும் பற்றாக்குறை நிலவுவதால் க.பொ.த. (உ/த) வகுப்புக்களில் அப்பாடங்களில் தகுதிபெற்ற தேர்வு நாடிகளை அனுமதிப்பதில் தீவிர கவனஞ் செலுத்துமாறு தேசியக்கல்வியியற் கல்லூரிகளுக்கு ஆலோசனை வழங்கப்படவேண்டும்.

5. விளையாட்டு விஞ்ஞானமாணி, கல்விமாணிப் பட்டநெறியில் கற்பித்தல் முறையியல் மதிப்பீடு, பாடசாலை - விளையாட்டு, உளவியல், சீர்மியம் குறைந்தது இரு தவணைகளிலாவது கற்பித்தல் பயிற்சி, விளையாட்டுப் பயிற்சி (Coaching Practice) என்பன உள்ளடக்கப்பட வேண்டுமெனப் பல்கலைக்கழகங்களுக்குப் பரிந்துரைக்கப்படுகின்றது.

6. பாடசாலைகளில் உடற்கல்விப் பட்டதாரி ஆசிரியர்களாக விளையாட்டு விஞ்ஞானக் கல்விமாணிப் பட்டதாரிகள் நியமிக்கப்படவேண்டும்.

## சேவை நிபந்தனைகள்

1. கஷ்டப் பிரதேசங்களில் குறித்த காலப்பகுதி கட்டாயமாக சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனை அடிப்படையிலான நியமனம் வழங்கல் நடைமுறை கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும்.

2. நிபந்தனைகளைக் குழப்பும் வகையில் இடமாற்றம் மற்றும் சேவை நிலைமைகளில் அரசியல் மற்றும் நிர்வாகச் செல்வாக்குகளையும் அழுத்தங்களையும் பிரயோகிக்கும் முயற்சிகள் கண்டிக்கப்படுவதோடு முற்றாகத் தடுக்கப்பட வேண்டும்.

3. மனிதாபிமான அடிப்படையில் வலயங்களுக்கு வெளியே கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கான நியமன வேறுபடுத்தல்கள் தற்காலிக இணைப்புக்கள் என்பனவற்றை வழங்கும் நடைமுறை முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

4. பரிந்துரைகள் 2 உம் 3 உம் வலயக்கல்விப் பணிப்பாளர்களைப் பொறுத்தமட்டிலும் அமுலிலிருக்கும் அதேவேளையில் மருத்துவ மற்றும் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் தத்தமது வலயங்களுக்குள்ளே தற்காலிக இணைப்பு வழங்குவதற்கு வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

5. மாகாணக்கல்வி அமைச்சிலோ மாகாணக்கல்வித் திணைக்களத்திலோ உள்ள பதவிகளுக்குப் பதவியுயர்வுகளோ இடமாற்றங்களோ வழங்கப்படும் போது அவ்வப் பகுதிகளுக்கென ஒதுக்கப்பட்ட கடமைகள் அவ்வவ்வலுவலர்களுக்கு வழங்கப்பட வேண்டும். நியமிக்கப்படும் அலுவலரைப் பொறுத்து அப்பதவிக்கென குறித்தொதுக்கப்பட்ட கடமைகள் மாற்றப்படக்கூடாது. ஒரு பதவிக்கு நியமிக்கப்பட்ட அலுவலரொருவர் அப்பதவிக்குரிய கடமைகளெவை எனத் தானாகவே தீர்மானிப்பதற்கு அனுமதிக்கப்படக்கூடாது.

6. குறித்த பதவிக்குரிய அனுமதிக்கப்பட்ட ஆளணிக்கேற்ப மட்டுமே நியமனங்களோ பதவியுயர்வுகளோ வழங்கப்பட வேண்டும்.

## சேவை மூப்பையும் செயலாற்றுகையையும் கருத்திற்கொள்ளல்

1. நியமனங்கள் பதவியுயர்வுகள் என்பன வழங்கப்படும் போது பதவியில்/சேவையில் சேவை மூப்புக்கட்டாயம் கருத்திலெடுக்கப்பட வேண்டும். சேவை மூப்பைக் கருத்திலெடுக்கும் போது செயலாற்றுகையுடன் கூடிய சேவை மூப்பை செயலாற்றுகையற்ற சேவை மூப்பிலிருந்து வேறுபடுத்துவதற்கான நியதிகள்/ பிரமாணங்கள் உருவாக்கப்பட்டு உபயோகிக்கப்படவேண்டும்.

2. அனுமதிக்கப்பட்ட ஆளணிக்கு வெளியே ஏற்கனவே வழங்கப்பட்ட நியமனங்கள் அனுமதிக்கப்பட்ட ஆளணிக்குப் பொருந்தத்தக்கவாறு சீராக்கப்படவேண்டும். வடமாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக் கல்வி அலுவலகம் என்பவற்றில் கண்டிப்பாக இப்பரிந்துரை அமுலாக்கப்படவேண்டும்.

3. இயன்றவரை கடமை நிறைவேற்று அதிபர்கள், கடமைநிறைவேற்று பிரதி / உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் பதவிகளுக்கான நியமனங்கள் தவிர்க்கப்பட வேண்டும். ஆயினும் சேவையின் அவசியம் ஏற்படும்போது கண்டிப்பாக சேவை மூப்பினையும் கடந்தகால மெச்சத்தக்க சேவையினையும் கருத்திலெடுக்க வேண்டும்.

## இடமாற்றங்கள்

1. மாகாண ஆசிரியர் இடமாற்றத் திட்டமொன்று சம்பந்தப்பட்டவர்களுடனும் தொகுதிக்கு வெளியே உ்ளளவர்களுடனும் கலந்தாலோசிப்பதன் மூலம் உருவாக்கப்பட்டு அனுமதிக்கப்பட வேண்டும்.

2. அதேபோன்று மாகாண அதிபர் இடமாற்றத் திட்டமொன்று சம்பந்தப்பட்டவர்களுடனும் தொகுதிக்கு வெளியே உள்ளவர்களுடனும் கலந்தாலோசிப்பதன் மூலம் உருவாக்கப்பட்டு அனுமதிக்கப்பட வேண்டும்.

3. மாகாண இடமாற்றத் திட்டத்தினூடாகவே கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் இடமாற்றம் பொதுவாக இடம்பெறவேண்டும். மாகாண இடமாற்றத் திட்டத்துக்குப் புறம்பாக வழங்கப்படும் எந்தவோர் இடமாற்றமும் உரிய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலராலேயே வழங்கப்பட வேண்டும்.

## தகுதியும் பதவியுயர்வும்

1. நியமனங்கள் / பதவியுயர்வுகள் யாவும் வர்த்தமானி அறிவித்தல்களுக்கும் தீர்மானங்களுக்கும் ஏற்பவே இடம்பெற வேண்டும்.

02. நியமனங்கள் வழங்கப்படும் போது அறிவுறுத்தல்கள் உறுதியாகவும் ஒரே மாதிரியாகவும் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

03. குழுவொன்று அமைக்கப்பட்டு பின்வரும் நியமனங்கள் தொடர்பாக விரிவான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு பொருத்தமான பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
    a. பட்டதாரி ஆசிரியர்களின் நியமனத்தை முற்திகதியிடல்.
    b. நான்கு வருடங்களிலும் குறைந்த பயிற்சிநெறிக் காலத்தையுடைய டிப்ளோமாதாரிகளுக்கு வழங்கப்பட்ட நியமனம்.
    c. ஆசிரியரொருவர் சேவைக்கு நியமிக்கப்பட்ட பாட வகுதி தவிர்த்த வேறொரு பாடத்திற்கு மாற்றுதல்.

## மீளச் சேவைக்கமர்த்தலும் தீவுக்கு வெளியே செல்வதற்கான விடுமுறையும்

1. ஆசிரிய நியமனம் வழங்குவதற்கான நியமன அதிகாரி, வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரேயாவார்

2. தற்போது செயலாளருக்கு பின்வருவன போன்ற சில அதிகாரங்கள் வழங்கப்படவில்லை.
   a. பாடசாலைகளில் ஆசிரியர்களையும் கல்விசாரா ஊழியர்களையும் மீளச்சேவைக்கு அமர்த்துவதற்கான அதிகாரம்.

   b. தீவுக்கு வெளியே செல்வதற்கான விடுமுறையை அனுமதிப்பதற்கான அதிகாரம்

## சேவையிலிருந்து ஓய்வு பெறல்

1. ஓய்வூதியர்களுக்கு ஓய்வுபெற்ற உடனேயே ஓய்வூதியம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுதல் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

2. அதிபர்களிடமிருந்து “கோரிப்பெறுவதற்கு எதுவுமில்லை” எனும் சான்றிதழ்கள் உரிய வேளையில் கிடைக்கப் பெறாததைச் சாட்டாக வைத்து ஓய்வூதிய விண்ணப்பத்தை அனுப்புவதைக் காலதாமதப்படுத்தக் கூடாது. கோரிப்பெறுவதற்கு எதுவுமில்லை எனும் சான்றிதழ் கிடைக்கப்பெற்றதும் திரட்டிய ஓய்வூதியத்தை (Commuted Pension / Gratuity) விடுவிக்கலாம்.

## பரிந்துரை நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணித்தல்

1. மேற்படி பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்கவும், ஏதாவது அத்துமீறல்கள் நிகழ்ந்தால், அவை குறித்து உரிய நடவடிக்கைக்கென அறிக்கை தரப்படுவதையும் உறுதி செய்யும் விதத்தில், குறைகேள் செயற்குழு போன்ற ஒரு அலகை, கல்வி அமைச்சின் கீழ் நிறுவவேண்டும். இந்த அலகானது ஓய்வு பெற்ற மற்றும் தற்போது சேவையிலிருக்கிற கல்வியூட்டலாளர் சமர்ப்பிக்கிற விடயங்களையும் ஏற்றுக்கொண்டு, அந்த விடயங்கள் கிடைக்கப் பெற்றதை உரிய திணைக்களங்கள் அல்லது அலகுகள் உறுதிப்படுத்துவதையும் பொருத்தமான முடிவுகள் எடுக்கப்பட்டு, தொடர்புபட்டவர்களுக்குத் தெரிவிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

2. இந்தப் பரிந்துரைகளில் அநேகமானவை கல்வி அமைப்பினுடைய செயற்றிறனை மேம்படுத்தும் என்பதுடன் வடமாகாண கல்விஅமைச்சு (NP) உம் வடமாகாணசபையும் அவற்றை அங்கீகரித்த உடனே நடைமுறைப் படுத்தவும் முடியும்.

## (வ.மா.) அமைச்சினுடைய திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி அலகுகளுக்கான பரிந்துரைகள்

1. (வ.மா.) கல்வி அமைச்சில் இருக்கும் திட்டமிடல் பிரிவு மற்றும் ஆய்வு மற்றும் அபிவிருத்தி பிரிவு என்பவை ஒருங்கிணைந்து, புதிய குறுகியகால (2 இலிருந்து 3 வருடங்கள்) மற்றும் நீண்டகால (4 இலிருந்து 5 வருடங்கள்) உசாவெல்லைகள் மற்றும் பொறுப்புகளுடனும், புதிய பொறுப்புகளை ஆற்றும் விதத்திலான கல்விசார் தகைமைகளைக் கொண்ட பணிப்பாளர்களுடன் மீள நிறுவவேண்டும்.

2. அபிவிருத்தி பிரிவானது தற்போதும் அடுத்த ஒன்று அல்லது இரண்டு வருடங்களுக்கான திட்டமிடலை மேற்கொண்டிருக்கிறது. இப்போதுள்ள ஆளணியினருடன் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியும். எனினும் குறுகியகால நீண்ட காலத் திட்டமிடலை மேற்கொள்வதற்கு இந்த ஆளணியினர் இப்போதுள்ளவர்களை விட உயர் மட்ட தகைமைகளைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

## நிர்வாகம் தொடர்பான பரிந்துரைகள்

1. தெரிவு செய்யப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சபையினால் கட்டுப்படுத்தப்படும், வலய மட்டத்துக்கு பகிர்வு செய்யப்பட்ட முடிவெடுத்தல் அமைப்பை வடிவமைத்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

2. கோட்டங்களை உள்ளடக்கும் விதத்தில் புதிய வலய எல்லைகளை வடிவமைத்தல். பாடசாலைகளின் எண்ணிக்கை, பாடசாலை வகைகள், வலயங்களின் தூரங்கள், பரப்புகளை கருத்தில் கொண்டு, வலயங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் முதலியவற்றை மேற்கொள்ளவேண்டும்.

3. மாகாண பணிப்பகத்தை கிளிநொச்சியில் A9 பாதைக்கு அண்மையிலுள்ள ஒரு இடத்துக்கு நகர்த்தவேண்டும்.

4. நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் திகதியிலேயே குறிப்பான நியமனங்கள் செய்யப்பட்டிருப்பவர்களுக்கு நியமனங்களை வழங்க வேண்டும். (இதே போன்ற பரிந்துரையை நிதிக்குழுவும் செய்திருக்கிறது.)

5. ஒருவர் ஓய்வு பெறப் போகிறார் எனில், அவரது வெற்றிடத்தை நிரப்புவதற்கான பணியை, குறித்த திகதியிலிருந்து 3 மாதங்களுக்கு முன்பே ஆரம்பிக்க வேண்டும்.

6. மாகாண கல்வி அமைச்சானது அனைத்து ஆசிரியர்களுக்கும் உப-கோவைகளை பேண வேண்டும்.

7. ஒரு வலயத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும் ஆளணி எண்ணிக்கையின் அடிப்படையில் கற்பிக்கும் ஆளணியினரை வலயம் முழுவதும் பரவலாக பிரித்து வழங்க வேண்டும்.

8. 500 இற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்டிருக்கும் 1AB மற்றும் 1C பாடசாலைகளுக்கு ஒவ்வொரு முகாமைத்துவ உதவியாளர்களை நியமிக்க வேண்டும்.

9. கல்வி நிர்வாகத்தின் அமைவிடத்தை மாற்ற உத்தேசிக்கும் பொழுது, மாகாண நிர்வாகம் நிரந்தரமாக நிறுவப்படப்போகும் இடத்துக்கு அண்மையான இடத்தில் அதனை நிறுவுவதை கருத்தில் எடுக்கவேண்டும்.

10. வலயங்களில் பெருமளவு எண்ணிக்கையிலான பாடசாலைகள் இருத்தல், வலயங்களின் அதிக பரப்பளவு மற்றும் இவை போன்ற காரணிகள் வலயப்பிரிவுக்கான அவசியத்தை ஏற்படுத்தும் போது, தேவைகளின் அடிப்படையில், தற்போதுள்ள வலயங்களை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளாக பிரிக்க வேண்டும். உதாரணம் கிளிநொச்சி மற்றும் வலிகாமம்.

11. அதிக பொறுப்புகளுக்கு ஈடுகொடுக்கும் விதத்திலும் செயற்றிறனோடு செயலாற்றும் விதத்திலும் தென்மராட்சியில் மேலதிக கோட்ட கல்வி அலுவலகம் ஒன்றை அமைக்க வேண்டும்.

# 7. நிதி, ஆளணித் தேவைகள், செலவீனங்கள் மற்றும் ஆசிரியர் வேதனங்கள்

## அறிமுகம்

பாடசாலைகளுக்கான செலவுகள், மீளவரும் செலவுகள் மற்றும் மூலதன செலவுகள், தலா மாணவனுக்கான ஆசிரியர் வேதனம் முதலியவை முதலாவது அத்தியாயத்தில் சமர்ப்பிக்கப் பட்டிருந்தன. இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகளிலிருந்து ஆசிரியர்களை பாடசாலைகளுக்கு நியமனம் செய்தல், இடமாற்றங்கள், நியமனங்கள் முதலியவற்றைக் கையாள்வதற்கான பின்வரும் பரிந்துரைகள் செய்யப்படுகின்றன. பல்வேறு திட்டங்களுக்கும் அரச மற்றும் நிதி வழங்குநர்களின் நிதிகளை தற்போது செலவிடுவதன் பயன் விளைவுத் தன்மையை நிர்ணயிப்பதற்கு நிதி தொடர்பான மேலும் அதிக தரவுகள் தேவை.

**ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் குறைந்த வேதனமானது உயர் நிலைப்பட்டதாரிகளாகிய கணித, விஞ்ஞான, ஆங்கில, கணினி விஞ்ஞான, முகாமைத்துவ பொருளியல் பட்டதாரிகளை உள்ளடக்கிய மூன்றிலொரு பங்கு பட்டதாரிகளைக் கல்வித் துறையை நோக்கிக் கவர இயலுமை அற்றதாக உள்ளது**

மனதை குழப்பும் வகையிலே, இந்த மீளாய்வினுடைய, பொதுமக்கள் கருத்து தெரிவிக்கும் பகுதியிலே (பெற்றோர் மற்றும் ஏனையவர்கள் அடங்கலான) பொதுமக்களிடமிருந்து, பாடசாலை நிதிகள் தவறாக முகாமைத்துவம் செய்யப்படுவது பற்றியும் பாடசாலையில் இணையும்போது மாணவர்களிடமிருந்து பல்வேறு வகை கட்டணங்களையும் தரவேண்டும் என வலியுறுத்துவது பற்றியும் பல முன்வைப்புகள் செய்யப்பட்டன. இந்த நிதிகளுக்குப் பாடசாலைகளோ அல்லது நிதிப் பிரிவுகளோ கணக்குக் காட்டுவதில்லை. இவ்வாறான முறைப்பாடுகள் தனிப்பட்டவர்களினால் முன்வைக்கப்பட்டதோடு, குறிப்பிட்ட இடங்களில் நேரடியாக சென்று மேற்கொண்ட பரிசீலனைகள் மூலம், இவ்வாறான வழக்கங்கள் நடைமுறையில் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. மாகாண கல்வியமைச்சில் இருந்து ஒரு அணியானது, உறுதியான தகவல்களின் அடிப்படையில் செயற்பட்டு, இப்பழக்கங்கள் நிலவுகிறதா என்று பரிசீலித்து, உரிய பரிகாரங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

உலக உணவுத்திட்ட நிதிகள் சில அதிபர்களால் கையாடப்படுவதாகவும் முறைப்பாடுகள் பெறப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டிலே, தேவை உள்ள பாடசாலை பிள்ளைகளுக்கான தேவைகளுக்கு உலக உணவுத்திட்டம் தொடர்ந்து நிதி வழங்குதலை மேற்கொள்ளும் விதத்திலே, இவ்வாறான நிதிப் பாவனைகள் நெருக்கமாக கண்காணிக்கப்பட்டு, மேற்படி நிலைமைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். க.பொ.த. சா/த. மற்றும் உ/.த. பரீட்சைக்கு தோற்றிவிட்டு பெறுபேற்றை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களை பாடசாலைக்கு சமுகமளிக்க அனுமதிக்காவிட்டாலும் அவர்களுடைய பெயர்களை மாணவர் பதிவேட்டில் தொடர்ந்து வைத்திருக்கும் பாடசாலைகள் இருக்கின்றன என்பதை எடுத்துக் காட்ட போதிய தரவுகள் உள்ளன. பரீட்சையில் சித்தி பெறத் தவறுவோர் ஒரு வருடத்துக்குப் பின் பாடசாலை ஊடாக பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியுமெனினும் அவர்கள் பாடசாலைக்கு சமுகமளிக்க அனுமதிக்கப்படுவதில்லை. வகுப்புகளில் உண்மையாகவே இருக்கும் மாணவரின் எண்ணிக்கைக்குக் கூடுதலான மாணவர் எண்ணிக்கையின் அடிப்படையில் ஆசிரியர் எண்ணிக்கை ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும். இவ்வாறான கற்பனை மாணவர்கள் எண்ணிக்கைகள் WFP ஆல் வழங்கப்படுபவையும் மாணவருக்கு ஒரு போதுமே போய்ச் சேராதவையுமான சீருடை நன்மைகளுக்காகவுமே பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறான நெறி பிறழ்ந்த அதிபர்களுக்கும் நெறிபிறழ்ந்த அதிகாரிகளுக்கும் எதிராக கல்வி அமைச்சும் மாகாணக் கல்வி அமைச்சும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். பிள்ளைகளுக்கும் இது தெரியும். இதனால் ஆசிரியர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் அவர்கள் காட்டும் மரியாதை குன்றிப் போகிறது. இதுதான் நியதி என்று, பிள்ளைகளால் இவை புன்சிரிப்புடன் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இது அவர்களுடைய அறநெறி ரீதியான வளர்ச்சியை குன்றச் செய்து விடுகிறது.

மாணவர்கள் தத்தமது சமூகங்களின் உற்பத்தி திறன் கொண்ட உறுப்பினர்களாக ஆகும் விதத்தில், அவர்களில் 100 வீதத்துக்கு அண்மித்த தொகையினரை க.பொ. த. (சா.த.) தகைமை உள்ளவர்களாக இருப்பதை உறுதிசெய்ய முயற்சி செய்வதும் பெரும்பாலானவர்கள் க.பொ.த. (உ.த.) தகைமை கொண்டவர்களாக இருப்பதை உறுதி செய்வதும் கல்வி அமைப்பில் உள்ள எல்லோருக்கும் முக்கியமானதாகும்.


அதிகாரம் 2 ஆனது ஆளணித் தேவைகளையும் மாணவர்களின் தேவைகளையும் ஆராய்ந்திருந்தது. இந்தப் பகுதியானது, ஆசிரியர்கள், பாடசாலை மற்றும் திணைக்கள நிர்வாகிகள் முதலியோரின் வேதனங்களோடு தொடர்புபட்டுள்ள நிதி ரீதியான காரணிகளுக்கும் அனைத்து மட்டங்களிலுமான ஆற்றுகைகளுக்கும் இடையேயான தொடர்புகள் பற்றியும் ஆராயும் உரு 1.12.1. (அத்தியாயம் ஒன்றில்) கல்வி ரீதியான சாதனைகளுக்கும் ஒரு வீட்டினுடைய பிரதம வருவாய் சம்பாதிப்பவனுடைய எதிர்கால வருவாய்க்கும் இடையேயான தொடர்பு பற்றி எடுத்துகாட்டுகிறது. மாணவர்கள் தத்தமது சமூகங்களின் உற்பத்தி திறன் கொண்ட உறுப்பினர்களாக ஆகும் விதத்தில், அவர்களில் 100 வீதத்துக்கு அண்மித்த தொகையினரை க.பொ.த. (சா.த.) தகைமை உள்ளவர்களாக இருப்பதை உறுதிசெய்ய முயற்சி செய்வதும், பெரும்பாலானவர்கள் க.பொ.த. (உ.த.) தகைமை கொண்டவர்களாக இருப்பதை உறுதி செய்வதும் கல்வி அமைப்பில் உள்ள எல்லோருக்கும் முக்கியமானதாகும். கற்பித்தல், மற்றும் கற்றல் ஆற்றுகைகளின் ஆக்கக் கூறுகளாக உள்ள மாறக்கூடிய காரணிகளில் ஆசிரியர்களும் மாணவர்களும் முக்கியமான காரணிகளாகும். குடும்பமொன்றின் தலைவராக எதிர்காலத்தில் ஆகவிருக்கும் ஒருவரது சம்பாதிக்கும் இயலுமையை அதிகரிக்க வேண்டுமெனில் உயர்மட்ட கல்வித் தராதரங்கள் எட்டப்பட வேண்டும் என்பதையும் வேலை கொள்ளக்கூடிய திறன்கள் கற்பிக்கப்பட வேண்டும் என்பதையும் ஆய்வுகள் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளன.

## ஆசிரியர்கள் வேதனங்கள்

ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளின் நிகழ்கால வேதன அளவிடையை பார்க்க இணைப்பு 7 ஐப் பார்க்கவும்.

உரு 7.2 ஆனது பட்டம் ஒன்றை பெற்று ஒரு வருட கற்பித்தல் அனுபவத்தையும் பெற்றிருப்பவர்களினதும் முதுமாணி அல்லது கலாநிதி பட்டம் பெற்றவர்களினதும் வேதனங்களைக் காட்டுகிறது. கீழே காட்டப்பட்டுள்ள பட விளக்கமானது அமெரிக்காவின் பொது மற்றும் தனியார் பல்கலைக்கழக ஆசிரியர்களும் இடைநிலைப் பாடசாலை ஆசிரியர்களும் பெறும் அண்ணளவான வேதனங்களைக் காட்டுகிறது.

Figure 7.1: U.S. GDP per capita





இந்த வேதனங்கள், ஒரு ஆசிரியர், ஆரம்பநிலை, நடுநிலை, இடைநிலை பாடசாலைகளில் எதில் கற்பிக்கிறார் என்ற தகுதியை அடிப்படையாக கொண்டவையாக இருக்கின்றன. அமெரிக்காவில் உள்ள ஆரம்பநிலை, இடை அல்லது நடுநிலை கற்பிப்பதற்கு ஒரு இளமாணி பட்டமும் கற்பித்தல் அனுபவமும் பெற்றிருக்கவேண்டும்.

பட்டப் படிப்புக்கு கற்ற பாடங்கள் மற்றும் கற்பிக்கும் பாடங்கள் முதலியவற்றைப் பொறுத்து, வேறுபாட்டு நுட்பம் கொண்ட வேதனங்கள் வழங்கப்படுகின்றன. இவ்வாறான ஒரு அமைப்பானது அனைத்து மட்டங்களிலான பாடசாலைகளில் கற்பிக்கவும் பாடசாலைகளிலிருந்து உயர்நிலை கல்விக் கூடங்களுக்குள் அல்லது கல்வி நிர்வாகத் துறையினுள்

"………இலங்கையில் புதிதாகப் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் தலா மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 74 வீதத்தினை வேதனமாக பெறுகின்றார்கள்."

Figure 7.2: Teacher Salaries in the United States




நகராமல் இருப்பதை ஊக்கப்படுத்துகிறது. எனவே அதிக வேதனம் பெறும் நோக்கில் கல்வித் துறையிலேயே வேறு வகை பணிகளைத் தேடவோ அல்லது ஏனைய துறைகளில் சமமான மட்டங்களுக்கு செல்லவோ அவசியமிருக்காது. விஞ்ஞான ஆசிரியர்கள் கலைத்துறை ஆசிரியர்களைவிட 11 வீதத்தால் அதிகமான வேதனம் பெறுகிறார்கள். கீழே உள்ள சட்டவரைவானது 2013 இன் தலா மொத்த உள்நாட்டு உற்பத்தி 43,000 அமெரிக்க டொலர்கள் எனக் காட்டுகிறது. ஒரு பட்டமும் ஒரு வருட கற்பித்தல் அனுபவமும் கொண்ட ஆரம்ப நிலை ஆசிரியர் ஒருவர் தலா மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சிறிதளவு குறைவான தொகையை வேதனமாக பெறுவார்.

ஒப்பீட்டு ரீதியில், இலங்கையில் புதிதாகப் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் தலா மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 74 வீதத்தினை வேதனமாகப் பெறுகின்றார்கள்.

| Figure 7.1: Sri Lankan Teachers earnings as a percentage of GDP | |
|---|---|
| Per Capita GDP Sri Lanka | 373,001 |
| Monthly Salary of a Graduate Teacher | **23,000** |
| Annual earnings of such a Teacher | 23,000 x 12 = 276,000 |
| Deviation | 373,001 – 276,000 = 97,001 |
| % Deviating | (97,001/ 373,001) x 100 = **26 %** |
| The actual Salary per month should be | 373,001/12 = **31,083.42** |
| Source: Table 1.1 of page 1 of econ_&_ss_2013_e.pdf available on http://www.cbsl.gov.lk/pics_n_docs/10_pub/_docs/statistics/other/econ_&_ss_2013_e.pdf | |

மக்கின்ஸி ரு கொம்பனியால் வெளியிடப்பட்டுள்ள, "திறன் இடைவெளியை அடைத்தல் உயர் - மூன்றாம் தரம் பெற்ற பட்டதாரிகளை, கற்பித்தல் பணிகளுக்குள் கவர்ந்திழுத்து தக்கவைத்துக் கொள்ளுதல்" என்ற அறிக்கை, பட்டம் ஒன்றையும் கற்பித்தல் அனுபவத்தையும் கொண்டிருக்கும் ஆசிரியர்களுக்கு, நாட்டினுடைய தலா மொத்த உள்ளூர் உற்பத்திக்குச் சமமான அல்லது அதைவிட சிறிது அதிகமான வேதனம் வழங்கப்படவேண்டும் என்று பரிந்துரை செய்கிறது. கல்விசார் துறைகளிலான மேம்பாடுகளுக்கும் தலா மொத்த உள்ளூர் உற்பத்திக்கு அல்லது அதற்குச் சற்று கூடுதலான அளவிலான வேதனத்துக்குமிடையே நிச்சயமான தொடர்பு இருப்பதை அவர்கள் கண்டுகொண்டிருக்கிறார்கள். தலா மொத்த உள்ளூர் உற்பத்திக்கு ஒப்பான அளவுக்கு ஆசிரியர் வேதனங்களையும் வேறு வசதிகளையும் நாடுகள் அதிகரித்தபொழுது, மாணவர்களுடைய ஆற்றுகை 15% ஆல் அதிகரித்தது.

விஞ்ஞான, கணித, முகாமைத்துவ, பொருண்மிய, ஆங்கில மற்றும் கணினி - விஞ்ஞான துறைகளில் உயர் - மூன்றாம் தரப் பட்டங்களை பெற்றவர்களை, கல்வித்துறை கவரமுடியாமல் இருப்பதற்கு, குறைவான ஆசிரிய வேதனங்கள்தான் காரணமாக இருக்கலாம். பாடசாலை நேரத்துக்குப் பின்னும் சனிக்கிழமைகளிலும் ரியூசன்நிலையங்களில் கற்பிக்கச் செல்வதற்கும் இதுவே காரணமாக இருக்கலாம். மொத்த உள்ளூர் உற்பத்தியை வழிகாட்டலாக வைத்து, வேதன அதிகரிப்பை ஒரு குழுவினர் ஆழமாக ஆராயவேண்டும். இந்த செயற்குழுவானது கணக்காளர்களையும் பேரின - பொருண்மிய நிபுணர்களையும் உள்ளடக்கியிருக்க வேண்டும். அனைத்து அரச பாடசாலைகளினதும் ஆசிரியர்களது தகைமைகளையும் மொத்த உள்ளூர் உற்பத்தியையும் அடிப்படையாகக் கொண்டு இந்த ஆசிரியர்களுக்கான வேதன உயர்வின் பயன்விளைவை மேற்படி குழுவினர் நிர்ணயிக்கவேண்டும். மிக முக்கியமாக, பொருண்மியத்தின் மீதும் பொருண்மிய அபிவிருத்தி மீதும் இவ்வாறான வேதன அதிகரிப்பு ஏற்படுத்தும் தாக்கங்களும் ஆராயப்படுவதோடு, கட்டுக்கடங்காமல் போய்விடக்கூடிய பணவீக்கங்களை தடுப்பதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படவும் வேண்டும்.

## ஆசிரியர் வேதனங்கள் மற்றும் நிதி தொடர்பான பரிந்துரைகள்

1. பல்கலைக்கழக பட்டதாரி ஆசிரியர்களின் வேதனங்களை நாட்டின் தலா மொத்த உள்ளூர் உற்பத்தியோடு இணைப்பதோடு டிப்ளோமா அல்லது பட்டப்பின்படிப்பு தகைமைகளைக் கொண்ட ஆசிரியர்களுக்கு விகிதாசார அடிப்படையில் வேதனம் வழங்குதல்.
2. கற்பித்தலின் தரம் கண்காணிக்கப்படுவதோடு, கற்பித்தலுக்கான முன்னாயத்தங்கள் மிக குறைவாகச் செய்யப்பட்டிருந்தால் அது கவனிக்கப்பட வேண்டும்.
3. தொடர்ந்து குறைவான முன்னாயத்தங்களுடன் இருக்கும் அல்லது மெத்தனமாக இருக்கும் ஆசிரியர்கள் மீது அதற்கான பிரதிபலனைச் சுமத்தவேண்டும்.
4. ஆசிரியர்களின் வேதனங்கள் மாகாண பணிப்பாளரின் வேதனத்துக்குக் குறைவானதாக இருக்கக்கூடாது. இது, ஆசிரியர்கள் இப்போதையதை விட நீண்ட காலத்துக்குக் கற்பித்தலை தொடரும் வாய்ப்பை அதிகரிக்கும்.

## இவ்வாறான அதிகரிப்புக்கான நிபந்தனைகள் பின்வருமாறு அமைய வேண்டும்

1. ஆசிரியர் பிற்பகல் 4.15 வரை பாடசாலையில் இருத்தல். இந்த நேரத்தை அடுத்த நாள் கற்பித்தலுக்கான ஆயத்தங்களைச் செய்ய பயன்படுத்துதல். பாடத்திட்ட, பாடத்திட்டத்தோடு இணைந்த மற்றும் பாடத்திட்டத்துக்குப் புறம்பான செயற்பாடுகளில் மாணவரோடு வேலை செய்தல், இந்த நேரத்தை பாடங்களையும் அறிவுறுத்துதலுக்கான பொருட்களையும் தயாரிக்கப் பயன்படுத்துதல்.
2. பாடசாலை நாட்களில் ரியூசன் நிலையங்களில் கற்பிக்காமல் இருத்தல்.
3. அதிகம் விரும்பப்படாத, தொலை தூர பாடசாலைகளுக்கு நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்கு குறைந்த வட்டியிலான நீண்டகால அடிப்படையிலான கடன்வசதிகளை வழங்குதல் மற்றும் வசிப்பிடம் ஒன்றைக் கட்டிக் கொள்வதற்கான நில மானியங்களை வழங்குதல். இது அவர்கள் நியமிக்கப்படும் பாடசாலைகளில் 10 வருட சேவையை பூர்த்தி செய்யவேண்டும் அல்லது வழங்கப்படும் நில மானியமும் அதிலுள்ள கட்டடமும் பறிமுதல் செய்யப்படும் என்ற நிபந்தனையோடு வழங்கப்படவேண்டும்.
4. நிதிப்பிரிவு ஒன்றினை அமைத்து அது நிதிச் செலவின முறைகேடு, பாடம் கற்பித்தல் அல்லது கற்பித்தல் முறையியல் தகைமையீனம், பாடசாலையில் சமூகமளிக்காதிருக்கும் ஆசிரியர்கள் தொடர்பில் பரிசோதனை செய்து தொடர் நடவடிக்கை எடுக்க சிபாரிசு செய்ய வேண்டும்.
5. ஆசிரியர்களை மதிப்பீடு செய்தல், ஆசிரியர்களை கண்காணித்து வெகுமதிகளை வழங்கல்.

## நிதி அமைப்பு தொடர்பான பரிந்துரைகள்

1. பாடசாலைகளை நடத்தி செல்வதற்கான நிதித்தேவைகளை பூர்த்தி செய்யும் விதத்தில் அவற்றுக்கு ஒரு வாய்பாட்டு அடிப்படையிலான ஆற்றுகை அடிப்படையிலான நிதியூட்டம் உருவாக்கப்பட வேண்டும் (பாடசாலை ரீதியான மானியத்திட்டம்.)
2. அதிகம் விரும்பப்படாத பகுதிகளில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்பு திட்டம் ஒன்று உள்ளடக்கியதாக பாடசாலைகளுக்கான ஆசிரிய நியமனங்கள் செய்யப்பட வேண்டும்.
3. மாணவர்களின் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து 1AB மற்றும் 1C பாடசாலைகளுக்கு அவற்றின் பொருள் இருப்புகளை பேணுவதற்கும் நிதி முகாமைத்துவத்தில் உதவுமென பட்டதாரி மட்டத்திலான உத்தியோகத்தர் ஒருவர் வழங்கப்பட வேண்டும்.
4. தாமதம் செய்யப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக வேதன நிலுவைகள் செலுத்த வேண்டிய தேவையைத் தவிர்க்கும் விதத்தில் ஆசிரியர்களின் ஆடசேர்ப்பு, நியமனங்கள் மற்றும் பதவியுயர்வு முதலியவற்றை ஆராய்ந்து ஒழுங்குமுறைப்படுத்த வேண்டும்.
5. கல்வித்துறையில் இருக்கும் பெரும் எண்ணிக்கையிலான பணியாளர்களைக் கருத்தில் கொண்டு கடன் தொடர்பான ஒதுக்கீட்டு வரையறையை உயர்த்த வேண்டும்.
6. பாடசாலைகளிலே கிரமமான கணக்கு பரிசோதனைகளை மேற்கொள்ளும் விதத்தில், மாகாண கல்வி அதிகார மட்டத்திலும், அதனுடைய உப - அலகுகளாக வலய மட்டத்திலும், உள்ளக கணக்காய்வு அலகுகளை நிறுவவேண்டும்.
7. ஏனைய முகாமைத்துவ அம்சங்களோடு நிதிமுகாமைத்துவ அம்சம் தொடர்பாகவும் பயிற்சி வழங்க வேண்டும். எனவே அதிபர்களின் நிதி முகாமைத்துவ திறன்களை வளப்படுத்தும் விதத்தில் மாகாண கல்வி அமைச்சானது கிரமமான பயிற்சிகளை நடத்தவேண்டும்.
8. செலவுகளில் ஏற்படும் அதிகரிப்புகள் மற்றும் புதிய கட்டுமானங்களில் ஏற்படும் அதிகரிப்பையும் எதிர்கொள்ளும் விதத்தில் பாடசாலைக் கட்டடங்கள் மற்றும் உபகரணங்களின் பராமரிப்புக்கான ஒதுக்கீடுகளை அதிகரிக்க வேண்டும்.
9. தரம் 1 இல் இருந்து தரம் 13 வரை பாடசாலையில் இணைந்து கொள்ளும் வாய்ப்பு வளம் கொண்ட மாணவர்களிடமிருந்து, உத்தியோக பூர்வமற்ற முறையில், பணம் வலியுறுத்திக் கேட்கப்படுவதை தடுத்து நிறுத்துவதற்கான வழிகள் பற்றி ஆராய்ந்து கண்டறியப்பட வேண்டும்.
10. பாடசாலை மதிய உணவுத் திட்டத்தில், மீளக் கற்போரின் பெயர்கள் போலியாகச் சேர்க்கப்படுவது உள்ளிட்டதாக, இடம்பெறும் மோசடிகள் குறித்து, தலத்துக்குச் சென்று விசாரணை செய்யும் அணிகள் உருவாக்கப்படவேண்டும்.

11. ஆரம்ப நிலைப் பாடசாலைகளுக்கும் சிறப்பு கல்வித் திட்டங்களுக்கும் நடுநிலை அணைவான முறையில் செலவீனங்கள் செய்யப்படுவதை உறுதி செய்தல்
12. தலா மாணவனுடைய செலவு, ஆசிரியர் வேதனத்துடன் தொடர்புபடுவதால், அதனை அதிகரித்தல். (ஆசிரியர்களுக்குத் தட்டுப்பாடு நிலவும் இடங்களில் விஞ்ஞான, கணித, ஆங்கில மற்றும் ஏனைய பாடங்களுக்கான அதிக ஆசிரியர்களை நியமித்தல்). கிராம பாடசாலைகள், குறைந்த வருமான சமூகங்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட சமூகங்களில் இருக்கும் பாடசாலைகளுக்கு இப்போதுள்ளதை விட அதிகமாகவும், உயர்தகைமைகள் கொண்டவர்களுமான ஆசிரியர்களை அனுப்புதல்.
3. தரமான உள்ளீடுகள் என்ற வகையிலே மீளவரும் செலவுகளுக்குள் தலா மாணவனுக்கான செலவை அதிகரித்தல்.
4. நிதிகளின் பாய்ச்சலையும் செலவீனங்களையும் கண்காணிக்கும் விதத்திலே நிதி ஒதுக்கீடுகள் மற்றும் செலவீனங்கள் அனைத்தும் (தற்போது உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது ) தரவுத் தளத்துக்குள் ஏற்றப்பட வேண்டும். செலவீனங்களுக்கும் ஆற்றுகைகளுக்குமிடையேயான தொடர்பை ஆராய்வது உதவிகரமானதாக இருக்கும்.

# 8. e-திட்டமிடல், தரவுத்தளம், ஆராய்ச்சி மற்றும் வெளியீடு

## அறிமுகம்

வட மாகாணக் கல்வித் திணைக்களமானது 983 பாடசாலைகளையும் (செயற்பாட்டிலுள்ள) 252,675 மாணவர்களையும் கொண்டதாகும். மாகாணக் கல்வித் திணைக்களமானது 34 கோட்டங்களைக் கொண்ட 12 வலயங்களாக நிர்வகிக்கப்படுகின்றது. முப்பது வருட உள்நாட்டு யுத்தமானது வட மாகாணத்தின் கல்வி முறைமை, ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகம் என்பவற்றில் பாரிய தாக்கத்தைக் கொண்டிருக்கிறது.

நவீன அறிவு சார் பொருளாதாரத்தில் உயர் திறமை கொண்டவர்களுக்கான தேவை தொடர்ந்து அதிகரித்துச் செல்கிறது. பாரம்பரிய கல்வி சார் முறையிலிருந்து ஆசிரியர்கள் உயர் திறனைப் பெற்றுக்கொண்டு கற்பிப்பதற்கான மாற்றங்கள் தேவைப்படுகின்றன. இத்தகைய தேவையைப் பூர்த்தி செய்ய, உயர் அறிவுத் திறனுடன் கூடிய ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட, கல்வி முறை அவசியம். இதில் பாடசாலை நிர்வாகமும் ஆசிரியர்களும் தொழில்சார் திறமையுடைய சமூகமாகத் தொழிற்படுகிறார்கள். இத் தொழில்சார் சமூகம் அவசியமான தகவல்களைப் பெற்று சரியான திட்டமிடல் மூலம் சிறந்த தீர்மானங்களை எடுத்து அவற்றை அமுல்படுத்தும் கடப்பாட்டைக் கொண்டிருக்கிறது.

வினைத்திறனான ஆசிரியர்களை உருவாக்குதலும், அவர்களைத் தொடர்ச்சியாக பாடசாலைகளில் வைத்திருத்தலும் அனைத்துப் பாடசாலைகளிலும் முன்னுரிமையாகக் கருதப்படுகிறது. ஆசிரியர்களுடைய வேலையானது எப்படி நிர்ணயிக்கப்படுகிறது, அதற்கு எப்படி வெகுமதியளிக்கப்படுகிறது என்றும் அவர்களுடைய துறைசார் முன்னேற்றத்துக்காக வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் என்பன தொடர்பான தகவல்கள், வினைத்திறனான திட்டமிடலுக்காகப் பரீட்சிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

கடந்த காலத்திலும் சமகாலத்திலும் பொதுமக்களிடமிருந்தும் மற்றும் அனுசரணையாளர்களிடமிருந்தும் பெறப்பட்ட ஆலோசனைகள் இணைப்பு. 1இல் தரப்பட்டுள்ளன. இங்கே வினைத்திறனான தீர்மானமெடுத்தலுக்குத் தேவையான தரவுகளும் தகவல்களும் உடனடியாக பெறக்கூடியதாக இல்லை. பெரும்பான்மையான தகவல்கள் பாடசாலைகள், வலய அலுவலகங்கள், மாகாணப் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் வட மாகாணக் கல்வி அமைச்சிலும் கிடைக்கக் கூடியதாக இருந்த போதும், தேவை ஏற்படும் நேரத்தில் அத் தகவல்களைப் பெற்று பகுப்பாய்வதற்கு முடிவதில்லை.

## தகவல்களுக்கான தேவை

மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளிற்கும் கற்றல் கற்பித்தலில் மாற்றங்களை ஏற்படுத்தும் ஒவ்வொரு காரணிகளுக்கும் இடையேயுள்ள தொடர்பை அறிதல் அவசியமாகும். பிரச்சினைகளை பகுப்பாய்வு செய்ய உதவக் கூடிய கணணி மென்பொருட்கள் உருவாக்கப்படல் வேண்டும். கல்வித் தகவல் முகாமை முறைமையானது கல்வி முறைமையை நிர்வகிக்க/ கண்காணிக்க உருவாக்கப்படல் வேண்டும்.

## தேவைப்படும் சில தகவல்கள் கீழே இனங்காணப்பட்டுள்ளன

- ஆசிரியர், மாணவர்கள் தகவல்கள், மாணவர் அனுமதி, வகுப்பறை மற்றும் தேசிய பரீட்சைச் செயற்றிறன்
- தரம் 1 முதல் 13 வரையான ஒவ்வொரு மாணவர்களின் முக்கிய திறன்கள்
- ஒவ்வொரு மாணவனும் ஆசிரியரும் பாடசாலைக்கு வரும் முறை (நடந்து, ஓட்டோ, சைக்கிள், பஸ்) மற்றும் பாடசாலைக்கும் வீட்டிற்குமான தூரம்
- ஒவ்வொரு பாடசாலையின் ஒவ்வொரு வகுப்பறையினுள்ளேயும் வெளியேயும் மாணவர்களின் நடத்தைக் கோலங்கள்.
- மாணவர்களின் ஒழுங்கான வரவு, மாணவ ஆலோசகர், ஆசிரியர், பெற்றோர் கூட்டம்

- மாணவர், ஆசிரியர் வரவு
- முதலாம், இரண்டாம், மூன்றாம் தவணை காலப்பகுதிகளில், தரம் 1 முதல் 13 வரையான மாணவர்கள் ரியூசனுக்கு (தனியார் கல்வி நிலையங்களுக்கு) செலவு செய்கின்ற மணித்தியாலங்கள், தனியார் கல்வி நிலையங்களின் பெயர்கள், வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை, ஒரு தவணை காலப்பகுதிக்கு ஒரு பாடத்துக்கான செலவு.
- பாடசாலைகளின் பின்னர் மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்வதற்கான காரணங்கள்
- தரம் 13 இல் கற்கின்ற மாணவர்கள் பாடசாலைகளுக்குச் சமுகமளிக்காமல். உயர் தரப்பரீட்சைக்கு முன்னர் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்வதற்கான காரணங்கள்
- மாணவர்களின் பெயர்கள் பாடசாலைப் பதிவேட்டில் உள்ளபோதும் ஒதுக்கப்பட்ட ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு வருகை தருகின்ற போதும், ஏன் க.பொ.த. (சா/த.) மற்றும் உயர்தரம் பரீட்சை எழுதிய மாணவர்கள் பாடசாலைக்கு வருவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.
- ஒவ்வொரு பாடசாலை மாணவனினதும் பெற்றோருடைய சமூகப் பொருளாதார, வருமான நிலைமை (தொழில் விபரங்கள்).
- தேசிய பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் நகரப் பாடசாலைகளின் பெறுபேறுகள் கிராமியப் பாடசாலைகளின் பெறுபேறுகளிலும் பார்க்க திறமையாக அமைவதன் காரணங்கள்.
- பாடசாலையில் இருந்து 3 கி.மீ. தூரத்திற்குள் இருக்கின்ற பொழுதுபோக்கு வசதிகளின் எண்ணிக்கை
- பாடசாலையிலிருந்து 5 கி.மீ. தொடக்கம் 10 கி.மீ. வரை காணப்படுகின்ற மூன்றாம் நிலைக் கல்வி நிலையங்களின் எண்ணிக்கை
- வீட்டிலிருந்தும் அல்லது பாடசாலையிலிருந்தும் 5 கி.மீ. தூரத்திற்குள் காணப்படுகின்ற தொழில் வாய்ப்புக்களை வழங்கக் கூடிய தனிப்பட்ட, தனியார் துறை மற்றும் அரச துறை நிறுவனங்களின் எண்ணிக்கை
- ஒவ்வொரு பாடசாலையினதும் மொத்த நிலையான மற்றும் நடைமுறைச் செலவுகள்
- ஆசிரியர், நிர்வாக ஊழியர் சம்பளம் மற்றும் விளையாட்டு, மேலதிகச் செயற்பாடுகளுக்கான செலவுகள் என்பவற்றில் ஒரு மாணவனுக்கான செலவு

ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்ட தரவுகளும் தீர்மானங்களும் ஒரு வினைத்திறனான கற்றல், கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்ளக்கூடிய செயற்பாட்டுத் திட்டங்களையும் கொள்கைகளையும் அபிவிருத்தி செய்ய உதவுவதோடு, எல்லா மாணவர்களையும் சமமான முறையில் வழி நடத்தக் கூடிய முறையையும் உருவாக்குகின்றது. இது தொடர்பாக, தொடர்ச்சியாக அனுபவ ரீதியான ஆய்வுகளினை மேற்கொண்டு அதனுடைய பெறுபேறுகளினை வெளிக்கொணர ஒரு தனியான அலகை ஸ்தாபிக்க பின்வரும் சிபாரிசுகள் கீழே வழங்கப்படுகின்றன.

## ஆய்வும் வெளியீடும்

செயற்பாட்டு ரீதியான ஆய்வுகள், மதிப்பீடுகள் என்பவற்றைச் செய்ய கல்வி நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் உடனடிப் பிரச்சினைகள் தொடர்பாகவும் நீண்ட கால பிரச்சினைகள் தொடர்பாகவும் அனுபவரீதியான ஆய்வுகளை மேற்கொள்ளக்கூடிய ஆற்றல் உள்ளவர்களையும் தூண்டுவது முக்கியமானதாகும். வெவ்வேறுபட்ட துறைகளில் மேற்கொள்ளப்பட்ட அதிகமான ஆய்வுகளானது, ஏற்கனவே போதுமான தகவல்களைக் கொண்டதாகவும் அவை இலகுவில் கிடைக்கக் கூடியதாகவும் உள்ளது.

## வடமாகாணத்தின் தற்போதைய நிலைமை

- தீர்மானமெடுத்தல்கள் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறுவதில்லை.
- அநேகமான தீர்மானங்கள் எழுந்தமானமாக அல்லது கலந்துரையாடல் மூலம் அல்லது எதிர்வுகூறல் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.
- சூழ்நிலைப் பகுப்பாய்வு அறிக்கைகள் இல்லாமை.

- பல பிரச்சனைகளுக்கான காரணங்கள் ஆய்வுகளினடிப்படையில் இனங்காணப்படவில்லை.
- ஆய்வு அறிக்கைகளின் அடிப்படையிலான எவ்வித பின்னூட்டிகளும் இல்லாமை.

## நவீன அறிவுசார் பொருளாதாரத்தில்

- உச்ச செயல் திறனுக்கான தேவை வெகுவாக வளர்ச்சியடைந்து செல்கின்றது.
- பாரம்பரிய பாடசாலைக் கல்வி முறையிலிருந்து மாணவர்களின் சகல திறன்களையும் அபிவிருத்தி செய்யக் கூடிய கற்பித்தல் முறை மாற்றங்கள் அவசியமாகிறது.
- உச்சமான அறிவுசார் ஆதாரங்களை அடிப்படையான கல்வி முறையை உருவாக்கல்.
- வினைத்திறனான ஆசிரியர்களை முன்னேற்றுதலும் அவர்களைத் தொடர்ச்சியாக பாடசாலைகளில் வைத்திருத்தலும் அனைத்துப் பாடசாலைகளிலும் முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாகும்.
- ஆசிரியர்களுடைய வேலையானது எப்படி நிர்ணயிக்கப்படுகிறது, எப்படி வெகுமதியளிக்கப்படுகிறது
- ஆசிரியர்களுடைய துறைசார்/தொழில்சார் முன்னேற்றத் தேவைகள் எப்படி வெளிக்கொணரப்பட்டு சிறந்த தீர்மானமெடுத்தலுக்காகப் பரீட்சிக்கப்படுகின்றன.

## அபிவிருத்திக்கான தொடர்ச்சியான பின்னூட்டல்கள் பின்வரும் விடயங்களில் தேவைப்படுகின்றன

- கற்றல் மற்றும் கற்பித்தல்
- கல்வி முகாமைத்துவம்
- ஆசிரியர்களினதும் முகாமைத்துவ ஊழியர்களினதும் துறைசார் அபிவிருத்தி
- வளங்களின் ஒதுக்கீடும் பராமரித்தலும்.
- கற்றல், கற்பித்தல் செய்முறையின் வினைத்திறனை மதிப்பீடு செய்தல்
- மாணவர்களின் சாதனைகள், பாடசாலை விலகல் மற்றும் அவர்களின் சமூக பொருளாதார பின்னணி.
- ஆசிரியர்கள், முகாமைத்துவ ஊழியர்களின் நியமனம், பதவியுயர்வு மற்றும் இடமாற்றம்.
- புதிய பாடசாலைகளை ஆரம்பித்தல், தரமுயர்த்துதல், தரங்குறைத்தல் மற்றும் பாடசாலையை மூடுதல்.
- மாணவர், ஆசிரியர்களின் செயற்றிறன் மற்றும் தலையீடுகள்.
- தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்கின்ற, கல்வி கற்கின்ற ஆசிரியர்கள், மாணவர்கள்

அடையாளப்படுத்தப்பட்ட பிரச்சினைகளானது எவ்வாறு செய்முறைப்படுத்தப்படுகிறது என்பதனை அவதானிக்க அவற்றின் மீதான நிலைமையை பகுப்பாய்வு செய்ய வேண்டிய தேவை உள்ளது. அத்துடன் அவை தோல்வியடைவதற்கான காரணங்களையும் அடையாளப்படுத்துவது அவசியமாகும்.

மாகாண மட்டத்திலுள்ள ஆராய்ச்சி அபிவிருத்தி அலகானது அனுபவம் வாய்ந்த ஊழியர்களினால் முகாமை செய்யப்படலாம். ஒரு ஆராய்ச்சி இணைப்பாளர் மற்றும் இரண்டு ஆராய்ச்சி உதவியாளர்கள் வலய மட்டத்தின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்த வலய மட்டத்தில் நியமிக்கப்படுவார்கள்.

## ஆய்வுகளை மேற்கொள்ளுதல்

- தேவை, முன்னுரிமை என்பவற்றின் அடிப்படையில் தலைப்புக்களைத் தெரிவு செய்தல்.
- அட்டவணைப்படுத்தப்பட்ட நேரத்தினடிப்படையில் வருடாந்த ஆய்வு நிகழ்ச்சி நிரலினை முன்னரே திட்டமிடுதல்.

- ஒவ்வொரு ஆராய்ச்சி செயற்பாடும் ஊழியப் பொறுப்பதிகாரி, தகவல் சேகரிப்பு மற்றும் நேர அட்டவணை என்பவற்றின் முழுமையான தகவல்களையும் கொண்டிருக்க வேண்டும்.
- பொறுப்பு வாய்ந்த பிரிவு, வலயம் மற்றும் பொருத்தமான ஊழியர்களுடன் இணைந்து செயற்பட வேண்டும்.
- பட்டப்பின் மாணவர்களுடைய ஈடுபாடு தொடர்பாக பாடசாலை மட்டத்தில் செயற்பாட்டு ஆய்வுகளினை உற்சாகப்படுத்தல்.
- பட்டப்படிப்புகள் பீடம், யாழ். பல்கலைக்கழகம்
- அவர்களுடைய கல்வியை நிறைவு செய்ய ஆய்வுக் கட்டுரைகளை வழங்குதல்.
- மாணவர்களினால் கடந்த காலங்களில் வழங்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் எந்த வித பயன்பாடுமில்லாமல் இருந்தன.
- எனவே, மாகாண ஆய்வு அலகினால் ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பான தலைப்புக்களில், பட்டப்படிப்புக்கள் பீடத்துடன் இணைந்து ஆய்வுகளினை மேற்கொள்ள பட்டப்பின் மாணவ ஆசிரியர்களைப் பயன்படுத்துதல் சிறந்ததாகும்.
- இவ் அலகானது ஆராய்ச்சியை அல்லது மதிப்பீடுகளை மேற்கொள்ளுதலில் ஆசிரியர்களுக்கு உதவ முடியும்.

## வெளியீடுகள்

- ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளின் பெறுபேறுகள் வருடத்தில் இரு தடவைகள் உரிய உத்தியோகத்தர்களுக்கும் அதிகாரிகளுக்கும் அவர்களின் நடவடிக்கைகளுக்காக வழங்கப்படல் வேண்டும்.
- முடிவுகள் தகுந்த மதிப்பீட்டின் பின் வருடாந்த ஆய்விதழ் மூலம் வெளியிடப்பட்டு அவை இணையத்தளத்தினூடான பார்வைக்கு அனுமதிக்கப்பட வேண்டும்.
- ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவிற்கான சிபார்சுகள்.
- வருடாந்த ஆய்வு மகாநாடு ஆய்வாளர்களுக்கும் கொள்கைவகுப்பாளர்களுக்கும் ஒரு பொதுத் தளத்தை அமைத்துக் கொடுக்கும்.

## ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவிற்கான சிபார்சுகள்

- வடமாகாணத்தில் கல்வித் துறையின் ஏதேனும் தலைப்பில் 2010 ஆம் ஆண்டிற்கு முன்பு முதுமாணிக் கற்கைநெறிக்கான ஆய்வறிக்கையினை சமர்ப்பித்த ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வின் சுருக்கத்தை ஆராய்ச்சி மற்றும் பிரசுரப் பிரிவிற்கு அனுப்பி வைக்குமாறு விளம்பரப்படுத்தல் வேண்டும்.
- வடமாகாணத்தின், கல்வித்துறையில் ஏதேனும் ஒரு தலைப்பில், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் M.Phil மற்றும் P.hD ஆய்வுகளை மேற்கொண்டு அவற்றை மேற்பார்வை செய்யப்பட்ட ஆய்விதழில் பிரசுரமான வெளியீடுகளைச் சேகரிப்பதற்காக ஒரு குழுவை கல்வி அமைச்சில் நியமித்தல்.
- கல்விப் பணிப்பாளர், பொருத்தமான துறைசார் வல்லுநர்கள் மற்றும் ஆசிரியர்கள், கல்வித் திணைக்கள, கல்வி அமைச்சு சார்ந்த நிர்வாக ஊழியர்கள், பல்கலைக்கழக மற்றும் கல்வியியற் கல்லூரிகளின் ஊழியர்கள் ஆகியோர்களைக் கொண்ட ஆராய்ச்சி அபிவிருத்தி அலகிற்கான குழுவை நியமித்தல். அக் குழுவானது ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டு அலகினால் விதந்துரைக்கப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை மேற்கொள்ளவும் மற்றும் ஊழியர் அபிவிருத்தி திட்டங்களையும் அவற்றை செயற்படுத்துவது தொடர்பான நிதித்திட்டங்களையும் உருவாக்க வேண்டும்.

## கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை

1. வட மாகாணத்தின் முழுமையான கல்வி உட்கட்டுமானத்தை முகாமை செய்ய ஒரு சிறந்த முகாமைத் தகவல் முறைமை அவசியமானதாகும். இந்த முறைமையானது அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். அதே நேரத்தில், மாற்றம் தேவைப்படுகிறபொழுது மாற்றப்படக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். அவை
   a) பாடசாலைகள், கோட்ட மட்டம், வலய மட்டம், ஆராய்ச்சி அபிவிருத்தி அலகு மற்றும் மாகாணக் கல்வி ஆகியவற்றின் தேவைப்பாடுகளைத் திருப்பதிப்படுத்தக் கூடிய வகையிலான வேறுபட்ட அலகுகளை (module) உருவாக்குதல்.
   b) இத்தகைய முறைமையிலுள்ளவர்கள் தங்களுடைய பின்னூட்டியினை ஏனையவர்களுக்கும் உயர் அதிகாரிகளுக்கும் பரிமாற்ற வசதியளித்தல்.
   c) மாகாண கல்வி, ஆராய்ச்சி அபிவிருத்தி அலகு, வலயக்கல்வி அலுவலகம் பாடசாலைகளுக்குத் தேவையான தகவல்களை வழங்குதல்.

## பாடசாலை மட்டத்தில்

1. இணையத்தளம் உருவாக்கல், நிகழ்வுகளை முகாமை செய்தல், தொழில் வாய்ப்புகள் மற்றும் வேறு வகையிலான பயனுள்ள தகவல்கள்.
2. கற்றல் முகாமைத்துவ முறையை வழங்குவதற்காக
   a) இருப்புக்களைப் பராமரித்தல், தீர்மானமெடுப்பவர்களுக்கு கிடைக்கப் பெற்ற உரிமைகோரப்படாத பின்னூட்டிகளை வழங்குதல், ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் மாணவர்களுக்கான வழிமுறை முகாமைத்துவ பொறுப்புக்கள்.
   b) **அதிபர்கள்:** மனிதவள முகாமைத்துவம், இருப்பு பராமரிப்பு, விடுமுறை மற்றும் நிகழ்வுகள் முகாமைத்துவம், நேர அட்டவணை தயாரித்தல், மாணவர் முகாமைத்துவம், இணையத்தளத்தை உடனுக்குடன் பதிவு செய்யக்கூடிய பாடசாலைத் தகவல்களையும், கல்வி சார் தகவல்களையும் முகாமை செய்தல்.
   c) **ஆசிரியர்கள்:** தனிப்பட்ட தகவல்களையும் கல்விசார் தகவல்களையும் முகாமை செய்ய, புள்ளிகளையும் தரங்களையும் கணிப்பிடல், பயிற்சி யளித்தல், கொடுப்பனவுச் சிட்டை, லீவு முகாமைத்துவம், குறித்த பாடசாலையின் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மற்றும் வேறு பாடசாலையிலுள்ள ஆசிரியர்களுடனான இடைத் தொடர்பு
   d) **மாணவர்கள்:** கல்விசார் பெறுபேற்றைப் பார்வையிடல், வேலைவாய்ப்புக்கள், ஆசிரியர்கள் மற்றும் ஒத்த தரமுடையவர்கள், பழைய மாணவர்கள் உடனான இடைத் தொடர்பு, கற்றலையும் ஒப்படைகளையும் நிறைவேற்றல், தொழில் வாய்ப்புக்களை தேடுதல்.
   e) **பெற்றோர்கள்:** பாடசாலை நிர்வாகத்துடனான தொடர்பு, ஆசிரியர்களுடனான தொடர்பு, பிள்ளைகளின் பெறுபேற்றைப் பார்வையிடல் மற்றும் ஏனைய பெற்றோருடனான இடைத் தொடர்பு.

## வலயக் கல்வி மட்டத்தில்

வலயக் கல்விப் பணிப்பாளர் இணையத்தள முகாமை, பௌதிக வள முகாமை, மனித வள முகாமை - அதாவது ஊழியர்களின் பொறுப்புக்களையும் பணிகளையும் வரையறுத்தல், நிதியையும் திட்டங்களையும் கண்காணித்தல், பயிற்சியளித்தலும் அட்டவணை தயாரித்தலும், போட்டிகளையும் நிகழ்வுகளையும் முகாமைசெய்தலும் அட்டவணைப்படுத்தலும், விசேட கல்வி நிலையத்தை நிர்வகித்தல், அறிக்கை தயாரித்தல், ஏனைய வலயக் கல்விப் பணிப்பாளர்கள், வலய ஆசிரியர்கள் மற்றும் அலுவலக ஊழியர்களுடனான இடைத் தொடர்பு, வலய அதிபர்கள், ஆசிரியர்கள் மீதான பின்னூட்டியை அவதானித்தல், பாடசாலைகள் மற்றும் செயற்பாடுகளின் செயற்பாட்டு வளர்ச்சியை கண்காணித்தல்.

## மகாணக்கல்வி கல்வி மட்டத்தில்

மாகாணக் கல்விப் பணிப்பாளர் இணையத்தை முகாமை செய்ய, மனித வளத்தை அதாவது அவர்களின் முகாமைப் பொறுப்புக்களையும் பணிகளையும் வரையறுக்க, அறிக்கைகளை தயாரிக்க, நிதியையும் திட்டத்தையும் கண்காணிக்க, ஏனைய வலயப் பணிப்பாளர்கள், குறித்த வலயத்திலுள்ள ஆசிரியர்கள், அதிபர்களுடனான இடைத் தொடர்பு, வலயப் பணிப்பாளர்கள், ஆசிரியர்கள், அதிபர்களுடைய பின்னூட்டிகளை கண்காணித்தல், விடுமுறை, பணக்கொடுப்பனவுச் சிட்டைகள், பயிற்சியளித்தலும் அட்டவணைப்படுத்தலும், போட்டிகளையும் நிகழ்ச்சிகளையும் முகாமை செய்தல், பாடசாலைகளினது செயற்பாட்டு வளர்ச்சியை கண்காணித்தல்.

## ஆராய்ச்சி அபிவிருத்தி மட்டத்தில்

பல்வேறு தகவல்களையும் வேறுபட்ட மட்டங்களிலிருந்து பெற்று அறிக்கை தயாரித்தல், இணையத்தள முகாமைத்துவம், பௌதிக மற்றும் மனித வளங்களை முகாமை செய்தல்

## பொதுவானவை

1. கல்வி முகாமைத் தகவல் முறைமையானது திறந்த வளமாயும் அலகுமுறைகள் வடிவமைக்கப்பட்டதாயும் சுலபமாக விரிவாக்கம் செய்யக் கூடியதாகவும் இருத்தல்.
2. இவ் இணையத்தள உருவாக்கமானது, பௌதிக வள முகாமைத்துவம், மனித வள முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம் மற்றும் பின்னூட்டல் முகாமைத்துவம் ஆகியவற்றை வழங்குவதை முக்கிய பண்பாகக் கொண்டிருக்கும் பின்னூட்டல் அலகானது ஏதேனுமொரு மட்டத்தில் குறிக்கப்பட்ட நபருக்கு அல்லது மக்களுக்கு உரிமை கோரப்படாத பின்னூட்டிகளை வழங்க பயன்படுத்தப்படலாம். இதுவே இம் முறைமையின் மிக முக்கியமான சிறப்பியல்பாகும். ஆராயப்பட்ட முறைப்பாடுகள் நேரடியாகவே தனிப்பட்ட கோவையில் பதிவு செய்யப்படும். மேலும் இவ் வலையமைப்பு பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஏனைய பங்காளிகளிற்கான இடைத் தொடர்பை ஏற்படுத்தும் ஒரு சமூக வலைப் பின்னலை கொண்டதாக இருக்க வேண்டும்.
3. ஆரம்ப முறையானது தொழில் நிபுணர்களின் ஆலோசனைகளுடன் பாதுகாப்புக் கொள்கைகள் உள்ளடங்கிய நெகிழ்வுத்தன்மையை உறுதிசெய்யும் அலகு முறையைக் கொண்டதாக இருக்க வேண்டும்.
4. தற்போதுள்ள தீர்வுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டாலும், ஒரு அனுபவம் வாய்ந்த குழுவானது இம் முறையை அபிவிருத்தி செய்ய வேண்டும். கீழுள்ள பகுதியில் விதந்துரைக்கப்பட்ட இரு தொழினுட்ப வல்லுநர்கள் இந்தக் குழுவில் இணைக்கப்படல் வேண்டும். ஒவ்வொன்றும் தெளிவாக ஆவணப்படுத்தப்பட வேண்டும்.
5. கல்வி முகாமைத்துவ தகவல் முறையானது மாகாண கல்வித் திணைக்களத்தின் திட்டமிடல் அலகின் கீழ் செயற்பட வேண்டும்.
6. ஆசிரியர்களின் கற்பித்தல் நோக்கத்தைக் கொண்டு ஏற்கனவே செயற்படும் தகவல் தொழினுட்ப பிரிவானது மேற்படி முறைமையை ஸ்தாபிக்க போதிய வலுமிக்கதாக இல்லை.
7. தற்போது கவனிக்கப்படாதுள்ள பின்வரும் விடயங்களைக் கவனிக்கவும். மற்றும் மேற்படி முறைமையின் தேவைகளை வழங்கவும் தகவல் தொழினுட்ப சேவைகள் எனும் பெயரில் தனியான ஒரு அலகு உருவாக்கப்படல் வேண்டும்.
    a. தகவல் தொழினுட்ப உபகரணங்களை விநியோகிக்கவும், சேவையை வழங்கவும், பாடசாலைகளில் தகவல் தொழினுட்ப உபகரணங்களின் பயன்பாட்டினை கண்காணிக்கவும், அவற்றின் நிலைமைகளைத் திட்டமிடவும் இந்தத் தனியான அலகு பயன்படுத்தப்படும்.
    b. ஏனைய பாடங்களைக் கற்பிப்பதற்குத் தேவையான தகவல் தொழினுட்பத் திறன்கள் தொடர்பாக ஆசிரியர்களிற்கு பயிற்சியளித்தல்.

c. கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையை அபிவிருத்தி செய்ய, சிறந்த தகைமையும் பொருத்தமான அனுபவமுமுள்ள தொழினுட்ப உத்தியோகத்தர் நியமிக்கப்படல் வேண்டும். தேவை ஏற்படின், தற்போதுள்ள ஊழியர்களுக்குப் பயிற்சிகளை வழங்கமுடியும். இதன் மூலம் கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையினை ஸ்தாபிக்கின்ற செலவைக் குறைக்க முடியும்.

8. கல்வி அமைச்சிற்குச் சொந்தமான வழங்கி (SERVER)யின் துணையுடன் கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையை ஸ்தாபித்தல். வெவ்வேறு மட்டத்தில் இரகசியத் தகவல்களையும் அதைப் பெறும் முறையையும் உள்ளடக்கியிருத்தல்.
9. நாளாந்த அடிப்படையில் உடனுக்குடன் தகவல்களை பதிவு செய்ய தேவையான ஊழியர்களை வேலைக்கமர்த்துதல். அத்துடன் தேவைக்கேற்ப முறைமையை முன்னேற்றி, விரிவாக்கம் செய்து பராமரித்தல்.
10. மேற்படி முறைமையை செயற்படுத்த தொழில் ரீதியான முன்னேற்றத் திட்டத்தினைத் தயாரித்தலும் அதைத் தொடர்ந்து பராமரித்து தேவை ஏற்படின் விரிவாக்கம் செய்தலும்.
11. மேற்படி முறைமையைப் சரியாகப் பயன்படுத்தவும் அதிலிருந்து நன்மைகளை பெறவும், அமைச்சு மட்ட, மாகாண மட்ட, வலய மட்ட, பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிலிருந்து சகல ஊழியர்களுக்கும் பயிற்சியளித்தல்.
12. ஆரம்ப மூலதன முதலீடு, செயற்பாட்டு மற்றும் பராமரிப்புச் செலவுகளிற்கான நிதியை வழங்க வேண்டும்.



வடக்கு முன்பள்ளி சிறுவர்களின் ஆற்றுகைகள்.









# 9: வடக்கில் முன் – பிள்ளைப்பராய மேம்படுத்தலுக்கான கல்வி

## அறிமுகம்



முன்-பிள்ளைப்பராயம் என்பது பொதுவாகவே வாழ்க்கையின் முதல் 5 வருடங்களைக் குறிக்கிறது. வாழ்க்கை முழுவதும் ஒன்று திரளப்போகும் கற்றல் மற்றும் மனித மேம்பாட்டுக்கான அத்திவாரம் இடப்படுகின்றதும் வளர்ச்சி விகிதம் அதிகமானதாக இருக்கின்றதுமான ஒரு முக்கியமான காலப் பகுதி என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. இந்த ஆரம்ப காலங்களிலே ஏற்படுகின்ற மூளை வளர்ச்சியானது வாழ்க்கை வட்டம் முழுவதும் உடல்ரீதியான ஆரோக்கியம், கற்றல் மற்றும் நடத்தைகள் முதலியவற்றை பாதிக்கும் வழியாக இருக்கிறதென காட்டும், விஞ்ஞான ரீதியான சான்றுகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.



முன் - பிள்ளைப்பராய மேம்பாட்டுக்கல்வி **(ECD/E)** ஆனது, வாழ்க்கை முழுவதுமான கற்றல் மற்றும் அபிவிருத்திக்கான இன்றியமையாத அத்திவாரமாக இருப்பதோடு, கல்வியினுடைய ஆரம்பக் கட்டங்களிலான வெற்றியின் மீது முக்கிய தாக்கங்களை விளைவிப்பதாகவும் இருக்கிறது. எனவே **ECD/E** மீது முந்துரிமைக் கவனம் செலுத்துவதும் அதற்கான மூலவளங்களை வழங்கும் விதத்தில், போதிய அளவில் முதலீடு செய்வதும் தவிர்க்க முடியாததாகும். முன் - குழந்தைப் பராயத்திலே ஆரம்பமாகும் வாழ்க்கை முழுவதுமான கல்வியானது, நான்கு தூண்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அவை முக்கியமான குறிக்கோள்களாகும். அவையாவன: “அறிவதற்கான கற்றல்”, “செய்வதற்காக கற்றல்”, “ஒன்றாக வாழ்வதற்கான கற்றல்”, மற்றும் “தானாக இருப்பதற்காக கற்றல்” ஆகும்.

## முன் - குழந்தைப்பராய மேம்பாட்டுக்கான கல்வி - ECD/ E



ECD/ E ஆனது குழந்தைகளின் தப்பி பிழைத்திருத்தல், வளர்ச்சி, மேம்பாடு, மற்றும் கற்றலுக்கு ஆதரவளிக்கிறது. மரபுவழி, ஒழுங்கு முறைசாராத, மரபுவழியற்ற சூழ்நிலைகளில், பிறப்பிலிருந்து, ஆரம்பநிலை பாடசாலைக்கு போகும்வரை உருவாகின்ற உடல்நலம், ஊட்டச்சத்து, சுகாதாரம், அறிவாற்றல், சமூகரீதியான மேம்பாடுகளையும் இது உள்ளடக்கியுள்ளது.

தேசிய, மாகாண மற்றும் உள்ளூர் மட்டங்களிலே, முன்-குழந்தைப்பராய கல்வியின் ஒரு முக்கிய அம்சமாக 3-5 வயதான பிள்ளைகள் அனைவருக்கும் சமமான கற்றல் வாய்ப்புகளை, ECD/E உறுதிசெய்கிறது. ECD/E ஆனது தற்பொழுது கல்வியமைச்சின் ஒரு அலகாக உள்ளது. அதனுடைய செயற்பாடுகள் பின்வருமாறு:

- முன்பள்ளி தரவுகளைச் சேகரித்தல்.
- பதிவு செய்யப்பட்ட முன்பள்ளிகளை மேற்பார்வை செய்தல்.
- முன்பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்குதல்.
- முன்பள்ளிகளைப் பதிவு செய்தல்.
- முன்பள்ளிகளை நடத்துவோருக்கு வழிகாட்டுதல்.
- உள்ளூர் மற்றும் சர்வதேச பங்கீடுபாட்டாளர்களுடன் ஒருங்கிணைப்புச் செய்தல்.
- முன்பள்ளி சிறார்களின் தாய்மார்களுக்கு சிறுவர் உரிமை தொடர்பாகவும் முன்பள்ளி கல்வியினுடைய முக்கியத்துவம் பற்றியும் அறிவூட்டல்.
- மாவட்டத்திலும் மாகாண மட்டத்திலும் முன்பள்ளி சிறார்களுக்கு விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல்.
- முன்பள்ளி சிறார்கள் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களிடையே கலாசார நிகழ்ச்சிகள் நடத்துதல்.
- சர்வதேச ஆசிரியர்கள் தினம் மற்றும் சிறுவர்களின் தினங்களைக் கொண்டாடுதல்.

## உள்ளக ஆயுதம் தரித்த முரண்பாடுகள் மற்றும் முன்பள்ளிக் கல்வி

வடக்கு மாகாணமானது, கடந்த 30 வருடங்களாக உள்ளக ஆயுதம் தரித்த முரண்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த உள்ளக ஆயுதம் தரித்த முரண்பாடுகள் முன்பள்ளி கல்வியின் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் பின்வருமாறு :

- முன்பள்ளிகளின் ஒழுங்கமைப்புகள், அதிகார அமைப்புகள் குழம்பிப் போயிருத்தல்.
- இவற்றினுடைய வளங்கள், ஒன்றில், முற்றாக அழிக்கப்பட்டுவிட்டன அல்லது ஒரு பகுதி சேதத்திற்குட்பட்டுள்ளன.
- பிள்ளைகளின் பாதுகாப்பு, ஆரோக்கியமான பழக்கவழக்கங்கள், ஊட்டம், உளவளர்ச்சி ஆகியவை போதுமானவையாக இல்லை.
- ஆசிரியர்கள் முறையாக பயிற்றப்படவில்லை.
- ஆசிரியரும் பெற்றோரும் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.
- முன்பள்ளி சிறார்களில் அனேகமானவர்கள் போர்க்காலத்திலே பிறந்து, முகாம்களில் வளர்க்கப்பட்டவர்களாகும்.



| No | Zone | No. of Pre Schools | No. of Teachers | No. of Children | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 3-4 Years | | 4-5 Years | | Total |
| | | | | Boys | Girls | Boys | Girls | B&G |
| 1 | Jaffna | 193 | 386 | 863 | 861 | 1676 | 1568 | 4968 |
| 2 | Valikamam | 223 | 393 | 1436 | 1531 | 1390 | 1329 | 5686 |
| 3 | Vadamaradchi | 140 | 264 | 951 | 988 | 667 | 719 | 3325 |
| 4 | Thenmaradchi | 79 | 124 | 322 | 412 | 362 | 406 | 1502 |
| 5 | Islands | 81 | 124 | 521 | 501 | 641 | 571 | 2234 |
| 6 | Kilinochchi | 159 | 293 | 1885 | 1803 | 1477 | 1565 | 6730 |
| 7 | Mullaitivu | 105 | 186 | 812 | 822 | 646 | 760 | 3040 |
| 8 | Thunukkai | 81 | 104 | 508 | 404 | 468 | 452 | 1832 |
| 9 | Mannar | 107 | 168 | 689 | 725 | 683 | 701 | 2798 |
| 10 | Madhu | 60 | 75 | 147 | 177 | 368 | 393 | 1085 |
| 11 | Vavuniya – South | 149 | 230 | 1162 | 1184 | 1762 | 1906 | 6014 |
| 12 | Vavuniya - North | 54 | 62 | 245 | 270 | 206 | 248 | 969 |
| | Total | 1431 | 2409 | 8623 | 9678 | 10346 | 10618 | 40183 |

Table 9.1: Details of Preschools, Teachers & Children by Zone, NP – 2008

**Source: Early Childhood Development Unit, Ministry Of Education, CA,YA,& Sports**

Table 9.2: Details of Preschools, Teachers & Children by Zone, NP – 2010

| No. | Zone | No. of Preschools | No. of Teachers | No. of Students |
|---|---|---|---|---|
| 1 | Jaffna | 193 | 386 | 4968 |
| 2 | Valikamam | 223 | 393 | 5686 |
| 3 | Island | 81 | 124 | 2234 |
| 4 | Thenmaradchy | 79 | 124 | 1502 |
| 5 | Vadamaradchy | 140 | 264 | 3325 |
| 6 | Vavuniya South | 149 | 230 | 6014 |
| 7 | Vavuniya North | 45 | 45 | 670 |
| 8 | Mannar | 107 | 168 | 2798 |
| 9 | Madhu | 32 | 41 | 830 |
| 10 | Mullaitivu | 17 | 32 | 538 |
| 11 | Killinochchi | 74 | 158 | 2695 |
| 12 | Thunukkai | 80 | 137 | 2141 |
| | Total | 1220 | 2102 | 33401 |

**Source: Early Childhood Development Unit, Ministry Of Education, CA, YA, & Sports**









முன் பிள்ளைப் பராயக் கல்வி
மேம்படுத்துவதற்கான குழு –
ஆலோசனைப் பட்டறை
– 24 ஏப்ரல் 2014



## பரிந்துரைகள்

1. பல்வேறு அமைச்சுகளும் மேற்கொள்ளும் செயற்பாடுகளை, மாகாண கல்வி அமைச்சின் ECD /E அலகின் ஊடாக மேற்கொள்ளச் செய்வதற்கான, திட்டம் ஒன்று வகுக்கப்பட வேண்டும்.
2. தனித்தனி பாடசாலைகளுக்கு அத்தியவசியமானதும் பொருத்தமானதுமான அடிப்படைத் தேவைகளை வழங்க வேண்டும்.
3. தேவையான, அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் தகைமைகளை பெறுவதற்கான வழிகளை உருவாக்க வேண்டும்.
4. சேவைக் கால பயிற்சி வழங்குவதற்கான மூலவள நிலையத்தை உருவாக்க வேண்டும்.
5. அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனத்துக்கான பொருத்தமான திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும்.
6. மாதாந்த வேதனங்கள், அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளுக்கும் அனுபவங்களுக்கும் சமமானவையாக இருக்க வேண்டும். சம்பள முறைகேடுகள் களையப்பட வேண்டும்.
7. பாடத்திட்டம், துணைப்பாடத்திட்டம், பாடத்திட்டத்துக்கு புறம்பான திட்டங்கள் மற்றும் ஏனைய முறைகள், முன் - குழந்தைப்பராய அபிவிருத்திக் கல்வி தொடர்பான நிபுணர்கள் அணியால், நிகழ்கால மட்டத்துக்கு கொண்டு வரப்பட வேண்டும்.
8. முன் - குழந்தைப்பராய கவனிப்பு, கல்வி மற்றும் உடல்நலம் முதலியவற்றின் நன்மைகளைப் பெற்றோர்களுக்குத் தெரிவிக்க பெற்றோர்களுக்கான புரிந்துணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை நடத்தவேண்டும்.
9. அனைத்து முன்பள்ளிகளையும் நிறுவுதல், மற்றும் கண்காணித்தல் முதலியன மாகாண கல்வித் திணைக்களத்தின் (PDE) செயற்பாடாக இருக்க வேண்டும்.
10. முழுமையாகவே தனியார், குடிசார், முயற்சியாளர்களால் நடத்தப்படும் முன்பள்ளிகள் தவிர்ந்த ஏனையவற்றின் ஆசிரியர்கள் அனைவரும் PDE யால் தெரிவு செய்யப்பட்டு நியமனம் வழங்கப்பட்டு கல்வி அமைப்பில் உள்ள ஏனைய ஆசிரியர்களை ஒத்த வேதனம் வழங்கப்பட வேண்டும்.
11. கல்வி சார்ந்தவை அல்லாத அரசுத்துறைகள் முன்பள்ளிகளை நிறுவுதல், முன்பள்ளி ஆசிரியர்களை பணிக்கமர்த்தி, அவர்களுக்கு வேதனம் வழங்குதல் முதலியவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.
12. மாகாண கல்வித் திணைக்களத்தின் ஆளுகையின் கீழ் உள்ள, முன்பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படும் பிள்ளைகள், தங்கள் வீட்டுக்கு வெளியேயான, எந்த தனியார் கல்வி நிலையத்துக்கும் அனுப்பாமலிருக்க பெற்றோரை ஊக்கப்படுத்த வேண்டும்.
13. விசேட தேவைகள் உள்ள பிள்ளைகளின் விசேட தேவைகளின் அடிப்படையில், அனுமதி மறுக்கப்படக் கூடாது.
14. பாடசாலைகளில் கற்பிக்கும் பிள்ளைகளில் 3 - 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளின் சத வீதத்தை நிர்ணயிக்க ஆய்வொன்றை நடத்த வேண்டும்.
15. முன்பள்ளிகளில் கற்பித்தல் ஊடகமாக தாய்மொழி மட்டும் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
16. தரம் 1 இல் மற்ற மொழிகளை அறிமுகப்படுத்த வேண்டும்.
17. பிள்ளைகள் தங்கள் சொந்தக் கலாசாரத்தில் வேர் கொண்டிருக்கவும் மற்றைய பிள்ளைகளின் கலாசாரத்தை உணர்ந்து பாராட்டுவதற்கும் பொருத்தமான பொதுவான பாடத்திட்டம் ஒன்றை தயார் செய்து நடைமுறைப்படுத்த வேண்டும்.
18. 3 இலிருந்த 5 வயதான குழந்தைகளின் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் அனுமதி கோரினால், அவ்வாறான பிள்ளைகள் அனைவரையும் அனுமதிக்க வேண்டும்.
19. முன்-பள்ளி ஆசிரியர்களுக்கான சேவைப் பிரமாணக் குறிப்புகளை அறிமுகம் செய்ய வேண்டும்.
20. தொழினுட்ப, கற்பித்தல்-கற்றல் சாதனங்களையும் உபகரணங்களையும் விசேட தேவைகள் உள்ள பிள்ளைகளின் தேவைகளும் பூர்த்தி செய்யப்படும் விதத்தில், முன்பள்ளிகளிடையே சமமாக பகிரவேண்டும்.
21. முன்பள்ளியினுடைய எதிர்பார்ப்புகளையும் விதிமுறைகளையும் பற்றி, முன்பள்ளி பெற்றோர்களுக்கும் விசேட தேவைகளுள்ள பிள்ளைகளின் பெற்றோருக்கும் புரிந்துணர்வு ஏற்படுத்தும் நிகழ்வுகளை நடத்த வேண்டும்.







விசேட தேவையுடையோர் கல்விக்குரிய குழு



# 10: விசேடகல்வி

## அறிமுகம்

அட்டவணை 10.1. ஆனது, 2001 ஆம் ஆண்டின் மக்கள் குடித்தொகை கணக்கெடுப்பில் “ஊனமடைந்தோர்” என அல்லது நிகழ்கால பதப் பிரயோகத்தில் சொல்வதானால், “மாற்று வலுவுடையோர் அல்லது விசேட தேவையுடையோர்” என வகைப்படுத்தப்பட்டிருப்பவர்களின் தொகையை விசேட தேவையின் வகை, பால், மாவட்டம் வாரியாகத் தருகிறது. வடக்கு கிழக்கிலுள்ள 8 மாவட்டங்களில் போர்க்காலத்தில் குடிசன மதிப்பீடு எடுக்கப்படவில்லை என்பதால் அவை இதில் சேர்க்கப்படவில்லை. போரினால் பாதிக்கப்பட்டவர்களை கருத்தில் எடுத்தால் குடிசனத் தொகையில் விசேட தேவையுடையோர் சதவீதமானது இதைவிட அதிகமாக இருக்குமென எடுத்துக்கொள்வது நியாயமானதாகவே இருக்கும்.

### Table 10.1: Disabled persons by Type of Disability, Gender and Rate per 10,000 by District

**Census of Population and Housing 2001 - Sri Lanka**
**Disabled persons by Type of Disability, Sex, Rate per 10000 population and District**

Type of disability, number and rate per 10,000 population

| District and sex | Total No. | Total Rate | Disability in Seeing No. | Disability in Seeing Rate | Disability in Hearing/Speaking No. | Disability in Hearing/Speaking Rate | Disability in Hands No. | Disability in Hands Rate | Disability in Legs No. | Disability in Legs Rate | Other Physical disability No. | Other Physical disability Rate | Mental Disability No. | Mental Disability Rate |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Total (18 districts) | | | | | | | | | | | | | | |
| Both sexes | 274711 | 162.9 | 69096 | 41.0 | 73343 | 43.5 | 48131 | 28.5 | 90576 | 53.7 | 13275 | 7.9 | 69026 | 40.9 |
| Male | 158446 | 189.9 | 35419 | 42.5 | 40584 | 48.6 | 31070 | 37.2 | 56529 | 67.8 | 7344 | 8.8 | 37181 | 44.6 |
| Female | 116265 | 136.4 | 33677 | 39.5 | 32759 | 38.4 | 17061 | 20.0 | 34047 | 40.0 | 5931 | 7.0 | 31845 | 37.4 |
| Colombo | | | | | | | | | | | | | | |
| Both sexes | 27430 | 122.8 | 5998 | 26.8 | 6414 | 28.7 | 4854 | 21.7 | 9168 | 41.0 | 1219 | 5.5 | 8730 | 39.1 |
| Male | 15355 | 135.4 | 2997 | 26.4 | 3507 | 30.9 | 3208 | 28.3 | 5655 | 49.9 | 698 | 6.2 | 4391 | 38.7 |
| Female | 12075 | 109.8 | 3001 | 27.3 | 2907 | 26.4 | 1646 | 15.0 | 3513 | 31.9 | 521 | 4.7 | 4339 | 39.4 |
| Gampaha | | | | | | | | | | | | | | |
| Both sexes | 28683 | 138.8 | 7017 | 34.0 | 7860 | 38.0 | 5206 | 25.2 | 9984 | 48.3 | 1387 | 6.7 | 7313 | 35.4 |
| Male | 16591 | 165.2 | 3474 | 34.6 | 4284 | 42.6 | 3376 | 33.6 | 6249 | 62.2 | 743 | 7.4 | 4033 | 40.2 |
| Female | 12092 | 113.9 | 3543 | 33.4 | 3576 | 33.7 | 1830 | 17.2 | 3735 | 35.2 | 644 | 6.1 | 3280 | 30.9 |
| Kalutara | | | | | | | | | | | | | | |
| Both sexes | 18431 | 173.7 | 4690 | 44.2 | 5043 | 47.5 | 3272 | 30.8 | 6209 | 58.5 | 808 | 7.6 | 4809 | 45.3 |
| Male | 10471 | 201.1 | 2303 | 44.2 | 2757 | 52.9 | 2096 | 40.3 | 3818 | 73.3 | 431 | 8.3 | 2605 | 50.0 |
| Female | 7960 | 147.4 | 2387 | 44.2 | 2286 | 42.3 | 1176 | 21.8 | 2391 | 44.3 | 377 | 7.0 | 2204 | 40.8 |
| Kandy | | | | | | | | | | | | | | |
| Both sexes | 19357 | 152.1 | 4537 | 35.7 | 5395 | 42.4 | 3300 | 25.9 | 6292 | 49.4 | 840 | 6.6 | 5181 | 40.7 |
| Male | 11057 | 179.3 | 2250 | 36.5 | 3035 | 49.2 | 2070 | 33.6 | 3948 | 64.0 | 468 | 7.6 | 2817 | 45.7 |
| Female | 8300 | 126.6 | 2287 | 34.9 | 2360 | 36.0 | 1230 | 18.8 | 2344 | 35.7 | 372 | 5.7 | 2364 | 36.0 |
| Matale | | | | | | | | | | | | | | |
| Both sexes | 7466 | 168.8 | 1920 | 43.4 | 2017 | 45.6 | 1335 | 30.2 | 2450 | 55.4 | 326 | 7.4 | 1727 | 39.0 |
| Male | 4378 | 199.1 | 1007 | 45.8 | 1155 | 52.5 | 859 | 39.1 | 1544 | 70.2 | 173 | 7.9 | 953 | 43.3 |
| Female | 3088 | 138.8 | 913 | 41.0 | 862 | 38.7 | 476 | 21.4 | 906 | 40.7 | 153 | 6.9 | 774 | 34.8 |
| Nuwara Eliya | | | | | | | | | | | | | | |
| Both sexes | 10465 | 149.5 | 2857 | 40.8 | 2585 | 36.9 | 2006 | 28.7 | 3474 | 49.6 | 477 | 6.8 | 1919 | 27.4 |
| Male | 5998 | 173.9 | 1484 | 43.0 | 1472 | 42.7 | 1246 | 36.1 | 2172 | 63.0 | 249 | 7.2 | 1008 | 20.2 |
| Female | 4467 | 125.7 | 1373 | 38.6 | 1113 | 31.3 | 760 | 21.4 | 1302 | 36.7 | 228 | 6.4 | 911 | 25.6 |
| Galle | | | | | | | | | | | | | | |
| Both sexes | 17873 | 180.4 | 4722 | 47.7 | 5051 | 51.0 | 3051 | 30.8 | 5762 | 58.2 | 666 | 6.7 | 4981 | 50.3 |
| Male | 9796 | 204.3 | 2235 | 46.6 | 2727 | 56.9 | 1888 | 39.4 | 3389 | 70.7 | 346 | 7.2 | 2585 | 53.9 |
| Female | 8077 | 158.0 | 2487 | 48.7 | 2324 | 45.5 | 1163 | 22.8 | 2373 | 46.4 | 320 | 6.3 | 2396 | 46.9 |
| Matara | | | | | | | | | | | | | | |
| Both sexes | 15255 | 200.4 | 3773 | 49.6 | 4320 | 56.7 | 2535 | 33.3 | 4764 | 62.6 | 681 | 8.9 | 4379 | 57.5 |
| Male | 8486 | 231.0 | 1849 | 50.3 | 2373 | 64.6 | 1574 | 42.8 | 2772 | 75.4 | 336 | 9.1 | 2343 | 63.8 |
| Female | 6769 | 171.9 | 1924 | 48.9 | 1947 | 49.4 | 961 | 24.4 | 1992 | 50.6 | 345 | 8.8 | 2036 | 51.7 |
| Hambanthota | | | | | | | | | | | | | | |
| Both sexes | 12736 | 242.4 | 3682 | 70.1 | 3287 | 62.6 | 2079 | 39.6 | 3745 | 71.3 | 628 | 12.0 | 3391 | 64.5 |
| Male | 7181 | 274.8 | 1852 | 70.9 | 1836 | 70.3 | 1272 | 48.7 | 2203 | 84.3 | 317 | 12.1 | 1882 | 72.0 |
| Female | 5555 | 210.3 | 1830 | 69.3 | 1451 | 54.9 | 807 | 30.6 | 1542 | 58.4 | 311 | 11.8 | 1509 | 57.1 |
| Ampara | | | | | | | | | | | | | | |
| Both sexes | 8462 | 143.6 | 2339 | 39.7 | 2367 | 40.2 | 1289 | 21.9 | 2511 | 42.6 | 324 | 5.5 | 1670 | 28.3 |
| Male | 4973 | 168.4 | 1247 | 42.2 | 1298 | 44.0 | 839 | 28.4 | 1623 | 55.0 | 191 | 6.5 | 946 | 32.0 |
| Female | 3489 | 118.7 | 1092 | 37.1 | 1069 | 36.4 | 450 | 15.3 | 888 | 30.2 | 133 | 4.5 | 724 | 24.6 |



அட்டவணை 10.2 ஆனது, 2012ம் ஆண்டில் விசேட தேவைகளுடன் பாடசாலையில் இணைந்தவர்களை வலய வாரியாகவும் தேவை வாரியாகவும் எடுத்துகாட்டுகிறது. எந்த ஒரு குறிப்பிட்ட குடித்தொகையிலும் 5 இலிருந்து 7 வீத மாணவர்கள் விசேட தேவைகள் அல்லது மாற்று வலு உள்ள பிள்ளைகளாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம். வலயங்களில் உள்ள பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மற்றைய பிள்ளைகளின் தொகையில் ஊனமுற்ற பிள்ளைகளின் சதவீதம், கடைசிக்கு முந்திய நிரலில் காட்டப்பட்டுள்ளது. மடுவையும் தீவுப்பகுதிகளையும் தவிர்த்து விசேட தேவைகளுடன் இணையும் பிள்ளைகளின் சதவீதம் 0.4 இற்கும் 3.7 இற்குமிடையில் இருக்கின்றது போலவே தோன்றுகிறது. இந்த விபரங்கள் சரியானவை அல்ல என்று ஊகிக்கவும் இடமுண்டு. கீழே உள்ள உரு. 10.1 ஆனது நிகழ்கால நிலைமைகளை எடுத்துக்காட்டுகிறது. வடக்கிலுள்ள கல்வி அமைப்பானது இந்த குறைந்த அளவிலான இணைந்து கொள்ளுதலுக்கான காரணங்களை அடையாளம் கண்டு, 2015 ஆம் ஆண்டளவில், தற்போது இவ்வாறான பிள்ளைகளை சேர்த்துக் கொள்ளும் விசேட அலகுகளை கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கையை, இருமடங்காக்கும் திட்டமொன்றை ஆரம்பித்து வைக்கவேண்டியது முக்கியமாகும். விசேட தேவைகள் கொண்ட

**Table 10.2: Enrolment of students with Special Needs by Zone and Needs in 2012**

Special Education Students Details - Northern Province

| Zone: | Visual impairment | | | Hearing impairment | | | Autism | Intellectual Impairment | Downis syndrome | Slow Learners | Hyper Active | Dyslexia | Learning Difficulties | Ephilepsy | speech Language Difficulties | Behaviour Problems | Phycically Disabled | Multiple Dissabled | Others | No of SpN Students | Total Students | % of SpN to Tot Students | No of special education Teachers |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Totally | Low Vision | Total | Totally deaf | partialy Deaf | Total | | | | | | | | | | | | | | | | | |
| JAFFNA | 3 | 111 | 114 | 10 | 38 | 48 | 6 | 96 | 16 | * | 10 | 8 | 246 | 32 | 50 | 1 | 72 | 22 | 25 | 746 | 41908 | 1.8 | 11 |
| VALIKAMAM | 31 | 332 | 363 | 18 | 48 | 66 | 8 | 26 | 16 | * | 51 | 3 | 135 | 200 | 149 | 0 | 67 | 6 | 0 | 1090 | 37615 | 2.9 | 8 |
| THENMARCHCHI | 1 | 2 | 3 | 0 | 2 | 2 | 0 | 0 | 0 | * | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 29 | 0 | 34 | 13433 | 0.3 | 4 |
| VADMARACHCHI | 0 | 13 | 13 | 1 | 6 | 7 | 0 | 8 | 5 | | 0 | 6 | 39 | 0 | 5 | 1 | 4 | 1 | 0 | 89 | 23072 | 0.4 | 6 |
| ISLAND | 1 | 166 | 167 | 10 | 24 | 34 | 30 | 112 | 9 | | 7 | 11 | 52 | 11 | 5 | 4 | 15 | 8 | 1 | 466 | 9806 | 4.8 | 2 |
| KILLINOCHI | 3 | 98 | 101 | 10 | 68 | 78 | 4 | 12 | 9 | | 13 | 40 | 64 | 20 | 75 | 30 | 211 | 10 | 175 | 842 | 31608 | 2.7 | 12 |
| MANNAR | 1 | 95 | 96 | 13 | 48 | 61 | 1 | 37 | 6 | | 3 | 96 | 132 | 16 | 72 | 18 | 46 | 24 | 3 | 611 | 23337 | 2.6 | 8 |
| MADHU | 0 | 53 | 53 | 2 | 36 | 38 | 0 | 16 | 0 | | 0 | 0 | 64 | 0 | 7 | 0 | 90 | 0 | 10 | 278 | 6258 | 4.4 | 8 |
| THUNUKKAI | 9 | 35 | 44 | 4 | 15 | 19 | 0 | 25 | 0 | | 0 | | 170 | 15 | 0 | 0 | 17 | 8 | 0 | 298 | 8526 | 3.5 | 10 |
| MULLAITIVU | 5 | 143 | 148 | 27 | 23 | 50 | 0 | 4 | 4 | | 20 | 134 | 153 | 0 | 67 | 1 | 55 | 13 | 6 | 655 | 17945 | 3.7 | 12 |
| VAVUNIYA NORTH | 3 | 40 | 43 | 3 | 14 | 17 | 9 | 20 | | | | | 58 | 21 | 36 | | | | | 204 | 8401 | 2.4 | 5 |
| VAVUNIYA SOUTH | 4 | 85 | 89 | 9 | 16 | 25 | 0 | 23 | 0 | | 0 | 0 | 82 | 14 | 47 | 0 | 12 | 1 | 95 | 388 | 29839 | 1.3 | 6 |
| | | | | | | | | | | | | | | | | | | | | 5701 | 251748 | 2.3 | 92 |


Source - Provincial Directorate of Education, Northern Province, SL

பிள்ளைகள், அவர்கள் எந்த உள்ளார்ந்த திறனுடன் பிறந்திருக்கிறார்களோ அந்தத் திறனை உச்ச மட்டத்துக்கு கொண்டு வரும் விதத்திலான சமத்துவமான வாய்ப்புகளை அவர்களுக்கு வழங்குவது முக்கியமானதாகும். நேர்காணல் செய்யப்பட்ட அல்லது கடித மூலம் தங்கள் பிரச்சினையை முன்வைத்த விசேட பிள்ளைகளின் தாய்மார்கள், உடல் குறைபாடுகளுடனான



தங்கள், அதிகரிக்காத மூளைத்தாக்கம் (Cerebral Palsy) அல்லது தற்புனைவில் ஆழும் நோய். அல்லது தற்சிந்தனை (autism) ஆகிய குறைபாடுகளைக் கொண்ட பிள்ளைகளை 10 -15 மைல் தூரத்திலுள்ள பாடசாலைகளுக்கு முச்சக்கர வண்டிகளில், அவர்கள் வெளியே பாய்ந்து விடாதபடி அவதானத்துடன் கொண்டு செல்ல வேண்டியிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளனர். அவர்கள் வழமையான பயணிகள் பேருந்துகளிலும் பயணிக்க முடியாது. ஒவ்வொரு பாடசாலைக் கோட்டமும் ஆகக் குறைந்தது இரண்டு மூலோபாய ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில், விசேடகல்வி அலகுகளைக் கொண்டிருக்க வேண்டும். விசேட தேவைகள் கொண்ட பிள்ளைகளுக்கு பேருந்து சேவைகளும் வழங்கப்பட வேண்டும். பாடசாலைகளுக்கு செல்லும் பொழுதும் அங்கிருந்து திரும்பும் பொழுதும், பிள்ளைகளுடன் பாடசாலை செல்லும் வேறு பிள்ளைகள் அல்லது தாய்மார்கள் அவர்களுடன் செல்ல முடியும். விசேட தேவைகள் உள்ள பிள்ளைகளுக்கென தனியார் சிறுவர் இல்லங்களும் தனியார் பாடசாலைகளும் இருக்கின்றன. இந்த வகையில் “சிவபூமி” மிகச் சிறப்பான பாடசாலைகளை நடத்தி வருகிறது. எனினும் விசேட தேவைகள் உள்ள பிள்ளைகளை வழமையான பாடசாலை சூழலுள் சேர்த்துக் கொள்ள அரசு ஊக்கப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யப்படின், அனைத்து பிள்ளைகளும் ஒருவரிடம் இருந்து ஒருவர் அறிந்து கொள்ளவும் ஒருவர் மீது ஒருவர் கவனம் செலுத்தவும் வாய்ப்பாக இருக்கும்.

Figure 10.1: Percentage of Special Needs Children relative to total enrolment of students




Source : Provincial Department of Education, Northern Province

## விசேடகல்வி – வடமாகாண மாணவர் தொகையும் ஒதுக்கீடுகளும் – 2013

உடல் ரீதியானவை.
அறிவு ரீதியானவை.
கேட்டல் திறன் ரீதியானவை.
பார்வை திறன் ரீதியானவை.
பல்வகை தற்புனைவில் ஆழும் நோய்கள் அல்லது தற்சிந்தனை (Autism spectrum).
கற்றல் ரீதியானவை.
பலகுறைபாடுகளை கொண்டிருத்தல்.
வேறு வகையானவை.



**மாற்று வலுக் கொண்ட அல்லது விசேட தேவையுடைய பிள்ளைகள் பல்வேறுபட்ட குறைபாடுகளைக் கொண்டிருக்கிறார்கள். அவைகளுள் சில கீழே தரப்படுகின்றன.**

Table 10.3: Special Needs Student, Staff & Facilities


| | |
|---|---|
| விசேட சூழ்நிலைகள் தேவையான பிள்ளைகளின் எண்ணிக்கை | 6,001 |
| ஆசிரியர்களின் எண்ணிக்கை | 100 |
| ஆசிரியர் உதவியாளர் உபகரணங்கள் | 00 |
| சேவைக்காலஆலோசகர் எண்ணிக்கை | 11 |
| விசேட கல்விஅலகுகளின் எண்ணிக்கை | 85 |
| விசேட கல்வி மூலவள நிலையங்கள் | 04 |

### ஒதுக்கீடு

மாகாணகல்வி திணைக்களத்துக்கான (CF&TSEP) ஒதுக்கீடு (2013) - ரூ. 1.25 மில்லியன்.
வலய கல்வி அலுவலகத்துக்கான (CF) ஒதுக்கீடு (2013) - ரூ. 3.0 மில்லியன்.

கற்றலிலான பிரச்சினைகளும் பாடசாலையில் இணைதலில் உள்ள பிரச்சினைகளும் யாழ்ப்பாணத்தில் முதலிடம் பெற்றிருக்கின்றன. மாணவர்கள் எதிர்கொள்ளும் கற்றலிலான பிரச்சினைகள் என்று வகைப்படுத்தப்பட்டிருக்கிறவைகளின் வகைகள் பற்றி நிர்ணயம் செய்வது முக்கியமானதாகும். இது கல்வி திணைக்களத்தில் உள்ள பட்டப் பின்படிப்பு மாணவர்கள் அல்லது யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட மாணவர்களுக்குரிய செயற்பாட்டு ஆய்வுப் பரப்பாகும்.

Figure 10.2 Special Needs Children Details - Jaffna





Source: Provincial Department of Education, NP, Sri Lanka

தீவுப்பகுதிகளில் பாடசாலைகளில் சேரும் போது பார்வை திறன் குறைபாடு உள்ளவர்களின் வீதம் ஆகக் கூடியளவில் உள்ளது. இந்த குறைபாட்டினுடைய பரிமாணம், இப்படியான மாணவருக்கு கற்பிக்க பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இருக்கிறார்களா மற்றும் இவர்களுக்கு பிறெய்லிமுறை வசதிகள் தேவையா என்பது குறித்த நிர்ணயங்கள் செய்யப்பட வேண்டிய தேவை உள்ளது.


கிளிநொச்சியினுடைய குறைவான மக்கள் தொகையோடு ஒப்பிடும் போது அது மிகவும் கூடிய ஊனமுற்ற நபர்களைக் கொண்டிருக்கிறது. உடல்ரீதியான ஊனங்கள் மீது போர் தன் தாக்கங்களை விளைவித்திருக்கலாம்.

**Figure 10.3 Special Needs Children Details – Islands**




**Source: Provincial Department of Education, NP, Sri Lanka**


**Figure 10.4 Special Needs Children Details - Kilinochchi**




**Source: Provincial Department of Education, NP, Sri Lanka**

மடுப்பகுதியானது கூடிய எண்ணிக்கையிலான உடல் ஊனமுற்றோர், பார்வை திறன் குறைந்தோர் மற்றும் கற்றலின் பிரச்சினைகளை எதிர்கொள்வோர் முதலியவர்களைக் கொண்டுள்ளது.


Figure 10.5 Special Needs Children Details - Madhu




Source: Provincial Department of Education, NP, Sri Lanka

முல்லைத்தீவில் அதிக அளவிலான பார்வைதிறன் குறைபாடு உள்ளோரும் கற்றலில் பிரச்சினையை எதிர்கொள்வோரும் உள்ளனர். முல்லைத்தீவில் காணப்படும் பார்வை திறன் குறைபாடு, கற்றலிலான பிரச்சினைகளுக்கும் வாசிப்பு இடர்ப்பாட்டு நோய்க்கும் (**Dyslexia**) இடையே ஏதாவது தொடர்பு இருக்கின்றதா என்று ஆராயவேண்டிய தேவை உள்ளது. இந்த குறைபாடுகளின் இயல்புகளையும் பரிமாணத்தையும் அடையாளம் காண்பதற்கு நியாயமான அளவு துல்லியமான நோய் நிர்ணய கருவிகள் அவசியமாகும்.

Figure 10.6 Special Needs Children Details - Mullaitivu




Source: Provincial Department of Education, NP, Sri Lanka

## விசேடகல்விக் கொள்கை



அனைத்து மாணவர்களும் தங்களது கல்வித் திட்டத்தின் அனைத்து அம்சங்களிலும் சாதனைகளை ஈட்டவும் முதன்மை நிலைக்கான முயற்சிகளில் ஈடுபடுவதற்குமென கற்றல் வாய்ப்புகளை எட்டும் திறனை சமத்துவமான முறையில் கொண்டிருக்க வேண்டும்.

இலங்கையில் 1998 ஆம் ஆண்டில் நாடாளு மன்றத்திலே சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டதிலிருந்து கல்வி கட்டாயமானதாக இருக்கிறது. இந்த சட்டமானது விசேட தேவையுடைய அல்லது மாற்றுத் திறனுள்ள பிள்ளைகளுக்கும் பொருத்தமானதாக இருக்கிறது. கல்வியைப் பெறும் உரிமை அவர்களுக்கு இருக்கிறது என்பதோடு கல்வி அமைப்பானது அதற்கான ஏற்பாடுகளைக் கட்டாயம் செய்ய வேண்டும்.

அனைத்து பிள்ளைகளுக்கும் ஆரம்பக் கல்வியைப் பெற்றுக் கொடுக்கும் உலகளாவிய இலக்கானது, விசேட தேவைகள் உள்ள பிள்ளைகளையும் உள்ளடக்குகிறது. வடக்கு மாகாணம் மற்றும் அனைத்து மாகாணங்களும் விசேட தேவைகள் உள்ள அனைத்து பிள்ளைகளும் ஆரம்ப நிலையில் விசேட கல்வி வகுப்புகளில் கல்வி கற்பதையும் பின்னர், ஆகக் குறைந்தது 16 வயது வரை, பொருத்தமான இடங்களிலும் நேரங்களிலும் உள்ளீடு செய்யப்படும் விசேட கல்வி வகுப்புகளில் அல்லது அலகுகளில் கற்பதையும் உறுதி செய்யவேண்டும்.

## விசேட கல்வி தொடர்பான பரிந்துரைகள்



1. விசேட தேவைகளுடனான பிள்ளைகளுக்கு கல்வியூட்டும் விதத்தில் ஆசிரியர்கள் தங்கள் திறன்களை வளப்படுத்தி கொள்வதற்கெனப் பயிற்சி திட்டங்களை நடத்த வேண்டும்.
2. மாணவர் செயற்பாடுகள் தொடர்பான கற்பித்தல் திறன் விருத்தியை வலய, மாகாண மட்டத்தில் ஏற்படுத்துதல்.
3. -மருத்துவ பாசறைகளை நடத்துதல் வேண்டும்.
4. விசேட கற்றல் உபகரணங்களை விசேட கல்வி மையங்களுக்கும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கும் வழங்க வேண்டும்.
5. தேவை உள்ள பிள்ளைகளுக்கு, கேட்கும் சாதனம் (HEARING AID), செயற்கை அவயவங்கள் முதலியவற்றை வழங்க வேண்டும். பார்வைக் குறைபாடுகள் உள்ள பிள்ளைகளில் யாருக்காவது பிறெய்லி உபகரணங்கள் தேவையாக இருந்தால் ஒன்றை வழங்க வேண்டும். பிறெய்லி முறையில் உருவாக்கப்பட்டுள்ள வாசிப்புக்கான நூல்களை வழங்க வேண்டும்.
6. இரு பெற்றோரையும் இழந்து விட்ட பிள்ளைகளுக்கு விசேட ஆதரவை வழங்க வேண்டும்.
7. உளநல-சமூகவியல் ரீதியான தலையீடு, பொழுபோக்கு செயற்பாடுகள் முதலியவற்றை மேற்கொள்ளவும் பொது மக்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தவுமென, கண்காட்சிகள்



உல்லாச பயணங்கள், விசேட தேவைகள் நாள், தற்புனை ஆழும் நோய் மாதம், விழாக்கள் முதலியவற்றை நடத்த வேண்டும்.

8. பாடசாலைகளில் இடம்பெறும் விளையாட்டுப் போட்டிகள், இசைநிகழ்சிகள் மற்றும் போட்டிகளில் விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்கென விசேட நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேணடும்.
9. சுற்றாடலில் இருக்கும் விசேட தேவைகளுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட விசேடகல்வி அலகுகளை உருவாக்க வேண்டும்.
10. ஒவ்வொரு கோட்டத்திலும் தேவையான இடங்களில் உள்ளடக்குவதற்கென பாடசாலை வளவுகளுக்குள்ளேயே விசேட கல்வி அலகுகளை நிறுவ வேண்டும்.
11. ஆசிரியர் உதவியாளர்களுக்கு ஒரு சம அளவிலான வேதனம் வழங்குவதோடு பயிற்சியும் வழங்க வேண்டும்.
12. ஒவ்வொரு 7 மாணவர்களுக்கும் ஒரு ஆசிரியர் உதவியாளராக இருக்க வேண்டும்.
13. இரண்டு வருடங்களுக்கு மேற்படாத காலப்பகுதிகளில், விசேடகல்வி வகுப்பொன்றில் கற்பித்திருக்காத சேவைக்கால ஆலோசகர்கள், ஆகக் குறைந்தது இரண்டு முழு பாடசாலை வருடங்களுக்கு, ஒரு விசேடகல்வி வகுப்பில் முழுநேரக் கற்பித்தலுக்கு திரும்ப வேண்டும். அந்தக் கற்பித்தல் முடிந்த பின்பு அவர்கள் மதிப்பீடு செய்யப்பட்டு மீண்டும் சேவைக்கால ஆலோசகர்களாக நியமிக்கப்படுவதற்கு கருத்தில் எடுத்துக்கொள்ளப்படலாம்.
14. வடமாகாண விசேடகல்வி மூலவள நிலையமானது கைதடியில் அல்லது கிளிநொச்சி அல்லது முல்லைத்தீவு மாவட்டங்களில் **A** 9 வீதிக்கு அண்மையாக நிறுவப்பட வேண்டும்.
15. பிள்ளைகளை, சுயசார்பு மற்றும் சுயாதீன அல்லது உதவும் கவனிப்புடனான குழு வாழ்க்கையை எட்டும் விதத்தில், பிள்ளைகளை் வாழ்க்கைத் திறன்களை கற்பதற்கென அனைத்து விசேட கல்வி அலகுகளிலும் உபகரணங்கள் மற்றும் பொருட்களை வைத்திருக்க வேண்டும்.
16. சமூகத்தில் கிடைக்கக் கூடியதாக இருக்கிற உதவி வழங்கப்படும் பாதுகாப்பான தொழில் பயிற்சி திறன்களில் ஈடுபடவென, விசேட தேவைகளுள்ள பிள்ளைகளுக்கு, அவர்களுடன் கூடச்செல்லும், விசேடமாக பயிற்றப்பட்ட பணியாளருடன் கூடிய, விசேட போக்குவரவுச் சாதனங்களை வழங்கவேண்டும்.
17. அனைத்து விசேட தேவைகள் கொண்ட வயது வந்தோரும் குழு வாழ்க்கைக்கான தங்கள் செலவுகளுக்கான பணத்தை பெறும் விதத்தில் அவர்களுக்கு ஒரு மாதாந்த படியை வழங்குவது தொடர்பான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும்.
18. சுகாதார சேவைகள், சமூகசேவைகள், விசேடகல்வி அபிவிருத்திக்கென இணையத்தளங்கள் மூலமான தகவல்களை பேணுவதற்கென தகவல் தொடர்பாடல் அலகுகளை இணைக்க வேண்டும்.
19. சைகை மொழி தொடர்பான விசேட கல்விக்கான மேலதிக பயிற்சிகளை வழங்க வேண்டும்.
20. கட்டடங்களும் மைதானங்களும் விசேட தேவை பிள்ளைகள் - நட்பானவையாக இருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.
21. பிறெய்லி முறையிலான பாடப் புத்தகங்களையும் மற்றைய பொதுவான பாடப் புத்தகங்களையும் தமிழில் பிரசுரம் செய்ய வேண்டும்.
22. விசேட கல்விக்கான மாகாண ஆலோசனை செயற்குழு ஒன்றை உருவாக்க வேண்டும்.
23. வலய மட்டத்தில் காலத்துக்கு காலம் குறுகியகாலப் பயிற்சிகளை ஒழுங்கு செய்ய வேண்டும்.
24. விசேடகல்வி ஆசிரியர்கள், மேற்பார்வை, மற்றும் நிர்வாக ஆளணியினரின் ஆளணி அபிவிருத்தி திட்டம் ஒன்றை தயார் செய்து, விசேடகல்வியில் முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளில் பயிற்சி வழங்குவதை நடைமுறைப்படுத்த வேண்டும்.
25. தமிழ்மொழியுடன் ஒத்தியையக் கூடிய பிறெய்லி ஆளிப்பலகைகளை உருவாக்க வேண்டும் அல்லது அவ்வாறான உபகரணங்களை கொள்வனவு செய்யவேண்டும்.

26. வடமாகாணத்தில் உள்ள ஆசிரியர் பயிற்சி நிலையங்கள், விசேடகல்வி ஆசிரியர் உதவியாளருக்கென 1 வருட டிப்ளோமா பாடநெறியையும் விசேடகல்வியிலான கல்வி இளமாணி பாடநெறிகளையும் நடத்துவதை உறுதிசெய்ய வேண்டும். ஒரு இடைக்கால ஏற்பாடாக, விசேட கல்வி ஆசிரியர்களைத் தமிழ் நாட்டிலுள்ள விசேடகல்வி ஆசிரியர் சான்றிதழ்களை வழங்கும் கல்வி நிலையங்களுக்கு அனுப்பி பயிற்சி வழங்க வேண்டும்.
27. பல்வேறு விசேட தேவைகளையும் கொண்ட பிள்ளைகள், மாற்றுத் திறன் கொண்ட ஒருவரை எதிர்கொள்ளும் சவால்களுக்கு முகம்கொடுத்து சமூகத்தினுடைய சுயாதீனமான பங்களிப்பு செய்யும் உறுப்பினராக ஆவதற்கு, அவர்களுக்குள்ள உள்ளார்ந்த திறன்களை, ஆகக்கூடிய மட்டத்துக்கு கொண்டு போகும் விதத்திலான பாடத் திட்டங்களை உருவாக்க வேண்டும்.








# 11: தொடர்ச்சியான கல்வி

## அறிமுகம்



தற்போதைய முறைசாராக் கல்வியானது வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்குப் பொருத்தமான ஒன்றல்ல. ஆற்றலும் திறமையும் உள்ள மாணவர்கள் உள்ள இடங்களை இது உள்வாங்குவதில்லை. இம் முறைசாராக் கல்வியானது அதற்குத் தேவையான பாடசாலை வசதிகளைப் பயன்படுத்தவும் அதற்குரிய அனுமதியைப் பெறவும் அதிபர்களிலேயே தங்கியுள்ளது. அதேவேளையில் அவ் அனுமதியானது குறிக்கப்பட்ட பாடங்களுக்கு மட்டும் வழங்கப்படுகின்றது. சில அரச சார்பற்ற நிறுவனங்களே அத்தகைய வசதிகளையும் ஊழியர்களையும் வழங்குகின்றது. கற்பிக்க வேண்டிய பாடப்பிரிவுகளும் அதன் அளவும் தேவைப்படும் மாணவர் தொகையும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தற்போதுள்ள கற்கை நெறியானது ஒரு குறிக்கப்பட்ட தேவைக்காக உருவாக்கப்பட்டதாகும். கல்வி முறைமையிலிருந்து முன்னரே வெளியேறியவர்களுக்கு வகுப்பறைகளிலும் பயிற்சிப்பட்டறைகளிலும் வேலையைப் பெறக்கூடிய திறன்களைக் கற்கவும், அவர்களுடைய கல்வியை தொடரவும் சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்விப்பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் மரிய பெரேரா அவர்கள் கல்வியைத் தொடர வேண்டும் என விரும்புகிறவர்களுக்கு வழங்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் தொடர்பாக வடமாகாண கல்வி முறைமை மீளாய்விற்கான ஆலோசனைப் பட்டறைக்கு வழங்கிய ஆலோசனையில் அவர் தெரிவித்தது யாதெனில்:

> "இது ஒரு முக்கியமான ஆலோசனை. அதாவது இத்திட்டமானது தேசிய கல்வி நிறுவகத்துடன் இணைக்கப்படல் வேண்டும். வேலைசெய்யக்கூடிய ஆற்றல் விருத்தி செய்யப்படல் வேண்டும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மாணவர்கள் "இடைவிலகலும்" கல்வியில் "மீளிணைத்தலும்" அவர்கள் சமூகத்துடன் சேர்ந்து வாழ வேண்டுமாயின் ஒரே நேரத்தில் இடம்பெற வேண்டும். தேசிய கல்வி நிறுவகமானது ஏற்கனவே இந் நோக்கத்திற்காக நியமமான ஆவணத்தை (Module) தயாரித்திருக்கிறது. மாணவர்களை உலகப் பிரஜாவுரிமையுடையவர்களாக உருவாக்கும் பொழுது எங்களுடைய சுதேசிய தொழில்களை பாதுகாக்கவேண்டியது அவசியமாகும். ஆகவே விவசாயம் மற்றும் கடற்றொழிலை மையமாகக் கொண்ட கல்வி வடமாகாணத்திற்கு அவசியமானதாகும்"1

முன்மொழியப்பட்ட வட மாகாண தொடர்கல்வி பாடசாலையானது எல்லோருக்கும் வாழ்நாள் கற்றல் சந்தர்ப்பத்தை வழங்கவேண்டும். இத் திட்டமானது மாணவர்களின் தற்போதைய கல்வித் தகைமைகளை அல்லது வாழ்வின் சவால்களை கருத்திற்கொள்ளாமல் தங்களுடைய கல்வியைத் தொடர விரும்புபவர்களுக்கும் கல்வி தேவைப்படுகிற எல்லோருக்கும் வழங்கப்படல் வேண்டும். உயர்தரமான அறிவுரைகள், முறையான மாணவர் உதவி சேவைகள் அதாவது உள சமூக நலன், கல்வி, தொழில் வழிகாட்டல் ஆலோசனைகள் என்பன வழங்கப்படல் வேண்டும். வடக்கு வாழ் மக்கள் கல்வியானது தனி மனிதனை உருவாக்கி, அவர்கள் வாழ்வை வளப்படுத்தி சமூகத்திற்கும் பொருளாதாரத்திற்கும் நன்மையளிக்கக் கூடியதென்ற உயர்ந்த வரலாற்று நோக்கைக் கொண்டிருக்கிறார்கள்.

வடமாகாண தொடர் கல்விப் பாடசாலை கல்வியை வழங்க அர்ப்பணிப்புடன் இருக்க வேண்டும் அத்துடன் எல்லோருக்கும் அவர்கள் வாழ்நாளில் கற்றலுக்குரிய சந்தர்ப்பத்தினை வழங்க வேண்டும். இவ்வாறான உயர் தரமுடைய கல்வியையும் முறையான மாணவர் உதவிச் சேவைகளையும் அதாவது

1 Personal communication to N. Ethirveerasingam, Facilitator

உளச்சமூகக் கல்வி, தொழில் வழிகாட்டல் ஆலோசனைகள் என்பவற்றை வழங்க வேண்டும். மக்கள் தங்களிற்குரிய தனித்துவமான திறனுடையவர்கள். அக் கல்வியானது தனிப்பட்டவர்களை, அவர்களுடைய வாழ்க்கையை வளமாக்கி, சமூகத்திற்கும் பொருளாதாரத்திற்கும் பங்களிப்பை வழங்கக்கூடியதாக மாற்றக்கூடியது.



## பிரச்சினை

கடந்த கால யுத்தத்தின் காரணமாக பதினைந்து வருடங்களுக்கு மேலாக பாடசாலை விலகிய பல இளம் மாணவர்கள் தொழில் திறன்களைப்பற்றிக் கற்கவும் தமது கல்வியைத் தொடரவும் விரும்புகிறார்கள்.

தற்போதைய முறையற்றதும் குறிக்கப்பட்ட பணிக்காக அமைக்கப்பட்டதுமான முறைசாராக் கல்வி முறைமையானது அத்தகைய தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்யப் போதுமானதாக வடிவமைக்கப்படவில்லை

பல மாணவர்கள் பின்வரும் பல காரணங்களுக்காக தங்களுடைய பாடசாலைக் கல்வியினை தவற விட்டிருக்கிறார்கள்.

- யுத்தத்தின் காரணமாக பல தடவைகள் இடம்பெயர்வு.
- குடும்பத்தின் முக்கிய நபரின் இழப்பும் வாழ்வாதாரத் தொழிலைத் தேடுவதற்கான நிர்ப்பந்தமும்.
- தந்தையினால் அல்லது குடும்பத்தினால் கைவிடப்படல்.
- பரீட்சையில் சித்தியடையாமையும் நம்பிக்கையினை இழத்தலும்.
- வேலை உத்தரவாதம், நாளாந்த கூலி மற்றும் நிரந்தர வேலைவாய்ப்பு என்ற பல காரணங்களினால் மாணவர்கள் வியாபாரிகளால் ஏமாற்றப்படல்.
- பாடசாலைகளில் கல்வியை மகிழ்வாகக் கற்காமை.

வயது வந்தோர் கல்வியானது மேலே கூறிய மாணவர்களுக்கு பொருத்தமானதாக இருக்க மாட்டாது. ஏனெனில் அவர்கள் வயது வந்தோராக இருந்த போதிலும் கல்வி கற்பதற்குத் தேவையான அறிவையும் வேலை அனுபவத்தையும் கொண்டிருப்பதில்லை. அவர்கள் பாடசாலையை விட்டு விலகியதிலிருந்து இன்னமும் இளம் வயதினராகவே உள்ளனர். எனவே இது பாடசாலை சார்ந்த பாடவிதானத்துடன் கல்வியைத் தொடர சிறந்ததாக இருக்கும். ஐந்து சாதாரண தரப் பாடங்கள்- தமிழ் மொழி, ஆங்கில மொழி, கணிதம், பொது விஞ்ஞானம் மற்றும் கணனி ஆகிய பாடங்கள் தொழினுட்ப கல்லூரிகளில் அனுமதியைப் பெறப் போதுமானதாகும். பின்னர் அவர்கள் விரும்பிய துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற முடியும். இச் சாதராண தரக் கற்கை நெறியானது மாணவர்களின் ஆற்றலுக்கேற்ப ஒன்று அல்லது இரண்டு வருட கற்கை நெறியாக இருக்கலாம். கற்பித்தலானது முறையானதாக இருத்தல் வேண்டும்.

## தொடர்கல்வி முறையை வழங்கக்கூடிய பொறுப்பான துறைகள்

உள சமூக ஆற்றுப்படுத்தல்
தொழில் வழி காட்டல் ஆலோசனைகள்
கல்வி ஆற்றுப்படுத்தல்
தொழினுட்பக் கல்வி
மொழிக் கல்வி
அலுவலகத் தொழில்கள்
மருத்துவத் தொழில்கள்
தகவல் தொழினுட்பவியலாளர்
இணையத்தள/வரைபட வடிவமைப்பு
முயற்சியாண்மையும் கணக்கியலும்
மகிழ்ச்சியான ஓய்வு நிலை தொழில்கள்– பெயின்ரிங், சங்கீதம், நடனம் மற்றும் கலைதொடர்பானவை
உணவு தயாரித்தலும் கொண்டுசென்று வழங்கலும்
தேவை ஏற்படுகின்ற போது பின்வரும் கற்கை நெறிகளையும் வழங்கலாம்.

- திறன் விருத்திக்கான பயிற்சி: உதாரணம்- வாகனம் ஓட்டுதல், அழகுக்கலை,குழந்தைகள், வயது வந்தோர் நோயாளருக்கான தாதிச் சேவை, அலுமினியமற்றும் பிளாஸ்ரிக் இணைப்புக்கள்,தோல்ப் பொருட்கள், தொழினுட்பக் கல்வி




தொழில்த் தேர்ச்சி பெற்ற பகுதி நேர ஆசிரியர் ஒருவர் முதல்வராக இருப்பார். தற்போதுதொழில் செய்பவர்கள் தொழில் செய்யாத நேரங்களில் இந்தக் கற்கை நெறியினைக் கற்கமுடியும்
கற்கை நெறிக்கான தேவையின் அடிப்படையில் கற்கை நெறியின் எண்ணிக்கை, நேரம் என்பனமாற்றப்படலாம்
மகிழ்ச்சி நேரக் கற்கை நெறிகளைவிட ஏனைய கற்கை நெறிகள் தரமானவையாக இருத்தல்வேண்டும், அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமாவிற்குச் சமமானதாக இருத்தல் வேண்டும்
கற்றலானது ஒருபோதும் முடிவுறுகின்ற ஒன்றாக இருக்கமாட்டாது
குடியுரிமை பெற்ற எல்லோரும் வாழ்நாளிற்கான கற்றலைத் தொடருவதற்கான உரிமையைக் கொண்டிருக்கிறார்கள்.

## தொடர்கல்வி தொடர்பான சிபாரிசுகள்

1) ஒவ்வொரு வலயத்திலும் பாரம்பரிய நிரந்தரமான ஆசிரியரின் துணைகொண்டு தொடர்கல்விப்பாடசாலைகளை அதாவது வயதுவந்தோருக்கான பாடசாலைகளை அமைக்கலாம். கீழேகாட்டப்பட்ட படமானது ஒரு வலயப் பணிப்பாளரின் கீழ் தொடர்கல்விப் பாடசாலை இயங்கும்முறையை விளக்குகின்றது.
2) கல்வியைத் தொடர விரும்புகிற பயனாளிகள் எல்லோரும் 16 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும்கல்வியைத் தொடர விருப்புடையவர்களாகவும் இருக்க வேண்டும்.
3) தற்போதுள்ள முறைசாராக் கல்வியை மாற்றியமைத்து அதில் கடமையாற்றிய அலுவலர்களிற்குப் புதிய பொறுப்புக்கள் வழங்கப்பட வேண்டும்.



**Figure 11.1: Student's Learning & Growth section of the "An Illustrated Summary of the Northern Province Current & Proposed Education & Examination System" chart (in Figure E1).**





4) தொழில்சார் தகைமையுடைய வழிகாட்டல் ஆலோசகர் ஒரவர் துணையுடன் ஒவ்வொரு மாணவனுக்கும் பாடநெறி தொடங்க முன்னரும் பாடநெறியின் போதும் உளரீதியானதும், தொழில் வழிகாட்டல் ரீதியானதுமான ஆலோசனை வழங்க வேண்டும். அதற்குப் பின்வரும் காரணங்கள் உள:

a. கடந்த காலங்களில் இடம்பெற்ற துன்பியல் நிகழ்வுகள்
B. மது, புகைத்தல், போதைவஸ்து, துஷ்பிரயோகம் அகியவற்றின் தாக்கம்
C. பாடநெறியைப் பயிலுவதற்கான வலுவை வழங்கல்
D. மாணவன் தனது எதிர்கால இலக்கினை அடையக் கூடிய பாதையைத் தெரிவு செய்யவழிகாட்டல்.


NATRAJ







# 12: தமிழ் மொழி மூல கல்வி நிறுவகம் (ITME)

## தேவை

1985 ஆம் ஆண்டின் தேசிய கல்வி நிறுவகச் சட்டத்தின் (சட்ட இல. 1985 இன் 28 ஆம் இலக்கம்) விளைவாக 1986 ஆம் ஆண்டிலே தேசிய கல்வி நிறுவகத்தின் (NIE) ஆரம்பம் தொடக்கம் இன்று வரைக்கும் 78% சிங்கள அலுவலர்களையும் 20% தமிழ் அலுவலர்களையும் 2% இஸ்லாமிய[1] அலுவலர்களையும் (www.nie.lk. இல் காண்க.) கொண்ட கூட்டுப்பணியாளர் அமைப்பாக இருந்து வருகின்றது. தமிழ் மொழி மூல ஆசிரியர்களும் கல்வியாளர்களும் தமிழ்மொழி மூல கல்வி விடயங்களில் ஆக்கபூர்வமான தீர்மானங்களை எடுப்பதில் பங்காற்றும் சந்தர்ப்பங்கள் அற்றவர்களாக இருக்கின்றார்கள். தமிழ் ஆசிரியர்களும் கல்வியியாளர்களும் உலகில் இருக்கக் கூடிய பழைமை வாய்ந்த மொழிகளில் ஒன்றாக விளங்கும் தமது சொந்த மொழியிலான பாடப்புத்தகங்கள், கற்பித்தல் பொருட்களை உருவாக்குபவர்களாகவும் படைப்பாளிகளாகவும் புத்தாக்கங்களுக்கு ஒத்துழைப்பவர்களாகவும் இருப்பதிலும் பார்க்க வெறுமனே தேசிய கல்வி நிறுவகத்தின் வெளியீடுகளை நுகர்வோர்களாகவே ஆகியிருக்கிறார்கள். இதற்கான பொறுப்புக்களை முறைகேடாக எவர் மீதாவது அல்லது நிறுவனத்தின் மீதோ அரசியல் ரீதியாகவோ அல்லது வேறு வழிகளில் சுமத்தி அதனால் பெறப்பட்டது எதுவுமே கிடையாது. ஆனால் இதனை திருத்துவது முக்கியமானதாகும்.



[1]See: www.nie.lk

3134 பாடசாலைகள் முற்றிலும் அல்லது ஏனைய மொழிகளுடன் இணைந்தோ கீழ்காட்டப்பட்டவாறு தமிழ்மொழி மூலத்தில் கற்பிக்கின்றன.

**சிறீலங்காவில் உள்ள தமிழ்மொழி மூல பாடசாலைகள் - 2012**

| | | |
|---|---|---|
| தமிழ் மாத்திரம் | 2914 | 29.4% |
| தமிழும் ஆங்கிலமும் | 152 | 1.5% |
| சிங்களமும் தமிழும் | 39 | 0.4% |
| சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் | 29 | 0.3% |
| **மொத்தம்** | **3, 134** | **31.6%** |

இணைய கற்கை மேம்பாடு, தென்கொரியா அடிப்டையிலான MATH CLOUD உடன் ஒத்துழைக்கும் ஐக்கிய அமெரிக்கா அடிப்படையிலான Khan Academy கற்கைகளை சிங்களம் அல்லது தமிழில் மொழிபெயர்ப்புச் செய்தல் என்பவை உள்ளடங்கலாக கலைத்திட்டம், கணிப்பீடு, கற்பித்தல் பொருட்களின் மேம்பாட்டிற்கு உதவி வழங்குவதற்கு தேவையான சிங்களம் பேசும் அல்லது தமிழ் பேசும் வளவாளர்கள் வேறுபட்டவர்கள். ஆனால் சம எண்ணிக்கையில் இருக்க வேண்டும். இது 68% சிங்கள மொழி மூல அல்லது 32% தமிழ் மூலப்பாடசாலைகள் என்பதோடு தொடர்பற்றதாகும். பல்வேறு பாடவிதானங்களை தமிழில் அல்லது சிங்களத்தில் மொழி பெயர்ப்பு செய்வதற்குத் தேவையான வளவாளர்கள் சமனாகவும் மற்றும் இச் சேவைகளுக்குரிய நிதி ஒதுக்கீடும் சமனானதாக இருக்க வேண்டும்.

கடந்து சென்ற 18 ஆண்டு காலப்பகுதியில் விடுபட்டுப்போனவைகள் தமிழ் மொழி மூல கல்வி நிறுவகம் (ITEM) ஒன்றை அமைப்பதன் மூலமாக நிவர்த்தி செய்யப்படலாம். இவ்வாறான ஒரு தீர்மானம் ஒருவர் மட்டும் தனித்து எடுக்கும் ஒரு தீர்மானம் மறுதரப்பினரை எதிர்மறையாக பாதிக்கும் என்னும் ஆபத்து இல்லாமல் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரண்டு மொழி மூலமான கல்விக்கும் நன்மை பயக்கும். அப்படியான ஒரு தீர்மானத்தின் மூலம் அனைத்து கல்வியியலாளர்களும் பொதுவான கவனமெடுக்க வேண்டிய விடயங்களாகிய பாடவிதான நியமங்கள், கற்பித்தல் மற்றும் கணிப்பீடு ஆகியவற்றில் இரு மொழிகளும் சமமாகவே ஒத்துழைப்புச் செய்ய முடியும். தேசிய கல்வி நிறுவகம் தன்னுடைய முழுக் கவனத்தையும் சிங்கள மொழியையே தாய் மொழியாக கொண்ட 78% ஆன சிங்கள மொழி அலுவலர்களுடன் சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் செலுத்தலாம்.

இலங்கையின் கொழும்பு பல்கலைக்கழக கலைப்பீடப் பேராசிரியர் மாரி பெரேரா அவர்கள் ஏப்பிரல் 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் நடைபெற்ற ஆலோசனை செயலமர்வில் வழங்கப்பட்ட வரைவு அறிக்கை பற்றி கூறிய கருத்தாவது “நிறுவனத்தை நிறுவுவதற்கான காரணம் தொனிப்பாக இருக்கிறது. அறிக்கையில் கூறியுள்ளது போன்று NIE உடனான ஆலோசனையுடன் செயற்பட வேண்டும். கலைத்திட்டம் மற்றும் தொழிற்றகைமை மேம்பாடு என்பவை நாடு முழுவதும் ஒரே சீராக இருக்க வேண்டும். இல்லாது இருப்பின் அனைவருக்கும் கல்வி என்னும் எண்ணக்கரு தடுக்கப்பட்டு விடும்”. (நா.எதிர்வீரசிங்கம் இணைப்பாளருடனான தனிப்பட்ட தொடர்பாடல்)

NIE இன் பணிப்பாளர் நாயகம் ஆலோசனை செயலமர்வினை அடுத்து உடனடியாக வடமாகணக்கல்வி அமைச்சருக்கு எழுதிய 15.05.2014 திகதியிடப்பட்ட கடிதத்தில் எழுதியிருந்ததாவது “வடமாகாணத்தின் கல்வி மட்டம் மற்றும் தரம் என்பவற்றின் மேம்பாட்டிற்கு நாம் ஒன்றாகவே செயற்பட முடியும் என நான் உண்மையாக சிந்திக்கிறேன். ஆகவே வடமாகாணத்தினுடைய கல்வி முறைமை மற்றும் தரம் என்பவற்றின் மேம்பட்டிற்கு சாத்தியமான அனைத்து வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்குவதற்கு தேசிய கல்வி நிறுவகம் தயாராக உள்ளது.

## தேசிய கல்வி சட்டம் மற்றும் குறிக்கோள்கள்

1985 ஆம் ஆண்டின் சட்டத்தின் 4 ஆவது பிரிவு (K) இல் நிறுவகத்தின் அதிகாரத்தை வழங்குகிறது.

"கல்வி சார்ந்த மற்றும் வேறு நிறுவனங்களுடன் கூட்டுச் செயற்பாட்டு உடன்பாடுகளுக்குள் நுழைவதற்குஇ பொது செயல்நோக்கங்களுக்கு மாணவஉகள் மற்றும் ஆளணி ஆகியோரை பரிமாறிக் கொள்வதற்கு சிறீலங்காவோ அல்லது வெளிநாடொன்றோ அவர்களுடைய நிறுவகத்தை முழுமையாகவோ அன்றி பகுதியாகவோ ஒத்ததாக செயல்

1985 ஆம் ஆண்டின் தேசிய கல்வி நிறுவக சட்டம் (இல. 1985 இன் 28 ஆம் இலக்கம்) 3 ஆம் பிரிவு நிறுவகத்தின் செயல் நோக்கம் இவ்வாறுதான் இருக்கவேண்டும் என்பதாகச் சொல்கின்றது.

3. நிறுவகத்தின் செயல் நோக்கம் கல்வி மேம்பாட்டினை ஊக்குவிப்பதாக இருப்பதோடு குறிப்பாக

a) இலங்கையில் கல்வியை மேம்படுத்துவதற்கு அமைச்சருக்கு அவருடைய திட்டங்கள், நிகழ்ச்சி நிரல்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் ஆலோசனை வழங்குதல்.
b) பட்டப்பின் படிப்பு கல்வியின் பல்வேறு சிறப்புத்துறைகளைக் கற்பதற்கான ஊக்கமளிப்பை வழங்குதல்.
c) செயலாக்கம், இலக்கு, கட்டமைப்பு, உள்ளடக்கம், மற்றும் செயற்பாடு முறையியல், சமூக, பொருளாதார மற்றும் கல்வியின் வெவ்வேறு கோணங்கள் என்பன உள்ளடங்கலாக கல்வி முறைமை தொடர்பிலான கற்கையை ஊக்குவித்து நடாத்துதல்.
d) கல்வித் தேவைகளுக்காக தொழினுட்பவியலுடன் ஒத்துப்போதல் உள்ளடங்கலாக கல்வி முறைமையில் புதுமையான வழக்கங்களை தொடக்கி வைத்து அவற்றை மேம்படுத்துதல்.
e) கல்வி முறைமையில் உள்ள ஆளணியினரின் தொழில்சார் மற்றும் பொது தேர்ச்சிகளின் விருத்தியை வழங்குதல்.
f) கல்வியில் சிறப்பு நிபுணர்களின் சேவைகளை அரச மற்றும் ஏனைய அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களுக்குக் கிடைக்கும்படி செய்தல்.
g) அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல்களை செயற்படுத்துதல் அத்துடன்
h) ஒரே விதமான குறிக்கோள்களையுடைய ஏனைய நிறுவகங்களை ஒருங்கிணைத்து ஒழுங்குபடுத்தி செயற்படச் செய்தல்.

**தமிழ் மொழி மூல கல்வி நிறுவகத்தின் (ITME) குறிக்கோள்கள் தேசிய கல்வி நிறுவகத்தின் (NIE) குறிக்கோள்களோடு இசைவிணக்கமுள்ளதாக இருக்கும்**

மறுபக்கத்திலே பிரதி செய்யப்பட்டுள்ள மறுசீராய்வு மற்றும் மீள்பார்வை விளக்கப்படமானது தமிழ் மொழி மூல கல்வி நிறுவகத்தின் ITME இன் இயங்குமுறையை "நீலக்கிளைக்" கோட்டினால் சுருக்க வருணனை செய்கின்றது. ITME சுதந்திரமாக செயற்படலாம் ஆனாலும் அது தேசிய கல்வி நிறுவகத்துடன் ஒத்திசைவாகவும் ஒத்துழைப்போடும் செயற்படுவதுதான் மிகச் சிறந்தது. தமிழ் மொழி மூல கல்வி நிறுவகமும் தேசிய கல்வி நிறுவகமும் உடனடியாகவே ஒன்றுக்கொன்று ஒத்துழைப்போடு செயற்படக் கூடிய சில விடயப்பரப்புக்களாவன:

தேசிய கல்வி நிறுவகத்தின் பாடசாலைகளுக்கான திறந்த நிகழ்ச்சித் திட்டம்.

இணையக்கற்கைப் பாடத் தயார்ப்படுத்தல்கள்.

உள சமூகநலன் பேணுதலும் மற்றும் ஆசிரியர்களுக்கான வகுப்பறை முகாமைத்துவ கருத்தாலோசனைகளும்

தமிழ் ஆசிரியர்களை சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் தமிழ் மொழியைக் கற்பிப்பதற்குத் தயார்ப்படுத்தல்

சிங்கள ஆசிரியர்களை தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் சிங்கள மொழியைக் கற்பிப்பதற்கு தயார்ப்படுத்தல்

ஆய்வுகளை நடாத்துதலும் பகிர்ந்து கொள்ளுதலும்


தற்பொழுது இன்னமும் பாட நூல்கள் அறுதியிடப்படாமல் இருக்கும் தரம் 12 மற்றும் 13 உள்ளடங்கலாக எல்லா வகுப்புக்களுக்குமான பாட நூல்களை அல்லது இலத்திரனியல் புத்தகங்களை தயாரிப்பது

எல்லா வகுப்புக்களுக்குமான இலத்திரனியல் புத்தகங்களை வெளிக்கொணர்ந்து இலத்திரனியல் புத்தகங்களுக்கு மாறுதல் அவற்றை ஐப்பாட்டுக்கு (iPad) அல்லது Android tablet இல் தரவிறக்கம் செய்தல் மற்றும் அவற்றை ஆரம்பிப்பதற்காக எல்லா உயர்நிலைப் பாடசாலைகளுக்கும் விநியோகம் செய்தல். அச்சு பாடப் புத்தகங்களை தயார்செய்தல், களஞ்சியப்படுத்துதல், ஒவ்வொரு பாடசாலைக்கும் போக்குவரத்து வாகனங்களுடைய உதவியுடன் கொண்டு சென்று விநியோகித்தல், மீண்டும் களஞ்சியப்படுத்துதல் முடிவில் இற்றைப்படுத்துதல் என்பவற்றிற்கான செலவு இலத்திரனியல் புத்தக அணுகுமுறையை விட உயர்வானதாக இருக்கமாட்டாது. தவிர ஐபாட் (iPad) ஐ கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் பயன்படுத்தமுடியும்.

## முன்மொழியப்பட்ட ITME இன் பிரதான அம்சங்கள்

ITME இன் சுருக்கவிளக்கம் உரு 12.1 இல் கொடுக்கப்பட்டுள்ள உரு 12.2 முறைமையின் ஒழுங்கமைப்பு அட்டவணையின் வரைபு ஆகும்.

**உரு 12.1: முன்மொழியப்படும் ITME**




கல்வி நிறுவனத்தின் எல்லாக் கல்விப் பரப்புக்களிலேயும் பாடசாலையின் முறைமையிலேயும் அலுவலர்கள் மேம்பாடடைவதற்கு தமிழ் மொழி மூலக் கல்வி நிறுவகம் (ITME) உதவும். நாடளாவிய அளவில் தமிழ் மொழி மூலப் பாடசாலைகளிலும் மற்றைய கல்விசார் பிரிவுகளிலும் உள்ள அலுவலர்கள் எல்லோரையும் இது உள்ளடக்கும். அதுபோன்ற தமிழ் மொழி மூல அலுவலர் அணியொன்று பாடத்திட்டங்கள், கற்பித்தல் முறைமைகள் அத்தோடு புதிய கல்வித் தொழினுட்பங்களை பிரயோகித்து கற்பித்தல் உபகரணங்களை உருவாக்குதல் போன்றவற்றின் மேம்பாட்டில் நேரடியாகவே பங்களிப்புச் செய்வார்கள். அவர்கள் மேலும் பொருத்தமான அனுபவக் கற்கை சார்ந்த செயற்பாடுகளை தமிழ் மொழியில் தயாரிக்கக் கூடியவரகளாக இருப்பார்கள்.

தமிழ் மொழி மூல கல்வி நிறுவகம் (ITME) தமிழ் மொழிமூல ஆசிரியர்களுக்கான கல்வி, பாடவிதானம், கற்பித்தல் உபகரணங்கள், கணனி கற்கை, காணொளிப்பட மேம்பாடு, விஞ்ஞான கணித கல்வி நிலையங்கள், இயற்கை நிலையங்கள் என்பவற்றின் நிலையமாக அமையலாம். இயற்கை நிலையங்கள் வன்னி, தொண்டமானாறு போன்ற இடங்களில் அமையலாம். அல்லது யானை, பறவைகள் சரணாலயமாக அமையலாம்.


தமிழ் மொழி மூல கல்விநிறுவகம் (ITME) இலத்திரனியல் திட்டமிடல் தரவுத்தளத்தையும் ஆய்வு மற்றும் வெளியிட்டுப் பிரிவையும் ஏற்பாடு செய்யும். முன்வைக்கப்பட்டுள்ள இலத்திரனியல் திட்டமிடல் தரவுதளம் ஆய்வு மற்றும் வெளியீட்டு பிரிவு ITME இன் பகுதியாக அமைவதோடு

நாளாந்த அடிப்படையில் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளின் கூட்டிணைவுடன் ஆங்கில மற்றும் தமிழ் மொழி மூலத்தில் நேரடியாக தமது தொழிற்பாட்டினை ஆற்றலாம்.

ITME பாடசாலை முறைமை மற்றும் நிறுவகங்களின் கல்வி பரப்புகள் என்பவற்றில் அலுவலர் மேம்பாட்டிற்கு உதவி வழங்கும். இது அனைத்து தமிழ் மொழி மூல பாடசாலைகள் மற்றும் சிறீலங்காவில் உள்ள ஏனைய அனைத்து கல்வித்துறைகளையும் உள்ளடக்கும்

தமிழ் மொழி மூல கல்வி நிறுவகத்தின் (ITME) உள்ளே இணையக்கற்கை பாடங்கள் உருவாக்கப்படுவதற்கான நிலையம் ஒன்றும் தமிழில் காணொளி பாடங்களை நேரடியாக ஒளிபரப்பும் பிரிவும் நிறுவப்படும். அத்துடன் தமிழ் மொழி மூல கல்வி நிறுவகம் (ITME) ஒவ்வொரு வலயத்திலும் உள்ள (வடக்குக் கிழக்கில்) ஆசிரிய வள நிலையங்கள் (TRC) மத்திய அரசு அது போன்றே மலைநாட்டில் உள்ள தமிழ் மொழி மூல பாடசாலைகள் உள்ளடங்கலாக ஏனைய மாகாணங்களுடன் ஒருங்கிணைத்து உள்ளக சேவைக்கால பயிற்சி நெறியினையும் செயலமர்வுகளையும் தமிழ் மொழி மூல ஆசிரியர்களுக்கு வழங்குவதற்காக உருவாக்கி அவற்றை நிர்வகித்தும் வரும்.

**Figure 12.2: Organisation Chart of the ITME**




Organization Chart of Tamil Medium Institute of Education from Director to Deans, Associate Deans and Head of Academic Departments

தமிழ் மொழி மூல கல்வி நிறுவகம் (ITME) பல்கலைக்கழகவளாகம் ஒன்றினை உருவாக்குவதற்காக தமிழ் மொழி மூல கல்விக் கல்லூரிகளை ஒன்றிணைப்பதற்கான அடித்தளம் ஒன்றினை அமைக்கலாம். அது மாணவர்களை முன்பள்ளி, ஆரம்ப, இடைநிலை, உடற்கல்வி,

விசேட கல்வி, ஆலோசனையும் வழிகாட்டலும் என்பவற்றில் B.Ed இற்கு தயார்ப்படுத்தல் செய்யும். ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் படிப்படியாக மூடப்பட வேண்டும். அல்லது கல்வியியற் காரணங்களினால் சாத்தியமில்லாத போது கல்விக் கல்லூரிகளுடன் ஒன்றிணைக்கப்படும்.

ITME ஆனது கணித பாடக் கற்பித்தல் துணைச்சாதனங்களைத் தயாரித்தல், கொள்வனவு செய்தல், மற்றும் ஆய்வு கூடப்பொருட்களை பெற்றுக்கொள்ளல், விநியோகித்தல் என்பவற்றிற்குரிய வள நிலையமாக இருக்கக்கூடியதும் கற்றல், கற்பித்தல் பொருட்களை தயாரிப்பதற்கு அவசியமாகத் தேவையானதுமான விஞ்ஞானம் மற்றும் கணிதக் கல்வி நிலையம் ஒன்றினை நடாத்தலாம்.

பிள்ளைகளின் ஆக்கத் துறைகளை தூண்டுவதனை நோக்கமாகக் கொண்ட, கற்றலுக்கு ஓர் அனுபவ அடிப்படையிலான கற்றல் சந்தர்ப்ப அணுகுமுறையை வழங்குவது ITME இனதும் அதன் கொள்கைப் பிரகடனத்தினதும் பிரதான நோக்கமாகும். ஆகவே அவர்கள் 21 ஆம் நூற்றாண்டில் எதிர்கொள்ளப்போகும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நன்கு தயார்ப்படுத்தப்படுவார்கள்.

மாணவர் மையக் கற்கையும் கணிப்பீடும் மற்றும் வளர்ச்சியும் தமிழ் மொழி மூல கல்வி நிறுவகத்தின் (ITME) அடிப்படைக் குறிக்கோள் ஆகும். பிரதான பங்காளர்களாக இந்தக் குறிக்கோள்களை எய்துபவர்கள் ஆசிரியர்களும் அதிபர்களும் குறைந்தளவிலே குறைபாடுகளை உடைய பாடசாலைகள். அதாவது பொருத்தமான பாடத் திட்டங்களையும் மேலதிக பாடவிதான செயற்பாடுகளையும் கொண்ட பாடசாலைகளும் ஆகும். மேலுள்ள விளக்கப்படத்தில் பச்சைக் கோடிட்டு இம் முறைமையின் சில பிரிவுகள் காட்டப்பட்டுள்ளன.

ITME நிறுவகம் ஆசிரியர்களின் தேர்ச்சி மட்டங்களை ஊக்குவித்து உயர்த்துகிறது. எனவே அவர்களும் சவால்களை அதாவது வட மாகாணத்தின் துரிதமாக நவீனத்துவம் அடைந்து கொண்டிருக்கும் சூழலிலும் புதிய வகுப்பறைகளிலும் முகம் கொடுக்கும் சவால்களை சந்திக்க முடியும்.

## சிபார்சு

1. தேசிய கல்வி நிறுவகத்துடனும் (NIE) தமிழ் மொழி மூல கல்வி நிறுவகத்துடனும் (ITME) கூட்டுறவாகவும் ஒத்திசைவாகவும் செயற்குழு ஒன்றை நிறுவுக. தமிழ் மொழி மூல கல்வி நிறுவகத்தின் (ITME) செயற்குழுவில் NESR இல் இருந்து கல்வியமைச்சினால் தெரிவு செய்யப்பட்ட மூன்று பிரதிநிதிகளும் கல்வி அமைச்சில் இருந்து 3 பிரதிநிதிகளும், வடக்கு, கிழக்கு மாகாண சபைகளின் கல்வியமைச்சின் அனுபவம் வாய்ந்த மூத்த பிரதிநிதிகளும் வடக்கு கிழக்கில் இருக்கும் நான்கு கல்விக் கல்லூரிகளும் கிழக்குப் பல்கலைக்கழகமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் தேசிய கல்வி நிறுவகமும் (NIE) வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே இருக்கும் தமிழ் மொழி மூல பாடசாலைகளின் பிரதிநிதிகள் பிரதிநிதிகளாக இருப்பர்.
2. ITME செயற்குழுவினுடைய மேற்கோள் வாசகம், வரைவு ஒழுங்கமைப்பு அட்டவணை மற்றும் 2014 டிசம்பர் மாதம் முடிவடைவதற்கு முன்னர் அதாவது 2015 ஆம் ஆண்டு ITME நிறுவப்படுவதற்கு முன்னதாக செயற்றிட்ட பிரேரணை ஒன்றினை முன்வைத்தல் என்பவற்றை உள்ளடக்கி இருப்பதுடன் மேலுள்ள திட்ட முன்மொழிவுகளையும் கருத்திற் கொள்ள வேண்டும்
3. தமிழ் மொழி மூல கல்வி நிறுவகம் (ITME) நிறுவப்படும் வரை தற்போது தனித்தனியாக இயங்கிக் கொண்டிருக்கும் எல்லாப் பிரிவுகளும் அவைகள் முன்னர் செய்தது போலவே தொடர்வதுடன் தமது திட்டங்களையும் செயற்பாடுகளையும் தமிழ்மொழி மூல கல்வி நிறுவகம் (ITME) அங்கீகரிக்கப்படும் வரை மாற்றக்கூடாது.



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி – ஸ்தாபிதம் 1816

# 13: வடமாகாணத்திற்கான ஒரு புதிய கல்வி நிர்வாக முறைமை

கொழும்பிலுள்ள நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் இன்னமும் ஆசிரியர்கள் கல்விசாரா ஊழியர்கள் ஆகியோரின் இட ஒதுக்கீட்டின் மீது பாரிய அளவிலான கட்டுப்பாடுகளை வைத்திருக்கின்றது. ஆசிரியர்களை நியமனம் செய்யவோ அல்லது புதிய பதவி நிலைகளை உருவாக்கவோ அதனுடைய அனுமதி தேவையாகவே உள்ளது.

**கல்வியில் பங்குபற்றுதல் செயன் முறைக்கு வழியமைத்தல்.**

முன்வைக்கப்பட்டுள்ள நிர்வாக முறைமையானது கல்வி முறைமையில் இருந்து கொண்டிருக்கக் கூடிய பிரச்சினைகளைக் குறைக்க அல்லது நீக்க வரையப்பட்டதாகும். அதாவது மாகாண அமைச்சு மற்றும் கல்வி நிர்வாகம் என்பனவற்றின் பொறுப்புக்களை அமுலாக்கம் செய்வதில் சிக்கலான தன்மையும் மத்தியில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுதலும் இருந்து கொண்டிருக்கின்றமையாலேயாகும். இந்த முன்மொழிவுகளின் நோக்கம் மத்திய கல்வி அமைச்சின் அல்லது மாகாண அமைச்சின் அதிகாரங்களை அதீதமாக கைப்பற்றிக் கொள்வதற்காக அல்ல. ஆனாலும் பிள்ளைகளின் கல்வி சம்பந்தப்பட்ட விடயங்களிலும் விசேடமாக முன்னைய அத்தியாயங்களில் கலந்துரையாடப்பட்ட காரணங்களுக்காக வடக்கில் தீர்மானங்களை மேற்கொள்ளும் பொறுப்புக்களை முறையாக மாகாண மற்றும் வலய நிர்வாகங்களுக்கு மாற்றிக் கொள்வதற்காகவேயாகும்.

கல்வியில் ஜனநாயக ரீதியில் தீர்மானம் மேற்கொள்ளும் முறையை ஊக்குவித்தல்.

இந்த முறைமையை மென்மேலும் வினைத்திறன் மிக்கதாய் ஆக்குவதன் பொருட்டு அந்த விடயங்களில் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களும் தீர்மானங்களை மேற்கொள்வதில் பங்குகொள்ளச் செய்வதை ஊக்குவிப்பதையும் அவர்களுடைய உரிமை உணர்வை உருவாக்கிக் கொள்வதையும் அத்துடன் உள்ளகத்திலேயே சிறுவர்களின் கல்வியை மேற்பார்வை செய்வதையும் வசதி செய்வதையும் கருத்திற் கொண்டே இந்த முன்மொழிவு வரையப்பட்டது. இவை அனைத்தும் வடமாகாணத்தில் வழங்கப்படும் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் உயரிய இலக்கினை நோக்கி மேற்கொள்ளப்பட்டவையாகும். அண்மையான மேற்பார்வையும் வலயமட்டத்தில் தீர்மானங்களை மேற்கொள்வோருடன் தொடர்பு கொள்ளக் கூடியதாயிருத்தல் என்பன வலய மற்றும் மாகாண மட்டத்தில் கல்வி நிர்வாக முறைமையின் வினைத்திறன் மிக்க முகாமைத்துவம் ஒன்றுக்கும் மேற்பார்வைக்கும் இட்டுச் செல்லும். தற்போது வடக்கிலும் மற்றும் அனேகமாக ஏனைய மாகாணங்களிலும் உள்ள பங்குதாரர்களிடம் தமது பிள்ளைகளின் கல்வி தொடர்பான முக்கிய அம்சங்கள் எதுவும் சொல்வதாக இல்லை. முன்மொழியப்பட்ட வடமாகாண கல்வி முறைமை அமைப்பானது ஏனைய மாகாணங்களும் வடக்குப் போன்றே சங்கடமான நிலையிலிருந்தால் அவர்களும் இதனை ஏற்றுக் கடைப்பிடிக்க முடியும்.

முன்மொழியப்பட்ட நிருவாக முறைமையானது 1880 களிலிருந்து வரும் நடைமுறையில் ஒரு சில மாற்றங்களை மட்டும் கொண்ட அதனுடைய ஒரு பரிமாண வளர்ச்சியாகும். பரிந்துரைக்கப்பட்ட மாற்றங்கள் இலங்கையின் வடக்கிலும் அத்துடன் சர்வதேச ரீதியிலும் கல்வி தொடர்பில் ஏற்படக் கூடிய மாற்றங்களுக்கு பதிலளிக்க வேண்டிய அவசியமுள்ளவையாக இருக்கின்றன. குறிப்பாக கல்விச் சிந்தனை மற்றும் தொழினுட்பம் (உரு. வரைப்படம் 13.1) ''வலய மட்ட நிருவாகத்துக்கு முடிவுகள் எடுக்கும் வகையான அதிகாரப் பரவலாக்கம்'' இந்த முறைமையை படவரைபு மூலமாக குறிப்புக்களுடன் பொருத்தமாக பெட்டிகளில் விளக்குகின்றது.

ஒரு மாகாணத்திலும் அதன் வலயங்களிலும் வசிப்பவர்கள் அதனுடைய மாகாண மற்றும் வலய மாவட்ட கல்வி முறைமை எப்படி இயங்குகின்றது என்பதனைப் பற்றி சொல்ல வேண்டிய அவசியம் ஆகும். முன்மொழியப்பட்ட மாகாண மற்றும் வலய மாவட்ட சபைகள், மாணவர்,

வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கௌரவ த.குருகுலராஜா அவர்கள் உலக உணவுத்திட்ட பிரதிநிதிகளுடன் தரிசிப்பு மேற்கொள்ளல்



ஆசிரியர்கள், அதிபர்கள், பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவ மாணவிகள் சங்கங்கள் (முன்னாள் மாணவர்களின் சங்கங்கள்) போன்றவற்றின் பிரதிநிதிகளைக் கொண்டதாக இருக்கும். அவர்களுடைய பிரதிநிதிகள் முடிவுகள் எடுக்கும் வாய்ப்பும் அவற்றைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பும் வழங்கப் படுமேயானால் அது அவர் களுடைய வலய எல்லைகளுக்குள் உள்ள பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேம்படுத்தும்.

நியமிக்கப்பட்ட வலயப் பணிப்பாளர்கள், அதிபர்கள், பெற்றோரிடமிருந்து ஆலோசனை பெறப்படுதல் முறை என்றாலும் மத்திய அமைச்சு மற்றும் மாகாண கல்வி நிர்வாகிகள் தாமாகவே முடிவுகளை எடுக்கும் தற்போது நடைமுறை மற்றும் பாடசாலை சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்க்க முயற்சி செய்தல் என்பவை பல சிக்கல்களுக்கு இட்டுச்சென்றுள்ளன என்பதனை பங்குதாரர்கள் அவதானித்திருக்கிறார்கள். அத்துடன் அவை இணைப்பு 10.1 இல் சுருக்கமாக விபரிக்கப் பட்டுள்ளது.

முடிவெடுக்கும் முறைமை மாற்றத்திற்கான சிபாரிசு ஒரு விசேட குழுவைத் தேவையெனக் கொள்ளக்கூடிய அளவிலான ஒரு பெரிய மாற்றமாகும். கல்வி அமைச்சின் செயலாளர் கூறியது போல "புவி மையக்குழுக்கள்" விளைவுகளைக் கருத்திலெடுத்து செயற்பாட்டு முறை விபரங்களுடன் திட்டமிடல் பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் நடைமுறை மாறுதல் மற்றும் செயன்முறைகள் போன்றவற்றிற்குமாக தேவையாகவுள்ளது. ஆனாலும் இந்த ஆலோசனை 2014 இல் ஆரம்பிக்க வேண்டும். 2016 இல் நிறுவப்பட வேண்டும் என்றால்


## முன்மொழியப்பட்ட மாகாணத்துக்கான கல்வி முறைமையின் அமைப்பு

இணைப்பு I இல் வழங்கப்பட்டுள்ள கல்வி சார்ந்த பிரச்சினைகளைக் கருத்திற் கொள்ளுதல் மற்றும் அத்தியாயம் 2 இல் கலந்துரையாடப்பட்டவை, அத்துடன் ஒவ்வொரு குழுவினதும் அறிக்கைகளில் அவர்கள் எழுப்பியிருக்கும் கவலைகள் அத்துடன் பிரச்சினைகளை ஏற்படுத்திவிடும் அடிப்படைக் காரணிகளை பகுப்பாய்வு செய்தல் என்பவற்றினை கருத்திற் கொள்ளும் போது வடமாகாண கல்வி முறைமைக்கு தீர்மானமெடுத்தல், அமுலாக்கல் அத்துடன் மேற்பார்வை செய்தல் போன்றவற்றில் அடிப்படை மாற்றங்கள் தேவை. கீழே தரப்பட்டுள்ள சிபாரிசுகள் முன்மொழியப்பட்ட மாகாணத்துக்கான புதிய கல்வி முறைமையின் அமைப்பினையும் அழுத்தம் கொடுக்கும் பிரச்சினைகளை கதைப்பதற்கு உடனடியாகவும் குறுகிய காலத்திலும் என்ன மாற்றங்கள் பரிகாரங்கள் தேவை என்பதனையும் குறிப்புக்களுடன் விளக்குகின்றது. ஒட்டு மொத்தப் முழுப்பார்வைக்குமாக உரு. வரைபடம் 10.1 இல் முன்மொழியப்பட்ட மாற்றங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன.

மாற்றம் என்பது முடிவுகள் எடுக்கும் அதிகாரப் பரவலாக்கத்தின் நடைமுறைகள். இது விசாலமான பாடத்திட்டம் மற்றும் பரீட்சைகள் சம்பந்தப்பட்ட தேசிய விடயங்கள் தவிர்த்து கல்வி அமைச்சிடமிருந்து மாகாணக் கல்வி அமைச்சுக்கு மாகாண நிர்வாகத்திடமிருந்து வலய நிர்வாகத்தினருக்கு பின்னர் பாடசாலைகளுக்கும் மிகவும் முக்கியமாக பிள்ளைகளுக்கும்/ பெற்றோர்களுக்கும் மற்றும் அவர்களுடைய சமூகங்களுக்கும் என முறையே சென்று சேரும். இது நிறுவனத்துக்கும் அதிகாரத்துக்கும் அத்துடன் பொறுப்புக்களுக்கும் இடையே தொடர்புகள் உள்ளதைக் காட்டுகிறது. இது மேலும் வலயக் கல்வி நிர்வாகத்தை ஆளுகைக்குள் கொண்டிருக்கும் வலயக் கல்விச் சபையினுடைய கட்டமைவு முறையையும் உள்ளடக்கும்.

## சிபார்சுகள்

Figure 13.1: Proposed Organization of the Northern Province Schools Administration System




1. முன்மொழியப்பட்ட வட மாகாணக் கல்வி இயக்குநர் நிர்வாக வாரியம் செயலாளர், மாகாண கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், ஒரு அதிபர்கள் பிரதிநிதி, ஒரு ஆசிரியர்கள் பிரதிநிதி, ஒரு மாணவர்கள் பிரதிநிதி (17 வயதுக்கு மேற்பட்ட இருபாலாரிலும்) வர்த்தகர்கள் சபையிலிருந்து ஒரு பிரதிநிதி, சட்டத் துறையினரிலிருந்து ஒரு பிரதிநிதி, வங்கித்துறையிலிருந்து ஒரு பிரதிநிதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரிவுத் தலைவர்களிலிருந்து ஒரு பிரதிநிதி, ஒவ்வொரு கல்விக் கல்லூரிகளிலிருந்தும் ஒரு பிரதிநிதி, மற்றும் மருத்துவத் தொழிற்றுறையினரிலிருந்து ஒரு பிரதிநிதி, அரசினாலோ அன்றி மாகாண அரசினாலோ அல்லது பாராளுமன்றினாலோ தெரிவு செய்யப்பட்ட எந்த அங்கத்தவரும் இல்லாததாக ஒரு கூட்டமைவான உத்தேச வட மாகாண கல்விச் சபை (BNPDE) கொண்டிருக்க வேண்டும்.

மாதாந்த சபைக் கூட்டத்தில் "பிரஜைகள் நேரம்" ஒதுக்கப்பட்டு மக்களின் கருத்துக்களிற்கும் வினாக்கள் எழுப்பச் சந்தர்ப்பமும் வழங்கப்படல் வேண்டும்.

2. பாடவிதானம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் தேசிய மற்றும் மாகாண பரீட்சைகள், பாடசாலைகள், மாணவர்கள் என்போரிடையே சமத்துவம் குழந்தையை மையப்படுத்திய கல்வி அனைத்து ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் சம்பந்தமான பொதுவான விவகாரங்கள் மாகாணங்களுக்கான ஆசிரியர்கள், ஊழியர்களின் ஓய்வு ஊதியம் மற்றும் கல்வி தொடர்பாக கல்வி அமைச்சினால் ஆக்கப்படும் வெளியீடுகளுக்கும் கல்வியமைச்சே பொறுப்பாகவிருக்கும். ஓராண்டு, மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டுகளுக்கான திட்டங்களைத் தயாரித்தல், பிரத்தியேக வேலைத் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்தல் அனைத்துப் பாடசாலைகளிலும் சமத்துவமான கல்வித் தரத்தை எட்டவும் கற்றல் கற்பித்தலின் தரத்தை அனைத்துப் பாடசாலைகளிலும் சமனிலையில் பேணுவதற்கும் சமமான நிதி ஒதுக்கீட்டையும் அத்துடன் பாடசாலை வேளைகளிலே பாடசாலை நிகழ்ச்சிகளின் போதான பாதுகாப்பு உள்ளடங்கலாக பாடசாலையினதும் பாடசாலை சார்ந்த அனைத்து அங்கத்தவரினதும் பாதுகாப்பும் நிச்சயப்படுத்திக் கொள்ளுதல். இலங்கைப் போக்குவரத்துச் சபை CTB மற்றும் ZSBகளினுடைய ஒத்துழைப்போடு பாடசாலைக்கான போக்குவரவு முறைமை ஒன்றினையும் வழங்குங்கள்.
3. வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் வட மாகாண கல்வி இயக்குநர் நிர்வாக வாரியத்தின் ஒரு உறுப்பினராக இருப்பார். அத்துடன் அவர் உத்தேச வடமாகாண கல்வி இயக்குநர் நிர்வாக வாரியத்தினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை அமுலாக்கம் செய்வார்.
4. மாகாணப் பணிப்பாளர் பதவி நிலையானது. ஒரு குறிப்பிட்ட ஆண்டுக் கணக்கில் புதுப்பிக்கக் கூடியதான ஒப்பந்த அடிப்படையில் உத்தேச வடமாகாண கல்வி இயக்குநர் நிர்வாக வாரியத்தினால் நியமிக்கப்படும்.

## வலயக் கல்விச் சபை (ZBE)

1. வலயக் கல்விச் சபையின் அரைவாசி உறுப்பினர்கள் வலய, மாவட்ட வாக்களிப்பாளர்களால் தெரிவு செய்யப்படுவர். அத்துடன் ஏனைய அரைப் பங்கினர் வட மாகாண கல்வி அமைச்சினால் சிறந்த தொழில்சார் வல்லுநர்களிலிருந்து (வணிக சமூகத்திலிருந்தும், வழக்கறிஞர்கள், கல்வியாளர்கள், மருத்துவம், பொறியியல், கணிதம் அல்லது ஏனைய தொழில் நிலைகளிலிருந்தும்) வலயத்துக்கு உட்பட்டு தெரிவு செய்யப்படுவர். பாடசாலை வகை 3, 2, IC மற்றும் IAB பாடசாலைகளிலிருந்து அதிபர்கள் தரப்பிலிருந்து பிரதிநிதிகள், மாணவர்கள், ECDE அதிபர்கள், விசேட கல்வி தொடக்க மற்றும் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள், கல்வி நிலையங்களில் தொடர்ந்து பணி செய்து கொண்டிருக்கும் அதிபர்களும் மற்றும், பெற்றோர்களும் நியமிக்கப்படுவர். ஆண், பெண் இருபாலாருடைய எண்ணிக்கையளவு ZBE இற்கான அங்கத்தவர் தெரிவு செய்தலில் சமனிலையில் பேணப்படும்.
2. இரகசிய வாக்கெடுப்பு மூலமாக ZBE அதற்கான தலைவரைத் தேர்வு செய்யும்.
3. வலயக் கல்விப் பணிப்பாளர் ZBE இன் ஒரு உறுப்பினராவார். அத்துடன் அவர் ZBE இன் கூட்டங்களின் போது சமுகமளிப்பார். மாகாணப் பணிப்பாளரும் (PD) ZBE இன் ஒரு உறுப்பினர் ஆவார். வலயத்துக்கு இடையேயான பிரச்சினைகள் தொடர்புடைய நிகழ்ச்சி நிரல் ஒன்றுடன் அது தொடர்புடையதாக இருக்கின்றபோது மாகாணப் பணிப்பாளருடைய பிரதிநிதி எப்போதும் ZBE இன் ஒவ்வொரு கூட்டத்திலும் கலந்து கொள்ள வேண்டும். முதல் மணித்தியாலக் கூட்டம் வலயத்துக்குட்பட்டு வாழ்பவர்களுடையதாக இருக்கும். அது அவர்களிடமிருந்து விடயங்களை அறிந்து கொள்வதற்காகவும் அவர்களுடைய வினாக்களுக்கு விடைகள் பகிர்வதற்காகவுமாக அமையும். விடைகள் குறிப்பிட்ட கால எல்லைக்குள் எழுத்து மூலமாக கூட்டத்துக்கு முன்னதாக அல்லது அடுத்த கூட்டத்துக்கு முன்னதாக பரிமாறப்பட்டுவிடும்.

## வலய கல்விப் பணிப்பாளர் (ZDE)

1. வலயக் கல்விப் பணிப்பாளர் பதவி நிலை வலயக் கல்விச் சபையால் ஒரு குறிப்பிட்ட காலத்தில் புதுப்பிக்கக் கூடியதான ஒப்பந்த அடிப்படையில் விளம்பரப்படுத்தி தகுதியடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்படுவதாகும்.
2. வலயக் கல்விப் பணிப்பாளர் வலயக் கல்விச் சபை மேற்கொள்ளும் அனைத்து தீர்மானங்களையும் அமுல் செய்வார்.

## அதிபர், ஆசிரியர்கள், நிருவாக உத்தியோகத்தர் அத்துடன் ஏனைய அலுவலர்களும்

1. அனைத்துப் பதவிகளும் வலயக் கல்விச் சபையின் தேவையைப் பொறுத்து தரத்தின் அடிப்படையில் விளம்பரப்படுத்தப்பட்டு நியமிக்கப்படும்.
2. வலயக் கல்விச் சபைக்கு ஆவணப்படுத்தப்பட்ட கனதியான காரணங்களின் அடிப்படையில் பணி நீக்கம் செய்யவும் அதேநேரம் விலகல் கடிதங்களை ஏற்றுக் கொள்ளவும் அதிகாரம் கொண்டிருக்கும்.
3. அனைத்து அலுவலர்களும் பாடசாலைக்குப் பாடசாலை தத்தமது நலன்களை முன்னெடுத்துச் செல்லல் மற்றும் ஓய்வு ஊதியம் என்பனவற்றில் மாகாணக் கல்வி அமைச்சு பொறுப்பாக இருக்கும்.
4. பணிநிலை வெற்றிடங்கள் அறிவிக்கப்படுவதற்கு முன்பதாகவே முன் அனுமதியளிக்கப்பட்ட அடிப்படைகளில் சேவைகளின் நிபந்தனைகள் பணியாளர்களுக்குப் பணியாளர் வேறுபடலாம்.

> **"lifetime is a child at play, moving pieces in a game. Kingship belong to the child."**
>
> - Heraclitus 450 - 500 BCE
>
> As quoted in the Art and Thought of Hereclitus (1979) translated by Chrles H. Kahn

## சிபார்சுகள்

1. வடக்கில் நிலையான முடிவெடுக்கும் கல்வி முறைமையை நிறுவுதலைக் கருத்தில் கொண்டு ஒரு குவி மையக் குழுவொன்றை நிறுவுக.
2. இந்த குவி மையக் குழு மூன்று அங்கத்தவர்களை, NESR இலிருந்து உள்வாங்கி அவர்களை உள்ளடக்கியதாகவும் மூன்று அங்கத்தவர்களை கல்வி அமைச்சிலிருந்தும் இரண்டு அங்கத்தவர்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்தும் கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்தும் NIE இலிருந்தும், ஒரு அங்கத்தவர் தேசிய கல்வி ஆணைக்குழுவிலிருந்தும் வடமாகாண கல்விப் பணிப்பாளர் ஐந்து மாவட்டங்களின் கிராமிய மற்றும் கரையோர பிரதேசங்களிலிருந்து ஐந்து வடமாகாண வலய பணிப்பாளர்களையும் வட மாகாணத்தின் மாவட்டங்களிலிருந்து மூன்று தகுதி வாய்ந்த ஓய்வு பெற்ற அதிபர்களையும், ஐந்து மாவட்டங்களில் கிராமிய மற்றும் கரையோர பிரதேசங்களில் சேவையாற்றிக் கொண்டிருக்கும் ஐந்து அதிபர்களையும் ஒரு பட்டயக் கணக்காளரையும் ஒரு பொறியியலாளரையும் வட மாகாண வர்த்தகர் அமைப்பிலிருந்து ஒரு பிரதிநிதியையும் வட மாகாண, மாவட்டகளிலிருந்து கிராமிய சமூகத்திலிருந்து ஐந்து பெற்றோர்களையும் உள்ளடக்கி இருக்கவேண்டும்.
3. குழுவின் குறிப்பு விதிமுறைகள் வடமாகாண புதிய கல்வி நிர்வாக முறைமையினை நிறுவுவதற்கான முன்மொழிவை மீளாய்வு செய்தல் மற்றும் தமது தீர்மானங்கள் அமுலாக்கத்துக்கான ஆவணங்களைத் தயார்ப்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்.

தொடர்ச்சியான கல்விக்குரிய குழு



ஆலோசனைப் பட்டறையின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டவர்கள்.





NESR
ஆலோசனைப் பட்டறை
நாள் –1 இல் ஆரம்ப
நிகழ்வில்
பங்குபற்றியோர்.

# 14: அமுலாக்கல் செயன்முறை, கால எல்லை மற்றும் பொறுப்பு

## அறிமுகம்

வட மாகாணக் கல்வி அமைச்சர் கௌரவ த.குருகுலராஜா அவர்களின் தலைமையில் 12.04.2014 அன்று வழிகாட்டற்குழுவின் இறுதிக்கூட்டம் இடம்பெற்றது. இந்த வழிகாட்டற்குழுவை பிரதிநிதித்துவம் செய்து 10 குழுத்தலைவர்களும் 12 வலயப்பணிப்பாளர்களும் அவர்களது பிரதித்திட்டமிடல் அலுவலர்கள், திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி அலுவலர்கள், கணக்காளர்கள், கல்வி அமைச்சின் பாடசாலை வேலைத்திட்ட பணிப்பாளர், மாகாணப் பணிப்பாளர், கல்விச் செயலாளர் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்

முன்வைக்கப்பட்ட சிபாரிசுகள் யாவும் கூடியிருந்த சபையோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. வழிகாட்டற்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டு சித்திரை மாதம் 23ஆம் மற்றும் 24ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட ஆலோசனைச் செயலமர்விற்கு மேற்கூறிய சிபாரிசுகள் உள்ளடங்கலாக பூர்வாங்க சிபாரிசு வரைவு ஒன்று எழுத்து வடிவில் சமர்ப்பிக்கப்பட்டது. தமிழ் மொழிக் கல்வியின் வரலாறு பற்றிய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை வடக்கு மாகாண முதலமைச்சர் கௌரவ சி.வி.விக்னேஸ்வரன் முன்வைத்தார். இலங்கையின் கடந்த மற்றும் தற்காலத்தில் கல்வி மேம்பாட்டில் அடையப்பட்ட முக்கிய மைல் கற்களை கல்வி அமைச்சர் கௌரவ பந்துல குணவர்த்தன கோடிட்டு காட்டியிருந்தார். குறிப்பாக நாட்டின் தென்பகுதியில் எழுபது எண்பதுகளில் இடம்பெற்ற தேசிய பொதுப்பரீட்சைகளை அவர் விமர்சித்தார். அத்தோடு பெரும்பாலான மாணவர்கள் அப்பரீட்சையில் சித்தியெய்தத் தவறியிருந்தனர் (இந் நிலைமையானது வடக்கிற்கும் கிழக்கிற்கும் பொருந்தும்) மேற்கூறிய கருத்துக்கள் ஆலோசனைகள் மற்றும் விமர்சனங்கள் சிபார்சுகளின் வரைவு தயாரிக்கும் போது கருத்தில் கொள்ளப்பட்டன.


**"எல்லா சிபாரிசுகளும் மாணவர்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போதைய சந்ததியினருக்கு இந்தச் சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் நன்றாக அமையும் இல்லையெனில் அடுத்த சந்ததியினரின் நலனுக்காக இச்சிபாரிசுகள் அமுல்படுத்தப்பட வேண்டும்."**

ரி.செந்தூரன். ஆண்டு 12. யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர். (NESR ஆலோசனைச் செயலமர்வு 2014இல் பங்குபற்றுனர்களுக்கான மாணவனின் உரையிலிருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.)



வடமாகாண கல்விமுறைமையைப் பற்றிய நேரடி அனுபவமுள்ள மாணவர்கள், ஆசிரியாகள், பங்குதாரர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட சமர்ப்பிப்புகளை கவனத்தில் எடுத்துள்ள அதேவேளை வடமாகாண கல்வி அமைச்சர் கௌரவ த.குருகுலராஜா அவர்களின் அறிவுரைகளும் மற்றும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் அவர்களின் உறுதி மொழிகளும் மேலே காட்டப்பட்ட சிபாரிசுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**Figure 14.1: Implementation Timeline and Responsibility**




**Source: Developed by N. Ethirveerasingam**

## பரீட்சார்த்த செயற்திட்டம்

**வழிகாட்டற் குழுவின் இறுதிக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.**

1. ”உடனடியாக” என அடையாளமிடப்பட்ட சிபாரிசுகள் யாவும் கல்வி அமைச்சினாலும் மாகாண கல்வித் திணைக்களத்தாலும் நடைமுறைப்படுத்தப்படும். “குறுங்காலம்” “இடைத்தர காலம்” என அடையாளமிடப்பட்ட சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தப்படுவதற்கான திட்டவரைபுகளும் அதற்கு பொறுப்பான பிரிவுகளும் உடனடியாக ஆரம்பிக்கப்படும்.(14.1 உருவிளக்கப் படத்தை பார்க்கவும்)

2. வலயக் கல்விப் பணிப்பாளர்கள் சிபாரிசுகளை எவ்வாறு கல்வி அமைச்சர் மற்றும் செயலாளர், மாகாணக் கல்வித்திணைக்களம் போன்றோரின் உதவி ஒத்துழைப்புடன் தமக்குரிய வலயத்தில் அமுலாக்கம் செய்யத்திட்டமிட்டுள்ளனர் என்பது தொடர்பில் மே மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு வேண்டப்பட்டுள்ளனர். ஒவ்வொரு வகைப் பாடசாலையிலிருந்தும் ஒரு பாடசாலையை வகை 1AB, 1C, II மற்றும் III தமது வலயத்தில் இருந்து தெரிவு செய்து பரீட்சார்த்த திட்டமாக சிபார்சுகளை செயற்படுத்தும் வண்ணம் வலயக் பணிப்பாளர்கள் வேண்டப்பட்டுள்ளனர். எனவே மொத்தமாக வடமாகாணத்திலே 48 பாடசாலைகளில் சிபாரிசுகள் செயற்படுத்தப்படும். மாகாணத் திணைக்களத்தின் உள்ளீடுகள் தேவைப்பாடாத சிபாரிசுகளை செயற்படுத்துமாறும் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

3. கல்வி அமைச்சின் மற்றும் கல்விசார் நிறுவனங்கள், மாணவர்கள், அதிபர்கள், பல்கலைக்கழகங்கள், கல்வியியற் கல்லூரிகள் என்பவற்றின் பிரதிநிதிகளையும் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பிரதான கல்விசார் நிர்வாக அலுவலர்களையும் உள்ளடக்கியதாக குவிமையக் குழுக்கள் அமைந்திருக்கும். இந்த குவி மையக் குழுக்களின் பணிகளாவன.


   a. NESR அறிக்கையில் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளை இனம் கண்டு முன்னரிமையடிப்படையில் அவற்றை ஒழுங்குபடுத்துதல்.
   b. செயற்றிட்டங்களை உருவாக்கக் கூடியதும், நிதிவசதிகளை திரட்டக்கூடியதாக செயற்றிட்ட அமுலாக்க குழு ஒன்றை வடக்கு மாகாண கல்வி அமைச்சரின் கீழ் போதுமான நிதி வசதியுடன் உருவாக்குதல்.
   c. செயற்றிட்ட அமுலாக்கச் செயன்முறைகளை கண்காணித்தல்.
   d. கல்வி அமைச்சருக்கு காலாண்டு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.

4. “சிபாரிசுகள் அமுல்படுத்துதல் மற்றும் கண்காணித்தலுக்காக அமைச்சருக்கான ஆலோசனைக்குழு (RIMP)" ஒன்றை அமைக்குமாறு சபையிலே பரிந்துரைக்கப்பட்டது. அத்துடன் பின்வரும் மையக் குழுக்களைச் சேர்ந்த பிரதிநிதிகளை இவ் ஆலோசனைக் குழுவிற்கு நியமிக்குமாறும் அச்சபை வேண்டிக்கொண்டது.

   i. சமூக உள நலம் பேணுதல்.
   ii. கல்வி முகாமைவைத்துவ தகவல் முறைமை மற்றும் ஆராய்ச்சி மற்றும் பிரசுரம்.
   iii. நிர்வாகம், நியமனம் மற்றும் இடமாற்றம்.
   iv. கற்பித்தல் கற்றல் மற்றும் ஆசிரியர்களுக்கான கல்வி.
   v. விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி அபிவிருத்தி.
   vi. தொடர் மதிப்பீடும் மற்றும் தேசிய பரீட்சைகள்
   vii. தரம் 6 தொடக்கம் 13 வரைக்குமான மாணவர்கள் சொந்த பாவனையிலுள்ள ஐபாட் அன்ரொயிட்டில் உபயோகப்படுத்தப் பொருத்தமான இலத்திரனியல் பாடநூல்கள்.
   viii. தமிழ் மொழிமூலக் கற்கைக்கான நிறுவனம்.
   ix. புதிய கல்விசார் பாடசாலை முறைமையின் அமைப்பு.
   x. அலுவலர்களின் மேம்பாடு (உரு விளக்கம் 14.2 இல் பார்க்க அலுவலர்களின் பரிபூரணமான மேம்பாட்டுத் திட்டம் தேவைப்படுகின்ற பிரிவு பற்றி அறிய பார்க்கவும்.)

## வினைத்திறன் மிக்க திட்ட அமுலாக்கத்திற்கு ஆளணி அபிவிருத்திக்கான தேவைப்பாடு

**Figure 14.2: Areas and Level of Staff Development**




**Source: Designed by N. Ethirveerasingam**

கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை, தரவுத்தளம், ஆராய்ச்சிகளும் பிரசுரங்களும், கற்பித்தல், கற்றல், பரீட்சைகள், ஆரம்ப, இடைநிலை, உயர்நிலை கல்வி மட்ட ஆசிரியர்களுக்கான கல்வி, கல்விக்கான நிதி மற்றும் பாடசாலை நிர்வாக முறைமை போன்ற துறைகள் தொடர்பில் பிரதான சிபார்சுகள் சிலவற்றினை அமுலாக்குவதற்கு தற்போது நடைமுறைப்படுத்தப்படும் குறுகிய கால உள்ளக பயிற்சியிலும் பார்க்க மேலதிக பயிற்சியினூடாக பெற்றுக்கொள்ளக்கூடிய உயர்மட்டத் தேர்ச்சி ஒன்று தேவைப்படுகிறது.

தற்போது இம் முறைமையில் பல்வேறு இடங்களில் சேவையாற்றிக் கொண்டிருக்கின்ற அலுவலர்கள் அவர்களுக்குரிய அடுத்த உயர் தரத்தில் பணியாற்றக்கூடிய வாய்ப்பு உள்ளது. முப்பது வருட யுத்த காலப்பகுதியில் தற்போது உள்ள அலுவலர்களுக்கு அவர்களுக்குரிய அடுத்த தரத்திற்கான கல்விசார் தகைமை உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கவில்லை. தொடர்ச்சியான இடப்பெயர்வு தொடர்ந்து கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய தேவை மற்றும் இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் அவர்களை உயர்கல்விக்காக அனுப்ப முடியாத சூழ்நிலை போன்ற பல்வேறு காரணங்களை இந்த பின்னடைவுக்கு காரணமாகக் கூறலாம். அதிகார வரம்பின் உச்சியில் இருந்தோரும் இதே போன்ற கடினமான சூழ்நிலையில் இருந்தனர் மட்டுமன்றி தமது கல்வி சார்ந்த தேர்ச்சிகளை மெருகூட்டுவதற்கு தமது நேரத்தினை ஒதுக்கிக் கொள்ள முடியாதவர்களால் இவ்வதிகார மட்டத்தில் உள்ளவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டது. கல்வி முறைமையை மீளப் புனரமைப்பதிலும் மீளக்கட்டியெழுப்புவதிலுமே அவர்கள் தமது முழு நேரத்தையும் செலவிட்டுள்ளனர்.

## குறுங்கால நீண்டகால அலுவலர் மேம்பாட்டுச்செயன்முறை

யுத்தம் முடிவடைந்து ஐந்து வருடங்களின் பின்பு தற்பொழுது விசேடமாக ஐம்பது வயதிற்கு கீழ்ப்பட்டோர் உயர் கல்விகளைக் கற்பதன் மூலம் தமது வாண்மை விருத்தியை மேற்கொள்ளக்கூடிய நிலைமை நிலவுகின்றது. இவ்வாறான அலுவலர்களின் வாண்மை விருத்தியை ஊக்குவிக்கின்ற செயலானது வடமாகாணத்தின் கல்வி முறைமையை அடுத்தபடிக்குக் கொண்டு செல்லவும் எமது நாட்டினதும் ஏனைய உலக நாடுகளினதும் அடைவு மட்டத்திற்கேற்ப எமது ஆற்றுகைகளை முன்னெடுத்துச் செல்லவும் மிகவும் அவசியமாகின்றது.

அலுவலர் மேம்பாட்டுக் குழு தனது செயற்பாட்டை ஆரம்பிக்கும் பட்சத்தில் பத்து வருட கால அலுவலர் மேம்பாட்டுத் திட்டமொன்றை தயாரித்துக் கொள்ள முடியும். கொழும்பு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியா சி.காரியவாசம் அங்கு NESR ஆலோசனைச் செயலமர்விற்கு ஈ-மெயில் மூலம் நா.எதிர்வீரசிங்கம் அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ள ஆலோசனை பின்வருமாறு அமைகின்றது.

> ”ஜீன் பியாயே ஒரு முறை கல்வியின் குறிக்கோள் பற்றிக் குறிப்பிடும் போது பின்வருமாறு கூறியிருந்தார். கல்வியின் பிரதான நோக்கம் வெறுமனே முன்னைய சந்ததி படைத்த விடயங்களை மீளச்செய்யாத புதிய விடயங்களையும் ஆக்கங்களையும் படைக்கக்கூடிய ஆளுமையுள்ள மாணவர்களை உருவாக்குவதேயாகும். மாணவர்கள் இயல்பிலேயே ஆக்கபூர்வ சிந்தனையுள்ளவர்களாகவும் புதியன புனைபவர்களாகவும் கண்டுபிடிப்புக்களை மேற்கொள்பவர்களாகவும் விளங்குகின்றனர். கல்வியின் இரண்டாவது நோக்கம் சொல்லப்படுகின்ற ஒவ்வொன்றையும் அவ்வாறே ஏற்றுக்கொள்ளாமல் நிறை குறைகளை ஆராய்ந்து விமர்சன ரீதியாக நோக்கக்கூடிய மாணவர் சமுதாயத்தை உருவாக்குதல் ஆகும். பியாயேயின் முதலாவது கொள்கையை சிங்கப்பூரின் கல்வி முறைமை பின்பற்றி வருகின்றது. வெறுமனே கேட்டல் மூலம் செயற்பாட்டு கற்றல் கற்பித்தல் இன்றி மாணவர்கள். மத்தியில் தகவல்களை பதியச்செய்வது வினைத்திறன் அற்ற முறைமை ஆகும். தற்போது உள்ள உபயோகமற்ற அறிவை சேமிக்கின்ற கல்வி முறைமையை விடுத்து மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய சிறுதொகை ஆசிரியர்களை சிங்கப்பூரில் உள்ள பாடசாலைகளுக்கு அனுப்புவதன் மூலம் ஆக்கபூர்வச் சிந்தனைகள் மற்றும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல் தொடர்பிலான கற்றல் கற்பித்தல் செயற்பாடு பற்றிய மேலதிக விளக்கத்தை பெற்றுக்கொள்ள முடியும்”

இவ்வாறான பிற நாட்டு வினைத்திறன் மிக்க கற்பித்தல் கற்றல் செயற்பாட்டு அனுபவமிக்க ஆசிரியர்களை ஆசிரிய பதிலீட்டு திட்டத்தில் இணைத்துக்கொள்ள முடியும்.

வடமாகாண அலுவலர் மேம்பாடானது உருவிளக்கம் 14.2ல் குறிப்பிட்ட துறைகளில் இடம்பெறுவதற்கு முக்கிய மூலமாக முதுமாணி, கலாநிதிப் பட்டங்களுக்காக அலுவலர்களை கொழும்பு, பெரதேனியா, சிங்கப்பூர், மலேசியா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, இந்தியா, இங்கிலாந்து, கனடா மற்றும் அமெரிக்கா போன்ற பிரதேசங்களில் அல்லது நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்ளில் இணைந்து வாண்மை விருத்தி இடம்பெற வழிசமைத்துக் கொடுப்பதேயாகும். இச் செயற்பாட்டிற்கு இடைக்கால பதிலீட்டு அலுவலர்கள் தேவைப்படுகின்றனர். இரண்டு அல்லது மூன்று வருட ஒப்பந்த அடிப்படையில் மேலே குறிப்பிடப்பட்ட நாடுகளிலிருந்து அலுவலர்கள் அல்லது ஆசிரியர்களை வரவழைத்து பணியில் அமர்த்த முடியும். இத்தகைய இடைக்கால பதிலீட்டுப் பணியானது சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த அவசியமான தொழில் சார்ந்த நுட்பங்களை எமக்கு அளிப்பதால் கல்வி முறைமையை மேலும் மெருகூட்டலாம். அத்துடன் சிபார்சுகளை நடைமுறைப்படுத்தும் போது விளைகின்ற புதிய அணுகுமுறைகளையும் எண்ணங்களையும் இந்த இடைக்கால செயற்றிட்டம் வளப்படுத்தும்.

## இடைக்கால அலுவலர்களினால் மாணவர்களுக்கும், சகபாடிகளுக்கும் கிடைக்கும் நன்மைகள்

விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்களில் பட்டப்படிப்பை முடிக்காத ஆசிரியர்கள் மற்றும் கற்பித்தல் பயிற்சிச் சான்றிதழ் இல்லாத ஆசிரியர்களும் முழு நேர பட்டப்படிப்பு கற்கைளை பூர்த்தி செய்ய வேண்டிய தேவையுள்ளது. இலங்கையில் அல்லது தென்னிந்தியாவில் தமிழ் மொழி மூலமாக பட்டப்படிப்பு தொடரவிருக்கும் ஆசிரியர்களுக்குப் பதிலாக இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையில் தமிழ் மொழி பேசப்படுகின்ற இந்தியா அல்லது வேறு நாடுகளிலிருந்து பட்டதாரி ஆசிரியர்களை தற்காலிக பணியில் அமர்த்திக்கொள்ள முடியும். இத்தகையதொரு முறைமை அலுவலர் அபிவிருத்தி மற்றும் பதிலீட்டுப்பணி இடையறாது தொடர வழிவகுக்கும். அதே வேளையில் இடைக்கால அலுவலர்களினால் மற்றும் தமது அறிவு ஆற்றலை மேம்படுத்தும் நோக்கத்தோடு உயர்கல்விக்காக காத்திருக்கும் தேசிய அலுவலர்கள் ஆகியோரிடையே நிலவும் கலந்துரையாடல்கள் மற்றும் கருத்துப் பரிமாற்றங்கள். கல்வி முறைமையைப் பலப்படுத்தும்

அத்துடன் இடைக்கால மற்றும் தேசிய அலுவலர்கள் நன்கொடையாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட அல்லது ஒப்பந்த அடிப்படையில் செயற்படும் சர்வதேச அலுவலர்களை சந்தித்து கலந்துரையாடல் மேற்கொள்ள ஏதுவாகவும் இருக்கும். மாறிவரும் வன்பொருள், மென்பொருள் தொழில் நுட்ப சவால்களை சமாளிக்கத்தக்க வகையில் கல்வி முறைமையை தொடர்ச்சியாக மாற்றியமைக்கவும் தரமுயர்த்தவும் இத்தகைய அலுவலர் மேம்பாட்டுச் செயன்முறை உதவிபுரியும். எனினும் இந்தச் செயன்முறையை செயற்படுத்துவதற்கு பத்து வருடங்கள் தேவைப்படுகிறது. ஆசிரியர்களும் மாணவர்களும் அறிவையும் ஆற்றலையும் கற்பித்தல் கற்றல் செயற்பாட்டிலும் மதிப்பீட்டிலும் தாமாக வளர்த்துக் கொள்ளக்கூடியவர்களாக மாறுவர். ஏனெனில் இந்த முறைமை எல்லா அம்சங்களையும் உள்ளடக்கியிருப்பதால் செயன்முறையின் போது மாணவர்களோ அல்லது இதில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களோ தவறவிடக்கூடியதென எதுவும் இல்லை.

# 15: முடிவுகளும் பரிந்துரைகளும்

## முடிவுகள்

### பொது

இம் மீளாய்வானது, வட மாகாணக் கல்வித் தொகுதியின் பாகங்களாயிருப்போர், நலன்சார் அக்கறையுடையோர் மற்றும் பொது மக்கள் ஆகியோரின் அக்கறைக்குரிய சகல விடயங்களையும் கருத்திலெடுத்துக் கொண்டுள்ளது. கல்வியின் மையமாக, மாணவரின் கற்றலும் வளர்ச்சியுமே அமைய வேண்டுமென்பதை மனதிற்கொண்டு நெறிப்படுத்தற்குழுவினால் (Steering committee) உருவாக்கப்பட்ட பன்னிரண்டு குழுக்களும் தற்போதைய நிலைமையினை ஆராய்ந்து, வடமாகாணக் கல்வித் தொகுதிக்கு உள்ளேயும் வெளியேயுமுள்ள எந்தவொரு அதிகாரியினாலும் எவ்வித மட்டுப்பாடுகளும் விதிக்கப்படாமல், தமது கண்டுபிடிப்புக்களைச் சுதந்திரமாக வெளிப்படுத்தியுள்ளனர். தொடர்புடைய சகலரது ஒத்துழைப்புடன், குழுக்கள் காரணங்களை நன்கு இனங்கண்டு, தொகுதியினை மேம்படுத்துவதற்குத் தேவையான பரிந்துரைகளைச் செய்துள்ளனர். நெறிப்படுத்தற் குழுவானது, இம் மீளாய்வுச் செயன்முறையை ஆரம்பித்து வைத்தமைக்காக, அவர்களுக்கு மிகவும் நன்றியுடையதாய் உள்ளது. நெறிப்படுத்தற் குழுவுக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கிய கல்விச் செயலாளர் திரு.சி.சத்தியசீலன் அவர்களும், மீளாய்வுச் செயன்முறைக்கு உதவிய மாகாணக் கல்விப்பணிப்பாளர் திரு.வ.செல்வராசா மற்றும் அவர்தம் பணியாளர்களுக்கும் நாம் மிகுந்த நன்றியுடையோராய் உள்ளோம்.

இக் குழுவானவை, ஒழுங்கான முறையில் இடம்பெற்ற தமது கலந்துரையாடல்களின் போதும், முழுமையான நெறிப்படுத்தற் குழுவின் முன்பாக இடம்பெற்ற முன்வைப்புகளின் போதும், சிறப்பான முறையில் வாண்மையுடன் தொழிற்பட்டன. இதே உணர்வானது, வட மாகாணத்தின் ஒரு பரந்த கல்வியாளர் சமூகத்தையும் இலங்கைக் கல்வி அமைச்சினது கல்வியாளர்களையும் உள்ளடக்கி விரிவாக்கப்பட்ட குழுக்களுடன் நடைபெற்ற ஆலோசனைச் செயலமர்வின் போதும் நீடித்தது.

சகல பரிந்துரைகளும் பின்னர் பகுப்பாய்வு செய்யப்பட்ட, ஓர் அமுலாக்கல் திட்டம் தயாரிக்கப்பட்டு, ஆணைக்குழுவின் பிரதான குழுக்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. உடனடியாக அமுலாக்கப்படவேண்டிய பல பரிந்துரைகள் ஏற்கனவே அமுலாக்கப்படத் தொடங்கிவிட்டன, குறுங்கால மற்றும் நடுத்தர அளவுக் கால அமுலாக்கல் திட்டங்கள் 2014 முதல் 2016 வரையான காலப் பகுதிக்குள் அமுலாக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் ஆரம்பத்தில் இடம்பெற்றுள்ள நிர்வாகச் சுருக்கத்தில் இடம்பெற்ற விளக்கப்படமானது தற்போதைய வடமாகாணக் கல்வித் தொகுதியையும் அதன் பிரதான பிரச்சினைகளையும் உள்ளடக்கியுள்ளது. அத்தியாயம் 1 மீளாய்வுச் செயன்முறை தொடர்பானது. அத்தியாயம் 2 தற்போதைய நிலவரத்தை விளக்கி பிரதான பிரச்சினைகளை இனங்கண்டுள்ளது. தொடரும் அத்தியாயங்கள் தொகுதியின் ஒவ்வொரு பிரிவினதும் ஏனைய பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வுகளை முன்வைத்துள்ளன.

### ஆலோசனைச் செயலமர்வில் முன்வைக்கப்பட்ட முன்மொழிவில் இடம்பெற்ற, நிபுணர்களின் அவதானிப்புக்கள்

வட மாகாணக் கல்வித் தொகுதிக்கு உள்ளிருந்தும், நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் இருந்தும், மீளாய்வுச் செயன்முறையில் ஈடுபட்ட விடய நிபுணர்களின் அவதானிப்புக்கள் கீழே முன்வைக்கப்படுகின்றன. ஏப்பிரல் 2014 இல் இடம்பெற்ற ஆலோசனைச் செயலமர்வுக்கு அழைக்கப்பட்ட சில கல்வியாளர்களால் சமுகமளிக்க இயலாமற் போய்விட்டது. மேலும் ஆலோசனைச் செயலமர்வுக்கு அழைக்கப்பட்ட சர்வதேச நிபுணர்களுக்கு பங்குபற்றுவதற்கான அனுமதி வழங்க மறுக்கப்பட்டது. அறிக்கையின் முன்மொழிவு அவர்களுடன் பகிரப்பட்டு, அவர்களிடமிருந்து கருத்துக்களும் பின்னூட்டல்களும் பெறப்பட்டன. முன்மொழிவு குறித்த அவர்களது பிரதான அவதானிப்புக்களிற் சில தொடர்பான அத்தியாயங்களில் முன் வைக்கப்படுகின்றன. அடையாளம் காணப்பட்ட சில பிரதான பிரச்சினைகள் கீழே முன்வைக்கப்படுகின்றன.

தேசியப் பரீட்சைகளே இவற்றில் மிக முக்கியமானவை. அவையே முழுக் கல்வித் தொகுதியினதும் தொழிற்பாட்டினைத் தீர்மானிக்கின்றன. வடக்கில் மட்டுமல்ல முழு நாட்டிலேயும் இதே நிலைதான் நிலவுகிறது. அவை நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் மற்றும்

சமூகத்தினர் ஆகிய எல்லோரையும் ஆக்கிரமித்து விடுகின்றன. அவையே தரம் 1 முதல் 13 வரை வகுப்பறைகளில் கற்பித்தல் முறைகளைத் தீர்மானிக்கின்றன. அவையே கல்வி முறைமையைப் பிள்ளை மையமானதிலிருந்து பரீட்சை மையமானதாக மாற்றியுள்ளன. பிரதான பரீட்சை முறையாக எழுத்துச் சோதனைகளே அமைந்துள்ளன. அமைப்பு மதிப்பீடுகள் எதுவுமே இடம்பெறுவதில்லை. தரம் 10 ஐயும் தரம் 11 ஐயும் உள்ளடக்கிய அல்லது தரம் 12 ஐயும் 13 ஐயும் உள்ளடக்கிய ஒரே தடவைச் சோதனையாகவே பரீட்சைகள் அமைந்துள்ளன. ஒரு மாணவன் மனனம் செய்து மீள ஒப்பிப்பதற்கான இயலளவு எவ்வளவு அதிகமாயுள்ளது என்பதே தேசிய பரீட்சைகள் அளவிடுகின்றன.

இப்பரீட்சைகளே தனியார் கல்வி நிலையங்களின் தோற்றத்துக்கு தூண்டுகோலாய் அமைகின்றன. இதனோடிணைந்த சில பிரச்சினைகள் பாடசாலைகளினுள்ளும் வகுப்பறைகளினுள்ளும் ஊடுருவிப் பரந்துள்ளன. செயற்றிட்டக்கல்வி, வெளிக்களக்கல்வி, ஆய்வுகூட அனுபவக் கல்வி போன்றவை உள்ளடக்கப்பட்ட கற்பித்தல் முறையியல் நடைமுறைப்படுத்தப்பட்டுத் தொடர் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டாலொழிய, தனியார் கல்வி நிலையங்களுடன் தொடர்புடைய பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டேயிருக்கும். பாடசாலையில் கழிக்கும் காலத்துக்குச் சமமான அல்லது அவதானித்தலும் கூடிய காலத்தைத் தனியார் கல்வி நிலையங்களில் செலவிடுவதற்கான நிதி வசதியைக் கொண்டிருப்பதால், ஏழைப் பிள்ளைகளிலும் பார்க்க பணக்காரப் பிள்ளைகள் தொடர்ந்தும் கூடுதலான வசதி வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வர். ஒவ்வொரு வருடமும் தேசியப் பரீட்சைகளில் 50% இலிருந்து 60% ஆனோர் சித்தியடையத் தவறுகின்றனர். இத்தகைய இளைஞர்களின் எதிர்காலம் இருண்டு காணப்படுவதால் அவர்களால் உருவாகும் சமூகப் பிரச்சினைகள் மீண்டும் அதிகரிக்கும் போக்கு காணப்படுகிறது. "தனியார் கல்வி நிலையங்களும் வடமாகாணக் கல்வித் தொகுதியில் அவற்றின் தாக்கமும்" பற்றிய அத்தியாயம் 5 ஆனது, இப்பிரச்சினையை ஆராய்ந்து பரிந்துரைகளை மேற்கொண்டுள்ளது.

மாணவர் மீதும் ஆசிரியர் மீதும் பெற்றோர் மீதும் நிர்வாகிகள் மீதும் பரீட்சைகள் பிரயோகிக்கும் அழுத்தம், ஏற்கனவே நாற்பதுகள் முதல் அறுபதுகள் வரையான காலப்பகுதியில் பெரும்பாலும் இல்லாதொழிக்கப்பட்டுவிட்ட உடல்ரீதியான தண்டனையின் மீள்தோற்றத்துக்கு வழிவகுக்கும் பிரதான காரணியாக அமைந்து விடலாம். இலங்கையில் உடல்ரீதியான தண்டனை சட்ட விரோதமானதாகும். வடமாகாணப் பாடசாலைகளில் அது தொடர்வதை எவ்விதத்திலும் மன்னிக்க முடியாது. சிறுவர்களின் உரிமைகள் மீறப்படுவதால், சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள் இத்தகைய துஷ்பிரயோகத்துக்கு எதிராக நடவடிக்கை எடுத்தேயாக வேண்டும். பெரிய மாற்றமொன்று நிகழ்வதற்குக் காத்திருக்கின்றது. வட மாகாணத்தில் மட்டுமல்ல முழு நாட்டிலுமே, வகுப்பறை களிலிருந்து உடல்ரீதியான தண்டனை முறைமை நிச்சயம் ஒழிக்கப்பட்டேயாக வேண்டும்.

நிர்வாகத்தின் மீது பாரிய அழுத்தத்தை தற்போது ஏற்படுத்திவரும் ஒரு பிரச்சினையானது குறிப்பாகத் தொலைதூர மற்றும் கிராமப்புறங்களுக்கான ஆசிரிய நியமனம், பதவியுயர்வு மற்றும் இடமாற்றம் என்பனவாகும். பிரச்சினை யாதெனில் தங்குமிட மற்றும் ஏனைய வசதிக் குறைபாடு நிலவும் தொலைதூரப் பாடசாலைகளுக்கு விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் மற்றும் ஏனைய பாடங்களுக்கான தகுதியுடைய பட்டதாரி ஆசிரியர்கள் செல்லத் தயங்குகின்றனர். கிராமப்புற மற்றும் தொலைதூரப் பிரதேசங்களுக்கான இடமாற்றங்களை எதிர்த்துச் சில ஆசிரியர்கள் போராடுவதற்கான இன்னுமொரு காரணம், நகரப்புற பிரதேசங்களில் தனியார் கல்வி வழங்கல் மூலம் ஆசிரியர்களுக்குக் கிடைக்கக் கூடியதாயுள்ள மேலதிக வருமான வசதி வாய்ப்பாகும்.

இன்னுமோர் அவதானிப்பானது, யுத்தம் காரணமாகப் பல்வேறு துறைகளிலும் மேற்படிப்பை தொடர்வதற்கான வாய்ப்பினைத் தமிழ் கல்வியாளர்கள் இழந்துள்ளனர் என்பதாகும். நாடெங்கிலும் 3,124 தமிழ் மொழி மூலப் பாடசாலைகள் உள்ளபோதிலும் கலைத்திட்டம், அறிவுரைப்பு வழிகாட்டிகள், மதிப்பீட்டுக் கருவிகள் போன்றவற்றின் ஆக்கம் மற்றும் ஏனைய கல்வித் துறைகளில் பொறுப்பான பதவிகளைப் போதியளவுக்கு அவர்களால் வகிக்க முடியாமல் போயுள்ளது. இத்தகைய பெரும்பாலான ஆக்கங்கள் தமிழ் தவிர்ந்த வேறொரு மொழியில் உருவாக்கப்பட்டுத் தமிழில் மொழி பெயர்க்கப்படுகின்றன. வழமையாக இத்தகைய மொழிபெயர்ப்புக்கள் தரமானவையாக இருப்பதில்லை. தேசியக் கல்வியாளர்களினதும் கல்வி அமைச்சினதும் இத்தகைய புறக்கணிப்பு இயன்றளவு விரைவாக இல்லாதொழிக்கப்பட வேண்டிய தேவையுள்ளது.

பிரித்தானியக் காலனித்துவ ஆட்சியின் போது இந்த நாட்டின் கல்வி நிர்வாகமானது மையப்படுத்தப்பட்டிருந்தது. காலப்போக்கில் கல்வி நிர்வாகமானது பரவலாக்கப்பட்டது. ஆயினும் முக்கியமான தீர்மானங்கள் தொடர்ந்தும் மத்தியினாலேயே கட்டுப்படுத்தப்படுகின்றன. இதுதான் வடமாகாண சபையின் உருவாக்கத்தின் பின்பும் உள்ள நிலைமையாகும். 2013 வரை வடக்கிலே ஒரு தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை இருக்கவில்லை. இதுதான் பரவலாக்கத்திற்கும் தீர்மானம் மேற்கொள்ளலுக்குமான சரியான தருணமாகும். குறிப்பாக வடமாகாணத்திலும் பொருத்தமாயின் ஏனைய மாகாணங்களிலும் பிள்ளைகளின் வளர்ச்சி மற்றும் கற்றலில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய தீர்மானம் மேற்கொள்வதில் அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட வேண்டிய தருணம் இதுவாகும்.

தற்போதைய நிலைமையை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டே சகல அத்தியாயங்களின் பரிந்துரைகளும் அமைந்துள்ளன. "தமிழ் மொழி மூலக் கல்வி நிர்வாகம்" பற்றிய அத்தியாயம் 12, மற்றும் "புதியதோர் வடமாகாணப் பாடசாலை நிர்வாக முறைமை" பற்றிய அத்தியாயம் 13 என்பன, வடக்கிலும் நாடெங்கிலும் உள்ள தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் உள்ள பிள்ளைகளின் கல்வி மற்றும் வளர்ச்சியுடன் நேரடியாகத் தொடர்புடைய பிரச்சினைகள் தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளலில் அதிகாரப் பரவலாக்கத்தை மேம்படுத்துவதையும் தற்போதைய நிர்வாக முறைமையை மறுசீரமைப்பதையும் நோக்கமாக கொண்டு எழுதப்பட்டுள்ளன.

நிரல் கல்வி அமைச்சானது, தனக்குச் செய்யப்பட்ட பரிந்துரைகளை அமுலாக்குமென நம்பப்படுகிறது. ஆலோசனைச் செயலமர்வின் இறுதியில், அவற்றில் 90% ஆனவற்றை அமுலாக்குவதற்கு அவர்கள் இணங்கியிருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கல்வி அமைச்சால் குறிப்பிட்டது போன்று இலக்குக் குழுக்கள் கூடி பரிந்துரைகள் குறித்து ஆராய்ந்து இப்போது முதல் 2016 முடிவதற்கு முன்னர் வரையான காலப்பகுதிக்குள் அவற்றை அமுல்படுத்துவதற்கான வழிகளைக் கண்டறிய வேண்டியது மிக முக்கியமானதாகும்.

## தேசிய பரீட்சை முடிவுகள் – 1992 முதல் 1997 வரை (யுத்த காலத்தில்)

"இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணத்தில் கல்வி மற்றும் விளையாட்டு பற்றிய ஒரு தரங்கணிப்பு"[1] எனும் ஆய்விலிருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் அட்டவணை 15.1 இல் 8 மாகாணங்களின் சகல மாவட்டங்களினதும்1992 முதல்1997வரையான காலப் பகுதிக்கான க.பொ.த.(சா/த.) பரீட்சை பெறுபேறுகள் தரப்பட்டுள்ளன.

**Table 15.1 (Table 9 in original document): "Percent Qualified to continue to GCE A Level by Districts and Years 1992, 1994, 1996, 1997 and GCE A Level Percent Pass."**

| | 1992 | 1994 | 1996 | 1997 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| DISTRICT | % Passing GCE O/L | % Passing GCE O/L | % Passing GCE O/L | % Passing GCE O/L | % Diff 92/94 | % Diff 94/96 | % Dif 96/97 |
| Kandy | 22 | 22 | 26 | 32 | | | 6 |
| Matale | 18 | 17 | 22 | 26 | | | 4 |
| Nuwar Eliya | 17 | 18 | 21 | 24 | | | 3 |
| Nikaweratiya | - | - | - | 27 | | | - |
| CP | 19% | 19% | 23% | 27% | 0 | 4 | 4 |
| Amparai** | 21 | 20 | 24 | 26 | | | 2 |
| Kalmunai** | - | - | - | 54 | | | - |
| Batticaloa | 23 | 22 | 30 | 36 | | | 6 |
| Trincomalee | 20 | 19 | 25 | 32 | | | 7 |
| Vavuniya | 19 | 22 | 32 | 41 | | | 9 |
| Mannar | 30 | 23 | 30 | 35 | | | 5 |
| Kilinochchi | 18 | 19 | 24 | 31 | | | 7 |
| Mullaitivu | 17 | 20 | 24 | 34 | | | 10 |
| Jaffna | 26 | 26 | 26 | 39 | | | 13 |
| NEP | 22% | 22% | 27% | 36% | 0 | 5 | 9 |
| Sri Lanka | 22 | 21 | 26 | 33 | | 5 | |

**Source: Based on MOE 1998**

[1]Ethirveerasingam, Nagalingam. "An Appraisal of Education and Sports in the NorthEast Province of Sri Lanka", Report to the NorthEast Province Ministry of Education, Culture and Sports. 1998. Table 9.

"…எவ்வாறாயினும் கல்விச் சாதனங்கள், எரிபொருள், உணவு, மருந்துப் பொருட்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் மீதான தடைகள், மட்டுப்படுத்தல்கள் என்பன தொடருமாயின், நெருக்கீடுகளின் கீழ் மக்களால் தொடர்ந்தும் பெறுபேறுகள் குறையாமற் பேணிவர இயலாமல் போகும். அடிப்படைத் தேவைகளை தடைசெய்யும் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை தொடருமாயின், ஏழைப் பெற்றோரின் பிள்ளைகளின் கல்வியும் பரீட்சைப் பெறுபேறுகளும் நிச்சயம் பாதிப்படையும்."[2]

1997 ஆம் ஆண்டின் வட மாகாணப் பாடசாலைகளின் பெறுபேறுகளானவை தேசியச் சராசரியான 33% இலும் பார்க்க 3% உயர்வானது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. 13.05.1997 அன்று சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரணதுங்க ஆட்சி வடக்கிலே 'ஜெயசிக்குறு' தாக்குதலை ஆரம்பித்தது. வவுனியா வடக்கிலிருந்து கிளிநொச்சி வரை A9 வீதியின் கிழக்குப் புறமிருந்து சகல பாடசாலைகளையும் உள்ளடக்கிய மொத்த சனத்தொகையுமே அது இடம்பெயரச் செய்தது. அவற்றில் 1996 ஆகஸ்டில் ஏற்கனவே A9 வீதியின் கிழக்குப்புறத்தில் அமைந்துள்ள முல்லைத்தீவு மாவட்டப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த பாடசாலைகளும் அடங்கியிருந்தன. A9 வீதியின் கிழக்குப்புறம் அமைந்திருந்த சகல பாடசாலைகளும் புதுக்குடியிருப்பிலும் அதனை சூழவுள்ள பிரதேசத்திலும் நெருக்குண்டன. A9 வீதிக்கு மேற்குப்புறமாகவுள்ள பாடசாலைகள் அக்கராயனிலிருந்து மடு மேற்கு வரையான பிரதேசத்தினுள் நெருக்குண்டன. தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டன. ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் நிர்வாகிகள் தமது குடும்பங்களுடன் இடம்பெயர்ந்திருந்தனர். அவர்கள் பெரும் துன்பத்தை நெஞ்சிலே தாங்கி பொறுமையுடன் பிள்ளைகளுக்கு கற்பித்தனர். அக்காலம் அவர்களது வாழ்க்கையின் மறக்க முடியாத மிக முக்கிய நாட்களாக இருந்தன.

2010 டிசம்பரில் இருந்த மீள் குடியேற்றம் ஆரம்பமானது. ஆயினும் பலர் இன்னமும் இடம் பெயர்ந்தே உள்ளனர். அவர்கள் தமது தற்காலிக கொட்டில்களிலோ உறவினர்களுடனோதான் இன்னமும் தங்கி உள்ளனர். அல்லது எண்ணுக்கணக்கற்ற முறையில் அதிகரிக்கப்படும் ஆயுத படைகளின் முகாம்களை விரிவாக்குவதற்கு வழிசெய்து கொடுப்பதற்காக தமது நிரந்தர இடங்களிலிருந்து குடிபெயர்க்கப்பட்டு முன்பின் தெரியாத இடங்களில் வசிக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டு வருகின்றனர். இத்தகைய நீண்ட கால இடப்பெயர்வு நூற்றாண்டுகளுக்கு மேலாக இங்கு வந்த சில புகழ்பூத்த பாடசாலை மாணவர் எண்ணிக்கையை குறைவடையச் செய்துள்ளது. தமிழ் குடியிருப்பாளர்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற விடாமல் இராணுவத்தினரால் தடுக்கப்பட்டு வருகின்றமையாலும். அவர்கள் தொடர்ந்து கூடாரங்களிலேயே வசித்துவருகின்றனர். அதேவேளை அரசாங்கம் புதிய புதிய சிங்கள குடியேற்றங்களை உருவாக்கி புதிய புதிய சிங்கள பாடசாலைகளையும் உருவாக்குகிறது. அதேநேரம் தமிழ்மொழி மூலப் பாடசாலைகள் தொடர்ந்தும் குடில்களிலேயே இயங்குகின்றன.

பாடசாலைகள் தமது வேலைகளை சுமுகமாக செய்யவிடாமல் இன்னமும் இராணுவத்தில் வேண்டத்தகாத தலையீடு தொடர்ந்து அவ்வப்போது நடைபெறும் இராணுவ நிகழ்ச்சிகளுக்கு சமுகமளிக்குமாறு நிர்வாகிகள் அவர்களின் சுய விருப்பத்திற்கு மாறாக நிர்ப்பந்திக்கப்பட்டு பணிக்கப் படுகின்றார்கள். பிள்ளைகளின் மாறாப் பெருந் துயருக்கு காரணமாகிய வெற்றிகளை கொண்டாடி மகிழ வருமாறு ஆசிரியர்களும் நிர்வாகிகளும் மாணவர்களும் இராணுவத்தினரால் நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். தாங்கள் உண்மையிலேயே பங்கு பற்ற விரும்பாத அத்தகைய கொண்டாட்டங்களுக்கு சமுகமளிக்கத் தம்மால் முடியாததென்று கூற அவர்கள் பயப்படுகின்றார்கள். இது பாடசாலை நிர்வாகிகளும் மாணவர்களும் முகம்கொடுத்து வரும் உள்ளக முரண்பாடொன்றாகும். இத்தகைய நிர்ப்பந்தம் பற்றிய தமது பயத்தினையும் தாழ் உணர்வையும் ஆபத்தற்றவர்களிடம் அவர்கள் கூறினாலும் தாம் கடுமையாக பழிவாங்கப்படுவோம் என்ற பயத்தினால் அவர்கள் அதுபற்றி வெளிப்படையாக பேசுவதற்கு பயப்படுகிறார்கள். இதனால் அவர்கள் சார்பாக NESR அறிக்கையானது, கௌரவ கல்வி அமைச்சர் திரு.பந்துல குணவர்த்தன மூலம்

**பாடசாலை மற்றும் பாடசாலை மாணவர், ஆசிரியர், கல்வி நிர்வாகிகள் வாழ்விலிருந்து இராணுவம் அகல வேண்டும்.**

[2] Ethirveerasingam, Nagalingam. "An Appraisal of Education and Sports in the NorthEast Province of Sri Lanka", Report to the NorthEast Province Ministry of Education, Culture and Sports. 1998.

அரசாங்கத்திடம் 'தயவுசெய்து பிள்ளைகளின் வாழ்க்கையிலிருந்தும் பாடசாலைகளிலிருந்தும் இராணுவத்தை வெகு தூரத்திற்கு அப்பால் விலக்கி வையுங்கள்' என ஓங்கிஒலிக்கிறது.

இந்த அறிக்கை இராணுவத்தையும் அரசாங்கத்தையும் பின்வரும் கௌதம புத்தரின் தம்மபதத்தைப் பின்பற்றியொழுகுமாறு கேட்டுக்கொள்கிறது.

ஜயம் வேரம் பசவதி
துக்கம் செத்தி பராஜித்தோ
ஊபசந்தோ சுகம் செத்தி
ஹித்வ ஜய பராஜயம்
- தம்மபதம், சுக வக்கா - பாடல் - 5

"வெற்றி வளர்ப்பது வெறுப்பினை
தோற்றோன் துயில்வது துயரில் வெற்றியையும் தோல்வியையும் புறந்தள்ளி
மகிழ்வுடன் துயில் முடிவது சமாதானத்தில்."

## அத்தியாய ரீதியாக தொகுக்கப்பட்ட பரிந்துரைகள்

### அத்தியாயம் 3: மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் உளசமூக நன்னிலையைப் பேணுதல்.

#### பரிந்துரைகள்

#### நடத்தை தொடர்பான ஒழுக்க விதிகள்

1. ஆசிரியர்களின் அழுத்தத்தைக் குறைப்பதற்காகவும் கற்றலுக்கான சூழலை மேம்பாடடையச் செய்வதற்காகவும் பாடசாலைகள் தமது வகுப்பறைகளில் சிபாரிசு செய்யப்பட்ட எண்ணிக்கையான[3] மாணவர்கள் மட்டும் இருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.
2. ஒரு விசாலமான வரையறைகளுக்குள் நின்றபடி ஆசிரியர்களும், பெற்றோர்களும், ஏனைய பங்குதாரர்களும் இணைந்து தத்தமக்கு என ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய நடத்தைகள் தொடர்பான ஒழுக்க விதிமுறைகளின்[4] தொகுப்பைத் தாமே தயாரித்துக் கொள்ள வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.
3. ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் ஆகியோர் இணைந்து தயாரித்த பாடசாலைக்கான ஒழுக்க விதிக்கோவையானது மாணவர்களாலும் பெற்றோர் களாலும் ஆசிரியர்களாலும் அதிபர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுக் கையொப்ப மிடப்பட வேண்டும். அந்த ஒழுக்க விதிக்கோவையானது மாணவர்கள், பணியாளர்கள் மற்றும் பெற்றோர்கள் அடிக்கடி பார்வையிட்டு மீளாய்வு செய்யக்கூடிய வகையில், தெளிவாகத் தெரியக்கூடிய ஓர் இடத்தில் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.
   பாடசாலையில் ஒழுக்க விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு குழு நிறுவப்பட்டு, அது ஒழுக்க விதிமுறைகளை அவதானிக்கவும் அவற்றை அமுல்ப்படுத்தவும் அதிகாரமளிக்கப்பட வேண்டும்.

[3]Maximum Student: Teacher ratio (Primary Level classes 20:1- over 20 classes can have assistant teachers; Secondary Level classes 30:1)

[4]This code / guideline must of course keep within the National Education Policies and Circulars. For example: Corporal punishment should be totally removed from schools (zero tolerance). The Minister to re-issue the circular sent out by Ministry of Education (central) in 2005 regarding corporal punishment being banned from schools. The zero tolerance circular should be displayed visibly to students, staff, and visiting parents at the school.

4. ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் ஒழுக்கத்தை நிலைநாட்டும் அனுகூலமான திறன்களிலும் நடத்தை மாற்ற நுட்பங்களிலும் தொடர் பரிச்சயத்தை நிலைநிறுத்தும் முகமாக மீள்வலுவூட்டல் பயிற்சிகளை அரையாண்டுக்கு ஒரு தடவை நடத்தப்பட வேண்டும்.
5. கிரமமான முறையில் மதிப்பீடு செய்து, பின்னூட்டல்களை வழங்கும் முறையினை அமுல்படுத்தவேண்டும்.
3. ஆசிரியர்களும் அதிபர்களும் அடிப்படையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒழுக்க நியம விதிமுறைகளை அடியொற்றி நிற்கிறார்களா என்பதனை தெளிவானதும் ஒளிவு மறைவில்லாததுமான ஒரு நிர்வாக நடைமுறையால் உறுதி செய்தல் வேண்டும்.
4. மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் என்பவரிடையே ஒழுக்க விதி முறைக் கோவை தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

## பாடசாலை மட்ட உளவளத்துணை

1. ஆசிரியர்களும் அதிபர்களும் பிள்ளை நேய வகுப்பறை ஒன்றைத் தொடக்கி அதனை பேணிவரக்கூடிய ஆற்றல் உடையவர்களாக இருப்பதனையும் மாணவர்களின் உளவியல் சார்ந்த பிரச்சினைகளைக் குறைக்கக் கூடிய, மாணவர்களுக்கான பொருத்தமான செயற்பாடுகளுக்கு வழிசெய்து கொடுக்கக் கூடிய, நடத்தைப் பிரச்சினைகள் குறைவான நிலையிலுள்ள ஒரு கற்றலுக்கான சூழலை ஏற்படுத்தக் கூடிய திறன் உடையவர்களாக இருப்பதனையும்பொருத்தமானபயிற்சிகளின்ஊடாகஉறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
2. உளவளத்துணையும் வழிகாட்டலும் துறையில் சம்பந்தப்பட்டிருப்போர்கள் எல்லோருக்கும் 2014 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்பதாக முழுமையான, ஆழமான பயிற்சியை[5] வழங்க வேண்டும். அத்துடன் அடுத்து வரும் மூன்றாண்டுகளுக்கு, ஓராண்டுக்கு இரு தடவைகள் வீதம் அவர்கள் தங்களுடைய அறிவுத்திறனையும், நுட்பங்களையும் புதுப்பித்துக் கொள்வதற்காகவும் அவற்றை சரியான முறையில் பேணிக் கொள்வதற்குமான பயிற்சிகளை வழங்க வேண்டும்.
3. "சிறுவர் உளநலம்" என்ற புத்தகத்தின் புதிய பதிப்பையும் ஏனைய வளநூல்களையும் கல்வியமைச்சின் ஆதரவுடன் 2014 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்பதாக பதிப்பித்து வெளியிடல் வேண்டும். அத்துடன் ஆசிரியர்களும் அதிபர்களும் காலத்துக்குக் காலம் சிறுவர்களின் உளநலம் தொடர்பான புத்துணர்வூட்டும் பயிற்சிகளை வழங்க வேண்டும்.
4. எல்லா 1 AB, 1 C, 2 ஆம் வகை, 3 ஆம் வகைப் பாடசாலைகள் மற்றும் 1000 பாடசாலைகள் திட்ட வரைவுக்குள் உள்ளடங்கும் பாடசாலைகளில் கற்கின்ற ஒவ்வொரு 300 மாணவர்களுக்கும் ஒரு ஆசிரியர் உளவளத்துணையாளராக நியமிக்கப்படவேண்டும்.
5. இந்தப் பதவி நிலைகளுக்கு இயல்பான ஆர்வமும் இச் சேவைகளைப் புரிவதில் விருப்பமும் உடைய ஆசிரியர்கள் மட்டுமே நியமிக்கப்பட வேண்டும்.
6. தங்களது அடைவு மட்டத்தை உயர்த்திக் கொள்ளும் நோக்கில் தத்தமது முடிவுகளையும் அவதானிப்புக்களையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் தெரிவித்துக் கொள்ளவும் ஆசிரிய உளவளத்துணையாளர்களிடையே அரையாண்டுக்கொரு தடவையான சந்திப்புக்கள் நடப்பதனை ஊக்குவிக்க வேண்டும்.
7. மாணவர்களுக்கு உளவளத்துணை வழங்குதல் சேவைகளைப் புரிவதில் பயிற்சியும் அர்ப்பணிப்பும் விருப்பமும் உடைய ஆசிரியர்கள் உளவளத்துணை வழங்கும் பணிகளில் நியமிக்கப்படலாம்.
8. போதியளவு அந்தரங்கத் தன்மையுடைய அதே நேரம் திறந்த கதவு மற்றும் ஏனைய வசதிகள் இருக்கக் கூடிய ஓர் இடத்தை ஒதுக்கிக் கொடுத்து, உளவளத்துணைக்கும் வழிகாட்டலுக்குமான சேவைகளை வழங்குவதற்கான சாதகமான சூழலை உருவாக்குவதற்குப் பாடசாலைகளை ஊக்கப்படுத்த வேண்டும்.

   உளவளத்துணை மற்றும் வழிகாட்டல் சேவைகளுக்குப் பொருத்தமான சூழல் எது என்பதனைப் பெற்றோர், ஆசிரியர், அதிபர் மற்றும் முதுநிலை ஆசிரிய உளவளத் துணையாளர்களின் குழு என்பன இணைந்து தெளிவாக வரையறை செய்வதன் மூலம், தேவையில்லாத மற்றும் தவறான புரிதல்களைக் களையலாம். அத்துடன் மாணவர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தலாம்.
9. மாணவர்களதும் ஆசிரியர்களதும் உளசமூக நலனைப் பேணுவதற்கும் உளவளத்துணை மற்றும் வழிகாட்டல் சேவைகளை மேற்பார்வை செய்யவும் ஒழுங்குபடுத்துவதற்குமாக ஒவ்வொரு கோட்டத்துக்கும் ஒரு முதுநிலை உளவளத் துணையாளரையும் ஒவ்வொரு வலயத்துக்கும் ஒரு ISA / ADE ஐயும் ஒதுக்கிக் கொடுக்க வேண்டும்.
10. உளவளத்துணை மற்றும் வழிகாட்டல் ஆசிரியர்களாகத் தொழிற்படுவோர் மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் பாடசாலையிலும் சமூகத்திலும் எதிர்நோக்கப்படும்

[5] At least six months duration.

பிரச்சினைகளுக்கான பரந்தளவிலான செயற்பாட்டினை மேற்கொள்வதற்குப் போதுமானளவு அதிகாரமளிக்கப்படல் வேண்டும்.

11. இச்சேவை வழங்கலுக்காக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட பொறுப்புக்களை உள்ளடக்கிய ஒரு மீளப்புதுப்பிக்கப்பட்ட கடமைப் பட்டியலை வழங்கவும்.
12. ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுடன் பாடசாலைகளால் உருவாக்கப்பட்டு கல்வித் திணைக்களத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுக்க விதிக்கோவையினை உளவளத் துணை மற்றும் வழிகாட்டல் சேவையினை மேற்கொள்ளும் ஆசிரியர்கள் கையொப்பமிட்டு ஏற்றுக்கொள்வதோடு, அவர்கள் அதனைப் பின்பற்றி நடப்பதனை 2014 ஆம் ஆண்டின் முடிவுக்கு முன்னதாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
13. வலய மட்டங்களில் தங்களுக்குள்ளேயே வாராந்தமோ, மாதாந்தமோ ஒத்த குழுச் சந்திப்புகளை மேற்கொள்ளுதல், மாவட்ட அல்லது மாகாண மட்டத்தில் ஆசிரிய ஆலோசகர், உதவிக் கல்விப் பணிப்பாளர், முதுநிலை உளவளத்துணையாளர்கள் ஆகியோருடைய மேற்பார்வை நிகழ்வுகள் உள்ளடங்கலான பொருத்தமான மேற்பார்வைப் பொறிமுறை ஒன்றை நிறுவி, அதனை நடைமுறைப்படுத்த வேண்டும்.
14. பதின்மூன்றாவது சிபாரிசில் குறிப்பிடப்பட்டதனை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக ஒவ்வொரு வலயத்திலும் ஆசிரிய வளநிலையங்களை உருவாக்கி அல்லது இயங்கச் செய்து, அங்கே காலத்துக்குக் காலம் தகவல்களையும் அறிவையும் நுட்பங்களையும் மேம்படுத்துவதற்குரிய விரிவுரைகளையும் பயிற்சிப் பட்டறைகளையும் பொருத்தமான துறைசார் நிபுணர்களினால் நடத்தப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
15. உளவளத்துணை மற்றும் வழிகாட்டல் சேவையிலிருக்கும் ஆசிரியர்கள் கடினமான மற்றும் சிக்கலான மாணவர்களை அல்லது ஆசிரியர்களை, பரிந்துரைக்கப்பட்ட வழிமுறைகளுக்கும் வலை அமைப்பு வசதிகளுக்கும், பணிநிலையில் மூத்தவர் களிடமோ, ஆலோசக மேலாளரிடமோ அல்லது உளவைத்தியரிடமோ செல்லுதலுக்கும் நன்கு அறிமுகமானவர்களாக இருக்கிறார்களா என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் அவர்கள் ஏனைய அரசாங்க சேவையாளர்களோடும் திணைக்களங்களோடும் வலையமைப்பை ஏற்படுத்தக் கூடிய திறனுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
16. மாகாணக் கல்வித் திணைக்களமானது தமது மாணவருக்கும் ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் தேவைப்படும்போது உதவக்கூடிய நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களின் பெயர்ப் பட்டியல் ஒன்றை வைத்திருக்க வேண்டும். இவ்வாறு கல்விப் புலத்தில் உதவும் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு, மாகாணக் கல்விப் பணிப்பாளரால் நியமிக்கப்பட்ட சிரேஷ்ட உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவினால் உதவ விரும்பும் ஆட்கள் மற்றும் நிறுவனங்களின் நம்பகத் தன்மையையும் பணிகளின் பொருத்தப்பாடு மற்றுமு தகைமை என்பவற்றையும் நிச்சயப்படுத்தி உறுதி செய்யப்பட வேண்டும்.
17. உளவளத்துணை மற்றும் வழிகாட்டல் சேவையிலிருக்கும் ஆசிரியர்கள் தமது வழமையான சேவைகளுக்கும் மேலாக, தமது பிரத்தியேக பாடத்தில் அல்லது இணைப்பாட, புறப்பாட விதானச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான தெரிவு இருத்தல் வேண்டும்.
18. சிரேஷ்ட உளவளத்துணையாளர் மற்றும் முதுநிலை உளவளத்துணையாளர்கள் என்போர் அவர்களுடைய சேவை தேவைப்படும் நிலையிலிருக்கக் கூடிய திணைக்கள மட்டத்துக்குட்பட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகப் பணியாளர்கள் போன்றோருக்குச் சேவைகளை வழங்க ஊக்கப்படுத்த வேண்டும்.

## ஆதரவும் மேற்பார்வையும்

1. சாதகமான கற்றலையும் தகவல் அறிவித்துக் கற்பித்தலையும் கூடிக் கற்றல் அணுகுமுறையினையும் மேம்படுத்தி அவற்றை ஊக்கப்படுத்த வேண்டும்.
2. ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் ஒரு தகுந்த மேற்பார்வைப் பொறிமுறையினை வழங்க வேண்டும்.
3. ஆசிரிய ஆலோசகர்கள் ஆசிரியர்களின் கற்பித்தல் தொடர்பான நடத்தைகளுக்கு மட்டும் பொறுப்பானவர்கள் என்ற வகிபாகத்திலிருந்து மாறி, அவர்கள் ஆசிரியர்களுடைய நல்ல ஆலோசகர்களாகவும், மேற்பார்வையாளர்களாகவும் மாறுவதற்கு ஊக்கமளித்தல் வேண்டும்.

## உளசமூக நன்னிலையைப் பேணுதல்

1. மாணவர்கள் தமது ஒத்த குழுவினரோடு இணைந்து, ஒத்துழைத்துச் செயற்படக்கூடிய வகையில் பாடசாலை மட்டத்தில் கழகச் செயற்பாடுகள், மாணவ மட்ட நிர்வாகச் செயற்பாடுகள், பண்பாட்டு நிகழ்வுகள், கல்விச் சுற்றுலாக்கள், ஏனைய ஆக்கபூர்வச் சிந்தனைகளுக்கும் ஆக்கச் செயற்பாடுகளுக்குமான களங்கள் போன்றவைத் தொடர்ச்சியாக நடைபெறுவதற்குரிய இடமும் நேரமும் வழிகாட்டல்களும் வழங்கப்பட வேண்டும்.
2. பாடசாலைகள் கூட்டுச் சேர்ந்து செயற்படும் ஆரோக்கியமான போட்டி நிகழ்ச்சிகளை ஊக்குவிப்பதோடு, ஆரோக்கிமற்ற தனியாள் போட்டி நிகழ்ச்சிகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். ஆரோக்கியமான செயற்பாடுகள் மற்றும் ஆரோக்கியமற்ற செயற்பாடுகள் என்பவை மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், பெற்றோர்கள் மற்றும் உளவளத்துணைச் சேவைப் பகுதிக்குப் பொறுப்பாயிருப்பவர் ஆகியோரின் உதவியுடன் மாகாணக் கல்வித் திணைக்களத்தால் வரையறுக்கப்படும்.
3. தற்போது நடைமுறையிலுள்ள பரீட்சைக்கான தகவல்களிற்கு தயார்படுத்தும் முறைமையானது 5E என்ற கற்பித்தல் முறைமைக்கு மாற வேண்டும். அத்துடன் ஆசிரியர்களையும் பாடசாலைகளையும் மதிப்பீடு செய்யும் முறைமைகளும் தேசிய மட்ட பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் அமையாது, பரந்த வரையறைகளான மாணவர் மேம்பாடு, மாணவர் நலன் பேணல், சிறுவர் உரிமைகளின் அடிப்படை அவதானிப்புக்கள், மாணவர்களின் ஒட்டுமொத்த இயலுமைகளின் முன்னேற்றம், ஆற்றல் வளம், தர்க்கரீதியான சிந்தனை, உறவு நிலைமைகள், வாழ்க்கையும் சமூக திறன்களும், நற்பிரஜையாக இருப்பதற்குரிய விழுமியங்கள் போன்றவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுவதாக மாறவேண்டும்.
4. தனியார் கல்வி நிறுவனக் கலாசாரத்துக்கான முக்கியத்துவம், அளவு மற்றும் அங்கீகாரம் என்பன குறைக்கப்படுவதோடு, தொழில் கற்கை நெறிகளுக்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட வேண்டும்.
5. ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் அவர்கள் தங்களுடைய ஒத்த குழுவினரோடு இடையீட்டு தொடர்பாடலை மேற்கொள்ளக் கூடிய கிரமமான அமைப்பு ஒன்றையும், அவற்றிற்கான வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். காலத்துக்குக் காலம் பாடசாலை மட்டத்தில் பணியாளர் கூட்டங்களைக் கூட்டி, அந்தக் கூட்டங்களில் தற்போதிருக்கும் பிரச்சினைகளை மட்டுமே கதைத்துக் கொண்டிருக்கும், மாறிமாறிப் பழிசுமத்தும் நிலைமைகளை மாற்றி, ஆசிரியர்களிடையே நட்புறவையும், புரிந்துணர்வையும், பகிர்தலையும் கற்றுக் கொள்ளலையும் மேம்படுத்தும் நட்புறவுச் சூழலை ஏற்படுத்த வேண்டும்.
6. ஆசிரியர்களிற்கும், அதிபர்களிற்கும் தேவைப்படுகின்ற மேற்பார்வைப் பொறிமுறையைப் பலப்படுத்தி, சிறந்த மதிப்பீட்டு முறையை உருவாக்கி, அதன் பெறுபேறுகள் பற்றியும் கூறவேண்டும்.
7. கூட்டான செயற்பாடுகளில் பங்கெடுப்பதன் மூலமும் கிரமமான கூட்டங்கள் மூலமும் பாடசாலைக்கும் பெற்றோர், சமூகம், அரச கட்டமைப்புக்கள் போன்றவற்றிற்கும் இடையேயான இடைவினைகளையும் தொடர்பாடல்களையும் ஊக்குவிக்க வேண்டும்.

## அத்தியாயம் 4: கற்றல், கற்பித்தல் பரீட்சைகள்

### பரிந்துரைகள்

### ஆரம்பக்கல்வி

1. எல்லா ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கும் கணித, விஞ்ஞான எண்ணக்கருக்கள் பற்றியும் தமிழ் மொழி, ஆங்கிலம் அத்துடன் கல்வி முறைமை தொடர்பாகவும் கல்வி வழங்க வேண்டும்.
2. தற்போது கலைப்பிரிவில் தேர்ச்சியைப் பெற்றுள்ள தரம்1 தொடக்கம் தரம் 5 வரை கற்பிக்கும் ஆசிரியர்களின் தேர்ச்சிமட்டத்தை அதிகரித்தல் வேண்டும்.
3. தரம்1 தொடக்கம் தரம் 5 வரை உயர் தகைமையுள்ள தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை எல்லாப் பாடங்களையும் கற்பிக்க விடுதல் வேண்டும். எல்லாப் பாடங்களுக்கும் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களால் கற்பிக்கக் கூடியவகையில் ஆசிரியர்களை நியமிக்க வேண்டும்.

4. எல்லா வகுப்பறைக் கற்றலிலும் பிள்ளை நேய அணுகு முறையை அமுல்படுத்தி கண்காணித்தல் வேண்டும். (UNICEF Method)
5. 2015 வரை உலக உணவுத்திட்டத்தை தொடர்ந்து வழங்கவேண்டும். WFP ஐத் திருப்தி செய்யும் வகையில் செயற்படும் தவறான நடவடிக்கைகளைத் தவிர்ப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

## ஆசிரியர்கள்

1. ஒழுங்கான கல்வி முறைமை, தற்கால கற்பித்தல் முறைகள், பாடப்பரப்புகளின் அறிவு, நடைமுறைப் பிரயோகம் என்பவற்றைக் கூட்டுதல், பொது அறிவு, மாணவர்களை ஊக்குவிக்கும் முறை, கற்றலில் மாணவர்களுக்கான விருப்பத்தையும் ஆர்வத்தையும் பேணுவதற்காக தொடர்ச்சியான ஊக்குவிப்பு என்பவற்றினூடாக மாணவர்களை எதிர்கால சமூகத்திற்கு ஏற்ப தயார்ப்படுத்த முடியும் என ஆசிரியர்களுக்கு எடுத்துரைத்து அவர்கள் மனதில் பதித்தல் வேண்டும்.
2. கற்பித்தல் முறைகள், மாணவர் அடைவை அளவிடல், மாணவர் ஒழுக்கங்களைப் பேணுதல் போன்றவற்றில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்குதல் வேண்டும். பல்வேறு பாடங்களிலும் புதிய மற்றும் நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு மாணவர்களின் மனவெழுச்சிசார் நடத்தைகளை சிறந்த நிலையில் எவ்வாறு பேணுவது என்பது தொடர்பான பயிற்சி நெறிகளை வகுப்பறைக் கற்பித்தலை ஆரம்பிப்பதற்கு முன்னரும் பின்னரும் வழங்குதல் பயனளிக்கத்தக்கதாகும்.
3. வினைத்திறனுடன் செயற்படுத்தும் நோக்கில் கல்வி அமைச்சினால் நிறுவப்பட்டு வலயக் கல்விப் பணிமனையின் கீழ் இயங்கும் ஆசிரிய வள நிலையங்கள் தமது கடமைப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுவதைத் தீர்மானிக்க ஒவ்வொரு வலயத்திலும் அமைந்துள்ள ஆசிரிய வள நிலையங்களிலுள்ள கருவிகள், தளபாடங்கள், ஆளணி நிலைமைகள் மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பான மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ள வேண்டும்.
4. சேவைக் காலப் பயிற்சி தேவைப்படும் விடயப்பரப்புகளை தீர்மானிப்பதற்கு ஆசிரியர்களுடன் கலந்தாலோசித்து பயிற்சியை மேற்கொள்வதுடன் அதில் பெற்றுக் கொண்ட விடயங்கள் வகுப்பறையில் முன்வைக்கப்படுகின்றனவா என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.
5. கற்றல் கற்பித்தலில் செயல்நிலை ஆய்வுகளை மேற்கொண்டு, மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகளை அதே பாடத்தைக் கற்பிக்கும் வேறு ஆசிரியர்களுடன் கலந்துரையாடி மேலும் கற்பித்தல் தொடர்பாக கற்று புதிய கற்பித்தல் முறைகளையும் தொழினுட்பங்களையும் அறிமுகம் செய்ய ஆசிரியர்களை ஊக்குவித்தல் வேண்டும்.
6. மாணவர் கற்றலை மேம்படுத்த சேவைக்கால ஆலோசகர்கள் குறிப்பிட்ட வகையிலான (தகவல்கள், வகுப்பறைச் செயல்முறை) மாதிரி வகுப்புக்களை நடத்திக் காட்டுதல் அவசியமாகும்.
7. தரம் 10 தொடக்கம் 13 வரை கற்கும் மாணவர்கள் இவ் வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களில் ஒருவரைத் தனது கல்வி, தொழில் வழிகாட்டல் ஆலோசகராக தெரிவு செய்யவேண்டியது அவசியமாகும். அவர்கள் மாதத்திற்கு இருமுறை சந்தித்து வழங்கப்பட்ட ஆலோசனைகள் தொடர்பான பதிவுகளை மேற்கொண்டு பேணுதல் வேண்டும்.
8. கல்விசார் உளவளத் துணையாளர் மாணவர்களை பாடசாலை, சமூகத் தொண்டு வேலைகளில் ஈடுபடச் செய்வதுடன் 16 அல்லது அதிலும் கூடிய வயதுள்ள மாணவர்களுக்கு பாடசாலை நேரம் தவிர்ந்த நேரங்களில் மணித்தியாலக் கொடுப்பனவிற்கமைய தொழிலைப் பெற்றுக் கொள்ள முயற்சித்தல் வேண்டும்.
9. பாடசாலையில் அல்லது பாடசாலைக்கு வெளியே தொண்டர் சேவை அல்லது கொடுப்பனவுடனான வேலையைச் செய்யும் மாணவர்களுக்கு பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத் திட்டத்தில் புள்ளிகளை வழங்க வேண்டும்.

## வகுப்பறைக் கற்றல், கற்பித்தல் தொடர்பான பரிந்துரைகள்

1. விசேட வளங்கள் உள்ள பாடசாலைகள் அருகில் உள்ள வளமற்ற பாடசாலைகளுடன் அவ்வளங்களை பகிர்வதற்கு ஊக்குவிக்க வேண்டும்.
2. ஒவ்வொரு பாசாலையிலும் சிறந்த நூல்களைக் கொண்ட நூலகத்தையும் ஒவ்வொரு வகுப்பறையிலும் மாணவரின் ஆர்வத்திற்குரிய நூல்கள் உள்ள அலுமாரியைக் கொண்டிருப்பதுடன் அவற்றை இரவல் பெற்று வீட்டிற்கு கொண்டு செல்லவும் அனுமதி அளித்தல் வேண்டும்.
3. வன்னியில் உள்ள காடுகளில் இயற்கை நிலையங்களை நிறுவுதல் வேண்டும். மாகாணங்களில் இருந்து வரும் மாணவர்கள் ஆசிரியர்கள் நான்கு அல்லது ஐந்து நாட்கள் தங்கியிருந்து அக்காட்டுச் சூழலில் விஞ்ஞானம், கணிதம், சூழலியல் முதலியவற்றை அனுபவம் மூலம் கற்கவிடல் வேண்டும்.
4. சூழற்றொகுதி, மக்களுக்கு அதன் பயன்பாடு பற்றி கற்றுக்கொள்ள தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தைப் பயன்படுத்தல் வேண்டும்.
5. க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு வார இறுதி நாட்களிலும், வார நாட்களில் மாலை 3.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை தொழிற்றிறன், மென்பொருள்சார் திறன்கள், முரண்பாட்டு முகாமைத்துவம், விழுமியக் கல்வி, புறக்கலைத்திட்டச் செயற்பாடுகள், கற்கை நெறிகளை மேற்கொள்ள பாடசாலைகளைப் பயன்படுத்த ஆவன செய்தல் வேண்டும். க.பொ.த. சாதாரண தரம், உயர் தரத்தில் சித்தியடையாத மாணவர்களுக்கு திறன்சார் வகுப்புகளைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியும். இம் மாணவர்கள் பாடசாலை மாணவர்களாகவே கருதப்படுவதால் நிரந்தர ஆசிரியர் கிடைக்கக் கூடியதாக இருப்பதுடன் செலவையும் குறைக்க முடியும்.
6. **ஜனவரி 2014 இல் இருந்து தரம் 12 வரை கட்டாயக் கல்வியாக மாற்றப்படல் வேண்டும். 2015 இல் இருந்து தரம் 13 வரை கட்டாயக் கல்வியாக மாற்றப்படல் வேண்டும். பிரித்தானியாவில் 2013, 2014 ஆகிய ஆண்டுகளில் இது மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதிதாக வடிவமைக்கப்பட்ட தேசிய பரீட்சைகளில் மாணவர்கள் தமது பெறுபேற்றுக்கு அமைய தொழில்சார் நுட்பத் துறை அல்லது கல்விசார் துறை ஒன்றைத் தெரிவு செய்து கொள்ளமுடியும். இத் தேசிய பரீட்சைகள் செய்முறை, அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட கற்றல், சமூக செயற்பாடுகள் என்பவற்றிலான பாடசாலை மட்ட வினையாற்றுகைக்கான கணிப்பீடுகளையும் உள்ளடக்கியிருக்கும்.**
7. **2013 இல் கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் 30% இலும் குறைவான பெறுபேற்றைக் கொண்ட ஒவ்வொரு வலயத்திலும் இரு பாடசாலைகளில் இலத்திரனியல் கற்கை நெறியை அமுல்ப்படுத்த வேண்டும். இதற்கு ஏற்கனவே தயாரிக்கப்பட்டதும் தற்போது மாகாணக் கல்வித் திணைக்களத்தால் எல்லா வகுப்புகளுக்கும் தயாரிக்கப்படுகின்றதுமான இலத்திரனியல் அலகுகள் பயன்படுத்தப்படும்.**
8. ஒவ்வொரு தவணை ஆரம்பத்திலும் மாணவர் ஒவ்வொருவரினதும் அறிவு, திறன்கள் கணிப்பிடப்பட்டு அவர்களுக்குப் பொருத்தமான இலத்திரனியல் கற்கை அலகுகளை வழங்கி தவணை முடிவில் மேற்கொள்ளப்படும் கணிப்பீட்டுடன் ஒப்பிடல் வேண்டும்.
9. **முதன்மைப் பாடங்களில் குறைவான பெறுபேறு, வரவு ஆகியவற்றின் அடிப்படையில் தரம் 11 இன் பின் கல்வியைத் தொடர முடியாத மாணவர்களுக்கு தொழிற்றிறன்சார் உயர் டிப்ளோமா கற்கை நெறியை வழங்க வேண்டும்.**
10. வலய மட்டத்தில் ஆசிரியர்களின் கற்பித்தல் தரத்தை உயர்த்துதல் வேண்டும். மாணவர்களின் பாடசாலைக்கான பயண நேரத்தைக் குறைத்து உயர் தரமான கல்வியைப் பெறும் வகையில் மீத்திறன் மாணவர்களை அனைத்துப் பாடசாலைகளிலும் சேர்த்தல் வேண்டும்.
11. வலய மட்டத்தில் மாணவர்களின் பாடசாலைக்கான பயண நேரத்தைக் குறைத்து விசேட தேவையுள்ள மாணவர்கள் கல்வியைப் பெறும் வகையில் வகுப்பறைகளை பாடசாலைகளில் அமைத்தல் வேண்டும்.
12. மாணவர் மையக் கல்வியில் கவனம் செலுத்துதல் வேண்டும்.
13. மாணவர்களுக்கு இலத்திரனியல் தளத்தை வழங்க வேண்டும். அதில் பிரதானமான உள்ளடக்கத்தைச் சரி பார்ப்பதுடன் அவற்றிற்கான மேலதிகமான உள்ளடக்கம் இனங் காணப்பட்டுள்ளதா என நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

14. ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் அத்துடன் ஏனைய பாடங்களுக்கும் பாடசாலையில் வழிப்படுத்தி மேம்படுத்தக் கூடிய வகையில் இலத்திரனியல் கற்கை அலகுகளை வழங்கி மாணவர் தமது சுய கற்றல் வேகத்திற்கமைய செயற்படவிடல் வேண்டும்.
15. கூட்டுறவுக் கற்றலுக்கான திறன்கள், பரிசோதனைகள் மூலம் அனுபவம் சார்ந்த கற்றல், களநிலை ஆய்வு, செயற்றிட்டங்கள் என்பவற்றை மேம்படுத்த சிறு குழுக் கலந்துரையாடல் ஊக்குவிக்கப்படல் வேண்டும்.
16. ஆசிரியர் பற்றாக்குறையுள்ளதும், குறைவான பெறுபேற்றைக் கொண்டதுமான 24 பாடசாலைகளைத் தெரிந்து அவற்றில் முன்னோடியாக இலத்திரனியல் கற்கை நெறியை அமுல்ப்படுத்த வேண்டும்.
17. வீடியோ மூலம் கற்றவற்றை அனுபவம் மூலம் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் செயற்பாடுகளுடனான துணைப் பாடங்கள் வழங்கல்.
18. பாடசாலையிலுள்ள வளங்களைப் பயன்படுத்தி பாடசாலை நேரத்தின் பின்னர் திறன்சார் கல்வியை வழங்கல்.
19. பாடசாலைகளில் ஆசிரியர் - மாணவர் விகிதம் சுற்று நிருபத்திற்கமைய 1:25 அல்லது 1:30 ஆக இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.
20. மாணவர் பிரச்சினைகள் அதாவது மாணவர் எவ்வாறு பாடசாலைக்குச் செல்கின்றனர் பாடசாலைக்குச் செல்லும் வழியில் - வீட்டில், சமூகத்தில் - அவர்களது பிரச்சினைகள் என்பவை தொடர்பாகக் காலத்திற்குக் காலம் களநிலை ஆய்வுகளை மேற்கொண்டு கற்றலில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளான மாணவர் வரவின்மை, ஊக்குவிப்பின்மை முதலியவற்றைக் கண்டறிந்து நிவர்த்தி செய்வதன் மூலம் மாணவர் அடைவை உயர்த்த முடியும்.
21. வகுப்பறைக் கற்பித்தலுக்கான நேரத்தில் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்காகச் செலவிடும் நேரத்தை ஒழுங்குபடுத்தல் வேண்டும். மேலும் வெளி நிறுவனங்கள் தமது நோக்கங்களுக்காக நடத்தும் பயிற்சி வகுப்புகள் மற்றும் போட்டிகளில் அடுத்தடுத்த மட்டங்களில் ஈடுபடும் நேரம் மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்காக அர்ப்பணிக்க வேண்டியதாகும்.
22. உடற்கல்வி, சுகாதாரம், மற்றும் பிரதான பாடங்களைப் போன்று வேலையுலகுக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தக் கூடிய பொருளியல், வர்த்தகமும் வங்கியியலும் தொழில்சார் திறன்கள் ஆகிய புதிய பாடங்களைச் சமமாகக் கருதவேண்டும்.
23. மாணவர்களும் ஆசிரியர்களும் தமது தாய்மொழியில் விசேடமாக இலக்கணத்தில் தேர்ச்சி அடைய ஊக்குவித்தல் வேண்டும். இத் தேர்ச்சி தாய்மொழியிலான பரீட்சைகளில் மாணவர் வழங்கப்பட்ட வினாக்களைப் புரிந்து கொள்வார்கள் என்பதை உறுதிப்படுத்தும்.
24. எல்லா வகுப்புகளிலும் எல்லாப் பாடங்களிலும் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற கலைத்திட்டம் தமிழ் மொழியிலும் அதேவேளை ஒவ்வொரு பாடத்திலும் நிபுணத்துவம் வாய்ந்தவர்களின் ஆலோசனையுடனும் உதவியுடனும் மீளாய்வு செய்ய வேண்டியது அவசியமாகும்.
25. இனங்காணப்பட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தமது கற்கைக்குப் பொருத்தமான பிரசுரிக்கப்பட்ட ஆய்வு அறிக்கைகளுடன் ஒப்பிடவும் வேறுபாடுகளை அறியவும் மேலும் வாசிப்பதற்கு ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஊக்குவித்தல் வேண்டும்.
26. அதிபர், தவணை விடுமுறையின் முடிவில் ஆசிரியர்களின் கடந்த தவணைத் தொழிற்பாடுகள் தொடர்பாக குழுவாகக் கலந்துரையாடுவதுடன் அடுத்த தவணைக்கான ஆயத்தங்களையும் மேற்கொள்ளல் வேண்டும். இக் கலந்துரையாடலானது கற்பித்தல் முறைகள், நிர்வாக நடைமுறைகளைச் சீரமைத்தல், கற்றல் கற்பித்தலில் புதிய நுட்பங்களை அறிமுகப்படுத்தல் போன்ற விடயங்களிலும் கவனம் செலுத்தவேண்டும். மேற்படி கலந்துரையாடலில் அதிபர், பாட உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் இடம்பெற வேண்டும்.
27. சேவைக்கால ஆலோசகர்கள் எல்லாப் பாடசாலைகளையும் சமமாகக் கருதுவதுடன் பாடசாலைகளையும் ஆசிரியர்களையும் மதிப்பீடு செய்து செயற்றிட்டங்களை பரிந்துரைத்தல் வேண்டும்.

## பரீட்சைகள் தொடர்பான அவதானிப்பும் பரிந்துரைகளும்

1. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் நம்பகம், தகுதி பற்றிய கற்கை ஒன்றைத் தேர்வு ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியிலிருந்து நெட்டாங்கு ரீதியாக மேற்கொள்ளல் வேண்டும். அதுவரை இப்பரீட்சைக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தைக் குறைத்துக் கொள்ளல் வேண்டும்.
2. வறுமைக்கோட்டின் கீழ், வறுமைக்கோட்டில் அல்லது வறுமைக் கோட்டிற்கு சற்று மேல் உள்ள குடும்பங்களிலுள்ள மாணவர்களுக்கு அவர்களின் பெறுபேறுகளைக் கருத்தில் கொள்ளாது புலமைப்பரிசில் வெகுமதிகளை வழங்குவதற்கான திட்டத்தை அறிமுகப்படுத்தல் வேண்டும்.
3. பெற்றோரில் இருவரையும் அல்லது ஒருவரை இழந்த மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குதல் வேண்டும்.
4. க.பொ.த. சாதாரண, உயர்தரத்தில் உயர்வான பெறுபேறுகளைக் கொண்டிருக்கும் பாடசாலைகளுக்கான அனுமதி, மாணவர் கற்கும் பாடசாலையை அடிப்படையாகக் கொண்டும் வலயக் கல்விப் பணிமனையினால் நடத்தப்படும் கல்விசார் மதிப்பீட்டுடன், மாணவர் வளர்ச்சி சார்ந்த ஏனைய விடயங்களில் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டின் அடிப்படையிலும் அமைதல் வேண்டும்.
5. மாகாண மட்டத்தில் நடத்தப்படும் தரம் 9 பரீட்சையை வலுப்படுத்தல். அதில் எழுத்துப் பரீட்சை மட்டுமன்றி மாணவர்களின் பல்வேறு திறன்களையும் பரீட்சித்தல் வேண்டும்.
6. ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி என்பவற்றை மாணவர்களை எதிர்காலத்திற்கு முகம் கொடுக்கக் கூடிய வகையில் நாளாந்த வாழ்க்கைக்கும் வேலையுலகிற்கும் தம்மைத் தயார்ப்படுத்தக் கூடிய திறன்களை வழங்கக் கூடியதாக வலுப்படுத்தல் வேண்டும்.

## கலைத்திட்டத்திற்கான பரிந்துரைகள்

1. பாரம்பரிய பாடங்களுக்கு எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டதும் கொள்கை ரீதியானதுமான கலைத்திட்டத்தைத் தயாரித்தல் வேண்டும். **உதாரணம்:** உயிருள்ளவற்றின் மீதுள்ள தாக்கம், தாவரங்கள், விலங்குகள் மீதான இரசாயனத் தாக்கம் எனும் வகையில் ஒளியைக் கற்பிக்கமுடியும். ஒளியின் பண்புகள், அதன் நிறப்பட்டையை அலை நீளமாகக் கருதுதல்.
2. எல்லாப் பாடங்களிலும் அறிவின் படிமுறை ஒழுங்கில் உயர்மட்டம் வரை வினாக்களை தயாரித்தல் வேண்டும்.
3. மாணவர் சிறிய அளவில் ஆய்வுகளை மேற்கொள்ளல் வேண்டும். நூலகம், பாடசாலை, சூழல் மற்றும் மக்களிடமிருந்து தேவைப்படும் தகவல்களைப் பெற்று ஆய்வுக்குப் பயன்படுத்திய முறை, அவதானிப்புகள், முடிவுகள் என்பவை அடங்கிய அறிக்கையைத் தயாரிக்க வேண்டும். ஒவ்வொரு தவணையும் புள்ளிகள் வழங்கப்பட்டு அவற்றின் மொத்தப் புள்ளிகள் நூற்றுவீதத்தில் க.பொ.த. சாதாரண தரப் புள்ளிகளுடன் வழங்கப்படல் வேண்டும்.
4. பாடசாலை மட்டத்தில் இடைநிலை வகுப்புகளில் சராசரித் தரப்புள்ளித் திட்டம்(GPA), திரள் சராசரித் தரப்புள்ளித் திட்டம் (CGPA) ஆகிய மதிப்பீட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல். எளிமையான இம் மென்பொருளானது தகவல் தொழினுட்ப ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட GPA, CGPA என்பன கணிக்கப்பட்டு ஏனைய ஆசிரியர்களும் நிர்வாகத்தினரும் பார்க்கும் வகையில் பேணப்படலாம்.
5. இடைநிலை ஆசிரியர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் GPA, CGPA திட்டம் தொடர்பான பயிற்சிகளை வழங்குதல் வேண்டும்.
6. பாடப்பரப்பில் விசேடமானோர், வாண்மைத் தொழில் மற்றும் வர்த்தக உலகைச் சார்ந்தோர் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்றை உருவாக்குதல் வேண்டும். அக்குழு பின்வருவன தொடர்பாக நவம்பர் 2014 இன் முடிவில் பரிசீலனை செய்து முன்மொழிவுகளை வழங்குதல் வேண்டும்.
    a) ஆங்கிலத்தில் குறைவான பெறுபேற்றிற்கான காரணங்கள், கலைத்திட்டம் மற்றும் பயன்படுத்தப்பட்ட கற்பித்தல் முறைகள், மாணவர்களை ஆங்கிலத்தில் முதலில்

பேசக்கூடியவர்களாகவும் பின்னர் வாசிக்கக் கூடியவராயும் ஆக்குதல் தரம் 1 தொடக்கம் தர் 11 வரையான கணித பாடக் கலைத்திட்டத்தைத் தயாரித்தல் அல்லது ஏற்கனவேயுள்ள கலைத்திட்டத்தை பிரயோகம் மூலம் கற்பதற்கும் பயிற்சிகளை கரும்பலகையைப் பயன்படுத்தி அல்லது எழுதிச் செய்யாது திறமைகளைக் கையாண்டு, அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட முறைகளைப் பயன்படுத்தி செய்யக்கூடிய வகையில் ஆக்குதல்.

b. வாசிக்கக் கூடியவர்களாகவும் அதன் பின்னர் எழுதக் கூடியவர்களாகவும் ஆக்குவதற்கான புதிய அணுகுமுறைகளை முன்மொழிதல். இங்கு மாணவர் தரம் 10 அல்லது 11 இற்குச் செல்லும் வரை இலக்கணத்தைக் கற்பிப்பதற்கு காலத்தைக் கழிக்க வேண்டியதில்லை.

c. ஒருங்கிணைந்த விஞ்ஞானத்திற்கான கலைத்திட்டத்தைத் தயாரித்தல், தரம் 9 தொடக்கம் தரம் 11 வரை ஒவ்வொரு தவணையும் கற்பிக்கப்பட வேண்டிய உள்ளடக்கங்களை கால அட்டவணைப்படுத்தல்.

## க.பொ.த. சாதாரண, உயர்தர பரீட்சைகள் மற்றும் புதிய பாடசாலைக் கல்வியாண்டுக்கான நாட்காட்டி தொடர்பான பரிந்துரைகள்

இங்கு பிரதான பரிந்துரை தேசிய ரீதியான கல்வி முறைமையில் உள்நோக்கம் எதுவுமின்றி உருவாக்கப்பட்டதும் தொடர்ச்சியாகக் காணப்படுவதுமான பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கில் அமைந்துள்ளதாகும். எனவே இத் தேசிய மட்டத்திலான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்வைக்கப்பட்ட முன்மொழிவை மாகாணக் கல்வி அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் போன்ற தேசிய நிறுவனங்கள் கவனத்திற் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

1. பாடசாலைக் கல்வியாண்டு செப்ரெம்பர் 2015 இலிருந்து ஒவ்வொரு வருடமும் எல்லா வகுப்புக்களுக்கும் க.பொ.த. சாதாரண, உயர்தர வகுப்புக்கள் உட்பட செப்ரெம்பர் மாதத்தின் முதலாவது அல்லது இரண்டாவது வாரத்தில் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.
2. 2015 இலிருந்து ஆரம்பித்து க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை ஒவ்வொரு வருடமும் யூன் மாதத்தில் நடத்தப்படல் வேண்டும்.
3. 2016 இலிருந்து ஆரம்பித்து க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை ஒவ்வொரு வருடமும் யூலை மாதத்தில் நடத்தப்படல் வேண்டும்.
4. பரீட்சைத் திணைக்களத்திலிருந்து ஆரம்பித்து தேசிய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் உள்ள எல்லா பிரிவுகளிலும் அதாவது அமைச்சுக்கள், திணைக்களங்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் உட்பட அனைவருக்கும் ஏற்கனவே உள்ள கல்வித் தொழினுட்பங்களை மீள வடிவமைத்து பயன்படுத்தவும் பிரதானமாக பரீட்சித்தல், விடைத்தாள் திருத்துதல், மாணவர் அடைவுகளைக் கணிப்பிடல், பெறுபேறுகளை அறிக்கையிடல் தொடர்பாக புதிய நுட்ப முறைகளைப் பயன்படுத்த ஆலோசனை வழங்குதல் வேண்டும். அத்துடன் புதிய பாடசாலைக் கல்வியாண்டு மாற்றத்திற்கான நடைமுறையை ஏற்றுக்கொண்டு அதனை மாற்றியமைப்பதற்கு சகலரையும் தயாராக்குதல் வேண்டும். (பெரும்பாலான மாணவர்களைத் தமக்கும் சமூகத்திற்கும் பொருத்தமற்றவர்களாக மாற்றுவதற்கு ஏதுவான வகையில் அமையும், இளைஞர்கள் வளரும் பருவத்தில் அவர்களின் வாழ்க்கையில் மிகவும் பெறுமதிமிக்க காலத்தில் எட்டுத் தொடக்கம் 12 மாத கால விரயத்தை இம்முறை தடுக்கும். அத்துடன் உயர் கல்வி பெற்றவர்கள் ஒரு வருடம் முன்பாகவே தொழிலைப் பெற்றுக் கொள்ள வழிவகுக்கும். ஒரு வருடம் முன்னதாக ஊதியம் பெறுவதால் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பக் கூடியதாக தமது பணத்தை பல மடங்காகப் பெருக்கும் வகையில் செலவை மேற்கொள்ளக் கூடியவராவர்.)
5. பாடசாலைக் கல்வியாண்டுடன் ஒத்திருக்கும் வகையில் O/L மற்றும் A/L பரீட்சைகளை மீள ஒழுங்கமைப்பதற்காக மாகாணங்கள், கல்வி அமைச்சுக்கள், தேசிய கல்வி நிறுவகம் போன்றவற்றிலிருந்து உறுப்பினர்களைக் கொண்ட உயர்மட்டக் குழுவொன்றை ஸ்தாபித்தல் வேண்டும்.
6. எந்தவொரு தேசிய மட்டப் பரீட்சைக்குத் தோற்றும் பாடசாலை மாணவருக்கும் பரீட்சைக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் அனுமதி அட்டை பெற்றுக் கொள்ளும்

வரை 80% வரவு அவசியமானதாக இருத்தல் வேண்டும். மாணவர் வரவுப் பதிவேட்டில் வரவைப் பதிவு செய்த பின்னர் அவசர நிமித்தம் காரணமாக மட்டுமன்றி பாடசாலைக்கு வெளியே செல்ல மாணவர்களை அனுமதிக்கக் கூடாது.

7. வடமாகாணக் கல்வி அமைச்சர், செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், ஐந்து மாவட்டங்களில் ஒவ்வொன்றிலுமிருந்து ஒவ்வொரு வலயக் கல்விப்பணிப்பாளர், 1AB, 1C பாடசாலைகளில் இருந்து நான்கு அதிபர்கள் ஆகியோரைக் கொண்ட பிரதிநிதிகள் குழு மத்திய கல்வி அமைச்சர், பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் மற்றும் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உறுப்பினர் அத்துடன் பல்கலைக்கழகங்கள், கல்வியியற் கல்லூரிகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் சந்திப்பை ஏற்படுத்தி NESR இன் கீழ்வரும் முன்மொழிவுகள் பற்றிய கலந்துரையாடலை மேற்கொள்ளல் வேண்டும்.
   a. O/L மற்றும் A/L வகுப்புகள் உட்பட எல்லா வகுப்புகளுக்கும் வருடந்தோறும் கல்வியாண்டு செப்ரெம்பர் மாதத்தில் ஆரம்பித்தல் வேண்டும். இந்நடைமுறை செப்ரெம்பர் 2014 இலிருந்து அமுல்ப்படுத்தப்படல் வேண்டும்.
8. வடக்கு மற்றும் ஏனைய மாகாணங்களின் கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், கொழும்பு, பேராதனை, தென்கிழக்கு, கிழக்கு மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களைச் சார்ந்த கல்வி நிபுணர்களைக் கொண்ட குழுவொன்றை பின்வருவனவற்றிற்காக அமைத்தல்:
   a. கீழ்வருவனவற்றை உள்ளடக்கிய பரீட்சை முறை ஒன்றை உருவாக்கல்.
      i. மாணவர் கற்றல், முன்னேற்றம் நடைமுறை சார்ந்த செயற்பாடுகள் தொடர்பான கணிப்பீடுகள், தவணை தோறும் ஒவ்வொரு பாடத்திலும் செயற்றிட்டத்தை அடிப்படையாகக் கொண்ட கற்றல் ஆகிய அம்சங்களில் பாடசாலை மட்டத் தொடர் கணிப்பீடு.
   b. கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பப் பாடங்கள் ஆகியவற்றிற்கு தரம் 13 இலுள்ள பாட உள்ளடக்கத்தை பல்கலைக்கழக பாட உள்ளடக்கத்துடன் இணைத்துக் கொள்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்தல். இதன மூலம் மாணவர்களுக்குப் பாடசாலையிலும் பார்க்க சிறந்த வளங்களும் முதுகலைமாணி, கலாநிதிப் பட்டம் பெற்ற விரிவுரையாளர்களும் பல்கலைக்கழகத்தில் கிடைக்க வாய்ப்பேற்படும். மேலும் தற்போதுள்ள தரம் 12 இற்கான கலைத்திட்டத்தைப் பரவலாக்கி எல்லாப் பாடங்களையும் அனுபவ மூலமான கற்றல் முறைகளைப் பயன்படுத்திக் கற்பிப்பதற்காக காலத்தை நீடித்து வழங்குதல்.
9. விருப்பத்திற்குரிய அல்லது கூடைப்பாடங்களில் அமைந்துள்ள பாடங்களை ஆகக்குறைந்தது ஒன்று அல்லது இரண்டு தவணைகளிற்கு 9 நுண்மதிகளையும் வளர்க்கக்கூடிய விதத்தில் கற்பிக்க வேண்டும்.

## பாடசாலைகள் தொடர்பான பரிந்துரைகள்

1. **பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கையை 1500 ஆக மட்டுப்படுத்தல் வேண்டும்.**
2. வகை 1C பாடசாலைகளில் மாணவர் வரவு தொடர்பாக ஆய்வு செய்தல் வேண்டும். தேவை ஏற்படின் 1AB பாடசாலைகளை உருவாக்க 1C பாடசாலைகளை 1AB பாடசாலைகளாக மாற்றுதல் வேண்டும்.
3. எல்லா 1C பாடசாலைகளிலும் வர்த்தகம், ICT பாடநெறியை கற்பிக்க வசதியளித்தல் வேண்டும்.
4. எல்லா வகை 11, 1C, 1AB பாடசாலைகளும் க.பொ.த. சாதாரண தரம், உயர்தரத்தில் பரீட்சைக்குத் தோற்றி பெறுபேறுகளுக்காகக் காத்திருக்கும் மாணவர்களுக்கு வார நாட்களில் 3 மணி தொடக்கம் 5 மணிவரையும், சனிக்கிழமைகளில் முழுநேரமாகவும் தொழில் திறன்சார் பயிற்சிகளை வழங்கவேண்டும்.
5. மாகாணத்தினதும் இலங்கையினதும் பொருளாதாரத்திற்கமைய தொழில் வாய்ப்பிற்கும் பொருந்தி வாழ்வதற்கும் தேவையான திறன்கள் தொடர்பான விடயங்களில் பூரணமான கற்கை மேற்கொள்ளல் வேண்டும். இக்கற்கையில் முடிவில் தொழில் தலைப்புக்களையும் ஒவ்வொரு தொழிலுக்கும் தேவையானவற்றையும், கொண்டிருக்கவேண்டிய திறன்கள்

பற்றியதுமான விடயங்களைக் கொண்ட அகராதி ஒன்றை வெளியிடவேண்டும். இவை இலத்திரனியல் வடிவத்தில் அமைவதுடன் எல்லாப் பாடசாலைகளும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களும் பயன்படுத்தக் கூடிய வகையில் பேணப்படுவதுடன் உரிய காலத்தில் இவற்றைப் பயன்படுத்தப்படவும் வேண்டும்.

6. ஒவ்வொரு வலயத்திலும் குறைந்தது மூன்று 1C அல்லது 1AB பாடசாலைகளில், பாடசாலை நடைபெறாத நேரங்களில், ஏதாவது காரணத்திற்காக பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள் மீளவும் பாடசாலைக்கு வருகை தந்து தொழில்சார் கற்கைளை மேற்கொள்ள வகுப்புகளை நடத்த வேண்டும்.
7. எல்லாப் பாடசாலைகளும் அரச பாடசாலைகளாக மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கீழ் இயங்குதல் வேண்டும். தேசிய பாடசாலைகளும் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கீழ் மாற்றப்படுதல் வேண்டும்.
8. தனியார் நிறுவனங்கள், அரச நிதியில் அல்லது அரச உதவி பெற்ற நிறுவனங்களால் நடத்தப்படும் பயிற்சிகள் வழங்கப்படும் கல்வி ஆகியவற்றை கண்காணிப்பதுடன் தரத்தையும் பேண வேண்டும். வழங்கப்படும் பயிற்சியின் தரத்திற்கும் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் தரத்திற்கும் இடையே பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவை ஒழுங்குபடுத்தப்பட்டு ஒப்பிடக் கூடிய வகையில் சமமாகவும் சம சந்தர்ப்பத்தையும் தொழில் தேடுவோருக்கு வழங்க வேண்டும்.
9. 18 வயது வரையான பிள்ளைகளின் கல்விக்குப் பொறுப்பானவர்களாக இருக்க வேண்டிய மாகாணக் கல்வித் திணைக்களம், மாகாணக் கல்வி அமைச்சு என்பன இப்பிள்ளைகள் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத பாடசாலைகளுக்கு அல்லது தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்கின்றனரா என்பதில் குறைவான கவனத்தையே செலுத்துகின்றனர். இந் நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் கலைத்திட்டம், பாடநூல்கள், குறிப்புகள், பெறுபேறுகள், கட்டடங்கள் என்பன அரச பாடசாலைகளுக்கு ஒத்தனவா எனக் கண்காணித்து ஒழுங்குபடுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.
10. தனியார் கல்வி நிறுவனங்கள் நிறுவனம் செயற்படும் முறை, பயன்படுத்தும் கால அட்டவணை, மற்றும் பிள்ளைகளின் கல்வியில் தாக்கத்தைச் செலுத்தும் பிரதானமான காரணிகள் பற்றிய ஒரு முழுமையான ஆய்வொன்றை நடத்தி அவற்றிற்கு A, B, C, D எனும் வகையில் தரச் சான்றிதழ் வழங்குதல் வேண்டும்.

## சேவைக்கால ஆலோசகர்களுக்கான பரிந்துரைகள்

1. சேவைக்கால ஆலோசகரின் வகிபங்குகளை வலுப்படுத்தலும் அவர்களுக்கான தகைமைத்திறன் மதிப்பீட்டுத் திட்டத்தையும் உருவாக்கல்.
2. தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் முழுமையாக வகுப்பறைக் கற்பித்தலில் ஈடுபடாத சேவைக்கால ஆலோசகர்கள் ஒரு தவணைக்கு பாடசாலையில் கற்பித்தலில் ஈடுபடல் வேண்டும்.
3. சேவைக்கால ஆலோசகர்கள் பாடசாலையில் ஆசிரியர்களை தொடர்ச்சியாக ஒரு வாரம் அவதானித்து அவை தொடர்பாக அதிபர், ஆசிரியர்களுடன் கலந்துரையாடி இவை தொடர்பான அறிக்கையை அதிபர், உதவிக் கல்விப் பணிப்பாளரிடம் வழங்குவதுடன் எல்லா அறிக்கைகளும் பேணப்படல் வேண்டும்.
4. எல்லா ஆசிரியர்களும் சேவைக்கால ஆலோசகர்களும் கணனி பற்றிய செய்து காட்டல்களை மேற்கொள்ளல் வேண்டும். திணைக்களத்தால் நடத்தப்படும் பரீட்சையில் சித்தியடையும் எல்லா ஆசிரியர்களுக்கும் வெகுமதியாக ரூபாய் 5000 வழங்கப்படல் வேண்டும். மேலும் ஒரு நிமிடத்திற்கு 30 சொற்களை அச்சுப்பதித்து சித்தியடைவோருக்கும் ரூபாய் 5000 வழங்கப்படல் வேண்டும்.

## மாணவர்கள், விளையாட்டுத் தொடர்பான அவதானிப்புகளும் பரிந்துரைகளும்

### மாணவர்கள், விளையாட்டுத் தொடர்பான பரிந்துரைகள்

1. ஒவ்வொரு தவணையும் வாரத்திற்கு இரு தடைவை தரம் 1 தொடக்கம் தரம் 13 வரை எல்லா வகுப்புகளுக்கும் விளையாட்டுத் திறன் சார்ந்த செயற்பாடுகளை வழங்க வேண்டும்.
2. கரும்பலகையையும் குறிப்புகளையும் பயன்படுத்தி விளையாட்டுகளுக்கான சட்டங்களையும் விதிகளையும் கற்பதை விட விளையாட்டுக்களை விளையாடி நடைமுறையில் அவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் விளங்கிக் கற்றுக் கொள்ள முடியும்.
3. விளையாட்டு மற்றும் இணைக்கலைத் திட்டச் செயற்பாடுகளில் பங்குபற்றுவதற்காக வாரந்தோறும் தரப்புள்ளிகள் வழங்கப்பட்டு அவை தவணை இறுதியில் மாணவர் அறிக்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும். இவை க.பொ.த. சாதாரண தரப் புள்ளிகளுடன் சேர்த்துக் கொள்ளல் வேண்டும்.
4. ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு தவணையும் ஒவ்வொரு உள், வெளி அரங்க விளையாட்டுக்களிலும் ஒரு குழு விளையாட்டிலும் (board game ) பங்குபற்ற வேண்டும். வெளி அரங்க விளையாட்டுக்கள் பாடசாலை முடியும் நேரத்தில் இடம்பெறுவது சிறந்ததாகும்.
5. பாடசாலைக்கு உள்ளேயும் பாசாலைகளுக்கு இடையேயும் இடம்பெறும் குழு விளையாட்டுப் போட்டிகள் வெள்ளிக் கிழமைகளில் பின்னேரங்களிலும் சனிக்கிழைமைகளிலும் மட்டுமே இடம்பெற வேண்டும்.
6. மாகாண மட்ட விளையாட்டுக்கான கால அட்டவணையை மாகாண மட்ட பாடசாலை கிரிக்கட் குழு தேசிய பாடசாலை மட்ட கிரிக்கட் குழுவிற்கு அறியத் தருதல் வேண்டும். எனவேதான் மாகாண மட்ட, மாகாணங்களுக்கிடையேயான, தேசிய மட்டப் போட்டிகளுக்கான கால அட்டவணைகள் தயாரிக்க முடியும். இது மாணவர் கற்றலுக்கு முதலாவதாக முன்னுரிமை வழங்குவதை உறுதிப்படுத்தும்.
7. 19 வயதிற்குட்பட்ட மாணவர்களின் பாடசாலை மட்ட போட்டி, தேசிய மட்ட கிரிக்கட் குழுவிற்கான தெரிவை நோக்காக கொண்டிருத்தல் கூடாது. ஏனெனில் மாணவர்களில் 80 வீதமான கிரிக்கட் வீரர்களின் கல்வி இழப்புடன் இது தவிர்க்கும்.

### பரிந்துரை : விளையாட்டுப் புலமையாளர்

1. போட்டிகளில் ஈடுபடும் பாடசாலை அணிகளில் இடம்பெற விரும்புகின்ற ஒவ்வொரு மாணவரும் அடைய வேண்டிய கல்விசார் அடைவு மட்டத் தராதரம் நிர்ணயிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட வேண்டும். ஐக்கிய அமெரிக்க நாடுகளில் ஒவ்வொரு தவணையிலும் சராசரியாக ‘C’ தரம் எல்லாப் பாடங்களிலும் பெற்ற மாணவர்கள் மட்டுமே அடுத்துவரும் தவணையில் விளையாட்டுக்கலை மற்றும் ஏனைய போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படுகின்றனர்.
2. பாடசாலை நேரத்திற்குப் பின்பு விஞ்ஞான மற்றும் கலை மாணவர்களுக்கு உதவி தேவைப்படும் விடயங்களில் இலவசமாக விளையாட்டுப் பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

## அத்தியாயம் 5: தனியார் கல்வி நிலையங்களும் வடமாகாண கல்வி அமைப்பின் மீதான அவற்றின் தாக்கங்களும்

### பரிந்துரைகள்

உடனடியாக குறுகிய காலத்தில் வடமாகாணக் கல்வித் தொகுதி அமுலாக்கக் கூடிய பரிந்துரைகள் உள்ளன.

1. 10 பேருக்கு மேற்படாதவாறு வடமாகாணக் கல்வியியல் நிபுணர்களைக் கொண்ட குழுவொன்று பின்வரும் விடயங்கள் குறித்து ஆராய்ந்து பொருத்தமான ஒழுங்கு விதிகளையும் நியதிச்சட்டங்களையும் உருவாக்குவதற்காக அமைக்கப்பட வேண்டும்.
   a. பாடசாலை நேரத்தில் பாடசாலைக்கு வெளியே இலாப நோக்குடன் செயற்படும் தனியார் கல்வி நிலையங்களில் பாடசாலையில் தரம்1 முதல் தரம் 13 வரை படிக்கும் பிள்ளைகள் சேர்வதைத் தடுத்தல்.
   b. பாடசாலை நேரத்தில் தனியார் கல்வி நிலையங்களில் பாடசாலை ஆசிரியர்கள் கற்பிப்பதை தடை செய்தல்.
   c. எந்த நேரத்திலாவது தமது சொந்த வகுப்புக்களில் உள்ள மாணவர்களுக்கு இலாப நோக்குடனான தனியார் கல்வி நிலையங்களில் ஆசிரியர்கள் கற்பிப்பதைத் தடை செய்தல். இது ஆசிரியர்கள் வகுப்பறைகளில் தாம் கற்பிக்க வேண்டியதைக் கற்பிக்காமல் அவர்களைக் குறித்த தனியார் கல்வி நிலையத்துக்கு வருமாறு வற்புறுத்துவதைத் தடுக்கும்
   d. பாடசாலை தவணைக் காலத்தில் எந்த வேளையிலாவது வார இறுதி நாட்களுக்கு உட்பட்ட வாரமொன்றுக்கு 15 மணித்தியாலங்களுக்கு மேற்படாதவாறு மாணவர் ஒருவர் தனியார் கல்வி நிலையத்திற்குச் செல்லக் கூடிய கால அளவை மட்டுப்படுத்தல். (தவணை விடுமுறை தவிர்ந்த காலத்தில்)

## அத்தியாயம் 6: நிர்வாகம், நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள் மற்றும் ஆசிரியர் தொடர்பான பிரச்சினைகள்

### பரிந்துரைகள்

#### தகைமைகள் (Qualifications)

1. ஆசிரியர் நியமனத்துக்கான நியமன வகுதிகளுக்குரிய அடிப்படைத் தகுதிகளைத் தீர்மானித்து அவற்றை ஆட்சேர்ப்புத் திட்டத்தினுள் (Scheme of recruitment) அடக்க வேண்டும்.
2. ஆசிரியர் நியமனத்துக்கான ஆட்சேர்ப்பு பரீட்சைகளை நடத்த வேண்டும்.
3. பாடசாலைகளுட்படத் தொடர்பான எல்லா நிறுவனங்களுக்கும் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரதிகளை விநியோகிக்க வேண்டும்.

#### நியமனங்கள்

1. ஆட்சேர்ப்புப் பரீட்சையினதும் நன்கு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையினதும் பெறுபேறுகளின் அடிப்படையில் தகுதியை அடிப்படையாகக் கொண்டு ஊழியர்கள் நியமிக்கப்படவேண்டும்.
2. மாகாணத்தில் உள்ள கஷ்டப் பிரதேசங்களை இனங்கண்டு அவர்களின் சேவைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான நிபந்தனைகள் / ஊக்குவிப்புக்களுடன் பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டும்.

3. பாடசாலைகளில் பற்றாக்குறை நிலவும் பாடங்களில் (கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தகவல் தொழினுட்பம் ~ ஆங்கில மற்றும் தமிழ்மொழி மூலங்களில்) இருந்து வெளியேறுவோருக்கு ஆசிரிய நியமனத்தில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

4. கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களை க.பொ.த. (சா/த.) வகுப்புக்களில் கற்பிப்பதற்கு தகுதியான ஆசிரியர்களுக்கு கடும் பற்றாக்குறை நிலவுவதால் க.பொ.த.(உ/த) வகுப்புக்களில் அப்பாடங்களில் தகுதி பெற்ற தேர்வுநாடிகளை அனுமதிப்பதில் தீவிர கவனஞ் செலுத்துமாறு தேசியக் கல்வியியற் கல்லூரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட வேண்டும்.

5. விளையாட்டு விஞ்ஞானமாக கல்விமாணிப் பட்ட நெறியில் கற்பித்தல் முறையியல் மதிப்பீடு பாடசாலை விளையாட்டு உளவியல் சீர்மியம் குறைந்தது இரு தவணைகளிலாவது கற்பித்தல் பயிற்சி, விளையாட்டுப் பயிற்சி (Coaching Practice) என்பன உள்ளடக்கப்பட வேண்டுமெனப் பல்கலைக்கழகங்களுக்குப் பரிந்துரைக்கப் படுகின்றது.

## சேவை நிபந்தனைகள்

1. கஷ்டப் பிரதேசங்களில் குறித்த காலப்பகுதி கட்டாயமாக சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனை அடிப்படையிலான நியமனம் வழங்கல் நடைமுறை கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும்.

2. நிபந்தனைகளைக் குழப்பும் வகையில் இடமாற்றம் மற்றும் சேவை நிலைமைகளில் அரசியல் மற்றும் நிர்வாகச் செல்வாக்குகளையும் அழுத்தங்களையும் பிரயோகிக்கும் முயற்சிகள் கண்டிக்கப்படுவதோடு முற்றாகத் தடுக்கப்பட வேண்டும்.

3. மனிதாபிமான அடிப்படையில் வலயங்களுக்கு வெளியே கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கான நியமன வேறுபடுத்தல்கள், தற்காலிக இணைப்புக்கள் என்பனவற்றை வழங்கும் நடைமுறை முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

4. பரிந்துரைகள் 2 உம் 3 உம் வலயக் கல்விப் பணிப்பாளர்களைப் பொறுத்த மட்டிலும் அமுலிலிருக்கும் அதேவேளையில் மருத்துவ மற்றும் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் தத்தமது வலயங்களுக்குள்ளே தற்காலிக இணைப்பு வழங்குவதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

5. மாகாணக் கல்வி அமைச்சிலோ மாகாணக் கல்வித் திணைக்களத்திலோ உள்ள பதவிகளுக்குப் பதவியுயர்வுகளோ இடமாற்றங்களோ வழங்கப்படும் போது அவ்வப் பகுதிகளுக்கென ஒதுக்கப்பட்ட கடமைகள் அவ்வவ் வலுவலர்களுக்கு வழங்கப்பட வேண்டும். நியமிக்கப்படும் அலுவலரைப் பொறுத்து அப்பதவிக்கென குறித்தொதுக்கப்பட்ட கடமைகள் மாற்றப்படக் கூடாது. ஒரு பதவிக்கு நியமிக்கப்பட்ட அலுவலரொருவர் அப்பதவிக்குரிய கடமைகளெவை எனத் தானாகவே தீர்மானிப்பதற்கு அனுமதிக்கப்படக் கூடாது.

6. குறித்த பதவிக்குரிய அனுமதிக்கப்பட்ட ஆளணிக்கேற்ப மட்டுமே நியமனங்களோ பதவியுயர்வுகளோ வழங்கப்பட வேண்டும்.

## சேவை மூப்பையும் செயலாற்றுகையையும் கருத்திற்கொள்ளல்

1. நியமனங்கள் பதவியுயர்வுகள் என்பன வழங்கப்படும் போது பதவியில் / சேவையில் சேவை மூப்புக் கட்டாயம் கருத்திலெடுக்கப்பட வேண்டும். சேவை மூப்பைக் கருத்திலெடுக்கும் போது செயலாற்றுகையுடன் கூடிய சேவை மூப்பை செயலாற்றுகையற்ற சேவை மூப்பிலிருந்து வேறுபடுத்துவதற்கான நியதிகள்/ பிரமாணங்கள் உருவாக்கப்பட்டு உபயோகிக்கப்பட வேண்டும்.
2. அனுமதிக்கப்பட்ட ஆளணிக்கு வெளியே ஏற்கனவே வழங்கப்பட்ட நியமனங்கள் அனுமதிக்கப்பட்ட ஆளணிக்குப் பொருந்தத்தக்கவாறு சீராக்கப்பட வேண்டும் வடமாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக் கல்வி அலுவலகம் என்பவற்றில் கண்டிப்பாக இப்பரிந்துரை அமுலாக்கப்பட வேண்டும்.

3. இயன்றவரை கடமை நிறைவேற்று அதிபர்கள், கடமைநிறைவேற்று பிரதி / உதவிக்கல்விப்பணிப்பாளர்கள் பதவிகளுக்கான நியமனங்கள் தவிர்க்கப்பட வேண்டும் ஆயினும் சேவையின் அவசியம் ஏற்படும்போது கண்டிப்பாக சேவை மூப்பினையும் கடந்தகால மெச்சத்தக்க சேவையினையும் கருத்திலெடுக்க வேண்டும்.

## இடமாற்றங்கள்

01. மாகாண **ஆசிரியர் இடமாற்றத்** திட்டமொன்று சம்பந்தப்பட்டவர்களுடனும் தொகுதிக்கு வெளியே உள்ளவர்களுடனும் கலந்தாலோசிப்பதன் மூலம் உருவாக்கப்பட்டு அனுமதிக்கப்பட வேண்டும்.
02. அதே போன்று மாகாண **அதிபர் இடமாற்றத்** திட்டமொன்று சம்பந்தப்பட்டவர்களுடனும் தொகுதிக்கு வெளியே உள்ளவர்களுடனும் கலந்தாலோசிப்பதன் மூலம் உருவாக்கப்பட்டு அனுமதிக்கப்பட வேண்டும்.
03. மாகாண இடமாற்றத் திட்டத்தினூடாகவே கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் இடமாற்றம் பொதுவாக இடம்பெறவேண்டும். மாகாண இடமாற்றத் திட்டத்துக்குப் புறம்பாக வழங்கப்படும் எந்தவோர் இடமாற்றமும் உரிய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலராலேயே வழங்கப்பட வேண்டும்.

## தகுதியும் பதவியுயர்வும்

01. நியமனங்கள் / பதவியுயர்வுகள் யாவும் வர்த்தமானி அறிவித்தல்களுக்கும் தீர்மானங்களுக்கும் ஏற்பவே இடம்பெற வேண்டும்.
02. நியமனங்கள் வழங்கப்படும் போது அறிவுறுத்தல்கள் உறுதியாகவும் ஒரேமாதிரியாகவும் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.
03. குழுவொன்று அமைக்கப்பட்டு பின்வரும் நியமனங்கள் தொடர்பாக விரிவான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு பொருத்தமான பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
    a. பட்டதாரி ஆசிரியர்களின் நியமனத்தை முற்தேதியிடல்.
    b. நான்கு வருடங்களிலும் குறைந்த பயிற்சி நெறிக்காலத்தையுடைய டிப்ளோமாதாரிகளுக்கு வழங்கப்பட்ட நியமனம்.
    c. ஆசிரியரொருவர் சேவைக்கு நியமிக்கப்பட்ட பாட வகுதி தவிர்ந்த வேறொரு பாடத்திற்கு மாற்றுதல்.

## மீளச் சேவைக்கமர்த்தலும் "தீவுக்கு வெளியே செல்வதற்கான விடுமுறையும்"

1. ஆசிரிய நியமனம் வழங்குவதற்கான நியமன அதிகாரி, வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரேயாவார்
2. தற்போது செயலாளருக்கு பின்வருவன போன்ற சில அதிகாரங்கள் வழங்கப்படவில்லை.
    a. பாடசாலைகளில் ஆசிரியர்களையும் கல்விசாரா ஊழியர்களையும் மீளச்சேவைக்கு அமர்த்துவதற்கான அதிகாரம்.
    b. தீவுக்கு வெளியே செல்வதற்கான விடுமுறையை அனுமதிப்பதற்கான அதிகாரம்

## சேவையிலிருந்து ஓய்வு பெறல்

01. ஓய்வூதியர்களுக்கு ஓய்வுபெற்ற உடனேயே ஓய்வூதியம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுதல் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

02. அதிபர்களிடமிருந்து கோரிப்பெறுவதற்கு எதுவுமில்லை எனும் சான்றிதழ்கள் உரிய வேளையில் கிடைக்கப் பெறாததைச் சாட்டாக வைத்து ஓய்வூதிய விண்ணப்பத்தை அனுப்புவதைக் காலதாமதப்படுத்தக் கூடாது. கோரிப்பெறுவதற்கு எதுவுமில்லை எனும் சான்றிதழ் கிடைக்கப் பெற்றதும் திரட்டிய ஓய்வூதியத்தை (Commuted Pension / Gratuity) விடுவிக்கலாம்.

## பரிந்துரை நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணித்தல்

1. மேற்படி பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்கவும், ஏதாவது அத்துமீறல்கள் நிகழ்ந்தால், அவை குறித்து உரிய நடவடிக்கைக்கென அறிக்கை தரப்படுவதையும் உறுதி செய்யும் விதத்தில், குறைகேள் செயற்குழு போன்ற ஒரு அலகை, கல்வி அமைச்சின் கீழ் நிறுவவேண்டும்.இந்த அலகானது ஓய்வு பெற்ற மற்றும் தற்போது சேவையிலிருக்கிற கல்வியியலாளாகள் சமர்ப்பிக்கிற விடயங்களையும் ஏற்றுக் கொண்டு, அந்த விடயங்கள் கிடைக்கப் பெற்றதை உரிய திணைக்களங்கள் அல்லது அலகுகள் உறுதிப்படுத்துவதையும் பொருத்தமான முடிவுகள் எடுக்கப்பட்டு, தொடர்புபட்டவர்களுக்குத் தெரிவிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.
2. இந்தப் பரிந்துரைகளில் அனேகமானவை கல்வி அமைப்பினுடைய செயற்றிறனை மேம்படுத்தும் என்பதுடன் வடமாகாண கல்வி அமைச்சும் (NP) ம் வடமாகாணசபையும் அவற்றை அங்கீகரித்த உடனே நடைமுறைப்படுத்தவும் முடியும்.

## (வ.மா.) அமைச்சினுடைய திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி அலகுகளுக்கான பரிந்துரைகள்

1. (வ.மா.) கல்விஅமைச்சில் இருக்கும் திட்டமிடல் பிரிவு மற்றும் ஆய்வு மற்றும் அபிவிருத்தி பிரிவு என்பவை ஒருங்கிணைத்து, புதிய குறுகியகால (2 இலிருந்து 3 வருடங்கள்) மற்றும் நீண்டகால (4இலிருந்து 5 வருடங்கள்) உசாவெல்லைகள் மற்றும் பொறுப்புகளுடனும், புதிய பொறுப்புகளை ஆற்றும் விதத்திலான கல்விசார் தகைமைகளைக் கொண்ட பணிப்பாளர்களுடன் மீள நிறுவவேண்டும்.
2. (வ.மா.) கல்வி திணைக்களத்தில் இருக்கும் திட்டமிடல் மற்றும் ஆய்வு மற்றும் அபிவிருத்தி அலகுகளை ஒருங்கிணைத்து புதிய குறுகியகால (2 இலிருந்து 3 வருடங்கள்) மற்றும் நீண்டகால (4இலிருந்து 5 வருடங்கள்) உசாவெல்லைகள் மற்றும் பொறுப்புகளுடனும் புதிய பொறுப்புகளை ஆற்றும் விதத்திலான கல்விசார் தகைமைகளைக் கொண்ட பணிப்பாளர்களுடன் மீள நிறுவவேண்டும்.
3. கல்வி அபிவிருத்தி பிரிவானது தற்போதும் அடுத்த ஒரு அல்லது இரண்டு வருடங்களுக்கான திட்டமிடலை மேற்கொண்டிருக்கிறது. இப்போதுள்ள ஆளணியினருடன் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியும். எனினும் குறுகியகால நீண்ட காலத் திட்டமிடலை மேற்கொள்வதற்கு இந்த ஆளணியினர் இப்போதுள்ளவர்களைவிட உயர் மட்ட தகைமைகளைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

## நிர்வாகம் தொடர்பான பரிந்தரைகள்

1. தெரிவு செய்யப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சபையினால் கட்டுப்படுத்தப்படும் மற்றும் வலய மட்டத்துக்கு பகிர்வு செய்யப்பட்ட முடிவெடுத்தல் அமைப்பை வடிவமைத்து நடைமுறைப்படுத்த வேண்டும்.
2. கோட்டங்களை உள்ளடக்கும் விதத்தில் புதிய வலய எல்லைகளை வடிவமைத்தல். பாடசாலைகளின் எண்ணிக்கை, பாடசாலை வகைகள், வலயங்களின் தூரங்கள், பரப்புகளை கருத்தில் கொண்டு, வலயங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் முதலியவற்றை மேற்கொள்ளவேண்டும்.
3. மாகாண பணிப்பகத்தை கிளிநொச்சியில் A9 பாதைக்கு அண்மையிலுள்ள ஒரு இடத்துக்கு நகர்த்தவேண்டும்.

4. நியமனக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டிருக்கும் திகதியிலேயே குறிப்பான நியமனங்கள் செய்யப் பட்டிருப்பவர்களுக்கு நியமனங்களை வழங்க வேண்டும். (இதேபோன்ற பரிந்துரையை நிதிக்குழுவும் செய்திருக்கிறது.)
5. ஒருவர் ஓய்வு பெறப் போகிறார் எனில் அவரது வெற்றிடத்தை நிரப்புவதற்கான பணியை, குறித்த திகதியிலிருந்து 3 மாதங்களுக்கு முன்பே ஆரம்பிக்க வேண்டும்.
6. மாகாண கல்வி அமைச்சானது அனைத்து ஆசிரியர்களுக்கும் உப-கோவைகளை பேண வேண்டும்.
7. ஒரு வலயத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும் ஆளணி எண்ணிக்கையின் அடிப்படையில் கற்பிக்கும் ஆளணியினரை வலயம் முழுவதும் பரவலாக பிரித்து வழங்க வேண்டும்.
8. 500ற்கு மேற்பட்ட மாணவர்களைக்கொண்டிருக்கும் 1AB மற்றும் 1C பாடசாலைகளுக்கு ஒவ்வொரு முகாமைத்துவ உதவியாளர்களை நியமிக்க வேண்டும்.
9. கல்வி நிர்வாகத்தின் அமைவிடத்தை மாற்ற உத்தேசிக்கும் பொழுது, மாகாண நிர்வாகம் நிரந்தரமாக நிறுவப்படப்போகும் இடத்துக்கு அண்மையான இடத்தில் அதனை நிறுவுவதை கருத்தில் எடுக்கவேண்டும்.
10. வலயங்களில் பெருமளவு எண்ணிக்கையிலான பாடசாலைகள் இருத்தல், வலயங்களின் அதிக பரப்பளவு மற்றும் இவை போன்ற காரணிகள் வலயப்பிரிவுக்கான அவசியத்தை ஏற்படுத்தும் போது, தேவைகளின் அடிப்படையில், தற்போதுள்ள வலயங்களை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளாக பிரிக்க வேண்டும். உதாரணம் கிளிநொச்சி மற்றும் வலிகாமம்.
11. அதிக பொறுப்புகளுக்கு ஈடுகொடுக்கும் விதத்திலும் செயற்றிறனோடு செயலாற்றும் விதத்திலும் தென்மராட்சியில் மேலதிக கோட்ட கல்வி அலுவலகம் ஒன்றை அமைக்க வேண்டும்.

## அத்தியாயம் 7: நிதி, ஆளணி தேவைகள் இசெலவீனங்கள் மற்றும் ஆசிரியர் வேதனங்கள்

### ஆசிரியர் வேதனங்கள் மற்றும் நிதி தொடர்பான பரிந்துரைகள்

1. பல்கலைக்கழக பட்டதாரி ஆசிரியர்களின் வேதனங்களை நாட்டின் தலா மொத்த உள்ளூர் உற்பத்தியோடு இணைப்பதோடு டிப்ளோமா அல்லது பட்டப்பின்படிப்பு தகைமைகளைக் கொண்ட ஆசிரியர்களுக்கு விகிதாசார அடிப்படையில் வேதனம் வழங்குதல்.
2. கற்பித்தலின் தரம் கண்காணிக்கப்படுவதோடு, கற்பித்தலுக்கான முன்னாயத்தங்கள் மிக குறைவாகச் செய்யப்பட்டிருந்தால் அது கவனிக்கப்பட வேண்டும்.
3. தொடர்ந்து குறைவான முன்னாயத்தங்களுடன் இருக்கும் அல்லது மெத்தனமாக இருக்கும் ஆசிரியர்கள் மீது அதற்கான பிரதிபலனைச் சுமத்தவேண்டும்.
4. ஆசிரியர்களின் வேதனங்கள் மாகாண பணிப்பாளரின் வேதனத்துக்குக் குறைவானதாக இருக்கக்கூடாது. இது, ஆசிரியர்கள் இப்போதையை விட நீண்ட காலத்துக்கு கற்பித்தலை தொடரும் வாய்ப்பை அதிகரிக்கும்.

### இவ்வாறான அதிகரிப்புக்கான நிபந்தனைகள் பின்வருமாறு அமைய வேண்டும்

1. ஆசிரியர் பிற்பகல் 4.15 வரை பாடசாலையில் இருத்தல். இந்த நேரத்தை அடுத்த நாள் கற்பித்தலுக்கான ஆயத்தங்களைச் செய்ய பயன்படுத்துதல். பாடத்திட்ட, பாடத்திட்டத்தோடு இணைந்த மற்றும் பாடத்திட்டத்துக்குப் புறம்பான செயற்பாடுகளில் மாணவரோடு வேலை செய்தல். இந்த நேரத்தை பாடங்களையும் அறிவுறுத்துதலுக்கான பொருட்களையும் தயாரிக்கப் பயன்படுத்துதல்.
2. பாடசாலை நாட்களில் ரியூசன் நிலையங்களில் கற்பிக்காமல் இருத்தல்.
3. அதிகம் விரும்பப்படாத, தொலை தூர பாடசாலைகளுக்கு நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்கு குறைந்த வட்டியிலான நீண்டகால அடிப்படையிலான கடன் வசதிகளை வழங்குதல் மற்றும் வசிப்பிடம் ஒன்றைக் கட்டிக் கொள்வதற்கான நிலமானியங்களை வழங்குதல். இது அவர்கள் நியமிக்கப்படும் பாடசாலைகளில் 10வருட சேவையை பூர்த்தி செய்யவேண்டும் அல்லது

வழங்கப்படும் நில மானியமும் அதிலுள்ள கட்டடமும் பறிமுதல் செய்யப்படும் என்ற நிபந்தனையோடு வழங்கப்படவேண்டும்.

4. நிதிப்பிரிவு ஒன்றினை ஸ்தாபித்து அதன் மூலம் பாடம்சார் தகைமையீனம், கற்பித்தல் முறையியல் தேர்ச்சியின்மை, தமக்கு ஒதுக்கப்பட்ட பாடசாலையில் கடமையைப் புறக்கணித்தல் போன்ற வினைத்திறனற்ற செயலாற்றுகை ஆசிரியர்களை இனங்கண்டு வெளிப்படுத்த வேண்டும்.

5. ஆசிரியர்களை மதிப்பீடு செய்தல், ஆசிரியர்களை கண்காணித்து வெகுமதிகளை வழங்கல்.

## நிதி அமைப்பு மற்றும் தொடர்பான பரிந்துரைகள்

1. பாடசாலைகளை நடத்தி செல்வதற்கான நிதித்தேவைகளை பூர்த்தி செய்யும் விதத்தில். அவற்றுக்கு ஒரு வாய்பாட்டு அடிப்படையிலான ஆற்றுகை முறையிலமைந்த நிதியூட்டம் உருவாக்கப்பட வேண்டும் (பாடசாலை ரீதியான மானியத்திட்டம்.)
2. அதிகம் விரும்பப்படாத பகுதிகளில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்பு திட்டம் ஒன்று உள்ளடக்கியதாக பாடசாலைகளுக்கான ஆசிரிய நியமனங்கள் செய்யப்பட வேண்டும்.
3. மாணவர்களின் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து 1AB மற்றும் 1C பாடசாலைகளுக்கு அவற்றின் பொருள் இருப்புகளை பேணுவதற்கும் நிதி முகாமைத்துவத்தில் உதவவுமென பட்டதாரி மட்டத்திலான உத்தியோகத்தர் ஒருவர் வழங்கப்பட வேண்டும்.
4. தாமதம் செய்யப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக வேதன நிலுவைகள் செலுத்தவேண்டிய தேவையைத் தவிர்க்கும் விதத்தில் அசிரியர்களின் ஆடசேர்ப்பு, நியமனங்கள் மற்றும் பதவியுயர்வு முதலியவற்றை ஆராய்ந்து ஒழுங்குமுறைப்படுத்த வேண்டும்.
5. கல்வித்துறையில் இருக்கும் பெரும் எண்ணிக்கையிலான பணியாளர்களைக் கருத்தில் கொண்டு கடன் தொடர்பான ஒதுக்கீட்டு வரையறையை உயர்த்த வேண்டும்.
6. பாடசாலைகளிலே கிரமமான கணக்கு பரிசோதனைகளை மேற்கொள்ளும் விதத்தில், மாகாண கல்வி அதிகார மட்டத்திலும் அதனுடைய உப - அலகுகளாக வலய மட்டத்திலும் உள்ளக கணக்காய்வு அலகுகளை நிறுவவேண்டும்.
7. ஏனைய முகாமைத்துவ அம்சங்களோடு நிதிமுகாமைத்துவ அம்சம் தொடர்பாகவும் பயிற்சி வழங்க வேண்டும். எனவே அதிபர்களின் நிதி முகாமைத்துவ திறன்களை வளப்படுத்தும் விதத்தில் மாகாண கல்வி அமைச்சானது கிரமமான பயிற்சிகளை நடத்தவேண்டும்.
8. செலவுகளில் ஏற்படும் அதிகரிப்புகள் மற்றும் புதிய கட்டுமாணங்களில் ஏற்படும் அதிகரிப்பையும் எதிர்கொள்ளும் விதத்தில் பாடசாலைக் கட்டடங்கள் மற்றும் உபகரணங்களின் பராமரிப்புக்கான ஒதுக்கீடுகளை அதிகரிக்க வேண்டும்.
9. தரம் 1 இல் இருந்து தரம் 13 வரை பாடசாலையில் இணைந்து கொள்ளும் வாய்ப்பு வளம் கொண்ட மாணவர்களிடமிருந்து, உத்தியோக பூர்வமற்ற முறையில்,பணம் வலியுறுத்திக் கேட்கப்படுவதை தடுத்து நிறுத்துவதற்கான வழிகள் பற்றி ஆராய்ந்து கண்டறியப் படவேண்டும்.
10. பாடசாலை மதிய உணவுத் திட்டத்தில், மீளக் கற்போரின் பெயர்கள் போலியாகச் சேர்க்கப்படுவது உள்ளிட்டதாக, இடம்பெறும் மோசடிகள் குறித்து, தலத்துக்குச் சென்று விசாரணை செய்யும் அணிகள் உருவாக்கப்பட வேண்டும்.
11. ஆரம்ப நிலைப் பாடசாலைகளுக்கும் சிறப்பு கல்வித் திட்டங்களுக்கும் நடுநிலை அணைவான முறையில் செலவீனங்கள் செய்யப்படுவதை உறுதி செய்தல்
12. தலா மாணவனுடைய செலவு, ஆசிரியர் வேதனத்துடன் தொடர்பு படுவதால், அதனை அதிகரித்தல். (ஆசிரியர்களுக்குத் தட்டுப்பாடு நிலவும் இடங்களில் விஞ்ஞான, கணித, ஆங்கில மற்றும் ஏனைய பாடங்களுக்கான அதிக ஆசிரியர்களை நியமித்தல்). கிராமப்புற பாடசாலைகள், குறைந்த வருமான சமூகங்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட சமூகங்களில் இருக்கும் பாடசாலைகளுக்கு இப்போதுள்ளதை விட அதிகமாகவும் உயர்தகைமைகள் கொண்டவர்களுமான ஆசிரியர்களை அனுப்புதல்.
13. தரமான உள்ளீடுகள் என்ற வகையிலே மீளவரும் செலவுகளுக்குள் தலா மணவனுக்கான செலவை அதிகரித்தல்.
14. நிதிகளின் பாய்ச்சலையும் செலவீனங்களையும் கண்காணிக்கும் விதத்திலே நிதி ஒதுக்கீடுகள் மற்றும் செலவீனங்கள் அனைத்தும் (தற்போது உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது ) தரவுத் தளத்துக்குள் ஏற்றப்பட வேண்டும். செலவீனங்களுக்கும் ஆற்றுகைகளுக்குமிடையேயான தொடர்பை ஆராய்வது உதவிகரமானதாக இருக்கும்.

## அத்தியாயம் 8: இணையத் திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் வெளியீடு.

### ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுப்பிரிவிற்கான சிபாரிசுகள்

வடமாகாணத்தில் கல்வித் துறையின் ஏதேனும் தலைப்பில் 2010ஆம் ஆண்டிற்கு முன்பு முதுமாணி கற்கைநெறிக்கான ஆய்வறிக்கையினை சமர்ப்பித்த ஆய்வாளர்கள் தங்களது ஆய்வின் சுருக்கத்தை ஆராய்ச்சி மற்றும் பிரசுரப் பிரிவிற்கு அனுப்பிவைக்குமாறு விளம்பரப்படுத்தல் வேண்டும்.

வடமாகாணத்தின், கல்வித்துறையில் ஏதேனும் ஒரு தலைப்பில், உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் M.Phil மற்றும் P.hDஆய்வுகளை மேற்கொண்டு அவற்றை மேற்பார்வை செய்யப்பட்ட ஆய்விதழில் பிரசுரமான வெளியீடுகளைச் சேகரிப்பதற்காக ஒரு குழுவை கல்வி இலாகாவில் நியமித்தல்.

கல்விப் பணிப்பாளர், பொருத்தமான துறைசார் வல்லுநர்கள் மற்றும் ஆசிரியர்கள், கல்வித் திணைக்கள, கல்வி அமைச்சு சார்ந்த நிர்வாக ஊழியர்கள், பல்கலைக்கழக மற்றும் கல்வியியற் கல்லூரிகளிலிருந்தான ஊழியர்கள் ஆகியோரைக் கொண்ட ஆராய்ச்சி அபிவிருத்தி அலகிற்கான குழுவை நியமித்தல். அக் குழுவானது ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டு அலகினால் விதந்துரைக்கப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை மேற்கொள்ளவும் மற்றும் ஊழியர் அபிவிருத்தி திட்டங்களையும் அவற்றை செயற்படுத்துவது தொடர்பான நிதித்திடடங்களையும் உருவாக்கவேண்டும்.

### கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை

1) வட மாகாணத்தின் முழுமையான கல்வி உட்கட்டுமானத்தை முகாமை செய்ய ஒரு சிறந்த முகாமைத் தகவல் முறைமை அவசியமானதாகும். இந்த முறைமையானது அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். அதே நேரத்தில், மாற்றம் தேவைப்படுகிறபொழுது மாற்றப்படக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். அவை

a) பாடசாலைகள், கோட்ட மட்டம், வலய மட்டம், ஆராய்ச்சி அபிவிருத்தி அலகு மற்றும் மாகாணக் கல்வி ஆகியவற்றின் தேவைப்பாடுகளைத் திருப்பதிப்படுத்தக்கூடிய வகையிலான வேறுபட்ட அலகுகளை(module) உருவாக்குதல்

b) இத்தகைய முறைமையிலுள்ளவர்கள் தங்களுடைய பின்னூட்டியினை ஏனையவர்களுக்கும் உயர் அதிகாரிகளுக்கும் பரிமாற்ற வசதியளித்தல்

c) மாகாண கல்வி, ஆராய்ச்சி அபிவிருத்தி அலகு, வலயக் கல்வி, பாடசாலைகளுக்குத் தேவையான தகவல்களை வழங்குதல்

### பாடசாலை மட்டத்தில்

1. இணையத்தளம் உருவாக்கல், நிகழ்வுகளை முகாமை செய்தல், தொழில் வாய்ப்புகள் மற்றும் வேறு வகையிலான பயனுள்ள தகவல்கள்
2. கற்றல் முகாமைத்துவ முறையை வழங்குவதற்காக

a) இருப்புக்களைப் பராமரித்தல், தீர்மானமெடுப்பவர்களுக் கிடைக்கப் பெற்ற உரிமை கோரப்படாத பின்னூட்டிகளை வழங்குதல், ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் மாணவர்களுக்கான வழிமுறை முகாமைத்துவ பொறுப்புக்கள்.

b) அதிபர்கள்: மனிதவள முகாமைத்துவம், இருப்பு பராமரிப்பு, விடுமுறை மற்றும் நிகழ்வுகள்முகாமைத்துவம், நேர அட்டவணை தயாரித்தல், மாணவர் முகாமைத்துவம்,இணையத்தளத்தை உடனுக்குடன் பதிவு செய்யக்கூடிய பாடசாலைத் தகவல்களையும் கல்விசார் தகவல்களையும் முகாமை செய்தல்.

c) ஆசிரியர்கள்: தனிப்பட்ட தகவல்களையும் கல்வி சார் தகவல்களையும் முகாமை செய்ய, புள்ளிகளையும் தரங்களையும் கணிப்பிடல், பயிற்சியளித்தல், கொடுப்பனவுச் சிட்டை, லீவு முகாமைத்துவம், குறித்த பாடசாலையின் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மற்றும் வேறு பாடசாலையிலுள்ள ஆசிரியர்களுடனான இடைத் தொடர்பு

d) மாணவர்கள்: கல்விசார் பெறுபேற்றைப் பார்வையிடல், வேலைவாய்ப்புக்கள், ஆசிரியர்கள் மற்றும் ஒத்த தரமுடையவர்கள், பழைய மாணவர்கள் உடனான இடைத் தொடர்பு, கற்றலையும் ஒப்படைகளையும் நிறைவேற்றல், தொழில் வாய்ப்புக்களை தேடுதல்.

e) பெற்றோர்கள்: பாடசாலை நிர்வாகத்துடனான தொடர்பு, ஆசிரியர்களுடனான தொடர்பு, பிள்ளைகளின் பெறுபேற்றைப் பார்வையிடல் மற்றும் ஏனைய பெற்றோருடனான இடைத் தொடர்பு

## வலயக் கல்வி மட்டத்தில்

வலயக் கல்விப் பணிப்பாளர் இணையத்தள முகாமை, பௌதிக வள முகாமை, மனித வள முகாமை-அதாவது ஊழியர்களின் பொறுப்புக்களையும் பணிகளையும் வரையறுத்தல், நிதியையும் திட்டங்களையும் கண்காணித்தல், பயிற்சியளித்தலும் அட்டவணை தயாரித்தலும், போட்டிகளையும் நிகழ்வுகளையும் முகாமைசெய்தலும் அட்டவணைப்படுத்தலும், விசேட கல்வி நிலையத்தை நிர்வகித்தல், அறிக்கை தயாரித்தல், ஏனைய வலயக் கல்விப் பணிப்பாளர்கள், வலய ஆசிரியர்கள் மற்றும் அலுவலக ஊழியர்களுடனான இடைத் தொடர்பு, வலய அதிபர்கள், ஆசிரியர்கள் மீதான பின்னூட்டியை அவதானித்தல், பாடசாலைகள் மற்றும் செயற்பாடுகளின் செயற்பாட்டு வளர்ச்சியை கண்காணித்தல்.

## மகாணக்கல்வி கல்வி மட்டத்தில்

மாகாணக் கல்விப் பணிப்பாளர் இணையத்தை முகாமை செய்ய, மனித வளத்தை அதாவது அவர்களின் முகாமைப் பொறுப்புக்களையும் பணிகளையும் வரையறுக்க, அறிக்கைகளை தயாரிக்க, நிதியையும் திட்டத்தையும் கண்காணிக்க, ஏனைய வலயப் பணிப்பாளர்கள், குறித்த வலயத்திலுள்ள ஆசிரியர்கள், அதிபர்களுடனான இடைத் தொடர்பு, வலயப் பணிப்பாளர்கள், ஆசிரியர்கள், அதிபர்களுடைய பின்னூட்டிகளை கண்காணித்தல், விடுமுறை, பணக்கொடுப்பனவுச் சிட்டைகள், பயிற்சியளித்தலும் அட்டவணைப்படுத்தலும், போட்டிகளையும் நிகழ்ச்சிகளையும் முகாமை செய்தல், பாடசாலைகளினது செயற்பாட்டு வளர்ச்சியை கண்காணித்தல்.

## ஆராய்ச்சி அபிவிருத்தி மட்டத்தில்

பல்வேறு தகவல்களையும் வேறுபட்ட மட்டங்களிலிருந்து பெற்று அறிக்கை தயாரித்தல், இணையத்தள முகாமைத்துவம், பௌதிக மற்றும் மனித வளங்களை முகாமை செய்தல்

## பொதுவானவை

1. கல்வி முகாமைத் தகவல் முறைமையானது திறந்த வளமாயும் அலகுமுறைகள் வடிவமைக்கப்பட்டதாயும் சுலபமாக விரிவாக்கம் செய்யக்கூடியதாகவும் இருத்தல்
2. இவ் இணையத்தள உருவாக்கமானது, பௌதிக வள முகாமைத்துவம், மனித வள முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம் மற்றும் பின்னூட்டல் முகாமைத்துவம் ஆகியவற்றை வழங்குவதை முக்கிய பண்பாக கொண்டிருக்கும். பின்னூட்டல் அலகானது ஏதேனுமொரு மட்டத்தில் குறிக்கப்பட்ட நபருக்கு அல்லது மக்களுக்கு உரிமைகோரப்படாத பின்னூட்டிகளை வழங்க பயன்படுத்தப்படலாம். இதுவே இம் முறைமையின் மிக முக்கியமான சிறப்பியல்பாகும். ஆராயப்பட்ட முறைப்பாடுகள் நேரடியாகவே தனிப்பட்ட கோவையில் பதிவு செய்யப்படும். மேலும் இவ் வலையமைப்பு பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஏனைய பங்காளிகளிற்கான இடைத்தொடர்பை ஏற்படுத்தும் ஒரு சமூக வலைப் பின்னலை கொண்டதாக இருக்க வேண்டும்.

3. ஆரம்ப முறையானது தொழில் நிபுணர்களின் ஆலோசனைகளுடன் பாதுகாப்புக் கொள்கைகள் உள்ளடங்கிய நெகிழ்வுத்தன்மையை உறுதிசெய்யும் அலகு முறையைக் கொண்டதாக இருக்கவேண்டும்
4. தற்போதுள்ள தீர்வுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டாலும், ஒரு அனுபவம் வாய்ந்த குழுவானது இம்முறையை அபிவிருத்தி செய்ய வேண்டும். கீழுள்ள பகுதியில் விதந்துரைக்கப்பட்ட இரு தொழினுட்ப வல்லுநர்கள் இந்தக் குழுவில் இணைக்கப்படல் வேண்டும். ஒவ்வொன்றும் தெளிவாக ஆவணப்படுத்தப்பட வேண்டும்.
5. கல்வி முகாமைத்துவ தகவல் முறையானது மாகாணக் கல்வித் திணைக்களத்தின் திட்டமிடல் அலகின் கீழ் செயற்படவேண்டும்
6. ஆசிரியர்களின் கற்பித்தல் நோக்கத்தைக் கொண்டு ஏற்கனவே செயற்படும் தகவல் தொழினுட்பப் பிரிவானது மேற்படி முறைமையை ஸ்தாபிக்க போதிய வலுமிக்கதாக இல்லை
7. தற்போது கவனிக்கப்படாதுள்ள பின்வரும் விடயங்களைக் கவனிக்கவும் மற்றும் மேற்படி முறைமையின் தேவைகளை வழங்கவும் தகவல் தொழினுட்ப சேவைகள் எனும் பெயரில் தனியான ஒரு அலகு உருவாக்கப்படல் வேண்டும்
    a. தகவல் தொழினுட்ப உபகரணங்களை விநியோகித்தவும், சேவையை வழங்கவும், பாடசாலைகளில் தகவல் தொழினுட்ப உபகரணங்களின் பயன்பாட்டினை கண்காணிக்கவும் அவற்றின் நிலைமைகளைத் திட்டமிடவும் இந்தத் தனியான அலகு பயன்படுத்தப்படும்
    b. ஏனைய பாடங்களைக் கற்பிப்பதற்குத் தேவையான தகவல் தொழினுட்பத் திறன்கள் தொடர்பாக ஆசிரியர்களிற்கு பயிற்சியளித்தல்.
    c. கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையை அபிவிருத்தி செய்ய, சிறந்த தகைமையும், பொருத்தமான அனுபவமுமுள்ள தொழினுட்ப உத்தியோகத்தர் நியமிக்கப்படல் வேண்டும். தேவை ஏற்படின், தற்போதுள்ள ஊழியர்களுக்குப் பயிற்சிகளை வழங்கமுடியும். இதன்மூலம் கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையினை ஸ்தாபிக்கின்ற செலவைக் குறைக்க முடியும்.
8. கல்வி அமைச்சிற்குச் சொந்தமான வழங்கி (SERVER)யின் துணையுடன் கல்வி முகாமைத்துவதகவல் முறைமையை ஸ்தாபித்தல். வெவ்வேறு மட்டத்தில் இரகசியத் தகவல்களையும் அதைப்பெறும் முறையையும் உள்ளடக்கியிருத்தல்
9. நாளாந்த அடிப்படையில் உடனுக்குடன் தகவல்களை பதிவு செய்ய தேவையான ஊழியர்களை வேலைக்கமர்த்துதல் அத்துடன் தேவைக்கேற்ப முறைமையை முன்னேற்றி, விரிவாக்கம் செய்துபராமரித்தல்
10. மேற்படி முறைமையை செயற்படுத்த தொழில் ரீதியான முன்னேற்றத் திட்டத்தினைத் தயாரித்தலும் அதைத் தொடர்ந்து பராமரித்து தேவை ஏற்படின் விரிவாக்கம் செய்தலும்
11. மேற்படி முறைமையைச் சரியாகப் பயன்படுத்தவும், அதிலிருந்து நன்மைகளை பெறவும், அமைச்சு மட்ட, மாகாண மட்ட, வலய மட்ட, பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிலிருந்து சகல ஊழியர்களுக்கும் பயிற்சியளித்தல்
12. ஆரம்ப மூலதன முதலீடு, செயற்பாட்டு மற்றும் பராமரிப்புச் செலவுகளிற்கான நிதியை வழங்க வேண்டும்

## அத்தியாயம் 9: வடக்கில் முன்–பிள்ளைப் பராய மேம்படுத்தலுக்கான கல்வி

### பரிந்துரைகள்

1. பல்வேறு அமைச்சுகளும் மேற்கொள்ளும் செயற்பாடுகளை, மாகாண கல்வி அமைச்சின் ECD/E அலகின் ஊடாக மேற்கொள்ளச் செய்வதற்கான, திட்டம் ஒன்றுவகுக்கப்படவேண்டும்.
2. தனித்தனி பாடசாலைகளுக்கு அத்தியாவசியமானதும் பொருத்தமுமான அடிப்படைத் தேவைகளை வழங்க வேண்டும்.

3. தேவையான, அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் தகைமைகளை பெறுவதற்கான வழிகளை உருவாக்க வேண்டும்.
4. சேவைக்கால பயிற்சி வழங்குவதற்கான மூலவள நிலையத்தை உருவாக்க வேண்டும்.
5. அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனத்துக்கான பொருத்தமான திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும்.
6. மாதாந்த வேதனங்கள், அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளுக்கும் அனுபவங்களுக்கும் சமமானவையாக இருக்க வேண்டும். சம்பள முறைகேடுகள் களையப்பட வேண்டும்.
7. பாடத்திட்டம், துணைப்பாடத்திட்டம் பாடத்திட்டத்துக்கு புறம்பான திட்டங்கள் மற்றும் ஏனைய முறைகள், முன்-பிள்ளைப்பராய அபிவிருத்திக் கல்வி தொடர்பான நிபுணர்கள் அணியால், நிகழ்கால மட்டத்துக்கு கொண்டு வரப்பட வேண்டும்.
8. முன்-குழந்தைப்பராய கவனிப்பு, கல்வி மற்றும் உடல் நலம் முதலியவற்றின் நன்மைகளை பெற்றோர்களுக்குத் தெரிவிக்க பெற்றோர்களுக்கான புரிந்துணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை நடத்தவேண்டும்.
9. அனைத்து முன்பள்ளிகளையும் நிறுவுதல் மற்றும் கண்காணித்தல் முதலியன மாகாண கல்வி திணைக்களத்தின் (PDE) செயற்பாடாக இருக்க வேண்டும்.
10. முழுமையாகவே தனியார், குடிசார், முயற்சியாளர்களால் நடத்தப்படும் முன்பள்ளிகள் தவிர்ந்த ஏனையவற்றின் ஆசிரியர்கள் அனைவரும் PDE யால் தெரிவு செய்யப்பட்டு நியமனம் வழங்கப்பட்டு கல்வி அமைப்பில் உள்ள ஏனைய ஆசிரியர்களை ஒத்த வேதனம் வழங்கப்படவேண்டும்.
11. கல்வி சார்ந்தவை அல்லாத அரசுத் துறைகள் முன்பள்ளிகளை நிறுவுதல், முன்பள்ளி ஆசிரியர்களை பணிக்கமர்த்தி, அவர்களுக்கு, வேதனம் வழங்குதல் முதலியவை உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.
12. மாகாண கல்வி திணைக்களத்தின் ஆளுகையின் கீழ் உள்ள, முன்பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படும் பிள்ளைகள், தங்கள் வீட்டுக்கு வெளியேயான, எந்த தனியார் கல்வி நிலையத்துக்கும் அனுப்பாமலிருக்க பெற்றோரை ஊக்கப்படுத்தவேண்டும்.
13. விசேட தேவைகள் உள்ள பிள்ளைகளின் விசேடதேவைகளின் அடிப்படையில், அனுமதி மறுக்கப்படக்கூடாது.
14. பாடசாலைகளில் கற்பிக்கும் பிள்ளைகளில் 3-5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளின் சதவீதத்தை நிர்ணயிக்க ஆய்வொன்றை நடத்த வேண்டும்.
15. முன்பள்ளிகளில் கற்பித்தல் ஊடகமாக தாய்மொழி மட்டும் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
16. தரம் 1இல் மற்ற மொழிகளை அறிமுகப்படுத்த வேண்டும்.
17. பிள்ளைகள் தங்கள் சொந்தக் கலாசாரத்தில் வேர் கொண்டிருக்கவும் மற்றைய பிள்ளைகளின் கலாசாரத்தை உணர்ந்து பாராட்டுவதற்கும் பொருத்தமான பொதுவான பாடத்திட்டம் ஒன்றை தயார் செய்து நடைமுறைப்படுத்த வேண்டும்.
18. 3 இலிருந்த 5 வயதான குழந்தைகளின் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் அனுமதி கோரினால், அவ்வாறான பிள்ளைகள் அனைவரையும் அனுமதிக்கவேண்டும்.
19. முன்-பள்ளி ஆசிரியர்களுக்கான சேவைப் பிரமாணக் குறிப்புகளை அறிமுகம் செய்யவேண்டும்.
20. தொழில் நுட்ப கற்பித்தல், கற்றல் பொருட்களையும் உபகரணங்களையும் விசேட தேவைகள் உள்ள பிள்ளைகளின் தேவைகளும் பூர்த்தி செய்யப்படும் விதத்தில், முன்பள்ளிகளிடையே சமமாக பகிரவேண்டும்.
21. முன்பள்ளியினுடைய எதிர்பார்ப்புகளையும் விதிமுறைகளையும் பற்றி, முன்பள்ளி பெற்றோர்களுக்கும் விசேட தேவைகளுள்ள பிள்ளைகளின் பெற்றோர்களுக்கும் புரிந்துணர்வு ஏற்படுத்தும் நிகழ்வுகளை நடத்த வேண்டும்.

## அத்தியாம் 10: விசேட கல்வி

## விசேட கல்வி தொடர்பான பரிந்துரைகள்

1. விசேட தேவைகளுடனான பிள்ளைகளுக்கு கல்வியூட்டும் விதத்தில் ஆசிரியர்கள் தங்கள் திறன்களை வளப்படுத்தி கொள்வதற்கென பயிற்சி திட்டங்களை நடத்த வேண்டும்.
2. மாணவர் செயற்பாடுகள் தொடர்பான கற்பித்தல் திறன் விருத்தியை வலய, மாகாண மட்டத்தில் ஏற்படுத்துதல்.
3. மருத்துவ பாசறைகளை நடத்துதல் வேண்டும்.
4. விசேட கற்றல் உபகரணங்களை விசேட கல்வி மையங்களுக்கும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கும் வழங்கவேண்டும்.
5. தேவை உள்ள பிள்ளைகளுக்கு, கேட்கும் சாதனம் (Hearing aid), செயற்கை அவயவங்கள் முதலியவற்றை வழங்க வேண்டும். பார்வைக் குறைபாடுகள் உள்ள பிள்ளைகளில் யாருக்காவது பிறெய்லி உபகரணங்கள் தேவையாக இருந்தால் ஒன்றை வழங்க வேண்டும். பிறெய்லி முறையில் உருவாக்கப்பட்டுள்ள வாசிப்புக்கான நூல்களை வழங்க வேண்டும்.
6. இரு பெற்றோரையும் இழந்து விட்ட பிள்ளைகளுக்கு விசேட ஆதரவை வழங்கவேண்டும்.
7. உளநல-சமூகவியல் ரீதியான தலையீடு, பொழுதுபோக்கு செயற்பாடுகள் முதலியவற்றை மேற்கொள்ளவும் பொது மக்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தவுமென, கண்காட்சிகள், உல்லாச பயணங்கள், விசேட தேவைகள் நாள், தற்புனை ஆழும் நோய் மாதம், விழாக்கள் முதலியவற்றை நடத்த வேண்டும்.
8. பாடசாலைகளில் இடம் பெறும் விளையாட்டுப் போட்டிகள், இசை நிகழ்சிகள் மற்றும் போட்டிகளில் விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்கென விசேட நிகழ்சிகள் நடத்தப்பட வேணடும்.
9. சுற்றாடலில் இருக்கும் விசேட தேவைகளுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட விசேட கல்வி அலகுகளை உருவாக்கவேண்டும்.
10. ஒவ்வொரு கோட்டத்திலும் தேவையான இடங்களில் உள்ளடக்குவதற்கென பாடசாலை வளவுகளுக்குள்ளேயே விசேட கல்வி அலகுகளை நிறுவ வேண்டும்.
11. ஆசிரியர் உதவியாளர்களுக்கு ஒரு சமஅளவிலான வேதனம் வழங்குவதோடு பயிற்சியும் வழங்க வேண்டும்.
12. ஒவ்வொரு 7 மாணவர்களுக்கும் ஒரு ஆசிரியர் உதவியாளர் இருக்க வேண்டும்.
13. இரண்டு வருடங்களுக்கு மேற்படாத காலப்பகுதிகளில், விசேட கல்வி வகுப்பொன்றில் கற்பித்திருக்காத சேவைக்கால ஆலோசகர்கள், ஆகக் குறைந்தது இரண்டு முழு பாடசாலை வருடங்களுக்கு, ஒரு விசேட கல்வி வகுப்பில் முழுநேரக் கற்பித்தலுக்கு திரும்ப வேண்டும். அந்தக் கற்பித்தல் முடிந்த பின்பு அவர்கள் மதிப்பீடு செய்யப்பட்டு மீண்டும் சேவைகால ஆலோசகர்களாக நியமிக்கப்படுவதற்கு கருத்தில் எடுத்துக் கொள்ளப்படலாம்.
14. வடமாகாண விசேட கல்வி மூலவள நிலையமானது கைதடியில் அல்லது கிளிநொச்சி அல்லது முல்லைத்தீவு மாவட்டங்களில் A9 வீதிக்கு அண்மையாக நிறுவப்பட வேண்டும்.
15. பிள்ளைகளை, சுயசார்பு மற்றும் சுயாதீன அல்லது உதவும் கவனிப்புடனான குழு வாழ்க்கையை எட்டும் விதத்தில், பிள்ளைகளை வாழ்க்கைத் திறன்களை கற்பதற்கென அனைத்து விசேட கல்வி அலகுகளிலும் உபகரணங்கள் மற்றும் பொருட்களை வைத்திருக்க வேண்டும்.
16. சமூகத்தில் கிடைக்கக் கூடியதாக இருக்கிற உதவி வழங்கப்படும் பாதுகாப்பான தொழில்பயிற்சி திறன்களில் ஈடுபடவென, விசேட தேவைகளுள்ள பிள்ளைகளுக்கு, அவர்களுடன் கூடச்செல்லும், விசேடமாக பயிற்றப்பட்ட பணியாளருடன் கூடிய, விசேட போக்கு வரவுச்சாதனங்களை வழங்கவேண்டும்.
17. அனைத்து விசேட தேவைகள் கொண்ட வயது வந்தோரும் குழு வாழ்க்கைக்கான தங்கள் செலவுகளுக்கான பணத்தை பெறும் விதத்தில் அவர்களுக்கு ஒரு மாதாந்த படியை வழங்குவது தொடர்பான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும்.
18. சுகாதார சேவைகள், சமூகசேவைகள், விசேட கல்வி அபிவிருத்திக்கென இணையத்தளங்கள் மூலமான தகவல்களை பேணுவதற்கென தகவல் தொடர்பாடல் அலகுகளை இணைக்கவேண்டும்.
19. சைகை மொழி தொடர்பான விசேட கல்விக்கான மேலதிக பயிற்சிகளை வழங்க வேண்டும்

20. கட்டடங்களும் மைதானங்களும் விசேடதேவை பிள்ளைகள்-நட்பானவையாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்
21. பிறெய்லி முறையிலான பாடப் புத்தகங்களையும் மற்றைய பொதுவான பாடப் புத்தகங்களை தமிழிலும் பிரசுரம் செய்ய வேண்டும்.
22. விசேட கல்விக்கான மாகாண ஆலோசனை செயற்குழு ஒன்றை உருவாக்க வேண்டும்.
23. வலய மட்டத்தில் காலத்துக்குக் காலம் குறுகிய காலப் பயிற்சிகளை ஒழுங்கு செய்ய வேண்டும்.
24. விசேட கல்வி ஆசிரியர்கள், மேற்பார்வை மற்றும் நிர்வாக ஆளணியினரின் ஆளணி அபிவிருத்தி திட்டம் ஒன்றை தயார் செய்து, விசேட கல்வியில் முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளில் பயிற்சி வழங்குவதை நடைமுறைப்படுத்த வேண்டும்.
25. தமிழ்மொழியுடன் ஒத்தியையக்கூடிய பிறெய்லி ஆளிப்பலகைகளை உருவாக்க வேண்டும் அல்லது அவ்வாறான உபகரணங்களை கொள்வனவு செய்யவேண்டும்.
26. வடமாகாணத்தில் உள்ள ஆசிரியர் பயிற்சி நிலையங்கள், விசேடகல்வி ஆசிரியர் உதவியாளருக்கென 1 வருட டிப்ளோமா பாடநெறியையும் விசேட கல்வியிலான கல்வி இளமாணி பாடநெறிகளையும் நடத்துவதை உறுதிசெய்ய வேண்டும். ஒரு இடைக்கால எற்பாடாக, விசேடகல்வி ஆசிரியர்களைத் தமிழ் நாட்டிலுள்ள விசேடகல்வி ஆசிரியர் சான்றிதழ்களை வழங்கும் கல்வி நிலையங்களுக்கு அனுப்பி பயிற்சி வழங்க வேண்டும்.
27. பல்வேறு விசேட தேவைகளையும் கொண்ட பிள்ளைகள், மாற்றுத் திறன்கொண்ட ஒருவரை எதிர்கொள்ளும் சவால்களுக்கு முகம்கொடுத்து சமூகத்தினுடைய சுயாதீனமான பங்களிப்பு செய்யும் உறுப்பினராக ஆவதற்கு, அவர்களுக்குள்ள உள்ளார்ந்த திறன்களை, ஆகக்கூடிய மட்டத்துக்கு கொண்டு போகும் விதத்திலான பாடத் திட்டங்களை உருவாக்க வேண்டும்.

## அத்தியாயம் 11: தொடர்ச்சியான கல்வி

### பரிந்துரைகள்


1) ஓவ்வொரு வலயத்திலும் பாரம்பரிய நிரந்தரமான ஆசிரியரின் துணைகொண்டு தொடர்கல்விப் பாடசாலைகளை அதாவது வயதுவந்தோருக்கான பாடசாலைகளை அமைக்கலாம்.
2) கல்வியைத் தொடர விரும்புகிற பயனாளிகள் எல்லோரும் 16 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும் கல்வியைத் தொடர விருப்புடையவர்களாகவும் இருக்க வேண்டும்
3) தற்போது நடைமுறையிலுள்ள முறைசாராக்கல்வி முறைமையை மீளாய்வு செய்துஅதில் கடமையாற்றும் ஆளணியினரை புதிய கடமைப் பொறுப்புக்களைஏற்க மீள் பயிற்சி வழங்க வேண்டும்.

## அத்தியாயம் 12: தமிழ் மொழி மூல கல்வி நிறுவகம் (ITME)

### பரிந்துரைகள்

1. தேசிய கல்வி நிறுவகத்துடனும் (NIE) தமிழ் மொழி மூல கல்வி நிறுவகத்துடனும் (ITME) கூட்டுறவாகவும் ஒத்திசைவாகவும் ஒரு செயற்குழு ஒன்றை நிறுவ வேண்டும். தமிழ் மொழி மூல கல்வி நிறுவகத்தின் (ITME) செயற்குழுவில் NESR இல் இருந்து கல்வியமைச்சினால் தெரிவுசெய்யப்பட்ட மூன்று பிரதிநிதிகளும் கல்வி அமைச்சில் இருந்து 3 பிரதிநிதிகளும், வடக்கு, கிழக்கு மாகாணசபைகளின் கல்வியமைச்சின் அனுபவம் வாய்ந்த மூத்த பிரதிநிதிகளும் வடக்கு கிழக்கில் இருக்கும் நான்கு கல்விக் கல்லூரிகளும் கிழக்குப் பல்கலைக்கழகமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் தேசிய கல்வி நிறுவகமும் (NIE) வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே இருக்கும் தமிழ் மொழி மூல பாடசாலைகளும் பிரதிநிதிகளாக இருப்பர்.

**Figure 15.1: ITME Structure**




2. ITME செயற்குழுவினுடைய மேற்கோள் வாசகம், வரைவு ஒழுங்கமைப்பு அட்டவணை மற்றும் 2014 டிசம்பர் மாதம் முடிவடைவதற்கு முன்னர் அதாவது 2015ஆம் ஆண்டு ITME நிறுவப்படுவதற்கு முன்னதாக செயற்றிட்ட பிரேரணை ஒன்றினை முன்வைத்தல், என்பவற்றை உள்ளடக்கி இருப்பதுடன் மேலுள்ள திட்ட முன்மொழிவுகளையும் கருத்திற் கொள்ள வேண்டும்

3. தமிழ் மொழி மூல கல்வி நிறுவகம் (ITME) நிறுவப்படும்வரை தற்போது தனித்தனியாக இயங்கிக் கொண்டிருக்கும் எல்லாப் பிரிவுகளும் அவைகள் முன்னர் செய்தது போலவே தொடர்வதுடன் தமது திட்டங்களையும் செயற்பாடுகளையும் தமிழ்மொழி மூல கல்விநிறுவகம் (ITME) அங்கீகரிக்கப்படும் வரை மாற்றக்கூடாது.

### அத்தியாயம் 13: வடமாகாணத்தின் ஒரு புதிய கல்வி நிர் வாக முறைமை

### வட மாகாண கல்வி இயக்குனர் நிருவாக வாரியம் (NPDE)

1. முன்மொழியப்பட்ட வட மாகாணக் கல்வி இயக்குநர் நிர்வாக வாரியம் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஒரு அதிபர்கள் பிரதிநிதி ஒரு ஆசிரியர்கள் பிரதிநிதி ஒரு மாணவர்கள் பிரதிநிதி (17வயதுக்கு மேற்பட்ட இருபாலாரிலும்) வர்த்தகர்கள் சபையிலிருந்து ஒரு பிரதிநிதி சட்டத்துறையினரிலிருந்து ஒரு பிரதிநிதி வங்கித்துறையிலிருந்து ஒரு பிரதிநிதி யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பிரிவுத் தலைவர்களிலிருந்து ஒரு பிரதிநிதி ஒவ்வொரு கல்விக் கல்லூரியிலிருந்தும் ஒரு பிரதிநிதி மற்றும் மருத்துவத் தொழிற்றுறையினரிலிருந்து ஒரு பிரதிநிதி அரசினாலோ அன்றி மாகாண அரசினாலோ அல்லது பாராளுமன்றினாலோ தெரிவு செய்யப்பட்ட எந்த அங்கத்தவரும் இல்லாததாக ஒரு கூட்டமைவான உத்தேச வட மாகாண கல்விச் சபை (BNPDE) கொண்டிருக்க வேண்டும்.

2. பாடவிதானம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் தேசிய மற்றும் மாகாண பரீட்சைகள், பாடசாலைகள், மாணவர்கள் என்போரிடையே சமத்துவம், குழந்தையை மையப்படுத்திய கல்வி அனைத்து ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் சம்பந்தமான பொதுவான விவகாரங்கள் மாகாணங்களுக்கான ஆசிரியர்கள், ஊழியர்களின் ஓய்வு ஊதியம் மற்றும் கல்வி தொடர்பாக கல்வி அமைச்சினால் ஆக்கப்படும் வெளியீடுகளுக்கும் கல்வியமைச்சே பொறுப்பாகவிருக்கும். ஓராண்டு, மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டுகளுக்கான திட்டங்களைத் தயாரித்தல் பிரத்தியேக வேலைத் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்தல் அனைத்துப் பாடசாலைகளிலும் சமத்துவமான கல்வித் தரத்தை எட்டவும் கற்றல் கற்பித்தலின் தரத்தை அனைத்துப் பாடசாலைகளிலும் சமனிலையில் பேணுவதற்கும் சமமான நிதி ஒதுக்கீட்டையும் அத்துடன் பாடசாலை வேளைகளிலே பாடசாலை நிகழ்ச்சிகளின் போதான பாதுகாப்பை உள்ளடங்கலாக பாடசாலையினதும் பாடசாலை சார்ந்த அனைத்து அங்கத்தவரினதும் பாதுகாப்பும் நிச்சயப்படுத்திக் கொள்ளுதல். இலங்கைப் போக்குவரத்துச் சபை CTB மற்றும் ZSB களினுடைய ஒத்துழைப்போடு பாடசாலைக்கான போக்குவரவு முறைமை ஒன்றினையும் வழங்க வேண்டும்.
3. வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் வட மாகாண கல்வி இயக்குநர் நிர்வாக வாரியத்தின் ஒரு உறுப்பினராக இருப்பார். அத்துடன் அவர் உத்தேச வடமாகாண கல்வி இயக்குநர் நிர்வாகவாரியத்தினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை அமுலாக்கம் செய்வார்.
4. மாகாணப் பணிப்பாளர் பதவி நிலையானது ஒரு குறிப்பிட்ட ஆண்டுக் கணக்கில் புதுப்பிக்கக் கூடியதான ஒப்பந்த அடிப்படையில் உத்தேச வடமாகாண கல்வி இயக்குநர் நிர்வாகவாரியத்தினால் நியமிக்கப்படும்.

## வலயக் கல்விச் சபை (ZBE)

1. வலயக் கல்விச் சபையின் அரைவாசி உறுப்பினர்கள் வலய மாவட்ட வாக்களிப்பாளர்களால் தெரிவு செய்யப்படுவர். அத்துடன் ஏனைய அரைப்பங்கினர் வட மாகாண கல்வி அமைச்சினால் சிறந்த தொழில்சார் வல்லுநர்களிலிருந்து (வணிக சமூகத்திலிருந்தும், வழக்கறிஞர்கள் கல்வியாளர்கள், மருத்துவம், பொறியியல், கணிதம் அல்லது ஏனைய தொழில் நிலைகளிலிருந்தும்) வலயத்துக்கு உட்பட்டு தெரிவு செய்யப்படுவர். அதிபர் தரம் I II, III, IC மற்றும் IAB பாடசாலைகளிலிருந்து அதிபர்கள் தரப்பிலிருந்து பிரதிநிதிகள் , மாணவர்கள், ECDE, விசேட கல்வி, தொடக்க மற்றும் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் கல்வி நிலையங்களில் தொடரந்து பணி செய்துகொண்டிருக்கும் அதிபர்கள் மற்றும் பெற்றோர்களும் நியமிக்கப்படுவர். ஆண் பெண் இருபாலாருடைய எண்ணிக்கையளவு ZBE க்கான அங்கத்தவர்தெரிவு செய்தலில் சமனிலையில் பேணப்படும்
2. இரகசிய வாக்கெடுப்பு மூலமாக ZBE அதற்கான தலைவரைத் தேர்வு செய்யும்.
3. வலயக் கல்விப் பணிப்பாளர் ZBE இன் ஒரு உறுப்பினராவார் அத்துடன் அவர் ZBE இன் கூட்டங்களின் போது சமுகமளிப்பார். மாகாணப் பணிப்பாளரும் (PDE) ZBE யின் ஒரு உறுப்பினர் ஆவார். வலயத்துக்கு இடையேயான பிரச்சினைகள் தொடர்புடைய நிகழ்ச்சி நிரல் ஒன்றுடன் அது தொடர்புடையதாக இருக்கின்ற போது மாகாணப் பணிப்பாளருடைய பிரதிநிதி எப்போதும் ZBEயின் ஒவ்வொரு கூட்டங்களிலும் கலந்து கொள்ள வேண்டும். முதல் மணித்தியாலக் கூட்டம் வலயத்துக்குட்பட்டு கடமையாற்றுபவருடையதாக இருக்கும். அது அவர்களிடமிருந்து விடயங்களை அறிந்து கொள்வதற்காகவும் அவர்களுடைய வினாக்களுக்கு விடைகள் பகிர்வதற்காகவுமாக அமையும். விடைகள் குறிப்பிட்ட கால எல்லைக்குள் எழுத்து மூலமாக கூட்டத்துக்கு முன்னதாக பரிமாறப்பட்டுவிடும

## வலயக் கல்விச் பணிப்பாளர் (ZDE)

1. வலயக் கல்விப் பணிப்பாளர் பதவி நிலை வலயக் கல்விச் சபையால் ஒரு குறிப்பிட்ட காலத்தில்புதுப்பிக்கக் கூடியதான ஒப்பந்த அடிப்படையில் விளம்பரப்படுத்தி தகுதியடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டு நியமிக்கப்படுவதாகும்.
2. வலயக் கல்விப் பணிப்பாளர் வலயக் கல்விச் சபை மேற்கொள்ளும் அனைத்துதீர்மானங்களையும் அமுல் செய்வார்.

## அதிபர், ஆசிரியர்கள், நிருவாக உத்தியோகத்தர் அத்துடன் ஏனைய அலுவலர்களும்

1. அனைத்துப் பதவிகளும் வலயக் கல்விச் சபையின் தேவையைப் பொறுத்து தரத்தின் அடிப்படையில் விளம்பரப்படுத்தப்பட்டு நியமிக்கப்படும்.
2. வலயக் கல்விச் சபைக்கு ஆவணப்படுத்தப்பட்ட கனதியான காரணங்களின் அடிப்படையில்பணி நீக்கம் செய்யவும் அதே நேரம் விலகல் கடிதங்களை ஏற்றுக்கொள்ளவும் அதிகாரம் கொண்டிருக்கும்.
3. அனைத்து அலுவலா்களும் பாடசாலைக்குப் பாடசாலை தத்தமது நலன்களை முன்னெடுத்துச் செல்லல் மற்றும் ஓய்வு ஊதியம் என்பனவற்றில் மாகாணக் கல்வி அமைச்சு பொறுப்பாக இருக்கும்.
4. பணிநிலை வெற்றிடங்கள் அறிவிக்கப்படுவதற்கு முன்பதாகவே முன் அனுமதியளிக்கப்பட்ட அடிப்படைகளில் சேவைகளின் நிபந்தனைகள் பணியாளருக்குப் பணியாளர் வேறுபடலாம்.

## சிபார்சுகள்

1. வடக்கில் நிலையான முடிவெடுக்கும் கல்வி முறைமையை நிறுவுதலைக் கருத்தில் கொண்டுஒரு குவி மையக் குழுவொன்றை நிறுவ வேண்டும்.

2. இந்த குவி மையக் குழு மூன்று அங்கத்தவர்களை NESR இலிருந்து உள்வாங்கி அவர்களையும் உள்ளடக்கியதாகவும், மூன்று அங்கத்தவர்களை கல்வி அமைச்சிலிருந்தும், இரண்டு அங்கத்தவர்களை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலிருந்தும் கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்தும் NIE இல் இருந்து ஒரு அங்கத்தவர், தேசிய கல்வி ஆணைக் குழுவிலிருந்தும் ஒரு அங்கத்தவா் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர், ஐந்து மாவட்டங்களின் கிராமிய மற்றும் கரையோர பிரதேசங்களிருந்து ஐந்து வலய பணிப்பாளர்களையும் வட மாகாணத்தின் மாவட்டங்களிலிருந்து மூன்று தகுதி வாய்ந்த ஓய்வு பெற்ற அதிபா்களையும் ஐந்து மாவட்டங்களில் கிராமிய மற்றும் கரையோர பிரதேசங்களில் சேவையாற்றிக் கொண்டிருக்கும் ஐந்து அதிபர்களையும் ஒரு பட்டயக் கணக்காளரையும் ஒரு பொறியியலாளரையும் வட மாகாண வர்த்தகர் அமைப்பிலிருந்து ஒரு பிரதிநிதியையும் வட மாகாண மாவட்டகளிலிருந்து கிராமிய சமூகத்திலிருந்து ஐந்து பெற்றோர்களையும் உள்ளடக்கி இருக்க வேண்டும்.
3. குழுவின் குறிப்பு விதிமுறைகள் வடமாகாண புதிய கல்வி நிர்வாக முறைமையினை நிறுவுவதற்கான முன்மொழிவை மீளாய்வு செய்தல் மற்றும் தமது தீர்மானங்களை அமுலாக்கத்திற்கான ஆவணங்களைத் தயார்ப்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்.

## அத்தியாயம் 14: அமுலாக்கல் செயன்முறை, கால எல்லை மற்றும் பொறுப்பு

1. "உடனடியாக" என அடையாளமிடப்பட்ட சிபாரிசுகள் யாவும் கல்வி அமைச்சினாலும் மாகாண கல்வித் திணைக்களத்தாலும் அமுல்ப்படுத்தப்படும். "குறுங்காலம்" "இடைத்தர காலம்" என அடையாளமிடப்பட்ட சிபாரிசுகளை அமுல்ப்படுத்துவதற்கான திட்டவரைபுகளும் அதற்கு பொறுப்பான பிரிவுகளும் உடனடியாக ஆரம்பிக்கப்படும். (14.1 உருவிளக்கப் படத்தை பார்க்கவும்)


2. வலயக் கல்விப் பணிப்பாளர்கள் சிபாரிசுகளை எவ்வாறு கல்வி அமைச்சர் மற்றும் செயலாளர், மாகாணக் கல்வித் திணைக்களம் போன்றோரின் உதவி ஒத்துழைப்புடன் தமக்குரிய வலயத்தில் அமுலாக்கம் செய்யத்திட்டமிட்டுள்ளனர் என்பது தொடர்பில் மே மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு வேண்டப்பட்டுள்ளனர். ஒவ்வொரு வகைப் பாடசாலையிலிருந்தும் ஒரு பாடசாலையை - வகை **1AB, 1C, II** மற்றும் **III** தமது வலயத்திலிருந்து தெரிவு செய்து பரீட்சார்த்த திட்டமாக சிபார்சுகளை செயற்படுத்தும் வண்ணம் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் வேண்டப்பட்டுள்ளனர். எனவே மொத்தமாக வடமாகாணத்திலே 48 பாடசாலைகளில் சிபார்சுகள் செயற்படுத்தப்படும். மாகாணத் திணைக்களத்தின் செயலாளரின் உள்ளீடுகள் தேவைப்படாத சிபார்சுகளை செயற்படுத்துமாறும் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

3. "சிபாரிசுகள் அமுல்ப்படுத்துதல் மற்றும் கண்காணித்தலுக்காக அமைச்சருக்கான ஆலோசனைக்குழு (RIMP)" ஒன்றை அமைக்குமாறு சபையிலே பரிந்துரைக்கப்பட்டது. அத்துடன் பின்வரும் மையக் குழுக்களைச் சேர்ந்த பிரதிநிதிகளை இவ் ஆலோசனைக் குழுவிற்கு நியமிக்குமாறும் அச்சபை வேண்டிக்கொண்டது.


   a. சமூக உள நலம் பேணுதல்.
   b. கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை மற்றும் ஆராய்ச்சி மற்றும் பிரசுரம்.
   c. நிர்வாகம், நியமனம் மற்றும் இடமாற்றம்.
   d. கற்பித்தல் கற்றல் மற்றும் ஆசிரியர்களுக்கான கல்வி.
   e. விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி அபிவிருத்தி.
   f. தொடர் மதிப்பீடும் மற்றும் தேசிய பரீட்சைகள்
   g. தரம் 6 தொடக்கம் 13 வரைக்குமான மாணவர்கள் சொந்த பாவனையிலுள்ள ஐபாட் அன்ரொயிட்டில் உபயோகப்படுத்த பொருத்தமான இலத்திரனியல் பாடநூல்கள்.
   h. தமிழ் மொழிமூலக் கற்கைக்கான நிறுவனம்.
   i. புதிய கல்விசார் பாடசாலை முறைமையின் அமைப்பு.
   j. அலுவலர்களின் மேம்பாடு (உரு விளக்கம் 14.2 ல் பார்க்க அலுவலர்களின் பரிபூரணமான மேம்பாட்டுத் திட்டம் தேவைப்படுகின்ற பிரிவு பற்றி அறிய பார்க்கவும்.)

4. கல்வி அமைச்சின் மற்றும் கல்விசார் நிறுவனங்கள், மாணவர்கள், அதிபர்கள், பல்கலைக்கழகங்கள், கல்வியியற் கல்லூரிகள், என்பவற்றின் பிரதிநிதிகளையும் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பிரதான கல்விசார் நிர்வாக அலுவலர்களையும் உள்ளடக்கியதாக குவி மையக் குழுக்கள் அமைந்திருக்கும். இந்த குவிமையக் குழுக்களின் பணிகளாவன.

   1. NESR அறிக்கையில் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளை இனம் கண்டு முன்னுரிமை அடிப்படையில் அவற்றை ஒழுங்குபடுத்துதல்.
   2. செயற்றிட்டங்களை உருவாக்கக்கூடியதும், நிதி வசதிகளை திரட்டக்கூடியதாக செயற்றிட்ட அமுலாக்கக் குழு ஒன்றை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சரின் கீழ் போதுமான நிதி வசதியுடன் உருவாக்குதல்.
   3. செயற்றிட்ட அமுலாக்க செயன்முறைகளை கண்காணித்தல்.
   4. கல்வி அமைச்சருக்கு காலாண்டு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.


Proposed NP Education Administrative System with devolved decision making at Zonal Level
Central Ministry of Education
NP Ministry of Education
NP Dir of Ed
NPDE need to be a position appointed on Merit by the NPBE. Responsibility include implementing NPBE. (See Text for more info.)
Proposed NPDE should have a Board. Responsibilities include curricula, instructional materials, examinations. (See text for more information on composition and responsibilities.)
NP Board of Educ.
NP Dir of Ed
Zonal Educ Office...
ZDE is an advertised position appointed on merit by the ZBE. There shall be a schoos Security division in each district for schools related protection. ZDE is Responsible for implementing ZBE decisions.
Zonal Board of Education (ZBE)
Zonal Dir of Ed ZDE
Zonal Board of Educatio...
Half the ZBE members are are elected by the voters in the Zones and the other half appointed by the NP Min of Ed from eminent educators, from medical and engineering profession and from Business entrepreneurs in the District and the NP, Principals' Rep. (See proposals for details.)
Zonal Educ Office (ZEO)
All schools in the Zone
ECDE
Sp Ed
Continuing Educ School. (CES)
All schools in the Zone
Principal, teachers, admin and other staff positions shall be advertised and appointed by ZBE based on Merit and Need. ZBE shall also have powers to Terminate for documented reasons and accept resignations. All staff shall carry their benefits from school to school and pensions shall be the responsibility of the NP Ministry of Education.
Continuing Educ School....
One CES in each ZD. A Director and full-time and Part-time staff from the world of work. See CEC proposal for details






Special Needs Education Group at the Consultancy Workshop 24 April 2014



NESR Consultancy Workshop - Day 2
Working Groups: 24 April 2014



Teaching, Learning & Examination Group

# BIBLIOGRAPHY


Auguste, B., Kihn, P., & Miller, M. (2010). Closing the talent gap: Attracting and retaining top-third graduates to careers in teaching. http://mckinseyonsociety.com/downloads/reports/Education/Closing_the_talent_gap.pdf

Balasooriya, B.M.J.. (2012-2013). "Teacher recruitment and mobility in Sri Lanka". Commonwealth Education Partnership (accessed 6 July 2014) http://www.cedol.org/wp-content/uploads/2013/09/Teacher-recruitment-and-teacher-mobility-Balasorriya.pdf

Bray, TM & Kwo, OWY. (2014): 'Regulating Private Tutoring for Public Good: Policy Options for Supplementary Education in Asia'. Bangkok and Hong Kong: UNESCO and Comparative Education Research Centre, HKU. (Accessed 19 June 2014: http://cerc.edu.hku.hk/new-book/regulating-private-tutoring-public-good-policy-options-supplementary-education-asia/)

Central Bank of Sri Lanka, Statistics Department, "Economic and Social Statistics of Sri Lanka 2013" http://www.cbsl.gov.lk/pics_n_docs/10_pub/_docs/statistics/other/econ_&_ss_2013_e.pdf

Daily Financial Times (Daily FT), 4 June 2014 . "Sri Lanka students test e-learning programs to boost mathematics skills" http://www.ft.lk/2014/06/04/sri-lanka-students-test-e-learning-programs-to-boost-mathematics-skills/ (accessed: 10 June 2014).

Ethirveerasingam, Nagalingam. (1998): "An Appraisal of Education and Sports in the NorthEast Province of Sri Lanka", Report to the NorthEast Province Ministry of Education, Culture and Sports.

Kant , I . (1785). Grounding for the Metaphysics of Morals, trs. J. Ellington. Indianapolis: Hackett , 1981 (Pressian Academy pagination).

Pallegedara, Asankha (2012): 'Demand for Private Tutoring in a Free Education Country: The Case of Sri Lanka'. International Journal of Education Economics and Development, 3 (4): 375-393.

Punchi, Lakshman. (January 2004) "Globalisation and Development: the Politics of Educational Reforms in Sri Lanka" Graduate Institute of International and Development Studies (IHEID) University of Oslo, Oslo, Norway http://www.norrag.org/en/publications/norrag-news/online-version/targets-in-education-training-off-centre/detail/globalisation-and-development-the-politics-of-educational-reforms-in-sri-lanka.html (accessed: 10 June 2014).

Ragel, Roshan and Arunan Sivananthan "The State of Higher Education in the North and the East of Sri Lanka" (forthcoming publication)

Sri Lanka Parliament National Institute of Education Act (No. 28 of 1985) accessed http://www.commonlii.org/lk/legis/num_act/nioea28o1985375/s4.html

Suraweera, A.V. (2011): 'Dr. Kannangara's Free Education Proposals in Relation to the Subsequent Expansion of the Tuition Industry'. Dr.C.W.W. Kannangara Memorial Lecture 22, Mahargama, Sri Lanka: Department of Research and Development, National Institute of Education.

UNICEF Sri Lanka, (2013, February). "Country Study: Out of School Children in Sri Lanka, Summary Report". p.7. (Accessed 24 June 2014 at: http://www.unicef.org/srilanka/2013_OSS_Summery.pdf)

World Bank, Conflict Prevention and Reconstruction Team (CPR), Social Development Department. (April 2005) Conflict Analysis Framework (CAF) http://siteresources.worldbank.org/EXTSOCIALDEVELOPMENT/Resources/244362-1164107274725/3182370-1164110717447/Conflict_Analysis_Framework.pdf



# பின் இணைப்பு I: பொதுமக்களதும் பங்குதாரர்களதும் சமர்ப்பிப்பின் தொகுப்பு சமர்ப்பிப்புக்களின் தொகுப்பு வழிமுறைகள்

ஒவ்வொரு 12 வலயங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட பெற்றோர், ஆசிரியர்கள் மாணவர்களோடு வெவ்வேறாக நேர்காணல்கள் நிகழ்த்தப்பட்டன. மாணவர்களும் பற்றுறுதியோடு எழுத்து மூலமான சமர்ப்பிப்புக்களை வரைந்தனர். தொடர்ந்தும் வட பகுதியில் இல்லாதவர்கள் மற்றும் தொடர்ந்தும் பங்குதாரர்களாய் இல்லாதிருப்போர் இப்போ இந்த கல்வி முறைமையின் உள்ளிருப்போர் உள்ளடங்கலாக இந்த கல்வி முறைமைக்குள் சமுகளித்திருந்தோர் அல்லது இதுபொடர்பில் பணியாற்றியிருந்த பொதுமக்களையும் தங்களுடைய அவதானிப்புக் குறிப்புக்களையோ அன்றி சிபாரிசுகளையோ மின்னஞ்சல் ஊடாக அல்லது கூகுல் அமைப்பு முறைகளூடாகவோ அல்லது தபால் சேவைகளினூடாகவோ ஒருங்கிணைப்பாளர் கௌரவ கலாநிதி ந. எதிர்வீரசிங்கம் அவர்களிடம் சமர்ப்பிக்கும்படி அழைப்பு விடப்பட்டனர். சமர்ப்பிப்புக்கள் 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ஆம் திகதிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. கல்வி முறைமையின் முன்னேற்றம் தொடர்பான தத்தமது கருத்துக்களை செயலாளர்கள், மாகாணப் பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள், வலயப் பணிப்பாளர்கள், ஆசிரியர் சங்கம் மற்றும் ஏனைய திணைக்கள பணியாளர்களும் கூட முன்வைத்திருந்தனர்.

எல்லா சமர்ப்பிப்புக்களும் கிடைக்கப்பெற்றமையை அறிவித்து முறையே பிரிவு இணைப்பாளர்களுக்கும் அவர்கள் தமது அறிக்கைகளை சமர்ப்பிக்கும்போது அவர்களுடைய சிரத்தையை செலுத்தும்படி குறிப்பிட்டுச் சமர்ப்பிக்கப்பட்டது. எல்லாச் சமர்ப்பிப்புக்களும் வழிகாட்டற் குழுவின் கோவையில் வைக்கப்படும். இந்தத் தொகுப்பானது அதனது சமர்ப்பிப்புக்களின் தோற்றுவாய்களை பெயர்கொண்டோ அன்றி பதவிநிலை கொண்டோ அடையாளப்படுத்தவில்லை. சில வகைப்படுத்தல்களின் இடையில் மாறுபாடான விபர அறிக்கைகள் கூட இருக்கலாம். சம்பந்தப்பட்ட வகைப்படுத்தல்களில் சில ஒத்த பிரச்சினைகளும் சிபாரிசுகளும் காணப்படக்கூடும். இது ஏனென்றால் இந்த சமர்ப்பிப்புக்கள் பரந்த சிந்தனையுடைய நோக்கத்தைக் கொண்டிருந்தது. அத்துடன் அவை ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கக் கூடும். ஒருங்கிணைப்பாளர் அவர்கள் எல்லாச் சமர்ப்பிப்புக்களையும் படித்து அவற்றில் 8 வகைப்படுத்தல்களை இனங்கண்டுள்ளார். அதாவது எல்லாக் குறிப்புக்களும் ஒரே பார்வையிலேயே பார்க்கப்படும். அவையாவன:

**பாடசாலை மற்றும் அதிபர்கள் தொடர்பானவை**
**ஆசிரியர்கள் தொடர்பானவை**
**மாணவர்கள் தொடர்பானவை**
**பாடத்திட்டங்கள் மற்றும் பரீட்சைகள் தொடர்பானவை**
**கணனிப்பாவனை மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் தொடர்பானவை**
**பெற்றோர் மற்றும் வீட்டுச் சூழல் தொடர்பானவை**
**சமூகம் மற்றும் பாடசாலைச் சூழல் தொடர்பானவை**
**கல்வித் திணைக்களம் தொடர்பானவை**
**வகுப்பறைக் கற்றல் கற்பித்தல்**
**ஆசிரியர் கல்வி**
**ஆசிரியர்கள் – பெற்றோர்கள் – மாணவர்கள் உறவுநிலை**

### 1.1. பாடசாலை மற்றும் அதிபர்கள் தொடர்பானவை

1.1.1. விளையாட்டுக்கான இடவசதியோ அல்லது உபகரணங்களோ இல்லை
1.1.2. விஞ்ஞானத்துறைக்கான ஆய்வுகூடமோ அல்லது ஆய்வுகூட கருவிகளும் உபகரணங்களும் இல்லை.
1.1.3. விஞ்ஞான பாடத்துக்கும் கணிதபாடத்துக்கும் ஆசிரியர்களில்லை.
1.1.4. விஞ்ஞான மற்றும் கணிதபாட ஆசிரியர்கள் தகைமைவாய்ந்தவர்களாயில்லை.

1.1.5. ஆசிரியர் பற்றாக்குறை.
1.1.6. அதிபர் பாடசாலை மீது அக்கறையுடையவராயில்லை.
1.1.7. வகுப்பறைகளின் கூரைகளில் மழைக்காலத்தில் ஒழுக்கு ஏற்படுகின்றது

1.1.8. பாடத்திட்டத்துக்குப் புறம்பான செயற்பாடுகள் அளவுக்கதிகமாக இருத்தல்.

1.1.9. பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் மாணவர் குழுக்களை அமைக்கும்படி திணிப்புக்களை ஏற்படுத்தியும் அவர்களுடைய நேரங்களை எடுத்துக் கொள்கின்றன. அத்துடன் மாணவர்களுக்கு உதவாத வகையிலான செயற்பாடுகளில் ஆசிரியர்களை ஈடுபடுத்தி வேறு பணிகளை அவர்களில் சுமத்துகின்றன. அந்த மாதிரியான இடையூறுகள் மட்டுப்படுத்தப்பட வேண்டியவை

1.1.10. குறிப்பிட்ட சில மாணவர்களே எப்போதும் பேச்சு, பாடல் மற்றும் ஆடல் போன்ற நிகழ்ச்சிகளுக்குத் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

1.1.11. போட்டிகளில் பங்குகொள்ள விரும்பும் ஏனையோர் செயற்பாடுகளில் கலந்துகொள்ள ஆர்வமுடையோராகவிருந்தபோதிலும் அவர்கள் தெரிவு செய்யப்படுவதில்லை.

1.1.12. ஆலோசனை கூறுபவர் ஒருபோதுமே வருகை தருவதில்லை அத்துடன் ஆலோசகர்களுக்கான தனிப்பட்ட கூடம் ஒன்றும் கிடையாது.

1.1.13. ஏனைய மாணவர்கள் கிண்டல் செய்வார்கள் என்று அஞ்சி ஒரு பிள்ளை கூட ஆலோசனை கூறுபவர்களை நாட விரும்புவதில்லை.

1.1.14. சில மாணவர்கள் வெவ்வேறு செயற்றிறன் மட்டங்களில் வித்தியாசமான போக்கிலிருக்க விரும்புவதில்லை.

1.1.15. பல் ஊடகம் (Multimedia) பல பாடசாலைகளில் சரியாக வேலை செய்வதில்லை.

1.1.16. ஆசிரியர்கள் வேறு பணிகள் செய்யும்படி கேட்கப்படுகிறார்கள்.

1.1.17. தகவல் மற்றும் கணனித் தொழில் நுட்பத் துறைசார் ஆசிரியர்கள் முழுமையாக தகவல் மற்றும் கணனித் தொழில் நுட்பத் துறைசார் கற்பித்தலில் ஈடுபடுத்தப்படுவதோடு ஏனைய ஆசிரியர்களும் தங்களுடைய பாடங்களைக் கற்பித்தலில் கணனியை உபயோகிக்கும் வகையில் அவர்களுக்கும் உதவுதல் வேண்டும். கணனிகள் நிருவாக தேவைகளுக்காகவோ அன்றி தகவல் பதிவேற்றங்களுக்காகவோ அல்லது தட்டச்சு வேலைகளுக்காகவோ பயன்படுத்தப்படக் கூடாது. ஒரு தனியான தொழில் நுட்பத் துறை நபர் ஒருவர் அவ்வாறான பணிகளுக்காக ஊதிய அடிப்படையில் அமர்த்தப்பட வேண்டும்.

1.1.18. மனைவி மட்டும் வேலை செய்யும் ஒரு குடும்பத்தை மேல் நிலைக்குக் கொண்டுவர சம்பளம் போதுமானதல்ல.

1.1.19. இணைபாடவிதான நடவடிக்கைகளுக்கான மணித்தியால அளவு அளவுக் கதிகமானதாகும்

1.1.20. நடைமுறையிலிருக்கும் பொருள் உணராமல் மனனம் பண்ணிக் கற்கும் முறையும் புராதன பரீட்சையை மையப்படுத்திய மீள்நோக்குக் கற்பித்தலும் ஆட்சேபிக்கப்பட்டுள்ளதனால் விஞ்ஞான மற்றும் கணித பாடங்களுக்கான கற்பித்தல் விதிமுறை விசாரணை (நிகழ்விட விசாரணை முறை) அடிப்படையானதும் பட்டறிவுசார்ந்த முறைமையின் அடித்தளத்திலும் இருக்கவேண்டும்.

1.1.21. சில அதிபர்கள் இலஞ்ச ஊழல்மிக்கவர்களாக உள்ளதோடு சில ஆசிரியர்கள் உயர் பதவிகளுக்காக நட்பாதரவு காரணமாக அதிபர்களால் சிபாரிசு செய்யப்படுகிறார்கள்.

1.1.22. பாடசாலையானது பாடசாலை நேரம் தவிர்ந்த வேளைகளில் குறிப்பாக இரவு நேரங்களில் சமூகத்திலுள்ள பொறுப்பற்ற இளைஞர்களால் சட்ட விரோத மற்றும் நன்னெறிக்குப் புறம்பான செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அவர்களைக் கேட்பார் கிடையாது.

1.1.23. சில அதிபர்கள் இலஞ்ச ஊழல்மிக்கவர்களாக உள்ளதோடு சில ஆசிரியர்களும் அதைச் செய்வதற்கு ஆதரவு வழங்குகின்றனர்.

1.1.24. மழைக்காலத்தில் வகுப்பறைகளின் கூரைகளில் ஒழுக்கு வருகின்றது.

1.1.25. வகுப்பறைகளின் இடவசதி போதாததாகவும் ஆய்வுகூடங்கள் போதுமான இடவசதியற்றதாகவும் உள்ளன.

1.1.26. புறப்பாடவிதான நடவடிக்கைகளுக்கான மணித்தியால அளவு அளவுக்கதிகமானதாகும்.

1.1.27. 10ஆம் 11ஆம் 12ஆம் 13ஆம் வகுப்புகளில் தொழில் வழிகாட்டலை அறிமுகம் செய்தல்.

1.1.28. பொய்யான பெருமைகளுக்காக புலமைப் பரீட்சைகளில் பாடசாலைகள் அதீத கவனம் செலுத்துகின்றன.

1.1.29. மொழி மற்றும் கணிதபாட கற்றல் கற்பித்தல்களில் முன்னேற்றம் தேவையாகவுள்ளது.

1.1.30. வெறுமனே பொருளுணராமல் மனனம் பண்ணிக் கற்கும் முறையிலிருந்து விடுபட்டு குழந்தைப்பருவ ஆரம்ப கல்வியானது அவர்களைக் கற்பித்தலில் நவீன அணுகு முறைகளை பின்பற்ற வேண்டும்.

1.1.31. ஆரம்பப் பாடசாலை அனுமதி நடைமுறையானது மேம்படுத்தப்படவேண்டியதுடன் எல்லோருக்கும் நேர்மையானதாக இருக்கவேண்டும்.

1.1.32. குழந்தைகள் புலமை பரிசில்ப் பரீட்சைகளில் சித்தியடைந்திருந்தபோதிலும் கூட பல பாடசாலைகள் அந்தக் குழந்தைகளை பாடசாலையில் சேர்ப்பதற்காகவும் அவர்களிடமிருந்து பணம் கோருகின்றன.

1.1.33. புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி எய்தியிருந்தும் கூட ஒரு பிள்ளையை பாடசாலையில் சேர்த்துக்கொள்வதற்காக ஒரு தேசியப் பாடசாலை ஒன்று தீவுகளிலிருந்த அந்த பிள்ளையின் ஏழ்மை வாய்ந்த பெற்றோரிடமிருந்து ரூபா.25,000.00 கோரியிருந்தது. இது எல்லா தேசிய பாடசாலைகளிலும் மற்றும் பல அரச பாடசாலைகளிலும் பொதுவான ஒன்றாகவே உள்ளது.

1.1.34. வசதியற்ற வலயங்களிலுள்ள பிள்ளைகளுக்கு உரிய சந்தர்ப்பம் கொடுக்கப்படவேண்டும். அத்துடன் புலமைப் பரிசில் பரீட்சைக்குப் பின்னர் மேலதிக மாணவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.

1.1.35. புலமைப் பரிசில் பரீட்சைப் பேறாக வரும் பணத்தை பெற்றோர் தங்களுடைய சொந்த தேவைகளுக்காக பயன்படுத்துவது தடுக்கப்படவேண்டும்.

1.1.36. அந்த வகையான இழப்புக்களை சந்தித்த மாவட்டங்களிலிருந்து வரும் மாணவர்களின் விடுதிகளில் தங்குமிட வசதியளிக்கப்படவேண்டும்.

1.1.37. தீவகங்களிலுள்ள பல பாடசாலைகள் புறக்கணிக்கப்படுகின்றன அத்துடன் அவை அடிப்படை வசதிகளின் தேவைக்குட்பட்டுள்ளன. அம்மாதிரியான பாடசாலைகள் இனங்காணப்பட வேண்டும். அத்துடன் அதனுடைய குறைபாடுகள் திருத்தியமைக்கப்பட வேண்டும்.

1.1.38. நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு, ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, வேலணை ஆகிய பிரதேசங்களில் போதிய இடவசதியும் விளையாட்டு வசதிகளும் கட்டியெழுப்பப்படவேண்டும். அத்துடன் ஆசிரியர்களுக்கு மேலதிக பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

1.1.39. தேசிய பாடசாலைகளை மாகாண நிருவாகத்துக்குக் கீழ் மாகாண பாடசாலைகளாக்க வேண்டும்.

1.1.40. ஒவ்வொரு வலயங்களிலும் உள்ள பாடசாலைகளையும் 1 AB பாடசாலைத் தரத்துக்கு ஆகும் வகையில் அவற்றின் நிலையினை உயர்த்த வேண்டும் அல்லது தரம் கட்டி வளர்க்கப்படவேண்டும் அதனால் எல்லா வலயங்களும் வெவ்வேறு வகையான சம எண்ணிக்கையுடைய பாடசாலைகளைக் கொண்டிருக்கும்.

1.1.41. எல்லா வலயங்களிலும் உள்ள ஒரேமாதிரியான எல்லாப் பாடசாலைகளுக்கும் விளையாட்டுத்துறைக்கு சம இடம் கிடைக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

1.1.42. ஒரு ஆண்டில் ஒரு பாடசாலையில் கிடைக்கக்கூடிய வசதிகள் 210 நாள்கள மட்டுமே. அதுவும் காலை 8:00 மணியிலிருந்து பிற்பகல் 2:30 வரை பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மற்றப்படி மீதமான மாலை நேரம் ஆண்டின் மீதமுள்ள நாள்களிலும் பாடசாலைக் கட்டடங்கள் வெறுமையாகவே உள்ளன. இந்த இடம் கற்பித்தலுக்கும் வாசித்தலுக்கும் ஆங்கிலம் மற்றும் தமிழ் எழுதுவதற்குமாகவும் அத்துடன் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் வழங்க முன்வரும் நிதி உதவிகளைக் கொண்டு அவர்கள் நடைமுறைப்படுத்த விரும்பும் வாழ்க்கைக்கான தொழில் முறைக்கல்வி வளர்ந்தோர்க்கான கல்வி மாலைநேர வகுப்புக்கள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்காக உபயோகப்படுத்தப்படலாம்.

1.1.43. சில பாடசாலைகள் கணக்கிலடங்காத அளவு மாணவர் தொகையை அதுவும் 2000 இற்கும் அதிகமான மாணவர் தொகையைக் கொண்டுள்ளன. இதன் விளைவுகள்
- 1.1.43.1. பாடசாலைகளில் ஒழுக்கம்
- 1.1.43.2. குறைபாடுடையதும், மாணவர் ஆசிரியர்களுக்கும் அதிபருக்கும் இடையே ஆரோக்கிமற்றதுமான உறவுநிலை
- 1.1.43.3. மாணவர்கள் மீது தனித்தனியான கவனிப்பு மிகக் குறைவாயிருத்தலும் குறைந்தளவிலான வழிகாட்டலும்
- 1.1.43.4. இது "ஆசிரியர்.'. மேற்பார்வையாளர் விடயப்பரப்பைவிட மாணவரை நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டும்" என்ற மூதுரைக்கு எதிரான நிலையிலேயே போகின்றது.

1.1.44. அறிவுறுத்தப்பட்ட பாடசாலைப் பரிமாணம் ஏறக்குறைய 1500 மாணவர் தொகை

1.1.45. சில பாடசாலைகளில் நெருக்கடியான வகுப்பறைகள் (20' X 20' பரிமாணம்)
- 1.1.45.1. இது மாணவர்கள் மத்தியில் ஒழுக்கமின்மைக்கும் கட்டுப்பாடு குறைவான நிலைக்கும் வழிவகுக்கும். ஆசிரியர்கள் முற்றிலும் சோர்வடைந்துவிடுவார்கள்.
- 1.1.45.2. கற்றல் செயற்பாட்டுக்கான பொருத்தப்பாடற்ற பாடசாலைச் சமூக சூழ்நிலை கற்பித்தல் செயற்பாடு அதனால் கல்விச் செயற்பாட்டுத்தராதரம் பாதிக்கப்படுதல்.
- 1.1.45.3. மாணவர்களின் தனித்தனியான தேவைகளை அவர்களை அணுகி அவற்றுக்கு தீர்வு கொடுக்க இயலாத நிலையில் ஆசிரியர் இருத்தல்
- 1.1.45.4. ஆசிரியர் - மாணவர் இடையேயான உறவுநிலை நலிவடைந்திருத்தல்
- 1.1.45.5. மாணவர் தொகையை எந்தக் காரணம் கொண்டும் 35 இற்கு மேலே அதிகரிக்க அனுமதிக்கக் கூடாது

1.1.46. குறிப்பிட்ட அளவு பாடசாலைகள் பணியாளர் பற்றாக்குறைக்குள்ளான நிலையிலிருக்கும் அதேநேரம் சில பாடசாலைகள் அளவுக்கதிகமான பணியாளர் எண்ணிக்கையைக் கொண்டிருக்கின்றன.
- 1.1.46.1. தேவைக்கதிகமான பணியாளர்கள் குவிந்திருத்தல் ஆசிரியர்களின் சோம்பல்தனத்துக்கு இட்டுச் செல்லும்.
- 1.1.46.2. வள விரயம்
- 1.1.46.3. பாடசாலைக்குகந்த ஆரோக்கியமான சூழ்நிலையையும் பழுதடையச் செய்தல்
- 1.1.46.4. ஆசிரியர்கள் மத்தியில் ஒழுக்கமின்மை மற்றும் அவர்களிடையே பிரிவுகள் உருவாகுதல்
- 1.1.46.5. பணியாளர் பற்றாக்குறை என்பது மாணவர் கல்வியை பாதிக்கிறது
- 1.1.46.6. கல்வி அபிவிருத்திக்கு சம ஆசிரியர் வளத்தை வழங்குதல் அவசியமாகிறது

1.1.47. பழைய மாணவர் சங்கத்துக்கும் / பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துக்கும் / பெற்றோருக்கும் / பொதுமக்களுக்கும் / அதிபருடனான உறவுநிலை குறைவாயிருத்தல்
- 1.1.47.1. பாடசாலைச் சமூக உறுப்பினர் வெளிநாட்டிலிருத்தல் பாடசாலைக்கு நிதியீட்டத்துக்கு ஆதாரமாயிருக்கிறது
- 1.1.47.2. ஆகவே அதிபர் பாடசாலைச் சமூகத்துடன் நல்லுறவை பேணிக்கொள்ள கடின முயற்சி செய்யவேண்டும்

1.1.48. அதிபர்களுக்காக தகுதிப்படி ஆட்சேர்த்தல் மற்றும் பணியில் அமர்த்துதல்
- 1.1.48.1. சில அதிபர்கள் ஆசிரியர்களைத் தமது வீட்டுச் சேவகர்கள் போல நடத்துகிறார்கள். அவர்களில் சிலர் தம்மை கல்வி முதுநிலைப் பட்டம் முடித்தவர்கள் என்றும் அல்லது இலங்கை கல்வி நிருவாக சேவைகள் பரீட்சை சித்தியெய்திய தராதரமுடையவர் என்றும் தற்பெருமை கொட்டிக்கொண்டு ஆசிரியர்களை மோசமாக நடத்துகிறார்கள்
- 1.1.48.2. அதிபர் ஓய்வு பெறும்போது அந்த அதிபர் பதவி இடத்தை (பின்னர் அழைக்கப்பட்டது போல) உப அதிபராக இருப்பவரே பின்னர் தொடர்கிறார்
- 1.1.48.3. சாதாரணமாக பாடசாலைச் சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஒரு நபர் உப அதிபராக ஆகுகிறார்.

1.1.48.4. அவர் முன்னர் அதிபராக இருந்தவரிடமிருந்து நிறைந்த அனுபவங்களைப் பெறுகிறார்
1.1.48.5. அதிபர் ஓய்வில் செல்லும்போது அவர் அதிபர் கடமையை பொறுப்பெடுத்துக்கொள்கிறார்
1.1.48.6. இப்போது அதிபர்கள் போட்டிப்பரீட்சை வழி மூலமாக தெரிவாகிறார்கள்
1.1.48.7. இன்று ஒரே இரவில் எந்த அனுபவமும் இல்லாமல் ஒரு ஆசிரியர் அதிபராகிறார்
1.1.48.8. ஒரு அதிபர் என்பவர் கல்வி நடவடிக்கையின் தலைவராக உள்ளார். பாடசாலையின் நற்பெயர் அந்தப் பாடசாலை அதிபரின் நற்பெயரையே பிரதிபலித்து பறைசாற்றுகிறது. அந்தப் பாடசாலையின் எல்லாமே அவர்தான். அவரேதான் அங்கு ஒழுங்கமைப்பாளர், தலைவர், ஆளுநர் பணிகளுக்கான பணிப்பாளர், இணைப்பாளர், ஆசிரியர், தத்துவாசிரியர் மற்றும் நண்பர் ஆவார்.
1.1.48.9. இன்று அனுபவமில்லா நிலையில் ஆட்சேர்ப்புக்குட்பட்டவர்கள் பாடசாலைகளைப் பொறுப்பெடுக்கின்றனர்.
1.1.48.10. ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை ஒழுக்கமின்மை பாடசாலைச் சமூகதொடர்பு மற்றும் / பாடசாலை முரண்பாடுகள் தலைமைத்துவப் பண்பு குறைவாக உள்ளமை, தன்னம்பிக்கைக் குறைபாடு, மாணவர்களை சமாளிக்க இயலாத்தன்மை என்பன இங்கு உள்ளன. அத்துடன் இறுதி விளைவாக கல்வியின் நியம அளவில் வீழ்ச்சி ஏற்படுதல் அதிபரைச் சார்ந்ததாகி விடுகிறது. இந்த விதமான அதிபர்கள் சுயமாக செயற்படமாட்டார்கள். மேலதிகாரிகளின் தலையீடுகளுக்கு அனுமதியளிப்பார்கள்.

1.1.48.11. அறிவுறுத்தப்பட்ட தீர்வுகள்

1.1.48.11.1. தெரிவுசெய்யப்படும் அதிபர்கள் அல்லது செயலாற்றும் அதிபர்கள் ஒரு AB தர பாடசாலை ஒன்றில் குறைந்தபட்சம் ஐந்து வருடங்கள் பிரதி அதிபராக சேவை செய்திருக்கவேண்டும். இது அதிபர்களுக்கு தலைமைத்துவ தகைமையையும் தன்னம்பிக்கையையும் ஆற்றலையும் பெற உதவும்.
1.1.48.11.2. அதிபர்களும் ஆசிரியர்களும் தத்தமது தராதரத்தை உயர்த்திக்கொள்வதற்கு கடமைப்பட்டவர்கள்.
1.1.48.11.3. அவர்களுக்கு கற்றலுக்கான விடுப்பும் பிற வசதிகளும் வழங்கப்படவேண்டும். இது அதிபர் ஆசிரியர்களின் முனைப்பார்வம் மற்றும் பொறுப்புக்களில் முன்னைய ஆண்டுகளில் இருந்தமைபோன்ற தாக்கத்தை ஏற்படுத்தும். அதிபர்கள் பாடசாலையில் முழு நேரத்தையும் செலவு செய்ய வேண்டும்.
1.1.48.11.4. தற்போது கவலைக்குரிய நிலையிலிருக்கும் கல்வியின் நிலையை முன்னேற்ற அதிபர்களுக்கு சாத்தியமான எல்லா அதிகாரங்களும் உதவிகளும் மற்றும் வசதிகளும் அளிக்கப்பட வேண்டும்.
1.1.48.11.5. கல்வித் திணைக்களம் அவர்களுக்கு முதலாளி வேலை பார்க்க வரக்கூடாது. உதாரணமாக ஒரு ஆசிரியரை உள்ளகத்திலோ அன்றி வெளியிலோ பாடசாலையிலிருந்து அந்த ஆசிரியருடைய சம்மதத்துக்கு மாறாக இடமாற்றம் செய்யக்கூடாது. பின்னர் கல்வி முன்னேற்றம் தொடர்பான குறைபாட்டுக்காக நீங்கள் அவர்மேல் குற்றசாட்டு செய்யலாம். இப்போது பொறுப்பு அதிபரிடமே உள்ளது.
1.1.48.11.6. அதிபர் எப்போதும் தன்னைத்தானே ஒரு குறுகிய அறைக்குள் அல்லது ஓய்வறைக்குள் மட்டுப்படுத்திக் கொள்ளக் கூடாது. அவருடைய கதவுகள் எப்பவுமே மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பாடசாலைச் சமூகத்துக்குமாக திறந்தேயிருக்கவேண்டும். அப்போதுதான் அதிபர் கல்வியின் எல்லாப் பங்குதாரர்களோடும் தொடர்பைப் பேணிக்கொள்ள முடியும்.

1.1.48.11.7. கால அட்டவணைக்குப் புறம்பாக எந்தவொரு சமய கலாசார நிகழ்ச்சிகளுக்கும் வசதிசெய்யும் வகையாகவும் அந் நிகழ்வுகளின் முன்னதாக வரும் நாளில் (உதாரணம் தீபாவளி) பாடசாலையை மூடுதல் நிறுத்தப்படுதல் வேண்டும்.

1.1.48.11.7.1. இது பாடசாலையின் நிகழ்ச்சி நிரலின் முழுத் திட்டத்தையும் அதன் திறன்களையும் பாதிக்கும். வெறும் எதேச்சையான தீர்மானங்கள் பாடசாலையின் முழுத் திட்டங்களையும் கற்றலையும் - கற்பித்தல் நடைமுறைகளையும் பாதிப்படையச் செய்யும்.

1.1.48.11.8. எமது பாடசாலைகளில் விஞ்ஞான வர்த்தக பிரிவைவிட 9-10 மடங்கு மாணவர்கள் கலைப்பிரிவில் உள்ளனர். கலைத்துறை, விஞ்ஞானம் மற்றும் வர்த்தகம் ஆகிய துறைகளில் சம அளவு மாணவர்கள் இருப்பதை ஆக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

1.1.48.12. சில கிறித்துவ பாடசாலைகள் இந்து மாணவர்களையும் அவர்களுடைய காலை நேர பிரார்த்தனைகளில் கலந்து கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள் அல்லது கலந்துகொள்ள வேண்டுமென்று “எதிர்பார்க்கிறார்கள்”. இந்த வழக்கமானது பாதிக்கப்பட்ட மாணவர் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் பாரிய அதிருப்தியை உண்டுபண்ணுகின்றது. பாடசாலை அதிபர்கள் வெவ்வேறு சமய சார்புடைய மாணவர்களை அவரவர் தத்தமது சொந்த சமய வழிபாட்டுக்கு அனுமதிக்கவேண்டும்.

### 1.2. ஆசிரியர்கள் தொடர்பில் (பெரும்பான்மையினர் ஆனால் சகலரும் அல்ல)

1.2.1. ஆசிரியர்கள் தொடர்பில் பெரும்பான்மையினர் சமுகமளிக்காமலிருத்தல் அல்லது தாமதமாக சமுகமளித்தல்

1.2.2. விருப்பத்துக்குரிய அல்லது சிறந்த மாணவர்களுக்கே கற்பித்தல்

1.2.3. மாணவ முதல்வர்களாலும் ஆசிரியர்களாலும் மாணவர்கள் உடலியல் ரீதியாக கையினால் அல்லது தடியினால் தண்டனைக்குட்படுத்தப்படுவது. இது நிற்கவேண்டும்.

1.2.4. தனியார் கல்வி நிறுவனங்களுக்கு கற்பித்தலுக்காக செல்லும் ஆசிரியர்கள் பாடசாலையில் கற்பித்தலில் நாட்டம் இன்றியிருத்தல்.

1.2.5. பாடங்களை கற்பிப்பதற்காக தம்மை தயார் செய்வதில்லை

1.2.6. பாவனைக்குள்ளாகாமலிருக்கும் அறைக்குள் ஆசிரியர்கள் அடிக்கடி நித்திரை செய்தல்

1.2.7. பாட விடயத்தில் தெளிவின்றியிருத்தல்

1.2.8. மாணவர்கள் கேள்வி கேட்பதை விரும்பாமை.

1.2.9. பல ஆசிரியர்கள் ஒரு தடவைக்கு மேல் விளக்கங்களை திருப்பிக் கூற விரும்புவதில்லை.

1.2.10. சரியான விடைகளை கொடுக்க முடியாமலிருக்கும் மாணவர்கள் மீது ஆசிரியர்கள் கோபம் கொள்ளுதல்.

1.2.11. மேலும் பல ஆசிரியர்கள் மாணவர்களின் இணைபாட விதான நடவடிக்கைகளில் அக்கறை காட்டி அதில் பங்கெடுக்கவும் வேண்டும்.

1.2.12. ஆசிரியர்களுக்கு தாராளமான சேவைக்கால கற்கைநெறிகள் மற்றும் பயிற்சி வகுப்புக்கள் வழங்கப்பட்டும் கூட அவர்கள் அவற்றை தங்களுடைய கற்பித்தலை மேம்படுத்துவதற்காக பயன்படுத்துவதில்லை.

1.2.13. கணனிகளை பயன்படுத்த தெரியாதிருக்கிறார்கள்.

1.2.14. தூரப் பகுதிகளிலிருந்து திங்கட் கிழமை காலையில் பயணம் செய்து மதியப் பொழுதில் பாடசாலைக்கு வந்து சேர்ந்து வெள்ளிக்கிழமைகளில் மதியப்பொழுதுடனேயே புறப்பட்டுவிடுகிறார்கள்.

1.2.15. இடமாற்றம் பெற்று வந்த ஆசிரியர்கள் திரும்பவும் தமது வீட்டுக்கு அண்மையாக இருக்கும் பாடசாலைக்கே செல்வதற்காக காத்திருக்கிறார்கள். அவர்களுக்கு தமது பாடசாலையிலோ அல்லது மாணவர்களிலோ அக்கறை கிடையாது.

1.2.16. கடந்தகாலத்திய ஊர்காவற் படையினர் தற்போது ஆசிரியர்களாக உள்ளனர். அவர்களுக்கு ஆசிரியத் தொழில்சார் பயிற்சி கிடையாது. இராணுவமோ அவர்களுக்கு எந்தக் கொடுப்பனவும் வழங்குவதேயில்லை.

1.2.17. சில ஆசிரியர்கள் வகுப்பறைகளில் பாடவேளைகளில் பல தடவைகள் தொலைபேசியில் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

1.2.18. ஆசிரியர்கள் ஒருபோதும் பெற்றோருடன் கலந்துரையாடுவதில்லை. ஆசிரியர்கள் பாடசாலை முடிந்தவுடனே தனியார் கல்வி நிலையங்களுக்கு விரைகிறார்கள்.

1.2.19. ஆசிரியர்கள் மாணவர்களை தனியார் கல்வி நிறுவனங்களுக்கு செல்லும்படி கேட்கிறார்கள். சிலர் தாங்கள் கற்பிக்கும் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு அவர்களை வரும்படி கேட்கிறார்கள்.

1.2.20. தனியார் கல்வி நிறுவனங்கள் கிடுகுகளால் வேயப்பட்ட கொட்டகைகளாகும் அத்துடன் மலிவானதும் தரம் குறைந்ததுமான தளபாடங்களே அங்கு உள்ளன. 50 தொடக்கம் 200 வரையான மாணவர்கள் ஒவ்வொரு வகுப்பிலும் இருக்கிறார்கள். தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களிடமிருந்து பெரிய தொகை பணத்தை அறவிடுகின்றன. மேலும் மாணவர்கள் 10-20 மணித்தியாலங்களை ஒரு வாரத்தில் பாடசாலை முடிந்த வேளைகளிலும் வார இறுதி நாள்களிலுமாக தனியார் கல்வி நிறுவனங்களில் செலவு செய்கிறார்கள்.

1.2.21. ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமுகமளிக்காமலிருக்கிறார்கள் அல்லது தாமதமாக சமுகமளிக்கின்றார்கள்.

1.2.22. மாணவர்களுக்கு உடலியல் ரீதியான தண்டனை அவசியம் என்று பல பெற்றோர்களும் ஆசிரியர்களும் கூறினார்கள். மாணவர்களும் சில பெற்றோர்களும் வேறுவிதமான தண்டனைகளை முன்மொழிகின்றனர். அதாவது பாடசாலை முடிந்த நேரத்தில் மாணவர்களை பாடசாலையில் தடுத்து வைத்திருத்தல் ஏதாவது வேலை கொடுத்தல் என்பனவும் ஆனால் பாடசாலை முடிந்த பின்னர் ஆசிரியர்கள் பாடசாலையில் காத்திருக்க விரும்புவதில்லை.

1.2.23. வகுப்பறை முகாமைத்துவம் தொடர்பில் ஆசிரியர்கள் அறிவில்லாதவர்களாக உள்ளனர்.

1.2.24. சில ஆசிரியர்கள் கற்பித்தலுக்கான தராதரமற்றவர்களாக உள்ளனர். அவர்கள் எப்போதும் வாசித்துக்கொண்டு அல்லது தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

1.2.25. ஒரே மாணவர்களே போட்டி நிகழ்ச்சிகளுக்கு தெரிவுசெய்யப்படுகிறார்கள். எல்லா பிள்ளைகளுக்கும் அவர்கள் வெற்றி பெறாவிட்டாலும் கூட சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

1.2.26. ஆசிரியர் இடமாற்றம்

1.2.26.1. தகுதிபெற்ற ஆசிரியர்களுடைய வேலையளவு அவர்களுடைய தகுதித் தராதரங்களுடன் ஒத்திருப்பதில்லை.

1.2.26.2. அரசியல் தலையீடுகளுக்கு இட்டுச் செல்கின்றது.

1.2.26.3. ஆசிரியர்கள் அரச பணியாளர்கள். ஆனால் அவர்களை அரச சேவையின் ஏனைய துறையில் உள்ள பணியாளர்களுடன் சரிநிகராக பார்க்கப்படமுடியாது.

1.2.26.4. ஆசிரியர்கள் பாடசாலைச் சமுகத்தை நன்கு அறிந்திருக்கவேண்டும். அத்துடன் அவர்கள் சமூக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதன் மூலமாக அதன் ஒரு அங்கமாக மாறவேண்டும்.

1.2.26.5. ஆசிரியர் கற்றல் - கற்பித்தல் வழக்கத்துக்கு உகந்த ஒரு சூழலை வெற்றிகரமாக உருவாக்கலாம்.

1.2.26.6. அப்படியான ஆசிரியர்கள் பாடசாலைச் சமூகத்துக்கும் பாடசாலைக்கும் ஒரு பாலமாக அமையலாம். அத்துடன் சமூகம் இருதரப்புக்குமிடையே உடைவுவராமல் தடுக்கலாம்.

1.2.26.7. ஆசிரியர்களும் கூட சமூக தலைவர்களாகலாம்.

1.2.26.8. இதன் பின்னணியில் பின்வருமாறு அறிவுறுத்தப்படுகின்றது.

1.2.26.8.1. ஆசிரியர்களை இடமாற்ற நிமிர்த்தமாக இடம் மாற்றக் கூடாது.

1.2.26.8.2. புதிய உத்தியோகத்தர்களை கஸ்டமான பிரதேசங்களுக்கு நியமித்து அவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும்.

1.2.26.8.3. ஆசிரியர்கள் அவர்களுடைய சேவை தேவையாக உள்ள இடங்களுக்கு இடமாற்றப்படலாம்.

1.2.26.8.4. அதேநேரம் அவர்களுடைய தனிப்பட்ட பிரச்சினைகளையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

1.2.27. இலிகிதர் மற்றும் அதுபோன்ற ஏனைய பணிகளில் சம்பந்தப்பட்டு அதிபர்களுக்கு உதவிவரும் ஆசிரியர்கள் தமது வகுப்பறை வேலைகளை புறக்கணிக்கிறார்கள். இது பின்வரும் நிலைக்கு இட்டுச்செல்கிறது.

1.2.27.1. புறக்கணிக்கப்பட்ட வகுப்பில் மாணவர்களின் கட்டுக்கடங்காத நடத்தை.

1.2.27.1.1. பாடசாலை வேளைகளில் அதிபர்களால் இது தவிர்க்கப்படவேண்டும்.

1.3. மாணவர்கள் தொடர்பில்

1.3.1. சில மாணவர்கள் ஒழுக்கம் சார்ந்த பிரச்சினையுடையவர்களாகவுள்ளனர். சில மாணவர்கள் பாடத்தில் கவனம் செலுத்துவதில்லை. அவர்கள் தமக்குள்ளேயே வகுப்பறையில் கதைத்துச் சிரித்துக்கொண்டிருப்பார்கள். அவர்கள் உடலியல் ரீதியாக தண்டிக்கப்படுகிறார்கள். அவர்களை திருத்துவதற்கான ஒரே ஒரு வழி அதுதான்.

1.3.2. திறன் அடிப்படையில் மாணவர்கள் வெவ்வேறு மட்டங்களில் உள்ளனர். அவர்கள் கற்பித்தலில் பிரிக்கப்பட வேண்டும்.

1.3.3. பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் ஒழுக்கத்திலோ அன்றி அவர்களின் கல்வியிலோ அக்கறை இல்லாதவர்களாக உள்ளனர். ஆசிரியர்களும் அதிபரும் மாணவர்களை ஒழுக்கமுடையவர்களாக ஆக்கவேண்டுமென்று பெற்றோர்கள் விரும்புகின்றனர். சில
தாய்மார்கள் தமது பிள்ளைகளின் ஒழுக்கம் சார்ந்த பிரச்சினைகளை தந்தையர்களுக்கு தெரிவிக்க விரும்புவதில்லை. ஏனென்றால் பிள்ளைகள் நையப்புடைக்கப்படுவார்கள்.

1.3.4. ஆலோசகர்களுக்கு தமது கடமை என்னவென்பதே தெரிவதில்லை. அவர்களுக்கென்று ஒரு தனியறை இருப்பதுமில்லை. ஒருபோதும் ஆலோசகரை நாடியதேயில்லை. ஒரு ஆசிரியர் என்பதால் உணர்வு சார்ந்த அல்லது வகுப்பறைப் பிரச்சினை சார்ந்த விடயம் என்பதனை மோப்பம் பிடித்தறிந்துவிடுவார்கள். வார்த்தைகள் துரிதகதியில் பரம்பலடையும் அத்துடன் ஏனையோர் இந்தவகையான ஆசிரியரை உற்றுநோக்கத் தொடங்குவர்.

1.3.5. அவர்களை நன்றாகப் படிக்கச்செய்யவும் நன்னடத்தையுடையவராக்கவும் அவர்களுக்கு நல்ல அடி தேவை.

1.3.6. ஏனைய மாணவர்கள் போவதுபோல இவர்களும் தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்ல விரும்புவார்கள். அத்துடன் தாம் பரீட்சையில் சித்திபெற மாட்டார்கள் என்று அவர்கள் எண்ணத் தொடங்குவார்கள்.

1.3.7. அவர்கள் எந்த அறிவுரைகளையும் கேட்க மாட்டார்கள்.

**1.4. பாடத்திட்டங்கள் மற்றும் பரீட்சைகள் தொடர்பில்**

1.4.1. தைமாதத்திலிருந்து ஆசிரியர்கள் கடந்த பரீட்சை வினாத்தாளின் மீதான மீள் பார்வையை செய்வார்கள் குறிப்பாக ஆங்கிலம்

1.4.2. ஆங்கில ஆசிரியருக்கு ஆங்கில அறிவு இருப்பதில்லை

1.4.3. பாடத்திட்டம் பூர்த்தி செய்யப்படுவதில்லை.

1.4.4. கடந்த தவணையின் பாடங்களை விரைவாக கற்பித்தல்

1.4.5. தம்முடைய பணிக்கு பயன்பாடுள்ளவற்றை கற்பிப்பதில்லை

1.4.6. பாடசாலையாலும் பெற்றார்களாலும் புலமைப் பரிசில் பரீட்சைக்கான கற்றலில் அதிக அழுத்தம் மாணவர்மீது செலுத்தப்படுகிறது.

1.4.7. ஆசிரியர்கள் மீதும் அதிபர் மீதும் அதிக அழுத்தம்

1.4.8. அதே அழுத்தம் சாதாரணதர மாணவர்கள் மீதும் உயர்தர வகுப்பு மாணவர் மீதும் செலுத்தப்படுகின்றது

1.4.9. ஒரு b அல்லது c பெறுபேற்றை சாதாரண தர பரீட்சையில் பெறுவது உயர்தர பரீட்சையில் சிறப்புப் பெறுபேறு அல்லது B பெறுபேற்றைப் பெறுவதாக அர்த்தமாகாது. ஆகவே இலகுவாக பல்கலைக்கழக நுழைவு அனுமதி பெறும் நோக்கில் கலைத்துறைப் பாடத்தை தேர்ந்தெடுக்கிறார்கள்.

1.4.10. மாகாணத்தின் அரைப் பங்குவரையான மாணவர்கள் பணமில்லாததால் தனியார் கல்வி நிலையங்களை நாடுவதில்லை.

1.4.11. சாதாரண தரப் பரீட்சைக்கும் உயர்தர பரீட்சைக்கும் பின்னர் சுமார் 3 மாத காலங்கள் செய்வதற்கு ஏதுமிருப்பதில்லை. தனியார் கல்வி நிறுவனங்கள் போவதற்கு மிகவும் செலவு அதிகமானவை. சாதாரண தர பரீட்சையையோ அல்லது உயர்தர பரீட்சையையோ இரண்டாம் தடவை எடுக்க விரும்புவதில்லை. ஏனென்றால் முன்னர் கற்றவை யாவும் முதல் பரீட்சை முடிவடைந்ததும் மறந்து போய் விடுகின்றது.

1.4.12. பாடத்திட்டத்தை பூர்த்தி செய்ய காலம் போதாமலிருத்தல்

1.4.13. பரீட்சைகளின் வெற்றி தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் பாடசாலைகளுக்கும் என்ன விகிதாசாரத்தில் உள்ளது என்பது அறியப்படாததாகவே உள்ளது.

1.4.14. அதிகமான மாணவர்களுக்கு விஞ்ஞான பாடம் கணிதம் ஆங்கிலம் போன்ற பாடங்களின் பாடத்திட்டம் மிகவும் கடினமானதாக உள்ளது.

1.4.15. அதிபர்களாலும் திணைக்களத்தாலும் உயர்ந்த வீத மட்டத்தில் பெறுபேறுகள் கிடைக்கவேண்டும் என்பதற்காக பாடத்திட்டம் பூர்த்தியாக்கப்படவேண்டுமென்று அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

1.4.16. மாணவர்கள் சாதாரண தரப் பரீட்சையில் தோல்வியடைந்த பின்னர் பயன்பாடுள்ள விடயங்கள் எதையும் கற்பதில்லை.

1.4.17. பாடசாலையில் மட்டும் கற்கும் மாணவர்கள் புலமைப் பரீட்சையையோ சாதாரண தரப் பரீட்சையையோ அன்றி உயர்தர பரீட்சையையோ சித்தியெய்த முடியாது. தனியார் கல்வி நிறுவனங்களில் சென்று கற்க பணவசதி இல்லாத மாணவர்கள் பரீட்சையில் தோற்றுவிடுகிறார்கள்.

1.4.18. பாடவிதானத்தில் வாழ்க்கைத்திறன் பயிற்சிக்காக ஒரு நாளைக்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்படுதல் உள்ளடங்கலாக சேர்க்கப்படுதல் வேண்டும். இது தற்கொலையை தடுப்பதாகவும் இருக்கவேண்டும்.

1.4.19. கல்வி கற்கும் அதே வழிமுறையிலேயே எல்லா மாணவர்களும் விளையாட்டு நிகழ்ச்சிகளிலும் ஒரே மாதிரியாகவே கலந்து கொள்ள வேண்டும். பாடசாலை நேரத்தின் இறுதிப் பாடவேளை வாரத்தில் இரண்டு நாள்கள் இதற்காக ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு தவணையிலும் மாணவர்கள் வெவ்வேறு விளையாட்டு நடவடிக்கைகளில் பங்கெடுக்க வேண்டும். உடலியல் சார்ந்த பாடங்கள் எப்பவுமே வகுப்பறைக்கு வெளியே இடம்பெறவேண்டும்.

1.4.20. ஐந்தாம் தரம் புலமைப் பரிசில் பரீட்சையை சீர்ப்படுத்தல் செய்யுங்கள். புலமைப் பரிசில் குறைந்த வருமானமுள்ள பெற்றோரை அடிப்படையாகக் கொண்டே வழங்கப்படவேண்டும்.

### 1.5. கணனிப் பாவனை மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் தொடர்பில்

1.5.1. பாடங்களைக் கற்பித்தலில் கணனிகள் பயன்படுத்தப்படுவதில்லை

1.5.2. தகவல் தொழில் நுட்பப்பாடம் கற்பித்தலுக்கு மட்டுமே உபயோகிக்கப்படுகிறது.

1.5.3. மாணவர்கள் கணனியூடாகவே பாடங்களைக் கற்க வேண்டும்

1.5.4. ஆசிரியர்கள் கணனியின் பாவனை தொடர்பில் அறிவுறுத்தல்கள் வழங்குகின்றார்கள் ஆனால் அவர்களிடம் கணனிகள் இருப்பதில்லை. அத்துடன் பாடசாலையில் அவற்றை பயன்படுத்த அவர்களுக்கு நேரம் இருப்பதில்லை. ஒரு ஆசிரியரோ அல்லது அதிபரோ கணனி மூலமாக எழுத்துவேலைகள் செய்தல் அல்லது இணையத்தளத்துக்கு செல்லுதல் மிகவும் அருமை.

1.5.5. பல்லூடகம் (Multimedia) பாடசாலையிலிருக்கும். ஆனால் வகுப்பறையிலிருக்காது. வகுப்பறைகள் திறந்த வெளியாகையால் மிகவும் வெளிச்சமாகவும் இருக்கும்.

1.5.6. எல்லா மாணவர்களும் ஆசிரியர்களும் அதிபரும் கணனிகளை உபயோகித்தல் பற்றி கற்றுக் கொள்ள வேண்டும். அத்துடன் தமது சொந்த வாழ்க்கையில் நாளாந்தம் அவற்றை பயன்படுத்துவதற்காக கற்றுக்கொண்டவற்றை மனதில் பதித்து

வைத்திருக்கவேண்டும். அது சாதாரண தரப் பரீட்சையில் சித்தி எய்துவதற்கானதல்ல.

1.5.7. பாடசாலை மாணவர்களை தகவல் கணனி மன்றம் ஒன்றை ஒவ்வொருவருக்கும் உதவும் வகையில் அமைக்க ஊக்கமளிக்க வேண்டும். தாம் கற்றதை அவர்கள் தமது சொந்த வாழ்க்கையிலும் பிரதிபலித்துக் காட்டவேண்டும்.

**1.6. பெற்றோர் மற்றும் வீட்டுச் சூழல் தொடர்பில்**

1.6.1. காலை உணவு இருக்காது. தகப்பனுக்கு அன்றைய தினத்தில் ஒரு வேலையும் கிடைக்கவில்லையென்றால் இரவுச் சாப்பாடும் இருப்பதில்லை.
1.6.2. பல பெற்றோர்கள் வேலையற்றவர்கள். நாள்கூலிக்கு வேலை செய்து உழைப்பவர்கள்.
1.6.3. வீட்டில் அமைதியான இடம் படிப்பதற்கு இருப்பதில்லை.
1.6.4. பல பெற்றோர்கள் மாணவர்களின் கற்றலில் அக்கறை செலுத்துவதில்லை அத்துடன் அவர்களை நல்லொழுக்கம் உள்ளவராக ஆக்குவதும் இல்லை.
1.6.5. தாய் மட்டுமே வந்து ஆசிரியரை அதிபரை சந்தித்து அவர்களுடைய ஆலோசனைகளை செவிமடுப்பார்.. ஒரு மாணவன் நன்றாக ஆவதற்கோ அல்லது நடத்தையில் ஒப்பீட்டளவில் மாற்றம் காட்டுவதில்லை.
1.6.6. வெளிநாடுகளில் இருக்கும் பெற்றோர் அல்லது உறவினர்கள் இம்மாணவர்களுக்காக கையடக்க தொலைபேசிகளைக் கொடுக்க இம் மாணவர்கள் அவர்கள் பார்க்கக்கூடாததுகள் போன்றவற்றை இணையத்தளத்தினூடாக பார்க்கிறார்கள். அவர்கள் அவற்றை பாடசாலைக்கும் எடுத்து வருகின்றனர்.
1.6.7. சில பெற்றோர்கள் வேலைகள் எதுக்கும் போவதில்லை. சிலருக்கு பய உணர்வு உள்ளது. அவர்கள் பாடசாலையில் ஆசிரியர்தான் ஒவ்வொன்றையும் செய்யவேண்டுமென விரும்புகின்றனர்.
1.6.8. சில பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் பாடசாலை நேரம் தவிர்ந்த மாலை வேளைகளில் அவர்கள் வேலை செய்ய தூண்டுவதற்காகவே தங்களுடன் வேலைக்கு அழைத்துச் செல்கிறார்கள்
1.6.9. பல மாணவர்களுக்கு வீட்டில் அமைதியான சூழல் அல்லது இடம் இருப்பதில்லை.
1.6.10. பகலில் வேலையில்லையேல் இராப்போசனம் இருக்காது.
1.6.11. பல தந்தையர்கள் குடிகாரர்கள்
1.6.12. குடிக்கின்றபோது தகப்பனானவர் குடித்துவிட்டு மாணவனுக்கும் தாய்க்கும் அடிக்கிறார்.
1.6.13. தகப்பனாரும் தாயும் மாணவிகளை மிரட்டி அவர்களை பாடசாலையை விட்டு விலகும்படி நிரப்பந்திக்கிறார்கள்.

**1.7. சமூகம் மற்றும் பாடசாலைச் சூழல் தொடர்பில்**

1.7.1. இளைஞர்களால் பெண்பிள்ளைகள் மீது தவறான அபிப்பிராய குறிப்புக்கள் முன்வைக்கப்படுகின்றன.
1.7.2. முச்சக்கர வண்டிச் சாரதிகளால் மாணவிகள் துன்புறுத்தப்படுகிறார்கள்
1.7.3. பாடசாலை நடந்து செல்வதற்கான தூரம் மிக அதிகமாயிருக்கின்றது.
1.7.4. சில மாணவர்கள் தம்மிடம் இருக்கும் தொலைபேசியை பயன்படுத்தி மாணவிகளை நிழல் படம் பிடிக்கிறார்கள்.
1.7.5. பாடசாலைக்கு அருகாமையில் இருக்கும் கடைகள் சாராயம் மற்றும் மதுபானங்களை விற்பனை செய்கிறார்கள்.
1.7.6. மாலை நேரங்களில் பல குடிகாரர்களை மாணவர்கள் வீதியோரங்களில் காண்கிறார்கள்.
1.7.7. பெற்றோரும் பாடசாலை சமூகமும் நெறிப்படுத்தப்படும் பொழுதுபோக்கு இடங்களை மாணவர்களுக்கு பாடசாலை முடிந்த மாலை நேரங்களில் ஏற்படுத்தியதில்லை.

**1.8. கல்வித் திணைக்களம் தொடர்பில்**

1.8.1. விசேடமாக பெண் ஆசிரியர்களாகிய நாங்கள் எங்களை எமது கணவரிடமும் குடும்பத்தினரிடமிருந்தும் தூரதேசத்திலிருக்கும் பாடசாலை ஒன்றுக்கு இடமாற்றம் செய்யப்படுவதை விரும்பவில்லை. தற்போது அவர்கள் படித்துக்கொண்டிருக்கும் நல்ல பாடசாலை ஒன்றிலிருந்து எமது பிள்ளைகளை அப்புறப்படுத்தவும்

விரும்பவில்லை. போக்குவரவில் பெரும் கஸ்ரம். பாடசாலை முடிந்த நேரத்தின் பின்னர் ஒரு அறைக்குள் தங்கியிருக்க விரும்பவில்லை. துாரப் பிரதேசத்துக்கு பிரயாணம் மேற்கொள்வது செலவை ஏற்படுத்தும்.

1.8.2. சில அதிபர்கள் பெண் ஆசிரியர்களிடம் ஒவ்வாத நட்பு நாட்டம் கொள்கிறார்கள்.

1.8.3. ஒரு குடும்பம் ஒரு ஆசிரியரின் சம்பள வருமானத்தில் வாழ்க்கை நடத்தமுடியாது. உயர்வான சம்பள வருமானம் தேவை.

1.8.4. பின்வரும் காரணங்களுக்காக பாடசாலையிலிருந்து விலகியிருந்த மாணவர்கள் திரும்பவும் சேர்ந்து கல்வியையும் ஆலோசனையையும் பெறவிரும்பினால் அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படவேண்டும்.

1.8.4.1. போர் காரணமாக பல தடவைகள் இடம்பெயர்ந்தமை

1.8.4.2. குடும்பத் தலைவரை இழந்தமை மற்றும் நிலையில்லாத தொழில்களுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டமை

1.8.4.3. தந்தையர்களால் கைவிடப்பட்டமை அல்லது குடும்பம் குலைந்து போனமை

1.8.4.4. பரீட்சைகளில் தோல்வியடைந்து நம்பிக்கையிழந்தமை

1.8.4.5. நிரந்தர வேலைவாய்ப்பு தருவதாக அற்ப உறுதிமொழிகளைக் கூறி வர்த்தகர்களால் பயன்படுத்தப்படல்

1.8.4.6. பாடசாலையிலே அந்தந்த சமயத்திலேயே கல்வியை நேர்மையாக அனுபவிப்பதில்லை

1.8.4.7. உற்சாகப்படுத்தவும் அறிவுரைகள் வழங்கவும் இயலாத பொறுப்பற்ற மற்றும் படிப்பறிவற்ற மூத்தவர்கள் இருத்தல்

1.8.5. பல விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகள் உயர் செலவில் நேர்த்தையும் கல்விக்கான நிதியையும் விரயமாக்குகின்றன. இந்த மாதிரியான விளையாட்டுப் போட்டிகள் மென்மேலும் சரியான முறையில் பயனுள்ள வகையில் மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

1.8.6. வலய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் ஆலோசனை அல்லது அமுலாக்கல் செயற்குழுக்கள் அமைக்கும்போது அதில் நியமிக்கப்படுவோர் அதிகாரமுள்ள அதிகாரிவகையில் மட்டும் இல்லாமல் சுயமாக உளவிருத்தியடைந்திருப்பவராகவும் இருக்கவேண்டும்.

1.8.7. வலயங்கள் பாடசாலைகளை ஒழுங்காக கண்காணிப்புச் செய்வதோ மேற்பார்வை செய்வதோ இல்லை.

1.8.8. ஆங்கில மொழிக் கல்வி தகுதி வாய்ந்த புதிய ஆசிரிய வளத்துடன் முன்னேற்றப்பட வேண்டும்.

1.8.9. ஆசிரியர்கள் நீண்ட விடுமுறைக்காலத்தில் அடுத்த தவணைக்கான ஆயத்தங்கள் செய்யும் பொருட்டாக பாடசாலைக்குச் சமுகமளிக்கும்படி கேட்கப்படவேண்டும் அதற்காக அவர்களுக்கு வெகுமதி வழங்கப்படவேண்டும்.

1.8.10. போர் எமது மக்களை நீண்ட காலம் பாதித்துவிட்டது. கல்வி முறையானது நாட்டின் ஏனைய பாகங்களின் தரத்துக்கு ஈடுகொடுக்கும் வகையில் எமது எல்லாக் கல்விப் பிரதேசத்திலும் மீளக் கட்டியெழுப்புவதற்காக திட்டமிட்ட நிகழ்ச்சிநிரலைக் கொண்டிருக்கவேண்டும்.

1.8.11. மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு சமுகமளிக்கவேண்டிய நிலைமையையும் ஆசிரியர்கள் தனியார் கல்வி நிறுவனங்களில் கற்பிக்கச் செல்வதனையும் குறைப்பதற்கானதும் ஆசிரியர்களின் வருமான மட்டத்தை அதிகரிக்கச் செய்வதற்குமான ஒரு கொள்கை ஏற்படுத்தப்படுவது அவசியமாகிறது.

1.8.12. விடுமுறை நாள்களின் எண்ணிக்கையும் பண்டிகை நாள்களின் முதல்நாள் விடுமுறைகளும் குறைக்கப்பட வேண்டும்.

1.8.13. பாடசாலைக்கான வசதிக்கட்டணம் பாடசாலைகள் மாணவர்களிடமிருந்து அறவீடு செய்யும் ஏனைய செலுத்துகைகளும் அதனுடன் தொடர்புடையதாக தேசிய பாடசாலைகளில் மற்றும் உயர் நிலைக் கல்விக் கூடங்களில் அனுமதி பெறுவதற்கான செலுத்துகைகள் என்பன மீள்பார்வைக்குட்படுத்தப்பட்டு கட்டுப்படுத்தப்படுவதற்காக அல்லது திருத்தியமமைக்கப்படுவதற்காக அல்லது

அப்படியான நடைமுறைகளை அகற்றிவிடுவதற்காக விதிமுறைகள் ஆக்கப்படவேண்டும்.

1.8.14. அதிபர்கள் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரின் முறைப்பாடுகளுக்கு அல்லது மேன் முறையீடுகளுக்கு கல்வித் திணைக்களம் பதிலளிக்கவேயில்லை. அவர்களுடைய கேள்விகளுக்கோ அல்லது முறையீடுகளுக்கோ பல வாரங்களாக அல்லது மாதங்களாக பதிலளிக்கப்படவில்லை. முறைப்பாடுகளை சமர்ப்பிக்கக்கூடியதும் எந்தவித தாமதமுமில்லாமல் பரிபூரணமான பதில்களைப் பெற்றுக்கொள்ளவும் ஏற்பதான ஒரு முறைகேள் அதிகார சபை ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

1.8.15. பாடசாலை வேளைக்குப் புறம்பான நேரத்தில் அல்லது பாரிய விளையாட்டு நிகழ்ச்சியின்போதான விளையாட்டுப் பயிற்சியளிக்கக்கூடிய ஆற்றலுள்ள ஆசிரியர்களுக்கு உதவுதொகை அளிக்கக்கூடிய பணிமுறைப்படிவம் ஒன்றை விதித்துக் கொடுக்க வேண்டும். ஒரு பணிமுறைப்படிவம் விளையாட்டுத்துறை சார்ந்த தயாரிப்புக்களுக்கு உதவுவதற்கும் விளையாட்டு உபகரணங்களையும் மைதானத்தையும் பேணுவதற்கு அவசியமான ஒன்றாகின்றது.

1.8.16. ஒவ்வொரு 11ஆம் தர பிள்ளையும் அவர்களுடைய சாதாரண தரப் பரீட்சையின் முடிவிலும் ஒவ்வொரு 13ஆம் தர பிள்ளையும் அவர்களுடைய உயர்தர பரீட்சை முடிவிலும் அவர்களுடைய பரீட்சைப் பெறுபேறுகள் அறிவிக்கப்படும்வரை அவர்களுக்கு வேலை வாய்ப்புக்களை இலகுவில் பெற்றுத் தரக்கூடிய திறன் விருத்திக்கான விசேட வகுப்புக்களை பாடசாலையிலே தொடரவேண்டும்.

1.8.17. ஒவ்வொரு 11ஆம் தர மற்றும் 13ஆம் ஆண்டு பிள்ளையும் இந்தப் பாடநெறியின் பூர்த்தியின்போது சான்றிதழ் பெறுவர். அத்துடன் ஒவ்வொரு பிள்ளையும் தாங்கள் பாடசாலையில் பெற்றுக்கொண்ட திறன் விருத்திக் கல்வியின் குறிப்புப் பிரதியையும் உள்ளடங்கும். தற்போதுள்ள நிலையில் முடிவில் அவர்கள் எந்த அடையாளமும் இல்லாமலே தமது பாடசாலையிலிருந்து வெளியேறுகிறார்கள்.

1.8.18. கடந்த 30 ஆண்டுகாலத்துக்குள் கட்டப்பட்ட அனேகமான புதிய கட்டடங்கள் அல்லது அனேகமான கட்டடங்கள் 3 அடி உயரமான சுற்றுச் சுவர்களைக் கொண்ட திறந்த வகுப்பறைகளாகவே உள்ளன. காற்று மண் போன்றவற்றின் தாக்கத்திலிருந்தும் விலங்குகள் பறவைகள் அத்துமீறி உள் நுழைபவைகளாக இருப்பதால் இவை சிறு மாற்றத்துக்குள்ளாக்கப்படவேண்டும அத்துடன் சொத்துக்கள் பாதுகாக்கப்படவும் மாணவர்கள் ஆசிரியர்களின் தனித்துவத்தைப் பாதுகாத்து கற்றல் கற்பித்தலுக்கு முழுக்கவனம் செலுத்த வழிவகுக்கவுமாக இவை திருத்தி அமைக்கப்படவேண்டும்.

1.8.19. எல்லாத் தேசிய பாடசாலைகள் மீதும் விசேடமாக யாழ்ப்பாணத்தில் உள்ள வலயங்களில் அவற்றின் குறைபாடுகளை அறிந்து உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவும் தரம் 1, தரம் 6, தரம் 10, தரம் 11 ஆகியவற்றுக்கு பாடசாலை அனுமதிவழங்கும் நடைமுறைகள் பற்றி அறிந்து கொள்ளவும் மதிப்பீடொன்று மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது.

1.8.20. பாடசாலைகள் மற்றும் திணைக்களங்களில் காவல்த்துறை மற்றும் இராணுவத்தினருடைய தலையீடுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

1.8.21. சில கிறிஸ்தவ பாடசாலைகள் இந்து மாணவர்களை தமது காலைப் பிரார்த்தனைகளில் கலந்து கொள்ள வேண்டுமென்று கேட்கிறார்கள் அல்லது கலந்து கொள்ள வேண்டுமென்று “எதிர்பார்க்கிறார்கள்.” சில இந்து பாடசாலைகள் கிறிஸ்தவ மாணவர்களை தமது காலைப் பிரார்த்தனைகளில் கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்கிறார்கள் அல்லது கலந்துகொள்ள வேண்டுமென்று “எதிர்பார்க்கிறார்கள்.” பாடசாலை அதிபர்கள் வெவ்வேறு சமயப் பிரிவு மாணவர்களுக்கும் அவரவர் தத்தமது வழிபாட்டை சுயமாக மேற்கொள்ள வசதி செய்து கொடுக்க வேண்டும்.

1.8.22. பல ஆசிரிய ஆலோசகர்கள் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் கடமையை சரிவர செய்வதில்லை. அவர்கள் உண்மையான தேவைக்கு பயன்படாதவர்களாக இருந்திருக்கலாம்.

1.8.23. ஆசிரிய ஆலோசகர்களுக்கான நியமனம் வழங்கல்கள் மாகாண பொது நிர்வாகத்தின் அனுமதிக்காக அனுப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

1.8.24. இலங்கை கல்விச் சேவை, இலங்கை அதிபர் சேவை மற்றும் ஏனைய கல்விசார் பதவிகளுக்கான படிநிலை அல்லது முதுநிலைப்பட்டியற்படுத்தப்பட வேண்டும்.

1.8.25. ஆசிரிய இடமாற்றங்கள் வெளிப்படையான மனப்பாங்குடன் பொருத்தமான சூழ்நிலைகளுக்கு ஈடுகொடுத்து செய்யப்படவேண்டும்.

1.8.26. இடமாற்றங்களை வழங்கும்போது புதிய நியமனங்களையும் குறிப்பிட்ட பிரதான பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறையையும் கருத்திற் கொண்டு செய்யவேண்டும்.

1.8.27. கல்விப் பொதுத் தராதர பத்திர சாதாரண தர பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களுக்கும் கல்விப் பொதுத் தராதர பத்திர உயர்தர பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களுக்கும் கற்பிக்கும் தகைமை இல்லாத ஆசிரியர்களிடம் அந்தப் பொறுப்புக்களை ஒப்படைக்கக் கூடாது.

1.8.28. ஆசிரியர் பயிற்சிகள் பாடசாலை நேரத்தினை பாதிக்காத வகையில் விளைதிறனும், வினைத்திறனும் உள்ளதாக நடாத்தப்படல் வேண்டும்.

1.8.29. உயர் பதவி நிலைகளிலிருக்கும் அதிகாரிகள் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக திகழவேண்டும்

1.8.30. வலய கல்விப் பணிமனை அதிகாரிகள் நன்னடத்தையில் ஒரு நல்ல உதாரணம் முன்னுதாரணமாக இருக்க வேண்டும்.

1.8.31. பயனாளிகளுக்கு அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்களையும் காட்சிப்படுத்துதல்

1.8.31.1. ஒழுங்குமுறையான அணுகுமுறையின் கீழ் அவர்களின் பிரச்சினைகளைத் தெளிவுபடுத்துவதற்கு அலுவலர்கள் அணுகக்கூடியவராக இருக்கவேண்டும்.

1.8.31.2. ஆரிய பாஷா மொழி அபிவிருத்தி சபை, வெளிக்கள நிலையம் என்பவற்றின் செயற்பாடுகள் ஊக்குவிக்கப்பட வேண்டிய தேவையுள்ளது.

1.8.32. பாடசாலைக்காக காணியை கையகப்படுத்திகொள்வதில் நிறுவப்பட்டிருக்கும் விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

1.9. வகுப்பறைக் கற்றல்-கற்பித்தல்

1.9.1. கற்பித்தலும் கற்றலும் மேம்பாட்டுக்குரிய பகுதிகள்

1.9.2. நடைமுறை வழக்கம் சார்பான கற்பித்தல்

1.9.3. இலக்கு சார்பான கற்பித்தல் திட்ட வரைவு

1.9.4. மாணவரை மையப்படுத்திய கற்பித்தல் நடவடிக்கை

1.9.5. மாணவர்களின் அடையாளம் காணப்பட்ட ஆற்றலுக்கு கற்பித்தல்

1.9.6. உயர் திறன்களோடு வெவ்வேறு வேக அளவில் கற்கும் மாணவரையும் குறைந்த வேகத்தில் கற்போரையும் இனங்காணுதல்.

1.9.7. வகுப்பிலும் வீட்டிலுமாக மாணவர்கள் செய்தவற்றை திருத்தி அவர்களுக்கு பின்னூட்டல் செய்தல்

1.9.8. பாடப் புத்தகத்தையும் குறிப்புக்களையும் கற்றலுக்காக மாணவர்களை முதலில் ஆர்வமூட்டுதல் செய்யுங்கள்.

1.9.9. மாணவர்கள் தாமாகவே கற்குமளவில் அவர்களுக்கான ஆர்வமூட்டல் செய்யுங்கள்.

1.9.10. மாணவர் கற்றலில் அவர்களுக்கு இருக்கும் நடைமுறை இடர்பாடுகளை அடையாளங்கண்டு அவர்களுக்கு கற்றலில் இருக்கக்கூடிய சிரமங்களில் உதவியாகவிருங்கள்.

1.9.11. பாடசாலை மட்ட கணிதபாடம் விஞ்ஞான பாடம் மற்றும் ஆங்கிலப் பாடம் என்பன அவற்றிடையேயான கோட்பாடுகளுக்கும் வெவ்வேறாக கற்பிக்கப்படும் பரந்துபட்ட விடயதானங்களின் பொது கருத்துக்களுக்குமான தொடர்பு பற்றிய விளங்கிக்கொள்ளலுக்காக கற்பிக்கப்படவேண்டியது அவசியமாகும். உதாரணமாக உயிரியல், தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல் ஆகியவை கற்பித்தலில் ஒருங்கிணைந்த அணுகுமுறைக்குப் பதிலாக பொதுக் கருத்துக்களும் கோட்பாடுகளும் வெவ்வேறு விடயதானங்களாகவே கற்பிக்கப்படுகிறது.

1.9.12. 6ஆம் தரத்துக்குள் நுழையும் மாணவர்களுக்கு முக்கியமான அங்கீகாரம் வழங்கப்படவேண்டும்

1.9.12.1. புதிய ஆசிரியர்களுக்குப் பதிலாக அனுபவம் மிக்க ஆசிரியர்களை நியமியுங்கள்
1.9.12.2. 6ஆம் தரத்திலிருந்து 8ஆம் தரத்துக்கு இடைப்பட்ட வகுப்புக்களில் கற்கும் மாணவர்கள் மீது அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.
1.9.13. அளவுக்கதிகமாக வகுப்பறைக்குள் மாணவர் காணப்படுகின்றனர்.
1.9.14. மாணவரின் உணர்வுமயப்பட்ட நிலை அத்தோடு பொருத்தமான கால அளவுக்கு மதிப்புக் கொடுத்து கற்பித்தலில் இன்னும் இன்னும் ஆயத்தப்படுத்தல் அவசியமாகிறது.
1.9.15. மாணவர்களுக்கு கற்பித்தலின்போது திறன்களாவன ஒருவருடைய வாழ்க்கைக்கும் வேலை செய்யும் போதும் அவசியமானது என்பதை விளக்க இன்னும் இன்னும் வாய்ப்புக்கள் வழங்குதல் முக்கியமானதாகும்.
1.9.16. ஒதுக்கப்பட்ட நேரத்தை வெளிக்களத்தில் பௌதிகக் கல்வி கற்பிப்பதில் பயன்பாடுடையதாக செய்யும்போத நூலக மணித்தியாலங்கள் ஏனைய பாடங்களைக் கற்பித்தலில் பயன்படுத்தப்படுகிறது.
1.9.17. பாடசாலை வேளைகளில் பண்டிகைக் காலங்களுக்கும் போட்டி நிகழ்ச்சிகளுக்கும் அளவுக்கதிகமான கால அளவு வழங்கப்படுகிறது.
1.9.18. மாணவர்களின் கவனம் திருப்திகரமானதாகவில்லை.
1.9.18.1. முக்கியமாக உயர்தர நிலை மாணவர்களுக்கு கவனம் என்பது திருப்திகரமாக இல்லை
1.9.19. வகுப்பறைக் கற்றலில் மாணவர்கள் அதிக அக்கறை காட்டுவதில்லை அத்துடன் அவர்கள் வகுப்பறைக்கு உள்ளேயும் வெளியேயும் நடைமுறை செயற்பாடுகளில் ஆர்வத்தை தூண்டிவிடுதல்

1.9.20. தாய்மொழியில் Excel கற்க ஆசைப்படுவதை ஊக்கப்படுத்த வேண்டும்.
1.9.20.1. இலக்கணம், எழுத்து, வாசிப்பு ஆகிய மொழித் திறன்கள் பற்றிய அறிவு என்பவற்றில் முன்னேற்றம் தேவை

1.9.21. ஆசிரியர் போதுமான அளவில் இல்லை அத்துடன் ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் பாடப்பரப்பில் தகைமை உடையவராக இல்லை.
1.9.21.1. ஆரம்ப வகுப்புக் குழந்தைகள் சிந்தனை செய்தல் மற்றும் ஆக்கத் திறன் என்பனவற்றை வளர்த்தலில் வாய்ப்புக்கள் அதிகம் வழங்கப்படுவதில்லை.
1.9.22. ஒரு ஆசிரியர் ஆரம்ப பிரிவில் எல்லாப் பாடங்களையும் கற்பிக்கின்றார். அவர்களுக்கு செயற்றிறன் மிக்கதாக எல்லாப் பாடங்களையும் கற்பித்தலில் அவர்களுக்கு சிரமங்கள் இருக்கும்.

## 1.10. ஆசிரியர் கல்வி

1.10.1. மாணவர்களுக்கு அவர்களின் வல்லமைக்கு ஏற்ப கற்பித்தல்
1.10.2. வகுப்பறைகளில் கற்பித்தலில் சந்தோசம், ஊக்கம், உற்சாகம் வேண்டும்.
1.10.3. கற்பித்தல் முறைமைகளில் மென்மேலும் அறிவுறுத்தல்கள் வழங்குதல் விசேடமாக பட்டப்படிப்போடு கற்பித்தல் முறைமைகளில் வெளிப்படுத்தல்களில்லாமல் இருப்போருக்கு இது அவசியம்
1.10.4. ஆசிரிய கல்வியில் கற்ற உத்திகளை வகுப்பறையில் பிரயோகித்தலில் ஊக்கமளித்தல்
1.10.5. நடைமுறைக் கற்பித்தலின் உத்திகள் முன்னேற்றப்படவேண்டும்.
1.10.6. வகுப்பறையில் செயல்நோக்கு ஆராய்ச்சி நடத்துதல் அத்துடன் கருத்துக்களை பகிர்ந்து கொள்வதில் விருப்பமுடைமை என்பனவற்றை ஊக்கப்படுத்துதல் வேண்டும்.
1.10.7. மாணவர்களது நடத்தைகளைப் புரிந்துகொள்வதில் வளைந்துபோதல் மற்றும் பொருத்தமான கற்பித்தல் முறையை எடுத்துக்கொள்ளல் அத்துடன் வகுப்பைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் முறை.
1.10.8. ஒரு ஆசிரியரின் பொறுப்புக்களையும் கடமைகளின் விளக்கத்தையும் தெளிவாக அறிவுறுத்துங்கள்
1.10.9. ஆசிரியர்கள் வழங்கப்பட்ட பயிற்சியை பிரயோகிக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

1.10.10. தமிழ் மொழி கணிதம், விஞ்ஞானம், தொழில்முன்னிலைத் திறன்கள் சமூகக்கல்வி போன்ற பாடங்களுக்கு போதுமான பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இன்மை

1.10.11. ஆசிரிய ஆலோசகர்கள் முறையாக பயன்படுத்தப்படுவதில்லை

1.10.11.1. பாடசாலைகளுக்கு சமமற்ற பங்கீடு

1.10.11.2. பொருத்தமான பயிற்சி ஆலோசனை மற்றும் செய்முறை விளக்கங்கள் என்பன வழங்கப்படுவதில்லை.

1.10.11.3. நவீன கற்பித்தல் முறைகளை உதாரணம் மூலமாக எடுத்துச் செல்வதில்லை.

1.10.11.4. பாடவிதானத்திலும் சேவைகளிலும் போதுமான அறிவின்மை அத்துடன் சுற்றறிக்கை ஊடாக முறையான தகவல்களை கொடுப்பதில்லை.

1.10.11.5. ஆசிரிய ஆலோசகர்களுக்கு அவர்களுடைய தகுதியை உயர்த்துவதற்காக உள்ளகப் பயிற்சிகள் வழங்க வேண்டிய தேவையுள்ளது.

1.10.12. குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தடவை ஆசிரியர்கள் மீதான மதிப்பீடு நடத்தப்பட வேண்டிய தேவையுள்ளது.

1.10.13. ஆசிரியர்கள் எழுத்துமுறையாகவுள்ள விதிமுறைகளை முறையாக பின்பற்றவேண்டும்.

1.10.14. ஆசிரியர்களுக்கு ஒரே வகையான உள்ளக பயிற்சிகள் திரும்பத்திரும்ப வழங்கப்படுகிறது.

1.10.15. வட மாகாணத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர்களின் கீழ் இயங்கும் 12 ஆசிரிய நிலையங்களில் பெரும்பாலானவை ஆசிரிய பயிற்சிகளுக்காகவோ அல்லது கருத்தரங்குகளுக்காகவோ பயன்படுத்தப்படவில்லை.

1.10.15.1. அவற்றுக்கான உபகரணங்கள் திருத்தத்துக்காக அல்லது பராமரிப்புக்காக உள்ளன.

1.10.15.2. தளபாடங்கள் திருத்தப்பட வேண்டியுள்ளன அல்லது பதிலாக வேறு வைக்கப்பட வேண்டியுள்ளன.

1.10.15.3. அங்குள்ள உத்தியோகத்தர்கள் நாள்கள் பலவற்றை எதுவுமே செய்யாமல் கழிக்கிறார்கள்.

### 1.11. ஆசிரியர்கள் – பெற்றோர்கள் – மாணவர்கள் உறவு நிலை

1.11.1. ஏதாவது ஒரு பிரச்சினை என்றால் மட்டும் என்ற நிலையிலிருந்து விடுபட்டு தமது பிள்ளைகளின் சாதகமான முன்னேற்றங்கள் பற்றியும் ஆசிரியர் - பெற்றோர் மாணவர் சந்திப்பு ஒழுங்காக இடம்பெறுதல்

1.11.2. அதிபரும் ஒரு கால ஒழுங்கின் அடிப்படையில் பெற்றோர்களை ஒழுங்காக சந்திக்க வேண்டும்.

1.11.3. உடலியல் ரீதியான தண்டனைகள் தடை செய்யப்பட்டு மாணவர்களும் ஆசிரியர்களுமாக ஒரு மாற்று ஒழுக்கவியல் நடவடிக்கைகளை வெவ்வேறு பிரச்சினைகளுக்காக மேற்கொள்ள வேண்டும்.

1.11.4. பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வியில் அக்கறையுடையவராயிருக்க வேண்டும். விசேடமாக குறைந்த பொருளாதார நிலையிலிருக்கும் பெற்றோர்கள் மற்றும் சமூக மடிப்புக்களுக்குள் பிற்பட்ட வகுப்புக்களில் இருக்கும் பெற்றோர்கள்.

# Appendix II: Calendar of Events

| Date | Activity |
|---|---|
| **Mon 14 Oct 2013** | **Hon.Minister Gurukularajah assumes duties at the Ministry** |
| Tue 15 Oct 2013 | Minister announces the Review of the Northern Province Education System. Appoints Dr N. Ethir as the Facilitator. Group Coordinators selected |
| Tue 22 Oct.2013 | First Steering Committee meeting. Forming Sub Comm, identifying issues, planning work of the Sub com |
| Thu 24 Oct.2013 | Coordinators to start work on the program of work of their Sub comm |
| Fri 25 Oct.2013 | Secretary places ad & calls for written submission from the public and educators |
| Mon 28 Oct.2013 | Str comm & its Sub-comm members meet at Min Auditorium at 10.00 Am |
| Thu 31 Oct.2013 | Minister and Team meet students, parents and teachers from Tamil medium Schs |
| Mon 4 Nov.2013 | Min and team meet students, parents and teachers from Sinhala Medium Schools |
| Wed 6 Nov.2013 | Str comm meet to finalize symposium logistics and for sub comm issues |
| Mon 11 Nov.2013 | Public and Educators Postal submission closes |
| Wed 13 Nov.2013 | Sub committees meet |
| Wed 27 Nov.2013 | Sub comm submissions to str comm Secretariat |
| Fri 29-15 Jan.2014 | Str.comm compiles sub-comms report with recommendations to from a whole |
| Thu 30 Jan.2014 | Meeting with organization committee, planning symposium staff selection and training, translation Matters, planning symposium. |
| Fri 31 Jan.2014 | Finance committee discussion |
| Mon 3 Feb.2014 | Steering Committee discussion |
| Thu 6 Feb.2014 | Discussion with officers in-charge of symposium |
| Thu 13 Feb.2014 | Presentation 1st rehearsal |
| Mon 17 Feb.2014 | Symposium staff training (1st planning) |
| Thu 20 Feb.2014 | Presentation Rehearsal |
| Fri 21 Feb.2014 | Special Education meeting |
| Tue 25 Feb.2014 | Discussion with ZDE & DDE planning |
| Mon 3 Mar.2014 | Preparation meeting to meet Hon Minister Bandula Gunawardana |
| Wed 5 Mar.2014 | REVIEW TEAM Travel to Colombo.<br>Names of 20 Liaison officers to be collected form A.S<br>Mr. Sathiyabalan to meet Dr. E. before 5th |
| Thu 6$^{th}$ Mar.2014 | Line Ministry meeting at Isurupaya with Minister & Staff |
| Fri 7$^{th}$ Mar.2014 | All groups submit report to Secretariat |
| Tue 11 Mar | **Plan Symposium:-** invitees, budget , Symposium website, funding, invitation, logo, ID etc |
| Wed 12 Mar | **Plan training details** before12$^{th}$(Mr. Sathiyapalan)<br>Inform trainees before 12$^{th}$ (Mr. Sathiyapalan)<br>Decide Trainers (Mr. Sathiyapalan) |
| Fri 14 Mar | Briefing meeting of TIII, TII, 1C, 1AB Principals from all Zones. (Sathiyapalan for PD). |

| | |
|---|---|
| **Wed 19th Mar** | **NP Minister Meet with Donors** |
| Fri 21st Mar | Final report draft PPT presentation |
| Tue25 Mar | **Symposium training** to all (liaison officers , officers in charge,) by Mr. Sathiyapalan, Mr. Krishnanathan, Mr. Johnson, and others) |
| **Wed 26 Mar** | **Start Submitting Report for translation to Tamil & Sinhalese** |
| Mon 7 April | Continuing preparation of appendices and finer edits |
| Tue 8 Apr | Group Leaders and members meeting with Mr. R. Ganesarajah to discuss planning of the Group Discussion process.. Workshop organizers to finalise all arrangements before April 18th . |
| 21st -30th Apr | Consultancy Workshop week. Final rehearsal of Presentation at Rajeswary Hall. 22nd Halls to be ready. All ID and files ready |
| 23rd,24th | Consultancy Workshop for 300 MOE and NP Ministry of Ed and educational institution invitees. |
| Thu 12th May | Final last Meeting of the Steering Committee to finalise Report |
| 13 May-31 May | Review and Final edits |
| 16 Jun | **Submit English version of report to Printers. Finalise Tamil version. Submit English Version for Translation to Sinhala to MOE.** |
| 20 Jun | **Submit Tamil Version to Printers.** |
| July 2 | **Presentation of printed English and Tamil version of reports to the Minister of Education, NP.** |
| 17 Jul 2014 | **Report Release Ceremony** |

# Appendix III: Program of the NESR Consultancy Workshop

**Northern Education System Review Consultancy Workshop**

**23rd April 2014 – 24th April 2014**

**1st Day - Wednesday 23rd April 2014**

1. 8.30am - Receiving Guests
2. 8.40 am- Hoisting National Flag with National Anthem and Provinc ial Flag
3. 8.45am – Lighting of Traditional Oil Lamp
4. 8.50 am – Welcome Dance
5. 9.00am – Welcome Address by Hon.T. Gurukularajah (Minister of Education, sports, cultural affairs of Northern Prov ince)
6. 9.10 am – Address by Hon. C.V. Wigneswaran (Chief Minister of Northern Province)
7. 9.20 am – Address by Hon. G.A. Chandrasiri (The Governor of Northern Provine)
8. 9.35 am- Address by Hon. Bandula Gunawardana (The Minister of Education)
9. 10.00am- Introduction to the Consultancy Workshop (Dr. N. Ethirveerasingam. Fa cilitator, NERS-CW)
10. 10.30 am- Tea Break
11. 11.00 am- Submission of group presentation of the first five topics (15 Min each)
    - Psychosocial wellbeing of students and teachers. (Dr. Daya Somasunderam)
    - Teaching and Learning, National Examinations (Mr. S. Sarveswaran)
    - Administration, Appointments, Promotion and Transfers. (Mr. S. Krishnakum ar)
    - ePlanning, Database, Research and Publication (S. Manimarrphan)
    - Education Management Information System (Ms. Malini Winiton & Mr. Tharmaseel an)
12. 12.30 pm- Lunch
13. 1.30 pm- Submission of group presentation of next five topics (15 Min each)
    - Finance, staff requirements and Student needs. (Mr. Kamalaruban)
    - Early Childhood Education and Development. (Miss Jeya Thambyah)
    - Special Needs Education (Mr. V. Vishnukaran)
    - Establishment of The Institute of Tamil Medium Education &Teacher Education (Dr. N. Ethirveerasingam)
    - Continuous Education. (Rev J. Gnanaponrajah)
    - Alternate Administrative Structure with devolved decision-making. (Dr.N. Ethirveerasingam)

14. 3.00 pm- Observations by The Secretary, Ministry of Education, Isurupaya
15. 3.20 pm- by Director General, National Institute of Education
16. 3.45 pm- Tea Break
17. 4.15 pm- Plenary Session and discussion
18. 4.55pm- Closing remarks and vote of thanks by secretary MOE/ NP
19. 5.00pm- Closing of First day session

## SECOND DAY 24 April, 2014

1. 8.30 am- Group Discussions
2. 10.30 am- Tea Break
3. 11.00 am- Group Discussions
4. 12.00 am- Observations and Recommendations by the Specialists from the Ministry of Education, NIE, Universities World Bank, UNICEF and other Agencies.
5. 1.00pm- Lunch
6. 2.00 pm- Observations and Recommendations by the Additional Secretary, MOE.
7. 3.00 pm- Observations from NP Educators of distinction.
8. 4:00 pm – Concluding observations by a Female and a Male student.
9. 4:30 pm Thank You by the Hon Minister of Education, NP.
10. 4.45 pm- Closing Remarks and Vote of thanks by Provincial Director of Education Northern province
11. 5:00 pm- Tea and Departure.

# Appendix IV: Members of the Steering Committee and Participants in the Consultation Workshop

## Appendix IV (a): Psychosocial wellbeing of students and teachers Group

| S.No | Name | Designation |
|---|---|---|
| 1 | Mr.H.U.Premathilaka | Addl. Secretary, Educational Quality Development, MOE |
| 2 | Ms.S.Uthayakala | Provincial Coordinator, NP |
| 3 | Dr.D.C.Ambalavanar | Lecturer, Medical Faculty, University of Jaffna |
| 4 | Mr.R.Gokilaragavan | Principal |
| 5 | Mr.K.Thileeban | Principal |
| 6 | Mr.K.Susitharan | Principal |
| 7 | Mrs.G.Umakanth | Teacher |
| 8 | Mrs.S.Sritharan | Teacher |
| 9 | Mrs.M.Ramesh | Parent |
| 10 | Mrs.P.Rasanayagam | Parent |
| 11 | Mrs.V.Mahalingam | Principal |
| 12 | Mrs.S.Kandasamy | Principal |
| 13 | Ms.A.Nicolin | Student |
| 14 | Ms.Gayathri | Student |
| 15 | Ms.R.Rinothja | Student |
| 16 | Mrs.T.Thillainadesan | Teacher |
| 17 | Mrs.P.Premachandran | Teacher |
| 18 | Mas.N.Achuthan | Student |
| 19 | Mr.S.Sasigaran | Programme Coordinator, Save the Children |
| 20 | Mr.M.Rathakrishnan | Addl. Provincial Director of Education |
| 21 | Prof.Daya.Somasundram | Lecturer, University of Jaffna |
| 22 | Mrs.M.Wignarajah | Teacher |

# Appendix IV (b): Teaching, Learning & National Examinations Group

| S.No | Name | Designation |
|---|---|---|
| 1 | Mr.S.Shanmukakumar | Divisional Education Officer |
| 2 | Mr.V.Rajakulasingam | Divisional Education Officer |
| 3 | Mr.B.D.C.Biyanawila | Director of Education Mathematics |
| 4 | Ms.S.Karthikeyini | Education Officer Unicef |
| 5 | Mr.V.Dissanayake | Consultant World Bank |
| 6 | Mr.T.Lenin | Assistant Director of Education |
| 7 | Mr.K.Varnakularajah | Assistant Director of Education |
| 8 | Mr.K.Selvan | Assistant Director of Education |
| 9 | Mr.U.L.Unais | Asst. Commissioner, Educational Publications Department Ministry of Education |
| 10 | Mr.S.Pirahasan | Asst. Commissioner, Department of Examinations, Ministry of Education |
| 11 | Mr.R.M.Jeyawardana | Deputy Commissioner of Exams, Ministry of Education |
| 12 | Mr.S.K.Gunathilake | Asst. Director, Science Branch, Ministry of Education |
| 13 | Mr.K.D.Bandula | Asst. Commissioner General Educat ional Publications Dept, Ministry of Education |
| 14 | Mrs.M.Kamani Perera | Commerce Branch |
| 15 | Ms.Damayanthi Balasoriya | Director of Education, Agriculture and Environment, Ministry of Education |
| 16 | Mr.P.E.Croos | Principal |
| 17 | Mr.F.M.Jero Selvanayagam | Principal |
| 18 | Mrs.Maithily Thevarajah | Assistant Director of Education |
| 19 | Mr.E.Kantharuban | Teacher |
| 20 | Mr.R.Yokeswaran | Teacher |
| 21 | Ms. Kumari Senevirathne | Director Quality Assurance |
| 22 | Mr.L.Maheswaran | Principal |
| 23 | Mrs.A.C.Valantin | Assistant Director of Education |
| 24 | Mrs.M.Rajaram | Ret. Assistant Director of Education |
| 25 | Mr.K.A.Sivanarulrajah | Assistant Director of Education |
| 26 | Dr.S.Srisatkunarajah | Dean Faculty of Science University of Jaffna |
| 27 | Mr. Murugamoorthi | Principal |
| 28 | Mr.K.Sarveswaran | Lecturer University of Jaffna |
| 29 | M.F.Sidney Jeyawardena | Deputy Director General, NIE |
| 30 | Ms.Uthaya Sivagnanam. | Ret. ISA, NEP. |

# Appendix IV (c): Administration, Appointments, Promotion, Transfers & Teachers Issues Group

| S.No | Name | Designation |
|---|---|---|
| 1 | Mr.S.Krishnakumar | Zonal Director of Education |
| 2 | Mr.A.Rajendran | Addl. Provincial Director of Education |
| 3 | Mr.K.Murugavel | Zonal Director of Education |
| 4 | Mr.A.J.Croos | Zonal Director of Education |
| 5 | Mr.Upali Marasinha. | Addl. Secretary, Education Services Establishment |
| 6 | Ms.T.Periathamby | Ret. Provincial Director of Education |
| 7 | Mrs.P.Ganesalingam | Zonal Director of Education |
| 8 | Ms.Sudarshi Hapukotuwa | Asst. Director of Education |
| 9 | Mr.S.Vethanathan | Principal |
| 10 | Mr.K.Arunthavapalan | Principal |
| 11 | Mr.N.Kugaparan | Teacher |
| 12 | Mr.T.Pangayachelvan | Divisional Education Officer |
| 13 | Mr.S.Amithalingam | President, National College of Education, Jaffna |
| 14 | Mr.S.Sethurajah | Principal |
| 15 | Mr.S.R.Sathiyendrampillai | Vice President |
| 16 | Mr.S.Subramaniyeswaran | Principal |
| 17 | Mr.N.Jeyaweerasingam | Principal |
| 18 | Mr.G.Piratheepan | Administrative officer |
| 19 | Mr.T.Kirupakaran | Deputy Director of Education |
| 20 | Mr.V.E.Gaston Roy | Principal |
| 21 | Mr.P.Ariyaratnam | Ret.Addl Provincial Director |
| 22 | Mr.S.Sivaneswaran | Principal |
| 23 | Mr.A.Kailayapillai | Principal |
| 24 | Mr.S.Santhirarajah | Zonal Director of Education |
| 25 | Mr.Z.Thajudeen | Director, Muslim Schools, Min istry of Education |
| 26 | Mr.A.F.M.Rafi | Project Director, Northern Education Deve lopment, Ministry of Education |

# Appendix IV (d): ePlanning, Database, EMIS, Research and Publication Group

| S.No | Name | Designation |
|---|---|---|
| 1 | Prof.S.Rajathurai | Ret. Professor |
| 2 | Mr.K.Manimarphan | Addl. Provincial Director of Education |
| 3 | Mrs.M.M.Wehalla | Director, Planning Ministry of Education |
| 4 | Prof.M.Sinnathamby | Ret. Professor |
| 5 | Mr.S.R.Elizabeth | Principal |
| 6 | Rev.Sis.S.Aloseseary | Principal |
| 7 | Mr.P.Anatharasa | Principal |
| 8 | Mr.V.Senthan | Teacher |
| 9 | Mr.S.Tharmaseelan | Addl. Director of Education |
| 10 | Mr.K.V.Vishnukanthan | Teacher Resource |
| 11 | Mr.W.S.Perera | Director, Data Management |
| 12 | Ms.G.D.Thevarajah | Principal |
| 13 | Mr.Arulvathanan | Teacher |
| 14 | Mr.O.Vijayaratnam | Teacher |
| 15 | Mr.A.Shanmugalingam | Teacher |
| 16 | Prof.M.Karunanithy | Professor, University of Colombo |
| 17 | Mr.G.M.Neel Gunadasa | Director ICT Branch, Ministry of Education |
| 18 | Mrs.Malini Wenitan | Zonal Director of Education |

## Appendix IV (e): Finance, Staff requirements, Expenditures and Teachers Salary Group

| S.No | Name | Designation |
|---|---|---|
| 1 | N.H.M.Chitrananda | Additional Secretary, Administration & Finance, Ministry of Education |
| 2 | Mr.R.Karunasiri | Program Head, ESDP - Ministry of Education |
| 3. | K.Bratley | Deputy Director of Education. NP |
| 4 | MR.K.Premakanthan | Addl. Provincial Director of Education |
| 5 | Mr.T.Gnanasundaran | Deputy Director of Education |
| 6 | Mr.S.P.N.Samarasinha | Chief Accountant-Ministry of Education |
| 7 | Mr.S.U.Wijerathana | Addl. Secretory Planning & Performance review, Ministry of Education |
| 8 | Mr.T.Jesuthananthan | Principal |
| 9 | Mr.S.Murugananthan | Principal |
| 10 | Mr.S.Balakrishnan | Principal |
| 11 | Mr.A.Kiritharan | Accountant |
| 12 | Mr.K.kamalaruban | Chief Accountant, Provincial Department of Education |
| 13 | MR.V.S.Vyayananthan | Senior Lecturer, Advanced Technical College |
| 14 | Mr.S.Muralitharan | Director of Education, Tamil Schools, Ministry of Education |

## Appendix IV (f): Early Childhood Education Development Group

| S.No | Name | Designation |
|---|---|---|
| 1 | Mrs.Asoka Pandithasekara | Director, Primary Branch, Ministry of Education |
| 2 | Mr.T.Arumainayagam | Principal |
| 3 | Mr.R.Perinpanathan | Principal |
| 4 | Mrs.L.I.Irathika | Teacher |
| 5 | Mr.M.Sivananthan | Principal |
| 6 | Mr.M.Y.Knoon | Teacher |
| 7 | Mrs.A.M.Nirmalajothy | Teacher |
| 8 | Miss.P.Karthigesu | Teacher |
| 9 | Mr.T.Uthayakumar | Zonal Director of Education |
| 10 | Mr.T.Muhunthan | Asst. Director of Education |
| 11 | Mr.S.Puvirajasingam | Teacher |
| 12 | Ms.Susmitha | Student |
| 13 | Mas.T.Senthuran | Student |
| 14 | Ms.Jeya Thampiah | Director,ECD |
| 15 | S. S. Divakalala | Former Secretary of Education, Cultural Affairs & Sports NEP |

## Appendix IV (g): Special Needs Education Group

| S.No | Name | Designation |
|---|---|---|
| 1 | Mr.H.P.N.Lakshaman | Director of Education, Sports Branch, Ministry of Education |
| 2 | A.Elanko | Deputy Director of Education, NP |
| 3 | Mr.N.Kandathasan | Asst. Director of Education, NP |
| 4 | Mr.S.Pushpalingam | Deputy Director of Education, NP |
| 5 | Mr.M.M.Ziyan | Zonal Director of Education, NP |
| 6 | Mr.T.Jhon Quintes | Zonal Director of Education, NP |
| 7 | Mr.A.C.Sarufudeen | Principal |
| 8 | Mr.T.Jeganathan | Divisional Education Office |
| 9 | Mr.Y.Thusyanthan | Teacher |
| 10 | Mr.V.Prabakaran | Teacher |
| 11 | Mr.S.Vigneswaran | Teacher |
| 12 | Mr.V.Visnukaran | Teacher |
| 13 | Mr.S.Nanthan | Teacher |
| 14 | Mr.S.L.M.D.Piyasena | Director, 1000 Schools, Ministry of Education |
| 15 | Mr.A.D.Nandasena | Director Technical Subject, MOE |
| 16 | Mr.C.Jeyamanon | Teacher |
| 14 | Mr.L.S.Lloyd | Teacher |

# Appendix IV (h): Establishment of the Institute of Tamil medium Education Group

| S.No | Name | Designation |
|---|---|---|
| 1 | Mr.K.K.Yoganathan | Principal |
| 2 | Mr.K.Jegatheeswaran | Principal |
| 3 | Mr.S.N.Uthayakumar | Principal |
| 4 | Mr.N.Ketheeswaran | Principal |
| 5 | Mr.V.T.Jeyanthan | Principal |
| 6 | Mr.T.Vamadevan | Principal |
| 7 | L.M.D.Dharmasena | Chief Commissioner-Teacher Educational Establishment, Ministry of Education |
| 8 | Mr.Nagenthirarajah | Principal |
| 9 | Mr.S.Jayaratnam | S.D.C Secretary Mu/Oddusuddan M.V |
| 10 | Mr.S.Kuganesan | Principal |
| 11 | Mr.S.Nanthakumar | Zonal Director of Education |
| 12 | Mr.S.Jeyananthakumar | Principal |
| 13 | Mr.S.Krishnakumar | Principal |
| 14 | Mr.M.Nadaraj | Divisional Education Officer |
| 15 | Mr.S.Amirthalingam | Principal |
| 16 | Prof.Pakeer Joufer | Deputy Director General, NIE |
| 17 | Mr.N.Thevarajah | Principal |
| 18 | Mr.S.Perinpanathan | Principal |
| 19 | Mr.A.Sivagnnanaseelan | S.D.C Secretary, J/Idaikadu M.V |

## Appendix IV (i): Institute of Tamil Medium Education Group


| S.No | Name | Designation |
|---|---|---|
| 1 | Mr.K.K.Yoganathan | Principal |
| 2 | Mr.K.Jegatheeswaran | Principal |
| 3 | Mr.S.N.Uthayakumar | Principal |
| 4 | Mr.N.Ketheeswaran | Principal |
| 5 | Mr.V.T.Jeyanthan | Principal |
| 6 | Mr.T.Vamadevan | Principal |
| 7 | L.M.D.Dharmasena | Chief Commissioner-Teacher Educational Establishment, Ministry of Education |
| 8 | Mr.Nagenthirarajah | Principal |
| 9 | Mr.S.Jayaratnam | S.D.C Secretary Mu/Oddusuddan M.V |
| 10 | Mr.S.Kuganesan | Principal |
| 11 | Mr.S.Nanthakumar | Zonal Director of Education |
| 12 | Mr.S.Jeyananthakumar | Principal |
| 13 | Mr.S.Krishnakumar | Principal |
| 14 | Mr.M.Nadaraj | Divisional Education Officer |
| 15 | Mr.S.Amirthalingam | Principal |
| 16 | Prof.Pakeer Joufer | Deputy Director General, NIE |
| 17 | Mr.N.Thevarajah | Principal |
| 18 | Mr.S.Perinpanathan | Principal |
| 19 | Mr.A.Sivagnnanaseelan | S.D.C Secretary, J/Idaikadu M.V |

## Appendix IV (j): A New Northern School Administrative System – & Continuous Education Group

| S.No | Name | Designation |
|---|---|---|
| 1 | Mr.J.Kiyomar Pious | Principal |
| 2 | Mr.S.M.Jabir | Principal |
| 3 | Mr.T.Abarajithan | Teacher |
| 4 | Mr.K.Gnanaseelan | Principal |
| 5 | Mr.J.R.Ravikumar | Teacher |
| 6 | Mr.S.F.Xavier | Principal |
| 7 | Mr.A.Rangan | Teacher |
| 8 | Rev.N.J.Gnanaponrajah | Principal |
| 9 | Mr.S.Kailasanathan | Addl. Director of Education |
| 10 | Mr.K.Nadarajah | Ret. Addl. Director of Education |
| 11 | Mr.A.H.I.Lafir | Ret.ISA |
| 12 | Mr.A.C.Ariff | Principal |
| 13 | Mr.S.Muralitharan | Director of Education, Ministry of Education |

# Appendix V: Organization Chart of the NP Ministry of Education, Cultural Affairs, Sports and Youth Affairs


Institutional Structure of the Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs





PITEC- Provincial Information Technology Center
PESC - Provincial English Support Center
TC- Teacher Center
RESC- Regional English Support Center
CRC – Computer Resource Center

* In Northern Province total School is 1074, but 990 schools are now functioning.

# Appendix VI: Organization Chart of the Northern Provincial Education System



# Appendix VII: Organization Chart of the Zonal Education System



# Appendix VIII: Teachers Salary Scale

The Table 4.2 gives the salary scale of all categories of employees in the Sri LankanEducation System.

| Table 4.1: Sri Lanka Teachers and Education Administrators Salary Scale - June 2006 | |
|---|---|
| SERVICE | SALARY |
| SLEAS I | 36,755 – 16X 1050 -53555 |
| SLEAS II | 30,175 – 12X 790-39655 |
| SLEAS III | 22,935 -16X645 -33255 |
| SLPrS I | 22,290 -1- X645 -34545 |
| SLPrS 2-I | 21,645 X20X 645 -34545 |
| SLPrS 2-II | 18,845 -12 X400 -23645 |
| SLPrS III | 15,995 -5 X240 -10 X330 -20495 |
| SLTeS I | 21,645 -13 X645 -30030 |
| SLTeS 2-I | 18,845 -12 X 400 -23645 |
| SLTeS 2-II | 15,995 -5X 240-10X330-20,495 |
| SLTeS 3-I | 14,135 -15 X 180-16,835 |
| SLTeS 3-II | 13,120 -10 X145 -5X 180 -15,470 |
| MN 7 | 19,755 -15 X325-11X400-29,030 |
| MN 4 | 15,215 – 14X215 -18,225 |
| MA I | 17,550 -5X 240-14X320 -23,230 |
| MA II | 15,610 -11 X 170 -7X240 -19,160 |
| MA III | 19,990 -18 X145 -16,600 |
| MN 3 | 14,510 -4X150-6X205-20X290-11X230-25, 660 |
| MN I | 12,920 -10X120-11X140-10X210-10X290-20, 660 |
| PL3 | 12,360 -10 X110 -10 X120 -10X130-12X140-17, 640 |
| OES I | 14,375 -14X145-16,405 |
| OES II | 13,060-14X130-14,880 |
| OES III | 11,730 X10X100-10X110-10X120 -12X130-16,590 |
| Source: http://www.moe.gov.lk/web/images/stories/sleaslist.pdf & http://p2.pscdn.me/content/ps_teacher_salaries02.png | |

# Appendix IX: Applicable MOE Circulars

## CIRCULARS AND GAZZETTE NOTIFICATION

## RECRUITMENT/ TRANSFER

| S.No. | Circular No. | Issued by/Effect Date | Subject |
|---|---|---|---|
| 1 | Management Services Circular No. 36 | Dept. of Management Service General Treasury. | Vacancies in the approved Cadre of Public Service, Provincial Public Service and the Development project included in the Budget Estimates. |
| 2 | 1589/30<br>20.02.2009 | Gazzette Notification<br>02.04.2009 | அரசாங்க உத்தியோகத்தர்களின் நியமிப்பு, பதவி உயர்வு மற்றும் இடமாற்றங்கள் பற்றிய நடைமுறை விதிகளும் இவற்றுடன் சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு அவற்றுக்கு இடைத்தேர்வான விடயங்களுக்கும் ஏற்பாடு செய்தல். |
| 3 | 91/24<br>21.09.1991 | Ministry of Education and Higher Education<br>Isurupaya | Obtains the service of retired English Teachers, qualified retired Government servants and other persons who have the ability to teach the English Language to cover the existing vacancies of English Teachers, in an external basis at school level. |
| 4 | 13/2005<br>28.07.2005 | Ministry of Public Administration and Home Affairs | அரச திணைக்களங்கள், கூட்டுத் தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளில் தற்காலிக, அமைய, ஒப்பந்த அடிப்படையின் பேரில் ஆட்சேர்ப்புச் செய்த ஊழியர்களை நிரந்தரமாக்குதல். |
| 5 | 21/2006<br>06.12.2006 | -do- | -do- |
| 6 | 21/2006(I)<br>17.07.2007 | -do- | -do- |
| 7 | 21/2006(II)<br>19.11.2007 | -do | -do |
| 8 | 21/2006(III)<br>17.04.2008 | do | do |
| 9 | 21/2006(IV)<br>30.07.2008 | do | -do |
| 10 | Sep-07<br>11.05.2007 | Ministry of Public Administration and Home Affairs | Re-employment of Retired Public Offices |
| 11 | 3-Apr<br>02.12.2003 | Public service Commission | மாகாண அரச சேவையில் பதவி வகிக்கின்ற கல்வி ஆளணியினர் சம்பந்தமாக நடவடிக்கை மேற் கொள்ளல். |

SERVICE MINUTES

| S. No | Circular No. | Issued by/Effect Date | Subject |
|---|---|---|---|
| 1 | 843/4 31.10.1994 | Gazette Notification 06.10.1994 | Sri Lanka Teachers Service Minutes |
| 2 | 865/3 03.04.1995 | Gazette Notification | SLTS Minutes Amendment |
| 3 | 966/5 11.03.1997 | Gazette Notification | SLTS Minutes Amendment |
| 4 | 975/6 – 14.05.1997 | Gazette Notification | SLTS Minutes Amendment |
| 5 | 1086/26 02.07.1999 | Gazette Notification | Sri Lanka Principals Service Minutes |
| 6 | 1225/32 01.03.2002 | Gazette Notification | Sri Lanka Education Administration Service Minutes |
| 7 | 1490/21 30.03.2007 | Gazette Notification | SLEAS Minutes Amendment |

## Promotion/Absorption

| S.No. | Circular No. | Issued by/Effect Date | Subject |
|---|---|---|---|
| 1 | 90/45<br>12.11.90 | கல்விச்சேவை ஆணைக்குழு | ஆசிரிய சேவையில் பட்டம் பெற்ற ஆசிரியர்களை நிரந்தரப் பட்டதாரி ஆசிரிய சேவையில் சேர்த்துக்கொள்ளல் (01.01.1984 - 01.10.1988 வரை உள்ளவர்களுக்கு 01.10.1988 இல் இருந்து பட்டதாரி சம்பளம் வழங்கல்) |
| 2 | 93/02<br>24.08.1993 | கல்விச்சேவை ஆணைக்குழு | ஆசிரிய சேவையில் பட்டம் பெற்ற ஆசிரியர்களை நிரந்தரப் பட்டதாரி ஆசிரிய சேவையில் சேர்த்துக் கொள்ளல் 02.10.1988- 01.06.1993 வரையான காலப் பகுதிக்குள் பட்டம் பெற்று 01.06.1993இல் ஒரு வருடம் பூர்த்தியாயின் 01.06.1993இல் இருந்து பட்டதாரி நியமனம் வழங்கல்) |
| 3 | 95/07<br>08.03.1995 | கல்விச்சேவை ஆணைக்குழு | ஆசிரிய சேவைக்குள் உள்ளெடுத்தல். |
| 4 | 95/07 (I) | கல்விச்சேவை ஆணைக்குழு | ஆசிரிய சேவைக்குள் உள்ளெடுத்தல். ( திருத்தம்) |
| 5 | 95/07 (II) | கல்விச்சேவை ஆணைக்குழு | ஆசிரிய சேவைக்குள் உள்ளெடுத்தல். ( திருத்தம்) |
| 6 | 95/07 (III) | கல்விச்சேவை ஆணைக்குழு | ஆசிரிய சேவைக்குள் உள்ளெடுத்தல். ( திருத்தம்) |
| 7 | 95/07 (IV) | கல்விச்சேவை ஆணைக்குழு | ஆசிரிய சேவைக்குள் உள்ளெடுத்தல். ( திருத்தம்) |
| 8 | 95/07 (V) | கல்விச்சேவை ஆணைக்குழு | ஆசிரிய சேவைக்குள் உள்ளெடுத்தல். ( திருத்தம்) |

| | | | |
|---|---|---|---|
| 9 | 95/05<br>24.08.1995 | கல்விச்சேவை ஆணைக்குழு | ஆசிரிய சேவையிலிருக்கும்போது சேவைக்கு வருவதற்கு முன் பட்டம் பெற்ற நிரந்தர ஆசிரியர்களை பட்டதாரி பதவியணியில் உள்ளீர்த்தல். (02.06.1992 - 06.10.1994 வரை பட்டம் பெற்றவர்களை பட்டதாரிச் சான்றிதழ் செல்லுபடியாகும் திகதியிலிருந்து ஒரு வருடம் பூர்த்தியாகிய திகதியில் பட்டதாரி நியமனம் வழங்கல்) |
| 10 | 95/05 (I)<br>11.07.1996 | கல்விச்சேவை ஆணைக்குழு | ஆசிரிய சேவையிலிருக்கும்போது சேவைக்கு வருவதற்கு முன் பட்டம் பெற்ற நிரந்தர ஆசிரியர்களை பட்டதாரி பதவியணியில் உள்ளீர்த்தல். (95/5 சுற்றுநிருபம் 02.06.1992 - 06.10.1994 வரை பட்டம் பெற்றவர்களுக்கு மட்டுமே பொருத்தமாகும்) |
| 11 | 96/02<br>06.08.1996 | கல்விச்சேவை ஆணைக்குழு | ஆசிரிய சேவையில் உள்ளீர்க் கப்பட்ட பின் ஆசிரிய பயிற்சியும் பட்டமும் பெறும் ஆசிரியர் சம்பந்மான நடவடிக்கை. (இலங்கை ஆசிரிய சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட பின் பட்டம் பெற்றவர்களை பட்டச் சான்றிதழ் செல்லும் திகதியிலிருந்து ஒருவருட பூர்த்தி திகதியில் பட்டதாரி ஆரியராக நியமனம் செய்தல். |
| 12 | 96/03<br>04.10.1996 | கல்விச்சேவை ஆணைக்குழு | 1992இலும் அதன் பின்னரும் நியமிக்கப்பட்ட பயிலுநர் ஆசிரியர்களை நிரந்தரமாக்கல். (பயிலுநர் சேவையில் நான்கு வருடம் பூர்த்தி/பயிற்சிச் சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி இதில் பிந்திய திகதியில் நிரந்தரமாக்கல்) |
| 13 | 97/05<br>30.04.1997 | கல்வி அமைச்சு இசுறுபாய | இலங்கை அசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பு பட்டதாரி ஆசிரியர் உள்ளீர்த்தல் 1995. |
| 14 | 97/05(1)<br>19.05.1997 | கல்வி அமைச்சு இசுறுபாய | -do- |
| 15 | 97/05(II)<br>07.07.1997 | கல்வி அமைச்சு இசுறுபாய | -do- |
| 16 | 98/01<br>16.01.1998 | கல்விச்சேவை ஆணைக்குழு | பயிலுநர் சேவையில் நான்கு வருடம் பூர்த்தி/பயிற்சிச் சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி இதில் பிந்திய திகதியில் நிரந்தரமாக்கல். |
| 17 | 1998/28<br>03.09.1998 | கல்வி அமைச்சு | இரசாயனவியல் (இலங்கை) நிறுவனத்தில் விஞ்ஞான பட்டச்சான்றிதழ் பெற்றவர்களை விஞ்ஞானப் பட்டதாரியாக அங்கீகரித்ததல். |

| | | | |
|---|---|---|---|
| 18 | 98/08<br>30.10.1998 | கல்விச்சேவை ஆணைக்குழு | 3-I பட்டதாரி ஆசிரியர் 5வருடசேவை/ டிப்ளோமா 2-II வுக்கு நியமனம். |
| 19 | 99/4<br>28.01.1999 | கல்வி அமைச்சு | பயிற்றப்பட்ட டிப்ளோமாதாரரை ஆசிாயர் சேவையில் உள்ளீர்த்தல். |
| 20 | 99/1<br>30.09.1999 | கல்விச்சேவை ஆணைக்குழு | இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணத் திருத்தத்திற்கமைய ஆசிரிய சேவையில் பதவி உயர்வை செயற்படுத்தல். |
| 21 | 1/99(1)<br>11.10.1999 | கல்விச்சேவை ஆணைக்குழு | -do- |
| 22 | 99/05<br>30.11.99 | கல்விச் சேவை ஆணைக்குழு | பட்டம் பெற்றுள்ள பயிலுநர் ஆசிரியர் களையும்/பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களையும் / தகுதிகாண் ஆசிரியர்களையும் பதவியில் நிரந்தரப் படுத்தல். |
| 23 | 2000/14<br>27.03.2000 | கல்வி அமைச்சு | இலங்கை ஆசிரியர் சேவையின் பதவி உயர்வு நடவடிக்கை முறைகளை அமுல் நடாத்துதல். |
| 24 | 2001/12<br>16.11.2001 | கல்விச்சேவை ஆணைக்குழு | பயிலுநர்/தகுதிகாண் அடிப்படையில் ஆட் சேர்க்கப்பட்ட ஆசிரியர்களை இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணங்களுக்கு அமைய ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்த்தல். |
| 25 | 2001/12(1)<br>27.11.2001 | கல்விச்சேவை ஆணைக்குழு | do<br>Amendment |
| 26 | 2002/3<br>18.03.2002 | கல்விச்சேவை ஆணைக்குழு | பயிலுநர்/தகுதிகாண் அடிப்படையில் ஆட் சேர்க்கப்பட்ட ஆசிரியர்களை இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணங்களுக்கு அமைய ஆசிரியர் சேவைக்கு உள்ளெடுப்புச் செய்தல். |
| 27 | 02/2003<br>07.11.2003 | கல்விச்சேவை ஆணைக்குழு | பயிலுநர் தகுதிகாண் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட ஆசிரியர்களை இலங்கை ஆசிரியர் சேவையில் உரிய வகுப்பில் தரத்தில் நியமித்ததல். |
| 28 | 2004/01<br>16.01.2004 | Ministry of Human Resource Revenue Education & Cultural Affairs. | இலங்கை ஆசிரியர் சேவையின் பதவி உயர்வுகளை அமுல் நடாத்துதல். |
| 29 | 2005/04<br>19.05.2005 | கல்வி அமைச்சு | இலங்கை ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யும் செயற்பாடு மற்றும் பதவி உயர்வு விதிமுறைகளை திருத்தி அமைத்தல். |

| | | | |
|---|---|---|---|
| 30 | 2008/5<br>20.02.2008 | கல்வி அமைச்சு | இலங்கை ஆசிரியர் சேவையிலிருந்து இலங்கை அதிபர் சேவைக்கு நியமனம் பெற்றதன் அடிப்படையில் சம்பளக் குறைவிற்கு உள்ளாக்கப்பட்ட அலுவலர்களுக்கு அவ் இழப்பை ஈடுசெய்யக்கூடிய வகையில் சம்பளம் வழங்குதல். |
| 31 | 2008/45<br>23.12.2008 | கல்வி அமைச்சு | இலங்கை ஆசிரியர் சேவையில் தொழில் தகைமையற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு நிவாரணம் வழங்கல். (06.10.1994 இற்கு முன் ஆசிரிய நியமனம் பெற்ற தொழிற்றகைமையற்ற பட்டதாரி ஆசிரியர்களை தொழில் தகைமை கொண்ட பட்டதாரி ஆசிரியராகக் கருதி நடவடிக்கை எடுத்தல்) |
| 32 | 2009/25<br>12.08.2009 | கல்வி அமைச்சு | இலங்கை ஆசிரியர் சேவையில் பதவி உயர்வு. (31.12.2008 வரை உரிய புள்ளிகளைப் பெற்றவர்களை உரிய தரத்திற்குப் பதவி உயர்த்தல்) |
| 33 | 2010/20<br>18.05.2010 | கல்வி அமைச்சு | இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு 1இல் உள்ளவர்களை இ.அ.சே. 2-II இற்கு நியமிக்கப்பட்டதற்கமைய சம்பள மாற்றம் செய்தல். |
| 34 | 2010/20(1)<br>2010.10. | கல்வி அமைச்சு | இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு 1இல் உள்ளவர்களை இ.அ.சே. 2-II க்கு நியமிக்கப்பட்டதற்கமைய சம்பள மாற்றம் செய்தல். கல்வி அமைச்சின் சுற்றறிக்கை இல.2010/20. |
| 35 | 2011/30<br>11.11.2011 | கல்வி அமைச்சு | இலங்கை ஆசிரியர் சேவையில் பதவி உயர்வு. (31.12.2010 வரை உரிய புள்ளிகளைப் பெற்றவர்களை உரிய தரத்திற்குப் பதவி உயர்த்தல்) |

**Special Circulars**

| S.No. | Circular \No. | Issued by/Effect Date | Subject |
|---|---|---|---|
| 1 | 2005/36 13.12.2005 | MOE Isurupaya | பாடசாலைகளின் வருடாந்த பரிசளிப்பு விழா உட்பட பாடசாலையில் நடை பெறும் விழாக்களுக்கான அதிதிகளை அழைத்தல். |
| 2 | 6/1/2001 20.02.2001 | Public Administration | அரசாங்க அலுவலர்களின் அலுவலக நேரங்கள். |
| 3 | 20/2013 23.05.2013 | MOE Isurupaya | கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்களின் அலுவலக நேரங்கள். |
| 4 | 26/2009 28.07.2009 | MOE Isurupaya | பாடசாலைகளின் கையடக்கத் தொலைபேசிப் பாவனை. |
| 5 | 17/2005 2005.05. | MOE Isurupaya | பாடசாலைகளில் ஒழுக்க விழுமியங்களை பேணல். |
| 6 | 24/2004 12.07.2004 | MOE Isurupaya | அலுவலக வளவினுள் புகைத்தல், மதுபானம் அருந்துதல், போதைப் பொருள் பாவனைகளைத் தடை செய்தல். |
| 7 | 3/1/2011 18.01.2011 | MOE Isurupaya | பாடசாலைச் சிற்றுண்டிச்சாலை நடாத்துதலும் பாடசாலை வேளையில் உணவருந்துதலும். |
| 8 | 39/2008 2008.09.29 | MOE Isurupaya | மாணவர்களைச் சேர்த்தல் வகுப்பேற்றல் மற்றும் விலக்கிக்கொள்ளல் தொடர்பான இடாப்பு, தினவரவு இடாப்பு மற்றும் மாணவர் செயலாற்றுகைப் படிவம் என்பவற்றை. |
| 9 | 16/2006 21.03.2006 | MOE Isurupaya | கல்வி பண்புசார் உள்ளீடு (Q.I) கொள்வனவு, விநியோகம் மற்றும் உயர்மட்ட கல்விச் செயற்பாடுகளுக்காக (Higher Order Process) நிதி செலவிடல். |

**Salary Increase/Increment**

| S.No. | Circular \No. | Issued by/Effect Date | Subject |
|---|---|---|---|
| 1 | 28/2010<br>31.12.2010 | Ministry of Public Administration and Home Affairs | Revision of salaries and allowances of the Public service in terms of the Budget Proposals 2011. |
| 2 | 10/1/2011<br>15.12.2011 | Department of Pension | -do- |
| 3 | 10/2011(1)<br>03.02.2012 | Department of Pension | Rationalization of rates of increments of salary scales in the Public Service. |
| 4 | 10/2011(II)<br>28.05.2012 | Department of Pension | -do- |
| 5 | 06/2006(1)<br>24.05.2006 | Department of Pension | 2006 வரவு செலவுத் திட்டத்தின்படி அரசாங்க சேவையிலுள்ள சம்பள மீளமைப்புகளை மேற்கொள்ளுதல் / உச்ச நிலையில் தங்கியிருத்தல். |
| 6 | 06/2006(II)<br>10.11.2006 | Department of Pension | |
| 7 | 06/2006(III)<br>25.01.2007 | Department of Pension | வகுப்பு 1இல் உள்ள அலுவலகர்களுக்கு தேக்க நிலைச் சம்பள ஏற்றம் வழங்கல். |
| 8 | 06/2006(IV)<br>24.08.2007 | Department of Pension | சகல அலுவலர்களுக்கும் சம்பளங்களை மாற்றியமைத்தல். |
| 9 | 06/2006(V)<br>12.06.2008 | Department of Pension | 2006 வரவு செலவுத் திட்டத்தின்படி அரசாங்க சேவையிலுள்ள சம்பள மீளமைப்புகளை மேற்கொள்ளுதல்/ உச்ச நிலையில் தங்கியிருத்தல். |
| 10 | 06/2006(VI)<br>26.06.2008 | Department of Pension | 2006 வரவு செலவுத் திட்ட பிரேரணைக்கமைய அரசாங்க சேவையின் சம்பளங்களை மீளமைத்தல் |
| 11 | 06/2006(VII)<br>22.08.2008 | Department of Pension | 2006 வரவு செலவுத் திட்ட பிரேரணைக்கமைய அரசாங்க சேவையின் சம்பளங்களை மீளமைத்தல் |
| 12 | 14/2013<br>4.2013 | Ministry of Education | பொது நிர்வாக சுற்றறிக்கை இல.06/2006 இற்கமைய ஒப்பிட்டு கொடுப்பனவைச் செலுத்துதல். |

**Pension**

| S.No. | Circular N | Issued By / Effect Date | Subject |
|---|---|---|---|
| 1 | Circular No 16/95 (07.06.1995) | Public Administration | Pension Procurement |
| 2 | Circular No 02/95 (21.08.1995) | Public Administration | Pension Procurement |
| 3 | Circular No 07/2002 (01.10.2002) | Public Administration | Pension Procurement |
| 4 | Circular No 08/2002 (10.12.2002) | Public Administration | Pension Procurement |
| 5 | Circular No 09/2004 (30.06.2004) | Public Administration | ஓய்வூதியக் கொடை அளிப்பு மற்றும் மாற்றப்பட்ட ஓய்வூதியம் வழங்கும் புதிய செயன்முறை |
| 6 | Circular No 09/2004 (1) (30.09.2011) | | -Do- |
| 7 | Circular No 09/2004(11) 22.12.2011 | | -Do- |
| 8 | 14/20051/1/2007 | Ministry of Public Administration and home affairs | Updating files in order to expedite the payment of pension of the officer who retire from Public service |
| 9 | 1/1/2007<br>04.01.2007 | Department of Pension | அரச சேவை, மாகாண சேவை ஊழியர்களுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை இல்லாதொழித்தல் மற்றும் விதவைகள்/தபுதாரர்கள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு அங்கத்துவத்தைப் பெற்றுக் கொடுத்தல் |

சம்பள மாற்றங்களும் நடைமுறைத்திகதிகளும்.

| இல | சுற்றறிக்கை | நடைமுறைத் திகதி |
|---|---|---|
| 1 | பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல.770 | 1969.05.01 |
| 2 | திரட்டிய சம்பளம் | 1969.10.01 |
| 3 | எல்.பி.டி.சில்வா சம்பள அறிக்கை | 1975.04.01 |
| 4 | விசேட சம்பள உயர்ச்சி (வேலை நிறுத்தம் சார்பாக). | 1981.06.18 |
| 5 | பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல.197 | 1982.01.01 |
| 6 | தயாரட்ண சம்பள அறிக்கை | 1985.01.01 |
| 7 | பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல.327 | 1986.01.01 |
| 8 | பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல.387,387(1)<br>அரைவாசி உயர்ச்சி.<br>முழு உயர்ச்சி. | 1988.01.01<br>1988.11.01 |
| 9 | பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல.37/ 92<br>(அ) பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு 50%<br>ஏனையோருக்கு 60 %<br>(ஆ) மிகுதி உயர்ச்சி. | 1993.01.01<br>1993.07.01 |
| 10 | பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 27/ 94<br>(தொழில் நுட்ப சேவையாளர்கட்கு) | 1994.07.01 |
| 11 | பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 29/ 94<br>(எழுதுநர்களும் அதையொத்த தரங்களும்) | 1994.08.01 |
| 12 | பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 30∴94<br>(நாடளாவிய சேவையாளர்க்கு) | 1994.08.01 |
| 13 | பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 14/95<br>(தொழில் நுட்ப சேவை வகுப்பு-1) | 1995.01.01 |
| 14 | பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 33/95<br>(சம்பள முரண்பாடுகளை அகற்றல், இணைப்பு -1) | 1995.11.01 |
| 15 | பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 34/ 95<br>(சிற்றூழியர்கள்/சாரதிகள்) | 1995.11.01 |
| 16 | பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 02/ 97<br>40% அதிகரிப்பு.<br>மிகுதி அதிகரிப்பு | 1997.01.01<br>1998.01.01 |
| 17 | பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 02/97(III)<br>40% அதிகரிப்பு.<br>மிகுதி அதிகரிப்பு | 1997.01.01<br>1998.01.01 |
| 18 | பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 15/2003 | 2004.01-0130.11.2004 |
| 19 | பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 09/2004 | 2004.12-0131.12.2005 |

| | | |
|---|---|---|
| 20 | பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 06/2006 | 2006.01.01 |
| 21 | பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 06/2006(IV) | 2006.06.01 |
| 22 | தாபனக் கோவை 7-4 | பழைய சம்பளம் - புதிய சம்பளம் அடுத்த சம்பளப் படிநிலை. |
| 23 | தாபனக் கோவை 7-5 | பதவி உயர்வுகள் |
| 24 | தாபனக் கோவை 7-9 | கூடிய சம்பளத் திட்டம் குறைந்த சம்பளத் திட்டம் புதிய ஆரம்ப சம்பளப் படிநிலை ஏற்கனவே பெற்ற சம்பள ஏற்றம். |

Appendix X: Concept Paper on Nature Centres for Experiential Learning

Prepared by N. Ethirveerasingam. Ph.D. (Cornell)

Nature Centres: Nature Centres in selected habitats will provide the students and their teachers a retreat to learn a variety of skills related to the environment and the scientific method. Students would learn to record the various species of plants and animal, to measure rainfall, temperature, and water quality, and identify land biomass cover and soil profiles in the selected habitats. Students and teachers would be able to analyze and study the relationship of the environmental factors and use such information for exercises. The data will also benefit those who formulate policies to manage and sustain the environment. The students will acquire an appreciation of the interdependence of animals, plants, and people within the environment. With such knowledge, they can become responsible guardians of their environment in the future.

Nature Centres will need two core teaching staff and two caretakers in residence in each of the centres. They will perform all tasks in the Centre. Science and Social Studies teachers from each of the participating classes from the visiting schools will comprise the visiting staff.

Schools near wetlands, inland waters, coastal and marine and forests: Similar exercises, as proposed for Nature Centres can be conducted by schools as an in-school, in-village and in environmental sites near the schools as part of the class exercise in the science and social science subjects. The inland waters, coastal and marine, and forests provide opportunities for learning experiences and challenges at various levels in language, mathematics, social sciences, and other subject areas taught at the GCE levels. The teachers and students can observe and experience in the field the principles and concepts of those subjects taught in school. Such experience will lead them to ask questions that they have not thought of before and seek, find, test, and experience the solutions. To provide such experience there are many requirements. Some of which are identified here.

Physical requirements

To start with, one Nature Centre each in a forest area, and inland lake and coastal area is necessary. All buildings should be with locally available materials only. The Centre should blend in with nature. A well and facilities for bathing should be near the sleeping huts. Accommodations should have two roofed areas for 30 students each. Huts to accommodate 20 teachers including two of the staff of the Centre are necessary. One kitchen and dining area, an office, a multipurpose covered space to accommodate 70 persons will also be required. Adequate toilet facilities should be built near the buildings. A Solar energy source, wind energy source, biogas energy source is needed as the Centre expand. Most of the work is done by students and teachers within a ten-mile radius from the site and visiting students and teachers. Periodic camping out will be required.

Equipment

The centres will need bicycles, garden and other tools, teaching and learning materials, including digital and video cameras, audio visual equipment, office equipment, including two computers for use by students and staff, and a three-wheeled vehicle. Most of the exercises can be done with locally available tools and materials.

The plan should call for the first few batches of students to take an active part in establishing biogas, solar, and wind energy production units. Each of the future batches will add to the centre's learning features, including an integrated sustainable organic farm. All work to operate the centre during the student residency period will be done by students and visiting and residential staff. A planning workshop could prepare the final project document with contribution from students, educationists, environmentalist, experiential learning specialists, technical specialists and extension specialists.

**The program**

The program is targeted at students enrolled in the 10th Grade and 12th Grade and their science, mathematics, and social studies teachers. The objectives of the program are to:

1. Provide opportunities for students to observe the environment, apply the knowledge they had gained inschool and learn new knowledge, and the relationships between the various subjects areas in theenvironment.
2. Create activities for students to identify, take photographs, and take inventory the trees and other plantsand animal life in the habitat, and record animal behaviour.
3. Encourage students to observe, interview, and study the human population near the nature centre andobserve and record the interaction between the people and the habitat.
4. Challenge students to identify the principles they have learned in the biological and physical sciences, aswell as the social sciences and the ecological principles of the habitat.
5. Guide students to acquire skills in working in groups productively and harmoniously to achieve desiredends.
6. Communicate their experience and data to their fellow students in other parts of the country andinternationally in real time via the internet.

**Curricular  Co-curricular Activities**

One of the frames for curricular activities that can be structured is for example;

| | |
|---|---|
| Activity: | Tracks |
| Section: | Ecological knowledge |
| Topic: | Wildlife population |
| Grade Level: | 10 and 12 |
| Duration: | 2 to 3 hours |
| Setting: | Outdoors |
| Objective: | Students will identify common animal tracks. |
| Method: | Draw or photograph with digital camera and load them into the computer. Group discussions based on observations. Draw conclusions and identify ecological and science principles at work. Keep notes and write report. |

Another activity is to classifying the land cover of the site surrounding the Centre using the Modified UNESCO Classification (MUC) chart.

The data collected by students under the supervision of the teachers can be fed into the website www.globe.gov. Schools around the world use this program. Students learn to measure and analyse data, and feed it into the Globe program. They can then compare their data to other similar sites and their peers around the world.

# Appendix XI: Education Management Information System Implementation Proposal

## வடக்கு மாகாண கல்வித் திணைக்கள இணைய வழித் தரவேற்றப் பொறிமுறை கையாளுகைத் திட்டம்

வடக்கு மாகாண கல்வி முறைமை முன்னேற்ற மீளாய்வு செயலமர்வு மூலம் கல்வித் தரவுகள் உடனுக்குடன் பெறக் கூடிய வகையில் இணைய வழி பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டது .

வடக்கு மாகாண கௌரவ கல்வி அமைச்சரின் வழிகாட்டலிலும் மேற்படி செயலமர்வின் பரிந்துரையிலும் ஏற்கனவே வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் திட்டமிடல் பிரிவின் நுஆஜளு அலகினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த தரவுத்தளம் இணைய வழிப் பொறிமுறைக்கு மாற்றப்பட்டு ../....../2014 முதல் கீழே குறிக்கப்படும் பொறிமுறையில் நடைமுறைக்கு வருகிறது என்பதனை மகிழ்வுடன் அறியத் தருகின்றேன் .

மாதம் தோறும் அருகில் குறித்துரைக்கப்படும் திகதிகளில் குறித்துரைக்கப்படும் உத்தியோகத்தர்கள் பொறுப்புக் கூறக்கூடிய வகையில் தங்கள் கடமைகளை நிறைவேற்றுதல் அவசியம் ஆகும் .

| திகதி | பொறுப்பு அதிகாரி | கடமை | மேற்பார்வை |
|---|---|---|---|
| 20-25 | Zonal Accountant | தங்கள் வலயத்திற்குட்பட்ட ஒவ்வொரு பாடசாலையிலும் வலயத்திலும் சம்பளம் பெறும் ஆசிரியர்களின் எண்ணிக்கையை குறித்த இணையப் Page இல் பதிவேற்றுதல் | Chief Accountant PDE |
| 25-28 | DEO (Division) | ஒவ்வொரு பாடசாலையிலும் சம்பளம் பெறும் எண்ணிக்கை ஆசிரியர்களது விபரம் அப் பாடசாலைக்குரிய Page இல் உள்ளமையை சீர்செய்தல் | DDE(Admin) Zone |
| 28-30 | DDE(Admin) | 1.வலயத்திற்குட்பட்டு நடைபெற்ற இடமாற்றங்கள் உரியமுறையில் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளமையை உறுதி செய்தல்<br>2. ஆசிரியர்களது சுயவிபரங்கள் தொடர்பான நிரல்களில் சரியான தரவுகள் பூரணப்படுத்தல் / உறுதி செய்தல் | ZDE |
| 41641 | DDE(PI) | எதிர்பார்க்கப்படும் வகையில் தரவுதளம் பூரணப்படுத்தப்பட்டுள்ளமையை உறுதி செய்தல் / தவறுகள் இருப்பின் உரிய பொறுப்பளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எழுத்து மூலம் அறிவித்தல் / பிரதி – மாகாணக் கல்வித் திணைக்களம் , மாகாணக் கல்வி அமைச்சு ஆகியவற்றிற்கு அறிவித்தல் வேண்டும் . | ZDE |
| 3 | ADE(Admin) Province | மாகாண மட்டத்தில் வலயங்களுக்கிடையே மேற்கொள்ளும் இடமாற்றங்களை தரவேற்றம் செய்தல் | DDE(Admin) Province |

| | | | |
|---|---|---|---|
| 4 | ADE(EMIS) Province | அனைத்து வலயங்களிலும் தரவுகள் சரியாக தரவேற்றம் செய்யப்பட்டுள்ளமையை உறுதி செய்தல் / தவறு இருப்பின் எழுத்து மூலம் அறிவித்தல் | DDE(PI) Province |
| 5 | ADE(EMIS) Province | கோட்ட , வலய , மாகாண மட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் / வெளியிடல் (மென்,வன் பிரதி) | DDE(PI) Province |
| 6 | DDE(PI) Province | மாகாணத்தில் வலய ரீதியாக ஆசிரியர் மிகை / பற்றாகுறை விடயங்களை DDE(Admin) இற்கு கையளித்தல் | APDE |
| 6 | DDE(Admin) Province | அடுத்த மாதத்தில் நடைபெறும் இடமாற்றங்கள் குறித்த தரவுகள் அடிப்படையில் மேற்கொள்ளல் . | PDE |
| 6 | DDE(PI) Zone | வலயத்தில் பாடசாலை ரீதியாக , பாட ரீதியாக ஆசிரியர் மிகை / பற்றாகுறை விடயங்களை DDE(Admin) இற்கு வன்பிரதியாக கையளித்தல் | ZDE |
| 6 | DDE(Admin) Zone | பாடசாலை ரீதியாக வலயத்தினுள் நடைபெறும் இடமாற்றங்களை இவ் அறிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ளல் | ZDE |